ஓ.

திருச்சிற்றம்பலம்.

அகமடிற ஆராய்ச்சி விளக்கம்.

இஃது

திருத்துருத்தி இந்திராபீடம் காபாத்திர சுவாமிகள் ஆதீனம்

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்

மாணக்கருள் ஒருவராகிய,

தண்டபாணி

சுப்பராய ஆசாரியார்களால்

தமது சுவானுபவத்தி லுதித்தவாறு இயற்றப்பட்டு,

சோக்கபுரம் ஜாமலிங்கத் தம்பிரானவர்கள்

மாணக்காகிய

வடிவேலு முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டது.

சென்னை:

மதராவ்ஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை.

[2-வது பதிப்பு.]

1907.

[விலை ரூபா 1-4-0.]

Copyright Registered.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	அத்தியாய அட்டவணை	க - உ
2.	சாத்துகவிகள்	ஊ-கஊ
3.	முகவுரை	1 - 15
4.	பாயிரம்	16 - 19
5.	நூல்	20-379

திருச்சிற்றம்பலம்.

அகம்புற ஆராய்ச்சி விளக்கத்தின்

அ த் தி ய ர ய அ ட் ட வ ணை.

இலக்கம்.		பக்கம்.
1.	முகவுரை.	1-15
2.	பாயிரம்.	16-19

அகத்தாராய்ச்சி விளக்கத்தில்

1.	நாட்டபேத விளக்கம்.	20 - 31
2.	ஐம்பொறி ஆராய்ச்சி விளக்கம்.	32 - 38
3.	அந்தக்கரண ஆராய்ச்சி விளக்கம்.	39 - 46
4.	சீவபோத ஆராய்ச்சி விளக்கம்.	47 - 70
5.	கூடஸ்த சைதன்னிய இலட்சியார்த்த விளக்கம்.	71 - 92
6.	துவைதசிதாரோப ஆராய்ச்சி விளக்கம்.	93-107
7.	துவைத இன்பாரோப ஆராய்ச்சி விளக்கம்.	108-120

புறத்தாராய்ச்சி விளக்கத்தில்

1.	தேசமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.	121-126
2.	அவயவமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.	127-130
3.	மாமிசாதியென்னும் சத்தார்த்த ஆராய்ச்சிவிளக்கம்.	131-147
4.	மண்ணின் மகத்தென்னும் ச-த ஆராய்ச்சி விளக்கம்.	148-152
5.	மண்ணின் தூலவணுவெ-ம் ச-த ஆராய்ச்சி விளக்கம்.	153-156
6.	மண்ணின் சூக்குமவணுவெ-ம் ச-த ஆராய்ச்சி வி-ம்.	157-160
7.	மண்ணின் காரணமாகியபரமாணுவெ-ம ச-தஆ-வி-ம்.	161-186
8.	அருவபாவ ஆராய்சசி விளக்கம்.	187-201
9.	மண்முதலிய சதுர்ப்பூத குணிப்பொருள் ஆராய்ச்சி விளக்கம்.	202-215
10.	பிரமசைதன்னிய இலட்சியார்த்த விளக்கம்.	216-240
11.	அறிவாகந்த ஐக்கானுபவ விளக்கம்.	241-257

இப்பதினெட்டாவது அத்தியாயத்தி லுள்ளவை.

1.	ஞானகுரு சற்குரு இலக்கணம்.	258-259
2.	போலிஞானம்.	260-274
3.	மகாவாக்கிய நிரூபணம்.	274-284
4.	சேட்டலென்பது.	284-285
5.	சிந்தித்தலென்பது.	285-286
6.	தெளிதலென்பது.	286-287
7.	வழிபடுதற்கியைந்த துவிதம்.	287-299
8.	வழிபடுதற்கியைந்த விசிட்டாத்துவைதம்.	299-310
9.	எதார்த்த துவிதம்.	310-316
10.	எதார்த்த விசிட்டாத்துவிதம்.	316-320
11.	அத்துவிதம்.	320-339

திட்டாந்த தாட்டாந்த துவிதமுதலியவற்றுள்,

12.	திட்டாந்தத்தில் துவிதம்.	340-341
13.	திட்டாந்தத்தில் விசிட்டாத்துவிதம்.	341-344
14.	திட்டாந்தத்தில் அத்துவிதம்.	344-347
15.	தாட்டாந்தத்தில் துவிதம்.	347-349
16.	தாட்டாந்தத்தில் விசிட்டாத்துவிதம்.	349-351
17.	தாட்டாந்தத்தில் அத்துவிதம்.	351-356
18.	சரியையென்பது.	357-358
19.	கிரியையென்பது.	358-359
20.	யோகமென்பது.	359-367
21.	வேதவேதாந்த விசாரமென்பது.	367-371
22.	அறமாதிநான்கு மினையவென்பது.	371-375
23.	சிவன்முத்தாது பேதங்கள்.	375-378
24.	நிட்டை யென்பது.	378-379

அகம்புற ஆராய்ச்சி விளக்கத்தின்

அத்தியாய அட்டவணை

முற்றிற்று.

கூ

திருச்சிற்றம்பலம்.

சாத்துகவிகள்

மகாவித்வான் காஞ்சீபுரம்

இராமசாமி நாயுடு அவர்களியற்றிய

எண்சீர் ஆசிரியவிருத்தம்.

இந்தநில மன்பதைமுத் தாபமொருங் கொழிய
விணையறுபே ரின்பவம்பு ராசிபடிந் திலவான்
சந்தமிகு மிந்திரபீ டத்துமர போங்கத்
தனிவருசச் சிதாநந்தன் முளிணையெஞ் ஞான்றுஞ்
சிந்தையெனுஞ் சினகரத்து நிறுவியுயர் ஞான
தீராணி யுறுசுப்ப ராயப்பே ரறிஞ
னந்தமில்சீ ரகம்புறவா ராய்ச்சிவிளக் கமதென்
றருநூலீ தனனன்னேற் கவனியென்னற் றவதே.

மஃறா ஸ்ரீ திருமழிசை கந்தசாமி முதலியார் குமாரரும்

சொர்க்கபுரம்

இராமலிங்கத் தம்பிரானவர்கள் மாணக்கருமாகிய

வடிவேலுமுதலியா ரியற்றிய

வெண்பா.

அளக்கவரி தாகு மகம்புறவா ராய்ச்சி
விளக்கமெனு மோர்தூல் விளம்பித்—துளக்கமறு
மத்துவித வுண்மையறைந் தான்சச்சி தாநந்தன்
கொத்தடிமை சுப்பராயக் கோ.

திருமூலர் மரபு

சதாசிவப் பிர்மயோகிகட்கும், ஈரூர். சச்சிதாநந்தசுவாமி

கட்கும் மாணாக்கராகிய

ம - ா - ா - ஸ்ரீ

தே. சுப்பராயமுதலியா ரியற்றிய

நீலமணிமிடற ஆசிரியப்பா.

ஒங்கிடு பரவைசூ ழுலகிடை யுயிர்க
டாங்கிடு மவித்தை தணக்தரு ளடையச்
சிதந்திடு சங்கரா சாரியர் தோர்ந்தே
யறம்வளர்ந் தோங்க வன்புளங் கூர்ந்து
மாசிலாற் பீட மதித்திட வகுத்தனர்
தேசுறு நூலிற் றிகழிந்த்ர பீடத்
தையர்மர புதனி லுவந்திலி திலகு
மயலறு கரபாத் திரனடி மருவு
மண்ணலாங் தெத்தாத் திரய னருஞ்சரண்
வண்ணமா யனுதினம் வணங்குமுத் தையன்
சொல்லரு மவனடி தொழுசுப்ர மண்ய
னெல்லையி னவன்ரு லின்பொடு வணங்குந்
திருநாகை வாழரு ணைசலன் றிருவடி
மருவிப் பணிந்திடி மாசிலாப் பிறைசை
வந்திடு மருணை சலகுரு மணியைச்
சிந்தையி லிருத்திச் சிவோகம் பாவித்தே
யறிவறி யாமை யகன்றருள் வடிவாய்ப்
பிறிவிலா மாயா பேத மிய
லைகசீ வபரச் சிக்கினே யகற்றி
யகம்பிர மமென வருளியோர் மொழியாற்
காட்டிட வல்ல கருணைவா ரிதியா
நாட்டந் தரவே நாட்டிய வள்ள
லீசூர்ச் சச்சிதா நந்த னிணையடி
நேசமோ டேத்து நின்மல னுவந்து

தால மதனிற் றங்கிய வுயிர்கள்
வேலையாம் பவத்தை விட்டகன் றேறி
நித்திய திருத்தி நிதமும் பொருந்தச்
சத்திய மாகச் சகலவே தாந்த
நூலெலா மாய்ந்து நுண்ணறி வதனற்
பாலெலாங் கடையப் படுநவ நீதந்
தேறிய தொக்கத் திகழனு பூதியை
மாறிடா துணர்ந்து மாதவரு சிறந்து
சாந்தி முதலிய சற்குணம் பொருந்திக்
காந்தி யுடனே கருணைவா ரிதியா
யடுத்தவர் தங்க ளேயம தகற்றி
விடுத்திட வவித்தை விழியினை யருளிச்
சச்சிதா நந்தத் தகும்பொரு ளுணரு
நிச்சய ஞான நிலைபெற வுணர்த்தி
யத்துவா மார்க்க மகன்றுமே லுய்யத்
தத்துவா தீதத் தன்மையுங் காட்டி
மோன மொழியான் முடிவினை யுணர்த்தி
ஞான நிலதனை நாட்டிடு புனித
னுயர்வுறு விஸ்வ குலமதி லுதித்தோ
னயர்வகன் றில்லந் தனினமர்ந் திட்டோன்
சுப்பரா யனெனுந் தூய்மதி யுடையோ
னப்பரா பரநிலை யாய்ந்ததன் னனுபவ
மூலகினி லுயிர்க ளுவந்தடைந் துய்யக்
கலக மிலாவறக் கருணை யதனு
லகம்புற மிரண்டினு ராய்ச்சி விளக்கஞ்
சுகமுட னிருபதத் தியாயமாய்ச் சுருக்கித்
தசத்தினி லுயர்ந்த தனிமுகி லுலகிற்
சிரத்தொடு பெய்யுந் திறமெனப் பொழிந்தா
னடைகுவோ ரின்ப மடைகுவ ரதனற்
றிடமுட னிதனைத் தேர்ந்தறி குவதே
நிலையதாக் கொண்டோர் நிகரிலாச் சகச
நிலையினைப் பொருந்தி நீடுவாழ் குவரே.

இந்திரபீடம் ஈரூர். சச்சிதாநந்த சுவாமிகள் மாணாக்கர்

ம - ர - ர - ஸ்ரீ

மழவை. தங்கவேலைய ரியற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

மலர்தலை யுலகிற் றலைமை சான்ற
மக்க ளாக்கையிற் புக்கவெவ் வுயிரும்
வித்தக மாயநன் முத்தியந் திசையிற்
சிவசே வர்களின் றிரமது நோக்கின்
செயற்கையி லொன்று மியற்கையி லிரண்டுமென்
றேதிடு மாயா வாத மயக்கொரீஇச்
சொருபஞ் சகசமென் றிருபகு தியவா
கிட்டையில் விளங்குங் கட்டத்திற் கேற்ப
நிலையெது வோவந் நிலையே தன்னிலை
பிறவோ வென்னிற் பிறவே பிறவே
தன்னிலை யென்ன லெந்நிலை யெவ் வாறிற்
காலத் தானுந் தேசத் தானும்
பரிச்சே தமின்றிப் பரிபூ ரணமாய்ச்
சுசாதி விசாதி சுகத பேத
மிறந்தொரு படித்தாய்ச் சிறந்தொளி ரறிவே
யென்றுளத் தறிந்தே யினிதுற வகம்புற
வாராய்ச் சிவிளக்க மருளின னம்ம
வன்னவ னொருனி றறைகுவன் கேண்மின்
பிறைமுடிப் பெம்மான் கறைமிடற் றண்ணல்
றிருவுளம் பற்றிய வருமறை நான்கின்
சிரமிசைப் பொலியு மொருமொழி யுண்மை
ஷிளக்க வடிவாய் விளங்கிடுஞ் சதுரன்
சண்முக ஞானத் தலத்துறை யெங்கோன்
சச்சிதா நந்தன் சரணமேற் கொண்டவன்
பூரண நோக்கம் புரியப் பெற்றவன்
பந்தமித் தையதாய்ப் பார்த்தசிற் கண்ணன்

எத்தகை யோர்க்குஞ் சித்தமால் களிகூர்ந்து
தத்துவார்த் தங்களைச் சாற்றி மகிழ்பவன்
கருணைக் களஞ்சியன் காட்சிக் கினிய
னுபசாந் தத்திற் குறைவிட மேலோ
னெனப்புயர் வில்லா வொருவன் சுப்ப
ராயகுரு தாயவிண் ணவனே.

ஈரூர். சச்சிதானந்தசுவாமிகள் மாணாக்கர்

ம - ரா - ரா - ஸ்ரீ

பி. ஆறுமுகமுதலியா ரியற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

உயர்நிலம் போந்த வுயிர்த்தொகை யனைத்துங்
தமத்தெழு பேதச் சார்பகன் றென்று
மிரியா தேகமா யிலங்கிடற் கந்நாள்
சங்கரா சாரிய சுவாமிகள் வருத்த
விந்திர பீடத்தெந்தைதஞ் சச்சி
தானந்த னென்னுஞ் சான்தனெங் கோமான்
சரணே சரணெனச் சார்ந்தவன் பாலே
சிரவண மாதி சிறக்கச் செய்தே
யுண்மை யிஃதென வுணர்ந்தது வாகி
ஜனன மரணத் திகைப்பினை யொரீஇ
யெம்போல் வார்நெடு வெம்பவ நீங்கி
யுய்வா னருளே யுள்ளத் தமைத்தே
யகம்புற வாராய்ச் சிவிளக்க மென்னு
நூல தொன்று நுவன்றன னெங்கள்
மெய்ப்பயன் கொண்டு மிளிர்தருஞ்
சுப்ப ராய தாயமெய்த் தவனே.

ஈரூர். சச்சிதாநந்தசுவாமிகள் மாணாக்கர்

ம-ரா-ரா-ஸ்ரீ அரிகரபாடி

சின்னையாமுதலியா ரியற்றிய

வெண்பா.

இந்திரபீ டத்தமர்ந்த வெந்தைசச்சி தாநந்த
னந்தலில்சீ டன்சுப்ப ராயக்கோன்—சிந்தையினைச்
சீராயா ராய்ந்தேயச் சித்தாந்த மேநாடிப்
பாராய் புகழுற்றான் பார்.

அகம்புறவா ராய்ச்சி விளக்கவரு நூலைச்
செகம்பரவ வேயியற்றிச் சீராய்ச்—சுகம்பெறவே
யாய்ந்துய்வ தற்கே யளித்ததனை நல்லோர்கள்
காய்ந்திகழா சென்றுமே காண்.

ஈரூர். சச்சிதானந்தசுவாமிகள் மாணாக்கர்

ம - ரா - ரா - ஸ்ரீ

தே. வேலுநாயக ரியற்றிய

வெண்பா.

அகம்புறவா ராய்ச்சிக்கோ ராதவினைப் போலே
யகம்புறவா ராய்ச்சி யருநூற்—சுகம்பெறவே
யிந்திரபீ டந்தழைக்க வேய்ந்தசுப்ப ராயக்கோன்
றந்தனனன் னேற்கார் சரி.

செகமாதி மெய்யெனவே தேர்ந்த மருளர்க்குச்
செகமாதி பொய்யெனமுன் றேர்வித்—தகமதுதான்
சச்சிதா நந்தமதாத் தானிலங்கச் சாமமறை
யெச்சமிலா தோதினனீங்கு.

திருசிரபுரம் உறையூர் மகாவித்வான்

விஸ்வகுலதிலகர்

வாணிபீடம். முத்துவீரமாமுனிவர் குமாரரும்,

புராணப் பிரசங்கியாருமாகிய

ம - ரா - ரா - ஸ்ரீ

வைத்தியலிங்க ஆசாரியா ரியற்றிய

நிலமண்டில ஆசிரியப்பா.

தீருவளர் மறையுந் தேர்ந்த மனமு
மருவளர் முடிவி லமைபு மூன்றிற்
பொருளா ரோபிதம் போக்கி யிருமையு
மொருமையாய்த் துலங்க வுள்ளத் துள்ளிச்
சுயம் பிரகாசச் சுகமாம் பிரம
மயக்கமில் மதியாய் வயங்குறு தனேயே
நவநவ மாக நயந்தனு பவித்த
துவந்துவ மற்ற சுவானு பவமே
நமதுரு வென்ன நவின்றன ளேர்தர
லமையு மகம்புற வாராய்ச் சியிலும்
விளக்க மென்ன வியன்வே தாந்தநூற்
றுளக்கறத் தேர்ந்தோர் துதித்திடச் சென்னைப்
பதியே வசிக்கும் பதியாக் கொண்டு
மதியுளோர் தினஞ்சிர வணித்திட வாய்மலர்ந்
திங்கங் ககம்புற மியானீ யென்று
தங்கு மூள்ளது மில்லதுஞ் சத்தே
யென்று சுருக்கமா யெடுத்தெடுத் தன்பர்
வன்றுயர் தீர மாரு துணர்த்துங்
குலவு விஸ்வ குலஞ்செய் தவத்தி
னிலவ வுதித்து நிகரிலா வாசான்
றங்கிய நிலையே தானென நின்ற
நங்கள் சுப்ப ராயதே சிகனே.

இந்நூலாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய

ம-ா-ா-ஸ்ரீ உறையூர்

அ. க. றெ. பெருமாள்செட்டியா ரியற்றிய

நிலமண்டில ஆசிரியப்பா.

ஆர்கலி சூழ மம்புவி யதனிற்
கார்தரு மந்த காரம தகல
விளங்கொளி விரிந்து யாவையும் விளக்கு
மளங்கதி ரிரவி யனையோ ஞகிப்
பிறப்பிறப் பளவு பிழைமூனி வொப்ப
மறப்போ டாசை மருவா மணிதிரு
பகவத் பாதா சாரிய ரெனப்பகர்
சகல கலையுணர் சங்கரா சாரியே
பிரம குலத்திற் பெருந்தகை யாகித்
திரமுள மக்கணல் லுண்மைதேர் தற்கே
தான்வகுத் தருளிய தகைமைப் பீட
நான்கனு ளிந்திர பீட நண்ணிய
மகாகர பாத்திர சுவா'மி மரபுளோர்
சுகாணு பவத்தைச் சொலக்கேட் டுவந்தருள்
சச்சிதா நந்த சுவாமி சீ டருண்மிகு
மிச்சைமா ணவக ரெனன்றியம் பிடவே
வாதிலா ஞானிகள் வளர்த்தமா தவமொடு
நீதிலா மாந்தர்கள் செய்தநற் றவத்தின்
பேறெலாந் திரண்டு பிறங்கிய தாமெனக்
கூறவோர் மானவக் குப்பா யம்போர்த்
தோர்விசு வகுலத் தொளிமிக விளங்கு
மேர்தரு தினகர ரெனவவ தரித்துச்
சென்னைமா நகரிற் சீர்பெற விளங்குவோன்
நன்னய வாக்குள நனவ ரெனுப்பிலா
வேதாந் தத்தின் மேவத் துவித
நாதாந் தத்தை நன்ரு யுணர்ந்தபின்
நீத்துவ மசிபதந் தன்னை யுணர்த்துவி

மத்து விதநூ லனைத்து மாகிய
கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் மேவிடு பிணிபல
வேணுநூன் முறையை விதமா யறிந்து
மானுடர்க் கிரங்கிமுன் வழுத்துசாத் திரமெலா
மனனஞ் செய்துநல் வழிதனை மருவுதல்
கனவயர் வாமெனக் கருத்தினி லுன்னி
யத்து விதநூ லனைத்தினு முள்ள
தத்துவக் கருத்தைத் தானே சுருக்கி
மிகவகம் புறவா ராய்ச்சி விளக்கநூல்
சகமது புகழ்கொளச் சாற்றின னம்ம
நித்தமெங் கட்குறு நெறிதனை யுணர்த்துஞ்
சுத்தநன் மனமுறு சுப்பரா யக்கோன்
றிரணமும் பற்றிலாத் தீரரு மவனிரு
சரணதா மரைமலர் தலைக்கணி வோமே.

ம-ரா-ரா-ஸ்ரீ மாயூரம் அட்டாவதானம்

சந்திரசேகர உபாத்தியாய ரியற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சிற்ப நூலின் படிச்சாமுத் திரிக
நூலின் படியுருவும்
பொற்பு மமைக்குங் கைவல்லோர் புனைசித்
திரங்கட் குயிருளதோ
கற்கு மியனூ லிலக்கியநூற் கரைகண்
டிருக்குங் கவிவலவர்
சொற்க மின்றிப் பாடியநூ லுண்மைப்
பொருள்பெற் றிலவன்றே.

எத்தன் மையதா யினுமயன்செய் படைப்புச்
சிணையொன் றிலையதுபோற்
சித்துமயமா மெய் நூல்க டேர்ந்து
செனனத் திருநகர்வாழ்

சுத்தன் விசுவப் பிரமகுல திலகன்
சுப்ப ராயப்பேர்
மூத்தன் மொழிநூற் கிணைபகர மும்மை
யுலகத் தினுமின்றே.

அந்நூ லதன்பே ரகம்புறவா ராய்ச்சி
விளக்க மெனப்படுமா
லிந்நூல் படிப்போர் கேட்போர்க ளியாவ
ரேனு மிவர்தமக்குப்
பன்னூல் வேண்டா துறவுதவம் பயில
வேண்டா வேதாந்தத்
தொன்னூ லளிக்கும் பேரின்பத் தூய
பதத்திற் றுலங்குவரே.

உறையூர் மகாவித்வான் வாணிபீடம்
முத்துவீரமாமுனிவர்கள் மாணாக்கர் ஷெ யூர்
ம - ர - ர - ஸ்ரீ

தொ. மு. நல்லசாமிப்பிள்ளை யியற்றிய

இருவிகற்ப நேரிசை வெண்பா.

எல்லாஞ்சித் தென்றே யெழுந்த வனுபவத்தை
யெல்லாருங் கண்டிங் கிதமடையச்—சொன்ன
வகம்புறவா ராய்ச்சி விளக்க வருதூற்
குகனே யெவர்க்குங் குரு.

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

சுத்திமாங் கயிற்றில்வெள்ளி யாளரா வெனவுருவு
தோன்று மாபோல்
பெத்தமுடை யுலகமுணர்ந் துணர்வொழித்திட் டருமறையின்
பேற்றைக் கண்டிங்
கத்துவிதச் சுவானுபவந் தனதுருவென் றறிவுருவா
யமையும் லீலைச்

சுத்தமாய்க் காட்டியநற் சுப்பரா யக்குருவே
துணையா மன்றே.

உறையூர் மகாவித்வான் வாணிபீடம்
முத்துவீரமாமுனிவர் மாணாக்கரும், சதாசிவ பாடசாலை
மானேஜருமாகிய வித்வான்
ம - ா - ா - ஸ்ரீ
சதாசிவசெட்டியா ரியற்றிய
நேரிசை வெண்பா.

அகமகிழுஞ் சென்னை யறிவகுலத் துற்ற
குகஞான சுப்பரா யக்கோன்—சுகமா
ரகம்புறவா ராய்ச்சி விளக்கவரு நூலைச்
சகம்புகழச் சாற்றினன் முன்.

தேவகுருசுவாமிகள் பரம்பரை
ம - ா - ா - ஸ்ரீ
உறையூர். அருணசல ஆசாரியா ரியற்றிய
அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

சகம்பரவப் பரமநிலை செப்பியவே தாந்தமெலாந்
தெளிந்த மேலோர்
சுகம்பெறுமிந் திரபீடக் கரபாத்ர சுவாமிகளின்
றூயா தீன
னிகம்பரமாங் கற்பிதங்க ளுணர்விஸ்வ குலசுப்ப
ராய வேந்த
லகம்புறவா ராய்ச்சிவிளக் கப்பெயர்கொ ளருநூலை
யருளி னானே.

சாத்துகவிகள்
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அகம்புற ஆராய்ச்சி விளக்கம்.

மு க வு ரை.

உபாதி சகிதமாகிய எண்ணிறைய உயிர்களுள் எஞ்ஞான்றும் எங்ஙனும் நான் நானென்னும் போதவடிவில்லாது நிகழும் உயிர் ஒன்றேனும் இல்லவே இல்லை. இல்லையாயினும், அவ்வவ்வுயிர்களாகிய போதங்களுள், ஓர் கடத்துக்கு உபாதான காரணமாக இருக்கின்றது எந்த மட்பொருளோ அந்த மட்பொருளொன்றே எண்ணிறைய கடபேதங்கட்கும் உபாதான காரணமாக இருக்குமாறு ஓர் போதத்துக்கு உபாதான காரணமாக இருக்கின்றது எந்த ஆதாரப் பெரும் போதமோ அப்போத மொன்றே ஷி சோபாதிகமாகிய எண்ணிறைய போதங்கட்கும் உபாதான காரணமாக இருந்திலங்குகின்றது. இஃது வறிய சொல்வாதமன்று, சுருதி யுக்தி அனுபவங்கட்கு ஒத்த அர்த்தவாத சம்மதம். இங்ஙனமிருக்கும் அவ்வாதாரப் பெரும் போதமானது, அதிட்டானாரோபங்கட்கு இயைந்த சுத்தாசுத்த சகல கேவலங்கட்கு அதிதமும் நிருக்கின்றது. அவ்வாறிருக்கினும், அஃது அவத்தாத்திரய மூதலியனவாக நிகழும் அஞ்ஞான திசைக்கண் ஷி ணிறைய சிவபோதமாகவும், இருவித சமாதிகளென்னும் ஞானதிசைக்கண் ஏகமாகிய சிவபோதமாகவும் ஆரோப அதிட்டானங்கட்கு இயைந்து பிரகாசிக்கின்றது. இங்ஙனம் பிரகாசிக்கி

ன்ற இவ்விருபோதமும் ஷி ஆதாரமாகிய முதற்போதத் தின்பாலதன்றே? அதனால், அவ்வாதாரமாகிய முதற்போத மானது தற்போத மெனப்படும். அதாவது, தானே தானாகிய போதமென்பதா மென்க. என்னை?

சோபசாரம்.

"நித்தியமா யேகமாய் நிர்மலமாய்ப் பூரணமாய்ச்
சுத்தியமாய் நின்றொளிரும் தற்போதஞ் – சுத்தராய்ச்
சித்தநிலை பெற்றவராய்த் தீர்ந்தசென னத்தவரா
யுத்தமரா யுள்ளார்க் குறும்." என்றும்,

தாயுமானவர்.

"தானென தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனலுங் கற்பூர தீபம் போலப்
போயொளிக்கு மல்லாது புலன்வே றின்றும்
ஞானகா ரத்தினெடு ஞேய மற்ற
ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கு
மானலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவானு லதுவாவா ரதுவே சொல்லும்." என்றும்,

வாசிட்டம்.

"அகமகமென் றனைத்துயிரி னிடத்துமிருந் தனவரத
முரைப்ப தாகி
நிகழொளியா மாத்துமதத் துவமான சொரூபத்தை
நினைத்தல் செய்வாந்
திகழ்திதைய குகையுறையுந்தேவதையை விட்டயலே
தெய்வந் தேடன்
மிகவரிய கவுத்துவத்தை யெறிந்துசிறு மணிதேடும்
வேட்கை போலாம்." என்றும்,

உபநிடதம்.

"நானிவன்ரு னவனென்றே நவின்றறியா தேயுழன்ற
நாயி னேற்குத்
தானமரு நிலையிதுவே தாந்தவுப சாந்தமிது
தானே தானு
மோனமொழி யிதுவெனநான் மறையினுப நிடதமொழி
மூடிவு காட்டும்
ஞானகுரு தேசிகனே நாவகத்தும் பாவகத்து
நவிற்று வாமே." என்றும்,

கைவல்ய நவநீதம்.

"ஞானங் காரண மறிவுகாண் காரிய
நாமரூ பப்போக்
ளான தெப்படி யழிந்ததெப் படியென
வாய்குதல் பயனன்றே
மான மைத்தனே தீர்க்கசொப் பனசகம்
வந்தது மபாமற்
போன தும்னே யாமலுன் போதமாய்ப்
பூர்ணமா யிருப்பாயே." என்றும்,

தத்துவராயர் பாடுதுறை.

"உள்ளது போதமென் றூதேடா காள
மூலகமோக் காளமென் றூதேடா காளம்
வெள்ள வெளியீதென் றூதேடா காளம்
வேதஞ் சொன்னவண்ண மூதேடா காளம்." என்றும்,

"புத்திவி கற்பம றுக்குமூ ரெங்களூர்
பூரண போதமே யானவூ ரெங்களூர்
வித்தும்வி ளைவுமி லாதவூ ரெங்களூர்
விண்முதற் பூதம்வி ளைத்தவூ ரெங்களூர்."

என்றும் கூறியவாற்றாற் காண்க. மேற்கூறியுள்ள உயிர்களாகிய சர்வபோதத்துள், மக்கள் யாக்கையைப் பெற்று நிகழும்

போதமாகிய உயிர்கள், முன்ஞான்று ஷி சிவபோதமாகிப் பின்ஞான்று தற்போதமாதற்கு, வேதமாதா தனது இயற்கைக் கருணையினால் விரிந்திராநின்ற காண்டத்திரயத்துள் முடிவாகிய ஞானகாண்டத்துள்ளே முற்கூறிய இருவகையாயுள்ள சமாதிகளில் முன்ஞான்று அகச்சமாதிக்கண் தனிச் சாட்சி போதமாகவும், பின்ஞான்று புறச்சமாதிக்கண் சர்வ சாட்சி போதமாகவும் ஆகுமாறு, தான் உணர்த்திய இவ்விருவித சுவானுபூதியாகிய அரிய பெருஞ் செல்வங்களை எளிதிலுணரும் வண்ணம் **அகம்புற ஆராய்ச்சி** என்னும் இந்நூலானது வசனரூபமாக அமைக்கப்பட்டு இருக்கின்றது. இந்நூலானது அமைந்த இந்நூல் முகவுரை உட்பட இருபது அத்தியாயங்களாயிருக்கின்றது. அவற்றுள் 1-வது முகவுரை, 2-வது சிறப்புப்பாயிரம், 3-வது நாட்டபேத ஆராய்ச்சி விளக்கம், 4-வது ஐம்பொறி ஆராய்ச்சி விளக்கம், 5-வது அந்தக்கரண ஆராய்ச்சி விளக்கம், 6-வது சிவபோத ஆராய்ச்சி விளக்கம், 7-வது கூடஸ்த சைதன்னிய இலட்சியார்த்த விளக்கம், 8-வது துவைத சித்தாரோப ஆராய்ச்சி விளக்கம், 9-வது துவைத இன்பாரோப ஆராய்ச்சி விளக்கம் ஆக இவ்வொன்பதும் முதலாவது அகத்தாராய்ச்சி விளக்கத்தின்கண் உள்ளன. மற்றவை, 10-வது தேகமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம், 11-வது அவயவமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம், 12-வது மாமிசாதிகளென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம், 13-வது மண்ணினது மகத்தென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம், 14-வது மண்ணினது தூல அணுவென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம், 15-வது மண்ணினது சூக்கும அணுவென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம், 16-வது மண்ணினது காரண அணுவென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம், அதாவது பரமாணுவெனப்படுவது, 17-வது அருவபாவ ஆராய்ச்சி விளக்

கம், 18-வது சதுர்ப்பூத குணிப்பொரு ளாராய்ச்சி விளக்கம், 19-வது பிரமசைதன்னிய இலட்சியார்த்தவிளக்கம், 20-வது அறிவானந்த ஐக்யானுபவ தற்போத விளக்கம், ஆக இப்பதி னென்றும் வே 2-வது புறத்தாராய்ச்சிக்கண் உள்ளன. இங் ஙனமாக இருக்கின்ற இந்நூலின்கண் கர்மோபாசனாகாண்ட மிரண்டையும் கௌணமாகத் தழுவிச் சொல்லுகின்றது. ஏனெனின் ? கர்மகாண்டத்தில் உயிர்கள் பழிபாவமென்னும் தீயநெறிகளிற் புகாது மடங்கி அறநெறியிற் கட்டுண் டிருத் தற்கு விதிநிடேதங்களையும், உபாசனா காண்டத்தில் அங்ங னம் கட்டுண்டொழுகி முதிர்ந்த உயிர்கள் பின்ஞான்று அவ் வறநெறியில் முக்கியமாகப் புகாது அதைக் கௌணமாகத் தழுவிச் சுதந்தர மிழத்தலென்னுஞ் சித்தசுத்தி வாய்ந்திருத் தற்குச் சரியையாதி மூன்றினையும் உணர்த்தி யிருக்கின்றதா லென்க. இந்நூல் அவ்விரு காண்டத்தையும் கௌணமாகத் தழுவி யிருத்தலால் இவ்விருதிறத்தருக்கும் எங்ஙனம் உடன் பாடாகுமெனின், இவ்விருவருள் கர்மகாண்டிகள் அவத்தாத் திரயங்களோடும் தூல முதலியனவாகிய உபாதித்திரயங் களை நான்ஙானென் றழுந்தியிருக்கும் மயக்கமான சிவபோதம் கிஞ்சித்துங் குன்றாது முற்றும் விரிந்தவராயும், உபாசனாகாண் டிகள் அச்சிவபோதம் கிஞ்சித்தும் நசிப்புறாது முற்றுங் குன் றினவராயு மிருக்கினும், இவ்விருவருக்கும் எவ்விதத்தும் சிவபோதம் முற்றுங் கெடவேண்டுவது அவசியமாகலின், இவர்க ளுடன்பாட்டிற்கு முரணின்றென்க. இவ்விருவரது போதமும் கெடவேண்டுவ தெற்றுக்கு ? போதமானது முற் றும் விரிந்திருக்கும் கர்மகாண்டிகளே பின்ஞான்று உபாசனா காண்டிகளாய் நின்றொழுகும் தவத்தால் அப்போதம் குன்றி யிருக்கப் போகிறார்கள். அங்ஙனம் குன்றுதலே சாலுமன் றோ? போதம் கெடவேண்டுமென்பா னேனெனின், இவ் விருகாண்டத்திற்குமேல் ஞானகாண்டமிருப்பது யாது செய்

தற்கு ? அவ்விருவரது போதமும் கெடச் செய்தற்கன்றே? எங்ஙனமெனின், இவ்விருகாண்டிகளும் காமியத்தவம் நிட் காமியத் தவம் புரிவது யாதுக்கு? காமியத்தவம் இக சுவர்க்க போகமாகிய சிற்றின்பத்தையும், நிட்காமியத்தவம் சாலோ காதி பதவிப் பேறுகிய பேரின்பத்தையும் அனுபவித்தற்கன் றே? அன்றியும், இவ்வின்பப்பே றிரண்டும் யாருக்கு? உயிர் கட்கெனின், உயிர்கள் போதசொரூப மற்றவர்களா யிருக்கட் டுமே ! அங்ஙனம் கூறுவா னேனெனின், நான் நானென்னுத உயிர்கள் இன்றுகலின், மே இன்பப்பே றிரண்டும் நானென் பதற் கென்னது உயிர்களுக்கென்று முன்னிலே யாக்கிக் கொள்வானேன் ? அங்ஙனம் கொள்வதனல் நானென்னும் முக்கியப் பொரு ளின்றுக்கும் ! இன்றுனலன்றே உயிர்கள் வேறு பொருள்களெனக் கொள்ளலாம் ? ஆகலின், அவ்வின் பப்பே றிரண்டும் நாகிய உயிர்களுக்கே என்க. உபாசனை காண்ட நெறிப்படி நின்றுழிப் போத முண்டோவெனின், மேற்கூறிய மூவித போதங்களுள் அவர்கள் எந்தப்போத மற்றவர்க ளெனப்படுவர் ? சிவபோத மற்றவரெனின், உபா சனாகாண்டத்தி லிருப்பது சிவபோதந்தானுக்கும் ! அச்சிவ போதமானது உபாசனாகாண்டத்தைத் தழுவிச் சாலோகாதி பதவிப்பேரின்பத்தை அனுபவிப்பதாக்கும்! அங்ஙனமாயின், சிவபோதமானது ஞானகாண்டத்தைத் தழுவி நிரதிசயானந் தத்தை அனுபவிப்பதாக்கும்! இஃது விந்தையினும் விந்தை! இதுநிற்க,உபாசனாகாண்டிகள்புரியும் தவமனைத்தும் ஈசுரார்ப் பணமாயினும், அத்தவத்தை அடிமை யென்று புரிவதா ? அஃதின்றிப் புரிவதா ? அடிமை யென்றே புரிவதெனின், அடிமை ஆரெனப்புரிவது ? நானெனப் புரிவதன்றே? அங் ஙனம் புரிவதனு லன்றே, "என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ" என்று ரான்றேர். இதனல், அடிமை நானென் னும் போத சொரூபமாயிற் றென்க. மேலும், பேரின்பப்

பேறு யாருக்கு? அங்ஙனம் அடிமைப்பட்டிருக்கும் நானென் பதற்கன்றே ? அடிமை நானென்பது சிவபோதமா ? அன் றிச் சிவபோதமா ? சிவபோதமாகலின், அப்பேரின்பப் பயன் நானென்பதற்கென்றும் நான் அடிமை யென்றும் கொண்டிருக்கும் இவ்விபரீத போதம் எங்கே அகன்றது ? உபாசனை காண்டிகட்குப் போதம் குன்றியிருக்கின்றதென மூன்றான்று கூறிய தெங்ஙனமெனின், தூலோபாதியை நானென மயங்கிய ஞான்று, இவ்வுபாதி காரணமாகத் தான் உபசரித்துக் கொள்ளுதலும், அங்ஙனம் உபசரித்தற்கு இயை ந்த சுகசாதனக்கருவிகளே எனதெனக்கொள்ளுதலும் குன்றி னதேயன்றி, அடிமை யென்பதைப்பற்றியும் பேரின்பமென் பதைப்பற்றியும் ஏறியிருக்கின்ற யானென தென்னும் போ தம் கிஞ்சித்தும் குன்றவில்லையே ! அன்றியும், இவ்வுபாசனை காண்டிகள் பேரின்பப்பயனே எந்த நாளுக நின்று புசிக்கின் றது? அவ்வுபாசனை சித்தாந்தப்படி, அடிமையாகிய நானென் கிற சிவன் சார்போதனுகலின் ஏதோ ஒரு நானல்லாததை நானெனச்சார்ந்து கின்றல்லவோ புசிக்கவேண்டியது! தானே தானுக கின்றல்லவே? தானே தானுகத் தெளிந்த தெளிவின் படி இருந்திடிற் சுகிப்பானென்பதும் சுகமென்பதும் ஏது ? இல்லையே ! அன்றியும், இவர்கள் தம்மால் உபாசித்தற்கு இயைந்த உபாசனை மூர்த்தங்கள் தமக்கு எனது எனதென் னுங் கிழமைப்பொருள்க ளாகின்றனவா ? அன்றி நான் நானென்னுந் தன்மைப் பொருள்க ளாகின்றனவா ? எனது எனதென்றே பந்தித்துப் பூசிக்கின்றதால் அவைகள் நானென் பது அன்று, எனதென்பவைக ளாகின்றவெனின், இவற் றால் பூசிப்பான் நானென்பதும் பூசிக்கப்படும் உபாசனை மூர்த் தங்கள் எனதென்பதும் ஆகின்றன. ஆகவே, யானென்னும் அகங்காரமும் எனதென்னும் மமகாரமும் கிஞ்சித்தும் அக ன்றதன்று, அவ்வகங்கார மமகாரங்களே அகற்ற வேண்டு

மென்றன்றே

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்."

எனக் குறள் மகாவாக்கியம் பிறந்திருக்கின்றது. பிறந்துள்ள இவ்வாக்கியம் இவ்விருகாண்டிகட்கும் அன்றே? அன்றெனின், கர்மகாண்டிகள் இக சுவர்க்க போகங்கட்கு இயைந்த தவம்புரிஞான்றும் எந்த நாளுக நிற்பது? தூலோபாதி நாளுக அல்லவோ? அவ்வினைகள் புரிஞான்றும் நானென்பது தூலோபாதியாயினும் அவ்விரு பயனையும் அனுபவிக்கு ஞான்றும் எந்த நாளுக நிற்பது? இவ்விகபோகத்தைத் தூலநாளுகவும் சுவர்க்க போகத்தைச் சூக்கும நாளுகவும் நின்றன்றே புசிக்கின்றது? இதுபோல, சாலோகாதி பதவிப் போகங்கட்கு இயைந்த தவம் புரிஞான்றும் எந்த நாளுக நிற்பது? தூலோபாதி நாளுகவல்லவோ? அவ்வினைகள் புரிஞான்றும் நானென்பது தூலோபாதியாயினும் அவ்வினைக்கியைந்த போன்பப் பயனை அனுபவிக்கு ஞான்றும் எந்த நாளுக நிற்பது? தூல நாளுமன்று சூக்கும நாளுமன்று! இரண்டு மல்லாத ஏதோவோர் மேலாகிய சுத்தோபாதி நாளுகவல்லவோ? தூலமுதலிய இம்மூன்று நாளும் நானென்ப தல்லாதவைகளா? அன்றி நானென்பவைகளா? கிஞ்சித்தும் நானென்பதற்கு இயைந்தவைக ளன்றே! அன்றியும், சாக்கிரத்துள்ள தூலபோதம் சொப்பனத்திற் குன்றியிருப்பது எவர்க்கும் சகசமா யிருத்தலால், அச்சொப்பனத்தில் இத்தூலபோதம் இல்லையெனப் படுமோ? இதுபோல், உபாசனை வொழுக்கத்தில் முன்னிலையாகார முதிர்ச்சியால் இத்தூலபோதம் குன்றியிருத்தலின் இஃதில்லாமற் போயிற்றே? இருக்கின்றதே! இஃதிங்ஙனமிருக்க, இவ்விருகாண்டிகளுள், ஒவ்வொருவருக்கும் இது நானென வழக்கற்ற இலட்சியார்த்தமாகத் தெளியப்பட்டிருக்

இன்றது எது? வழக்கென்பது, பரிபாகமுதிர்ச்சி வந்துழி எது நான் எது நானென் றெட்டுங்கால், நானன்றெனப்படும் தத்துவக்குழாங்களுள் ஒவ்வொன்றும் நான் நானெனற்கு இபை வதுபோல் தோன்றுந்தோறும், அதுவும் முன்னொன்று தத்தம் சொரூபங்களால் ஆமெனவும், விவகாரானுபவங்களால் உண்டெனவும், பின்னொன்று தாம் தத்தம் உபாதான காரணமெனப்படாமையால் அன்றெனவும், அவ்வவ்வுபாதான காரணங்களேயன்றித் தாமொரு முதலாகாமையால் இன்றெனவும் ஆகின்றன. ஆகலின், இங்ஙன்குவித வழகுமயமாயுள்ள ஒவ்வோர் தத்துவத் தடிப்பும் அறிவறியாமைப பேதங்களாகின்றன வென்க. நானென்னும் போதமோ இவ்விரு வழக்காகிய அறிவறியாமை கடந்ததாகின்றது. என்னை?

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணப் பிறப்பு."

எனப் பிறந்திருக்கின்ற இவ் வாக்கியானுபவத்திற்கு எதிர்மறை யனுபவமாயிருப்பதெங்ஙனம் கூடும்? எதிர்மறை யனுபவமாவது: பழுதையைப் பழுதையென்றுணர்ந் தின்புறுவது போல் தானெனலைத் தானென்றுணர்ந் தின்புற்றிருத்தலென்க. எவரெவர் எவ்வெவ் வினையையும் நான் நானென்று புரிதலும், அவ்வவ் வினைகட்கு இயைந்த பயன்களே எனது எனதென்று நுகர்தலுமாகிய இவ்விரு போதானுபவங்களுங்ஞித்து மின்றியும், பந்தாகாமியம் பந்தசஞ்சித மிரண்டும் இனிவந்து தங்குதற் கிடமின்றியும், அவத்தாத்திரயங்கட்குச் சாட்சிமாத்திரமாய் நின்று பந்தப் பிராரத்வத்தைக்கழித்துக் கொண்டு வருபவரோ அவரவருந், நானென்பதை ஆராய்ந்து தெளியவேண்டுவதின்று! எனெனின், அவர்கள் அயலே நான் நானென்னுதவர்க ளாகலினென்க. என்னை?

தத்துவராயர் பாடுதுறை.

"மூன்செய் தவத்திலே முயன்றவப் பெருமையாற்
பின்சாதி கமிந்தோமென் றுந்தீபற
பிரமமே யாஞ்மென் றுந்தீபற."

என்பதனாற் காண்க. இங்ஙனமாகத் தெளியாதார் எத்திறத் தா ராயினும் அவர்கள் எது நான் எது நானென் றாராய்ந்து தெளியவேண்டுவது அவசியமாமென்க. அந்த நானென்னும் போதத்தை எவ்விதமாகத் தெளியவேண்டுவதெனின், அகம் புறமில்லாத உயிர்க ளின்றுகளின், மூன்றான்று அகத்துள் கியபட்டிகளாக நிகழும் தத்துவக் குழாங்களை, ஆமெனவும் உண்டெனவும் அன்றெனவும் இன்றெனவும் நியதி களையப் பட்ட மூடிவில், அன்றெனற்கும் இன்றெனற்கும் பின்றான் றியையாத ஆமெனற்கும் உண்டெனற்குமே இயைந்து விள ங்கிய கூடத்த சைதன்னிய போதமாயும், பின்றான்று புற த்துள் சமட்டிகளாக நிகழும் தத்துவக் குழாங்களை, ஆமென வும் உண்டெனவும் அன்றெனவும் இன்றெனவும் நியதி களை யப்பட்ட மூடிவில் அன்றெனற்கும் இன்றெனற்கும் பின் றான் றியையாத ஆமெனற்கும் உண்டெனற்குமே இயைந்து விளங்கிய பிரமசைதன்னிய போதமாயுமென்க. மூதலாவது, கூடஸ்தபோதமென்பது அறிவே வடிவாயும், இரண்டாவது, பிரமபோதமென்பது ஆனந்தமே வடிவாயும் நிற்றலென்க. இவ்விரு போதானுபவங்களும் யதார்த்தமாகலின் சிற்சடக் கற்பனைகளைப்போல் தனித்தனியே நின்று அன்னியோன் னியாபாவ மெய்தாது அறிவே ஆனந்தமாயும் ஆனந்தமே அறிவாயுமீ ஐக்கியமுற்றிருக்கும் இவ்வித போதமே மேலா கிய தற்போதமா மென்க. இத்திரிவிதானுபூதி போதங்களை யும் எளிதி லுணர்த்துதற்கே இந்நூல் அகம்புறவாராய்ச்சி விளக்கம் என்னும் காரணப்பெயர்கொண்டு வெளிப்பட்டிருக்

கின்றது. இங்ஙனம் வெளிப்பட்டிருக்கும் இந்நூல் பரிபாகி கட்கன்றி ஏனையர்க்குப் பயன்படாது. பரிபாகிகளாவார், விடய முதலிய அநுபந்த சதுட்டயத்துள் ஓர் பாகமாயுள்ள அதி காரிகள். இவ்வதிகாரிகளது பரிபாகமாவது: நித்தியாநித்திய வத்து விவேகம், இகமுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதி சட்கசம்பத்தி, முமூட்சுத்துவம் என நான்குமாமென்க. அவ ற்றுள் நித்தியாநித்தியவத்து விவேகமென்பது, நாற்பொழு தும் உண்மையைத் தழுவி இலங்குகின்ற அகமென்னும் ஆத்மசொரூபமே நித்தியமென்றும், அந்த நாற்பொழுதும் இன்மையைத் தழுவி இலங்குகின்ற அனாத்மாவாகிய சிவே சுர சகத்சொரூப மனைத்தும் அநித்தியமென்றும், சுருதிக் கியைந்த யுத்திக்கொத்துத் தேர்ந்திருக்கும் தேர்ச்சியேயா மென்க. இகமுத்திரார்த்த பலபோகவிராக மென்பது, இம் மை மறுமைக்கண் வரற்பாலனவாகிய தூல சூக்குமோபாதிக ளாயுள்ள நானுவித போகங்களிலும் முற்றும் விரக்தியாகிய தோட திருட்டியா மென்க. சமாதிசட்கசம்பத்தி என்பது, 1-வது முன்னர் விரக்தி தோன்றியவற்றுள் மீண்டும் ஒவ்வோர் ஞான்று இச்சை செல்லுழி மனம் முதலிய உட்கரணங்கள் அந்நெறியிற் செல்லாது நிற்குமாறு தடுத்துக்கொண் டிருத் தலும், 2-வது பின்ஞான்று புறக்கரணங்கள் முன் பழக்க நெறியிற் செல்லாது நிற்குமாறு தடுத்துக்கொண் டிருத்த லும், 3-வது தத்தமக் கியைந்த கிருத்தியங்களை நாளுக்கு நாள் சிறுகச் சிறுகக் குன்றச்செய்தலும், 4-வது சுகதுக்கங் கள் மிகுதியாக வரினும் அதனவசமுறாதிருத்தலும், 5-வது சிரவணாத்தங்களை விடாது பாதுகாத்துக்கொண் டிருத்த லும், 6-வது தமது சொரூபத்தை விளக்கும் பிரபல சுருதிக ளிடத்தும் கட்டிமைபோன்ற ஆப்தரிடத்தும் ஆப்தாங்கான சத்பாவ முற்றிருத்தலுமா மென்க. முமூட்சுத்துவமென் பது, அசற்பற்றுக்கள் புறப்பற்றுக்களனைத்தையும் ஒருங்கே

விட்டுத் தன்னை யுணர்தற்கியைந்த அதிதீவிரதர முற்றிருத் தலாமென்க. நாம் கல்வி கேள்வி முதலிய மிக்க அரிய வித் தைகளால் எத்துணைச் சிறப்புற் றிருக்கினும் மக்கின சுழுத் திக்கண்ணின்று விழித்ததுமுதல் மீண்டு மொடுங்குங்காறும் நமதகத்தில் நிகழும் ஒழுக்கமானது நாமரூபமாகிய அவன் அவள் அது முதலியவற்றை மெய்ப்பொருளெனவும் இன் புருவெனவும் மயங்கி அவற்றை விடாமல் நுகர்தலுக்குச் சற்றும் நாணமுறுது இதற்குமேல் ஷை கல்வி கேள்விகளுக் குப் பயன் தோல்வி வெற்றிகளேயன்றி வேறே யின்றென நம்பி நம்பி இறுமாந் திறுமாந்து விலர்த்தமுற் றிருக்கின்ற தால், ஷை முமுட்சுக்களது அதிதீவிரதர எழுச்சிக்கியைந்த அகத்தில் நிகழும் ஒழுக்கம் யாதெனின் தஸ்மரணை வாய்க்கு மளவும், அதாவது ததாகாரமாகுங்காறும் ஐயவெழுச்சியும் ஆராமையுமாம்.

அவையாவன, சாக்கிர முதலிய மூன்றவத்தைக்கண்ணு முள்ள தூலமுதலிய காட்சிகளை யுணர்ந்து வருகின்றதும், அவ்வவற்றை துண்டாம் இன்ப துன்பங்களை விடாது நுகர்ந்து வருகின்றதும் நாமன்றே? அங்ஙனமாகிய நமக்கு இங்ஙனங் காணப்படும் இத்தேக முதலிய உலகமியாதெனவும், எத்து ணையதெனவும், எவ்விடத்ததெனவும், எதுகாறுமெனவும், நமக்கிஃது பேதமுற்றிருக்கின்றதா அன்றி அபேதமுற் றிரு க்கின்றதா? எனவும், பேதமுற் றிருக்கின்றதெனின், ஓர் ஞான்றேனும் உபாதித்திரய பாவமின்றி நாம்வேறுய்த்தனித் திருந்திருக்க வேண்டுமெனவும், அபேதமுற் றிருக்கின்றதெ னின், அவ்வுபாதித்திரயங்களில் ஒன்றேனும் நாமெனப்பட வேண்டுமெனவும், நானென்பது பொருளா? குணமா? தொ ழிலா எனவும், பொருளெனின் யாது பொருளெனப்படுமெ னவும், உருவப்பொருளெனின், சாக்கிரத்தில் நம்மா லுணர்ந்து

பட்ட தூலவடிவம் நாமாகவேண்டுமெனவும், அருவப்பொரு ளெனின், அஃதும் சுழுத்திக்கண் நம்மாலுணரப்பட்ட சூனிய வடிவம் நாமாக வேண்டுமெனவும், உருவாருவப் பொரு ளெனின், அஃதும் சொப்பனத்தில் நம்மா லுணரப்பட்ட சாயாவடிவம் நாமாக வேண்டுமெனவும், அன்றியும், சித்துப் பொருளெனின், அஃதறிவெனப்படும். அறிவென்பதுதா னெனின், அஃது தொழிற் குணமாக வேண்டுமெனவும், அன்றியும் அத்தொழிற்குணம் ஒன்றினதாக வேண்டுமென வும், அவ்வறிவாகிய தொழிற்குண மொன்றினதாயின், சாக் கிராதி மூன்றவத்தைக்கண்ணு மிருந்துணர்ந் தனுபவித்துக் கொண்டு வருகின்ற முதல் நாமின்றி வேறொன்றாக வேண்டு மெனவும், நாமென்பது குணந்தானெனின், அஃதும் ஒன் றினதாக வேண்டுமெனவும், உபாதி குணந் தொழில்கள் நம் மூடையனவா யிருக்க, நாம் எந்த முதலினது குணந்தொழி லெனப்படுமெனவும், நமது உபாதிகுணந் தொழிலென்பது முறையே தூல சூக்கும காரணமென்னும் மூன்று சரீரங்க ளும் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியென்னும் மூன்றவுண ங்களும், பிரவிர்த்தி நிவிர்த்தி என்னும் இரண்டு தொழில்க ளுமா யிருக்கின்றன. இங்ஙனமிருக்க, நாம் என்ன நிலைமை த்தா யிருக்கின்றது, இதுநான் இதுநானென வழக்கறக் கண்டு கண் டின்புறுக்காறும், நாமொவ்வொருவரும் எந்த நாளை விருக்கின்றது? தினைபாலிட முதலியவைகளுள் ஒவ்வொரு நாளை விருக்கின்றதா? அங்ஙனம் கூடாதெனின், பின்னுள் ன்று எந்த நாளை விருக்கின்றது? எந்த நாளை இருக்கினும் அந்தந்த நாளும் மாறிவிடுகின்றதே! ஆகலின், எதுநான் எது நானெனத் தேடுதற் கியையவேண்டுமே! அங்ஙனம் நம்மைத் தேடாது எதைப் பொருளெனவும், இன்புருவெனவும் கரு தித் தேடுகின்றது. அயலைத் தேடலாமெனின், அயலைத் தே டுதன்னைத் தேடியாயிற்று? தன்னைத்தேடிக் கண்டுபிடித்த

பின்ஞான்றன்றே அயலைத் தேடவேண்டும். அன்றியும், அய லென்பதற்குப் பொருள் கிஞ்சித்தேனும் இல்லையே! தன் னைத் தேடிக்கண் டின்புற வகையறியாது, அயலைத் தேடிக் கண் டின்புறுதற்கோ இதுகாறும் மக்களியாக்கையைக் கொ ண்டுகொண்டு வந்தது!! இச்சிறந்த விவேகத்துக்கு ஏனைய ஆக்கைகள் சாலுமன்றே? நாம் உருவமுதலிய உபாதிகளுள் ஒன்றை நாலுகத் திடமுற் றிருப்பதே முதற்கோணலாயின், அதற்குமேல், வருணச்சிரம முதலியனவாகிய கற்பனைக ளால் நானின்னன் நானின்னனென்று உள்ளபடியே நம்பி நம்பி இறுமாந்துகொண் டிருப்பது எத்துணைக் கோணலென் பம். இங்ஙனம் முற்றும் கோணலுற்றிருத்தல் என்ன விவே கமோ? இவ்வாறுள்ள கோணல்களுக்கு மனத்தின்கண்ணும், முகத்தின் கண்ணும், வாக்கின் கண்ணும் கிஞ்சித்தும் துக்கக் குறிகளில்லாதவரை அரிய ஆப்தரென வறும்புண்ணீலப் போல் மயங்கியடுத்தல் என்ன விவேகமோ தெரிகிலம்! அன்றியும்,

சோநபசாரம்.

> "தன்னைத்தான் றேடாச் சதிகார ரேன்பிறந்தார்
> ரன்னத்தால் வந்தவுட லார்தாமார் – முன்னம்
> விடுத்தவுட லெத்தனையோ மீண்டுமீண் டின்பா
> லெடுத்தவுட னூறு யிரம்."

என அறிவுறுத்தி யிருக்கின்றார்களே? இதுகாறும் மேன் மையைப் பயக்குவதாக விடாது நிகந்துவந்த நமது இச்சா ஞானக் கிரியைக ளனைத்தும் அவலமாய்ப் போயிற்றே! எது நான் எது நானெனத்தேடும் இவ்வெழுச்சியானது உதித்து மேலிடவில்லையே! அஃது மேலிட்டாலன்றே, அவத்தாத் திரயங்களுக்கு விலட்சணமுற் றிருத்தற் கியையும். அஃது

இயைந்தாலன்றே, பிரவிர்த்தி நிவிர்த்தியின்றி இருத்தற் கியையும். அங்ஙனமிருக்கினன்றே, சித்தம் நிலைத்திருத்தற் கியையும். அஃது நிலைத்தாலன்றே, பின்ஞான்று நாம் வெளிப்படுதற் கியைந்த நிட்டையெனக் கூறுவ ரறிஞர். இதற்கு நாம் என்ன செய்வோமென் றிடைவிடாது அழுதகண்ணும் சிந்தையு முற்றிருத்தலா மென்க.

முகவுரை முற்றிற்று.



திருச்சிற்றம்பலம்.

அகம்புற ஆராய்ச்சி விளக்கம்.

பாயிரம்.

வெண்பா.

சோதிமய மாம்வெளியே தோற்றுசக சீவபரக்
கார்தியாய் நிற்கு மறிவுருவை - யேதமின்றி
ஈன்கிறைஞ்சி நிற்றற்கு ஞானதுவா வென்ன்குறை
யின்பமிகை வேரொன் றிலை. (க)

மகான்கள் வணக்கம்.

தத்துவங்க ளெல்லாந் தமதுருவ மன்றெனவுந்
தத்துவமாந் தம்மியல்பு தாமுணர்ந்து - தத்துவங்க
டம்மையன்றி யின்றெனவுந் தாந்தெளிந்தோர் மென்கழலை
யிம்மையினம் பற்றே திடர். (உ)

குருவணக்கம்.

மன்னு மறைமுடிவின் மாசின்றி நின்ரொளிரு
மூன்னற் கரிய வொருசிவமே - பன்னுதற்குச
சசிதா ஈந்தனெனத் தானுதித்த சற்குருதார்
ளுச்சிதமாக் கொண்டகமே யோர். (ங)

அவையடக்கம்.

பன்னூலு நன்குணர்ந்த பான்மையுளோர்க் கிந்நிலனி
லெனனுவா னென்றற் கியைந்தவெனுற் - சொன்ன
வகம்புறவா ராய்ச்சியிந்நூ லாழ்ந்துணர்நதோர்க் கென்று
மகம்பொருளே நன்குணர்த்து மால். (க

இந்நூற்பெயர்.

அகம்புறத்திற் காண்பவற்றை யாராய்தல் செய்வித்
தகம்பொருளைக் காட்டுதலா லாங்காங் - ககம்புறமா
மாராய்ச் சிவிளக்க மாகுமிந் நூற்பெயர்தா
னேராற் கிதையென்னுண் மற்று. (ங

உள்ளும் புறம்பு மொளியிட் டிலகுமென்பா
லுள்ளனவே போனிகழு மூற்றமிலாக் - கள்ள
வறிவறியா மைக்குணத்தை யாங்காங் ககற்று
நெறியதனை நன்குரைக்கு நேர். (சு)

அகம்புறம் வந்ததற்கேதுவும் அவற்றலுண்டாம் சேட்டைகளும் இனையவெனல்.

எவ்வுயிருந் தேகோக மெய்தியதா லுட்புறமு
மவ்வவ் வுயிர்க்கு மமைந்தனவே - யொவ்வா
வறிவறியா மையா லடுக்கனந்த பேத
வெறியிவற்று னேர்ந்தனவா மெய். (எ)

இந்நால் கற்பனைக்கியைந்த நாத்திகாத்திகத்தை ஏற்றற்பால தன்றெனல்.

எஞ்ஞான்றுஞ் சிவேச ரில்லையுள தென்றேற்கு
மஞ்ஞானப் புன்மதிதா னுங்ககல - வெஞ்ஞான்றுங்
காண்டனைத்து நாத்திகமென்றுங் காண்பானன் காத்திகமென்று
மாண்டுமிந் நூலுரைக்கும் வந்து. (அ)

இந்நூல்
தெளிந்தோர்க்கு உரைத்த தன்றெனல்.

ஞானதனு வாயினர்க்கு நாட்டியதன் றிந்நூலஞ்
ஞானதனு வாயிலகு நாத்திகர்க - ணனெனலே
நன்குணர்ந்திங் கின்புறற்கு நாட்டியதா லெவ்வமிலே
நன்மதியோ ரேற்பார் நயந்து. (க)

இந்நூல் சதுர்வேத மகாவாக்கியங்களின்
அனுபவழுடிவை எடுத்தாளு முறைமைகள்
இனையவெனல்.

காண்பனைத்தும் பொய்யெனமுன் காட்டாதிப் பொய்மைகளே
மாண்பாம்பின் பிர்மமென்னேம் வண்மையதா - யாண்மையெனு
மப்பிரம மேயாவு மாமென்னு தப்பிரம
மொப்பிகா னேயென்னே மோர்ந்து. (கo)

இந்நூல்
தானேதானுகநிற்குமகம் பொருளாகவாதற்கு ஒன்றுக்கொன்று
உயர்வுற்று நிகழப்படுந் துவிதழுதலிய முன்றினது
இலக்கணங்க ளினையவென்றும், பின்னர்
அம்முன்றும் முடிபிற் கியைந்த
தன்றென்றுங் கூறல்.

திரிபொருளு நித்யமெனத் தேர்ந்தமரு ணீங்கத்
திருக்குத் திரிசியமாத் தேர்த - லிருந்துவிதந்
தோன்றுமனைத் துந்தன்பாற் றோற்றாவாத் தேர்ந்திலக
லான்றவிசிட் டாத்துவித மாம். (கக)

இதுவுமது.

தோற்றமிலாந் தன்னுருவாத் தோன்றக் கரைத்துணிதஞ்
சாற்றரிய சின்மயமாத் தானுளரிர்தன் - மாற்றரிய
வத்துவித மாருமே யான்ற வகமென்ன்
வித்தனையு மல்லவா மே. (கஉ)

இந்நூல் ஞானகதப் பிரத்தியட்சத்திற் கியைந்த
சரியை கிரியை யோக சாதனங்கள் இனையவெனல்.

தோன்றுமப லத்தினையுங் தோற்றமா கக்கரைத்த
லான்ற சரியையிதிங் காகுமே - தோன்றுமெலாந்
தோற்றமென நீங்கியது சொருதரூ பனதுவென்
ருற்றலுற னற்கிரியை யாம். (கஉ)

இதுவுமது.

தனைத்தேதேடித் தேட்டத்தாற் ருனுமில காதாங்
கனைத்தயலி லுஞ்சற்று மாழா - துனற்கியைந்த
விவ்விரண்டின் மத்யநிலை யெய்தி நிலைத்திருத்த
லெவ்வமிலா யோகமதா மே. (கச)

இந்நூற்ற மேற்கோளாவது இனையவெனல்.

ஏடிரண்டு தாகுமே யெய்நதிவர்ன்று தானுகு
மேடையலொன் ருமிவற்றுளென்னே ட்டை - நாடியிவ
ணைதினதா லிநநூலை யோவ்வொருவர் தானுதற்
கேதுதற்கிங் கென்று மிடர். (கரு)

இந்நூற்கதிகாரிக ளாவாரு மாகாரும்
இனையரெனல்.

ஏப்பா வனைக்கு மிபையர் திருரதென்றுந்
தப்பாம னிட்டைதனைச் சாதிப்பா - ரொப்புமா
றேற்பரிந்நூ லக்கிட்டை யேலாத வேழையர்க
ளேற்பரோ வெஞ்ஞான்று மீங்கு. (கக)

பாயிரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அகம்புற ஆராய்ச்சி விளக்கம்.

முதலாவது
நாட்டபேத விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சிக்க ணெவ்வுயிரு நாதிதற்குத்
தந்தமா தாரத்தைத் தான்செல்லும் - தொந்தநெறி
யீங்கிரண்ட தாகுமவை யேய்ந்த வகம்புறமா
வோங்கு முழைப்போர்க் குற.

அகம்புறமாவது உட்புறமெனவும் வெளிப்புறமெனவு மாம். உட்புறம் வெளிப்புறமென் றிரண்டிருக்கின்றதால், இடைப்புறம் என்பது ஒன்றிருக்க வேண்டுமே? அஃதியா தெனின், அதுதான் முகவுரையிற் கூறிய தேகோக மெனப் படுவது. அஃதெங்ஙனமெனின், எண்ணரிய போத வுயிர்க ளுள் ஒவ்வொன் றும் ஒவ்வோ ருபாதியையும் நான் நானென மயங்கி மருவாதுழி, இச்சா ஞானக் கிரியைக ளென்பதேது? இவற்றுள், இச்சா ஞான்மிரண்டும் உட்சேட்டையும், கிரியை யென்ப தொன்றுமே வெளிச்சேட்டையுமாம். இவ்விருவித சேட்டைகளும் எழுதற்குக் காரணம் அகமும் புறமும், இவ் வகம்புறமிரண்டும் வாய்த்தற்குக் காரணம் தேகத்தை நினை

னென் மயங்கி அழுந்தி இருக்கும் தேகோகமும் ஆம். அவ்வத் தேகோகங்களால் வந்த அகத்தின்கண் சிற்சடபேதங்களாகிய வியட்டி யறிவறியாமை அடுக்குகளையும், அங்ஙனமே புறத்தின்கண் சிற்சடபேதங்களாகிய சமட்டி யறிவறியாமை அடுக்குகளையும் ஆராயவேண்டியவாறு ஆராய்ந்து தெளிந்த தெளிவின்புடியே நின்றிலங்க வேண்டுமென்க. தேகோகத்தால் வந்திருக்கின்ற அகத்தும் புறத்து முள்ளனவற்றை ஆராய்ந்து தெளியவேண்டு மென்பது எற்றுக்கெனின், உயிர்களாகிய ஒவ்வோர் போதமும் இத்தேக முதலிய விடயங்களின்மேல் யாதெனவும் எனதெனவும் வந்து விழுந்திருக்கின்றதா? அன்றி வேறொன்றின்மேல் வந்து விழுந்திருக்கின்றதா? விடயங்களின் மேலேயே வந்து விழுந்திருக்கின்றதெனின், ஆங்காங்கும் அவ்வப்போதமாகிய நாட்டம் இவ்விடயங்கள் மேல் வந்து விழுந்திருப்பானேன்? காணப்படுகின்றதா லெனின், காணப்படாத விடயங்கள் மேலும் வந்து விழுவானேன்? அவ்விடயங்கள், நாம் முன்னொன்று தூலமாகக் கண்டதனலும் கேள்வியினலும் சூக்குமமாகவேனும் காணப்படுகின்றதாலெனின், அங்ஙனமே போதமாகிய தன்னைத்தான் கேள்வியுறக் கேட்டிருக்கின், தன்னை நாடவேண்டுந்தானே? அப்போதம் நாமரூப மன்றுகலின் நாடவேண்டுவ தின்றெனின், நாம ரூபங்களையே நாடவேண்டு மென்பதென்னை? அவற்றுளொன்றிச சுகோதயம் வேறொன்று லின்றெனின், கேவலாவத்தைபாகிய சுழுத்திக்கண் சுகோதயம் இன்றெனப்படட்டும்? ஆங்கு சுகமென்பதும் துக்கமென்பதும் இன்றிய சூனியமாயிருக்கின்றதெனின், யாவரும் நித்திரையைத், தேடுவானேன்? இச்சகலாவத்தைக்கண் அமைதியும் அல்லலும் இருக்கின்றதால் இவ்விரண்டில் அல்லல் மாத்திரம் தணிந்திருத்தற்கேயன்றி அமைதியாகிய சுகோதயம் தணிந்திருத்தற்கன்று. இங்ஙனமிருக்கச் சுழுத்திக்கண் சுகோதயமென்ப

தேது ? விழித்த பின்ஞான்றன்றே ? அஃது சுகமயமென் றறியாமையினைக் கூறுகின்றது. ஆகலின், சுகோதயத்துக்குச் சகலாவத்தையாகிய இந்நாமரூபங்களே யன்றி வேறொன்று மில்லவே இல்லையெனின், இச்சகலாவத்தைக்கண் இருபாகத் தில் ஒருபாகமாகிய அல்லல் தணிந்திருத்தலே சுகோதய மென்ற லென்னை ? உறக்கத்தால் அல்லல் தணிக்கப்படின், அவ்வுறக்கஞ் சுகோதய மென்னலாமோ ? எவ்வெச்சுகங்க ளும் இச்சாக்கிராவத்தாச் சுகத்தினது லேசங்களே யன்றி வேறென்ப தன்றெனின், இவ்விடயங்களே நாடும் போதமா னது தன்னை நாடுழிச் சுகமென்ப தின்றுமோ ? அப்போதந் தோன்றும் பொருளாயின் தன்னை ஒருவாறேனும் நாட வேண்டியதே ! மூற்றும் தோன்றுமையைப்பற்றி நாடவேண்டுவ தின்றெனின், நாம் நாடுதற் கியைந்த இவ்விடயங்கள் காரணமாகச் சுகம் விளைவதாயின், அச்சுகம் இவ்விடயங்களின் பாலதா ? அன்றி இவ்விடயங்களின்மேல் வந்து விழும் போதத்தின் பாலதா ? இவ்விடயங்களின் பாலதேயெனின்,

பிரபுலிங்கலீலை.

"விருப்பு வெறுப்புரு வாம்விட யத்தோ
டிருக்கு மயற்சக மென்பதி லாமற்
பரப்பிர மத்தியல் பார்ப்ப தெமக்குத்
தெரித்தரு ளென்றுரை செய்து துதித்தான்."

எனக் கூறியிருப்பானேன் ? இவ்விடயங்கள் அவ்வண்ணமா கவும் இருக்கின்ற தியல்பாமெனின், மெய் நூலின்கண் மயக்க மாகிய சக மென்பானேன் ? விடயங்களுடைய இயற்கை அங்ஙனமே மிருக்கின்றதா லெனின், இவ்விடயங்கள் மயங்கு கிறதுமுண்டா ? உண்டெனின், இவைகள் சித்துப்பொருளாக வேண்டுமே ? சித்துப்பொரு ளன்றெனினும், எஞ்ஞான்றும் இவ்விடயங்கள் விருப்பு வெறுப்புருவாக இயற்கையாக வரு

கின்றதே இதற்கு யார் என்ன செய்வதெனின், விடயங்கள் ஒன்றுக்கொன்று எதிர்மறையாகிய குணங்களே ஏற்பதுண்டா ? எதிர்மறையாவது ஷை விருப்புருவாயும் வெறுப்புருவாயும் உபேட்சை யுருவாயு மிருக்கின்றன. இவற்றுள் உபேட்சையாவது விருப்பு வெறுப்பிரண்டு மில்லாமை. ஒவ்வொரு விடயமும் எதிர்மறைத் தன்மையை யேற்றதன்று. ஒன்று விருப்புருவாயும், மற்றொன்று வெறுப்புருவாயும், மற்றொன்று உபேட்சையுருவாயு மிருந்து நிகழுகின்றதாமெனின், ஓர் போதத்துக்கு எவ்வெவ் விடயம் விருப்புருவாயிருக்கின்றதோ, அவ்வவ் விடயமும் மற்றோர் போதத்துக்கு வெறுப்புருவாயும், எவ்வெவ்விடயம் வெறுப்புருவாயிருக்கின்றதோ, அவ்வவ் விடயமும் மற்றோர் போதத்துக்கு விருப்புருவாயும் இருப்பானேன் ? அன்றியும், இவ்விரு தன்மைத்தாகிய அவ்வவ் விடயமும் மற்றோர் போதத்துக்கு உபேட்சை யுருவாயும், இவ்வுபேட்சை யுருவாகிய ஒவ்வோர் விடயமும் மற்றோர் போதத்துக்கு ஷை விருப்பு வெறுப்பிரண்டிலொன்றாயு மிருப்பானேன்? இஃதன்றியும், ஓர் போதத்துக்கு எவ்வெவ்விடயம் விருப்புருவாயிருக்கின்றதோ அவ்வவ்விடயமே அப்போதத்துக்கு வெறுப்புருவாயிருப்பானேன் ? ஓர் போதத்துக்கு எவ்வெவ் விடயம் வெறுப்புருவாயிருக்கின்றதோ அவ்வவ்விடயமே அப்போதத்துக்கு விருப்புருவாயிருப்பானேன்? ஓர் போதத்துக்கு விருப்புருவாயிருக்கும் ஞான்றே, மற்றோர் போதத்துக்கு வெறுப்புருவாயிருப்பானேன்? ஓர் போதத்துக்கு வெறுப்புருவாயிருக்கும் ஞான்றே, மற்றோர் போதத்துக்கு விருப்புருவாயிருப்பானேன் ? ஓர் போதத்துக்கு எவ்வெவ் விடயம் விருப்பு வெறுப்புருவமிரண்டில் எவ்வுருவாயிருக்கின்றதோ அஞ்ஞான்றே மற்றோர் போதத்துக்கு உபேட்சை யுருவாயிருப்பானேன் ? ஓர் போதத்துக்கு எவ்வெவ் விடயம் உபேட்சை யுருவா

யிருக்கின்றதோ அஞ்ஞான்றே மற்றோர் போதத்துக்கு விருப்பு வெறுப்புருவ மிரண்டில் ஒன்று யிருப்பானேன்? அன்றியும், ஒவ்வோர் விடயமும் முன்ஞான்று அவ் விருப்பு முதலிய மூன்றி லொன்றும், பின்ஞான்று அம்மூன்றில் மற்றொன்றும், மற்றோர் ஞான்று அம்மூன்றில் மற்றொன்றும் காணப்படுகின்றமையால் இவ்விருப்பு முதலிய மூன்று நிலைமையும் யாதின்பால தெனப்படும்? அவ்வவ் விடயத்தின் பாலதெனின், அதுவும் விருப்பும் முதலிய வைகளால் மாறிக்கொண் டிருக்க வேண்டுமே! தத்தஞ் சொரூபம் கிஞ்சித்தும் மாறவில்லையே? இருந்தபடி யிருக் கின்றதே. எங்ஙனம் இவைகள் இப்பிறழ்ச்சியை ஏற்கின் றது? இல்லையே? இதுகாறும் இப்பிறழ்ச்சியை ஏற்றி இயக்கும் இயக்கத்துக்கு முதலியாதென ஆராய்ந்து தெளிந்த துண்டா? கிஞ்சித்து மில்லையே? இதற்கென்செய்தும்? எஞ்ஞான்றும் இப்பிறழ்ச்சியை ஏற்று வரற்பாலது இவ்விட யங்களே யன்றி வேறொன் றுளதாகக் கண்டிலமே யென்னின், இவ்விடயங்கள் ஒவ்வொன்றும் இருப்பெனப் பட்டதா? அன்றி இன்மையெனப் பட்டதா? இருப்பெனப் பட்டதெ னின், இன்மை யென்பது எவ்வண்ண மிருக்கின்றது? அன் மை யென்பதை உற்றிருக்கின்றதெனின், இருப்பென்பது ஆமென்பதை யுற்றிருக்கவேண்டு மன்றே? ஒவ்வோர் விடய மும் இருப்புள்ளதெனின், ஆராய்ச்சிக்கண் அன்மையெனவும் இன்மையெனவும் முடியாது ஆமெனவும் உண்டெனவும் ஏற்கட்டுமே? ஒவ்வோர் விடயமும் தோற்றும் தோற்றத் தால் ஆமெனவும், அவ்வத் தோற்றத்திற் கியைந்த விகாரா னுபவத்தால் உண்டெனவும், தத்தமுபாதான காரணம் தாமாகாமையால் அன்மையெனவும், அவ்வவ்வுபாதான் காரணத்தை யன்றித் தாம் வேறுகாமையால் இன்மையெனவு மிருக்கின்றது. இங்ஙன மிருக்கின்றமையின்,

சீவகாருணிய விளக்கம்.

"உண்டில்லை யாமலவென் ரேர்ஞான்கு மேலாமற்
கண்டபொரு ளொன்றேனுங் காட்டாதார்க் - குண்டோ
குருத்துவந்தான் வல்லீர் குளறிவழி தற்கோ
பெருத்தகுரு வென்றுகொண்ட பேர்"

எனக் கூறியிருக்கின்றது. அன்றியும்,

ஞானவாசிட்டம்.

"இல்லதன்றுண் டல்லவறி வில்லாவுருவி லறிவுருவ
மல்லவான்ம வுருவுமல வயலன்றுலக மெனநினைவாய்."

என்றுங் கூறியிருக்கின்றது. இங்ஙனம் இருக்கும் இவ்விடயங் களைத் தூல மதியினால் நாடுதலே விட்டுச் சூக்கும மதியினால் ஆராய்வேண்டுமே? அங்ஙன மாராய்ந்து தெளியாதழி தேதேகாகமபக்க மெவ்வண்ணம் அகலும். இதுநிற்க, தேதேகா மென்பது தேகத்தை நான் நானென மயங்கி யழுந்தி யிருப்ப தாயினும், அவ்வத் தேகத்தின்மேல் நான் நானென வந்து வந்து விழுந்தழுந்திய அவ்வப் போதமானது எங்கிருந் தெழுந் தது? அதையேனுஞ் சற்றாகிக்குறும். எங்ஙனமெனின், அங் ஙனமெழும் அவ்வவ் வெழுச்சிகளும் சடவெழுச்சிக ளன்று, சித்தாகிற நினைவெழுச்சிகளாகலின் இவைகளெழுதற் காதார மென்பது எப்பொரு ளெனபபடும்? அவ்வாதாரம சித்துப் பொரு ளன்றாயின், அதில் நின்றும் எழுந்த எழுச்சிகளாகிய அவ்வப் போதங்களானது சித்தம்சங்களா யிருக்குமா? அதா வது நினைவாகிற சங்கற்பவெழுச்சிகள். இவைகளிங்ஙன மிருக் கின்றமையின் அவ்வாதாரம் சித்துப்பொருளென்பதற்குமூர ணின்று. அச்சித்தாதாரத்தில் நின்றெழுந்த நான் நானென்னும் இப்போதத்துக்கு அதிட்டானப்பொருள், அதாவது உபா தான் காரணமென்பது, அவ்வாதார மெனப்படுமா? அன்று

ஆங்காங்குமுள்ள அவ்வத்தேக மெனப்படுமா? அவ்வத்தேக ங்க ளெனப்படுமெனின், அவ்வத்தேகங்களும் சொப்பனவத் தைக்கண்ணும் சுழுத்தியவத்தைக்கண்ணும் நான் நானென் பதற் கியைகின்றனவா? கிஞ்சித்தும் இயையவில்லையே! ஆங் காங்கும் அவ்வவ் வீரவத்தைகடோறும் நான் நானென்னும் போதமில்லையா? இருக்கின்றதே! அங்ஙனமிருக்கும் அவ்வப போதமும் எதனது அம்சங்க ளெனப்படும்? தாம் எந்த முத லின்கணின் று எழுந்தனவோ அந்த முதலினது அம்சங்களன் றே? தன் அம்சங்கள் தன்பால் விழுந்தழுந்தாது மற்றவற் றில், அவையாவன வடி அவ்வத் தேகங்களில் விழுந்தழுந்தி யிருக்கலாமா? கூடாதன்றே? ஆங்காங்கும் அவ்வத்தேகாம்ச மே சர்வ உயிர்களாகிய போதவெழுச்சிகளெனின், அவ்வத் தேகங்களும் சதுர்ப்பூதாம்ச சையோக எழுச்சிகளாகாதிருக்க ட்டும். மீண்டும், அச்சதுர்ப்பூத மாகாதிருக்கட்டும், ஆகின்ற தால், தேகங்களாகிய அம்சங்களுக்குச் சதுர்பபூதங்கள் ஒவ் வொன்றும் ஆதாரமாயும், முதற்காரணமாயும், அதிட்டான மாயும், ஏகத்துவமாயும், நித்தியமாயும் இருக்கின்றதன்றே? இவற்றுல் ஒவ்வொரு தேகமும் கற்பனையனறே? இவ்வொவ் வொரு கற்பனைத்துணை நான் நானென்றிருக்கும் ஒவ்வொரு போதமும் கற்பனையன்றே? தேகங்களாகிற கற்பனைகட்கு ஆதாரபூதங்களிருப்பதுபோல் அவ்வக் கற்பனைகளாகிய தே கங்களுள் நான் நானென நிகழும் கற்பித உயிர்கட்கும் ஆதார மாயும், முதற்காரணமாயும், அதிட்டானமாயும், ஏகமாயும், நித்தியமாயும் இருத்தற்கு ஒன்று உண்டன்றே? இன்றெ னின, உபாதித்திரயம், அவத்தாத்திரயம், அபிமானத்திர யம் என்னும் இவையனைத்தும் எதன்கண் மாறுகின்றன? இங்ஙனம் மாறுதல் அறிவினிடத்தா? அன்றி அயலினிடத் தா? அயலென்பது உபாதித்திரயம் முதலியவைகள் வேற ன்று. ஆங்காங்குமுள்ள அவ்வத் தேகங்களும் முதலாயின்,

அவ்வத்தேகத்துணை நான் நானென்னும் தேகியும் முதலென்னப்படும். தேகமனைத்தும் சடாம்சங்களாகலின், மீண்டும் சதுர்ப்பூதங்களாய் முடிகின்றன. இதுபோல், தேகியனைத்தும் சித்தம்சங்களாகலின், இவைகள் மீண்டும் எதுவாக வேண்டும்? ஆதாரமாகிய சிற்போதமாக வேண்டுமன்றே? அன்றியும், இவ்வொவ்வொரு போதமும் தானுகிய அகண்டவியாபக போதத்தினின்று விஸ்மரணையாகத் தனித்தனியாயெழுந்த எழுசியே முதற்கோளாயின், அங்ஙனமெழுந்தவைகள் மீண்டும் அக்கணமே அவ்வாதார போதமாய் விடுதற்கு அதில் விழுந்தழுந்தாது விட்டது இரட்டித்த கோணலன்றே? அங்ஙனம் அதில் விழுந்தழுந்தாவிடினும், தாமெழுந்த எழுச்சிமட்டிலேனும் நிற்கவேண்டுமே! அங்ஙனமும் நில்லாது விடயாகாரமாய்த் திரும்பினது, அதனினும் கோணலன்றே? அங்ஙனம் திரும்பினமட்டிலேனும் நிற்கவேண்டுமே? அங்ஙனமும் நில்லாது விடயங்கள் பலவற்றுள் ஒவ்வொன்றில் அதாவது ஆங்காங்கும் அவ்வச் சரீரங்களில் நான் நானென வந்து வந்து விழுந்தழுந்திவிட்டது பின்னும் மிகுத்த கோணலன்றே? இங்ஙனம் ஒவ்வொரு போதமும் நான்கு நான்கு கோணல்களும் நிருக்கின்றதால், இக்கோணல்களனைத்தும் தானுயிருத்தற் கியைந்த உழைப்பின்றே! இருக்கின்றதால், அவ்வுழைப்பிற் செல்லாமல் இதுகாறும் எமாந்திருப்பானேன்? இங்ஙனம் எமாந்திருப்பது கீழ்விகேள்விகளை போதுமான நிர்ப்தி யென்பதனுலோ? இக்கல்வி கேள்விகள் மட்டில் நின்றுவிடின், தன்னேட்டை முற்றும் விட்டுவிட்டு, அயலேட்டில் சொக்கி யிருக்கவேண்டி வருமே? அன்றியும், பிறர் தோல்வியையும், தாம் வெற்றியையும் ஈய்துதற்கே அங்கங்துகொண் டிருக்கவும் வருமே? அங்ஙனம் அங்காதுகொண் டிருக்குங்காறும், பிறரால் தாமும், தம்மால் பிறரும் இழிவை யேற்கவும் வருமே? ஷை கல்வி கேள்விகளால்,

பிறரது பூர்வபட்சத்தையும், தமது சித்தாந்த பட்சத்தை யும், விளக்குதற்கு இயைந்ததாயினும், நாடவேண்டியதை எத்துணைக் கட்டமுற்றேனும் நாடவேண்டுவது கல்விகேள்வி களுக் கழகன்றே ?

திருக்குத் திரிசிய விவேகம்.

"எட்டைப் படித்திங் கிறுமாப்பா லெண்ணபய
ளுட்டம் படித்தன்றே நாமறுப்பம் - வாட்டமெலா
மெச்சனனத் தேனு மிரும்பொருளே நாடாத
வெச்சததா லன்றே விவை."

என்றருளி யிருக்கின்றதே ! அஃது நூதன நூலானமையால் இஞ்ஞான்று பயனுறுதெனின், பின்ஞான்றேனும் பயனுறு மன்றே? பின்ஞான்று பயனுறுவது, இஞ்ஞான்று பயனுறு தோ? உறுதெனின், நாம ரூபங்களில் கைப்புறுமையினாலும், பொறுமை மேலீட்டாலுமே அன்றி ஷி நான்குவிதகோணல் களுக்கும் சகிக்கக்கூடாத சித்த விருத்திகட்கு நூல்கள் மூன்ஞான்றதென்றும் இஞ்ஞான்றதென்றும் நாடவேண்டி வருமோ? எஞ்ஞான்றதாயினும் ஷி ஆதார அதிட்டானத் தை எட்டுவதற்கு யுத்தி அனுபவங்கட்கு ஒத்ததாயின் சாலு மன்றே ? மூன்ஞான் றமைந்த நூல்கள் அஞ்ஞான் றிருந்த வர்க்கு நூதன நூல்களாகவிருந்து அறிஞர்க்கு அஞ்ஞான்றே சிறப்புற்றதுபோல் இஃது இஞ்ஞான்றும் சிறப்புறுமென்க.

தாயுமானவர்.

"கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வுற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்."

என்றருளி யிருக்கின்றதும் யாதற்கு ? தாஞகிய ஏட்டை விடாதிருத்தற் கென்க.

ஞானவாசிட்டம்.

"ஊகமுள தேற்சிறுவ ருரையுங் கொள்க
வொழிந்ததய னுரைசெயினுந் திரண மொப்ப
வேகவிடு வாய்ஞான மெளிது தோன்ற
வியம்புமுவ மானமெலா மேக தேச
மாகினை வாயுருவ மற்ற ஞான
மாகார மாமுவமைக் கண்டா தென்னு
மூகனு பவாதில்லா விகற்பத் தாலே
மொழிகுதர்க்க மறிவழிக்கு முயல வேண்டாம்."

என்றருளியதில், சுருதியுத்தி யனுபவத்துக்கு ஒத்துச்சொல் பவர் மிக்க சிறுவர்களாயினும் சாலுமென்பது கருத்தென்க.

குறள்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்." என்றும்,

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" என்றும்

வாகியம் பிறந்திருக்கின்றதே. இவற்றுள் கற்றதனா லாய பயனென்னென் றருளியது, கல்விகேள்விகளில் முதிர்ந் தும், அயல் நாட்டமென்பது முன்ஞான்று முற்றும் மழுங் காமலும் பின்ஞான்று நாடவேண்டிய தன்னேட்டைக் கிஞ் சித்தும் நாடாமலும், மிதந்திருத்தலின் அவர்களைத் தாழ் த்தியும், பின்ஞான்று விலங்கொடு மக்களனைய ரென்றருளி யது, அக்கல்வி கேள்விகளுக்குப் பயன் தன்னேட்டை நாடாது மிதந்திருத்த லல்லவென்று அம்மிதப்பில் நின்றக ன்று, ஷி ஆதாரப் போதமாகிய தன்னேட்டை யெட்டுத லின், அவர்களை உயர்த்தியு மிருக்கின்றது. அன்றியும், அக் குறள் மகாவாக்கியமே,

"ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு."

எனவும் பிறந்திருக்கின்றது. இவைகள் இங்ஙனமிருக்க, நாம உழைக்கவேண்டிய உழைப்பைவிட்டு எங்ஙன மிருக்கக்கூடும். ஷை உழைப்பென்பது எங்ஙனமெனின், அதுதான் அகம் புற ஆராய்ச்சியென மூன்ஞான்று கூறியதென்க. அவ்விரண் டுழைப்பும் எவற்றைப்போல வெனின், ஓர் புருடனை எறியப்பட்ட கைப்பந்தானது தான் சென்று மோதிய விடத்தில் நில்லாது மோதிய அக்கணமே திரும்பி எறிந்த வன்பால் வந்து தாக்கி விழுந்து விடுவதுபோல, அவ்வச்சரீரங் களிலும் நான் நானென வந்துவிழுந்த அவ்வப்போதமும், தா மெங்கிருந் தெழுந்து வந்தனவோ அவ்விடத்திலேயே அதா வது அவ்வாதாரப் போதத்திலேயே அகநெறித்தாகச் சென் று மோதி விழுந்தழுந்தி அதுவாயிருந்திட வேண்டுவதும், ஒருவன் வெடிமருந்திற் சேர்த்துப் பிரயோகஞ் செய்யப் பட்ட வெடிகுண்டானது தான்சென்று மோதியவிடத்தில் நில்லாது ஊடுருவிச் சென்றுவிடுவது போல், தாம் அவ்வச் சரீரங்கள் மட்டில் நில்லாது அக்கணமே புறநெறித்தாகச் சென்று ஊடுருவி ஷை அவ்வாதாரப் போதத்தில் மோதி விழுந்தழுந்தி அதுவாயிருக்க வேண்டுவதுமா மென்க. இங் ஙனமாகிய இவ்விரண் டுழைப்புகளுள் ஒன்றிலேனும் செல் லாமல் மலசல விசார்ச்சனங்கள் செய்துகொண்ட சிசுக்களா னவை, அம்மலசலத்தில் நின்றும் தாம் நீங்காமலும், அம் மலசலத்தையேனும் ஒதுக்கிக் கொள்ளாமலும் அவ்வவற்றி லேயே ஊன்றுகொண் டிருக்குமாறு போல், ஆங்காங்கும் அவ்வத்தேகபாகத்தில் நானெனதாகவே ஆலவிருட்சம் விழு திட்டு வேரூன்றி நிற்பதுபோல் நின்று உழைத்துக்கொண் டிருப்பது எத்துணைக் கோணலெனப்படும்; இங்கே கோண

லென்பது மயக்கமெனற்பாலது. இக்கோணல்களாகிய மய க்கங்களில் நின்றும் அகலவேண்டுமா? அன்றி வேண்டாமா? வேண்டுவதெனின், ஒரு கைப்பந்தைப்போல் முன்ஞான்று அகநெறி யாராய்ச்சியும், வெடிகுண்டைப் போல் பின் ஞான்று புறநெறி யாராய்ச்சியும் செய்து செய்து தானே தா னாக வேண்டுவதே திண்ணமென்க. முன்ஞான்று அகநெறி யிற்சென்று எவற்றை யாராய்ந்து தானுக்தெளிய வேண் டுவதெனின், தூலசரீர முதல் அவித்தை யிறுவாயுள்ள அறி வறியாமை அடுக்குப் பேதங்களே யென்க. பின்ஞான்று புற நெறியிற் சென்று எவற்றை யாராய்ந்து தானுகத் தெளிய வேண்டுவதெனின், பிருதிவி தத்துவமுதல் ஆகாயமிறுவா யுள்ள அறிவறியாமை அடுக்குப் பேதங்களே யென்க. அவ் வகம்புறத்துள்ள அறிவறியாமை யடுக்குக்களே ஆராய்வ தெங் ஙனமெனின், இவ்வகம்புற ஆராய்ச்சி விளக்கத்தில், முன் ஞான்று அகத்தாராய்ச்சி விளக்கம் கூறப்புகுந்த இவ்வா ராய்ச்சிக்கண், முதலிலே ஐம்பொறியாராய்ச்சி யுழைப்பைப் பற்றிச் சற்று ஊகிக்கின்றது.

முதலாவது

நாட்டபேத விளக்கம் முற்றிற்று.

இரண்டாவது

ஐம்பொறி ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சியின்க ணேய்ந்த புலனைந்துந்
தந்தமக்கு முண்மையுருத் தானின்றி—யெந்த
விதத்துமறி யாமையதாய் மேவுமுமூப் போதுந்
திதித்தலெது நானுந் தெளிவு.

சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தமாகிய இவ்வைந்தும் சுகசாதன விடயங்கள். இவ்விடயங்கள் காணப்படுந் தகைய தாகலின், ஒன்றுக்கொன்று காணப்படுகின்றனவா? அன்றித் தமக்குத்தாம் காணப்படுகின்றனவா? தமக்குத்தாமே காணப் படுகின்றனவெனின், கனவிலும் சுழுத்தியிலும் இவைகளிருக் கின்றதால் அவற்றிற் காணப்படாதிருப்ப தென்னை? இத னால் தமக்குத்தாம் காணப்படுவ தன்றென்க. வேறொன்றுக் கே காணப்படுகின்றன வெனின், அஃதியா தெனப்படும்? நா னென்கிற வோர் போதமாமெனின், அப்போத மெத்தகைய தெனப்படும்? அவை கட்பொறி முதலிய பஞ்சேந்திரியங்க ளாமெனின், இவ்வைம்பொறிகளும் நானென்பதற்குப் பொ ருள்களா ? அங்ஙனமாயின், ஐந்துமித நானிருக்க வேண்டு மே ! அங்ஙன் மில்லையே! இவ்வைந்தும் பொருள்க ளன்றுக வின், தொழிற் குணங்களா? அன்றித் தோற்றக் குணங்களா? நாமரூபங்கள்போற் காணப்படாமையின், தோற்றக் குணங்க ளன்று ; தொழிற்குணங்களெனின், இவைகள் எவ்வித் தொழில்க ளெனப்படும்? கேட்டல் பரிசித்தல் பார்த்தல்

ருசித்தல் முகர்தல் ஆகியவாமெனின், இத்தொழில்கள் யா தின்பால தெனப்பெறும் ? வேறொன்றின் பாலதெனின், அவ்வேறொன்று நானென்பதன்றே ? நானென்ப தெல்லா வற்றையு மூணரும் உணர்வு வடிவமன்றே ? இங்ஙனமிருக்க, ஏங்ஙனம் நானென்பதற் கியையும் ? அன்றியும், இவ்வைம் பொறிகளும் ஒடி விடயங்களை இருப்பாகக்கொண் டுணருகின் றனவா ? அன்றிக் கற்பனைகளெனக்கொண் டுணருகின்றன வா ? இருப்பெனக்கொண்டே உணருகின்றனவெனின்! இது ஞ லிவ்வைம்பொறிகளும் அறிவாகிய முதலெனப் படுகின் றனவா ? அன்றி அறியாமைபாகிய கற்பனையெனப் படுகின் றனவா? இவ்வைம்பொறிகளையுமன்றிச் சத்த முதலானவை களை யுணர்தற்கு வேறுபொரு ளின்மையின் இவை அறிவா கிய முதலெனபபடுமெனின், இவ்வைந்தும் தமக்கயலாகிய வற்றை யறிகின்றனபோல் தம்மைத்தா மறிவதுண்டா? தம க்குத்தாம் தோன்றலின்றென முன்னைஞான்று மூடிந்தமை யால், தம்மைத்தா முணர்வதன்று. அன்றேனும், மேலொன் றால் தாமறியப்படா திருக்கட்டுமே ? அங்ஙனமுமில்லையே ? இப்பொறிகள் தத்தமக்கியைந்த விடயங்களை யுணருமு உண ர்வு வடிவாயிருக்க, மேலொன்றால் எங்ஙன் மறிப்பப்படுமெ னின், இவைகள் அம்மேலொனறுக்குக் கிழமைபபொருளா விருக்கின்றதா லென்க. எங்ஙனமெனின், இவ்வைநதுள் ஒவவொன்றும் பழுதுற் றிருத்தலையும் பழுதற் றிருத்தலை யும் கிஞ்சித் பழுதுற் றிருத்தலையும் நன்குணரப்படுகின்றன வே. அவையாவன, என் செவிப்புலன் நனகிருக்கின்றதென் றும் நன்கில்லை யென்றும் முற்றும் கேட்கவில்லை யென்றும், என் பரிசப்புலன் நன்கிருக்கின்றதென்றும் நன்கில்லை யென் றும் முற்று முணரவில்லை யென்றும், இங்ஙனமே ஏனைய ரூப முதலிய முப்புலன்களு மிருக்கின்றதால் கிழமைப்பொரு ளென்பதற்கு முரணென்னை? கிழமையென்பது உரிமையுற்

றிருத்தல். இவற்றுள், இவ்வைந்து மெங்ஙன மறிவென்பதற் கியையும்; அன்றியும் இவைகள் நான் நானென்னுந் தன்மைப் பொருள்களன்று மூன்னிலைப் பொருள்களாகலின், இவைகள் சுதந்தர மென்பதற்கு விருத்த மென்னே ? இவ்விருவகைக் கிழமைகளும் பிறிதின் கிழமைகளா ? அன்றித் தற்கிழமை களா? தற்கிழமைப் பொருள்களெனின், இக்கிழமை நானென் கிற முதலே விட்டகலாச சுதந்தரமும் பிரிக்கவேண்டுமே ! அச்சுதந்தரம் இச்சாக்கிரா வத்தை நீங்கலாக மற்றீரவத்தைக் கண்ணுமில்லையே! அவை சொப்பனஞ் சுழுத்தியென்க. இதனாற் பிறிதின்கிழமை யென்பதே திண்ணமாயிற்று. ஆகவே, இவைகள் சடப்பொருள்களு மாயிற்றென்க. இவைகள் மேலே ஓர் நானென்பதனு லுணரப்பெறும் பொருள்களாயினும், தமக்கன்னியங்களாகிய ஒலி சத்த முதலிய விடயங்களின் பாகுபாடுகளேயேனும் நன்குணர்ந்து வருகின்றமையின், அறிவுப் பொருள்க ளென்னுது சடப்பொருள்க ளென்ற தென்னேயெனின், இதனுல் இவை சித்துப்பொரு ளாகின்றன. ஆகவே, மேலொரு நானென்பதனு லறியப் பெறுகின்ற மையால் அறியாமையு மாகின்றதே ! இதற்கென்செய்வது ? அன்றியும், இப்பொறிகள் அறியாமை யென்பதற் கியைந்தனவா? அன்றி அறிவென்பதற்கு இயைந்தனவா? இவ்விரண்டிற்குமே இயைந்தனவெனின், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நேர் எதிர்மறைத் தர்மங்களாக விருக்கின்றனவே ! இவை ஓர் பொருள் ஒளியுமிருளுமா யிருக்கின்றது போலா மென்க. இங்ஙன மிருப்பதால் தோடமென்னே யெனின், ஒளியுள்ளஞான் றிருளும் இருளுள்ளஞான் றொளியும் இன்மை யாகுமாறுபோல, இவைகளும் அறிவெனப்படுஞான்று அறியாமையும் அறியாமை யெனப்படுஞான்று அறிவுமின்றிப் போகவேண்டி வருமே? இங்ஙன மிருத்தற்கு அன்னியான்னியாபாவ மெனக் கூறுவ ருரிஞர், இவ்விரண்டும்

அன்னியோன்னியாபாவ மெய்தினும், இவ்விரண்டுமாக வுடைய பொறிகள் ஒவ்வோர் முதலாக வில்லையோவெனின், இப்பொறிகள் அறிவாகவேனும் அறியாமையாகவேனும் திரமுற் றிருக்கவேண்டுமே? அங்ஙனமின்றி மிசிரிம்பித்திரு ப்பதால், ஓர் முதலென்ப தெங்ஙனம்? அங்ஙனம் இரண்டு பட் டிருப்பதாகவே வைத்துக் கொள்ளினும், இப்பொறிகள் ஓர்போதேனும் அறிவென்பதற் கியைந்தனவா? அன்றி அல்லவா? எனச் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், இப் பொறிகள் எவற்றை யறிகின்றதா லறிவெனப் படுகின்றன? சத்த முதலிய ஐந்து விடயங்களையுமா மெனின், இவ்விடய மைந்தும் பொருள்களா? அன்றிக் குணங்களா? பொருள்க ளாமெனின், எவ்வகைக் குணந் தொழில்களுக்கு இவ்வைந் தும் பொருள்க ளெனப்பெறும்? அங்ஙனம் பொருள்க ளல் லவே! அன்றியும் இவைகளைப் பொருள்களென்று சொல்வ தற்கு எவ்வெப் பொருள்களென் றேற்பது? நிலப்பொருள் நீர்ப்பொருள் நெருப்புப்பொருள் காற்றுப்பொருள் வானப் பொருள் ளென்பவையா மெனின்,

ஔவையார் குறள்.

"நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே
யுலவை யிரண்டொன்று விண்."

எனக் கூறி யிருப்பானேன்? அவையாவன:—நிலமென்பது கந்தமுதலிய ஐந்துவித தர்மங்களும், நீரென்பது கந்தம் நீங்க லாக வேனைய சுவைமுதலிய நான்குவித தர்மங்களும், நெருப் பென்பது கந்தம் சுவை நீங்கலாக வேனைய ரூபமுதலிய மூன்று வித தர்மங்களும், காற்றென்பது கந்தம் சுவை ரூபம் நீங்க லாக வேனைய பரிசமுதலிய இரண்டுவித தர்மங்களும், வான மென்பது கந்தம் சுவை ரூபம் பரிசம் நீங்கலாக வேனைய சத்த

மாகிய ஓர்வித தர்மமும் உடையனவாம். இவற்றுள், சத்தம் ஐந்து, பரிசம் நான்கு, ரூபம் மூன்று, சுவை இரண்டு, கந்தம் ஒன்று ஆகப் பதினைந்துவித தர்மங்களா யிருக்கின்றன. இவற்றுள், ஐந்து சத்தமாவது: ஆகாயம் வறும் சத்தம், வாயு சல சல சத்தம், அக்கினி பகபக சத்தம், சலம் புளபுள சத்தம், பிருதிவி கடகட சத்தம் என்பனவாம். நான்கு பரிசமாவது: வாயு மிருதுப் பரிசம், அக்கினி உட்டினப் பரிசம், சலம் சீத ளப் பரிசம், பிருதிவி கடினப் பரிசம் என்பனவாம். மூன்று ரூபமாவது: அக்கினி சிவப்புநிற ரூபம், சலம் வெண்மை நிற ரூபம், பிருதிவி பலநிற ரூபம் என்பனவாம். இரண்டு சுவை யாவன: சலம் மதுரச் சுவை, பிருதிவி பலவகைச் சுவை என் பனவாம். ஓர்வித கந்தமாவது : கந்தம் பலவாயினும் இவற் றிற்கு முதல் ஒன்று யிருத்தலால் கந்த மொன்றெனப்பட் டது. ஆகாய முதலிய ஒவ்வொரு பூதமும் குணபேதமா யிருத்தலின், பொருளென்ப தெங்கே? இல்லேயே! குண பேதங்கள் இரண்டாக விருக்கின்றன. அவையாவன: தொழிற் குணமும் தோற்றக் குணமுமா மென்க. தொழிற்குணமா வது: தமக்கெனப் பொருள்படாத அணுக்கள் ஒன்றோடொ ன்று சையோகித்திருக்கும் ஒன்றன்கூட்ட விகாரமும், தோற்றக் குணமாவது : இச் சையோகம் வியட்டி சமட்டி பேத வடிவங்களாகக் காண்டலுமாம். தொழிற் குணங்களே யுந் தோற்றக் குணங்களேயும் ஒவ்வோர் முதலெனகொண்டு உணருகின்றது மயக்கமா? அன்றித் தெளிவா? மயக்கமாக லின், இம்மயக்கம் அறியாமையா? அன்றி அறிவா? உண ருந்தகைய தாகலின் அறிவாமெனின்,

குறள்.

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணப் பிறப்பு."

என்றதேன்? அன்றியும், ஷி இருவித குணங்களுக்கும் முதலே யெட்டினதுண்டா? இல்லையே! இல்லையேனும், அவைக ளெவையெனத் தேடினதாவதுண்டா? மேற்சொல் லிய பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு மருளென்ற மகா வாக்கியத்திற் கிணக்கமாயிற்றே! ஆகவே, இவ்வைம் பொறிகளும் அறியாமை யென்பதற்கு மூரணென்னே? அன் றெனின், பொருளைப் பொருளென்றுணரும் அறிவாகவேண் டும். அங்ஙனமில்லையே! ஆகலின், அறியாமை யென்பதே திண்ணமென்க. அன்றியும், தம்மை யறிகின்ற மேலொன்றை யேனும் அறிகின்றனவா? அங்ஙனமு மில்லையே! அதனு ளும் தாம் அறியாமை யாகின்றனவே! இவ்விரிடத்தும் அறியாமை யெனப்படினும், தம்மையேனும் தாமறிவ துண்டா? அங்ஙனமு மில்லையே! முப்போதும் அறியாமைத் தன்மையா யிருக்கின்றதால் சடத்துவ மென்பதற்கு மூர ணின்றென்க. இஃதிங்ஙனமிருக்க, மேலேயிருந் தறிகின்ற அறிவையன்றி இவைகள் ஒவ்வோர் முதலாகவேனும் இருக் கின்றனவா எனச் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், மேலே கின்றுணரும் அவ்வறிவானது வேறே யோர் விடயாகாரப் பட்டுழி, இப்பொறிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் பொருளா யிருக்கின்றனவாயின், நோலிருக்கின்ற சத்தமாதி விடயங் களை உணருமல்லவா? கிஞ்சித்தேனும் உணரவில்லையே! ஆகலின், இப்பொறிகள் ஒவ்வொன்றும் முதலன்றென்பதே திண்ணமென்க. பொறிகள் ஓர் முதலன்றுயின், இவைகளின் றிச் சத்தமாதி விடயங்களை மேலிருக்கும் அறிவு அறியாத தென்னை யெனின், அம்மேலறிவையன்றி இப்பொறிக ளறி யாததென்னை? மேலே யிருக்கு மறிவுக்கு இப்பொறிக ளறி கருவிகளாக விருக்கின்றதா லெனின், இதனால் விடயங்களை யறிகின்றது மேலே யிருக்கின்ற வறிவா? அன்றி இப்பொறி களா? இப்பொறிகள்தா மெனின், இப்பொறிகட்கு மேலே

யிருக்கும் அறிவு அறிகருவிகளாக இருக்க வேண்டுமே! இப் பொறிகள் அறிகருவிகளா யிருப்பானேன்? ஓர் பொருளை மற் றோர்பொரு ளறிய வேண்டுமாயின், அவ்வறிவுக்கு எது அறி கருவியா யிருக்கின்றதோ அவ்வறிகருவி அறிகின்ற தல் லவே? அதுபோல், மேலே யிருக்கு மறிவு விடயங்களை யறி தற்குப் பொறிகள் கருவிகளாக விருக்கின்றமையின், அம்மே லறிவையன்றி எங்ஙனம் இப்பொறிகள் தாமே விடயங்களை அறியக்கூடும்? இதனால், பொறிகள் ஒவ்வோர் பொருளு மன்று வினைமுதலுமன்று! ஆகலின், இவைகள் மூற்றும் அறியாமை யென்பதாயிற்று. ஆகவே, முன்ஞான்று இப் பொறிகளை இருப்புள்ளவைகளென்றும் வினைமுதல்க ளென் றும் கொண்டது மயக்கமா? அன்றித் தெளிவா? மயக்க மாகலின், இம்மயக்கம் அஞ்ஞான் றறிவாயும் இஞ்ஞான் றறி யாமையாயு முடிந்தன. முடியவே, பொறிகளாகிய அறியா மையானவை, மேலிருந்தறியு மறிவுக்குப் பிராகபாவம் பிரத் தொம்சாபாவம் அன்னியோன்னியாபாவம் / அத்தியந்த பாவமாகிய இந்நான்கினையும் ஏற்கின்றமையின், அந்த நான்கு பொழுதும் மேலிருந் தறிகின்ற நானென்னும் அறிவே பாவ மாயிற்று. ஆகவே, அவ்வறிவு சித்தாந்த பட்சமும் இப்பொறி கள் பூர்வபட்சமு மாகின்றன. இதுகாறும் ஆராய்ந்து வந்த தில், இப்பொறிகள் நானென்பதற்குப் பொருள்களன்றென்ப தாயிற்றென்க. ஆகவே, இவ்வைம்வொறி யாராய்ச்சியில் தோந்த தியாதெனின் அனாத அடுக்குப் பேதங்களா யிருக் கின்ற மூதலடுக்காகிய அறிவறியாமைப பேதமும், இவற் றிற்குமேல், உறுதியாயும் விலட்சணமாயு மிருக்கும் ஓப்பற்ற அறிவுமாமென்க.

இரண்டாவது

ஐம்பொறி ஆராய்ச்சி விளக்கம் முற்றிற்று.

மூன்றாவது

அந்தக்கரண ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சிக்க ணேய்ந்த வகக்கரண்
மெந்தவிதத் தும்முதலா வின்றதனற்—சந்ததமும்
கற்பனையாய் நீக்கமுற்றுக் காரணமா நானெனலே
யொற்கமில் லாவிருப்பா மோர்.

எங்ஙனமெனின், மூன்றீன ஞான்று ஐம்பொறி யாராய்ச்சிக்கண் நானென்பதற்குப் பொருள் இவ் வைம்பொறிகளும் அன்றெனப் பட்டமையால், வேறே எது நானெனப்படுவது? அஃதன்றே அறிவெனப்படும். அவ்வறிவு யாது பொருள்? அந்தக்கரண மென்பாமெனின், அவ்வந்தக்கரணம் இல்லா ஞான்று நானென்ப தில்லாதிருக்க வேண்டுமே? அஃதில்லா ஞான்று சுழுத்தி மூர்ச்சை சமாதி முதலியவைகளாம். இஞ் ஞான் றுரைத்த அவத்தைகளிடத்து இவையில்லாமையைக் கண்டு கண்டு உணர்ந்து வருகின்றதியாது? நானென்ப தன்றே? அஃது நானென்பதாயினும், அந்தக்கரணத்தை யன்றி ஐம்பொறி முதலியவைகளே உணர்ந்து வருகிறதற்கு யாதுமில்லையே யெனின், அதனால் அந்தக்கரணத்தினியல் பைச் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், அவ்வந்தக்கரணம் ஐந்தீலநாகம் போல்வது. அதாவது, ஷிசட்சுமுதலிய வைம் பொறிகளையும் ஐந்து சிரங்களாகவும், தான் இச்சிரங்களுக் கோர் உடலாகவு மியைந்து, ஷி சத்த முதலிய விடயங்களை உணர்தற்கியைந்த அறிவா யிருக்கின்றது. இருக்கு மிஃது,

ஐம்பொறி வழித்தாகச் சென்றுணராவுழி விடயங்களென்ப தெங்ஙனந் தோன்றும் ? இதனால், அந்தக்கரணம் ஐந்தலை நாகம் போன்ற தென்பதற்கு முரணின்று. ஐம்பொறிகட்கும் அந்தக்கரணந் தலைமையா யிருத்தலின், அஃதறிவெனப் படுமா ? அன்றி அறியாமை யெனப்படுமா ? அறிவெனப் படுமெனின், அவ்வந்தக்கரண மிரண்டாக விருக்கின்றது. அவை மனமெனவும் புத்தியெனவுமாம். அவற்றுள் ஒன்று அகக்கிரியைக்கும் மற்றொன்று புறக்கிரியைக்கு மியைந்தன. அகக்கிரியைக் கியைந்தது மனமெனவும், புறக்கிரியைக் கியைந்தது புத்தியெனவு மாகின்றன. இங்ஙன மிருக்கும் இவ்வந்தக்கரணத்தை ஞானமெனவும் மனமெனவும் புத்தியெனவும் சித்தமெனவும் அகங்கார மெனவும் சில நூல்கள் பகுத்துக் கூறுகின்றன. ஏனெனின், மூலப்பிரகிருதியின் குணத்திரயத்துள் இறுதியா யிருக்கும் தமோகுணம்சமாகிய விசேஷபம் ஆவரணம் என்னும் இரண்டுள் விசேஷப சத்தியின் காரியமாகிய பஞ்சபூதங்களில், ஆகாயத்தி லாகாயம் ஞானமெனவும், ஆகாயத்தில் வாயு மனமெனவும், ஆகாயத்தில் அக்கினி புத்தியெனவும், ஆகாயத்தில் அப்பு சித்தமெனவும், ஆகாயத்தில் பிருதிவி அகங்கார மெனவுமா யிருக்கின்ற இக்காரணம் பற்றியென்க. சித்தத்தையும் அகங்காரத்தையும் மனம் புத்தி இரண்டிலு மொடுக்கி அந்தக்கரண மிரண்டெனவுங் கூறி யிருக்கின்றனர் சிலர். எவ்வுயிருந் தேகோகமா யிருத்தலைப்பற்றி அகமெனவும் புறமெனவும் வந்திருப்பதுள் அகத்துள் மனமானது இச்சா ஞானமாகநின்றியங்குதலும், புறத்தில் புத்தியானது ஞானேந்திரிய கர்மேந்திரிய சம்பந்தமாகப் பலகிரியைகளு மியற்றுதலுமாம். புத்தியானது புறக்கரணங்களாகிய தசேந்திரியங்களோடு நிகழ்ந்து வருகின்றதென்ப தெங்ஙனமெனின், இவ்வுகத்தில் ஒவ்வொருவருஞ் செய்யும் செய்தொழிலெக்கண் டதிசயித்த

லும், இகழ்வுறுதலும் எதனை? அவரவர் புத்தியை யன்றே? மனதை யல்லவே! எங்ஙனமெனின், ஆச்சரியமான காரியங்களைக் கண்டு இவர்களது புத்தியானது எத்துணைச் சிறப்புற் றிருக்கின்ற தெனவும், சாமானியமான காரியங்களைக் கண்டு இவர்களது புத்தியானது எத்துணை மடமையுற் றிருக்கின்ற தெனவும், நீடித்து வழங்கி வருகின்றதால், இவையே சாலுமான சான்றென்க. ஷை அந்தக்கரணத்தின் தொழில் எத்தகையதெனின், ஒன்றை வேண்டுமென்று அபேட்சித்தல் மனமெனவும், அங்ஙனம் அபேட்சிக்கப் படுவதைப் பகுத்துணர்தல் புத்தியெனவும், அங்ஙனம் பகுத்துணரப்பட்டதை யானெனதென்று பந்தித்தல் அகங்கார மெனவும், இம்மூன்றையுந் தளரவிடாது உறப்படுத்திக்கொண் டிருப்பது சித்த மெனவுமா மென்க. அன்றியும், ஷை மனமென்பதன் இயற்கை குரங்கு போல்வதா யிருக்கின்றது. இங்ஙனமாகிய மனமென்பதன் திரிபே அரவுபோன் றிராநின்ற புத்தியெனவும், இங்ஙனமாகிய புத்தியின் திரிபே மதத்த ஆனைபோன் றிராநின்ற அகங்கார மெனவும், இங்ஙனமாகிய அகங்காரத்தின் திரிபே விடாது தொடர்ந்து திரியும் நாய்போன் றிராநின்ற சித்தமெனவுமாம். இப்புத்தி முதலிய மூன்றும் ஒன்றினுக்கொன்று திரிபாயிருத்தல் போல, இம்மூன்றினுக்கும் முதலாயுள்ள மனமானது எதனது திரிபெனப்படும்? இம்மூன்றும் ஓர் முதலினது திரிபாகுமன்றே? அம்முதல் மேலே நின்றுணரு மறிவெண்ப தன்றே? இம்மூன்றுங்க மிருக்க, இவ்வந்தக்கரணம் ஐம்பொறி முதலியவைகளை அறிவதையினும், இவைகள் மேலொன்று மறியப்பட்டனவா? அன்றி அறியப்பட்டனவா? அறியப்படாதனவெனின், கிழமை யென்பதற்கையையா திருக்கட்டும்! எங்ஙனமெனின், என்மன மெனவும் என்புத்தி யெனவும் என்னகங்கார மெனவும் என்சித்த மெனவும் வழங்கப்படுகின்ற தென்க. அங்ஙனம் வழங்கு

வதற் கியைந்த அனுபவ மெங்ஙனமெணின், என் மனமா னது கணமும் நிலைக்காது சலித்துக்கொண் டிருக்கிற தென் றும், அங்ஙனம் சலிப்புறாது நிலைத்திருக்கின்ற தென்றும், என் புத்தி நன்கு தெளிவுற் றிருக்கின்ற தென்றும், அங் ஙனமின்றி மழுங்கி யிருக்கின்ற தென்றும், என் னகங் காரம் பந்த மேலிட்டிருக்கின்ற தென்றும் அங்ஙன மின்றிக் குன்றியிருக்கின்ற தென்றும், என்சித்தம் இவைகளை விடாது இரமித்திருக்கின்ற தென்றும் அங்ஙனம் இரமிக்காது மிதந் திருக்கின்றதென்றும் வழங்கி வருகின்றதே சாலுமென்க. இங்ஙனம் மேலொன்று லறியப் படுகின்றமையால் இக் கர ணங்க ளென்னவெனப் படுமெனின், அறியாமை யெனப்படு மென்க. மேலொன்றுக்குத் தாம் அறியாமையாயினும் ஐம் பொறி முதலிய அனந்தவிடய பேதங்களின் பாகுபாடுகளை நன்குணர்ந்து வருகின்றமையின் அறிவென்பதற்கு முரணை ன்மை யெனின், இவற்றை ஆராய்வுழி அறியாமை யென் பதை ஏலாதிருக்கட்டுமே! எங்ஙனமெணின், ஒன்றுக்கொன்று திரிபாயிருந் தறியப்படுவதா லென்க. மற்றவற்றை யுணர்ந்து வருவதால இவைகள் அறிவென்பதை ஏலாதிருக்கட்டுமே யெனின், இவற்றுல் அறிவறியாமை யென்பதாகின்றதே! அங்ஙன மிருபபதால் என்னிழுக்கெனின், ஒன்றுக்கொன்று நேர் எதிர்மறைக் குணங்களைப பெற்று ஓர் முதல் எங்ஙன மிருக்கும்? ஓர்பொருள் சீதோட்டணமா யிருக்குமா? இராதே! அறிவாகவேனும் அன்றி அறியாமையாகவேனு மிருபபதுதா னியல்பெனப்படும். இஃதங்ஙன மில்லையே! இவவறி வறி யாமை யிரண்டும் கடத்திற் படமும் படத்திற் கடமு மில லாவாறுபோ லாகின்றனவே! அவை, அறிவெனப படும் ஞான்று அறியாமையும், அறியாமை யெனப்படும் ஞான்று அறிவு மிலலாமற் போகின்றன. இவற்றிற் கன்றே? அன்னி யோன்னியாபாவமென் றறிஞர் கூறுவர். அன்றியும், அவ்

வந்தக்கரணமானது தம்மை யறியும் மேலோரறிவையேனும் தாம் அறிகின்றனவா ? அன்றி அறியா திருக்கின்றனவா ? அறிகின்றனவெனின், சாக்கிர சொப்பனத்தில் தாம் உண் டாயிருத்தலையும் சுழுத்திக்கண் இன்மையிருத்தலையும் மேலொ ன்றால் விடா துணர்ந்துகொண்டு வர, எங்ஙனம் அம்மே லறிவை அறிகின்றன ? அன்றியும், தாம் பழுதற் றிருத்தலை யும் பழுதுற் றிருத்தலையும் அறிதற்கே கூடாதுழி, மேலொ ன்றை எங்ஙனம் அறிதற் கியையும் ? மேலேயிருந் தறியும் அறிவு அகம்பொருளெனத் தம்மாலறியப் பெறுகின்றதே யெனின், அங்ஙனம் அறியப்பெறுகின்ற அவ் வகம்பொரு ளுக்குத் தாம் பிறிதின் கிழமையா யிருக்கலாமா? தம்மா லறி யப்பெறுகின்ற தன்றே பிறிதின் கிழமைக் கியைந்திருக்க வேண்டும்? அன்றியும், தாமிலலாஞான்று தம்மால் அறியப் படுகின்ற அவ்வகம்பொரு ளிருக்கலாமா? தாமில்லா ஞான்று சுழுத்தியவத்தையன்றே? அச்சுழுத்தியிலிருக்கும் அவ வகம் பொருள் இவ் வந்தக்கரணத்தால் எங்ஙனம அறியப்படுகின் றது? மேலும், தம்மா லறியப்படுவது அகம்பொருளெனத் தாம் கருதி நிகழ்வது அஃதுள்ள ஞான்றுமா ? அஃதுள்ள ஞான்றும் தாமுண்டா ? அங்ஙன மில்லையே ! அஃதுள்ள ஞான்றில் தாம் ஓர்ஞான் றுண்டாயும், தாமில்லா ஞான்று அஃதுண்டாயு மிருக்கலாமா ? அஃதில்லா ஞான்று தாமுண் டாயிருக்கின்றதென்பது சுமையைச்சுமப்பவன் கீழேவிழுந்த ஞான்று அவனது சுமையானது கீழே விழாதிருக்குமாபோ லாக்கும். இஃது மிக்கவிந்தை ! அவ்வகம்பொரு ளிருக்கும் ஞான்றே தாமில்லையாயின், (அதாவது சுழுத்தி மூர்ச்சை சமாதிகளில்) அங்ஙன மில்லாமையாகிற இக்காரணங்களால் அவ்வகம்பொருள் எங்ஙன மறியப்படும் ? அன்றியும், ஓவ் வோர் நாமரூபங்களையும் ஆராய்வுழி முடிவில் அவ்வவ் நாம ரூபங்க ளில்லாஞான்று இருப்பது அவ்வகம்பொருளல்லவா?

அஞ்ஞான்று தாமுண்டா? இல்லையே! தமதிருப்பையும் தம தின்மையையும் இவ்விரண்டுக்கு மிடைக்க ணிருக்கின்ற தமது குற்றுகுற்ற நிலைமையையும் ஒருங்கேயிருந் தறிகின்ற மேலறிவை எங்ஙனந் தாமறிகின்றன.

குறள்.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
இவ்வுலக மில்லா தியாங்கு."

என்ற மகாவாக்கியத்தையேனும் யோசிக்கவேண்டுமன் றே? ஏனெனின், பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை யென் பழி இப்பொருள் யார்பா லுள்ளது? பொருட்பிரிய மூள்ள வர்பா லன்றே? பொருட்பிரிய மில்லாஞான்று, ஏவுதற் கர் த்தாவாகவும், இயற்றுதற் கர்த்தாவாகவும் நிகழுங் கிர்த்தியங் கள் கிஞ்சித்தேனு முண்டாயிருக்குமோ? அப்பிரியம் புரு டர்பால தன்றே? அதுபோல், இம்மை மறுமைப் பயனுகிய சிற்றின்பப் பேரின்பதாக மில்லாஞான்று, கர்மோபாசனைத் தவம் புரிதற் கியைந்த இச்சா ஞானக் கிரியையாகிய அந்தக் கரணமென்னுஞ் சேட்டைகள் உண்டெனப்படுமா? அந்தச் சேட்டைகளாவது மேற்கூறிய அபேட்சை முதலியவைகளா மென்க. அவையாவன: அபேட்சியாதுழிப் பகுத்துணர் தலும், அவ்வபேட்சையும் பகுத்துணர்தலு மில்லாவுழி அபி மானித்தலும், அவ்வபேட்சை முதலிய மூன்று மில்லாவுழி, விடயாகாரமாகவே மோகாந்தகார முற்றிருத்தலு மின்றென் பதென்க. இச்சேட்டைகளன்றி அந்தக்கரண மென்பதேது? இல்லையே! இந்நான்கு புடைபெயர்ச்சியு மெதன்பாலதெனப் படும்? மேற்கூறிய பொருட் பிரியத்தின்பால தென்றற் போல் இப்போகப் பிரியத்தின்பால தன்றே? அப்போகப் பிரிய மியார்பாலது? மேலையிருந் தறிகின்ற ஓர் அறிவின்

பாலதன்றே? அவ் வறிவு யாதினுலறியப்படுகின்றது? கரண முதலியவற்று லறியப்படுகின்றதா? அல்லவே? அவ்வறிவாகிய பொருளால் இக்கரண முதலியவைகள் அறியப்படுகின்றதால் இவைக ளறியாமை யென்பதற் கையமென்னை? அன்றியும், இவ்வந்தக்கரணமானது, கட்பொறி முதலியவற்றை அறிகின்றதென முன்னர்க் கூறியதைப் பற்றியேனும் அறிவென்பதற் கியைகின்றதா? அன்றி இல்லேயா? எனச் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், ஐந்து ஐம்பொறிகளும் இவ்வந்தக்கரணங்களுக் கறிகருவிகளாயும், தொழிற்பெயர்களாயும், அறியாமை யென்னும் சடங்களாயும், முன்னர் முடிந்தமையால், இப்பொறிகள் பொருள்களாயிற்றே? ஆகவில்லேயன்றே? இவைகள் பொருளாகாதுழி, தொழிலும் பண்புகளுமன்றே? இத்தொழிற் பண்புகள் சொல்மாத்திரக் கற்பனைகளன்றே? இக்கற்பனைகள் ஒவ்வோர் முதலாக உணர்வதன்றே அந்தக்கரணமென வழங்கப் படுகின்றது. இங்ஙனம் அறியும் அந்தக்கரணம் அறியாமை யெனப்படுமா? அன்றி அறிவெனப்படுமா? அறிவெனப் படுமெனின், பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு மருளென்றதென்னை குறள் மகாவாக்கியம். இதனுல், அறியாமை யென்பதற் கையமென்னை? அன்றியும், சத்த முதலிய விடயங்களை அறிகின்ற இவ்வந்தக்கரணம் பொருள்களாக மயங்கி அறிகின்றதா? அன்றிக் கற்பனைகளெனத் தெளிந்தறிகின்றதா? கற்பனைகளாவே தெளிந்தறிகின்றனவெனின், அவ்வவ் விடயங்களால் இன்பதுன்பத் தாக்கின்றி யிருக்கவேண்டுமே! அங்ஙனமில்லையே! பொருளாகவே மயங்கி யறிகின்றமையால், அதனுலும் அறியாமை யென்பதற்கு முரணென்னை? கற்பனைகளை முதலாக மயங்கி யுணர்வதனுலும், தம்மைத்தாம் உணராமையினுலும், தலைமையையு முணராமையினுலும் அறியாமை யெனப்படுமன்றே? இதனுல், அறிவென்பதற்குக் கிஞ்சித்தும் திட

மில்லையே ? ஆகலின், தாமொரு முதலுமன்று வினைமுதலு மன்றென்க. இவ்வந்தக்கரண ஆராய்ச்சியிற் றோர்ந்த தியாதெனின், இரண்டாவது அடுக்காயுள்ள அறிவறியாமைப் பேதமும் இவற்றிற்குமேல் உறுதியாயும் விலட்சணமாயுமிருக்கும் ஒப்பற்ற அறிவுமாமென்க.

மூன்றுவது

அந்தக்கரண ஆராய்ச்சி விளக்கம் முற்றிற்று.



நான்காவது

சீவபோத ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சியின்க ணேற்குஞ்சீ வப்பொருடான்
சந்ததமு மாரோபந் தானுகி – யெந்தன்பா
லோர்ந்துவப்ப யாவருமே யோதுஞா னும்போத
மார்ந்தசெனத் தேர்ந்திடலே யாம்.

எங்ஙனமெனின், இதுகாறும் ஆராய்ந்ததில் அந்தக்கரணம் நான்கும் அறியப்படுந் தொழிற்குணமாக முடிந்தன. முடியவே, இத்தொழிற்குணங்கள், யாதின்பாலதெனப்படும்? இவற்றை மேலேயிருந்தறியும் நானென்னுமோ ரறிவின்பாலதன்றே ? அவ்வறிவன்றே மாறுதிருக்கு மிருப்பென்பது ? அங்ஙனமிருக்கு மிருப்பு யாது பொருளெனப்படும் ? அஃது சீவப்பொருளெனின், சீவப்பொருளைச் சீவனுகவே கொண்டுணர்வது அறிவெனப்படுமா ? அன்றி அறியாமை யெனப்படுமா ? அறிவெனப்படுமெனின், அச்சீவப்பொருள் பொருளெனப்படுகின்றதா? அன்று ? எனச் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், அச்சீவப்பொருள் கர்த்தத்துவ முற்றதா ? அன்றி அகர்த்தத்துவ முற்றதா? கர்த்தத்துவ முற்றதெனின், அஃது போலியாயிருக்குங் கர்த்தத்துவமா ? அன்றி ஓர் மூதலாக விருக்குங் கர்த்தத்துவமா ? மூதலாக இருக்குங் கர்த்தத்துவமெனின், கர்த்தத்துவமாகிய அச்சீவப்பொருள்,

“ எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொரு
ளப்படி காண்ப தறிவு.”

என்கிற சாதாரணானுபவமா யிருக்கும் தகையதா ? அன்றி இவ்வனுபவத்துக் கெதிர்மறை யனுபவமா யிருக்கும் தகையதா ? எதிர்மறையாவது, குறள் மகாவாக்கியம்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்றிருத்தல், சட்பாவ விகாரானுபவ மெதார்த்தமா யிருக்கின்றமையால், அவ்வப்படியே கண்டுகண் டனுபவித்து வருவது பிரத்தியட்சானுபவ முறையாயிருக்க, இதற்கெதிர் மறை யனுபவமு முண்டோவெனின், அவ்வனுபவ மில்லா தழி அம் மகாவாக்கியம் வரவேண்டுவதின்று. அவ்வாக்கியா னுபவம் நம்முடைய அனுபவத்துக்கு விருத்தமானதா ? அன்றி அவ்வாக்கியத்துக்கு நம்முடைய அனுபவம் விருத்த மானதா ? அவ்வாக்கியமே விருத்தமானதெனின், அவ்விரு த்தமான வாக்கியம் ஆத்மானுபவிகட் கியைந்ததா ? அன்றி, உலகானுபவிகட் கியைந்ததா ? ஆத்மானுபவிகட் கியைந்த தெனின், அவ்விருத்தமான வாக்கியானுபவத்தை யேலாத உலகானுபவிகள் அறிவுடையோர்களும், ஏற்ற ஆத்மானுபவி கள் அறிவின்மையருமாக வேண்டிவருமே. ஆகலின், உலகா னுபவத்துக்கு அவ்வாக்கியம் விருத்தமானதன்று, உலகானு பவமே விருத்தமான தென்க. இவ்விருத்தமான உலகானு பவம் அறிவுக் குடன்பாடன்றே ! அறியாமையாகிய சடத் துக்கே உடன்பாடாகின்றது. இதனால் சீவப்பொரு ளென் பது சடப்பொரு ளெனபபடுமா ? அன்றிச் சித்துபபொரு ளெனப்படுமா ? சித்துப்பொரு ளெனப்படுமெனின், அஃது அறியாமை யன்றென்பதாய் முடியும்; முடியுமாயின், அச் சீவப்பொருள் எஞ்ஞான்றும் அறிவென்பதா ? அன்றி ஓர் ஞான்று அறிவென்பதா ? அஃது அனுதி நித்தியத்துவமா யிருந்து எண்ணரிய பிறவிகளையும் எடுத்தெடுத்து இன்ப

துன்பங்களை அனுபவித்து வருகின்றது அனுபவமா யிருத்தலினாலும்,

நன்னூல்.

"உணர்வில வாமுயி ரொன்று மொழித்த
வுடல்முத லனைத்து முயிரல் பொருளே."

எனப் பவணந்தியாருங் கூறியிருக்கின்றமையினாலும் எஞ்ஞான்றும் அறிவுப்பொருள்தானெனின், அதனை ஆராய்வழி, அறியாமையாய் முடியா திருக்கட்டும். அறிவென்பது அறியாமையாயும் அறியாமை யென்பது அறிவாயும் முடிவது அறியாமை யெனப்படு மன்றே. அறிவு அறியாமை யெனற்கும் அறியாமை அறிவெனற்கும் இயையாதிருத்தலன்றே அறிவறியாமைத்துவைதம். இவற்றுல் சீவனென்பது அறிவல்லவே ? அன்றியும், சீவன் சீவனென வழங்கப்பட்டு வருவது பொருளல்லவற்றைப் பொருளென்றுணருந் தகையதா ? அன்றிப் பொருளைப் பொருளென்றுணருந் தகையதா ? பொருளைப் பொருளெனக் கொண்டே உணருமுணர்வு பொருளெனின், அஃது நிகழும் பொருளா? அன்றி நிகழாப் பொருளா ? நிகழும் பொருளெனின், வேறொன்றில் நின்று நிகழுபவனு? அங்ஙனமன்றி நிகழுபவனு? அவத்தாத்திரயங்களில் நின்று நிகழுபவனெனின், அவ் வவத்தைகளில் ததாகாரமாய் நின்று நிகழுபவனு ? அன்றி எதிராகாரமாய் நின்று நிகழுபவனு ? அஃது இயற்கைச் சார்போதனுகின், தனித்து நிகழுபவனன்று: ஒன்றைச் சார்ந்தே நிகழுபவன் - அதாவது உபாதியையெனின், இதனுல் சாக்கிரமுதலிய மூன்றவத்தைக் கண்ணும் தூலமுதலிய உபாதிகளைச் சார்ந்தவனென் றுகின்றது. ஆகவே இத்தூலமுதலிய உபாதித்திரயங்களைப் பொருள்களெனச் சார்ந்து நிகழுபவனு? அன்றிக் கற்பனைகளெனச் சார்ந்து நிகழுபவனு? இம்மூன்றும்

ஒவ்வோர் மூதலாகலின் பொருள்களென்றே சார்ந்து நிகழு பவனெனின், இவ்வுபாதித் திரயங்களே நான் நானென மருவி நிகழுபவனு? அன்றி மருவாது நிகழுபவனு? சார்போதுகு லின் மருவியே நிகழுகின்றவனெனின், இவ்வுபாதித் திரயங் கள் பொருள்களா? அன்றிக் குணங்களா? தொழில்களா? பொருள்களே யெனின், விகாரப் பொருள்களா? அன்றிச் சுயம்புப் பொருள்களா? சுயம்புப் பொருள்களே யெனின், இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோ ருபாதான காரணத்தை யேலாமலும், பின்ஞான்று நாசத்தை யேலாமலும், அதன் பின்ஞான்று தத்தம் உபாதானகாரணமா யாகாமலும் இரு ந்தபடியே யிருக்கவேண்டுமே! அங்ஙனமின்மையால் பொய்ப் பொருள்க ளென்பதற்கு மூரணென்னே? இப்பொய்ப் பொரு ள்களே மெய்ப் பொருள்களாக நானென மருவி நிகழுவ தன் றே சீவனெனப்படுவது? பொய்ப்பொருள்களைப் பொய்ப் பொருள்களென்றே நானென மருவி நிகழுபவனெனின், இவ் வுபாதிகளால் மூற்றும் அல்லலுறுவானேன்? அல்லலுறுதற்கு யார் சம்மதிப்பவர்? அன்றியும், இவ்வாருன இன்பதுன்பா னுபவம் பொய்யா யிருக்கவேண்டுமே! உண்மையா யிருக்கின் றதே! கயிற்றின்கண் அரவாகத் தோற்றுதலைப் பொய்யென் றுணர்ந்து பின்ஞான்று அதை மெய்போலப் பாவித்துழி, அதனுல் பாவிப்பவனுக்கு இன்ப துன்பானுபவம் உண்டா யிருக்குமா? அவ்வின்ப துன்பங்கள் விளைந்ததாகக் கொள்ளி னும் அவை அனுபவப்படுமா? படாதன்றே! அங்ஙனம் இவ்வுபாதித் திரயங்களால் வரும் இன்ப துன்பானுபவம் பொய்யாக உண்டாயிருக்கின்றதா? இல்லையே! உண்மையாக விருக்கின்றதால், இவ்வுபாதிகளே நானென மருவி நிகழுவது பொய்மையாகவன்று. பொய்ம்மையாகிய இவ்வுபாதித்திரயங் களே மெய்ம்மையாகக்கோடல் மயக்கமா? அன்றித்தெளிவா? மயக்கந்தானெனின், இதற்குமேல் இவற்றை நான் நானென

மருவியது இரட்டித்த மயக்கமன்றே? இவ்விரு மயக்கத்திற்கு மேல், இகபர போகத்திற் கியைந்த இச்சாஞானக் கிரியைக ளெழுவது இன்னும் அதிகரித்த மயக்கமன்றே? இம்மயக்கங்களுக்குமேல், தன்னை விளக்கிவைக்கும் சத்பிரமாணங்களாகிய பிரபல சுருதிகளைப் பசுநூல் மோகநூல் மூதலியனவாகத் தூடித்து வருவது இன்னும் விசேடமாக அதிகரித்த மயக்கமன்றே? இம்மயக்கங்கள் அறியாமை யெனப்படுமா? அன்றி அறிவெனப்படுமா? மிக்க அறியாமையாகலின், இவ்வறியாமை யன்றே சிவனெனப்படுவது? தனக்கயலாக அனேகத்து மிருப்பதாகவும் அவற்றிலொன்றை நானெனவும் மற்றொன்றை எனதாகவும் உணருகின்றதால்,

சசிவர்னபோதம்.

"மெய்ம்மையறி வல்லதறிவ் வேறறிவ தெல்லாந்
தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே."

எனக் கூறியிருக்கின்றது. இஃதிங்ஙன மிருக்கட்டும். இன்னும் சீவப்பொருளைப்பற்றிச் சற்றாகிக்குதும். நானென்கிறது சீவப்பொருளாயின், பரிபாக முதிர்ச்சி வந்த பின்ஞான்று இருவகைச் சமாதியையு மெய்துவதியார்? நாமன்றே! நாம் அவ்விருவகைச் சமாதியையும் எய்துவது யாதுக்கு? சீவபாவ மகலற்கன்றே? சீவபாவமாவது மேற்கூறிய உபாதித் திரயங்களை நான் நானென மருவி அல்லலுறு மயக்கம். இங்ஙனமாகிய விபரீதமயக்கமன்றே போதமெனப்பட்டது? இம்மயக்கமாகிய போதம் நமக்குக் கிழமைப் பொருளா? அன்றி நாமா? இச்சீவபோதம் கிழமையெனப் படுமேயெனின், என் சீவன் என் சீவனென வழங்கப்படாதிருக்கட்டும். வழங்குவதால், கிழமைப்பொரு ளென்பதற்கு மூலமின்று. இன்றுகவே, இஃது பிறிதின்கிழமையா? அன்றித் தற்கிழ

மையா? தற்கிழமைதா னெனின், இச்சீவபாவம் நம்மை விட்டகல மேற்கூறிய இருவகைச் சமாதிக்கண்ணும் திரிலோகத்திலுமில்லாத அரியவுழைப் பெய்துவானேன்? அன்றியும்,

வைராக்கிய தீபம்.

"திரிவித வுலகத் தரிதொரு ஞானி
தேர்விடத் தென்றுமோ ரொன்மை
யுரைசெயிற் பிரம வித்தையொத் தரிதோ
வென்றுமிவ் வுலகுரைப் பதனு
லரிசொல்கீ தையிலும் பிரமசா தகரின்
யார்க்குள வருத்தமென் பதனுற்
பெரியதோர் வருத்த மெனைமறை துணிந்தப்
பிரமநா னெனவிருத் தலினே."

என்று கூறியிருக்கின்றது. இங்ஙனம் எய்தும் உழைப்பு யெடி உபாதித்திரய நானென்பது இறத்தற்கா? அன்றி இருத்தற்கா? இறத்தற்காகலின், கரணேந்திரியாதிகளுக்கு அகோசரமாய் இலங்கும் தனது அதிட்டான பிரமத்தைப பலகற்பமும் கண்டுகண்டு பழகவேண்டுவ தாயிற்றென்க. இதனுல் நானென்பது சீவப்பொரு ளெனப்படுமா? படாதே? ஆகலின், நானென்பது யாது பொருளெனத் திடமுற் றிருக்கின்றது? அவத்தாத்திரய சகிதமாகிய அஞ்ஞான திசைக்கண்ணும் அவ்வவத்தாத்திரயரகித இருவித சமாதியாகிய ஞான திசைக்கண்ணும், அங்கங்குள்ள இலட்சியானுபவங்களைக் கண்டு கண் டனுபவிப்பது நானென்பதா? அன்றி வேறென்பதா? நானென்பதுதா னெனின், அந்த நான் எங்ஙனம் சீவப்பொரு ளெனப்படும்? நானென்னும் அகம்பொருள் உபாதித்திரய நாலுக ஆரோபித்துழியுன்றே சாக்கிராவத்தைக்கண் விசுவனுகவும், சொப்பனவத்தைக்கண் தைசதனுகவும், சுழுத்தியவத்தைக்கண் பிராக்ஞனுகவும், அவ்வவற்றிற்கும் இயைந்த

இத்தலைப்பெயர்கள் வந்தன. அங்ஙனம் வந்ததிலும் விசுவன் முதலிய ஒவ்வோர் தலைப்பெயருக்கும் இயைந்த பரியாய நாமங்களும் வந்திருக்கின்றன. அவைகளாவன : க-வ்து, தூல சரீர அபிமானத்திலுல் விசுவனென வந்துள்ள அவசரத்தில் சகல தத்துவங்களுடன் கலந்து விவகரிக்கின்றமையால் வியவகாரிகனெனவும், அவித்தையாப் பிரதிபிம்பனுதலால் அந்தக்கரணப் பிரதிபலனெனவும், சொரூப சமாதிக்கண் விளங்கிய கூடத்த சைதன்னியச் சாயையாதலால் சிதாபாசனெனவும், சகல தத்துவங்களாகப் பரிணமித்ததுபோலிருத்தலால் விட்சேபனெனவும், அந்தக்கரண சம்பந்தமாக நின்றுணர்தலால் பிரமாத்துருவெனவும், இவையனைத்திற்கும் கர்த்தத்துவ முற்றிருத்தலால் கர்த்திருவெனவும், அனைத்தையும் அனுபவிப்பவனுதலால் போத்திருவெனவும், அனைத்தும் தன்னுலறியப் பெறுகின்றமையால் விஞ்ஞானமயனெனவும், சரீரமுதலியவற்றோடு பந்தித்திருத்தலால் குடும்பியெனவும், தேகத்தையன்றித் தனது எதார்த்த சொரூபம் விளங்காமையால் சரீரியெனவும், நீயென்கிற விரண்டாம் பதத்திற்கு வாச்சியார்த்தனுதலால் தொம்பத முக்கியார்த்தனெனவும், ஆகிய இவையும் பிறவும் வந்திருக்கினறன. உ-வது, சூக்கும சரீராபிமானத்திலுல் தைசதனென வந்துள்ள அவசரத்தில் சாக்கிராவத்தை லட்சியானுபவ வாசனை பிரதிபலிக்கின்றமையால் பிராதிபாதிக சீவனெனவும், சாக்கிராவத்தையைக் கற்பித் துணர்வதுபோல் சொப்பனத்தைக் கற்பித் துணருகின்றமையால் சொப்பன கற்பிதனெனவும், ஆகிய இவையும் பிறவும் வந்திருக்கின்றன. ங-வது, காரண சரீராபிமானத்திலுல் பிராஞ்ஞனென வந்தது யாதுகாரணமெனின், சூழுத்திக்கண் யாதொன்றுந் தோன்றுமையை, அறிந்து பின்ஞான்று விழித்தறிவித்தற்கு அச்சூழுத்திக்கண் அறிவுவடிவமாக இருந்ததனலென்க. இபபிராக்ஞனெனப்பெயர் வந்துள்ள அவச

ரத்தில் சுழுத்திக்கண் தனித்திருந்தும் அதனைக் கிஞ்சித்து மூணராது மேல் தூலசூக்கும விளைவுக்குத் தான் அங்குரமா யிருத்தலின்காரணவியட்டி சரீராபிமானியெனவும், அச்சுழுத் திக்கண் தான் தனித்திருந்தும் தற்பிரகாசம் மழுங்கி மூடப் பட்டு அம்மூடத்தினின்று தானே காரியப்படுதற் கியைந் திருத்தலால் காரியோபாதிகனெனவும், இன்னும் இதுபோல் வன பிறவும் வந்திருக்கின்றன. ஷ விசுவன் முதலிய தலைப் பெயர்களும் அவ்வப்பெயர்கட்கு இயைந்த பரியாயப் பெயர் களும் வந்து நிகழுவது யாருக்கு? நானென்பதற்கன்றே? அந்த நான் அவத்தாத்திரய சகிதமாயுள்ள சீவபோத நானு? அன்றிச் சொரூப சமாதிக்கண் விளங்கிய சிவபோத நானு? சிவபோத நான்றனெனின், ஷ விசுவன் முதலிய மூன்றி னுக்கும் அதிஷ்டிப்பட்டிருக்கும் இருப்புக்கு அவத்தாத்திரய விலட்சணனெனவும், அவ்விலட்சணத்தில் அறிவே வடிவாய் விளங்கலால் சேதனனெனவும், அகம்புற மென்பவற்றுள் அகத்தில் நிறைந்திருக்கின்றதால் அந்தரியாமி எனவும், சிறிது மிச்சையின்றி ஞானுபவங்களை அனுபவித்து வருதலால் அனுசந்தாத்திருவெனவும், யாவைக்கும் தானே இருப்புப் பொருளா யிருத்தலால் சுயஞ்சத்தார்த்த னெனவும், கடத் தினை வளைபட்டதுபோ லிருகிற ஆகாயத்தை யொத்து தேகத்தினை வளைபட்டதுபோற் காண்டலால் அவிச்சின்ன சிவனெனவும், காரணகாரிய கற்பனைக ளிறந்து விளங்குவ தால் பாரமார்த்திக னெனவும், மற்றொன்று லன்றித் தானே சுயம்பிரகாசமாய்ப் பிரகாசிக்கின்றதால் துரியனெனவும், யாவைக்கும் தான் முற்றுஞ் சாட்சித்துவமா யிருத்தலால் சான்றனெனவும், தூல முதலிய சரீரத்திரய சம்பந்த மின்றி யிருத்தலால் பிரத்தியேகாத்மா வெனவும், நீ என்கிற இரண்டாம் பதத்தில் உறுதிப்பொரு ளாதலால் தொம்பத இலட்சியார்த்த னெனவும், இன்னும் இதுபோல்வன பிறவும்

வந்திருக்கின்றவை சீவபோத ஞானக்காக்கும்! சதா நிட்டை கூடிச் சமாதி எய்துவது ஆத்மபோதங் கெட்டு அல்லது சிவ போதங்கெட்டுச் சீவபோதம் ஆதற்காக்கும்! இஃது வியப்பி னும மிக்கவியப்பு!! சோபாதிகமெனவும், நிருபாதிகமென வும் இரண்டிருக்கின்றன. சோபாதிகமென்பது உபாதிசகித மாக நிற்றல். நிருபாதிக மென்பது அவ்வுபாதி ரகிதமாக நிற் றல். அவை தூலமுதலிய உபாதிசம்பந்த ஞானமும், அத்தூல முதலிய உபாதிசம்பந்தமின்றிய ஞானமுமிருத்தல். அவத்தாத் திரயமற்ற இருவித சமாதிக்கண் ஞானென்பது அபவாத முற்றுழி இச்சீவபோத முண்டா? சீவபோத வெழுச்சி உபா தித்திரய விலட்சியானுபவ மூள்ளஞான்று மன்றே? இப் போத மகன்ற மேற்படி சமாதிக்கண்ணும் ஞானென்ப தின்றே? இன்றெனின் திரஞனுபவ சுழுத்திக் கண்ணும் ஞானென்னும் அறிவில்லாமையா? அச்சுழுத்திக்கண் மக் கின ஆனந்தத்தை அனுபவித்து விழித்துப் பின்ஞான்று அங்குள்ள அனுபவத்தை வந்துணர்த்துகின்றனர். இது போல அச்சமாதிக்கண் ஞானென்ப தில்லாமையா? அங்கு ள்ள சிவ இலட்சியாநந்தத்தை அனுபவித்து அச்சமாதி கலை ந்து பின்ஞான் றுணர்த்துகின்றது என்னே?

தத்துவராயர் பாடலுறை.

"அஞ்ஞான காரிய மனைத்து மறவிட்டு
விஞ்ஞான மாஞ்மென் றுந்தீபற
வெளியாகி நின்றேமென் றுந்தீபற." என்றும்,

நிசானந்த வுந்தியார்.

"தானுயிருந்த தலைமைப் பரம் பொருள்
நானு யிருந்தேனென் றுந்தீபற,
நன்குகப் பார்த்திடி லுந்தீபற."

என்றும் கூறியவாற்றுற் காண்க. மேற்படி சுழுத்தின்கண் நானென்பது இல்லையாயின் சமாதிக்கண்ணும் நானென்ப தில்லை யெனப்படும். அஞ்ஞானதிசைக்கண் பொருளல்லவற் றைப் பொருளென்றுணரும் மருளானுபவமாகலின், இம் மருள் சீவபோதமென்பதா? அன்றி வேறுபோத மென்பதா? வேறுபோதமு மூண்டோவெனின், அவ்வேறுபோதமு மிர ண்டெனப்படும். அவை பரமாத்மபோத மெனவும் அந்த ராத்மபோத மெனவுமாம். இவற்றுள் பரமாத்ம போதமெ ன்பது மேற்படி சமாதிக்கண் உதயமான சுக இலட்சியானு பவத் தெளிவாம். இத்தெளிவே சிவபோத மெனவும் அல் லது ஆத்மபோத மெனவும், அந்தராத்ம போதமென்பது மேற்படி சுக இலட்சியானுபவமுமின்றி உபாதித்திரயங்களே நான் நானென்னும் மருளானுபவமுமின்றி மத்தியபோதாநு பவ மெனவுமாமென்க. மதத்தர்கள் பரமாத்மா வெனவும், சீவாத்மாவெனவும் இரண்டென வழங்குகின்றார்களே யெ னின், நித்தியாநித்திய வத்துவிவேக முதலிய சாதன சதுட் டயம் வாய்ந்த பரிபாக முமுட்சுக்கள் என்ன ஆத்மாவெனப படுவர்? சீவாத்மா ஆவாரெனின், இத்தூல முதலிய உபாதித் திரயங்களே நான் நானென் றழுந்தி யிருப்பவராக வேண்டும. பரமாத்மா ஆவாரெனின் மேற்படி இருவித சமாதிக்கண் ணும் சிற்பிரகாசமே நானெனத் தெளிந்தவராக வேண்டும். இவ்விரண்டுமல்லாதவரெனின், அவர்களுமாத்மாக்களன்றே? ஆமெனின், அவர்கள் என்ன ஆத்மாவெனபடுவர்? மத்திய தமா யிருப்பவரன்றே? ஆகலின், அந்தராத்மா வென்பதற்கு முரணின்றென்க. சீவபோதம் கற்பித மென்பதற்கும், ஆத்ம போதம் எதார்த்த மென்பதற்கும் உதாரணம்:—

ஞானவாசிட்டம்.

"சீவனெவ் வறிவினுலே தெரிவுறு மதுபதார்த்தங்
தானுமு விவிதமான சங்கற்ப விகற்பமுற்று

மேவிய மயக்கந்தன்னில் விரிந்தநீ ரலையாமாபோல்
பூவல யங்களாகிப் பொலிந்தது புகன்றசீவன்." என்றும்,

"சீவனென் கின்றசொல்லும் பொருளுமாய்ச் செறிந்தவான்மா
பாவனை மனனத்தாலே பருத்தெழு மனமதாகும்
மேவரும் பிரமந்தன்னில் வேலையி லலைபோல்வந்து
தாவுறு மூள்ளந்தானே நினைந்தவா சகங்கற்பிக்கும்." என்றும்,

"நானெனும் பொருள்காணுதோர் ஞானவா காயங்காணர்
நானெனும் பொருளைக்கண்டோர் ஞானவா காயமாவார்
நானெனு மகங்காரக்கார் ஞானவிண் மதியைமூடி
ஞனெனுப் பரமவாம்ப னன்மலர் விரியாதன்றே."

என்றும் கூறியவாற்றுற் காண்க. அன்றியும், இருவித சமாதிக்கண்ணும் சீவேசுர சகத்தினைத்தும் தோற்றன் மாத்திரமாக நிகழுமென்பதற் குதாரணம்:—

நீ பு கீ தை.

"துன்னு மாயைய வித்தைக டானிலே
தொடரு மீசனுஞ் சீவனுந் தானிலே
பின்ன மின்றிய கண்டம தாகிய
பிரம மேயக மென்றுதெ ரிந்திடும்
சின்ன மில்திட மாகிய போதமே
சீவன் மூத்தனுக் கானவி லக்கண
மென்ன லாநதத் தாண்டவ மாடிநம்
மீசன் றன்பரி பூரண ரூபமே."

எனக் கூறியவதனாற் காண்க. மேலே சீவன்முத்தி முதிர்ச்சியாகிய விதேகமுத்திக்கண் மேலே சீவேசுர செகத்தினைத்தும் தோற்றன் மாத்திரமு மின்றென்பதற் குதாரணம்:—

நீ பு கீ தை.

"தோற்று கின்ற சகபர சீவரின்,
தொடர்பி யரதொன்றுஞ் சற்றுமி வாமலே

சாற்று வாக்கு மனங்கட் கமோசர
சச்சி தாநந்தத் தற்பர மாகவே
வேற்று மையின்றி யென்று மிருப்பதே
விதேக முத்த னிலக்கண மென்றிட
லேற்று மாநந்தத் தாண்டவ மாடுநம்
மீசன் றன்பரி பூரண ரூபமே.''

என்பதனாற் காண்க. இதுகாறும் கூறிப்போந்ததனால், நானெனப்படுவது என்ன பொருளாயிற்று ? சீவப்பொருளா யிற்றோ ? ஆகவில்லையே ! இதற்கென்செய்தும் ! ! கடப் பொருளானது மட்பொருளுக்குத் தான் வேறிடத்ததாக வின்றேனும், அந்த மட்பொருளின்கண் தானொரு முதலாக இருப்பதனா லன்றோ, பிடித்தல், எடுத்தல், வைத்தல, சமை த்தல், புசித்தல் முதலிய பற்பல விவகாரானுபவங்கள் நிகழ் கின்றன ? இதுபோல், சீவப்பொருளென்பது நானென்னும பொருளுக்குத் தான் வேறிடதத்ததாக இன்றேனும் அந்த நானென்னும பொருளின்கண் தானொரு முதலாக இருப் பதனா லன்றோ அறிதல், அறியாதிருத்தல், நினைத்தல், மறத்தல், விரும்புதல், வெறுத்தல், கேட்டல், பரிசித்தல், பார்த்தல், ருசித்தல், முகர்தல், வசன தான கமன விசர்க்க ஆநந்த முதலிய பற்பல கிரியாநுபவங்கள் நிகழ்கின்றனவெ னின், கடோபாதி யென்பது தொழிற் குணமும் தோற்றக் குணமுமா ? அன்றி ஓர் பொருளா ? அஃதோர் பொருள்தா னெனின், ஓர் பொருளின்கண் மற்றோர் பொருள் எங்ஙன மிருக்கும் ? அங்ஙன மிருப்பதாகக் கொள்ளினும், அந்தப் பொருளுக்குத் தசபுறங்களுள்ள எந்தப் புறத்திலாவ திருத் தற் கியையுமன்றோ? அதுபோல், கடப்பொருள் எந்தப்புற த்தி லிருக்கின்றது? எந்தப்புறத்து மில்லையே! தொழிற்குண மாயுந் தோற்றக்குணமாயு மிருக்கின்றதால் அதற் கொருபுற மும் வேண்டுவதின்று. அதுபோல், சீவனென்பது ஓர்

பொருளாயின், இச்சீவனுக்கு ஆதாரமாயுள்ள அவித்தியாந் தக்கரணத்திற்கும் அவ்வவித்தையின் காரியமாகிய உபாதித் திரயம், அவத்தாத்திரய முதலியவற்றிற்கும் ஆதாரமென்ப தியாது ? நானென்பதன்றே ? அந்த நானுக்குப் புறம்பென் பது எங்கே? சமஸ்தமும் கயிற்றரவுபோல் நானென்பதிலாக லின், சீவனென்பது எங்கிருக்கின்றது? நானென்பதி லிருக்கி ன்றதெனின், நானென்பதற்குப் புறம்புள்ளதாயின் உள்ளு மிருக்கலாம். அங்ஙனம் இல்லை யென்பதற்கு உதாரணம்:—

பாடுதுறை.

"உண்மை வடிவேயென் றூதேடா காள
முட்புறம் பில்லையென் றூதேடா காளங்
கிண்மை யுணர்வேயென் றூதேடா காளங்
திசைதிசை தோறுநின் றூதேடா காளம்." என்றும்,

"ஊனே மறிவதென் றூதேடா காள
முணர்வே பிரமமென் றூதேடா காள
நானே யவஞ்மென் றூதேடா காள
நானுவ தில்லையென் றூதேடா காளம்."

என்றும் கூறியவாற்றுற் காண்க. முன்ஞான்று கவியில் நானென்பது அகம்புற மற்றதென்றும், பின்ஞான்று கவியில் நானென்பது பிரமசொரூபமாய் விளங்கிய ஞான்று உபாதித் திரய நாஞ்கிய சீவபோதம் அற்றதென்றும் பொருளாயிற் றென்க. இங்ஙனமிருக்க, சீவனென்ப தோர்பொருளா ? நா னென்பது அகம்புறமுடையதா ? இல்லையே ! இச்சீவத்து வத்தைப்பற்றி இன்னுஞ் சற்றாங்குதும். எங்ஙனமெ னின், சீவன் சீவனென வழங்கு மிப்பெயரானது இடு குறிப்பெய ரென்பதா? அன்றிக் காரணப்பெய ரென்பதா ? இடுகுறிப்பெய ரென்பதுதா னெனின், எந்த ஓர் முதலுக்கு இப்பெயரிட்டு வழங்குகின்றது? அறிவுக்கெனின், அவ்வறிவு

நானென்பதா? அன்றி வேறென்பதா? நானென்பதுதா னெனின், நானென்பது இப்பெயரை ஏற்பானேன்? பொரு ளல்லவற்றைப் பொருளென் றுணர்ந்து அனுபவிப்பதா லெனின், அங்ஙனம் உணர்வது அறியாமை யன்றே? அன் றெனின், பொருளைப் பொருளென் றுணர்வது அறியாமை யாக்கும்! அங்ஙனமு மன்றெனின், பொருளல்லவற்றைப் பொருளென் றுணர்வது எற்றுக்கு? அதாவது நானல்லாத தை நானென மயங்கி மருவல். அங்ஙன மயங்கி மருவல் அவ்வுபாதி காரணமாகச் சீவிப்பதற்கன்றே? அங்ஙனம் சீவி ப்பது, அறியாமை யெனப்படுமா? அன்றி வேறெனப்படுமா? வேறெனப்படுமெனின், அஃதறிவாக வேண்டுமே! ஆகலின், அவ்வறிவு நானென்ப தாகின்றது. ஷி உபாதி காரணமாகச் சீவிப்பது நானென்பதாயின், இருவிதச் சமாதியு மெய்திய சீவன்முத்தித் திசைக்கண் நானென்ப திருப்பதால், இவ்வஞ் ஞான திசைக்கண் சீவிப்பது யாது? நானென்பதுதானெனின், இங்கே நானென்பது எத்துணைத்தாக நின்று சீவிக்கின்றது? உபாதிக் துணையாகவெனின், ஆங்கிருவகைச் சமாதிக்கண் ணும் சிவானந்தத்தை இருந்தனுபவிக்கும் ஞான்று எத் துணையது? ஆங்குமிருபாதிகமும், ஈங்குச்சோபாதிகமுமாகின் றனம். உபாதித்துணை நானென்பதாயின், இவ்வுபாதி காரண மாகச் சீவித்த லென்பதும் நானென்கிறதற்கு ஐயமின்று. அந்த நிருபாதிகமாகிற சீவன்முத்தியில் காலதேச வத்து பரி ச்சேதரகித நானுயும், இச்சீவதிசையில் உபாதித்துணை நானு யும் இருக்கின்றனம். இவ்விரண்டு நானுள் எந்த நான் அதிட் டான நானெனப்படுவது? எந்தநான் ஆரோபித நானெனப் படுவது? கண்டப்பட்டுச் சீவிக்கின்ற நான் ஆரோபித நானெ ன்பது. கண்டப்பட் டிருத்தலாவது உபாதியாலன்றே? இவ் வுபாதியானது கடோபாதிபோன்று கற்பிதமா யிருத்தலின், இக்கற்பிதந் காரணமாக நானென்பதும், நான் கண்டப்பட்

டிருத்தலென்பதும், கற்பிதமன்றே? அன்றியும், இந்தக் கற்பித நான் மூன்றாயிருக்கின்றது. மூன்றாயிருத்தலாவது தூல மூதலிய வுபாதித்திரயமாம். சாக்கிராவத்தாதீ தூலநான் சொப்பனவத்தாச் சூக்குமநானிலும், சொப்பனவத்தாச் சூக்கும நான் சாக்கிராவத்தாத் தூலநானிலும் இல்லாவாறுபோல், இவ்விரண்டவத்தாத் தூல சூக்கும நானென்பவை, சுழுத்தியவத்தாக் காரணோபாதி நானில் இன்றாகின்றன. இம்மூன்றவத்தைகளும் இவ்வவத்தைகட்கு கிடையந்த உபாதித்திரய நானென்பவைகளும் சகடக்கால்போல் மாறிமாறித் தோற்றுகின்றனா? இங்ஙனமாகிய இக்கற்பனைகள் எதன்கண் தோன்றி மறைகின்றன? நாமாகிற சிந்தையி லன்றே! அச்சிந்தையன்றே சிதாகாச மெனப்படுவது? அச்சிதாகாசமன்றே அகம்பொரு ளெனப்படுவது? என்னை?

தத்துவராயர் பாடுதுறை.

"எட்டுத் திசையு நிறைந்தவு ரெங்களூ
ரேகாந்த மாகி யிருக்குமூ ரெங்களூர்
தட்டற்ற யோகிக டங்குமூ ரெங்களூர்
தன்மபா வங்க டவிர்ந்தவு ரெங்களூர்."

என்பதனைக் காண்க. இங்ஙனமாகிய தீர்ந்த நிலையன்றே மூன்றான்று அதிட்டான நானென்பது? அவ்வதிட்டான நானைத் தவிர இவ்வாரோபிதநான் இல்லாவாறுபோல் இவ்வாரோபித நானென்பதை யன்றி அவ்வதிட்டான நான் இல்லையெனப்படுமா? இருக்கின்றதால், இஃது மட்பொருளையன்றிக் கடப்பொருளின்றாயும், கடப்பொருளையன்றி மட்பொருளுண்டாயும் இருக்கின்றனபோலாம். இவற்றுல் தேர்ந்தது யாதெனின், முற்பொழுதும் பிற்பொழுதும் மட்பொருளுண்டாயும் இடைப்பொழுது கடப்பொருள் மட்பொருளையன்றி இருத்தல்போலிருக்கினும், உண்மையில் இவ்வோர்போதே

னும் மட்பொருளையன்றிச் சிறிதேனுமுண்டோ? இன்றுக லின், மூப்பொழுதும் உள்ளது மட்பொருளும், அம்மூப்பொ ழுதும் இல்லாதது கடப்பொருளு மாகின்றன. இதுபோல், அவ்வதிட்டான நானென்பதைத் தவிர, ஆரோபித நான் இன்றுயும், இவ்வாரோபித நானைத் தவிர அதிட்டான நான் என்பதுண்டாயும் இருக்கின்றன. இதனால், ஆரோபித நானு க்கு முற்பொழுதும் பிற்பொழுதும் அதிட்டான நானென்ப துண்டாயும், இடைப்பொழுது இவ்வாரோபித நான் அதிட் டான நானென்பதை யன்றி இருத்தல்போ லிருக்கினும், உண்மையில் இவ் வோர்போதேனும் அதிட்டான நானெ ன்பதையன்றிச் சிறிதேனு முண்டோ ? இன்றுகலின், மூப பொழுது மூள்ளது அதிட்டான நானும், அம்மூபபொழுது மில்லாதது ஆரோபிதநானு மாகின்றன. ஆகவே, எஞ்ஞான் றும் உள்ளது அதிட்டான நானென்பதே திண்ணமாயிற் றென்க. இதனால், இவ்வஞ்ஞான திசைக்கண் சீவிப்பது அதி ட்டான நானென்பதன்று. ஆரோபித நானுகிய அறியாமை யென்றுயிற் றென்க. இதுகாறும் கூறிபபோந்ததால் (அவ் வதிட்டான நானே சித்தாந்த பட்சமாயினும்) இதற்குமேல் உண்மையில் இவ்வதிட்டான நானும் சித்தாந்தமன்று. எங்ஙன மெனின், முன்ஞான்று ஆரோபிதநான் பூர்வபட்சத்திற் கியைந்ததால் அதைப்பற்றிப பின்ஞான்று அதிட்டான நான் சித்தாந்தமாயிற்று. ஆரோபிதநான் அதிட்டான நானே நோக் கியதுபோல், அதிட்டானநான் மேலே யிருக்கின்ற தானென் பதை நோக்குழி இவ்வதிட்டான நானும் சித்தாந்தப்படாது பூர்வபட்ச மாகின்றதென்க. இவற்றை இன்னுஞ் சற்றாகிக் குதும். எங்ஙனமெனின், நானென்னும் அகம்பொருளுக்கு அதிட்டானத்துவம் இயற்கையென்போமா? அன்றிச்செயற் கை யென்போமா? இயற்கை யென்போமெனின், இவ்வதிட் டானத்துவம் சிவபோதமாயிற்று. ஆகவே, அவத்தாத்திரய

சகிதத்தில் சிவபோதமா யிருபபதியாது? நானென்னும் அகம் பொரு ளன்றே? அகமெனபது சீவபோதமாயின், சமாதிக் கண் சிவபோதமாய் நிற்றல் வேறு அகமாயிருக்க வேண்டும். வேறு கான்ருனெனின்,

தத்துவராயர் பாடுறை.

"அஞ்ஞான காரிய மனைத்து மறவிட்டு
விஞ்ஞான மாஞைமென் றுநதீபற
வெளியாகி நின்றேமென் றுநதீபற."

எனக் கூறியிருப்பானேன் ? இதனால் சீவபோதமாய் நின்ற அவத்தாத்திரய முதலிய கற்பனைகளைக் கழித்து நிருபாதிக சிவபோதமாஞை மென்றதாயிற்று. ஆகவே, மூன்ஞான்று சீவபோதமாய் நின்றதும் நானென்பதே, பின்ஞான்று சிவ போதமாய் நின்றதும் நானென்பதே, இவற்றுல், நானென் பது இவ்விரண்டு மெனபபடுமா? அன்றிப படாதா ? இரண் டுமே நானெனின், சீவபோத ஆஞ்ஞானத்தில் சிவபோத மெய்ஞ்ஞானமும சிவபோத மெய்ஞ்ஞானத்தில் சீவபோத அஞ்ஞானமும இன்றுகின்றன. இவற்றையே, ஒன்றிலொன் றிலையெனனும அன்னியோன்னியாபாவ மென்பர் சத்துக் கள். இங்ஙன மிருக்கும இவ்விரண்டினும் நானென்னு மகம் பொருள் உண்டென்பதா ? அன்றி இன்றென்பதா ? உண் டென்பதுதானெனின், இங்ஙனமாகிய நானென்பது ஞாஞஞ் ஞானமாகிய சிவபோதமுஞ் சீவபோதமுமா ? இவ்விரு போதமும் அன்னியோன்னியாபாவத்தை ஏற்கின்றமையால இவ்விருபோதமும் நானென்ப தன்றெனின், நானென்பதை யன்றி இவ்விருபோதமு முண்டெனப்படுமா? படாதெனின், இவ்விருபோதமும் அன்றெனவும் இன்றெனவு மாகின்றன. ஆகின்றதால், நானென்பது விட்டுவிடாத இலக்கணைப்பொரு ளாகின்றது. எங்ஙனமெனின், இவ்விருபோதமும் தீர்ந்த

அகம்பொருள்கள் எனப்படாமையால் அவ்வகம்பொருளை இவை விட்டதும், அவ்வகம்பொருளை யன்றி இவ்விருபோத மும் இன்மையால் அவ்வகம்பொருளை இவை விடாததும், ஆகிய இவ்விருதன்மையையும் இயற்கையிலேயே ஏற்றி இல ங்குவதால் அகமென்பது விட்டுவிடாதலக்கணைச் சொரூப மாமென்க. விட்டுவிடாதலக்கணை இஃதாயின் விட்ட லக் கணையாவ தெங்ஙனமெனின், தேகங்கடோறும் அவத்தாத் திரயங்களை யுணரும் தர்ம மிருத்தலுக்கு வினைமுதல் ஓர் அகம்பொருளெனக் கருதி அவ்வத்தேகத்தை விட்டு அவ் வகம்பொருளை லட்சியித்தலாமென்க. விடாதலக்கணை யாதெ னின், அங்ஙனம் வினைமுதலாகக்கொண்ட அகம்பொருள் வாக்குமனாதீத மாகலின், அவ்வகத்துக். கமைந்திருக்கின்ற சத்து சித்து ஆநந்த முதலிய அனேக குணங்களில் ஓர் குணம் காரணமாக இருவித சமாதிகளிலும் அறிந்தனுசந் தித்தலாமென்க. இம்மூன்றுலக்கணையுள் முடிபாகியது விட்டு விடாத லக்கணையாம். இவ்விட்டுவிடாத லக்கணையனுபவத்தை,

சசிவர்ணபோதம்.

"விட்டலக்கணை தனையும்விட்டு விடாதலக்கணை தனையுந்
விட்டுவிட்டு விடாதலக்கணை யால்வினங்குவி னங்கவே."

என மகாவாக்கியம் வந்திருக்கின்றது. அன்றியும்,

சோதபசாரம்.

"வாலமதி யூகமதி போன்ஞான வஞ்ஞானக்
காலமுநாங் கண்டு கழித்தோமே - சீலமா
மப்போது நம்மிலே யாரோப மானவெலா
மிப்போது பொய்யான வே."

என எல்லாமாயும் அல்லவுமாயு மிருக்கும் நிலைமையைக் குறிப்பித்ததாமென்க. இதுநிற்க,

சோபாதிகமாக நின்று சீவிக்கிற தர்மம் அறியாமையி லோ? அன்றி அறிவிலோ? அறியாமையிலேயே யெனின், அவ்வறியாமைபிற் சீவிக்கிற முதலெது? நானென்பதுதா னெனின், நானென்பது அதிட்டானுரோபங்களைக் கடந்த ஏகநானென முன்னமே முடிபாயிற்றே! சங்ஙனம் சீவித்தலே அது ஏற்கும்? அன்றியும், அதிட்டானவகமே உதித்தல், மரித்தல் முதலிய சீவித்தலே ஏலாதாயின் ஏகநானு அவ்வுதித்தல் முதலியவற்றை ஏற்கும்? எவ்வறியாமையில் சீவித்தலியங்குகின்றதோ அவ்வறியாமையே இவற்றிற்கு வினைமுதலெனப பட்டதென்க. புத்தோகம், முத்தோகம, பூரணனந்தோகம், சத்தோகம், சித்தோகம், சானதோகம, சுத்தோக முதலியனவாகிய அனேக ஞான ரசானுபவங்க ளனைத்தும் அறியாமைக்காயின் ஷை உருப்படல், வெளிபபடல், வளர்தல், பூரித்தல், தேய்தல், மரித்தல் முதலிய அஞ்ஞானுபவங்க ளனைத்தும் அறிவுக்கெனபபடும். அங்ஙனமிலலையே! அறிவி னுண்டாகிவரும ஞானுனுபவங்கள் அறிவுக்காகலின் அறியாமையி னுண்டாகிவரும அஞ்ஞானுனுபவ மனைத்தும் அறியாமைக கென்பதற்கு முரணினமெனக. அறியாமையையன்றிச் சீவதத்துவ மெனபதற்கு வேறு முதலுண்டா? இல்லேபோ? ஆகலின, அறிவையன்றிக் கூடதசாட்சி சைதன்னிய மென்பதற்கு வேறு முதலின்றுமென்க. அறியாமையாகிற சீவத்துவத்தைச் சீவனென்று உயர்திணை ஆண்பாற் பொருளாக உருவகபபடுத்தி வழங்குவதால், அஃதொரு புருட னெனபபடுமாயின், அஃதோர் முதலெனபபடும், இஃது காலதத்துவத்தைக் காலனென வழங்கி வருவதுபோலாமென்க. உதித்தல், மரித்தல் முதலிய இன்பதுன்பானுபவங்கள் சீவன்பாலதெனச் சத்பிரமாணங்களால் வழங்கிவருவது அறியாமையின்பால தென்றுயிற்று. ஆகவே, சீவத்துவமென்னும் பெயர் தொழிற்பெயரா? அன்றி வேறு பெயரா? சீவிக்கும்

தர்மத்தை யுடையதால் தொழிற்பெயர்தானெனின்? இஃது தொழிற்குண மெனப்பட்டது. இத்தொழிற்குணம், கிழமை யெனப்படுமன்றே? கிழமையென்பது சுதந்தரமாகிய உரிமை. இவ்வுரிமை பிறிதின்கிழமையா? அன்றித் தற்கிழமையா? தற்கிழமையெனின், இஃதெஞ்ஞான்றும் நம்மைவிட்டகலாச் சுதந்தரமாய் முடியும். முடியவே, ஞானஞ்சுட்டானம் பயனின்றிபோம். அன்றியும், சீவன்முத்தியென வழங்கப்படுவதும் சொல்மாத்திரமெனவு முடியும். முடிவதால், பிறிதின்கிழமை யென்பாமெனின்? இக்கிழமை நம்மால் எதுகாறும் நிகழற்பாலது. சமாதி கைகூடுங்காறுமெனின், அதுகாறும் என சிவனெனவும் என் னுயிரெனவும் என் பிராணனெனவும் வழங்கப்படு மன்றே? அங்ஙனம் வழங்கப்படும் இப்பின்னத்துவத்திற்கு ஆதாரம நானென்பதன்றே? நானென்பதில் கயிறு, கானல், கட்டை முதலியவுற்றுள், அரவு, நீர், கள்ளன் முதலியவைகள் ஆரோபிதமாக நிகழுவதுபோல, சீவத்துவத்துக்கும் அச்சீவத்துவத்துக் கியைந்திருக்கின்ற அவத்தாத்திரய முதலியனவாகிய கற்பனைகளுக்கும் ஆதாரம் நானென்பதா மென்க. என்னை,

கைவல்லியம்.

"தூலசூக் குமவஞ் ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமுங்
காலமோர் மூன்றுஞ் சென்மக் கடலெழுங் கல்லோ லங்கள்
போலவே வந்துவந்து போனவெத் தனையென் பேரு
ஞலமர் கடவு ளாணை யவைக்கெலாஞ் சாட்சி நீயே." என்றும்,

"பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமனு
பவம்வி டாமற்
பலமலரின் மதுப்போலச் சச்சிதா நந்தமொன்றும்
பரமார்த் தத்தைப்
பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப்
பார்த்த போது

பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்றுமொரு
படமா னனே.”

என்றும் கூறியவாற்றாற்காண்க. சீவனென்பது அங்கப்பொரு ளென்ப தென்னையெனின், அச்சீவப்பொருள் சட்பாவ கற்பனை சையோகத்துவத்தை யன்றித் தனியே ஓர் பொரு ளன்று, எங்ஙனமெனின், அதிட்டானம் அக்கியானம் அந் தக்கரணம் தேகத்திரயம் பிரதிபிம்பம் அத்தியாசமென்ப வாம். இச்சட்பாவத்துள் அதிட்டானமென்பது நித்திய சத் தாகிய சுயம்பிரகாச சுத்த சைதன்னிய விளக்கமும், அக் கியானமென்பது ஷை சுயம்பிரகாச சைதன்னியத்தின்கண் கபிற்றின்பால் அரவு தடித்தாற்போல், ஒன்றை மற்றொன் றாக உணர்தற்கு அங்குரம்போலிருக்கின்ற ஷை மயக்கமாகிய வாரோபிதமும், அந்தக்கரணமென்பது ஷை அங்குரம்போ ன்ற மயக்கத்தின்கணிகழும் சங்கற்ப எழுசசியாகிய வாரோ பிதமும், தேகத்திரயமென்பது ஷை சங்கற்பத்தால் உள்ளது போல் தடித்துக் காணப்படும் தூல முதலிய உபாதித்திரய வாரோபிதமும், பிரதிபிம்பமென்பது ஷை தூலமுதலிய உபா தித்திரயங்களுள் ஒவ்வோ ருபாதித்துணை நான் நானென் றுபாசவடிவாய் நின்று நிகழுமாரோபிதமும், அத்தியாசமெ ன்பது வந்தியாபுத்திரனால் நிகழும் துட்ட நிக்கிரகஞ் சிட்ட பரிபாலனம் முதலிய கிருத்தியங்கள்போல் ஷை ஆபாச உணர்வினால் நிகழற்பாலனவாகிய அபேட்சித்தல் பகுத் துணர்தல முதலியனவும், கேட்டல் பார்த்தல் முதலியனவும், வசனதான முதலியனவும், அறிதல் அறியாதிருத்தல் முதலி யனவுமாக நிகழற்பாலதாகிய புடைபெயர்ச்சிகளாம். இங் ஙன மிருக்கும் சட்பாவ தர்மங்களுள் எது சிவனெனப்படு வது? பிரதிபிம்ப சைதன்னியமென்பாமெனின், அஃது தன க்குமேல் ஆதாரமாகிய கற்பனைத் தேகத்திரயமுதல் அதிட் டான சைதன்னியம் இறுதியாயுள்ள சட்பாவங்களையுமன்றி,

ஓர் முதலாகத் தனித்திருக்கட்டும். அதிட்டான சைதன்னிய மென்பாமெனின், அச்சைதன்னியம், அக்கியானம், அந்தக் கரணம், தேகத்திரயம், அத்தியாசமாகிய இந்நான்கங்கத்தை யும் உடையதா யிருக்கவேண்டும், அஃதங்ஙனமில்லையே! நிர வயவமாகவும் சுயம்பிரகாசமாகவும் இருக்கின்றதா லென்க. அக்கியானமென்பா மெனின், அவ்வக்கியானம் சடத்துவமா யிராமலும் அதிட்டான சைதன்னியத்தின் பால் ஆரோபிதமா யில்லாமலும் தனித்து ஓர் முதலாக விருக்கட்டும். அந்தக் கரண மென்பாமெனின், ஷே அவ்வந்தக்கரணம் அக்கியான சம்பந்த மில்லாமலும் அவாந்தரமான சலனவெழுச்சி யில்லா மலும் தனித்து ஓர் முதலாயிருக்கட்டும். தேகத்திரய மென் பாமெனின், அத்தேகத்திரயம் மூன்றுகலின், சீவப்பொருள் ஒன்றென வழங்காது மூன்றுபொருளென வழங்கட்டும். அத் தியாசமென்பா மெனின், அவ்வத்தியாசம் உபாதித்துணை நானென்னும் ஓர் கற்பனைக்குக் கிழமை யெனப்படாமலும் தொழிற்குண மெனப்படாமலும் தனித்து ஓர் முதலா யிருக் கட்டும். இங்ஙனமிருக்க, சீவனென்பதற்குப் பொருள் எத் தகையதென் றேற்குதும்? இதுகிற்க,

தூலமுதல் சொரூபசாட்சிகாறும் ஆராய்ந்தவுழைப்பால் தேர்ந்தது ஞானஞ்ஞான ரகித அகம்பொருளாயினும், அவ் வகம்பொருள் அவத்தாத்திரயக் கற்பனையால் அறியாமையா கிய சீவபோத முள்ளஞான்றும் இருவகைச்சமாதி எதார்த் தத்தால் சிவபோதமென வுற்று ஷே சீவபோதம் அகன்ற ஞான்று அச்சிவபோதமென்பது தானேதானுகிய தற்போத மெனப்படும். அத்தற்போதத்தின்பால், அதிட்டான மென் னும் சிவபோதமாகிய சிவோகஞானமும், ஆரோபமென்னும் சீவபோதமாகிய சீவோகவஞ்ஞானமும் நிகழினும், இவ்விர ண்டும் தானுகிய தற்போதமன்று. இவ்விரண்டுள் சிவோக

மென்பதைத் தற்போதமென்பாமெனின், சிவோகமென்பது தற்போதத்தை யன்றி வேறுக விருக்கட்டும். வேறுகாமையால், இச்சீவோகத்தை ஷ தற்போதமென்பா மெனின், அத்தற்போதத்தையன்றிச் சிவோகம் வேறுக விருக்கட்டும். அத்தற்போதம் இவ்விரண்டுமென்பா மெனின், அத்தற்போதம் அறிவறியாமைப் பொருளாய் மூடியாதிருக்கட்டும்? எங்ஙனமெனின், அத்தற்போதம் ஓர்பாகம் சிவோகமும் ஓர் பாகம் சீவோகமுமாய் இருபாகமுற்றுத் தனக்கெனப் பொருளின்றிச் சூனியப்பட்டுப்போம். அன்றியும், இவ்விருபோதமும் ஒன்றிலொன்று மாறுதிருக்கட்டும். அவை சிவோக லட்சியானுபவத்தில் சீவோக லட்சியானுபவம் இன்றுபும், சீவோக லட்சியானுபவத்தில் சிவோக லட்சியானுபவம் இன்றுயு மூடிகின்றதென்க. இங்ஙனம் மூடிவதால் தோட மென்னையெனின், இவ்விரு லட்சியானுபவமும். யாருக்குத் தோன்றி மறைகின்றன? தமக்குத்தாமே யென்னலாமா! என்னலாமெனின், அஞ்ஞானதிசைக்கணுள்ள சுழுத்தி யனுபவம் சாக்கிராவத்தைக்கண் உணரப்படுகிறதுபோல, இருவகைச் சமாதி சிவோகானுபவம் அஞ்ஞானதிசைக்கண் உணரப்படலாமா? ஷ அஞ்ஞானதிசைக்கணுள்ள சாக்கிராவத்தானுபவம் வாசனைப்போலியாகச் சொப்பனவத்தைக்கண் உணரப்படுகிறது போல, இவ் வவத்தாத்திரயம் சீவோகானுபவம், ஷ சமாதிச் சிவோகானுபவத்தின்கண் போலியனுபவமாக உணரபபடலாமா? அவ்வவ் வவத்தானுபவம் அவ்வவ் வவத்தைமட்டில் உணரப்படாது மற்றோர் அவத்தைக்கண்ணும் உணரப்படுகின்றதே, இவற்றுல் அவத்தைகள்தோறும் ஓர் புருடனே மாறுது சாட்சியா யிருக்கின்றுற்போல,, ஞாஞஞ் ஞானமாகிய அவ்வத் திசைக்கணுள்ள் அவ்வவ் வனுபவமும் அவ்வத் திசைக்கண்மட்டில் உணரப்படாது மறறோர் திசைக் கண்ணும் உணரப்படுகின்றது. இவ்ற்றுல் இவ்விருவகைத்

திசைக்கண்ணும் ஓர் பெருந் தற்போதமே மாறுது சாட்சியா யிருக்கின்றது. ஆகலின், இவ்விரு போதமும் அத்தற்போத மன் றென்பதாயிற்று. ஆகவே, இவ்விருபோதமும் அத்தற் போதத்தை யன்றியேனும் உண்டாயிருக்கவேண்டுமே? வே ண்டுந்தானெனின், பொற்பொருளின் பரிசானுபவமின்றிச் சிரத்தின் கிரீடமும் காலின் தண்டையு மில்லாததுபோல், தற்போதத்தின் கொந்தமின்றி ஷ அதிட்டான சிவபோத மும் ஆரோப சீவபோதமும் இன்மையெனப்படலாமா? படு கின்றமையால், இவ்விருபோதமும் தற்போதத்தின்பாலதா? அல்லவா? தற்போதத்தின்பாலதெனின், இவ்விரண்டும் கிழ மைகளெனபடுமா? படாவா? கிழமைகளெனப்படுமெனின், தற்கிழமைக ளெனப்படுமா? அன்றிப் பிறிதின்கிழமைக ளெ னப்படுமா? பிறிதின்கிழமைகளெனின், இவ்விருபோதமும், தற்போதத்தையன்றி வேறு பொருள் அன்றென முன்ன மே முடிந்தாயிற்று. ஆகவே, தற்கிழமைப் பொருள்களென் றுகவேண்டும். ஆகுமாயின், இவ்விரு கிழமையும் தற்போத த்தைவிட் டகலாததாய் முடியும். சிவபோதம் தானுகிய தற் போதத்தைவிட் டகலாததாயினும், சீவபோதமேனும அகல வேண்டுவதுதானே? இதனுற் சிவபோதம் எங்ஙனம் தற் கிழமை யெனப்படும்? சிவபோதஞானம் அகலாக் கிழமை யாகநின்று இச் சீவபோதக் கற்பனையை அகலச்செய்து முடி வில் தானேதானு யிருப்பதாமென்க.

இவ்வாராய்ச்சிக்கண் சிவபோதம் அறிவென்பது பூர்வ பட்ச முற்று, இதனைக் கிழமையாகக்கொண் டுணரும் ஓர் அதிட்டான போதமே மேலாகிய அறிவென்பதா மென்க.

நான்காவது

சீவபோத ஆராய்ச்சி விளக்கம் முற்றிற்று.

ஐந்தாவது
கூடஸ்த சைதன்னிய
இலட்சியார்த்த விளக்கம்.

வேஃபா.

இந்தவா ராய்ச்சியினி லென்று மிருப்புளதாச்
சிந்தை வியாபகமே தேர்ந்தொளிரும்—வந்த
பரிபா கிகளாகப் பாங்குடையோர்க் கொன்றுந்
திரமில்லார்க் கொவ்வாதித் தேன்.

எங்ஙனமெனின், முன்ஞான்று ஆராய்ந்த ஆராய்ச்சிக் கண் சிவபோதம் அறியாமையாயும், தேரப்பட்டது அறிவாயும் முடிந்தன. முடிந்த இவ்விரண்டில், தேரப்பட்ட அவ்வறிவேனும் நானென்பதற் கியைந்ததா? அன்றி இயையாததா? இயைந்ததெனின், அஃது எத்தகைய தெனப்படும்? வியாபகமாயும், விளக்கமாயும், உபாதான காரணமாயும், நித்தியமாயும், சாட்சியாயு மிருக்கின்றதன்றே? நானென்பதற்குப் பொருள் இங்ஙனமாயிருக்கின், அஃது தன்னையறியும் அறிவென்பதற்கு மூரணென்ன விருக்கின்றது? இங்ஙனமாகிய தன்னையும் அயலையும் அறிவதே அறிவென்பேமெனின், அயலை அறியு மவசரம் அறியாமையாகிய சிதாபாசனும், தன்னை மேற்கூறிபவண்ணம் அறிவது அறிவெனவு மாகின்றதே! எங்ஙனம் அயலையும் தன்னையும் அறிவதை அறிவெனப்படும்? சோபாதிகமென்றும் நிருபாதிகமென்றும் இரண்டிருக்கின்றன. இவற்றுள் சோபாதிகமென்பது, ஏகதேசமாக நின்றுணர்வது. நிருபாதிகமென்பது, நிறைவாக நின்றுணர்வது. ஏகதேசமாய் நின்றுணர்வதென்பது, இத்தேகத்

துணையாய் நிற்பது. இங்ஙனம் நின்றுணரு மனுபவம் கற்பனையா? அன்றி யதார்த்தமா? சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், உலகென்பது சமட்டியும், உடலென்பது வியட்டியுமாயிருக்கின்றன. சமட்டியாகிய உலகம் தோன்றியஞான்று வியட்டியாகிய இவ்வுடலும் தோன்றுவானேன்? அச்சமட்டியாகிய உலகம் தோன்றும்ஞான்று வியட்டியாகிய இவ்வுடலும் தோன்றுமற் போவானேன்? இவ்வுடல் உலகப்பொருளன்றுயின், அவ்வுலகோடு தோன்றி மறையவேண்டுவதின்று. தோன்றி மறைதலால் இவ்வுடல் உலகப்பொருள் என்பதற்கு முரணின்று. சமட்டியும் வியட்டியும் ஒருங்கே காணப்படுதல் சகலாவத்தையும், ஒருங்கே மறைதல் கேவலாவத்தையு மாகின்றன. இவ்விரண்டவத்தைகளையும் அறிகின்றது யாதெனப்படும்? நாமன்றே? நாம் எங்கிருந்து இவற்றை அறிகின்றனம்? இவ்வுடலின்கணிருந்து அறிகின்றனமெனின், இவ்வுடல் சதுர்ப்பூதங்களையன்றி ஓர் முதலாயிருக்கட்டுமே? தோற்றல் மாத்திரமாயும் சொல்மாத்திரமாயு மிருக்கின்றதே! தோற்றல் மாத்திரமாகத் தோன்றும் தோற்றத்தில் நின்றறிகின்றனமென்பது, கானலிற் றோன்றும் நீரில் நின்று அருந்துதல் முதலிய பலகிரியைகள் புரிகின்றோமென்பதுபோலாகின்றது. அக்கானல் நீர் அருந்துதல் முதலிய அனுபவங்கட்கியையாததைஇதற்குஓப்பிடலாமோவெனின், அனுபவத்துக் கியைந்தது யதார்த்த மாக்கும்! அங்ஙனமாயின், கடபட முதலிய அனுபவங்களைப்போல் இருக்கவேண்டுமாக்கும்! அக் கடபட அனுபவங்களில் மட்பொருளும் நூற்பொருளும் அவற்றைவிட்டு அகன்றிருக்கின்றதாக்கும்! அங்ஙனம் நீங்கியில்லையே! அங்ஙனம் நீங்கி இருந்தாலன்றே அக் கடபடங்கள் அனுபவத்துக் கியையும்? இருப்பது மட்பொருளும் நூற்பொருளுமாகலின், பிடித்தல் எடுத்தல் முதலிய அனுபவங்களுக் கியைகின்றன. கடபடங்களின்றி மட்

பொருளும் நூற்பொருளும் அனுபவப் படட்டுமேயெனின், அம்மட்பொருளும் நூற்பொருளுமின்றிக் கடபடங்கள் அனுபவப்படட்டுமே. அன்றியும்,மட்பொருளும் நூற்பொருளும், யாவரும் வந்திப்பதற்குத் தேவதாபிம்பமாகவும், திருமங்கிலியத்துக்குச் சரடாகவும் அனுபவப்படும் ஞான்று கடபடங்களுண்டா? இல்லேயன்றே? கடபடங்கள் அனுபவப்படும் ஞான்று மட்பொருளும் நூற்பொருளு மின்றே ? இருக்கின்றதால், அனுபவப்படுதல் எவை? மட்பொருளும் நூற்பொருளுமன்றே ? அகலின், கடபடானுபவங்கள் தோற்றல் மாத்திரமும் மட்பொருள் நூற்பொருளானுபவங்கள் யதார்த்தமுமாயிற்றென்க. இம்மட்பொருள் நூற்பொருள் போன்ற மண்ணதி சதுர்ப்பூதத்தை யன்றி உடலென்பது எங்ஙனம் பொருளா யிருக்கின்றது ? தோற்றல்மாத்திரமா யிருக்க நாம் இவற்றிலிருந் தறிவது எங்ஙனங் கூடும்? கூடாமையால், இச் சமட்டி வியட்டித் தோற்றங்களையும், அவை மறைதலையும் எங்கிருந் தறிகின்றனம் ? இம்மயக்க மறுதுழி, நாமிருத்தற் கிடமும் நமது யதார்த்த நிலையும் எங்ஙனம் வெளிப்படும்? இதுநிற்க,

அவத்தாத்திரயங்கள் மாறுகின்றனவா ? அன்றி நாம் மாறுகின்றனமா ? நாம் மாறுகின்றனமெனின், நாம் மாறுகின்றதை மாறுதிருந்து அறிகின்றது யாது ? நாமே அறிகின்றனமெனின், நாம் மாறுகின்றனமன்று. நம்பால் மாறுகின்றனவெனின், நம்மையன்றி வியாபகப்பொருளியாது ? வேறின்றுகலின், நானென்பது யாதோ அது வியாபகப் பொருளென்பதற்கு மூரணின்று. அன்றியும், எது இவ்வவத்தைகளாக மாறுகின்றது ? நானென்பதன்று, அறியாமையெனின், அவ்வறியாமை நானென்பதையன்றி இதுகாறும் உண்டெனப்பட்டதா ? இல்லேயே ? இல்லேயாயின் அறியாமையாகிய

இவ் வவத்தாத்திரயங்களுக்கு உபாதானகாரணமு மியாது? வேறின்மைகலின்? நானென்பதே.

அன்றியும், இவ்வவத்தாத்திரயங்கள் மாறினும், நானென்பது எஞ்ஞான்றேனும் மாறினதுண்டா? இன்மைகலின், மாறும் அவத்தாத்திரயங்கள் அநித்தியமாகின்றன. ஆகின்றதால், மாறுதிருக்கின்றது நானென்பதாகலின், நானென்பதையன்றி நித்தியமென்பதியாது? வேறின்மைகலின், நானென்பதே நித்தியமென்பதற்கு முரணின்று. அன்றியும், இவ்வவத்தாத்திரயம்விளங்குகின்றது எந்தவிளக்கத்தினலெனப்படும்? சோமசூரியாக்கினி விளக்கத்தினலெனின், சொப்பனமும் சுழுத்தியும் எவ்விளக்கத்தினல் விளங்குகின்றன? தற்பிரகாச விளக்கத்தா லன்றே? அவ்வீரவத்தைக்கண்ணும் நானென்பது ஒளிவடிவா யிருக்க, சாக்கிரமாகிய இவ்வோரவத்தைக்கண்ணு ஒளியின்றி யிருக்கின்றது. இவ்வவத்தைக்கண் நானென்பது ஒளிவடிவாயின், சோமசூரியாக்கினி வேண்டுவதின்றே யெனின்? திரிகால ஞானிகளுக்குச் சோமசூரியாக்கினி உதவி யிருக்கட்டுமே? அவர்களுக்குத் தவங் காரணமாகவெனின், அந்தஞானம் தவத்தால்வரினும் விளக்கம் யார்பாலது? அங்கேயும், நானென்பதன்பாலதன்றே? ஆகலின், நானென்பது விளக்கவடிவ மென்பதற்கு முரணின்று. அன்றியும், இவ்வவத்தாத்திரயங்களை ஒருங்கே நித்தியமாயிருந்து அறிந்துகொண்டுவருகின்றமையின் நானென்பதையன்றிச்சாட்சியென்பதியாது? சாட்சியென்பது விலட்சணமாக நின்றுணர்வதே, வேறின்மைகலின், நானென்பது சாட்சிப்பொருளென்பதற்கு முரணின்று. நானென்னும் அறிவு இலக்கியப்பொருளா யிருக்கின்றதால், அதற்கிலக்கணமோ அனந்தமா யிருக்கின்றன. இருக்கினும் இவ்வவத்தாத்திரயங்காரணமாகவெடுத்துக் காட்டியது ஸத்தியாபகமுதலிய பஞ்ச இலக்கணம்

களே யென்க. இவ்விலக்கணங்கள் அகம்பொருளுக் குண்டாகலின், இங்ஙிலே அகத்தாராய்ச்சி விளக்க மெனப்படுமா? அன்றிப் புறத்தாராய்ச்சி விளக்கமெனப்படுமா? புறத்தாராய்ச்சி விளக்கமன்று அகவிளக்கமாகலின், இவ்விளக்கமே கூடஸ்த சைதன்னிய இலட்சியார்த்த மெனப்படுமன்றே? கூடமென்பது இரகசியப்பொரு ளெனப்படுமென்க. இஃதில் இன்னுமையமுளதேற் கூறுதும். எங்ஙனமெனின், நமக்கு முன்ஞான்று காணப்பட்ட காலம் தேசம் வஸ்துக்களே இஞ்ஞான்று உன்னுந்தோறும் தோன்றுகின்றனவா? இல்லையா? தோன்றுகின்றனவெனின், அங்ஙனம் தோன்றுவது முன்ஞான்று காணப்பட்டவைகளா? அன்றி வேறுக இருந்து தோற்றுகின்றனவா? முன்ஞான்று காணப்பட்டவைகளே இஞ்ஞான்று தோன்றுகின்றனவெனின், அங்ஙனம் தோன்றுகின்றவைகளுள் ஒன்றை யுதிப்பம். அதாவது:—இப்பர்வதமானது இத்தூலபாவமாக நின்றறியும் நமக்கு, அணிமைக்கண் வந்ததுண்டா? அன்றி அதன் அணிமைக்கண் நாம் போனதுண்டா? இல்லையே! ஆகலின், பர்வதமாகத் தோற்றுவதியாது? முன்ஞான்று காணப்பட்டதைப் போலவே தோற்றுகின்றதெனின், இப்பர்வதத்தைப் போல் அண்டாண்ட சராசரங்களனைத்தும் தோற்றல் மாத்திரமாகக் காணப்படுகின்றனவல்லவா! இவையனைத்தும் எங்கே காணப்படுகின்றன? நினைவிற் காணப்படுகின்றன வெனின், அந்நினைவு எத்துணைத்தாயிருக்க, இவ்வண்டாண்ட சராசரங்களும் காணப்படுகின்றன? அகண்டமாயிருக்க அதன்கண் காணப்படுகின்றனவெனின், அவ்வகண்டம் வெளியெனப்படுமன்றே? எங்ஙனமெனின், ஒரு பர்வதம் தோற்றுகின்றது, உயரத்திலும், நீட்சியிலும், அகலத்திலும் இத்துணைத்தென இருக்கின்றதல்லவா? இங்ஙனம் இக்கணிதமுற் றிருக்கின்ற இப்பர்வதம் அகப்புறமுற் றிருக்கின்றதன்றே? இத்தச புறங்களிலும்,

யாதிருக்கின்றது ? ஒன்றுமில்லாமையெனின், அவ்வொன்று மில்லாமையன்றே வெளியெனப்படுவது ? இப்பர்வதத்தின் தசபுறத்துள் ஓர் புறத்திலுள்ள வெளியை, நமதகதிருட்டி யானது நாடிச் செல்லச் செல்லச் சேய்மையுற்றுப் போகுமன்றே? சேய்மையுற்றுச் சென்றும் அவ்வெளிக்கு முடிவு எட்டுகின்றதா? இல்லையன்றே? இங்ஙனமே ஒவ்வொருபுறமு மிருக்கின்ற அவ்வெளிக்கு முடிவு எட்டவில்லையன்றே? எட்டாதுழி, அஃது எல்லையிறந்திருக்கின்ற தன்றே? இதனால் அவ்வெளியானது கிழக்கு மேற்கு முதலியனவாக வழங்கப் படுகின்றதா? இல்லையன்றே? அஃது எங்ஙனமெனின், இது தான் கிழக்குத்திசையெனச சுட்டும் இச்சுட்டுக்குஇலட்சியம் எதுவெனப்படும்? அதற்குக் கீழெனவும் மேலெனவும் வழங் கப்படுவது இயைந்ததன்று. அவ்விரண்டும் திக்குகளாகலின் என்க. ஷை கிழக்குத் திக்கு என்னும சுட்டுக்கு இலட்சியம், இவ்வெளியையன்றி யுண்டோ ? இன்றுகலின், இங்ஙனமே தசவித திக்குகளுக்கும் இலட்சியம் இவ்வெளியை யன்றி யின்றென்பதாயிற்று. ஆகவே, இவ்வெளியானது எந்த திக் குக் கியைந்தது? தசதிக்குக்கும் இயைந்ததெனின, ஓர் திக்கு மற்றோர் திக்கு எனப்படாததுபோல, ஓர் திக்குவெளி மற் றோர் திக்கு வெளியெனப் படாதிருக்கவேண்டுமே? அங்ஙன மில்லையே! எங்கும் ஏகவெளியா யிருக்கின்றதே! எங்ஙனம் ஷை கிழக்கு முதலிய தசவித திக்குகளே யேற்கும்? புறமென் பதை யேலாத இவ்வெளியானது உள் என்பதை ஏற்றற் கியைகின்றதா? இன்றுகலின், உள்ளும் புறமுமற்றிருக்கினும் இடைப்புறமேனும் ஏற்றிருக்கவேண்டுமே! அஃதுமிலையே! ஏனெனின், நிரந்தரமுற் றிருக்கின்றதா லென்க. அம்முப் புறமும் அற்றிருக்கின்றதாயின் ஷை நீனைவாகிய இவ்வெளி ஆதிமத்தியாந்த ரகிதமெனப் படுமன்றே? இதனை உற்று நோக்குழியன்றே இஃதுண்மையென்றும். அன்றென்றும்

விளங்கும்? அங்ஙனம் நோக்காதுழி, இஃது ஓர் கதைபோலும்! இங்ஙனமாகிய பரிபூரண வியாபகத்திலன்றே ஷை தோற்றன்மாத்திரமாகிய இப்பர்வதம்போன்ற அண்டரண்ட சராசரங்களும் தோற்றுகின்றன? இங்ஙனம் தோற்றப்பட்ட வற்றுள், இப்பர்வதம் தோற்றும்ஞான்று ஏனையநாமரூபங்கள் தோற்றுகின்றனவா? இல்லையன்றே? மற்றவற்றுள் ஒன்று தோன்றும் ஞான்று இப்பர்வத மூண்டா? இல்லையன்றே? இல்லையெனின், எங்கே போயிற்று? எங்கும் போகலின்றெனின், நசித்துவிட்ட தன்றே? நசித்துவிட்ட பின்ஞான்று அப்பர்வதம் யாது பொருளாய் மூடிகின்றது? இலலாமற் போய் விடுகின்றதெனின், இல்லாமையென்பது சூனியமன்றே? அவ்வாறில்லாமையாகிற சூனியத்திற் காதாரமாவது இவ்வெளியே யன்றே? அப்பர்வதம் வெளியாய்விடுகின்றதன்றே? இஃது எதுபோலெனின், உப்பானது அப்பானது போலும், ஆலாங்கட்டி நீரானதுபோலும, அரவு கயிறானதுபோலு மன்றே? இவ்வுப்பு முதலிய மூன்றும், நீரும் அரவுமாவானேன்? நீரும் கயிறும் அவ்வுபபாதிகளாக ஆனமையால் மீண்டுமவைகள் தத்தமூபாதான காரணமாயகின்றன. இவற்றைப்போல், ஷை பர்வதம் தனக்காதாரமாகிய வெளியாவானேன்? அவ்வெளியே பர்வதமாக ஸ்புரித்தமையால், மீண்டும் அஃது தனது உபாதான காரணமாயகின்றது. அவ்வெளியானது ஷை கயிற்றரவுபோல், பர்வதமாக ஸ்புரிக்காவிடின், மீண்டும் எங்ஙனம் வெளியாகும். இப்பர்வதமபோல் மற்றோர் நாமரூபமும் தோன்றி, மீண்டும் வெளியாகின்றது. இங்ஙனமே அவ்வெளியின்கண் தோன்றும். அண்டரண்ட சராசரங்களும் தோன்றிய ஞான்று ஈதான்றி மீண்டும் வெளியாகவே முடிகின்றன. சலமானது தனது அகண்ட வியாபகத்தில்தானே ஏகதேசமாய் அலையாதிகளாக ஸ்புரித்து விளங்கி ஒடுங்கித் தானுய் முடிவதுபோல, இவ்

வகண்ட வெளியானது, தனது பரிபூரண வியாபகத்தின்கண் தானே ஏகதேசமாய் நான் நீ அவன் அவள் அது என்கிற திணை பாலிடமுதலிய அனந்த நாம ரூபங்களாக ஸ்புரித்து விளங்கி ஒடுங்கித் தானுய் மூடிந்து விடுகின்றது. இவையாவும் கண்கூடான அனுபவமன்றே? இங்ஙன மிருப்பதால், ஷ தோற்றங்களாகிய சர்வத்துக்கும், இவ்வெளியாகிய தான் அகண்ட வியாபகமா யிருப்பதுமன்றி, உபாதான காரண மாயு மிருப்பது சத்தியமன்றே? அன்றியும் அவ்வெளியாகிய தன்பால் சமட்டியாகவும் வியட்டியாகவும் காணப்படுகின்ற வைகள் எதற்கெனப்படும்? ஓரறிவுக்கெனின், அறிவுக்கு ஏன் காணப்படுகினறன? தம்மை அறிகின்றதற்குக் காணப்படு கின்றனவெனின், இத்தோற்றங்களாகிய தம்மையறியுமறிவு எங்கிருக்கின்றது? இத்தூலசரீரத்தில் நின்றறிகின்றதெனின், இத்தூலசரீரம் மூன்ஞான் முராய்வில் சதுர்ப்பூதாம்சங்களே யன்றி ஓர் முதலெனபபட்டதா? இல்லையே? இல்லாதுழி, மீண்டும் இத்தூலதனுவை ஓர் முதலெனக் கொண்டது அவ் வாராய்ச்சி நெறிக்கணில்லாத அறியாமையினு லன்றே? இவ்வறியாமையை மிக்க ஆபதமாகத் தழுவி யிருக்குஞான் றும் நமது யதார்த்த வடிவம் கிஞ்சித்தும் வெளிபபடாதே! இதுநிற்க,

இஞ்ஞான்று காணப்படுகின்ற இப்பர்வத்தை அறி கின்றது அறிவாகலின் அவ்வறிவு உருவம் அருவம் உருவா ருவமாகிய மூன்றில் எந்த சொரூபமாக நினறறிகின்றது? அருவமாகநின் றறிகின்றதெனின், அருவமென்பது இப்பர் வதமுதலிய சர்வ தோற்றங்களுக்கும் ஆதாரமாகிய இவ்வெ ளியையன்றி இன்றென வருமே! வரின், அவ்வாதார வெளி யே இப்பர்வதத்தை அறிகின்றதென வருமே! வரின், அவ் வெளியானது தன்னை யறிகின்றதென வருமே! அங்ஙன

மன்றி உருவமாக நின்றறிகின்றதெனின், தோன்றுகிற இப் பர்வதம் உருவப்பொருளாக வேண்டும். உருவப்பொருளா யின், கட்புலன் முதலிய ஐம்பொறிகளுக்கும் தோன்றி அனு பவப்படவேண்டும். அனுபவப்படுகிறதறகு நாம் இங்ஙகரத் தைவிட்டு அதன் அணிமைக்கண் போயிருக்க வேண்டும். அங்ஙனமின்றெனின், பர்வதம் தன் கானகத்தை விட்டு நம க்கு அணிமைக்கண் வந்திருக்க வேண்டும். இங்ஙனமு மின் றெனின், எங்ஙனம் உருவவடிவமாக நின்றறிகின்றதெனக் கோடல்? உருவாருவ வடிவாக நின்றறிகின்றதெனின், இஞ் ஞான்று தோற்றுமை பர்வதம் உருவாருவமாகலின், நாம் உரு வாருவமாக நின்றறிகின்றதென்பது பொருந்தும். பொருந் தவே, உருவாருவ வடிவமாக நின்றறிகின்ற அறிவு, எங்கிருப் பது? இப்பர்வதத்துக் காதாரமாகிய வெளியின்கண்ணெ னின், இப்பர்வதம் சதுர்வித பக்கங்களுள், ஓர்பக்கம் தோன் றுகின்ற தன்றே? அங்ஙனம் தோன்றுகின்றது, எந்த பக்க மெனப்படும்? கீழண்டைப் பாரிசம் தோன்றுகின்றதெனின், அப்பாரிசத்தை அறிகிறவறிவு, எப்பாரிசத்தில் நிற்கின்ற தெனப்படும்? அக்கீழண்டைப் பாரிசத்திலெனின், அப்பாரி சத்தில் அணிமைக்கண்ணுகவேனும், அன்றிச் சேய்மைக் கண்ணுகவேனும் நின்றறிகின்றதன்றே? அங்ஙன மறிகின்ற அறிவுக்குச் சொரூபம், உருவாருவ வடிவந்தானே? ஆமெ னின், அவ்வடிவம் பர்வதம்போன்ற உருவாருவமாகலின், தோற்றுகின்ற இப்பர்வதம் ஓர் முதலாக வேண்டும். அங்ங னம் முதலாயின் இவ்வுருவாருவ வடிவமும் ஓர் முதலாகலாம். எங்ஙனமெனின், இஞ்ஞான்று இப்பர்வதத்தை அறியு மறி வுக்கு வடிவம் உருவாருவமாயின, சாக்கிரமாகிய இங்ஙனவில் காணப்படுகின்ற இவ்விருட்சத்தை யுறிகின்றது எது? அப் பர்வதத்தை அறிந்தவறிவன்றே. இவ்விருட்சம் உருவமா? அன்றி வேறு? உருவமாகலின், இவ்வுருவத்தை அறிகின்ற

அறிவும் உருவமாக விருக்கின்றது. நாமரூபங்களே இந்நனவில் அறியும் ஞான்று உருவபாவமாயும், அகத்தில் அதாவது நினைவின்கண் ஷை நாமரூபங்களே உருவாருவமாக அறியும் ஞான்று உருவாருவ பாவமாயும் நின்றறிகின்றது. இவ்விரிடத்தும் அறிகின்ற வறிவுக்குச் சொரூபம் எங்ஙனமிருக்கின்றது? இவ்விரண்டுமா யிருக்கின்றதெனின், தான் உருவமாயிருந்து விருட்சத்தை அறியும்ஞான்று உருவாருவ பேதமும், தான் உருவாருவமாயிருந்து பர்வதத்தை அறியும் ஞான்று உருவபேதமும் இன்றிப்போகின்றன. இங்ஙனம் ஒன்றிலொன் றில்லாமற் போகின்றதால், அன்னியோன்னியா பாவமென்ப ரறிஞர்கள். இங்ஙன மிருப்பதால், ஷை பர்வதத்தை அணிமையாகவும் சேய்மையாகவும் அறிவதுபோற் காண்பது தனது உருவாருவபேதபாவத்தா லன்றே? உருவாருவ வடிவம் தானன்றாயின், தான் இப்பர்வதத்தை அறிவது எங்கிருந்தெனப்படும்? ஆதாரமாகிய அவ்வெளியின்கணினின், அவ்வெளிக்கண் இப்பர்வதம் போன்ற நாமரூபங்கள் எங்கெங்கே எவ்வெஞ்ஞான்று ஸ்புரித்துக் காணப்படுகின்றனவோ, அங்கங்கே அவ்வஞ்ஞான்று அறிகின்றது. அங்ஙனம் அறிகின்ற அறிவு உருவாருவபாவம்போல் ஆரோபிதமாக நின்றமையால் ஒவ்வோர் நாமரூபத்தையும் ஒவ்வோர் பாரிசத்தில் நின்றறிகின்றதாய்த் தோற்றுகின்றதே யன்றி, உண்மையில் அங்ஙன மில்லவே யில்லை. இல்லையேனும், அறிவது உண்மையாகலின் எங்கிருந் தறிகின்றது? அவ்வியாபகத்தில் எங்கெங்கே தோற்றுகின்றதோ, அங்கங்கே யிருந்தறிகின்றது. தோன்றுத ஞான்றும் தான் இருந்தே அத்தோன்றுமையையும் அறிந்துகொண் டிருக்கின்றது. இதனால் அறிவென்பது அவ்வெளி முழுதும் நிறைவென்பதாயிற்று. ஆகவே, அவ்வெளியை யன்றி அறிவென்பதுண்டா? இன்மையால், அவ்வெளியே தன்பாற்றோற்றுவன யாவையும் தானே

யறிகின்றது. இதனால் அவ்வெளியானது உணர்வெளி யென வும், அறிவானது நிறைபுணர்வெனவு மாகின்றது. இவ்வுணர் வெளியின்கண் தோற்றும் இப்பர்வத முதலிய சராசரங்களும் விளங்குவது யாதினாலெனப்படும். அதாவது விளக்கமெனப் படுவது. இச்சராசரங்களை விளக்குதற்கு அவ்வெளிக்கண் சோமசூரியாக்கினி யென்பவை யில்லையே ! இல்லாமையால், எந்த விளக்கத்தால் இவற்றுதி தோற்றங்களும் விளங்கப்படு கின்றன ? தற்பிரகாசமாகிய விளக்கத்தா லென்பதற்கு மூர ணின்றென்க. நாம் விளக்கவடிவமா யிருக்க அவ்விளக்கம் விளங்காத தென்னையெனின், அஃது விளங்காஞான்று முண் டோ? சதோதயமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றதே! உருவம் உருவாருவமாகிய சராசரங்களாகப் பார்க்கும் பார் வையே அவ்விளக்கம் விளங்காததுபோ லிருத்தற்குக் காரண மன்றி வேறன்றென்க. சராசரங்கள் தோற்றுவதும் அவற் றைப் பார்க்கும் பார்வையு மில்லாஞான்றேனும் அதாவது சூழ்த்தியவத்தை யெனப்படுவது. அவ்விளக்கம் விளங்கப் படலாமே யெனின், அவ்வுருக்களை அறிந்துகொண்டிருக்கும் ஞான்று ஒருங்கே அவ்வுருக்கள் மறைந்து விடுவதால், அம் மறைப்பாகிய பாழே ஆங்கு அந்த நாட்டத்துக்குப் பலனாக விருக்கின்றது. அப்பாழாகிய பலனில் அறிவுவிளக்க மெங்ங னம் தோன்றும் ? உருக்கள் தோன்றும் ஞான்றே, அவ்வுரு க்களை மித்தையாணுபவமாக்கித் தன்னை எட்டியுணர்ந்துழி யன்றே அம்மாறுவிளக்கம் தெரியும். அங்ஙனம் அவ்வுழைப் பின்றி உருக்களையே பலனாக நாடும்ஞான்று உருக்களாகத் தோன்றும் விர்த்திகள் இடையிடையே அயர்வுறுமன்றே ? அவ்வயர்வு உருக்களைப் பலனாக நாடிய நாட்டத்துக்கு யாதாய் முடியும்? பாழாய் முடியுமன்றே? இதற்கு ஓரனுப வதிருட்டாந்தம் கூறுதும். எங்ஙனமெனின், இரவில் பலரும் சூழ்ந்து மிக்க வியப்புறும் ஓர் அரியநாடக மேடைக்கணி

ன்று நடனமாடிவரும் பல வேடங்களும் விளங்குவது யாதினு லெனப்படும்? சுடர் பகல்வத்தி முதலிய ஒளிவியாபகத்தினு லன்றே? அவ்வொளி வியாபகத்திற் றோற்றும் நாநாவிதங்களும், மிக்க பலனுக அதாவது இன்புருவாகத் தோற்றுவானேன்? பலனுகப் பார்ப்பதனுலன்றே? அங்ஙனம் பலனுகப் பார்க்கும் ஞான்று அப்பலன் அனேத்தும் ஒருங்கே கணத்தில் மாறியக்கண் ஷை பார்வைக்குப் பாழே பலனுகத் தோன்றுமா? அன்றி அப்பலனுகிய வேடங்களே விளக்கி வைத்த ஷை சுடர் முதலிய ஒளி பலனுகத் தோன்றுமா? பாழே பலனுகத் தோன்றுமன்றே? ஷை நாடக நடிக்கும் ஞான்று அவ்வேடங்களேப் பலனுக நாடிய நாட்டத்தை விட்டு அவ்வேடங்களே விளக்கும் ஒளி வியாபகத்தை நாடிக் கொண்டிருக்கின் வேடங்கள் மாறியஞான்றும் மாறுஞான்றும் அந்நாட்டத்துக்குப் பலன் அவ்விளக்கத்தை யன்றி வேறுபலன் உண்டெனப்படுமோ? இதுபோல், இச்சகலாவத்தைக்கண் பலனுகத் தோன்றும் காலம் தேசம் வத்துக்களே நியதி களேந்து களேந்து செல்லின், மூடிவிலிருப்பது வியாபக விளக்கமாகலின், அவ்விளக்கத்தை விடாதுழி, ஷை காலம் தேசம் வத்துக்கள் மாறியஞான்றும் மாறுஞான்றும் நாட்டத்திற்குப்பலன் அவ்வொளியையன்றி வேறேர்பலன் உண்டெனப் படுமோ? படாததால், அவ்வியாபக விளக்கத்தை விடாது நாடிக்கொண்டிருப்பது மிக்க அவசியமாமென்க.

இஃதன்றியும், உயிராகிய ஒவ்வோர் போதத்துக்கும் நாட்டத்திரயம் உள்ளன. அவையாவன, ஏகதேச விகார நாட்டமென்றும், ஏகதேச சுயம்பு நாட்டமென்றும், அகண்ட சுயம்பு நாட்டமென்றுமாம். அவற்றுள் தோற்றல் மாத்திரமாக நிகழும் அலேயாதிகளே நாடுங்காறும் ஏகதேச விகார நாட்டமும், இவ்வலேயாதிகட்கு உபாதானமா யிருப்பது

யாதெனத் தூலமதியால் நாடாது சூக்குமமதியால் நாடுழி இருந்து வெளிப்படுதல் நீர்ப்பொருளாகலின் அந்நீர் சுயம்புப் பொருளாயினும், ஷி அலையாதி நாட்டம் தவிர்ந்த அவசரம் நீர்ப்பொருள் ஏகதேசமாகத் தோன்றுமல்லவா? ஏகதேசமாகத் தோன்றுவ தென்னெனின், அலையாதியும் அவ்வலையாதியை ஓர் முதலென நாடி இருந்த நாட்டமும் ஏகதேசக் கண்டத்துவமாகலின், இக்கண்டத்துவ நாட்டம் அகன்ற அவசரம் அந்நாட்டம் அகண்டமாயுள்ள நீர்ப்பொருளைக் கண்டத்துவமாக நாடுமன்றே? ஆகலின், அந்நாட்டம் கண்டத்துவமென்பதற்கு முரணென்னை? இதனுல் ஷி ஏகதேச சுயம்பு நாட்டமும், அந்நீர்ப்பொருளை ஏகதேசமாக நாடிய நாட்டம் முதிர முதிர அந் நீர்ப்பொருள் ஆகாரப்படுதற்கு இடனுகுமன்றே? அவ்வாகாரமும் முதிர முதிர நீர்ப்பொருளானது எத்துணைத்தாக விரிந்திருக்கின்றதோ அதாவது அகண்டமெனப்படுவது, அத்துணைத்தாக வியாபிக்குமன்றே? அங்ஙனம் வியாபித்தலே அகண்ட நாட்டமுமாமென்க. இவற்றைப்போல், சொல் மாத்திரமாயும் தோற்றல் மாத்திரமாயும் தூலமுதலிய உபாதித்திரயங்களை நாடுங்காறும், ஏகதேச விகார நாட்டமும், இவ்வுபாதித்திரயங்களுக்கு உபாதானகாரணமாயிருப்பது யாதெனத் தூலமதியை நீக்கிச் சூக்குமமதியால் இவ்வுபாதித்திரயங்களைக் காரணகாரிய நெறித்தாக ஆராய்ந்து சென்றுழி இருந்து வெளிப்படுதல் அறிவாகலின், அதாவது ஞானமாகலின் அந்த ஞானம் சுயம்புப் பொருளாயினும், ஷி உபாதித்திரய பஞ்சகோச நாட்டம் தவிர்ந்த அவ்வவசரம், ஷி ஞானமானது அகண்டத்துவமாயினும் ஏகதேசமாகத் தோன்றுமல்லவா? ஏகதேசமாகத் தோன்றுவ தென்னெனின், உபாதித்திரய பஞ்சகோசங்களும், இப்பஞ்சகோசங்களை ஓர் முதலென நாடி இருந்த நாட்டமும் ஏகதேச கண்டத்துவமாகலின், இக்கண்டத்துவ நாட்டம் அகன்ற

அவசரம் அந்நாட்டம், பஞ்சகோசங்களுக்கும் ஆதார வியாபகமாயுள்ள ஷெ ஞானத்தைக் கண்டத்துவமாக நாடுமன்றே? இதனால், அந்நாட்டம் கண்டத்துவ மென்பதற்கு முரணென்னே? இவ்வேகதேச சுயம்பு நாட்டமும், அந்த ஞானமாகிய போதப்பொருளை ஏகதேசமாக நாடிய நாட்டம் முதிரமுதிர அந்த ஞானகாரப்படுதற்கு இடனுகுமன்றே? அவ்வாகார மும் முதிர முதிர அந்த ஞானம் எத்துணைத்தாக விருக்கின்றதோ, அதாவது அகண்டபூரண மெனப்படுவது, அத்துணைத்தாக வியாபிக்குமன்றே? அங்ஙனம் வியாபித்தலே அகண்டபூரண நாட்டமாமென்க. இவற்றின்கண் இன்னும் ஐயமுளதேல் கூறுதும்.

கடோபாதி தோற்றமுள்ள ஞான்று எங்குமாயுள்ள மகாகாசமானது, அக்கடத்துணை வளைபட்டதுபோ லிருக்கு மன்றே? அவ்வேகதேச கடவடிவை நாடி இருந்தநாட்டம் நீடித்த பழக்கமாகலின், அவ்வேகதேச நாட்டம் தவிர்ந்து அதனுள் வளைபட்டதுபோலிருக்கும் வெளியில் விழுஞான்று, ஏகதேசமாக விழுமா? அன்றிப் பூரணமாக விழுமா? அந்நாட்டம் பூரணமாக விழுகிறதற்குப் பழக்க முதிர்ந்தாலன்றே? ஏகதேசமாக முன்ஞான்று பழகியதால் பின்ஞான்றும் ஏகதேசமாக நாடவேண்டி வரும். இதுபோல் உபாதித்திரய ஏகதேச நாட்டம் தவிர்ந்து சிதாகாசத்தைக் கண்டு சில ஞான்று பழகுங்காறும் அந்நாட்டம் ஏகதேசப்பட்டிருக்கு மன்றே? உபாதி நாட்டம் தவிர்ந்தபோதே பூரணநாட்டம் வாய்க்குமேயெனின், பலஞான்றும் ஞானப்பியாசம் செய்து தெளியவேண்டு மென்பானேன்? என்னே?

ஞானவாசிட்டம்.

"ஊனமிலா ஞானநூல் விசாரத் தாலே
யுயர்வீடு நண்ணுமென லுண்மை யன்றே

தானறியு மனுபூதி ஞான நன்னூல்
சற்குருவிம் மூவகையுந் தம்மிலொத்தே
யானவகை யியற்றில்விடா தான்மாத் தோன்று
மற்பவறி வினர்கற்ற வரிய மெய்நூ
லீனமுறு மடமைதரு மிதுபோன் மற்ற
வெந்தநூல் களுமடமை யியற்று தன்றே." என்றும்,

வைராக்கிய தீபம்.

"திரிவித வுலகத் தரிதொரு ஞானித்
தேர்விடத் தென்றுமோ ரொன்றை
யுரைசெயிற் பிரம வித்தையொத் தரிதோ
வென்றுமிவ் வுலகுரைப் பதலு
லரிசொல்கீ தையிலும் பிரமசா தகரி
னுர்க்குள வருத்தமென் பதனுற்
பெரியதோர் வருத்த மெனைமறை துணிந்தப்
பிரமகா னெனவிருத் தலினே."

என்றும் கூறியவாற்றுற் காண்க.

வியாபக விளக்க இலட்சியார்த்த நாட்டம் வந்தும், அந் நாட்டம் பரிபூரணமாக நிலைக்குங்காறும், அஞ்ஞானம் சந்தே கம் விபரீதம் என்னும் இம்மூன்றும் வந்துவந்து தாக்கு மன் றே? தாக்குந்தோறும் அவற்றைக் கெடித்தற்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் இம்மும்முயற்சியும் விடாது பன்ஞான்றும் நிகழவேண்டுவது திண்ணமாகலின், சைபூரண வியாபக நாட்டம் எளிதில் வராதென்க. இதுநிற்க, இவ்வியா பக விளக்கம் தூலமூதல் அவித்தைகாறும் உள்ள வியட்டிதத் துவக் குழாங்க ளனைத்தினையும் அன்மையெனவும், இன்மை யெனவும், பொருள் படுமாறு காரணகாரிய ரூபித்தாக ஆராய்ந்து சென்ற முடிவில் நின்று சதோதயமாய்ப் பிரகா சிக்கின்றமையால், நீ என்னும் தொம்பத இலட்சியார்த்த கூடஸ்த னெனப்படுமா? அன்றி வேறெனப்படுமா? கூட

ஸ்த னெனப்படுமெனின், இவ்விளக்கத்திற்குக்கூடஸ்தனென் பானேன்? மூடதூல முதல் அவித்தைகாறும் சூக்குமம் சூக் குமமாக ஆராய்ந்து ஆராய்ந்து உட்சென்ற முடிவில் அதி சூக்குமமாய் வெளிப்பட்டு விரிந்த இரகசியப் பொருளாகலினு லென்க. இது அவத்தாத்திரய விலட்சணமாகலின், பிரத்திய காத்ம சொரூபமு மெனப்படும். இப்பிரத்தியகாத்ம சொரு பம், ஒவ்வொருவரது உள்ளத்தையன்றி இன்றெனப்படு மோ? படாததால்,

உத்தமவாதநூல்.

"உள்ளஞ் சுயஞ்சோதி யொவ்வொரு வர்க்குமெனி
னுள்ளபடி காணும்வகை யோராதே – கள்ளமதக்
கற்பனைய தாக்கியதைக் காணுவதோ நும்புலமை
சொற்கடங்காச்சக் கேதுயர்ந்தோர் சொல்."

என்றருளி யிருக்கின்றது. அவ்வவ் வுள்ளத்தின் கண்ணும் காலம் தேசம் வத்துக்களாக விடாது உதிக்கின்றதுஞ் விள ங்குகின்றதும் மறைகின்றதும் மறைந்தவை மீண்டும் அவ் வுள்ளமாகின்றதுமா யிருக்கின்றதால்,

ஞானவாசிட்டம்.

"எழுதுவோனு மெழுதிடமு மெதிர்காண்பொருளு மிலத்தாகி
வழுவிலாத வீண்ணிடையே வந்துதோன்று மோவியந்தான்
பழுதின்மேவுந் தனேத்தானே பாராரிற்கும் பலபொறியு
நழுவுதுயிலி னுலண்றி நனவான்மேவுங் கனவொக்கும்."

என்றும் அருளி இருக்கின்றது. சிந்தையானது வியாபக வடி வென்பதற்கு உதாரணம்,

ஞானவாசிட்டம்.

"தாலுகு மிகநொய்தா மாகாயத்திற்
சுகத்திரளாஞ் சித்திரத்தைத் தானேகோட்டு

மாஞுத வுலகமெலாந் தனதுசோதி
யாதலினு லதற்குவே றயலொன்றில்லை
நீநானுஞ் சகபேத வடிவந்தானு
நிற்கின்ற வதன்வடிவாய் நீங்காதென்று
நானுவாம் பொருட்புணர்வா னடந்ததாகு
நடக்கவிட மிலாமையினு னடவாதாகும்." என்றும்,

பாடுதுறை.

"பற்றற்று நின்றேமென் றூதேடா காளம்
பார்ப்பறப் பார்த்தோமென் றூதேடா காள
மூற்றவு ணர்வேயென் றூதேடா காள
மூள்ளொளி யாஞேமென் றூதேடா காளம்." என்றும்,

"அஞ்ஞான காரிய மனேத்து மறவிட்டு
விஞ்ஞான மாஞேமென் றுந்தீபற
வெளியாகி நின்றேமென் றுந்தீபற."

என்றும் கூறியவாற்றுற் காண்க.

உபாதி சகிதமாக நின்று நிகழும் எண்ணரிய உயிர்க ளது உள்ளமானது அதாவது தத்தம் சிந்தையானது வியா பகமாகவும் உபதானமாகவும் விளக்கமாகவும் நித்தியமாகவும் சாட்சியாகவு மிருக்கின்றது சத்தியமான அனுபவமா யிரு க்க, அவ்வொவ்வோருயிரும் நான் நானென்பதற்குப் பொ ருள் இதையன்றி யாதிருக்கின்றது ? உயிர்கள் பலவாயினும் அவைகளுக்கு நானென்னும் இவ்வகம்பொருள் ஒன்றுயிருக் கின்றதன்றே ? இவ்வொன்றையன்றே எவ்வுயிரும் நான் நானென வழங்குகின்றன. அங்ஙனம் வழங்கும் இவ்வகம் பொருள் எவ்வுயிர்க்கும் பொருத்தமுற் றிருக்கின்றதாலன் றே,

ஞானவாசிட்டம்.

"அகமகமென் றனேத்துயிரி னிடத்துமிருந்
தனவரத முரைப்ப தாகி

நிகழொளியா யான்மதத் துவமான
சொருபத்தை நினைத்தல் செய்வாங்
திகழிதய குகையுறையுந் தேவன தயை
விட்டயலே தெய்வந தேடன்
மிகவரிய கவத்துவத்தை யெறிந்துசிறு
மணிதேடும் வேட்கை போலாம்." என்றும்,

"தீவினையெல் லாமறுத்து மங்கலமெல்
லாமுதவுந் தேவபூசை
யாவதெனக் கேட்டலுமே யருள்செய்வான்
றெய்வநதா னியாதென் றோதிற்
கேவலமே யரியல்ல வானல்ல
பூதவுடற் கிடைத்த தல்ல
வோவுமன மன்றடியு முடியுமிலாச்
செயப்படா வுணர்வே தெய்வம்." என்றும்,

அருளியிருக்கின்றது. அன்றியும், ஒவ்வோருயிரும் இவ்வகம் பொருளே அபரோட்சமாகக்கொண்டு பல கற்பமும் பூசிதது அதுவாக வேண்டுவது அவசியமிருக்கின்றதால்,

ஞானவாசிட்டம்.

"தேகமுதற் பிரிவுகளாய்ச் சிறியனவாம் பொருள்களிலத்
தெய்வமுண்டோ
பாகமறப் பணிமையற வடிமுடிவற் றுளவுணர்வே
பரமபோத
மாகலினு லதுதெய்வ மருச்சித்தற் குரித்தாகு
மறிவிலாத
மூகருக்கு வடிவுமுத லருச்சனையே யியல்பென்று
மொழியுமன்றே."

என்றும் அருளியிருக்கின்றது.

சுருதி உத்தி அனுபவங்களால் அகம்பொருள் இங்ஙன மீருக்க, நாம் ஒவ்வொருவரும் எக்கிருத்தியங்களையும் எப் போகங்களையும் அனுபவித்தற்கு நான் நானென இவ்வாபாச போதங்க ளெழுந்தோறும் அவ்வப்போத நாட்டங்கள் அதி ட்டான நானென்னும் ஆதார அப்பெரும்போதத்தில் விழ வேண்டுமா ? அன்றித் தூலமுதலிய இவ்வுபாதித்திரயங்கள் மேல்வந்து விழவேண்டுமா? அவ்வாதாரப் பெரும் போதத்தி லன்றே வந்து விழவேண்டும். அங்ஙனம் விழும் இங்நாட் டம் அபரோட்சத்தில் இது நான் இது நானெனவும்,பரோட் சத்தில் அது நான் அது நானெனவு மாகலின், அபரோட்ச மாக விழுந்து பழகுபவரை அவர்போன்றூர் மக்கடாமே ஆறறிவுயிரே என்றருளி யிருக்கின்றனர். அன்றியும்,

குறள்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லே யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

எனவும் மகாவாக்கியம் பிறந்திருக்கின்றது. இவற்றால் அப ரோட்சமாக அப்பியாசிப்பவர்கள் மனிதரெனப் படுவரெ னின், அவத்தாத்திரயங் கடந்து பரோட்சமாக அப்பியா சிப்பவர்கள் என்னவெனப்படுவர்? போலிமனித ரெனப்படுவ ரன்றே ? இவ்வப்பியாசிகளே போலி மனிதரெனின், அவத் தாத்திரயங்களில் கைப்புறுமலும் அயர்வுறுமலும் பரோட்ச அப்பியாசத்துக்குக் கிஞ்சித்தும் இணங்காமலும் கல்வி கேள்விகளிலேயே மூற்றும் மிதக்திருப்பவர்கள் என்னவென ப்படுவரோ தெரிகிலம்? ஆகலின் ஒவ்வொருவரும் காமரூபங் கள் நான் எனதாகத் தோன்றுந்தோறும் இவற்றை நான் என தன்றென அகற்றியகற்றி ஷி ஆதாரப் பெரும் போதத்தில் அபரோட்சமாக விழாவிடினும், பரோட்சமாகவேனும் தத்

தம் நாட்டம் விழுந்தழுந்த வேண்டுவதே திண்ணமாயின்? இவ்வாராய்ச்சிக்கண் இதனினும் கூறவேண்டுவது யாமறிகில மென்க.

முன்ஞான்று விடயமுதல் இஞ்ஞான்று இருப்பாகத் தேர்ந்த இச்சாட்சிகாறும் விரிந்து வந்த ஆராய்ச்சியைத் தொகுத்து யூகித்தல் எங்ஙனமெனின், சத்தமுதலிய ஐந்து விடயங்களும் எதற்குத் தோற்றுகின்றதென ஆராய்ந்துழி, அவ்வைந்து விடயங்களையும் பிறிதின் கிழமைகளாகக் கொண்டுணர்ந்துவரும் ஐம்பொறிகளெனத் தேர்ந்தன. அதனால், அவ்வைம்பொறிகளும் அறிவாயிற்று. ஆகவே, பின்ஞான்று அவ்வைம்பொறிகளையும் ஆராய்ந்துழி, அவைகள் அறியாமையாய் முடிந்தன. அதன் பின்ஞான்று அறிவென்ப தியாதென ஆராய்ந்து சென்றுழி, ஐந்து பொறிகளைப் பிறிதின் கிழமைகளாகக்கொண்டு உணர்ந்துவரும் அந்தக்கரணங்களெனத்தேர்ந்தன. அதனால், அவ்வந்தக்கரணங்கள் அறிவாயிற்று. ஆகவே, பின்ஞான்று அவ்வந்தக்கரணங்களை ஆராய்ந்துழி அவைகள் அறியாமையாய் முடிந்தன. அதன் பின்ஞான்று அறிவென்ப தியாதென ஆராய்ந்து சென்றுழி ஐந்து அந்தக்கரணங்களைப் பிறிதின் கிழமைகளாகக் கொண்டுணர்ந்துவரும் சீவபோதமெனத் தேர்ந்தது. அதனால் அச்சீவபோதம் அறிவாயிற்று. ஆகவே, பின்ஞான்று அச்சீவபோதத்தை ஆராய்ந்துழி அஃது அறியாமையாய் முடிந்தது. அதன் பின்ஞான்று அறிவென்ப தியாதென ஆராய்ந்து சென்றுழி ஐந்து சீவபோதத்தைப் பிறிதின் கிழமையாகக் கொண்டுணர்ந்துவரும் ஓர் சாட்சிபோதமெனத் தேர்ந்தது. அதனால் அச்சாட்சிபோதம் அறிவாயிற்று. ஆகவே, பின்ஞான்று அப்போதத்தை ஆராய்ந்துழி, ஒளியை விளக்குதற்கு வேறோர் ஒளி இல்லாவாறுபோல், ஐந்து சாட்சியைவிளக்கி உணர்தற்கு

வேறோர் உணர்வு கிஞ்சித்துமின்றித் தான் மாத்திரமாக நின்று ஷெ விடயமுதல் சீவபோதமாகிய அவித்தைகாறுமாக நிகழும் அறிவறியாமை அடுக்குப் பேதங்களை ஒருங்கே தோய்ந்தும் தோயாதுமாய் அவை அனைத்திற்கும் சாட்சியாய் நின்று தன்னைச் சிற்பிரகாசமாயுணரும் உணர்வுவடிவே ஷெ அறிவறியாமை ரகித அகம்பொருளாகவே முடிந்ததென்க. இதனால் என்ன ஆயிற்றெனின், அறிவுக்குமேல் அறிவிருக்கின்றதென்னும் ஆகமபட்சத்தைப் பூர்வபட்சமாக்கி, ஷெ விடய முதல் அவித்தைகாறுமாக நிகழும் அறிவறியாமை அனைத்துள் ஒன்றேனும் தானன்றெனவும், தன்னையன்றி அவற்றுள் ஒன்றேனு மின்றெனவுமாகித் தானே தானுயிற்றென்க. தானே தானுயிருத்தல் இயற்கையாயின், இடைஞான்று அறிவறியாமைப் பேதம் வந்ததென்னையெனின், இஃது கயிற்றின்கண் அரவென்பது வந்ததென்னையென வினவுவதுபோலாமென்க. ஷெ விடயமுதல் சாட்சிகாறு மூள்ளனவற்றிற் குதாரணம்.

உபநிடதம்.

"சத்தமுத லைந்தனையும் பொறிகளறி யும்பொறிக
டம்மைமத் தாளு
யொத்தகர ணமதறியுங் காரணத்தை யறியுமுயி
ருயிரைத் தானு
நித்தியா யிருந்தறியுஞ் சாட்சியகண் டாகார
நீங்கி மேலா
யித்தனையும் பகுத்தறியு மறிவுவடி வாயிருப்ப
தியல்ப தாமே." என்றும்,

"விடயமறிக் திடும்பொறிகள் விட்ய மாமோ
மிக்கபொறி யறிகரணம் பொறிக ளாமோ

வடையவறி சீவனந்தக் கரண மாமோ
வதனேயறிந் திடுஞ்சாட்சி சீவ ஞமோ
தடையறவொன் றினேயறியு மொன்று மேலாஞ்
சாட்சியையொன் ருலறியத் தகுமோ தானு
யிடையறநின் றிலகுமெனி னதனேக் காண்டற்
கேதுண்டா மதுவாகி யிருந்து காணே.''

எனக் கூறியவாற்றுற் காண்க.

ஐந்தாவது

கூடஸ்த சைதன்னிய இலட்சியார்த்த விளக்கம்

முற்றிற்று.

ஆ ரூ வ து

துவைத சிதாரோப ஆராய்ச்சி விளக்கம்.

வே ஸ் பா.

"இந்தவா ராய்ச்சியினி லேய்ந்திலருஞ் சித்திரண்டென்
றந்தமின்றிச் சாதிக்கு மாகமந்தா - னந்த
வறிவிரண்டுங் கற்பனைக ளாகிமே லொன்றே
யறிவென்னத் தேர்ந்திடுமே யாங்கு."

மூன்ஞான்று இருப்பது ஓர் அறிவெனக் கூறியது உண்மையாயிருக்க, ஓழுவிலொடுக்க முதலிய அரிய நூல்களில்,

"காணு மறிவுநீ காட்டறிவு நாமவற்றைக்
காணக் கழலுங் கழற்றியிலே - நாணி
நமைத்திரும்பிப் பாராதே நான்றனென் ஞதே
யமிழ்த்துகர கம்போனிற் பாய்."

எனக்கூறியிருப்பா னேனெனின் அங்ஙனம் கூறியிருக்கின்றதைப்பற்றி நன்கு விளக்குதும். எங்ஙனமெனின், அறிவென்பதற்குமேல், வேறே ஓர் அறிவுண்டென்பது, முதலறிவு அறியுமறிவும் மேலறிவு அறிவிக்குமறிவும்ஆகின்றன. முதலறிவை யறிவித்தற்கு மேலறிவு ஒன்றிருப்பது போல, அம்மேலறிவை யறிவித்தற்கு மேலறிவொன் றிருக்க வேண்டுமன்றே? மேலறிவை அறிவித்தற்கு மேலறிவொன் றில்லையெனின், முதலறிவை அறிவித்தற்கு மேலறிவொன் று இல்லையெனப் படாதோ? படாதெனின், முதலறிவுக்கு மாத்திரம் எங்ஙனம் மேலறிவு உண்டெனப்படும்.அறிவென் பது, தனக்குச் சுசாதிகமும் விசாதிகமும் சுகதபேதமுமிருக்

கச் சம்மதித்ததாயின், அஃது அறியாமை யெனப்படும்? இங்ஙனமிருக்க ஈரறிவென்பதில் எது அறிவெனப்படும்? எது அறியாமை யெனப்படும்? முதலறிவு அறியாமையும் மேலறிவு அறிவுமெனப் படுமெனின்; சிற்றறிவு பேரறிவு பேதமின் றுகின்றன. இருக்கின்றதால் ஒன்றறிவாயும் ஒன்றறியாமையாயும் எங்ஙனம் ஏற்கப்படும்? மூன்ஞான்று சுசாதி விசாதி சுகதபேதம் மூன்றையும் ஏலாததே அறிவெனச் சம்மதித்திருக்க, பின்ஞான்று முதலறிவாகிற அறியாமையிருக்கச் சம்மதித்த தென்னை? அவ்வறியாமை மேலறிவுக்கு விசாதிகமன்றே? அன்றியும், சிற்றறிவு பேரறிவென்பதில் சிற்றறிவாவது மூண்டன்றே? அச்சிற்றறிவு சுசாதி பேதமன்றே? இச்சுசாதிபேதம் பிரமன்முதல் பிபீலிகம் இறுவாயுள்ள எண்ணரிய கோடாகோடிகட்கும் மிஞ்சியிருக்கின்றனவன்றே?. அன்றியும், பாஞ்சபூத பவுதிக முதலியனவாகத் தோன்றும் இப்பிரபஞ்சம் விசாதிபேதங்களன்றே? முதலறிவு அறியாமையென்னின், இம்முதலறிவு எண்ணரிய தாயிருக்கின்றமையின், விசாதிபேதம் அனந்த பேதங்களாயும், அங்ஙனமின்றி அம்முதலறிவு சிற்றறிவென்னின், அனந்த சுசாதிபேதங்களாயும் முடிகின்றன. முடிவதால் எங்ஙனம் மேலறிவென்றது அறிவெனப்படும்? முதலறிவு அறிவாயின், மேலறிவாகிற சுசாதிபேதமும் பிரபஞ்சமாகிற விசாதிபேதங்களும் இருக்கலாமா? அனறி, மேலறிவு அறிவாயின் முதலறிவாகிற சுசாதிபேதங்களும் பிரபஞ்சமாகிற விசாதிபேதங்களும் இருக்கலாமா? வத்துவெனப்படுவது ஒப்பும் உயர்வும் தாழ்வு மற்றதன்றே? இத்துணைத் தோடங்களிருக்க, அறிவுக்கு மேலறிவுண்டெனச் சம்மதித்து அறிவுக்கு மேலறிவு அறிவுக்கு மேலறிவெனச் சென்று சென்று ஈறின்றி அனவத்தாத் தோடமெய்துமே? இதற்கென்செய்தும்! இத்துணைக் கட்டங்களையும் நன்குணர்க.

சுசாதிமுதலிய பேதங்களுக்குத் திட்டாந்தமாவது:— மரத்துக்குத் தன்போன்ற மரம் வேறுயிருத்தல் சுசாதியும், அம்மரத்துக்குக் கல்முதலியவை மாறுயிருத்தல் விசாதியும், அம்மரத்தின்கண் தளிர் இலை சாகை முதலியனவாய் விட்டு நீங்காது அடங்கியிருத்தல் சுவகத பேதங்களுமா மென்க. இவ்வாறே தாட்டாந்தமாவது அறிவென்பதற்கு மேலாக வேனும் தாழ்வாகவேனும் சமமாகவேனும் தனக்கொப்பாக வேறறிவு ஒன்றுகவேனும் பலவாகவேனும் இருக்குமாயின் சுசாதியும், அவ்வறிவுக்கு அறியாமையும் பிரபஞ்சமும் வேறு யிருக்குமாயின் விசாதியும், அவ்வறிவு தான் சகுணமுற் றிருக்குமாயின் அஃது சுவகதபேதமுமா மென்க. இச்சுசாதி முதலிய மூன்று பேதங்களும் அறிவென்பதற் கின்றுகலின்,

சசிவர்ணபோதம்.

"மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாந்
தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே." என்றும்,

ஞானவாசிட்டம்.

"பொருகடலிற் றிரைமுதலாப் பிறந்த வெல்லாம்
புனலாகி விளங்காமற் புழுதி யாமோ
வொருபொருளாம் பிரமமாத் திரமேயல்லா
லுபயமெனுங் கற்பனைப்பே சொன்றுமில்லை
யெரியிடத்திற் சூடுமாத் திரமே யல்லா
லிரண்டுண்டோ வவ்வகைபோ லென்று மொன்றுஞ்
சரிதைகிரி யாயோகப் பதத்தின் முற்றிச்
சாதனங்க ணிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டும்."

என்றும் கூறியிருக்கின்றன.

ஓர் அறிவென்பதே சுவகதாதிபேத மிறந்திருக்கின்றதா யின், இரண்டாவதறிவு எங்ஙன் மிருக்கும்? வேற்றுக ஓரறிவே யிருத்தற்கு ஏதுவில்லையாயின், எண்ணரிய அறிவென்பது

இருத்தற்கு எங்ஙன மிடந்தரும்? இதனால் சரீரிவென வழங் குவது விவர்த்தமென்க. இதுகிற்க, சரீரிவென்பதைப்பற்றி இன்னுஞ் சற்றாகிக்குதும். முதலறிவு அறியுமறிவு மேலறிவு அறிவிக்கும் அறிவனரே ? அறியுமறிவு பொருளல்லவற் றைப் பொருளெனவும் பொருளைப் பொருளெனவு முணர் தல். அவ்யாவன:—தானல்லாததைத் தானெனவும் தன தல்லாததைத் தனதெனவும், தானெனலைத் தானெனவும் தனதெனலைத் தனதெனவும் கோடல். இவ்விரண்டியக்கமும் யார்பாலது? முதலறிவாகிய உயிரின்பாலதெனின், இவ்வுயி ருக்குமேல் வேறுகவோர் அறிவிருப்பது யாதுக்கு? முதலறி வுக்கு அறிவித்தற்கெனின், அவ்வறிவு அறிவிக்காதுழி, உயி ரென்பது எங்ஙனம் தானே அறியும்? இவற்றால், மேலறிவு ஏவுதற்கர்த்தா கீழறிவு இயற்றுதற் கர்த்தாவாகின்றதன்றே? ஏவுதற் கர்த்தா கருத்துப்படி இயற்றுதற் கர்த்தா நடக்கு தல் யாதுக்கு? இவ்வியற்றுதற் கர்த்தாவி னியக்கம் பிறப் பிறீப் பெய்துதற்கும், அவை யகல வீடெய்துதற்குமெனின், இவ்விருவகைப் பயனையும் இந்தக் கர்த்தா அருந்துகிறதற்கு அந்தக் கர்த்தா இவ்விருவித வேலையையும், அவையாவன - பொருளல்லவற்றைப் பொருளென்றும் பொருளைப் பொரு ளென்றும் உணரும் கிருத்தியங்களையும் செய்வித்துக்கொ ண்டு வருவதாக்கும்! இங்ஙனம் மேலொன்று செய்வித்துக் கொண்டு வருவதைக் கண்டுபிடித்த அதனாலாக்கும் காணு மறிவு ஈ காட்டறிவு காமெனத் திருவாய்மலர்ந்தருளியது!

மேலும் பொருளல்லவற்றைப் பொருளென் றுணரு மாறு உணர்த்துந் திரோபாவ சத்தியினால் மயக்குவித்தலும், பொருளைப் பொருளென் றுணருமாறு உணர்த்தும் அனுக் கிரக சத்தியினால் தெளிவித்தலுமாயின், உயிருக்குத் தனக் கென்று என்ன கர்த்தத்துவ மிருக்கின்றது. சிறிதேனு மில்

லையே! உயிர் இங்ஙன மகர்த்தத்துவமா யிருப்பதற்குத் தா னே மேலறிவொன் றிருக்கின்றது? "சும்மாவிருந்த தாரை யை யூதிக்கெடுத்தாணடி." என்னும் பழமொழிக் கிணங்க, அஞதியாயுள்ள மாயைக்கண் அஞதியாக வாளாவிருந்த உயி ரை வெளியி லிழுத்துவிட்டு இத்தனை கோலஞ் செய்துகொ ண்டு இன்னும் வருகின்றதென்பது பொருத்தமாக விருக்கின் றதா? அவ்விறைவன் தனது காருணியத்தால் இழுத்துச் செய்வித்ததேயன்றி விவர்த்தமாக வல்லவேயெனின், இக் கருணை உயிரின்மேல் இடையில் வைத்ததற்கு ஏதுவென்னை? அன்றியும், இக்கருணை வைத்திருத்தற்கு முன்னான்று இவ் வுயிர் என்ன நன்மை செய்தது? அங்ஙனம் தொ மாயைக்கண் தான் செய்வதற்குத் தனக்குபாதிசகித மில்லையே? இல்லா விடினும், எவ்விதத்தினாலோ நன்மை செய்து விட்டதாகவே ஏற்போமெனின், அவ்விறை இறைவனது அதுக்கிரக சத்தி யிற் சேர்ந்ததன்றே? இதனால் அக்கருணை இடையில் வந்த தன்று. அக்கருணை இறைவனுக்கு அனாதியே இருக்கின்ற தெனின், அவ் வியற்கைக்கருணை உயிரைப்பற்றியதன்றே? அங்ஙனம் பற்றியிருக்குஞான்று அனாதியிலேயே உயிர் வீடே ய்தி யிருக்க வேண்டுமே! இன்மையால அக்கருணை இயற்கையு மன்று செயற்கையு மன்று. இவற்றுற் கருணையென வழங்கு வது விவர்த்தமென் றுயிற்றென்க. இது நிற்க, ஈறறிவென வழங்குவது உளதாயின் அது சுருதிக்கொத்ததா? அன்றி ஒவ்வாததா? ஒத்ததெனின், அற்பசுருதிக் கொத்ததா? அன் றிப் பிரபல சுருதிக் கொத்ததா? பிரபல சுருதிக் கொத்ததெ னின்,

தாயுமானவர்.

"சந்ததமு மெனதுசெய னினதுசெய லியானெனுந்
தன்மைநினை யன்றி யில்லாத் தன்மையால் வேறலேன்
வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே." என்றும்,

திருவாசகம்.

"வானுகி மண்ணுகி வளியாகி யொளியாகி
யூனுகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்." என்றும்,

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

"ஊனுயுயி ராளுயுட லாளுயுல காளுய்
வானுய்நில னுனுய்கட லாளுய்." என்றும்,

வைராக்கிய சதகம்.

"புகல ரும்பரப் பிரமமாங் கடறனிற்
புணர்பரைத் திரையீசன்
சகமெ மாருயி ரெனுநுரை யாதிக
டந்துமாற் றிடுமென்றே
பகரு ஞான்மறை யெனினதி லெதையெதைப்
பற்றுவாம் விடுகிற்பாம்
சுகசொ ரூபமே யனைத்து மென்றகற்றுதி
துவிதபா வனை நெஞ்சே." என்றும்,

இதுவுமது.

"செய்யு நந்தொழி லந்தொழி லியாமுமச்
சிவனது வடிவென்றே
யைய மற்றுணராதியா னெனுஞ் செருக்கடைந்து
நாடொறு நெஞ்சே, நைவதென்னைநீ." என்றும்,

குறள்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு." என்றும்,

இங்ஙனம் அநேக நூல்களும் இறைவனையன்றி உயிரின் றெனவும், வேருகத் தோன்றினும் ஓர் முதலன்றெனவும், இங்ஙனமிருக்கும் உயிர் அவ்விறைவனு மன்றெனவும் கூறியிருக்கின்றவை அற்பசருதிகளாக்கும்! அன்றியும், சரறிவென்

பது உளதெனச் சம்மதித்த ஷை சுருதிகள் இவ்வுலகானு பவத்துக் கியைந்திருக்கின்றதே யெனின், ஈரறிவென்பது கற்பிதமென்ற சுருதிக ளனுபவத்துக் கியையாததாக்கும்! இரண்டறிவெனக் கூறும் சுருதிகள் அனுபவத்துக் கொவ்வி யதோடு யுக்திக்கும் ஒத்திருக்க வேண்டுமன்றே? அவ் யுக்திப் பிரமாணத்தைப்பற்றிச் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், ஈரறிவெனச் சம்மதித்தது வியட்டி சமட்டி உபாதி குணம் தொழில்களாலன்றே? வியட்டி உபாதி குணம் தொழில்களென்பவை தனித்தனியாயிருக்கின்ற தூலசூக்கும காரணங்கள் உபாதிகளும், கிஞ்சிக்ஞத்துவம் குணமும் இராகாதி சேட்டைகள் தொழில்களுமாம். சமட்டி உபாதி குணம் தொழில்களென்பவை ஷை யாவும் ஒருங்கு கூடியிருக்கின்ற தூலசூக்கும காரணங்கள் உபாதிகளும், சர்வக்ஞத்துவ முதலியவை குணங்களும், சிருட்டியாதிகள் தொழிலகளுமாம். இவைகள் எங்ஙனமெனின், தனிமரம் வியட்டியென்பதும் பலமரங்களின் சேர்க்கை சமட்டி யென்பதுமாம். தனித்தனியாயுள்ள வியட்டி உபாதி குணம் தொழிலுக்குப் பிரமன் முதல் பிபீலிகம் ஈறுதியாக ஒவ்வோர் வியட்டி சித்துப்பொருள் இருக்குமாறு போல், சர்வமாயுள்ள சமட்டி உபாதி குணம் தொழிலுக்குச் சமட்டிச் சித்துப்பொரு ளொன்றிருக்க வேண்டுமன்றே? அச்சமட்டியாகிய சித்துப்பொருள் ஈசுரனெனவும், பேரறிவெனவும், ஆண்டானெனவும் பொருள் படுகின்றது. வியட்டியாகிய சித்துப்பொருள் சீவனெனவும் சிற்றறிவெனவும் அடிமையெனவும் பொருள்படுகின்றது. ஷை வியட்டி சமட்டியாகிய உபாதி குணம் தொழில்கள் ஈரறிவாகிய முதல்களுக்கா? அன்றி ஈரறிவாகிய முதல்கள் உபாதி குணம் தொழில்களுக்கா? உபாதி குணம் தொழில்களுக்கே ஈரறிவகளுமெனின், ஆழிக்கு விரலென்றற்போ லாகின்றது. அங்ஙனமாயின், ஆழியானது கைவிரலைக்கோட்டல் யாதுக்கு? ஆழியா

கியதான் விரலால் அலங்காரமா யிருத்தற்காக்கும்! இங்ஙனமே, ஷ இருவித உபாதி குணம் தொழில்களும் அவ்வீரறிவையுங்கொண்டு யாது செய்கின்றன? பந்தமுத்திக் கியைந்தசாதனங்களே இயற்றி அப்பந்தமுத்தியையளய்துதற்காக்கும்? இவைகள் கிஞ்சித்தும் பொருத்தமா யிருக்கின்றனவா? இல்லேயே. விரலுக்கு ஆழியென்றுற் பொருந்தும். எங்ஙனமெனின், விரலானது ஆழியைக்கொண்டு தான் அலங்காரமாதற்கியைகின்றது. இதுபோல், ஈரறிவுக்கும் உபாதி குணம் தொழில்களாகலின் அவ்வவ் வுபாதியாதிகளால் சிற்றறிவு பந்தமுத்திகளே எய்துதற்கும் பேரறிவு அப்பந்தமுத்திகளே ஈதற்கும் பொருந்துகின்றன. அன்றியும், ஆழியென்பது விரலுக்காயினும், இவ்வாழி விரலெனப் படாவாறுபோல, ஷ இருவித உபாதி குணம் தொழில்கள் ஈரறிவுகட்காயினும் அவ்வுபாதியாதிகள் ஈரறிவெனப் படாவன்றே? இவற்றால் அறிவுவேறும் அறியப்படும் உபாதியாதிகள் வேறாகின்றன.

ஆகவே இருவித உபாதி குணம் தொழில்களையும் நீக்குழி, அறிவு இரண்டென்னும் பேதமிருக்கக் காட்டுதற்கியையுமோ? ஈரறிவெனக் கொண்டது உபாதி குணம் தொழில் நோக்கத்திலேயா? அன்றி அறிவு நோக்கத்திலேயா? அறிவு நோக்கத்திலேயேயெனின், ஆகாயதிருட்டியில் ஆகாயம் இரண்டுபட்டிருக்குமாயின் அறிவு திருட்டியில் அறிவு இரண்டென்பதற்கு முரணின்று. கடோபாதி மேகோபாதிகள் திருட்டியில் ஆகாயம் இரண்டுபட்டதுபோலிருப்பினும் இரண்டெனப்படுமா? படாதன்றே? அதுபோல், வியட்டி சமட்டி உபாதி குணம் தொழில் திருட்டிகளில் இரண்டுபட்டதுபோலிருப்பதால் இரண்டாயிற்றா? இல்லேயே! இஃதிங்ஙனம் நிற்க.

இஃது உயிர் பலவன்றெனல்.

உயிர் ஒன்றென்பதா? அன்றிப் பலவென்பதா? பல வென்பதுதா னெனின், யாதிஞ் லேற்றற்பாலது? உயிர்களி ஞலேயே ஏற்றதெனின், உயிரைக்கண்டுழி ஏற்றற்பாலதா? அன்றிக் காணுதுழி ஏற்றற்பாலதா? கண்டுழியே ஏற்றதெ னின், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி மூர்ச்சை மரணமாகிய இவ்வஞ்ஞானவத்தைகள் ஐந்துள் எந்த அவத்தையிற் கண் டேற்றது? அன்றியும், ஞானவத்தைகளாகிய துரியம் துரி யாதீதம் இரண்டில் எந்த அவத்தையிற் கண்டேற்றது? கெ அஞ்ஞானவத்தையிற் கண்டது தூல முதலிய உபாதித்திர யங்களேயன்றி யில்லையே! ஞானவத்தைகளிலோ காலதேச வத்து பரிச்சேதரகித சுயம்பிரகாசத்தையன்றி இல்லையே! ஆகலின், உயிரைக் கண்டு பலவென் றேற்றதன்று. அன்றி யும், உயிரைப் பலவென் றேற்றது ஒவ்வொன்றும் எத்தணை எத்தணையாக ஏற்றது? உடற்றணையாக ஏற்றதெனின், மூவித உடலுள் எந்த உடற்றணையாக ஏற்றது? தூலவுட றணையாக ஏற்றதெனின், இத்தூலவுட லெத்தணையது? இஃது பருவத்துக்கு ஓரளவா யிருக்கின்றதே? அப்பரு வபேதங்களில் இஃதெப்பருவத் தணையது?

திருவாசகம்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்து
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்."

என்று திருவாய்மலர்ந்தருளியதை ஏற்கற்பாலதாகலின், இப் பல பிறவிகளுள் எப்பிறவித்துணை யென்பது? அவ்வப் பிறவியும் ஒவ்வோர் பருவத்துணையா யிருக்கின்றதே! அவற் றுள் அவ்வவ்வுடல் எத்துணை யெனப்படும்? உடற்றுணை எத்துணை எத்துணைத்தாயினும் உயிர்கள் அணுத்துணைத் தாகலின் அவ்வவ் வுடல்களுள் ஏகதேசமாக நின்று இச்சா ஞானக் கிரியைகள் இயற்றி இயற்றி வருகின்றன. அங்ஙனம் இயற்றி வருகின்றது ஓர் அறை வீட்டின்கண் ஏகதேசமா யிருக்கும் ஓர் சிறிய தீபமானது அவ்வீடு முழுதும் பொருள் களை விளக்குவதுபோலா மெனின், அவ்வறை வீட்டுத் தீபம் தனக்கணிமைக்கண் ஒளி மிகுதியாயும் சேய்மைக்கண் மழு க்கமாயும் இடைக்கண் சமமாயும் விளங்குகின்றது.

அதுபோல் உபாதிகள்தோறும் ஏகதேச மேகதேசமாக நிற்கும் உயிர்களின் உணர்வு தத்தமக்கு அணிமைக்கண் மிகுதியாயும் சேய்மைக்கண் மழுக்கமாயும் இடைக்கண் சம மாயுமிருந்து விளங்கவேண்டுமே! அங்ஙனமில்லையே! பரிச வுணர்வில்லாத இடமும் உண்டோ! தேகமுழுதும் வியாபித்து நின்றுணர்வது ஒருபடித்தா யிருக்கின்றதே? உடலிருப்புப் பரிசவுணர்வின்கணன்றே? எங்கெங்கே பரிசவுணர்ச்சியின் றே அங்கங்கே அவ்வத்தேக மிருக்கட்டும். அன்றியும் உயிர் கள் அணுத்தன்மை யென்பது இயற்கை யெனப்படுவதா? அன்றிச் செயற்கையெனப்படுவதா? செயற்கை யெனப்படுவ தெனின், உயிர்கட் கியற்கையது யாதெனப்படும்? வியாபக த்துவமெனின், அவ்வியாபகம் இடையில் அணுத்தன்மை யாக வேண்டுவதின்று. அன்றியும், அவ்வியாபகம் அணுத் தன்மை யானதாகவே வைத்துக்கொள்வம். அணுத்தன் மைக்கு முன்ஞான்றிருந்த வியாபகங் கெட்டு அணுத்தன்மை யாயிற்றே? அன்றிக் கெடாதாயிற்றே? கெட்டே யாயிற்றெ

னின், மீண்டும் வியாபகமாகா திருக்கவேண்டும்? மீண்டும் வியாபக மாகாதாயின், பரத்தோடுகலந் தேகமாதற்குக் கூடா தே! வியாபகங் கெடாமலே அணுத்தன்மை யாயிற்றெனின், வியாபக மிருந்தவா றிருக்கின் அஃதெங்ஙனம் அணுத்தன் மை பெறும்? கயிறானது அரவுத்தன்மை பெற்றதுபோலா க்கும்! இடைக்கண்•அணுத்தன்மை வந்ததென் றேற்கின், அவ்விடைக்கண் வியாபகத்துவம் இன்றென்பதாகிப் பின் ஞான்று பரத்தோடு கலக்காத தோடம் வாய்க்குமெனக் கருதி அவ்வணுத்தன்மை இயற்கையதென் றேற்கினும், பரி பாக மூதிர்ச்சி வந்த பின்ஞான்று பரத்தோடு கலத்தலே யே லாததுடன் கிஞ்சிக்ஞத்துவமும் இயற்கைய தெனப்படும். அஃதியற்கையதாயின், திரிகால ஞானமாகிற சர்வக்ஞத்துவம் இடைக்கண் வாராதிருக்க வேண்டுமே! அந்த ஞானம் தவத் தால் வருகின்றதெனின், தவத்தாலேனும் இடைக்கண் வரு கின்றதால் கிஞ்சிக்ஞத்துவம் இயற்கை யென்பானேன்? இது நிற்க.

உயிரென்பது அருவப்பொருளா? அன்றி உருவப்பொ ருளா? அருவப்பொருளெனின், அருவம் உருவ உபாதிக்குட் கட்டுப்படுவது மூண்டா? படுவதுண்டெனின், அருவமா கிய இவ்வெளியானது எந்த உருவ வுபாதிக்குட் கட்டுப்பட் டது? இவ்வெளி சட அருவமாதலிற் கட்டுப்படுதற் கியை யாது, உயிர் சித்துருவமாகலிற் கட்டுப்படுதற் கியையுமெ னின், அவத்தாத்திரயம் உபாதித்திரயம் அபிமானத்திரயம் முதலியவைகள் எதன்பால் மாறி மாறிக் காணப்பட்டுக்கொ ண்டு வருகின்றன? எங்ஙனமெனின், தூலபாவந் தோன்றிய ஞான்று விசுவனென்கிற அபிமானியும் சாக்கிராவத்தையுந் தோன்றுகின்றன. அம் மூன்றும் தோன்றுஞான்றும் ஏனைய சூக்குமோபாதியும் தைசதனென்னும் அபிமானியும் சொப்

பஞ்சவத்தையும் காரணோபாதியும் பிராக்ஞனென்னும் அபிமானியும் சூழ்த்தியவத்தையும் இன்று. அச்சூக்குமோபாதி மூதலியவைகள் தோன்றும் ஞான்றும் கூட தூலம் விசுவன் சாக்கிரம் இம்மூன்றும் இன்று. இவை யனைத்தும் எங்கே உளதாயு மிலதாயும் தோன்றி மறைகின்றன? இங்ஙனம் தோன்றி மறையு மனைத்தும் சங்கற்பமாகிற நினைவெழுச்சிகளன்றே? இவ்வெழுச்சிகள் நானென்பதி லன்றே? அந்த நானென்பது கூட தோன்றி மறைபவைகட்குச் சாட்சி சைதன்னியமன்றே? இங்கே ஓர் வியட்டி உபாதி குணந் தொழில்களுக் காதாரம் நானென்னும் சாட்சி சைதன்னியம் ஒன்றிருப்பதுபோல ஆங்காங்கும் எண்ணரிய வியட்டி உபாதி குணம் தொழில்களுக்கும் ஆதார சாட்சி சைதன்னியங்களும் எண்ணரிதா யிருக்குமன்றே? ஆவ்வவ் வாதாரசாட்சி சைதன்னிய மனைத்தும் ஒன்றெனப்பட்டதா? அன்றிப் பலவெனப்பட்டதா? பலவெனப்பட்டதெனின், ஒரு நானென்னும் போதாதாரத்திற்கு எல்லே எத்துணையென்று ஏற்கப்பட்டது? கடோபாதிக ளனைத்தும் அகன்றுழி, அவ்வக் கடங்கடோறும் தண்டு தண்டாக மூன்ஞான்று காணப்பட்ட வெளியென்பது பலவா யிருக்கட்டுமே நானென்பது பலவாயிருக்க ஆங்காங்கும் அவத்தாத்திரய மூதலியனவாகத் தோன்றும் விகார திருட்டிக ளகன்றுழி, அவ்வவ் வவத்தாத்திரயங்கள் தோறும் தனித்தனி வெவ்வேறாக முன்ஞான்று காணப்பட்ட நானென்னும் ஆதாரமென்பது பலவா யிருக்கின்றதா? ஓர் வகுப்பாகிய அலேயாதிகட்கு எந்த சலப்பொருள் ஆதாரத்துவமா யிருக்கின்றதோ அந்த சலப்பொருள் ஒன்றேயன்றே பல வகுப்பாகிய அலேயாதிகட்கும் ஆதாரமாகியது? பலவகுப்பு அலேயாதிகள் எழுச்சியினுற் சலாதாரம் பலவாகுமா? ஆகாதன்றே? அலேயாதிகளாகிய ஆதேயங்களோடு சலாதாரமும் ஒருங்கே விளங்குவதால் இச்சலாதாரமானது

ஏகத்துவ மென்பதற்கு இழுக்கின்றது. ஆங்காங்கும் சலப் பொருள் விளங்காமலும் அதனைப் பாராமலும் நின்று அலை யாதிகளையே திருட்டித்துக்கொண் டிருக்கில் இச்சலாதாரம் பலவாகத்தானே மயங்கிக்கொண் டிருக்கவேண்டியது? மயங் கினும் மயங்காவிடினும் இச்சலாதாரம் எஞ்ஞான்றேனும் பலவென்பதற் கியையுமா?

இதுபோல், ஓர் வகுப்பாகிய அவத்தாத்திரய முதலிய கற்பனைகட்கு, எந்த ஞானென்னும் போதம் ஆதாரத்துவமா யிருக்கின்றதோ அந்தப் போதாதார மொனறேயன்றே பல வகுப்பாகிய அவத்தாத்திரய முதலியவைகட்கும் ஆதாரமாகி யது? பலவகுப்பாகிய அவத்தாத்திரய முதலியவைகளின் எழு ச்சியினால் அந்தப் போதாதாரம் பலவாகுமா? ஆகாதன்றே! அவத்தாத்திரய முதலிய ஆதேயங்களோடு அந்தப் போதா தாரம் சற்றும் விளங்காமையினால் அவ்வாதாரம் பலவாயிரு ப்பதுபோல் இழுக்குற்றது. ஆங்காங்கும் அந்தப் போதமான து விளங்கவும் அதைக்காணவும் நின்று இவ்வவத்தாத்திரய முதலியவைகளைத் திருட்டிக்கா திருந்திடில் அந்தப் போதா தாரம். பலவென மயங்கவேண்டி வருமோ? மயங்கினும் மயங் காவிடினும் அந்தப் போதாதாரம் பலவெனப்படுமா? படா தன்றே? அந்தப் போதாதாரம் ஏகமெனப்படுவது கற்பனைக ளாகிய அவத்தாத்திரய முதலியவற்று லாகலின், ஆரோபமு மாமென்க. இங்ஙனமிருப்பதால் பலவென்பது எஞ்ஞான்றும் இன்றென்ப தாயிற்று.

அன்றியும் ஞானென்னும் போதப்பொருள் பலவாயின் இருவித சமாதிக்கண் ஏகமா யிருப்பானேன்? அதனால் அந்த ஞானென்னும் போதப்பொருள் ஏகமாயின் ஈங்குப் பலவா யிருப்பானேன்? ஆங்கு ஏகமாயும் ஈங்கு அனேகமாயும் இருப்

பது யாதுகாரணம் பற்றி? நிரூபாதிகமானஞான்று ஏகமா யும் சோபாதிகமானஞான்று அனேகமாயும் இருக்கின்ற தெ னின், சோபாதிகமாகிய அஞ்ஞானதிசைக்கண் போதம் அனேகமென்பது அனுமான அளவையிலுமாமே. போதமா னது தன்னைப் பிரத்தியட்சமாகக் கண்டு அனுபவிக்கப்படு வது சமாதிகளாகிய ஞானதிசையி லன்றே? அந்த ஞான திசைக்கண் அப்போதம் பலவாயிருக்கட்டுமே! இதனால் அஞ் ஞானதிசைக்கண் ஏகமா யிருக்கட்டுமே! அங்ஙன மில்லையே! பலவென்பது அஞ்ஞான் திசைக்கண்ணும் ஏகமென்பது ஞானதிசைக்கண்ணு மாகின்றன. இத்திசைக்கண் பலவென் பது அவத்தாத்திரய முதலிய கற்பனைகளாலாகலின் இக்கற் பனைகளைக் கொண்டு போத ஆதாரம் பலவெனக் கணிப்பது தோற்ற அனுமானமன்றே? ஆகலின், போதம் பல ஆதார தேதங்களாக நிற்றல் ஆதேயமாகிய ஆரோபமும், அப்போ தம் ஏகமாக நிற்றல் ஆதாரமாகிய அதிட்டானமு மாயிற்று. ஆகவே, தனித்தனி ஆதாரச்சாட்சி சைதன்னியங்கட்கு மேல் சர்வாதாரச்சாட்சி சைதன்னியமே போதமெனப்பட் டிருத்தலின் வியட்டி சமட்டி அவத்தாத்திரயசகித ஆரோ பச் சிற்றறிவு பேரறிவென்பவை எஞ்ஞான்றும் இன்றென்ப தாயிற்றென்க. இவற்றிற் கூதாரணம்:—

கைவல்லிய நவநீதம்.

"அறிவுக்கு மறிவுசெய்யு மறிவுவே றுன்டென்றெண்ணு
மறிவற்ற குதர்க்கமூடர்க் கனுவத்தை பலமாத்தீரும்." என்றும்,

வேதாந்த சூளாமணி.

"சிவனெனு சன்கூட்டத் தன்பிரம மென்னச்
சித்துநான் காங்கடநீர்க் கதுவுறும்வெண் மீன்வான்

றாவுபணி நீர்விம்ப வனுமிதா காசஞ்
சொற்கடா விச்சின்ன காசமொடு மாவான்
மேவுமிமை யவற்றினுக்குத் திட்டாந்த முறையாம்.''

என்றுங் கூறியவாற்றுற் காண்க.

ஆ று வ து

துவைத சிதாரோப விளக்கம்

மு ற் றி ற் று.

ஏழாவது

துவைத இன்பாரோப ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சிக்க ணின்ப மிரண்டென்னல்
சந்ததமும் போலிகளாத் தானுகு—மந்தமிலாத்
தானனந் தப்பொருடான் றங்கிடுமே திண்ணமதா
யேனுகு மீங்கிதனுக் கேச்சு.

எங்ஙனமெனின், போதமென்ப தொன்றுயின், அப் போதத்தை மற்றோர் போதம் அணைந்துறுவழி அப்போத ஆனந்தம் எங்ஙனம் வெளிப்பட்டு மணமுறும்? ஓர் பெண் பால் தனக்கியைந்திருக்கும் நாயகனின்றித் தன்னைத்தானே தழுவி யணைந்து சுகிக்கக் கூடுமா? கூடாவழி, அவளது ஆனந்தம் எங்ஙனம் வெளிப்பட்டு மணமுறும்? இகத்திலேனும் பரத்திலேனும் இரண்டுபடாவழி இன்பவெழுச்சி என்பது கிஞ்சித்தேனும் உண்டாகுமா? உண்டாகாதாகலின், போத மென்பது இரண்டுபட்டே யிருக்கவேண்டுமெனின், தவமென்பது இரண்டெனப்படும். அவை காமியத்தவமெனவும் நிட் காமியத்தவமெனவுமாம். இவ்விரண்டுள் காமியத் தவமாவது தனக்கெனப்பொருள் கிஞ்சித்துமின்றி, அத்தியாசமாய்வந்து வந்தடுக்கும் தத்தம் உடல்களே நான் நானெனவும் அவ்வவ் வுடலைச் சார்ந்து வரற்பாலனவாகிய பெண்டிர்முதலிய உயிர்ச் சார்பு பொருட்சார்புகள் அனைத்தையும் எனதெனவும் ஐய முறுது சத்தியமாகவே கர்த்தத்துவம் போக்தத்துவமுற்று நிகழ்ந்துவரும். இவற்றுல் உண்டாம் இராகாதி துற்குணங்களையும் மதுமாம்சாதிகளை அருந்தும் துராசாரங்களையும் தடு

த்து இத்தேக போக விர்த்திக்கே விரதம் நோன்பு தவம் மகம் முதலிய அனேக சற்கிருத்தியங்களையும் இடைவிடா தொழுகி வருதலா மென்க.

நிட்காமியத்தவமாவது தெ சற்கிருத்தியங்களைத் தத் தம் உடலுக்கும் வறிய குடும்பத்திற்கும் செய்துகொண்டு வருவது பயனற்றதென நமது பிறவிகள்தோறும் நம்மை விட்டகலாதுநின்று கொடுத்தற் கியைந்தனவாகிய இத்தனு கரண புவன போகங்களை நாம் பந்திக்காது வாளாநிற்கும் சூழ்நிக்கண்ணும் விடாது பாதுகாத்துக்கொண்டு வருவது ஒப்பற்ற அவ்விறைவனுகலின், அவனேயன்றி நமக்கென்று என்ன உரிமை யிருக்கின்றது ? எல்லா உரிமையும் அவனு டையதாகலின், அவன் ஆண்டானெனவும் நாம் உரிமையற் றிருக்கின்றோமாகலின் அடிமையெனவும், உள்ளபடியே கொ ண்டு மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றினையும் அவ்வீசுராற்பண மாகவே செய்து செய்து அகமமதைகள் குன்றியிருத்தலா மென்க. இவ்விரண்டினுக்கும் உதாரணம்:—

வேதாந்த சூளாமணி.

"உடம்பினையும் வருகுடும்பந் தனையும்யா னெனதென்
றுளன்கரும காண்டியெலாக் கிரியையுமீ சற்கே
திடம்பெறின் முக்குமவ னேபத்தி காண்டி."

எனக் கூறியிருக்கின்றதை யுணர்க.

தற்சுதந்தரமுற்றும் தற்சுதந்தரமற்றும் நிகழ்த்தும்கெ இருகிருத்தியங்களாலும் வரற்பாலது யாது? இன்பமெனின், அவ்வின்பம் இருமை யுற்றதா ? அன்றி ஒருமை யுற்றதா ? இருமை யுற்றதெனின், அவ்வின்பம் இருமை யுறுவானேன்? கிருத்தியம் கர்த்தத்துவமாயும் அகர்த்தத்துவமாயும் இருமை

யுற்றதா லெனின், அவ்விரண்டின்பமும் எவற்றின்பாலது? இகபரத்தின் பாலதெனின், இகபரமாவது செகமும் சிவமுமாகின்றன. செகத்தின்பாலது சிற்றின்பமும் சிவத்தின்பாலது பேரின்பமுமாம். ஆயினும், சிற்றின்பம் செகத்திற் கியற்கையதும் பேரின்பம் சிவத்திற் கியற்கையதுமாம். உயிர்கள் தமது காமியத்தவத்தாற் செகத்தின் சிற்றின்பத்தையும் நிட்காமியத் தவத்தாற் பரத்தின் பேரின்பத்தையும் பெறுகின்றன. அத்தவத்தைப் புரியாவுழி அவ்வவ்வின்பத்திற் செல்ல வேண்டுவதின்று, செல்லாவுழி அவ்விரண்டின்பமும் அதனதன் ஆதாரத்தில் நின்றும் பயனுறாது, அவ்விரண்டின்பமும் செகத்தின்பாலதும் அச் செகத்திற் கியற்கையதும் பரத்தின்பாலதும் அப்பரத்திற் கியற்கையதுமாயின், அவ்விரண்டிலொன்றிலேனும் உயிர்களுக்கு என்னசுதந்தரமிருக்கின்றது? அதாவது சொந்தமல்லாமை. இவற்றால் அவ்விரண்டின்பமும் உயிர்கட்கியற்கையன்று செயற்கையே! அன்றியும், உயிர்கள் உலகப்பொருளாயின் உலகச்சிற்றின்பம் உயிர்களுக்கியற்கையெனப்படும். அங்ஙனமன்றி உயிர்கள் பரம்பொருளாயின் அப்பரப்பேரின்பம் உயிர்களுக்கியற்கையெனப்படும். இவ்வுலகும் அப்பரமும் உயிர்களன்றாகலின் இச்சிற்றின்பத்திற்கும் அப்பேரின்பத்திற்கும் உயிர்களாகிய தாம் வேறெனப்படுவதே திண்ணமென்க.

இரண்டின்பத்திற்கும் தாம் வேறாகில் இவ்வுயிர்கள் எந்த இன்பத்தில் ஆறுதலுற்று நிலைத்திருக்கும்? பேரின்பத்தில் நிலைத்திருக்குமெனின், அவ்வின்பமும் இச்சிற்றின்பத்தைப்போல் உயிர்களுக்கு இரவலுற் றிருத்தலால் எங்ஙனம் அதில் நிலைத்திருக்கும்? சிற்றின்பம் நிலைக்காது மாறுவது இழிந்தோர்க்குங் கண்கூடாயிருக்கின்றது. பேரின்பம் இதுபோலின்றி என்றும் மாறுதலையாதாவிருக்கின்றதேயெ

னின், அவ்வின்பம் மாறுதிருப்பதென யாதினால் ஏற்கற்பா லது? அணுமான அளவையாலும் ஆகம அளவையாலு மெனின், அணுமான அளவையா லேற்றது, இகமென்பது ஒன்றிருத்தலேப்பற்றி மேலே பரமென்பது ஒன்றிருக்க வே ண்டுமெனவும், இவ்விகத்தின்கண் சிற்றின்பமொன்றிருப்பது பற்றி அப்பரத்தின்கண் பேரின்ப மொன்றிருக்க வேண்டு மெனவும், இச்சிற்றின்பம் கணத்தில் மாறத்தகுவதா யிருப் பதுபற்றி அப்பேரின்பம் அங்ஙனமின்றி நீடித்து மாறுதிரு க்கவேண்டுமெனவும், நம்பிக்கையுற்றிருக்கும் பட்சமாய் முடி கின்றன. இதனால் அணுமான அளவை பயனுறுதென்க.

ஆகம அளவையாற் பயனுறுதோவெனின், அவ்வாகம அளவை யுத்திக் கொத்ததா? அன்றி ஒவ்வாததா? யுக்திக் கொத்ததெனின், இதுகாறும் யுத்தியா லாராய்ந்து வருகின் றமையால் இஃது முடிவு பெறுமளவும் ஆகமவளவை இனி வேண்டுவதின்று. இச்சிற்றின்பம் காமியத்தவத்தால் வாய்க் கற்பாலதால், உயிர்களுக்கு இரவல் சுகமா? அன்றிச் சொந்தச் சுகமா? சொந்தச் சுகமெனின், இச்சிற்றின்பம் உலகுக்கு இரவல் சுகமாக்கும்! இவ்வண்ணமே, அப்பேரின்பமும் உயிர் களுக்குச் சொந்தச் சுகமாயும் பரத்திற்கு இரவல் சுகமாயுமா கின்றதே! உலகானந்த மூலகுக்கும் பரமானந்தம் பரத்துக் கும் இயற்கையென முன்னமே சித்தாந்தமாயிற்று. எங்ஙனம் இரண்டின்பமும் உயிர்களுக்குச் மன சொந்தப்படும்? படு மெனின், உயிர்கள் உலகத்திலும் பரத்திலுஞ் சென்று கல க்க இருதவத்திலும் முயலுவானேன்? தததம் இன்பத்தை உலகின்கண்ணும் பரத்தின்கண்ணும் முன்ஞான்றே ஏற்றி யிருக்கின்றதாக்கும்! பின்ஞான்று அவ்வின்பத்தை யனுபவி க்க இருதவத்தையும் வேண்டுவது. இது விந்தையினும் விந் தை! இது நிற்க.

உலகவின்பம் உலகத்தைவிட்டும் பரத்தினின்பம் பரத்தைவிட்டும் மாறுந்தகையனவா? அல்லவே! இங்ஙனமிருக்க, உயிர்களுக்கு முன்ஞான்றில்லாத இருவித இன்பமும் இருவகைத் தவத்தால் பின்ஞான்று வாய்க்குமாயின், அவ்வின்பங்கள் எங்ஙனம் உயிர்களுக்கு மாறுது நிலைத்திருக்கும்? இயற்கையின்பம் எஞ்ஞான்றும் மாறுதற்கிடனின்று. பெருந்தவத்தால் வரினும் செயற்கை இன்பம் மாறுந் தகுதியதே! அஃது அயலின்பமாகலினென்க. உயிர்களுக்கு இன்பம் இயற்கையதெனின், இடைக்கண் மாறவேண்டுவதின்று. அங்ஙனமின்றிச் செயற்கையதெனின், எஞ்ஞான்றும் மாறுதிருக்கின்றதெனக் கூறவேண்டுவதின்று. சிற்றின்பம் பந்தநிலையதென்றும் பேரின்பம் முத்திநிலையதென்றும் சத்பிரமாணங்கள் கோட்டிக்கின்றதேயெனின், யுத்தியினுல் முடிவுபெறுங் காறும் ஆகம அளவை வேண்டுவ தின்றென முன்னமே ஏற்கப்பட்டிருக்கின்றே மாகலின், இஞ்ஞான்று அஃது வேண்டுவ தின்று. அப் பேரின்பத்தை ஒவ்வோ ருயிரும் பெறுவது முழுதுமா? அன்றித் தத்தமக்கும் கூடுமானதா? முழுதுமேயெனின், ஒருயிர் அவ்வின்பத்தைக் கொண்டுழி மற்றோருயிருக் கில்லாமற் போகின்றது. அங்ஙனம் இல்லாமற் போகுமாயின், இன்னும் எண்ணரிய உயிர்களும் பின்ஞான்று என்செய்யும்? அவ்வின்பத்தை ஒருயிர் முழுதும் கிரகிப்பதென்பது - அகண்டமான கடல்நீர் முழுவதும் ஓர் கிருமியானது குடித்ததுபோலா மென்க.

அவ்வின்பத்தைத் தத்தம் அளவுக்குத் தக்கவாறு பெற்றுக்கொள்ளுகின்றதெனின், இதுகாறும் நிட்காமியத் தவ உயிர்கள் தத்தம் அளவுக்குத் தக்கவாறு அனுபவிக்க அவ்வின்பத்தைப் பங்கிட்டுக்கொண்டு வந்திருந்தால் அவ்வின்பம் எத்துணை குறைந்திருக்கவேண்டும். இனியும் நிட்கா

மியத்தவம் இயற்றி இயற்றி அனுபவிக்கப் பங்கிட்டுக்கொள் வார்களாயின், இதுகாறும் குறைந்துபோனது போக நின்ற வின்பம் முற்றும் இல்லாமற் போய்விடுமே ? போகுமாயின், இனி வரப்போகிற உயிர்களுக் கென்செய்வது ? இங்ஙனம் அப்பரத்திற்கு இன்பமென்பது இல்லாமற்போயின், பர மென்பது துக்கவடிவமாகிறதாய் முடியும். முடியவே, உயிர் கள்தத்தம் அளவுக்குத்தக்கவாறு பங்கிட்டுக்கொள்ளப்பட்ட இன்பங்கள்இரவலின்புமாயும்முடிகின்றன. முடியவே, முத்தி யென்பது இங்ஙனந்தா னிருக்குமாக்கும்! கடல் நீரை முகில் களாலும் ஏனையவைகளாலும் எத்துணை கிரகித்தாலும் குறையாததுபோல் அவ்வின்பம் குறையாமலே யிருக்கு மெனின், அந்த நீர் எவற்றாற் கிரகிக்கப்படுகின்றதோ? அவ வற்றாற் சிறுகச்சிறுக வெளிப்பட்ட பின்ஞான்று மீண்டும் அக் கடலின்பால்வந்துவந்துசேராமல், வெளிப்பட்டவை வெளிப படுக்கொண்டே யிருக்கின், முடிவில் கடலென்னுஞ் சமுத் திரத்தில் நீரென்பது ஓர் திவலையேனு மிருக்குமா? இராதது போல், அப்பேரின்பம் உயிர்களால் தத்தம் அளவின்படியே சிறிது சிறிதாக வெளிப்பட்டுவிட்டது மீண்டும் அப்பரத் திற் சேராமல் உயிர்களிடத்தில் தங்கிவிடுமாயின், அப்பரத் துக்கென்று என்ன இன்பம் கிஞ்சித்தேனு மிருக்கின்றது? இன்றுகுமாயின், பரமென்பது முடிவில் இன்பமற்றதாகின் றது.

ஆகவே, அப்பரம் துக்கவடிவமெனப்படும். ஷெகடலின் கண் வந்து சேராதழி, முன்ஞான்று அந்நீர் சிறுகச சிறுக எவற்றாலெடுக்க வெளிப்பட்டதோ அவற்றிற்குப் பின்ஞா ன்று அந்நீர் பயனின்றிப் போகுமன்றே? அதுபோல், பரத் தினின்றும் வெளிப்பட்ட இன்பமானது மீண்டும் அப்பர த்தின்கண் வந்து சேராதழி முன்ஞான்று, அவ்வின்பம் எவ்

வுயிர்களால் சிறுகச்சிறுக எடுக்க வெளிப்பட்டதோ அவ்வுயிர் களுக்குப் பின்னொன்று அவ்வின்பம் பயனின்றிப்போம். போகவே, உயிர்களுக்குச் சிறிதுஞ் சுகமென்பதின்றி முன் போலவே துக்கவடிவாகிவிடும். இதனால் உயிர்கள் முற்பொ ழுதும் பிற்பொழுதும் இன்பமற்றனவாயும் இடைப்பொழுது துக்கமுற்றனவாயும் முடிகின்றன. இதுபோல் பரமானது முற்பொழுதும் பிற்பொழுதும் துக்கமுற்றதாயும் இடைப் பொழுது இன்பமுற்றதாயு மாகின்றது.

இதனால் பரமானது ஒருபோது துக்கமுற்றதாயும் உயிர் கள் அவ்வொருபோது இன்பமுற்றனவாயு மாகின்றன. ஆகி ன்றதால், உயிர்களுக்குத் தோடம் வந்தாலும் அது ஓர் பெரி தன்று! பரத்திற்குத் தோடம் வரலாமா? இதற்கென்செய் தும்? முற்பொழுதும் பிற்பொழுதும் துக்கவடிவாயுள்ள உயிர் கள் காமியத்தவ முதிர்ச்சியால் பெரிதும் துக்கமயமாகிய சிற்றின்பத்திற்சென்று தாக்குவனவும், நிட்காமியத்தவமுதிர் ச்சியால் ஷைமுற்பொழுதும் பிற்பொழுதும் பெரிதும் இன்ப வடிவாயுள்ள பரமாகிய பேரின்பத்திற் சென்று தாக்குவனவு மாய் முடியும். முடியவே, உயிர்கள் எவ்வின்ப வசத்தன? சிற் றின்ப வசத்தனவெனின், நிட்காமியத்தவம் இவ்வுயிர்கட்கு வேண்டுவதின்று; பேரின்ப வசத்தனவெனின், அப்பேரின் பம் உயிர்களுக்கு முற்பொழுதும் பிற்பொழுதும் உளதாயும் இடைப்பொழுது தவத்துணையாய் வாராமலு மிருக்கட்டும். உயிர்கள் எவ்வின்ப வசத்தனவோ அவ்வின்பம் அவ்வுயிர் கட்கு இயற்கையதா யிருக்கவேண்டு மன்றே? இயற்கையா கிய இன்பம் முற்பொழுதும் பிற்பொழுது மில்லாதிருக்குமா? அன்றியும், ஓர் அரிய தவத்தாலேனும் அவ்வின்பம் அன் னியமாய் நின்று பெறப்படுமா? அங்ஙனம் பெறப்படுவதால் அவ்வின்பம் அன்னிய-மென்பதற்கு முரணின்று. அன்றி

யும், இச்சிற்றின்பத்தைத் தூலநாஞகின்று அனுபவிப்பது போல் அப்பேரின்பத்தை என்ன நாஞகின் றனுபவிப்பது? சிவாகாரமாய் நின்று அனுபவிப்பதெனின், அச்சிவாகாரப் படுங்காறும் அவ்வின்பம் அன்னியமன்றே? இவ்வாகாரப் பட்டழி அஃதன்னியமாயும் அவ்வாகாரப்பட்டழி இஃதன் னியமாயு மாகின்றன.

ஆதலால், இவ்விரண் டாகாரங்களும் தாமன்றென்பதா யிற்று. ஆகவே, அவ்வவற்று லுண்டாகும் இரண்டின்பமும் அன்னியமென்பதற்கு மூரணின்று. இன்றுகலின், உயிர்கள் என்ன ஆகாரவடிவின வெனப்படும்? சடசித்தாகார வடிவின வெனின், அவை ஒன்றுல் தாம் அறியப்படுந் தகையன வாக லின் சடமெனவும், ஒன்றைத் தாம் அறியுந் தகையனவாக லின் சித்தெனவு மாகின்றன. ஆகின்றதால், சடசித்தாகிற இவ்விருகுணங்களும் எந்தக்குணியுடைய தெனப்படும்? அன் றியும், இவ்வுயிர்கள் பாசத்தை நோக்கச் சத்தும் பரத்தை நோக்க அசத்துமெனக் கோடலும் அங்ஙனமே. அதாவது ஓர் குணியின் குணங்களாகலினென்க. இவ்விருகுணங்கட்கும் குணிப்பொருள் யாதெனப்படும்.

இதுநிற்க, மணியின்கண் வசப்பட்ட ஓர் அயக்கோலா னது அம்மணிஅசைவினுல் தான் அம்மணியின் ஓர்பாரிசத்தி லேனும் நிலைக்காது இருபாரிசத்திலும் மொத்துண்ணுவது போல், இன்பவசப்பட்ட உயிர்களானவை மேடி இருவ கைத் தவத்தாற் சிறிது பெரிதென இரண்டாக வேறுபாலன வாகிய அவ்வின்பங்களில் நின்று தாம் ஓரின்பத்திலேனும் நிலைக்காது இரண்டின்பத்திலும் மொத்துண்டுகொண் டிருக் கின்றனவாயின், உயிர்கள் எந்த வின்பவசமுற்றன? இரண் டின்பமும் தவத்துணையாக வாகலினென்க.

உயிர்கள் இருதவத்திலும் செல்லாது நிற்கின், இரண் டின்பத்திலும் மொத்துண்ணுதலின்றி நடுவு நிலைபதாப்

வாளா இருத்தற் கியையுமன்றே? அங்ஙனம் இயைந்திருத்தலே சாலுமான சுகப்பேறெனின், மேற் இருவகைத் தவத்தையும் புரியாது வாளா இருத்தலென்பது-இருதவத்திலுஞ் செல்லாது நிற்பது மாத்திரமா? அன்றித் தேகபோகத்தை நுகராது நீங்கியிருப்பதுமா? போகத்தை நுகராது நீங்கியிருப்பதுந்தானெனின், இத்தேகபோக மென்பது இருப்புண்டெனச் சம்மதித்துத் தாம் நீங்கியிருப்பதா? அன்றி இருப்பன்றெனச் சம்மதித்து நீங்கியிருப்பதா? அவை இருப்புண்டெனச் சம்மதித்து நீங்கியிருப்பதெனின், அது இருவகைத் தவத்துள் ஒன்றுகின்றது. அது எத்தவமெனின், நிட்காமியத் தவமென்க.

இப்போகம் இன்றெனச் சம்மதித்து நீங்குவது யாதெனப்படுமெனின், அதுதான் இவ்விருவகைத் தவமுங் கடந்த விவேகத்துவமென்க. அது விவேகத்துவமாயின் இவைகள் அவிவேகத்துவமாமே யெனின், கர்மோபாசனை காண்டதிற்குமேல் ஞானகாண்டம் யாதுக்கிருக்கின்றது? இவ்விருதவமும் பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளாகலினென்க.

இதுநிற்க, காமியத்தவத்துணை சிற்றின்பத்திலும் நிட்காமியத்தவத்துணை பேரின்பத்திலும் மொத்துண்டுகொண்டிருக்கின்றதாயின், எவ்வின்பத்தில் நிலைத்திருக்கின்றது? இவ்விரண்டின்பமும் அயலின்பமாகலின் இரவல் சுகமெனப்படுமன்றே? இரவல் சுகம் எதுகாறும் பயனுறும்? தவத்தின் வலித்துணைகாறுமன்றே? சிற்றின்பம் காமியத்தவத்தின் வலித்துணையாயினும், பேரின்பம் சிவாகாரமான ஞான்றன்றே? அங்ஙனமிருக்க, அதீதும் தவத்தின் வலித்துணையென்பதெங்ஙனமெனின், சிற்றின்பம் எவ்வாகாரமான ஞான்று

வாய்க்கற்பாலது? விடயாகாரமான ஞான்றன்றே? அதாவது, தூல சூக்கும சரீரம். இத்தூல சூக்கும விடயவடிவம உயிர்களாகிய நமது இயற்கைச் சொரூபமா? அன்றுகலின், விடய சிற்றின்பம் நமக்கிடைக்கண் வந்து வந்து மாறுகின்றது. இங்ஙனமே, சிவவடிவமும் நாமன்றுகலின், நாம் அச்சிவாகாரமானஞான்று அப்பேரின்பம் நமக்கு இடைக்கண் வந்துவந்து மாறுமன்றே? விடயாகாரம் நாமாயின், சிவாகாரமும் நாமாகலாம்; இவ்விரண்டில் ஒன்று நாமாயின், மற்றொன்று யார்வடிவ மெனப்படும்? அஃதும் தவத்துணை நாமன்றே? இங்ஙனம் இவ்விருவடிவமும் நாமன்றுயின், இவ்விருவடிவம் காரணமாக வரற்பாலனவாகிய இவ்விரண்டின்பமும் நமக்குச் சொந்தமா? சொந்தமாஞலன்றே நிலைத்திருக்கும்? அதிலும் இருசுகமும் எங்ஙனம் நிலைத்திருக்கும்? இவ்விரண்டும் அயலின்பமாகலின், தத்தம் கட்டம் எத்துணையோ அத்துணைக்கு இரவலாக வந்தமைகின்றன. அன்னிய சுகத்தை இரவலாகப் பெற்றுப் பின்ஞான்று கைவிட்டுப் போவானேனென்று இவ்விரு தவத்திலுஞ் செல்லாது விட்டுவிடின் சுகதாகம் நசிப்புறுதற்கு மார்க்க மெங்ஙனம்? அத்தாகமானது இன்பம் முன்ஞான்றில்லாதது இடைஞான்று வாய்ப்பதும், வாய்த்த இடைஞான்றுள்ளது பின்ஞான்று மாறுதலுமாகிய இவ்வேறுபாடின்றி இயற்கையா யிருக்கவேண்டு மென்பது. தமக்கு இயற்கை யின்பத்தைத் தாம் அபேட்சிப்பது ஏனேனின், ஆங்காங்கு முள்ளனவாகிய உயிர்களுக்குக் கபிற்றரவு போல் நானென்பது வேறுபட்டதுபோலத்தோற்றும் தோற்றரவு சிறிதுமின்றி,

சொரூபசாரம்.

"எல்லாரு நானு யிருந்துரைப்பா ராகிறமை
யல்லாம லீச னளவுமலர் - சொல்லாலே

பெற்றமகன் றம்பி பிதாப்பே ருரைத்தொருவர்க்
குற்றவுடல் வேருகு மோ."

என்றருளிய ஆன்ரோர் தெளிவைத தாம் கைப்பற்றி நாஞக ளிற்கில், அவ்வபேட்சை யின்ரமென்க.

அயலீ நாஞய் மருஞவானேனெனின், கபிற்றரவு திட்டாந்தம் கூறினது யாதுக்கு? இங்ஙனம் கேட்பதற்கல்லவே? மருண்டதுபோல் தோற்றினதா லென்க. மருண்டதுபோலும் பின்ஞான்று தெருண்டதுபோலுமே யன்றித் தம்மை நோக்குழி அவ்வுண்மையில் இல்லவேபில்லை. ஐயவெழுச்சிக்கு என்செய்வதெனின், தன்னே நோக்காக்காறும் இவ்வையம் அகலாதென்பதே திண்ணமென்க. இதற்குதாரணம்:—

ஞானவாசிட்டம்.

"பேதமுறு புந்தியே மாயை யாகும்
பெரிதுவருந் தியுமிதனைப் போக்கல் வேண்டும்
போதமுறு பேற்றினு லன்றி மாயைப்
பொருதியின் கரைதோன்றுப் புகலத் தோன்றி
லேதமறு மப்பதமே யிறவா வீடா
மிம்மாயைப் பிறப்பிடமே தென்னல் வேண்டாஞ்
சேதமுறக் கொல்வழியே தென்று தேர்வாய்
சிதைவுற்ரு லிதனியல்பு தெரியு மன்றே."

எனக் கூறியதனுற் காண்க.

இஃதிங்ஙனமிருக்க, மூன்ஞான்று இருவகைத் தவத்தாலும் வாய்க்கற்பாலனவாகிய இருவகைஇன்பமும் நிலையற்றனவாகலின் இந்நிலைபாடைக்கு விடாது பாடுபடுதற்கன்ரோ கர்மோபாசனை இருகாண்டமும் வந்திருக்கின்றன? வந்திருக்கினும் அவை இன்பம் மாறுதிருக்கவேண்டுமென ஆபேட்சித்

திருக்கும் இவ்விடாத அபேட்சையைத் தடுத்தற் கியைந்த தன்று. ஆகலின், தடுத்தற் கியைந்தது மூன்றாவது ஞான காண்டமென்ப தொன்றே! எங்ஙனமெனின், இக்காண்டம் முன்ஞான்று மனமென்ப தலையாமையையும், பின்ஞான்று சஞ்சலமென்ப தணுகாமையையும், அதன் பின்ஞான்று உள்ளத்தில் நிலைத்திலங்கிய களிப்பு மாறுமையையும், கடை ஞான்று தானே தானுகநிற்றலையும் செய்வித்தற் கியைந்தது. இதற்குதாரணம்:—

சொரூபசாரம்.

"எச்சாத் திரம்வேண்டு மெச்சா தனைவேண்டும்
பிச்சாட்டல் லோகெடுவாய் பேதையர்க்குப்—புச்சாண்டிக்
காட்டுவார் போலவறுங் கற்பனைய தாக்கியுல
காட்டுவார் தம்மைக்கா ணூர்." என்றும்,

உத்தமவாதநூல்.

"ஆரா வியற்கை யவாநீக்கற் கொன்றுகேள்
தீராச் சகமுழுதுஞ் சித்தாக்கிற்—சாராதே
சித்து சடத்துவிதந் தீருவதான் மாப்புலவீ
ரித்தையொத்த மூத்திரிலே யில்." என்றும்,

கைவல்லிய நவநீதம்.

"தித்துரா ணிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தா
லெத்தனை யெண்ணி னுலு மேதுசெய் தாலு மென்ன
த்திரை தெளிந்த பின்னர் நிற்கின்ற கனவைப் போல
வத்தனை யும்பொய் தானே யானந்த வடிவா நானே." என்றும்,

தத்துவராயர் பாடுதுறை.

"அன்னிய மில்லையென் றூதேடா காள
மானந்த மானுமென் றூதேடா காளங்

துன்னு சுடரேயென் றூதேடா காளஞ்
சோதியுட் சோதியென் றூதேடா காளம்." என்றும்,

"என்னுளே யாவையுங் கண்டிட லாவதும்
யாவையு ளென்னையுங் கண்டிட லாவது
மன்னியங் கண்டிடோ மென்றிட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ." என்றும்,

குறள்.

"ஆரா வியற்கை யவாநீப்பி னங்நிலையே
போரா வியற்கை தரும்."

என்றும் கூறியவாற்றுற் காண்க.

இவ்விளக்கத்தில் இதுகாறும் கூறிப்போந்ததில் துவை தானந்தமென்பது கிஞ்சித்தும் பொருள்படாது முற்றுங் ற் பனைகளாயும், அயலிறந்து தானே தானுகநீற்கும் நிரதிசயானந்தமே எஞ்ஞான்றும் இருப்பாயுந் தேர்ந்ததென்க.

ஏழாவது

துவைத இன்பாரோப ஆராய்ச்சி விளக்கம்

முற்றிற்று.



அகப்புற ஆராய்ச்சி விளக்கம்.

இவ்விரண்டாராய்ச்சியில்

இஃது

புறத்து ஆராய்ச்சி விளக்கம்.

இவ்வாராய்ச்சிக்கண்

முதலாவது

தேகமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சியின்க ணிவ்வடிவ மாந்தனக்கு
வந்துநிகழ் தேகமெனு மன்பெயர்தா—னெந்தவிதத்
தும்மனர்த்த மாகியே தோன்றுமுறுப் பாகுமனைத்
தும்மிருப்ப தாகுமே தோய்ந்து.

எங்ஙனமெனின், இத் தூலதேகம் தோற்றும் நிலைமை யுடையதா? அன்றி அறியும் நிலைமையை யுடையதா? தோற்றும் நிலைமையையே யுடையதெனின், மூன்ஞான்றும் பின்ஞான்று மிருந்து தோற்றுகின்றதா? அங்ஙனமின்றி இடைஞான்று மாத்திரம் தோற்றுகின்றதா? மூன்ஞான்றும் பின்ஞான்றும் இருந்தே இஞ்ஞான்றும் தோற்றுகின்ற தெனின், இங்ஙனங் தோற்றுகின்றது ஓர் முதலாக இருந்தா? அன்றிக் கற்பனையாகவா? ஓர் முதலாகவே யிருந்து தோற்று

கின்றதெனின், இதனுல் இத்தேகத்தைத் தேகமென் றுணர்வது அறிவெனப்படுமா ? அன்றி அறியாமையெ னப்படுமா ? அறிவெனவே படுமெனின், ஒன்று கூறு தும். அஃதென்னெனின், தேகம் தேகம் என வழங்கப் பட்டு வரும் இப்பெயரானது அர்த்தப்பெய ரெனப்படு மா ? அன்றி அனர்த்தப்பெய ரெனப்படுமா ? அர்த்தப் பெய ரெனப்படு மெனின், பொருட்பெயர் இடப்பெயர் காலப்பெயர் சினைப்பெயர் குணப்பெயர் தொழிற்பெயரெ ன்று வழங்கப்படும் இவ்வாறுவகைப் பெயர்களுள் தேகமென வழங்கப்பட்டு வரும் இப்பெயரானது பொருட்பெயரென் ராகின்றது. ஆகவே,இஃது ஒருபொருள்குறித்த பல பெயர்க ளுள் ஒன்றென்பதா ? அன்றிப் பலபொருள் குறித்த ஒரு பெய ரென்பதா ? பலபொருள் குறித்த ஒருபெய ரென பது நாகமென்னும் பெயர். அது ஆகாயம் குரங்கு புன்னை மரம் தூசு மலை பாம்பு யானை முதலியனவாகிய பல பொ ருளை விளக்கும் ஒருபெயராகின்றது. தேகமென்னும் பெயர் ஆக்கை சரீரம் உடம்பு மெய் முதலியனவாக வழங்கப்படும் பெயர்களோடு தொந்தமுற்று வழங்கப்படுகின்றது. இப்பல பெயரும் ஒருபொருளை விளக்கும் பல பெயர்களுள் ஒன் றென்பதாயிற்று.

ஆகவே, தேகமென்னும் இப்பெயர் எந்தப் பொருளை விளக்க வந்தது ? வடிவமாயுள்ள ரூபத்தையெனின், வடிவங் களாயுள்ள எவ்வெவ் ரூபங்களும் தேகமுதலியனவாக வழங் கப்பட்டு வரும் தொந்தப் பெயர்களையே ஏற்று வேறே எப் பெயரையும் ஏலாதிருக்க வேண்டுமே ? அங்ஙனம் ஏற்க வில்லையெனின், வடிவாயுள்ள ரூபமென்னற்க. தேகமென் னும் பெயரை யேற்கும் பொருள் யாதோ அதனை இஃதென னச் சுட்டி யுணர்த்த வேண்டுமன்றே ? ஏனெனின், சுட்டி.

யுணர்த்துதற் கியையாதது சூனியமும், சுட்டி யுணர்த்துதற் கியைவது நாமரூபமு மாகலினெனக. என்னை,

சசிவர்ணபோதம்.

"அறியாப் பொருள்கா ரணமா யைகூறித்
தறியும் பொருள்கா ரியமா மூலகிங்
கெறியாற் றிகழ்நான் மறையங் தமெலா
நீயன் றெனவோ துரிசந் தரமே."

என்றருளியதை யுணர்க.

பொருட்பெயர்கள் பொருள்களை விளக்க வந்திருக்கின்ற மையால், அங்ஙனம் இத்தேகமென்னும் பெயரும் எத்தப் பொருளை விளக்க வந்திருக்கின்றதோ? அவ்வுளவைத் தெரி வதற் கெங்ஙனம் கூடும்? இதுதான் தேகமென வழங்கப் படும் பெயரை ஏற்றற்பாலதெனின், இதுதான் தேகமெனச் சுட்டிக் காட்டியா இந்தச் சுட்டானது அவயவமாகிய உறுப் பின்மேல் விழுந்ததே? தேகமென வழங்கப்படும் பெயருக் குப் பொருள் யாதென வினவ, பல வுறுப்புகளுள் ஒன்றைச் சுட்டி யுணர்த்தல் முறைமையல்லவே? இஞ்ஞான்று சுட்டிய தற்கியைந்த உறுப்புக்குப் பெயர் மார்பென்கிறதாக வழங் கப் படுகின்றதே! இங்ஙனமே ஒவ்வோ ருறுப்புக்கும் இயை ந்த பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றனவே! உறுப்புக ளாவன:—

தீநவாங்கக் கலம்பகம்.

"குழல்தாதல் புருவம் விலோசனங் காது
நாசிவாய் நகைமுகங் கண்டங்
குலவுதோள் முன்கை யங்கைமெல் விரல்கள்
கூருகிர் கொங்கைகண் வயிறு
விழைதரு முரோமம் வரையிடை யுந்தி
விரும்புமல் குல்துடை முழந்தாள்

மிளிர்கணைக் கால்கள் புறவடி பரடு
மென்குதி விரல்நகந் தாளே."

என மூப்பத்திரண்டு பேதங்களா யிருக்கின்றனவென்க.

இவற்றுள், எந்த உறுப்பு தேகமெனும் பெயர் கோடற் பாலது? அவ்வவ் வுறுப்பும் தத்தமக் கியைந்த பற்பல பரியாயப் பெயர்களே ஏற்கப்பட்டிருக்கின்றதால் தேகமென்னும் பெயரை ஏற்றிலங்கும் பொருள் யாது? அதனை நன்குணரவேண்டுமே! இவ்வகை யுறுப்புக்களின் சேர்க்கையெழுச்சியே தேகமென்கிற பெயர்க்குப பொருளாமெனின், அஃது விகாரமெனப்படுமா? அன்றிச் சுயம்பெனப்படுமா? சுயம்பெனப்படுமெனின், சேர்க்கை யென்பதற் கியையாதிருத்திருக்க வேண்டுமே! சேர்க்கையுற் றிருத்தலினல் விகாரமெனப்படுமோ வெனின், ஒன்றன் கூட்டம் பலவினீட்டம் திரிபினுக்கமென்னும் இந்த முத்தர்மமும் யாதெனப்படும்? விகாரமெனப் படுமன்றே? அவை ஓரினப் பொருள்கள் ஒன்றேடொன்று சேர்ந்து ஓர் முதல்போற் காண்டல் ஒன்றன்கூட்ட விகாரம். அது நெல்லம்பார முதலியன போலாம. பல இனப்பொருள்கள் ஒன்றேடொன்று சேர்ந்து ஓர் முதல்போற் காண்டல் பலவினீட்ட விகாரம். அது நால்வகைச் சேனைகள் ஒருங்குற்ற சைன்னியமென்பது போலாம். ஒன்று திரிந்து அதாவது ஒன்றுகெட்டு மற்றொன்றுக இருத்தல் திரிதல் விகாரம். அது பாலென்பது கெட்டுத் தயிராதல் போலாம். இம்முத்தர்மத்துள் தேகமென்னும் பெயரை ஏற்கற்பாலது என்ன விகாரமெனப்படுவது? பலவினீட்ட விகாரமன்றே? இதனற் பொருளெனப் படுவ தெங்ஙனங் கூடும்?

அன்றியும், உறுப்புக்க ளொன்றேடொன்று சேர்க்கையுற்ற ஞான்றும், அச்சேர்க்கை கலைந்த ஞான்றும் இருப

பது யாதெனப்படும்? உறுப்புக்களெனப்படு மன்றோ? தேக மென்கிற பெயருக்குப் பொருளென்ப தெங்கே? காணுமே! இருக்கின்றது உறுப்புக்களாகலின். இவ்வுறுப்புக்களை விட்டு இவற்றின் சேர்க்கையை ஓர் முதலென்னவும், தேகமென்கிற பெயருக்கியைந்ததெனவும் மயங்கிய மயக்கத்தை அறியாது முன்னார்த் தேகத்தைத் தேகமென் றுணரும் இம்மயக்கத்தை அறிவெனக் கூறியது அறியாமை யெனப்படுமன்றோ? அன்றியும், தேகமென்பது ஓர்ஞான்றுள்ளதா? அதாவது இடைஞான் றென்பது. இவ்விடைஞான்றோடு முன்ஞான்றும் பின்ஞான்று முள்ளதா? இடைஞான் றென்பது உறுப்புக்கள் சேர்ந்திருக்கும் ஞான்றென்க. இவ்விடைஞான் றுள்ளதெனின், மூன்ஞான்றும் பின்ஞான்றுமுள்ள உறுப்புக்களில் கிஞ்சித்தேனு முண்டா? இல்லையன்றோ? ஏனெனின், ஓர் பொருளுள்ள விடத்தில் அஞ்ஞான்றே மற்றோர் பொருள் எங்ஙன மிருக்கும்? இராதே! அதுபோல், இஞ்ஞான்று தேக இருப்பில் இதற்கு மாறான உறுப்புக்கள் இராதிருக்கவேண்டுமன்றோ? இருக்கின்றதால், அவ்வுறுப்புக்களன்றித் தேகமென்பதற்குப் பொருளெங்கே? இருக்கின்றதே யெனின், இஞ்ஞான்றுள்ளது மூன்ஞான்றும் பின்ஞான்று மூள்ள உறுப்புக்களின் இருப்பில் உண்டெனப்பட்டதா? இஞ்ஞான்று உண்டென்பதற்கு அங்ஙனமில்லையே! இதற்கென்செய்தும்!

அன்றியும், பொருளென்பது ஓர்ஞான்றுள்ளதாயின், ஏனைய இருஞான்றும் ஏனிருக்கப்படாது? அதுபோல், தேகமெனப்படுவது இஞ்ஞான் றுள்ளதாயின், முன்ஞான்றும் பின்ஞான்றும் ஏன் இல்லையெனப் படவேண்டும்? இஞ்ஞான்றே இன்றுகலின், முன்ஞான்றும் பின்ஞான்றும் இல்லையென்பதாயிற்று. ஆகவே, முப்பொழுதும் இன்மை யெனற்

கியைந்த தேகமென்பது எப்பொழுதும் எங்ஙனம் இருப் பெனற் கியையும்? இயையா திருக்கின்றமையின், இத்திண் ணம் நோக்கி இதற்குப் பிராக்கபாவம் பிரத்தெதாம்சாபாவம் அன்னியோன்னியாபாவம் அத்தியந்தாபாவமெனக் கூறிபி ருக்கின்றனர். இங்ஙாற்பொழுதும் இன்மையெனப்படும் தேக மாகிய தோற்றத்தை உண்டென வுணர்வது அறிவெனப்படு மா? படாமையின், அறியாமை யென்பதற்கு மூரணின்றெ ன்க. இத்தேக ஆராய்ச்சியிற் றோந்தது யாதெனின், இப் புறத்து ஆராய்ச்சிக்கண் முதலடிக்காயுள்ள அறிவறியாமைப பேதமும் இவற்றிறகுமேல் உறுதிப பொருள்களாய் நின்ற அவயவக் குழாங்களுமா மென்க.

முதலாவது

தேகமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்

முற்றிற்று.



இரண்டாவது
அவயவமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.



வெண்பா.

இந்தவா ராய்ச்சியின்க ணேய்ந்த வவயவப்பே
ரந்தவிதத் தும்மனர்த்த மெய்தியே—தொந்தமுறத்
தோன்றியமாம் சாதிகளே தோயு மிருப்புளதா
வூன்றி யுணர்வேரர்க் குறும்.

எங்ஙனமெனின், தேக ஆராய்ச்சி யுழைப்பில் இருப்பாக நின்றது அவயவங்கள். இங்ஙனம் நிற்கும் அவயவங்களே இருபபென் றுணராது இருப்பின்றித் தோற்றன் மாத்திரமாகக் காணும் தேகமென்பதை ஓர்முதலெனக் கண்டுணர்ந்து வருகின்றது மிக்க அறியாமையன்றே? இஃதறியாமையாயினும், அவயவங்களேயெனும் இஞ்ஞான்று இருப்பென் றுணர்வது அறிவெனப்படுமா? அன்றி அறியாமை யெனபடுமா? அறிவெனப் படுமெனின், இவ்வுறுப்புக்கள் ஒன்று மற்றொன் றெனப்படாது, வெவ்வேறு பேதமுற் றிருக்கின்றனவா? அன்றி ஓரினப்பொருள்களாகவே அபேதமுற் றிருக்கின்றனவா? வெவ்வேறுகவே பேதமுற் றிருக்கின்றனவெனின், தோற்றத்தாற் பேதமுற் றிருக்கின்றனவா? அன்றி அர்த்தத்தாற் பேதமுற் றிருக்கின்றனவா? அர்த்தத்தாற் பேதமுற் றிருக்கின்றனவெனின், சிரமென்கிற உறுபபுக்கும் பதமென்கிற உறுப்புக்கும் என்ன அர்த்தம் பேதித்திருக்கின்றது? பேதமாகத்தானே இருந்து தோற்றுகின்றனவெனின், எது இவ்வளவு பேதங்களாகத் தோற்றுகின்றது?

இவ்வளவு தோற்றங்களும் வடிவின் பேதங்களா? அன்றி வேறு பேதங்களா? வடிவின் பேதங்களெல்லாம் தோற்ற பேதங்களாக முடியுமாகலின், வடிவின் பேதங்களன்று பொருட் பேதங்களா மெனின், சிரமென்பது ஓர் பொருளும் பத மென்பது மற்றோர் பொருளுமா யிருக்கின்றனவா? சிறிது மில்லையே! இவ்விரண் டுறுப்பும் மாமிசாதிப் பொருள்களாக இருக்கின்றனவே! எங்ஙனம் இவ்விரண் டுறுப்பும் பொருளாற் பேதித்திருக்கின்றன.

இங்ஙனமே ஏனைய ஒவ்வொரு றுப்பும் மாமிசாதிப் பொருள்களாகவே இருக்கின்றமையின், அவயவமாகிற இவ்வுறுப்புக்க ளனைத்தும் பொருளாற் பேதித்ததன்மும். பொருளாற் பேதித்த தன்மையின் பின்னர் யாதினாற் பேதித்திருக்கின்றன? சொருபங்களாலெனின், சொருபங்களெல்லாம் பல்வகை வடிவுப் பொருள்களாகலின், தோற்றன் மாத்திரமென்பதற் கியைந்திருக்கின்றன. இயையவே, எல்லா உறுப்புக்களும் மாமிசாதிகளாகிய ஓரினப்பொருள்க ளாகின்றன. ஒருறுப்பின்பொருள் மற்றோருறுப்பின் பொருட்கியையாது பேதித்திருப்பதுமுண்டா? இல்லையே! அன்றியும், இவ்வுறுப்புக்கள் விகற்பமுறுதற்கு முன்ஞான்றும் இவ்விகற்பங்கள் மாறிவிடும் பின்ஞான்றும் உள்ளது யாது? மாமிசாதிகளெனின், ஆம்மாமிசாதிக ளிருப்பில் இவ்வுறுப்புக்க ளுண்டா? இன்றெனின், அஞ்ஞான் றிருப்பது யாது? மாமிசாதிகளேயெனின், உறுப்புக்கள் எஞ்ஞான் றுள்ளது? இடைஞான் றுள்ளதெனின், அதாவது, இஞ்ஞான் றெனப்படுவது. முன்ஞான்றும் பின்ஞான்றும் உறுப்புக்க ளில்லாமைபோல் இஞ்ஞான்றுள்ள உறுப்புக்களில் மாமிசாதிக ளுண்டெனப்படுகின்றனவா? அன்றி இன்றெனப் படுகின்றனவா? இன்றெனப் படுகின்றனவெனின், அவைகள் ஏன் இன்றெனப்படும்? ஓர்

பொருள் உள்ளவிடத்தில் அஞ்ஞான்றே மற்றோர் பொருள எங்ஙன மிருக்கும்? இராதன்றே? அதுபோல், மாமிசாதிக ளிருப்பில் மற்றோர் பொருள்களாகிய உறுப்புக்கள் இருத் தற்கியையுமா? இயையுமாயின், இஞ்ஞான்றுள்ள உறுப்புக்க ளிருக்குமிடத்தில் மாமிசாதிப் பொருள்களிருக்கலாம். ஆங்கு உறுப்புக்கள் இன்மையால் ஈங்கு மாமிசாதிகள் இன்றென் டதே துணிபாமெனின், உறுப்புக்களாகிற வடிவம் மாறிய விடத்துள்ள மாமிசாதிகள் முன்னிருந்தவைகளா? அதாவது- இவ்வுறுப்புக்கள் விகற்ப முறுதற்கு முன்ஞான் றெனப்படு வது. அன்றி, நூதனமாக உண்டானவைகளா? நூதனமாக வே உண்டானவைகளெனின், முன்ஞான் றில்லாதது பின் ஞான்று நூதனமாக உண்டாகுமாயின், இஞ்ஞான்றுள்ளது பின்ஞான் றில்லாமற்போகுமன்றே? போகுமாயின், உறுதிப் பொரு ளென்பதின்றிப் போகுமே! இஃது விதைபினும் விதையாக்கும்!

இவ்வுறுப்புக்கள் மாறிவிடும் பின்ஞான்றுள்ள மாமிசாதி கள் முன்ஞான் றுள்ளவைகளேயன்றி வேறன்று. முன்ஞா ன்றும் பின்ஞான்றுமுள்ள மாமிசாதிகள் இஞ்ஞான் றெங்கே போயின? அவைகள் இருந்தபடியிருக்கின்றனவே! ஆங்ஙன மிருக்கும் மாமிசாதிகள் உறுப்புக்களாகிய வடிவபேதங்க ளால் மறைபட்டதுபோற் காணப்படுகின்றனவேயன்றி இல் லாமற் போயிற்றே? உறுப்புக்களாகிய வடிவங்களை ஒவ்வோர் முதலென்றுணரும் நாட்ட தோடத்தால் மாமிசாதிக ளிருந் தும் தோன்றுதேயன்றி, அவை இல்லாமற்போயினவன்று. இஞ்ஞான்றே உறுப்புக்களோடும் திருட்டிநீங்கின், மாமிசாதி கள் உண்டென்பதற்கு முரணின்றும். இன்றுகவே, உறுப் புக்களனைத்தும் தோற்றபேதங்களாயிற்று. ஒவ்வோர் தோற் றத்தின்கண்ணும் இருக்கும் இருப்புக்களைவிட்டு இத்தோற்

றங்களை ஒவ்வோர் முதலென உணர்ந்துவருவது அறியாமை யெனப்படுவதா? அன்றி அறிவெனப்படுவதா? சற்றும் அறி வென்பதற் கிடனின்று. அறியாமை யாகலின், இவ்வறியா மையே இவ்வாராய்ச்சியில் பொருளல்லவாகப் பூர்வபட்சமா யிற்று. ஆகவே, இவ்வவயவ ஆராய்ச்சிக்கண் தேர்ந்தது யா தெனின், இரண்டாவது அடுக்காயுள்ள அறிவறியாமைப் பேதமும், இவற்றிற்குமேல் உறுதிப்பொருள்களாக நின்ற மூமிசாதிகளுமா மென்க.

இரண்டாவது

அவயவமென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்

மு ற் றி ற் று.



மூன்றாவது

மாமிசாதியென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சிக்க ணிம்மாமி சாதிகட்பேர்
தந்தமக் கானபொருள் சற்றுமிலா—தெந்த
விதத்தினுமண் ணென்பதே மெய்மையிருப் பாகு
மதித்திதற் கென்னே மனம்.

எங்ஙனமெனின், இதுகாறும் அவயவ ஆராய்ச்சியிற் றேர்ந்த மாமிசாதிகளே விட்டு அவயவங்களுள் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் முதலெனக்கொண்டு வருகிறது மிக்க அறியாமையாயினும், இன்ஞான் றிருப்பெனத் தேரப்பெற்ற மாமிசாதிகளே ஒவ்வோர் முதலெனக்கண் டுணர்வது அறிவெனப்படுமா? அன்றி அறியாமை யெனப்படுமா? அறிவென்றே ஏற்கப்படுமெனின், இம்மாமிசாதிகள் அந்தத்தை ஏற்கப்படுவனவா? அன்றி ஏற்கப்படாதனவா? ஏற்கப்படாதனவெனின், ஆதியற்றனவாக வேண்டுமே! இவைகள் அந்தத்தை ஏற்பதாற் றோடமென்னை யெனின், அவ்வந்தத்தில் இம்மாமிசாதிகள் யாதுபொருளாகின்றன? மட்பொருளாகின்றனவெனின், அங்ஙன முடிவானேன்? இம்மாமிசாதிகளுக்குச் சுபாவமெனின், அலை நிலை நுரை சுமிழிகள் தத்தம் அந்தத்தில் தாம் கடற்புனலாய் முடிவது சுபாவமெனப்படுமே! படுமெனின், புனலென்பது விகாரமாயும் ஷி அலையாதிகள் அப்புனலாக விகாரப்படுகிறதற்கு ஒவ்வோர் முதலாயும் இரு

கூகவேண்டும். எங்ஙனமெனின், பாலென்பது முன்ஞான்றே இருந்து பின்ஞான்று தயிராக விகாரப்படுந் தகுமைபோல், அலையாதிகள் ஐ புனலாகிய சலத்திற்கு முன்ஞான்றே இருந்து பின்ஞான்று சலமாக விகாரப்படுவதாக்கும். இவ்வாறே மாமிசாதிகள் மட்பொருளுக்கு முன்ஞான்றே இருந்து பின்ஞான்று மட்பொருளாக விகாரப்படுவதாக்கும்! இஃது விந்தையினும் விந்தை! ஏனெனின், முன்ஞான்று மாமிசாதிகள் தத்தம் அந்தத்தில் மட்பொருளாய் முடிவது சுபாவமென்றதனு லென்க.

சலமே அலையாதிகளாக விகாரப்பட்டமையா லன்றே மீண்டும் அவை சலமாகின்றன? அதுபோல், மட்பொருளானது மாமிசாதிகளாக விகாரப்பட்டமையால் மீண்டும் அவைகள் மட்பொருளாதற் கியைகின்றன. அன்றியும், மாமிசாதிகளாகிற இவ்வுடல் மட்பொருள் வசப்பட்டுழி நீடித்தும், அங்ஙனமின்றி அக்கினிவசப்பட்டுழிவிரைந்தும், மட்பொருளாய் விளங்குவது பழைய மட்பொருளா? அன்றிப் புதிய மட்பொருளா? புதிய மட்பொருளெனின், முன்ஞான்றில்லாத மட்பொருள் பின்ஞான்று நூதனமாய் உண்டான தாகின்றது. ஆகவே, இல்லது வாராது உள்ளது போகாதென நீடித்து வழங்கபபட்டு வரும் இப்பழமொழிக்கு இல்லது உண்டாகுமென்கிற இப்புதுமொழி முரணுகின்றதே! இம்மொழிகளுக்கு இடைத்ததோ? எளிதிற் கிடைத்ததாக்கும். இஃது மிக்க விந்தை! அன்றியும், இல்லது நூதனமாய் உண்டாகுமாயின் உள்ளதென்று வழங்கப்படுவது போகவேண்டு மன்றே? அதாவது அழிவை ஏற்கற்பாலது. மாமிசாதிகள் இஞ்ஞான்றுள்ள பொருள்களாகவே இருந்து பின்ஞான்று அழிவை யேற்கும் அனுபவம் கண்கூடாயிருக்கின்றமையால், முன்ஞான்றில்லாதபொருள் நூதனமா யுண்டாகு மென்பதற்கு முர

ணுண்டோவெனின், உள்ளது போகுமாயின் உறுதிப்பொரு ளென்பது எஞ்ஞான்று மில்லாமற்போமே!

எங்ஙனமெனின், உள்ளதென்பது நாற்பொழுது முற் றுதா? அன்றி ஓர்பொழு தற்றதா? நாற்பொழுது முற்றதெ னின், இல்லதென்பது எத்தணைபொழு தற்றதாக ஏற்கவே ண்டும்? அஃதும் நாறபொழுது முற்றதாக ஏற்கவேண்டு மன் றே? நாற்பொழுதுமில்லாதது ஓர்பொழுதில் எங்ஙனம் நூத னமாய் உண்டாதற் கியையும்? இயையாதாயின், அந்நாற்பொ ழுதும் மாறுதது ஓர் பொழுதிலேனும் எங்ஙனம் அழிவை ஏற்கும்? இவற்றுளன்றே உள்ளது போகாது இல்லது வா ராதென்னும ஆன்றோர் மொழி வழங்கப்பட்டு வருகின்றது? இஃது ஏற்கற்பாலதா? அன்றித் தள்ளற்பாலதா? தள்ளற் பாலதெனின், யாதினுல் தள்ளற்பாலது? மாமிசாதிகள் உண் மைப் பொருள்களா யிருந்தழிகின்றதால் முன்ஞான் றில்லா தது பின்ஞான றுண்டாவதற்கு ஐயமின்றுதலினு லெனின், இங்ஙனங் கூறியதால் உள்ளது அழியுமென் றுகின்றது. அங் ஙனமாயின, மாமிசாதிகள் குணபேதங்களாயிருந் தழிகின்ற னவா? அன்றிப் பொருட்பேதங்களாயிருந் தழிகின்றனவா? பொருட பேதங்களாய் இருந்தே அழிகின்றனவென்னின், இம மாமிசாதிகள் இடைஞான றுள்ளனவா? அன்றி, முன்ஞான் றும் பின்ஞான்று முளனவா? முற்பொழுதும் பிற்பொழுது மின்றியினும் இடைப்பொழுதேனு முண்டன்றே வெனின், ஓர்பொழுதுள்ளது பொருளா யிருக்குமா? இராதே! இருக் கின்றதேயெனின், இம்மாமிசாதியுடல் அக்கினி வசப்பட் டழி அவ்வக்கினி இதனை மட்பொரு ளாக்குகின்றதெனக் கூறுவது தூலபுத்தியினுற் கணிக்கற்பாலது. அக்கினி கிட்டின ஞான்று இம்மாமிசாதிகள் நாற்றம் தைலம்புகை முதலியன வாகப் பிரிகின்றன. அங்ஙனம் பிரிந்த அக்கணமே சாம்ப

ரெண்ணும் மட்பொருள் விளங்குகின்றது. அங்ஙனம் விளங்கும் மட்பொருளானது, நெடு நாற்றம் தைலம் புகை முதலிய வடிவாயுள்ள இம்மாமிசாதி தர்மங்களால் மறைபட்டதுபோ லிருந்தஞான்று இத்தர்மங்கள் வேறு பொருள்கள் போற் றோற்றுகின்றன. இத்தோற்றங்களைத் தோற்றமெனக் கிஞ்சித்து மூணராது ஒவ்வோர் முதலென மயங்கினதால், இத்தர்மங்கள் பிரிந்துழி இயற்கையா யிருந்த மட்பொருள் வெளிப்பட்டது. நூதனமாக உண்டானதுபோ லிருக்கின்றது; மாத்திரமேயன்றி வாஸ்தவத்தில் நூதனமாக உண்டானதா? அல்லவே! இம்மாமிசாதிகள் விகற்பமுறுதற்கு முற்பொழுதும் இவ்விகற்பங்கள் மாறியபிற்பொழுதும் இவைகள் உள்ளனபோற் காணப்படும் இடைப்பொழுது மின்றி இம்மூப்பொழுதும் மட்பொருள் உண்டென்ப தாயிற்றென்க.

இம்மாமிசாதிகள் முற்பொழுதும் பிற்பொழுதும் இன்றெனினும் இடைப்பொழுதேனும்உள்ளனவன்றேவெனின், முற்பொழுதும் பிற்பொழுதுமுள்ள மட்பொருளிருக்கு மிருப்பில் இல்லாமைபோல் இடைப்பொழுது மாமிசாதி யிருப்பில் மட்பொருள் இன்றெனப்படுமா? அன்றி உண்டெனப்படுமா? முற்பொழுதும் பிற்பொழுதும் நின்ற மூறைமை போல் இன்றெனப் படுமெனின், முற்பொழுதும் பிற்பொழுதுமிருந்த மட்பொருள் இடைஞான் றெங்கே போயிற்றெனப்படும்? முற்பொழுதிருந்த மட்பொருளானது மாமிசாதிகளாகக் காரியப்பட்டுழி எந்தப்பொரு ளிருக்க வேண்டியது? காரியப்பட்ட மாமிசாதிகள்தானே இருக்கவேண்டியது? ஆகலின், மாமிசாதிகளே இருந்து விளங்குகின்றமையால் விளங்குமிந்த இடைஞான்றில் மட்பொரு ளெங்ஙன மிருக்குமெனின், இம்மாமிசாதிகள் நசித்த பின்ஞான்று நூதனமாக மட்பொருள் உண்டாகவேண்டுமே! இதனலன்றே உள்ளது

போகாது இல்லது வாராதென்னும் இப்பழமொழி வழங்கப் பட்டு வருகின்றது. அன்றியும், மாமிசாதிகள் கெட்டு மட் பொரு ளாயிற்றெனின், அது பரிணமபட்சம்-அதாவது பா லென்பது கெட்டுத் தயிராவதுபோலாம். இதனால் மாமிசாதி கள் முற்பொருளும், மண்ணென்பது பிற்பொருளு மாகின் றன. இஃது வியப்பினும் வியப்பு ! அன்றியும், இடைஞான்று மட்பொருளென்ப திலலையேல் மாமிசாதிகளாகத் தோற்று வது முற்பொழுதிருந்த மட்பொருள் கெட்டுவிட்டதனா லென முன்னமே தீர்ப்பாயினமையின், பிற்பொழுது மாமி சாதிகள் கெட்டுழி மட்பொருளன்றி மற்றொன்றுகவன்று ஆகவேண்டியது? அங்ஙனமின்றி மட்பொரு ளாவானேன்? இதனால் மட்பொருள் கெட்டு மாமிசாதிக ளாகின்றதன்று, கெடாமலே குணபேதங்களாய்த் தோற்றுகின்ற தன்றே? தோற்றுவதால், முற்பொழுதும் பிற்பொழுதும் மாமிசாதிக ளிலலாமைபோல், இடைஞான்றும மாமிசாதிகளிருப்பில்மட் பொருளில்லாமற் போயினவன்று, உள்ளவா றிருக்கின்றதே! இருக்கின்றதால் இவ்விருப்பில் மாமிசாதிகளென்பது இன்று மென்க.

இடைஞான்றும், மாமிசாதிக ளின்றென்பதாயின், முற் பொழுதும் பிற்பொழுதுமுள்ள மண்ணிருப்பில இவைகள் தோன்றுததுபோல், இப்பொழுதும் இவைகள் தோன்றுதிரு க்க வேண்டுமன்றே? அங்ஙனமின்றித் தோன்றுகின்றதே தெனின், தோன்றுகின்றதால் ஒவ்வொன்றையும் பொரு ளாக மயங்குகின்றதா ? இல்லாதது தோன்றுமாவெனின், கயிற்றின்கண் அரவு தோன்றுதிருக்கட்டும், தோன்றுகின்ற தேயெனின், தோன்றுகின்றதால் பொருளெனக் கோடற்பா லதா ? கோடற்பாலதெனின், யாதினைற் கோடற்பாலது ? அரவை நிதானித்துழி அஃது தோன்றவில்லை, இம்மாமி

சாதிகள் அங்ஙனமல்லவே. முப்பொழுதும் இல்லையெனத் தெளிந்தஞான்றும் தோன்றுகின்றனவே! எங்ஙனம் இவைகள் பொய்ப்பொரு ளெனப்படுமெனின், இதனால் நிதானித்தஞான்றும் தோற்றுமாயின், அஃது எதார்த்த மெனப்படுமாக்கும்! அங்ஙனமாயின் காணல்நீர், இல்லாததெனத் தெளித்தஞான்றும் தோற்றுகின்றதால் உண்மைப்பொரு ளெனற்பாலதா? அதுபோல் இம்மாமிசாதிகள் இல்லாததெனத் தெளிந்தஞான்றும் தோற்றுகின்றதால் உண்மைப்பொருளென்றேற்கின்றதாக்கும்! அக்கானல்நீர் அங்ஙனம் தோற்றினும், அருந்துதற்குப் பயனின்று. இம்மாமிசாதிகள் அங்ஙனமல்லவே, அனுபவித்தற் கியைகின்றதே! எங்ஙனம் பொய்ப்பொரு ளென்பதெனின், இதனால் தோற்றுகின்றன வெல்லாம் அனுபவத்துக் கியையுமாயின் எதார்த்த மென்பதாக்கும்! அங்ஙனமாயின் சன்னிதோடம் வந்தஞான்று நூதனமான விகார வடிவங்கள் தோன்றி மிக்க இடுக்கண்கள் செய்தாய் அவற்றிற்குத் தான் சகிக்காது கூக்குரலிட்டுக் கலைத்துப் போவதனாலும், கனவின்கண் நான் நீ அவன் அவள் அதுவாக நாமரூபங்கள் தோன்ற அவற்றால் மிக்க இன்பதுன்பங்களை அனுபவிப்பதனாலும் அவ்விரிடத் தோற்றங்களும் எதார்த்த மெனற்பாலதா? அல்லவே! அங்ஙனம் இம்மாமிசாதிகள் நமது மயக்கங் காரணமாக அனுபவப்படின் உண்மையாக்கும்! அன்றியும்.

அந்த சன்னிதோடத்திலும் கனவு தோடத்திலும் வாய்க்கும் நாமரூபானுபவங்கள் உயிர் உபாதிசகிதனாலன்றே? அவைபோல் இம்மாமிசாதியுடல் எந்தவுபாதி சகிதங் காரணமாக அனுபவப்படுவது? சூக்குமோபாதி சகிதங் காரணமாகவெனின், அஃது கரணேந்திரியமன்றி யுண்டா? இல்லையே! அக்கரணேந்திரியமாகிய சூக்குமோபாதி இச்சாக்கிராவத்தை

யில் மாத்திரந்தானே இருக்கின்றன? கனவின்கண்ணு மிருக்கின்றனவே! அங்கும் இருக்கின்றமையால், அக்கனவில் இம் மாமிசாதிகள் அனுபவப் படவில்லையே! அக்கனவிற் றோன்றும் நாமரூபங்கள் அனுபவப்படுவதற்கு நாம் எந்த உபாதி சகிதமாக நிற்கின்றோம்? அக்கனவிற் றோற்றும் தோற்றங்களுள் ஒன்றுயிருக்கின்றனம். அதுபோல், இச்சாக்கிராவத்தாக்காட்சிகளாகிய தூலநாமரூபங்கள் அனுபவப்படுவதற்கு நாம் எந்த உபாதி சகிதமாக நிற்கின்றோம்? இவ்வவத்தைக்கண் தோன்றுகின்ற தூலதோற்றங்களுள் ஒன்றாய் இருக்கின்றனமன்றோ? அக்கனவின் தோற்றங்கள் அனுபவப்படுதற் கியைந்த சூக்குமோபாதி வினைமுதலாக நின்றாற்போல, இந்நனவின் தோற்றங்கள் அனுபவப்படுதற் கியைந்த இத்தூலோபாதி வினைமுதலாக நிற்கின்றது. அவ்வுபாதிக்கு அனுபவப்பட்டு வருவது அத்தோற்றங்கள். அதுபோல், இவ்வுபாதிக்கு அனுபவப்பட்டு வருகின்றது இத்தோற்றங்கள். இங்ஙனமே, அக்கனவின் சூக்குமோபாதி எதற்கு அனுபவப்பட்டு வருகின்றது? நானென்பதற்கெனின், நானென்பது சுழுத்திக்கண்ணும் உண்டாயிருத்தலால், அச்சூக்குமோபாதி நானென்பதற்கு அனுபவப்படட்டும். காரணேந்திரியமாகிய சூக்குமோபாதியே நானென்பதற்கு அனுபவப்படாதுழி, இத்தூலோபாதியா நானென்பதற்கு அனுபவப்படுகின்றது? இங்ஙனமிருக்க.

மாமிசாதிகள் அனுபவப்படும் பொருளென்பது மிகவும் விந்தையாக்கும். மாமிசாதி வடிவம் நானென்பதற்கு அனுபவப்பட்ட தன்றாயினும், காரணேந்திரியமாகிய சூக்குமோபாதிக்கேனும் அனுபவப்பட்டு வருவதில்லையா வெனின்? அவ்வுபாதியும் நமக்கனுபவப்பட்ட தன்றென மூன்றான்றே சுழுத்தி யவத்தையைக் குறிப்பித்தாயிற்றே! அதையே

மீண்டும் மீண்டும் சொல்வதிற் பயனின்று. அக்கரணேந்திரிய சூக்குமோபாதியானது முன்ஞான்றே ஐம்பொறி ஆராய்ச்சி யுழைப்பிலும் அந்தக்கரண ஆராய்ச்சி யுழைப்பிலும் தமக்கெனப்பொருள் சற்றுமில்லை யென்றும், முற்றும் அறியாமை மயமென்றும் முடிந்தாயிற்று. ஆகவே, மாமிசாதி மயமாகிய இத்தேகம் எதற்கனுபவப்பட்டு வருகின்றது? அன்றியும், இம்மாமிசாதி தேகம் அனுபவப்பட்டு வருகின்றது நானென்பதற்காயின், நானென்பது இருக்கும் சுழுத்திக்கண் நானுக்கு அனுபவப்படாவிடினும் நானென்பதுள்ள இருவகைச் சமாதிக்கண்ணேனும் அனுபவப்படுவதுண்டா? அங்ஙனமுமில்லையே! எங்ஙனந்தான் ஐயமகன் றிருக்கின்றது? இத்தேகானுபவம் சமாதிக்கண் நானென்பதற்கன்றியினும், அவத்தீதத்திரயசகித சிவனென்கிற நானுக்கேனும் அனுபவப்படுகின்றதல்லவாவெனின், அச்சிவனுடைய நானென்பது தொழிற்குணமாயும் அறியாமையாயும் அவ்வறியாமை ஆரோபமாயும் முன்ஞான்றே முடிந்தாயிற்றே! இதனால் எங்கே அனுபவப்பட்டு வருகிறதாகச் சம்மதிப்பது? அன்றியும், சீவாந்தக்கரணேந்திரியங்கள் அருவத்தன்மையா? அன்றி உருவதன்மையா? அருவத்தன்மையா மெனின், அருவத்திற்கு உருவானுபவம் எங்ஙனம் கூடும்? அருவத்தை உருவம் பரிசிப்பதுமுண்டா? உண்டெனின், பரிசிப்பதுபோலன்றி உண்மையாயல்லவே! மேலும், முன்ஞான் றுள்ளதாயிருந்த தேகானுபவம் அவயவங்களை யன்றியும் பின்ஞான் றுள்ளதாயிருந்த அவயவானுபவம் மாமிசாதிகளை யன்றியும் உண்டாயிருந்திருக்குமாயின், இம்மாமிசாதிக ளனுபவம் மட்பொருளையன்றி உண்டாயிருக்குமெனக.

மாமிசாதிகள் மட்பொருளையன்றி இன்றெனப்படுமோவெனின், அவயவங்களையன்றித் தேகமென வழங்கும் சொ

ரூபமும் மாமிசாதிகளையன்றி அவயவமென வழங்கும் சொரூ பங்களும் உண்டாயிருக்கு மாயின், மட்பொருளையன்றி இம் மாமிசாதி சொரூபம் உண்டாயிருக்கு மென்க. மாமிசாதிகள் மட்பொருளையன்றி இன்றென்பதாயின், இவைகளை மட் பொருளென்று கோடற்கு இழுக்கென்னை யெனின், மட் பொருளென்பது மாமிசாதி சொரூபமாகத்தானே இருக்கும்? ஆகாதென்பதற்கு மட்பொருளையன்றி இன்றென்பானேனெ னின், மாமிசாதி சொரூபம் மாறிவிடுஞான்று மட்பொருளெ ன்ப தில்லாதிருக்கட்டுமே! அங்ஙன மில்லாமையால் தோட மென்னை யெனின், அவைக ளில்லாஞான் றிருப்பது யாது? மட்பொருளையன்றி வேறுசொரூப மில்லையே! இன்றுகலின், எங்ஙனம் இவைகள் மட்பொருளெனப்படும்? படாதுழி நாம் எவ்வண்ணமாகத் துணிந்திருக்கின்றது. அன்றியும், மாமிசாதி கள் தோற்றுங்காறும் இவறறை விடாதுணர்ந்துகொண் டிரு ப்பமேயெனின், அதுகாறும் இவைகள் மட்பரிசமின்றித் தனித்தனி ஒவ்வோர் முதலா யிருக்கட்டுமே! மீட்பொருள் பரிசங்காரணமாகத்தோற்றுந்தகைமை கயிறு கானல்முதலிய வற்றுள் அரவு நீர் முதலியவை தோற்றுந்தகைமைபோ லாக லின், அரவு நீர் முதலிய திட்டாந்தங்களை ஏற்பதற்கு மூர ணென்னை? இன்றுகலின், இதுகாறும் ஆராய்ந்து தேர்ந்த தால் இம்மாமிசாதி சொரூபங்களில் சத்தாயிருப்பது மட் பொரு ளென்பதாயிற்று. ஆகவே, மட்பொருளைவிட்டுத் தோ ற்றல் மாத்திரமாயுள்ள மாமிசாதிகளை ஒவ்வோர் முதலென் றுணர்வது அறியாமை யென்பதா? அன்றி அறிவென்பதா? மிக்க அறியாமை யாகலின், இவ்வறியாமை பூர்வபட்சமாயிற் றென்க.

அன்றியும், மட்கடத்தை மட்பொருளாகவும் பொற்குட த்தைப் பொற்பொருளாகவும் நூற்பட்டத்தை நூற்பொருளா

கவு மூணர்வதுபோல், மண்ணுடலை மட்பொருளெனப் பா ரார்து யாதாகப்பார்த் தின்புறுதற்கு நம்மை நாம் உயர்திணை யெனக்கொண்டி ருக்கின்றனம்? மாமிசாதிகளை ஒவ்வோர் முத லெனக்கொண் டிருத்தற்கோ ?

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றோ ரேனை யவர்."

எனக் குறள் மகாவாக்கியம் வந்திருக்கின்றது. மண்ணுடலை மண்ணைப் பார்த்து இன்புறுத அவிவேகிகட்கன்றே ?

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்."

என இவ்வாக்கியமும் வந்திருக்கின்றது. நாம் அவ்வாக் கியப்படி நில்லாதுழி எங்ஙனம் அவ்வாக்கியங்கள் மணம் பெறும் ? மட்பொருளை யன்றி மாமிசாதிகள் உண்டாயும் மாமிசாதிகளையன்றி மட்பொருள் இன்றியும் இருக்குமாயின், மண்ணுடலை மாமிசாதிகளாகவே பார்த்துக்கொண் டிருக்க லாம். மட்பொருளையன்றி இம்மாமிசாதிகள் முப்பொழுதும் இன்றுகலின் அவற்றை மட்பொருளாகப் பார்ப்பதற்கு மூர ணைன்றே? அன்றியும், சடமாகிற அக்கினியானது தன்பா லடுத்த இவ்வுடலாகிற மாமிசாதி தர்மங்களைப் பிரித்தது உள்ள மட்பொருளை விளக்கிவைப்பதுபோல், அவ்வக்கினி வசப்படு ங்காறும் நம்மை யடுத்திருக்கின்றமையால், நமதறிவாக்கினியி னல் இத்தர்மங்களைப் பிரித்துக்கொண்டே யிருப்பமாயின், மட்பொருளென்பது விளங்கிக்கொண்டே யிருக்குமன்றே? சடமான அக்கினிக்கு இருக்கின்ற யோக்கியதை நமதறிவா க்கினிக்கு இல்லையே ! நமதறிவு அறிவெனப் பட்டாலன்றே இச்சிறிய வுழைப்பையேனு மெய்துவம்? அவ்வறிவு அறியா மையாகலின் இச்சிறியவுழைப்பையும் எய்தாதிருக்கின்றனம்.

அவ்வக்கினியானது இம்மாமிசாதிகளைப் பிரிக்கவுங் கூடும், அதனல் இவை பிரியவுங் கூடும். இவ்வாறே நாம் பிரிக்கவும் இவை பிரியவுங் கூடுமோவெனின், அக்கினி பிரிக்கப் பிரிபடுவது தூலலட்சியபாவமும், நாம் பிரிக்கப் பிரிபடுவது சூக்குமலட்சியபாவமுமாம். இவை இங்ஙனமிருக்க,

நாம் சூக்குமலட்சிய பாவமாகப் பிரித்து உணர்தற்குக் குறுக்கே யாது கெடுதியிருக்கின்றது? ஒன்றுமில்லையே! அங்ஙனம் பிரித்தல் அக்கினிக்குச் சுபாவம், நாம் பிரித்தல் நமக்குச் சுபாவ மல்லவே யெனின், மட்பொருளை மாமிசாதிகளாகப் பார்ப்பது மாத்திரம் நமக்குச் சுபாவமாக்கும்! நமது சுபாவம் மாமிசாதிகளாகப் பார்க்கின்றதாயின்,

குறள்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொரு
ளப்படி காண்ப தறிவு."

என்னுது அக்குறள் செய்தவர்க்கு இவ்வுளவு தெரியாததால்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எனக் கூறினர். இங்ஙனங் கூறிவிட்டமையால், அவ்வாக்கியம் மருள் வாக்கியமாக்கும்! நாம் ஒன்றை மற்றொன்றாக வுணர்வது சுபாவமாயின், உள்ளதை உள்ளதாக உணர்வது எஞ்ஞான்றே? ஒன்றை மற்றொன்றாக உணர்வது எதுவோ அதுவன்றே பிற்பொழுது உள்ளதை உள்ளதாக உணர வேண்டிய கடமை? அங்ஙனம் உணராவிடின், பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் விபரீதபுத்தி எங்ஙனம் அகலும்? இம்மாமிசாதிகளைப் பிரித்து உணருகிறதற்கே கூடாதுஞ நானென்ப தல்லாதவற்றை நானென்பதாக உணரும்

மயக்கம் எங்ஙனம் அகன்று நாணுகநிற்பது? எனதல்லாததை எனதென்கிற மயக்கமே இத்துணை வலுவுற்றிருக்கின், நானென்ப தல்லாததை நானென்பதாகக் கொண்டிருக்கும் மயக்கம் எத்துணை வலுவுற்றிருக்கலாம்!

அன்றியும், நமக்கு எவ்வெப்பொருள் எனது எனதெனப் பகுதித்தற்கு இயைந்தனவோ, அவ்வக் கற்பனைகளா நாம், புரியுங் காமியத்தவத்திற்குச் சிற்றின்பத்தையும் நிட்காமியத்தவத்திற்குப் பேரின்பத்தையும் தரற்பாலன?

"யாதெனின் யாதெனி னீங்கியா லேதை
லதனி னதனி னிலன்."

என வெ குறள் மகாவாக்கியங் கூறியிருப்ப தென்னை? அகத்தின்கண் மூடிவுகாறும் புறத்தின்கண் மூடிவுகாறும் சுத்தாசுத்தமாயும் அதிட்டானரோபமாயு முள்ளனவற்றுள், ஒவ்வொன்றையும் யானெனதென மயங்குவதில் நின்றகன்றுழி, அச்சுத்தா சுத்தங்களால் வரற்பாலனவாகிய இறப்புப் பிறப்புக் கற்பனைகளின்றி இருப்பானென்பதன்றே அம்மகாவாக்கியத்தின் அபிப்பிராயம்?

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்."

என்று கூறியிருக்கின்ற இம்மகாவாக்கியமும் பொருளைப் பொருளென்று உணர்ந்து இன்புறுதற்கன்றே? அங்ஙனம் நாம் உணர்ந்து இன்புறுவிடின்; வெ மகாவாக்கியம் எங்ஙனம் மணம்பெறும்? பெருமதே! மட்பொருளை மட்பொருளாகப் பாராதுழி, இம்மாமிசாதி யுடலால் வரும் எண்ணரிய மயக்கபேதங்களனைத்தும் எங்ஙனம் அகன்று நாம் வதையற் றிருத்தற்கு இயையும்?

சர்வமதசித்தாந்த விளக்க வினவிடை.

"மறந்திடின் மண்ணே மறப்பே யுடலாம்
மறக்கி னறிவை மறப்பே - பிறிதாகத்
தோற்று மனர்த்தமதாஞ் சொல்வழக்கா லென்னபயன்
தோற்றலவும் வேண்டுந் துணிவு."

என்பதில், அறிவை யறிவாக நாடாக்காறும் அங்ஙனம் நாடாத மறதியே அவ்வறிவுக்கு அயலாகச் சீவேசுரசகத் கற்பணைகளாக விடாது தோற்றிக்கொண் டிருக்கு மென்பதற்கு. மட்பொருளே மறந்த மறதியே மாமிசாதியுடற் கற்பனை பேதங்களாகத் திருட்டியைவிட் டகலாது தோற்றிக்கொண் டிருக்கின்ற இவ்விபரீதத்தை உவமானமாகக் கூறியிருக்கின்ற தென்க. இம்மாமிசாதியுடற்பேதம் மறையாக்காறும், மட்பொருளாகப் பார்ப்பது எத்திறத்தாராலும் கூடாதெனின், இவ்வுலகின்கண் யாரேனும் கடவடிவைத் தமது அறிவினால் மட்பொருளென்று உணர்வாராயின், அவர் அவிவேகி யாக்கும்! இதனால் ஷி மகாவாக்கியங்களும் மருள் வாக்கியங்களாக்கும்! அவ்வாக்கியமும் அவ்வாக்கியானுபவிகளும் அங்ஙனம் இருந்தாலிருக்கட்டும். ஓர் சிறிய திருட்டாந்தம் சற்றாகிக்குதும்.

எங்ஙனமெனின், சில கருவண்டுகளால் உருண்டு செல்லும் மலவுருட்சிக்கண், நமது திருட்டிபட்ட அக்கணமே அருவ்வுருப் புண்டாதற்கு ஏதுவென்னே? அவ்வுருட்சி மட்கவசம் உற்றிருக்கின்றதே! அம்மட்கவசத்தில் யாருக்கும் அருவுருப்பு உண்டாகாதே! அவ்வருவுருப்பு உண்டாதற்கு நமதுதிருட்டி அம்மட்கவசமட்டில் நிற்கின்றதா? அன்றி ஊடுருவிச் செல்கின்றதா? அத்திருட்டி ஊடுருவிச் செல்கின்றதால், உள்ளிருக்கு மலத்தில் திருட்டி தாக்குகின்றது; தாக்குகின்

றதால், அம்மலம் திருட்டிக்குத் தோற்றுகின்றது. தோன்றவே அருவருப்பு உண்டாகின்றது. கவசத்தைத் திருட்டிக்காது உள்மலத்தைத் திருட்டிப்பது போல, அவனவளது வாகத் தோற்றும் மாமிசாதி சேர்க்கைக்கு, மேலே கவசமாயிருக்கின்ற சருமத்தைத் திருட்டிக்குந் திருட்டியை நீக்கி, மூடப்பட்டிருக்கின்ற உள் மாமிசாதிகளே நாடுழி, அருவருப்புத் தோன்றுமல்லவா? அங்ஙனம், அவை தோன்றுந் தோறும் மோகாதிகட்கிடம் உண்டாகுமா? ஆகாதன்றே? இவ்விரண்டு திருட்டாந்தங்களைப்போல், மாமிசாதித் தோற்றங்களே நாடுந்திருட்டி நீங்கி, இம்மாமிசாதியில் அவ்வியத்தமாயிருக்கும் மட்பொருளைத் திருட்டிக்கின், அம்மட்பொருள் நமது திருட்டிக்குக் கண்கூடாகாதோ? ஆகுமே! நாம் திருட்டிக்காத குற்றமன்றி வேறு குற்றம் என்ன இருக்கின்றது? மேலே திருட்டாந்தத்தில் மலவருட்சிக்கும் மாமிசாதி சேர்க்கைக்கும் நிரையே மட்பொருளும் சருமப்பொருளும் புறக்கவசமாக மாத்திரம் இருக்கின்றன. இங்கே மட்பொருளை மறைத்திருக்கின்ற மாமிசாதிகளாகிய உடலானது அம்மட்பொருளுக்கு அகப்புறக் கவசமாயிருக்கின்றது. இருக்கும் இக்கவச திருட்டியை நீக்கி, இவற்றுள் அவ்வியத்தமாயிருக்கும் மட்பொருளைத் திருட்டிக்கின் அஃதன்றி யாது விளங்கும்? அம்மட்பொருளே விளங்குமன்றே? ஆகலின், இவ்வரிய உழைப்பை உழைப்பினர்பால் பல்ஞான்றும் பழகிப்பின்பு பிட்சையாகப்பெற்று எய்தாதுழி, இதற்குமேல் ஆராயவேண்டியவற்றை யாராய்ந்து தெளிந்து இன்புறுதல் எங்ஙனங்கூடும்? இவ்வுழைப்பைப்போன்ற அனந்த உழைப்புகள் இருக்கின்றதனலன்றே,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

னைக்குறள் மகாவாக்கியம் வந்திருக்கின்றது. ஷை திருட்டாந்தங்களில் மட்கவசத்துள் மறைந்திருக்கும் மலமும் சருமக் கவசத்துள் மறைந்திருக்கும் மாமிசாதிகளும் அவ்வக்கவசமெனப்படாமல் விலட்சணமாக இருக்கின்றமையால், அம் மட்கவச திருட்டியும் சருமதிருட்டியுமாறிய அக்கணமே வெளிப்படுகின்றன. அங்ஙனம் வெளிப்பட்டவற்றை உணர்தற்கும் இயைகின்றன.

தாட்டாந்தத்தில் மாமிசாதிகள் அங்ஙனமல்லவே! இம் மாமிசாதிகளுள் மட்பொருள் அவ்வியத்தமாயிருக்கினும் கவசமாகிய மாமிசாதிப் பொருள்கள் மாறியஞான் றல்லவோ வெளிப்படுதற்கு இயையும்? பின்ஞான்று நாம் உணர்தற்கும் இயைவம். இங்ஙனமிருக்க, மாமிசாதி உட லிருக்குஞான்றே எங்ஙனம் மட்பொருளை உணர்வதெனின், ஷை திருட்டாந்தத்தில் மட்கவசமட்டிலும் சருமமட்டிலும் நின்று அவ்வப்பொருளாக உணர்வது என்னமதி யெனப்படும்? தூலமதி யெனப்படுமன்றே? பின்னர் அவ்விருவித கவச திருட்டிகளையும் நீக்கி மலவுருட்சியை மலவுருட்சியாகவும் மாமிசாதிகளை மாமிசாதிகளாகவும் உணர்வது என்னமதி யெனப்படும்? சூக்குமமதி யெனப்படுமன்றே? இவ்வண்ணமே தாட்டாந்தத்தில் மாமிசாதி யுடற்கற்பனைத் திருட்டியை நீக்கி, மட்பொருளை மட்பொருளெனக்கண்டு உணர்வது என்னமதி யெனப்படும்? இது ஷை சூக்குமமதிக்கு மிக்க சூக்குமமதி யெனப்படுமன்றே? ஒவ்வோர் பொருளும் இவ்வண்ணமே புறக்கவசங்களையும் உட்புறக் கவசங்களையும் பெற்றிலங்குவதால் அவ்வக் கவசங்களையும் ஆங்காங்கும் நமதறிவினால் நீக்கி நீக்கி அவ்வியத்தப் பொருள்களையே உணரும் உணர்வையன்றே ஆன்றோர்கள் மெய்யுணர்வெனக் கூறியிருக்கின்றனர். அங்ஙனம் உணரவேண்டுவதென்னை? எவ்வெப்பொருள்எவ்வெவ்வண்ண

மிருக்கின்றதோ அவ்வப்பொருளே அவ்வவ்வண்ணம் உணருவது அறிவுக் கியற்கையன்றே வெனின்,

குறள்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொரு
ளப்படி காண்ப தறிவு." என்னுது

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்பானேன் மகாவாக்கியம்? அன்றியும்,

"உலகெது நாமாரென்னு வுற்றுநின் றுணருமட்டுங்
கலகமார் பிறவிமோகங் கங்குல்போன் மூடிநிற்கும்."

என ஞானவாசிட்ட முதலிய பெருநூல்களுங் கூறியிருப்பானேன்? எந்த உயிர் உலகை யுணராதது? எவ்வுயிருமாசின், உலகை உற்றுணர வேண்டுவ தென்ன வெனின்? உயிர்கள் எவ்வா றுணருகின்றனர்? பொருளல்லவற்றைப் பொருளாகவன்றே? அங்ஙனம் உணர்வது கயிற்றை அரவாகவும் கானலை நீராகவும் கிளிஞ்சிலை வெள்ளியாகவும் உணர்வது போலாம். அன்றியும், கயிற்றை அரவாக வுணர்வது அறிவாயினும் அங்ஙனம் உணரும் அவசரத்தில் அவ்வறிவு என்ன வெனப்படும்? அறிவெனப்படுமெனின், அங்ஙனம் உணர்வதில் எய்ப்புத்தோன்றிக் கயிற்றைக் கயிறென்றுணரும் அவசரத்தில் அவ்வறிவு என்னவெனப்படும்? அஃதும் அறிவென்பாமெனின், கயிற்றை அரவெனவும் கயிற்றைக் கயிறெனவும் உணர்த லிரண்டும் அறிவாயின் அறியாமை யென்பது எவ்வா றிருக்கின்றது? ஒன்றை மற்றொன்றாக உணர்தல் அறியாமையும் உள்ளதை உள்ளதாக உணர்தல் அறிவுமாகின்றதன்றே? அன்றெனின், பொருளல்லவற்றைப் பொருளென்றுணருமருளென்பானேன்?

ஆகலின், எவ்வெப்பொருள் எவ்வெவ்வண்ண மிருக்கினும் அதாவது மேற்கூறிய புறக்கவசம் உட்புறக் கவசங்களை யுற்றிருக்கினும் அவ்வக்கவச திருட்டியை நீக்கி அவ்வப்பொருளை உணர்வதன்றே மெய்யுணர் வெனற்பாலது? இவ்வறிவுடைமை யுடையவரன்றே நல்லா ரெனப்படுவர். இங்ஙனமல்லாதார் யாரெனப்பட்டவரோ அறிகிலம். இம்மட்பொருளை விட்டு இதனிடத்தில் தோற்றன் மாத்திரமாக நிகழுக்காணும் மாமிசாதிகளை யுணரும் மயக்கத்தை முன்ஞான்றறிவென்றது இஞ்ஞான் றறியாமையென்றே சித்தாந்தமாயிற்றென்க. இந்த மாமிசாதி ஆராய்ச்சிக்கண் தோந்தது யாதெனின், மூன்றுவது அடுக்காயுள்ள அறிவறியாமைப் பேதமும் இவற்றிற்குமேல் உறுதிப்பொருளாய் நின்ற மட்பொருளுமாமென்க.

மூன்றுவது

மாமிசாதியென்னும் சத்தார்த்த

ஆராய்ச்சி விளக்கம்

முற்றிற்று.



நான்காவது

மண்ணின் மகத்தென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சிக்க ணிம்மண் மகத்தெனவே
வந்துநிக ழும்பெயர்தான் வாய்ப்பின்றிச்—சந்ததமுந்
தூலவணு வேயிருப்பாத் தோன்றுமே மாலின்றிச
சீலமதி யோருவப்பர் சென்று.

எங்ஙனமெனின், இதுகாறும் மாமிசாதிகளே ஆராய்ந்த ஆராய்ச்சிக்கண் தேர்ந்தது மட்பொருளாகலின், இம் மட்பொருளே ஓர் முதலெனக்கொண் டுணர்ந்துவரும் உணர்வு அறிவெனப் படுகின்றதா? அன்றி அறியாமை யெனப்படுகின்றதா? மக்கள் முதலிய அறிவுகைப் பகுதிகங்களுக்கும் அதிட்டானமாகலின் இவ்வதிட்டானத்தை முதலென் றுணர்வது அறிவெனப்படாது. அறியாமை யெனப்படுமோ வெனின், இம் மட்பொருளாகிய உருவம் எவ்வளவா யிருக்கின்றது? மகத்தளவா யிருக்கின்றதெனின், மகத்தளவென்பது ஆசியா முதலிய ஐந்து கண்டமாகப் பெற்றுள்ள பிருதிவி அண்டமாயிற்று. ஆகவே, இப்பெரிய மகத்துருவம் பொருளா குணமா தொழிலா? பொருள்தானெனின், சுயம்புப பொருளா விகாரப்பொருளா? சுயம்புப்பொருள்தானெனின், விகாரப்பொருளென்பது எத்தகையதா யிருக்கின்றது? ஒன்றன் கூட்டமாகவும் பலவின் சுட்டமாகவும் திரிபின் ஆக்கமாகவு மிருக்கின்றதாமெனின், இம்மகத்துருவம் பொருளாக இருக்கின் எஞ்ஞான்றும் சிதைவு அற்றிருக்க வேண்டுமே!

கிதைகின்றதால் இம்மகத்துருவம் இன்ரமோவெனின், இரு ப்பு இன்மைகளைப்பற்றிச் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், இம்மகத்துருவம் கலைதலை யேற்பது எத்துணை யெத்துணை யாக எனப்படும்? அணுத்துணை யணுத்துணையாக எனப் படுமெனின், அவ்வவ்வணுவும் எத்துணை யெத்துணை யெனப்படும்? சிறுசாளரத்தில் விழுந்திலங்குங் கதிரின் கிரணத்தில் தோற்றுவதாகிய அதிநுட்ப உருவமெனின், அத்துணையாகிய பலநுட்பங்கள் ஒன்ரோடொன்று சேர்ந்த சேர்க்கையன்ரே இப்பெரிய மகத்துருவமாகக் காணப்படுகின்றது? இங்ஙனம் காணப்படுவது கற்பிதமெனப்படுமா? எதார்த்தமெனப்படுமா? எதார்த்தமெனப்படுமெனின், இவ்வெதார்த்தம் ஷை அணுக்களின் சேர்க்கைக்கு முன்ஞான் றுற்றதா? பின்ஞான் றுற்றதா? பின்ஞான்றே யுற்றதெனின், பின்ஞான் றிருத்தல் எதுகாறும்? அவ்வணுக்கள் கலையுங்காறுமெனின், முற்பொழுதும் பிற்பொழுது பின்றி இடைப்பொழுது மாத்திர மிருக்கவேண்டிய தாகின்றது. அதாவது—அணுக்கள் சேர்ந்திருக்குங்காறு மென்க.

இதனால், முற்பொழுதும் பிற்பொழுது மில்லாத இம்மகத்துருவம் என்னவெனப்படும்? பொய்ப்பொருளெனப் படுகின்றதன்ரே? சுயம்புப்பொரு ளென்பதற்குப் பொருத்தமெங்கே? அவ்வணுக்கள் ஒன்ரோடொன்று சேர்க்கையுற் றிருக்குங்காறேனும் மகத்துருவம் பொருளா யிருக்கின்றதென உலகில் அறிவுடையோரும் கண்கூடாக அனுபவித்துக்கொண்டு வர, எங்ஙனம் இப்பூமியை இன்மைப்பொருளென்பதெனின்? மட்பொருளென்கிற இப்பெரியவுருவம் ஷை மூவித விகாரங்களுள் ஒன்றன்கூட்ட விகாரத்திற்கு இயையா திருக்கட்டுமே! அன்றியும், அவ்வணுக்கள் ஒன்ரோடொன்று சேர்ந்திருக்குங்காறும் எவை யிருக்கின்றன? சேர்ந்

திருக்கும் அணுக்களன்றே ? அவ்வணுக்கள் கலந்த ஞான்றும் எவையிருக்கின்றன? அவ்வணுக்களே யன்றே? அவைகள், ஒன்றேடொன்று சேர்க்கையுறுஞான்று இருப்பாக உள்ளவை அவ்வணுக்களே யன்றி வேறுபொருளுண்டோ ? இன்மையால், அவ்வணுக்களன்றே பொருளெனப்படுபவை? படுவதால், மகத்தென்பதற்குப் பொருளெங்கே? தொழிற் குணமும் தோற்றக்குணமும் அன்றே பொருள்போலிருக்கின்றன ? திருட்டாந்தத்தில் நெல்லம்பார மென்புழி ஓரினங்கள் சேர்க்கையுற்று மகத்துருவாகக் கூடும் ஒன்றன் கூட்டவிகாரம். இவ்விகாரம் தோற்றல்மாத்திர மன்றே ? உண்மையன்றே ! உண்மையெனின், சுயம்பாயிருப்பதெல்லாம் விகாரங்களாயும் பொருளல்லவை யெல்லாம் சுயம்புகளாயிருக்கின்றதாக்கும்! இஃது விந்தை !

மூப்பொழுதும் இருப்பாயுள்ளது நெற்கள், ஓர்ஞான்றிருப்பது அம்பாரம். அவ்வம்பாரம் ஒன்றன்கூட்ட விகாரமன்றே? அவ்விகாரம் தொழிலும் பண்புமாகின்றதே ? அவற்றுல் அஃது பொருளெனப்படுமா ? தொழிலென்பது நெற்கள் ஒன்றேடொன்று சேர்ந்திருத்தல். பண்பென்பது அச்சேர்க்கை பெரிதாகக் காணப்படுந் தர்மம். ஆகலின், தொழிற் குணமும் தோற்றக்குணமும் ஆயிற்று. அதுபோல், இம்மகத்தாகிற மண்ணுருவம் அணுக்களின் சேர்க்கைக்கு முற்பொழுதும் அவை கலந்த பிற்பொழுதுமின்றிச் சேர்க்கையுற்றிருக்குங்காலும் தோற்றுவது தோற்றன்மாத்திரமேயன்றி வேறுபொருள் இன்றுகலின், இஃது தொழிலும் பண்புமென்பதற்கு முரணின்றுமென்க. அன்றியும், இம்மகத்துருவம் விகற்புறுதற்கு முன்ஞான்றும் இவ்விகற்பமாறிய பின்ஞான்றும் உள்ளவை எப்பொருள்கள் ? அணுக்களன்றே ? அவ்வணுக்களிருப்பில் இவ்விகற்பமாகிய மகத்துருவ முண்டோ ?

இல்லையே! இம்மகத்துருவம் எஞ்ஞான்றிருக்கின்றது? இடை ஞான் றிருக்கின்றதெனின், அதாவது—இஞ்ஞான் றெனப் பட்டது. முன்ஞான்றும் பின்ஞான்றுமுள்ள அணுக்களிருப் பில் இம்மகத்துருவம் இல்லாவகைபோல், இடைஞான்றுள்ள இம்மகத்துருவ இருப்பில் அவ்வணுக்க ளுண்டாபிருக்கு மா? கண்கூடா யிருக்கின்றதே யெனின், முன்ஞான்றும் பின்ஞான்றுமுள்ள அணுக்க ளிருப்பில் இம்மகத்துருவம் இருக்கவேண்டும். இல்லையே! இங்ஙன மிருக்க, அணுக்கள் இடைஞான்றி லெங்ஙன மிருக்கும்? இருக்கின்றதா லன்றே தோற்றுகின்றதெனின், ஓர்பொரு ளிருக்குஞான்றில் அப பொருட்கண் ஏனையபொரு ளெங்ஙனமிருக்கும்? இருந்தால் அப்பொருட்கையைந்த தசபுறங்களுள் ஓர்புறத்தி லிருக்குமல் லவா? அதுபோல், எந்த முதலுக் கையைந்த தசபுறங்களுள் எந்தப் புறத்தில் இம்மகத்துருவம் இருப்பதாக ஏற்பது? இருக்கின்றவை அணுக்கள்தாமே! அவ்வணுக்களுள் எந்த அணுவினது எந்தப்புறத்தில் மகத்துருவ மிருக்கின்றது? அணுவினது ஓர்புறத்திலேனுந் தசபுறத்திலேனுமிருக்குமா? மகத்துருவம் ஓர் பொருளாக இல்லையே! முப்பொழுதுமிருக் கின்றவை அணுக்களாயின், அம்முப்பொழுது மில்லாதது மகத்துருவ மென்பதற்கு முரணென்னை?

அன்றியும், முற்பொழுதும் பிற்பொழுதும் அணுக்க ளாகப் பார்ப்பதுபோல் இடைப்பொழுதும் அவ்வணுக்களே யன்றி வேறில்லாமையின், அணுக்களாகவே திருட்டி விடா திருக்கின், மகத்துருவத் தோற்றமென்பது எங்கே? அணுக் களே யணுக்களென நாடாது தோற்றன்மாத்திரமா யுள்ள மகத்தென்னும் கற்பனையை ஓர் முதலெனக்கொண்டு உணர் வதுதானே தெளிவெனற்பாலது? இவ்வவிவேகத்தை யன் றே பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு மருளெனக்

கூறியிருக்கின்றது? இவ்வரிய வாக்கிய ரசத்தை மறந்து நம்மை உயர்திணையென மயங்கி மகிழ்ந்து நிகழ்வதென்னே? இதனை நன்குற்றுணர்க. மூன்றான்று மட்பொருளின்கண் உண்மையாயுள்ள அணுக்களைவிட்டு மகத்துருவத்தை முதலென் றுணர்வதை அறிவென்பது பூர்வபட்சமாகி இஞ்ஞான்று அஃதறியாமை யென்பதே சித்தாந்தமாயிற் றென்க. இம்மட்பொரு ளாராய்ச்சியில் தேர்ந்தவை எவையெனின், நான்காவது அடுக்காயுள்ள அறிவறியாமைப் பேதமும் இவற்றிற்குமேல் உறுதிப்பொருளாய் நின்ற தூல அணுக்குழாங்களுமா மென்க.

நான்காவது

மண்ணின் மகத்தென்னும் சத்தார்த்த

ஆராய்ச்சி விளக்கம்

முற்றிற்று.

ஐந்தாவது

மண்ணின் தூலவணுவென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சியின்க ணித்தூல மென்னுமணு
வந்த பெயரனர்த்தம் வாய்மையின்றிச்—சந்ததமுந்
தேர்ந்ததுதான் சூக்குமமாச செல்லு மணுவிருப்பா
மோர்ந்தவர்க்கே யிவ்வுறுதி யுன்.

எங்ஙனமெனின், இதுகாறும் மட்பொருளாராய்ச்சியில் இருப்பாகத் தேரப்பட்டவை அதிநுட்பங்களாயினும், அவைகளென்ன நுட்பங்களெனப்படும்? தூலவணு நுட்பங்களெனின், இவைகளுள் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் மூதலென்றுணரும் உணர்வு அறிவெனப்படுமா? அன்றி அறிபாமை யெனப்படுமா? அறிவெனப்படுமெனின், அவ்வணுக்கள் ஒவ்வொன்றும் பொருளெனப்படுமா? அன்றி வேறெனபடுமா? பொருளெனபடுமெனின், இதனால் சுயம்பெனபடுமா? அன்றி விகாரமெனப்படுமா? சுயமபெனப் படுமெனின், அவ்வொவ்வொன்றும் ஷி மகத்துருவம்போலொன்றன் கூட்டமன்றி இருக்கட்டுமே? எங்ஙனமெனின், அவ்வணுக்களுள் ஒவ்வொன்றையும் பூதக்கண்ணாடியைக் கொண்டு உணரும் ஞான்று சற்றேறக்குறைய அவ்வணுக்கள் ஆயிரஞ் சேர்ந்த பருமன் எத்துணைத்தோ அதத்துணைத்தாகத்தோன்றுமல்லவா? அங்ஙனந்தோன்றும் அவற்றுள், ஒன்றையுகிக்குதும். கடுங்காரமாயுள்ள ஓர் வேதியைப பரிசிக்கப

செய்யின், அவ்வோர் அணுவுங் கணக்கின் றிய அதி நுட்பங்களா ய்ப் பிரிந்து விடுகின்றது.

அங்ஙனம் பிரியுங்காறும், அப்முதலணு என்ன அணு வெனப்படும்? பூதக்கண்ணுடியைப் பெறுத கட்புலனுக்கு நுட்பத்திற்கும் அதிநுட்பமா யெட்டுவதாகலின் தூலவணு வெனப்படுமன்றே? அனந்தமாய்ப் பிரிதற்கியைந்த இஃது தூலவணுவாயின், இத்தூலவணுவில் நின்றும் பிரிந்தஞான்று தோன்றும் ஒவ்வொன்றும் என்ன அணுவெனப்படும்? இவைகள் பூதக்கண்ணுடியைக் கொண்டு உணர்தற்கே அதி நொய்தாயிருக்கும் பொருள்களாயின், அக்கண்ணுடியின்றி உணருங் கட்புலனுக்கு உண்டெனப்படுமா? படாதாகலின், அவ்வொவ்வொன்றும் நொய்ய அணுவென்பதற்கு ஐயமென்னே? அந்த நொய்ய அணுக்கள் அனந்தங்கள் சேர்ந்த சேர்க்கைகளன்றே ஷை ஒவ்வொர் தூல அணுவும்? இங்ஙன மிருக்க அது அந்த நொய்ய அணுக்களின் சேர்க்கைக்கு முற்பொழுதுண்டா? அன்றி அச்சேர்க்கை கலைந்துவிடும் பிற்பொழுதேனுமுண்டா? இன்றெனின், இவைகள் எஞ்ஞான்று உள்ளவை? இடைஞான்று உள்ளவையெனின், அ...வது— இஞ்ஞான்று என்பது. இவ்விடைஞான்று உள்ள இத்தூல அணு முற்பொழுதும் பிற்பொழுதும் என் இன்று? ஷை நொய்ய அணுக்களின் சேர்க்கை இன்றுகலினெனின், அச் சேர்க்கை யென்பது தொழிலல்லவா? அவ்வத் தொழில்களன்றே தூல அணுக்களென்பது? அன்றெனின், அவ்வச்சேர்க்கைச் சம்பந்தமின்றி அவ்வத்தூல அணுவும் ஒவ்வோர் முதலாக இருக்கட்டுமே? இருக்கின்றதே யெனின், அங்ஙனஞ் சேர்ந்திருக்கின்ற அவ்வவ் நொய்ய அணுக்களைப் பிரித்துக் காட்டலாமே! அங்ஙனங் காட்டக்கூடாதெனின், இருப்பவை நொய்ய அணுக்களன்றே? அவ்வணுக்களுள் ஒவ்வொன்றும்

இத்தூல அணுவெனப்படுமா? படாதெனின், ஏன்படாது? இத்தூல அணு பூதக்கண்ணுடியின்றிய கட்புலனுக்குத்தோன்றும் ஆரோப அணுவாயும், அவ்வணு பூதக்கண்ணுடிகொண்ட கட்புலனுக்குத் தோன்றும் அதிட்டான அணுவாயும், மகத்தணுப்போல் பேதித்திருக்கின்றதாலெனின், அவ்வதிட்டான அணுக்கள் அனந்தஞ் சேர்ந்திருக்கும் ஞான்றன்றே தூல அணுவெனப்படுவது? ஒவ்வோர் தூல அணுவும் சேர்க்கையினல் தொழிற்குணமும், அத்தொழில் பல்வகை வடிவு பேதங்களுள் ஒன்றுகத் தோன்றுவதால் தோற்றக்குணமுமாகின்றது.

அன்றியும், இத்தூல அணுக்களாக விகற்புறுதற்கு முற்பொழுதும் இஃது மாறிய பிற்பொழுதும் உள்ளது யாது பொருள்? ஷை அதிட்டான நொய்ய அணுக்களன்றே? அந்த நொய்ய அணுக்கள் இருப்பில் இவ்விகற்பமாகிய தூல அணுக்களுண்டா? இல்லையே! இத்தூல அணுக்கள் எஞ்ஞான்றிருக்கின்றனை? இடைஞான்றிருக்கின்றனவன்றே? முற்பொழுதும் பிற்பொழுதுமுள்ள அவ்வதிட்டான நொய்ய அணுக்களிருப்பில் இத்தூல அணுவில்லாவகைபோல் இடைப்பொழுதிருக்கின்றதாகச் சம்மதிக்கப்பட்ட தூல அணுவில் அந்த நொய்ய அணுவிருக்குமா? இருக்கின்றதேயெனின், முற்பொழுதும் பிற்பொழுதுமுள்ள அந்த நொய்ய அணுக்களிருப்பில் இத்தூல அணுக்கள் இருக்கவேண்டுமே! ஓர்பொருளிருக்கும் ஞான்றுஅப்பொருளில் மற்றோர்பொருள் எங்ஙன மிருக்கும்? அதுபோல், நொய்ய அணுக்கள்ளிருப்பில் அதற்கு மாறுபட்ட தூல அணு எங்ஙன மிருக்கும்? இராதே! இருப்பது தோற்றன்மாத்திரமாகவன்றே? இத்தோற்றன் மாத்திரமான கற்பனைத் தூல அணுக்களைத் தொழிலும் பண்புமெனக் கழித்து, முப்பொழுதுமுள்ள அந்த நொய்ய அணுக்களை விடாது

திருட்டித்திருக்கில், தூல அணுவென்பது தோன்றுமா? ஓர் ஞான்று தோன்றினும், ஓர் முதலாக இருக்குமா? இரா தன்றே? ஆகலின்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எனா மகாவாக்கியம் வெளிவந் திருக்கின்றது. இதனை நன்கு உற்றுணர்க. மூப்பொழுதும் மாறுதிருக்கும் இருப்பா கிய நொய்ய அதிட்டான அணுக்களைவிட்டு வெறுந்தோற் றல் மாத்திரமாகிய தூல அணுக்களே ஒவ்வோர் முதலென மயங்கி உணரும் உணர்வை மூன்றாவது அறிவென்றதுபூர்வ பட்சமாகி இந்நான்று அஃதறியாமை யென்பதே சித்தா ந்த மாயிற்றென்க. இத்தூல அணுவாராய்ச்சியில் தேர்ந்த வை எவையெனின், ஐந்தாவது அடுக்காயுள்ள அறிவறியா மைப் பேதமும் இவற்றிற்குமேல் உறுதிப் பொருள்களாய் கின்ற அதிட்டான நொய்ய அணுக்களுமா மென்க.

ஐந்தாவது

மண்ணின் தூலவணுவென்னும் சத்தார்த்த

ஆராய்ச்சி விளக்கம்

முற்றிற்று.

ஆ ரு வ து

மண்ணின் சூக்கும அணுவென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இத்தவா ராய்ச்சியினி லிச்சூக் குமமென்னும்
வந்த பெயரனர்த்த மன்னியே—பந்தித்தற்
கென்றென்றுங் காரணமா யிங்குபர மாணுவென
லொன்று மிருப்பெனவே யோர்.

எங்ஙனமெனின், இதுகாறும் மண்ணினது தூல அணுவை ஆராய்ந்த ஆராய்ச்சிக்கண் பொருளாகத் தேரப்பட்டவை நொய்ய அணுக்களாயினும், அவ்வணுக்களுள் ஒவ்வொன்றும் மின்ன அணுவெனப்படும்? கண்ணுடியைப் பெருத கட்புலனுக்குத் தோன்றுத அதி நொய்மையாகலின், சூக்கும அணுவெனப் படுமெனின், அச்சூக்கும அணுக்களுள் ஒவ்வொன்றையும் பொருளாக உணரும் உணர்வு அறிவெனப் படுமா? அன்றி அறியாமை யெனப்படுமா? அறிவெனப்படுமெனின், அவ்வணுக்கள் ஒவ்வொன்றும் இருப்பெனப் பட்டதா? அன்றி இன்றெனப்பட்டதா? இருப்பெனப் பட்டதெனின், பொருளாக இருப்பெனப் பட்டதா? தோற்றமாக இருப்பெனப் பட்டதா? பொருளாகவே இருப்பெனப் பட்டதெனின், அவ்விருப்பு சுயம்பாகவா? அன்றி விகாரமாகவா? சுயம்பாகவேயெனின், கூடி தூல அணுக்களைப் போல் மூவித விகாரங்களுள் ஒன்றுகிய ஒன்றன்கூட்டவிகாரமென்பதற்கு இயையா திருக்கட்டும்.

இவ்வொவ்வொன்றும் கண்ணுடியின்றிய கட்புலனுக்குத் தோன்றுத நுட்பங்களாகலின், விகாரமெனப் படுமோவெனின், கூடி கண்ணுடியைக் கொண்டு உணர்தற்குந் தோன்றுது சொல்லத்தக்கனவா? அன்றி நிலைத்திருக்கத்தக்கனவா?

நிலைத்திருக்கத் தக்கனவெனின், கண்ணுடியைக் கொண்டு உணரும் கட்புலனுக்குத் தோன்றுத அணுக்களென்பவை எஞ்ஞான்றும் எங்கணும் மில்லையெனப்படுமே? இல்லையெனப் படுமெனின், இச்சூக்கும அணுவுக்குமேல் இத்தகையதெனக் கணித்தற்கரிய இன்னும் நுட்ப அணுக்கள் உண்டெனப்படாதிருக்க வேண்டுமே! கட்புலனுக்குத் தோன்றும் தூல அணுக்கள் சில வேதிகளால் ஷெ கட்புலனுக்குத் தோன்றுது உடைந்துவிடுவதுபோல், அக்கட்புலனுக்குத் தோன்றுத இச்சூக்கும அணுக்கள் ஒவ்வொன்றும் கலைதற்கு இயைந்த வேதிகள் பரிசிக்கின் அனந்தமாய்க் கலைந்து, ஷெ கருவியைக்கொண்ட கட்புலனுக்குந் தோன்றுது போகின்றன. அங்ஙனமே அவ்வணுக்களையும் உடைத்து விடுதற்கு இயைந்த வேதிகள் பரிசிக்கின் பிற்பொழுது எவ்விதக் கருவிகளைக் கொண்டு உணரினும் எட்டுதற்கு இயையுமா? அங்ஙனம் எட்டுதற்குத் தோன்று அணுக்களனறே திரமான இருப்பெனப்பட்டவை? அத்திரமான அணுக்கள் பலவாகலின், அப்பல அணுக்களும் ஒன்றேடொன்று சேர்ந்த எழுச்சியே கருவியைக் கொண்ட கட்புலனுக்குத் தோன்றும் சூக்கும அணுக்களென்பன. அவ்வொவ்வொரு சூக்கும அணுவும் கணித்தற்கரிய அணுக்களின் சேர்க்கையாகலின், ஓர் முதல் போற் றேன்றும் தொழிற்குணமும் தோற்றக்குணமு மாகின்றன. எங்ஙனம் இச்சூக்கும அணு சுயம்பெனவும் ஓர் முதலெனவும்படும்? படாததாயின், ஷெ தோன்றுத அணுக்களன்றே முப்பொழுதும் உள்ள சத்தெனவும், இச்சூக்கும அணுககள் ஓர்ஞான்று தோற்றும் தோற்றமாகலின் அசத்தெனவும் படுகின்றன. இங்ஙனம் படுவதால், சூக்கும அணுக்களாகத் தோன்றுந்தோறும் ஒவ்வொன்றையும் நாட்டமானது கணித்தற்கரிய அணுக்களாக ஏன் நாடவில்லை? அங்ஙனம் தோன்றுத அணுக்கள் ஒன்றேடொன்று சேர்ந்த

ஞான்றும் இருப்பவை அவ்வணுக்களன்றே? அவ்வணுக்களே விடாது, திருட்டிக்கின் இச்சூக்கும அணுத்தோன்றுமா? ஓர்ஞான்று தோன்றினும், முதலெனப்படுமா? படாதன்றே?

அன்றியும், இச்சூக்கும அணுக்களாக விகற்புறுதற்கு முற்பொழுதும் இவ்விகற்பங்கள் மாறிவிடும் பிற்பொழுதும் உள்ளனயாவை? கருவியைக்கொண்ட கட்புலனுக்கு இத்துணைத்தெனத் தோன்றுத அணுக்களன்றே? அவ்வணுக்க ளிருப்பில் இச்சூக்கும அணுக்கருண்டா? இல்லையே? இல்லையெனின், இவைகள் எஞ்ஞான்றிருக்கின்றன? இடைஞான்றிருக்கின்றனவெனின், முற்பொழுதும் பிற்பொழுதுமுள்ள அத்தோன்று வணுக்களிருப்பில் இச்சூக்கும அணுக்க ளில்லாத்தகைமைபோல், இவ்விடைஞான்றுள்ள சூக்கும அணுக்க ளிருப்பில் அத்தோன்று அணுக்க ளிருக்குமா? இருக்கின்றதெயெனின், முற்பொழுதும் பிற்பொழுதுமுள்ள அவ்வணுக்க ளிருப்பில் இவ்வணுக்க ளுண்டாயிருக்கவேண்டும். அங்ஙனமுண்டா? இல்லையே! இங்ஙனமிருக்க, அவ்வணுக்கள் இவ்வணுக்களில் எங்ஙன மிருக்கும்? ஓர்பொருளிருக்கும் ஞான்று அப்பொருட்கண் ஏனைய பொருள் எங்ஙன மிருக்கும்? இருப்பதாலெனில், அப்பொருட் கியைந்த தசபுறங்களுள் ஓர் புறத்திலிருக்கும். அத்தோன்று அணுக்கள் இச்சூக்கும அணுக்களுக்கு இயைந்த தசபுறத்துள் வந்தப்புறத்தில் இருக்கின்றன? இவ்வணுக்கள் ஓர் பொருளாலுலன்றே அங்ஙன மிருக்கும். முன்பினிடை யென்கிற முபமபொழுதில் ஓர்ஞான்றேனும் இச்சூக்கும அணுக்கள் முதலாகவுண்டா? இல்லையே! இருப்பதுபோற் றோற்றும் தோற்றன்மாத்திரமே யன்றி வேறன்றே! இஞ்ஞான்றிருக்கும் சூக்கும அணுக்கள் ஒவ்வோர் முதலாயின், அவைகள் மாறுகானேன்? மாறிய பின்ஞான்று அவ்வணுக்க ளிருப்பா திருப்பானேன்? அவ்வணுக்கள் இஞ்

ஞான்றேது? முன்ஞான்றும் இடைஞான்றும் இருந்தவை களா? அன்றி நூதனமாக உண்டானவைகளா? நூதனமாக ஓர் பொருளும் உண்டாகாதே? உண்டாகு மெனின், இல்லது வாராதென்னும் ஆட்சேபம் இருக்கின்றதே! முற்பொழுதும் பிற்பொழுதும் இல்லாதது இடைப்பொழுதில் உண்டாகுமா யின், அம்முற்பொழுதும் பிற்பொழுது முள்ளது இடைப் பொழுதில் ஒழிந்துவிட வேண்டுமன்றே? இவை பொருத்த மின்று.

இங்ஙன மிருத்தலின், அவ்வணுக்கள் எஞ்ஞான்றும் மாறுத நித்தியத்துவமும் இவ்வணுக்கள் அநித்தியத்துவ மும் உடையவை ஆகின்றன. இங்ஙனமாக நிச்சயித்திருக் கும் விவேகத்தை யன்றே நித்தியா நித்தியவத்து விவேக மெனப்படுவது? இவ்விவேகம் பொருளெனற் கியையாத சூக் கும அணுக்களைப் பொருளென்றுணரலாமா? பொருளென்று உணர்வதால் விவேகமெனப்படுமா? விவேகமென்பது சூக்கு மத்திற்குஞ் சூக்குமமாகப் பொருளை உணர்வதாகலின், இச் சூக்கும அணுக்களை ஓர் முதலென்றுணரும் உணர்வை முன் ஞான்று அறிவென்றது பூர்வபட்சமாகி இஞ்ஞான்று அறி யாமையெனச் சித்தாந்த மாயிற்றென்க. இத்தூல அணு ஆரா ய்ச்சியில் தேர்ந்தவை எவையெனின், ஆறுவது அடுக்காயுள் ள அறிவறியாமைப் பேதமும் இவற்றிற்கு மேல் உறுதிப் பொருள்களாயுள்ள அதிட்டானமாகிய தோன்று அணுக்க ளுமாமென்க.

ஆ று வ து

மண்ணின் சூக்கும அணுவென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்

மூ ற் றி ற் று.

ஏழாவது

மண்ணின் பரமாணுவென்னும் சத்தார்த்த ஆராய்ச்சி விளக்கம்.

வெண்பா.

இந்தவா ராய்ச்சியின்க ணேய்ந்தபர மாணுவென
லெந்தவிதத் தும்மனர்த்த மெய்தியே—யிந்தவெளிப்
பாவமதா கின்றிலங்கப் பக்குவிகட் காகுமே
பாவித்தற் கேதுருக்கள் பாழ்.

எங்ஙனமெனின், இதுகாறும் மட்பொருளினது சூக்கும அணுவை ஆராய்ந்த ஆராய்ச்சியில் தேரப்பட்டவை கருவியைப் பெற்ற கட்புலனுல் இத்துணைய தெனக் கணித்தற்கரிய அணுக்களாகலின், அவ்வணுக்கள் என்ன அணுக்க ளெனப்படும் ? அவ்வரிய அணுக்கள் எவற்றினுக்கும் அதிட்டான காரணத்துவ மாகலின், பரமாணுவுக்கும் பரமாணுக்களென்பாமெனின், அவற்றுள் ஒவ்வொன்றையும் பொருளென்று உணரும் உணர்வு அதிட்டான அறிவெனப் படுமா ? அன்றிக் கற்பித அறிவெனப்படுமா? கற்பிதமாவது பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் ஆரோப அறிவென்க. அப்பரமாணுக்களை உணர்வது அதிட்டான அறிவெனப்படுமெனின், இதனுல் அப்பரமாணுக்கள் ஒவ்வொன்றும் சத்துப்பொருளென்று ஆகின்றன.

ஆகின்றதால் அவ்வணுக்கள் திரிசியப் பொருள்களா ? அன்றி அதிரிசியப் பொருள்களா? அவைகள் திரிசியப் பொருள்களாயின் அதிசூக்குமமாகிய கருவிகளைக்கொண்டு உண

ருங் கட்புலனுக்கு எட்டுமல்லவா? எட்டாமையால் அவைகள் அதிரிசியப் பொருள்களெனின், அவ்வதிரிசியப் பொருள்களென என்ன அளவையால் ஏற்கப்படுவன? அனுமான அளவையால் ஏற்கப்படுவனவெனின், அவைகள் தோற்ற அனுமான அளவையா? அன்றி எதார்த்த அனுமான அளவையா? எதார்த்த அனுமான அளவையாமெனின், அனுமானமென்பதற்கு இலக்கணமாவது பிரத்தியட்சமாயுள்ள சத்துப் பொருளைக்கொண்டு அப்பிரத்தியட்சமாயிருக்குஞ் சத்துப் பொருள் ஒன்று உண்டெனக் கோடலன்றே? அஃது ஓர் மலையின்கண் பிரத்தியட்சமாகக் காணப்படும் உண்மையாயுள்ள புகையைக்கொண்டு அப்பிரத்தியட்சமாயிருக்கும் அக்கினியொன்று உண்டெனக் கோடல்போலாம். இது எதார்த்த அனுமானந்தான், ஷை மலையின்கண் நின்றெழுவது வெண்மேகங்களாயின், அவ்வெழுச்சியைப் புகையென மயங்கி அம்மலையில் அக்கினி உளதாகக் கோடல் என்ன அனுமான மெனப்படும்? இஃது தோற்ற அனுமானமன்றே?

இவ்வாறே ஷை பரமாணுக்களென்பவை மேலே அதிரிசியமாயிருக்கின்றனவென இங்கே எத்தப்பிரத்தியட்ச உண்மைப் பொருளைக்கொண்டு கணித்தது? மண்ணினது ஷைமகத்தூருவ முதல் அதாவது இப்பூமிமுதல் சூக்கும அணுக்கள் காறுமுள்ள பெரிது சிறிதாகிய பேதங்களைக்கொண்டு கணித்ததெனின், இங்ஙனமாகிய பெரிது சிறிதான பேதங்கள் சொல்மாத்திரமெனவும் ஆரோபமெனவும் முன்னொன்றே முடிந்திருக்கின்றனவே! இவற்றைக்கொண்டு மேலே மூடிவாகிய பரமாணுக் குழாங்கள் உண்டெனக்கோடல் தோற்ற அனுமான அளவை யெனப்படுமன்றே? பிரத்தியட்சமாகிய மகத்தணுப்பேதங்கள் அதிட்டானப் பரமாணுக்களின் சேர்க்கையாயிருக்கின்றமையின், இச்சேர்க்கையைக்கொண்டு

அனுமானிப்பதால் தோடமென்னையெனின், இம்மகத்தணுச் சேர்க்கைகள் பொருளின்றித் தோற்றல்மாத்திரமென்னத் தெளிந்துழி இவற்றை நாடுந்திருட்டியானது நீங்குமல்லவா? இது நீங்கிய ஞான்று இவ்வணுமகத்துத் தோற்றங்கள் உண்டாயிருக்குமா? இராதன்றே? இங்ஙனம் இந்நிலையில் நிற்கில் மேலே அதிட்டான அணுக்கள் உண்டெனப்படுமா? படாதன்றே? உண்டெனக்கோடல் நம்பாவனையேயன்றிக் கிஞ்சித்தும் எதார்த்தம் அன்றென்க.

இதனால் பரமாணுக்கள் இன்றென்னலாமோ வெனின், அதற்குக் கற்பனைகளைக்கொண்டு கணிப்பானேன்? அங்ஙனம் கணிப்பதனால் முதலின்றேவெனின், பொய்யைக்கொண்டு கணிக்கபடுவதும் பொய்யாகுமன்றே? அங்ஙனமாயின் பொய்யாகிய உலகைக்கொண்டு மெய்யாகிய ஆன்மா ஒன்று உண்டெனக் கோடலும் பொய்யாகவேண்டுமே யெனின், ஆன்மாவாகிய நானென்னும் பொருள் அனுமானிக்கப்படுவதுதானே? அனுமானிக்கும் பொருளாயின் இருவகைநிட்டை எய்துவது யாதுக்கு? பிரத்தியட்ச மாதற்கன்றே? அன்றியும், அவத்தாத்திரயம் உபாதித்திரயம் முதலியனவாக விளங்குவது யாது? நானென்பதல்லவோ? அங்ஙனமே ஷட்சமாதிகளில் சுயம்பிரகாசமாக விளங்குவது யாது? அஃதும் நானென்பதன்றே? ஈரிடத்தும் நானென்பது விளங்குகின்றதே? அஃது விளங்காத காலமுமுண்டோ? இல்லையே? பரமாணுக்கள் உண்டென்பது எஞ்ஞான்றேனும் விளங்கினதுண்டா? கிஞ்சித்ஞான்றும் இல்லையே? முற்றும் அனுமானிக்கப்படும் கற்பனைகளாயிற்றே? நானென்பது அங்ஙனம் அல்லவே? எஞ்ஞான்றும் அதிட்டானமாயும் ஆரோபமாயும் விளங்குகின்றதே? அவை சமாதிக்கண் வியாபக விளக்க உணர்வாயும் அச்சமாதி கலைந்த ஞான்று அவத்

தாத்திரய விகாரமாயுமென்க. நானென்பது ஞான அஞ்ஞான மாக விளங்குகின்றதாயின், இப்பொய்யுலகைக்கொண்டு ஆத்ம நிச்சயம் செய்வானேனெனின், தேகமே ஆத்மா போகமே முத்தி, கண்டதேகாட்சி கொண்டதேகோலம் எனக்கிடக்கும் நாத்திக அனுபவத்தை அகற்றுதற்கு அங்ஙனம் கூறியதே அன்றி அஃது எதார்த்தம் அன்றென்க.

இதனால், 'கூடி பரமாணுக்கள் இல்லையெனப் படு மோவெனின், சேர்க்கையாயுள்ள மகத்தணுப் பேதங்கள் திருட்டியில் தாக்காது நிற்றற்குச் சற்றும் திறமையின்றி வெறுஞ் சொல்மாத்திரமாக இவற்றைக் கற்பனைகள் எனக் கூறி அகத்துள் மெய்யெனக் கொண்டிருப்பதே முதல்மயக்க மாயின், இம்மயக்கம் காரணமாக மேலே அனுமானித்துப் பொருள்கோடல் இரட்டித்த மயக்கமன்றே? முதல் மயக் கைக் களைந்துவிட்டால் இதைபபற்றி வந்த இரட்டித்த மயக் கம் எங்ஙனந் தலைகாட்டும்? ஆகலின் இதனை நன்கு உற்றுண ர்க. மரத்தினது சாகை தளிர் இலை முதலியவைகளை அசைப் பிக்கும் காற்றானது கட்பொறிக்கு எட்டாமையின் அஃது இன்றென்னலாமோ ? இதுபோல் சேர்க்கையாயுள்ள மகத் தணுப்பேதங்கள் தோற்றல்மாத்திரமாகவேனும் இருக்க இவ ற்றிற்குமேல் அப்பிரத்தியட்ச உபாதான காரணமான பர மாணுக்கள் ஏன் இன்றாகுமெனின்? காற்றென்பது கட்பொ றிக்கு அப்பிரத்தியட்சமாயினும் மரத்தினது இலை முதலிய வைகள் அசையினும் அசையாவிடினும் பரிசானுபவம் கா ரணமாக ஏற்று அனுபவிக்கும் அனுபவங்களால் இருக்க ஏற் கற்பாலதே.

இதுபோல், சேர்க்கைகளாயுள்ள மகத்தணுப்பேதங்கள் இல்லாஞான்று பரமாணுக்கள் உளவென்பதற்கு என்ன அனு

பவம் இருக்கின்றது? கிஞ்சித்தும் இல்லையே? இல்லாதிருக்க உளவெனக் கோடல் சேர்க்கைகளாகிய கற்பனைகள் காரணமாகவன்றே? இவற்றுல் பரமாணுக்கள் உளவாகவழங்குவது விவர்த்தவாதமே அன்றி வேறன்றென்க. இதுநிற்க, சேர்க்கைகளாகிய மகத்தணுப்பேதங்கள் தோற்றல்மாத்திர மென்று ஏற்புழி இத்தோற்றங்களை நாடுக் திருட்டியை மாற்ற வேண்டுமா? அன்றி விடாது உணர்ந்துகொண்டிருக்க வேண்டுமா? ஏனெனின், இக்கற்பனைகட்கு மேல் அதிட்டான பரமாணுக்கள் இருக்கின்றதாகக் கொண்டதனாலென்க. அங்ஙனம் அப்பரமாணுக்கள் இருப்பெனக்கொண்டுழி, அவற்றை நாடாது இக்கற்பனைகளை முதலென நாடிக்கொண் டிருப்பது தானே விவேக மெனற்பாலது? இக்கற்பனைகளை ஒவ்வோர் முதலாக நாடிக்கொண் டிருத்தற்கு மேல் முடிவாகப் பரமாணுக்கள் உளவென வழங்குவானேன்? அங்ஙனம் வழங்குவது விவேகமாயின், இம்மகத்தணுக் கற்பனைகளை நாடுவது அவிவேக மெனப்படுமே! அன்றி, இவற்றை நாடுவது விவேகமாயின், மேல் பரமாணுவாதஞ் செய்தல் அவிவேகமெனப்படுமே! விவேகமென்பது பொருளைப் பொருளென்று உணர்வதன்றே? இத்தோற்றங்களைக் கிஞ்சித்தும் நாடாது மேல இருக்கின்றதாக நிசயித்துக்கொண்ட அப்பரமாணுக்களை விடாது திருட்டிக்கவேண்டுமே!

அன்றியும், மகத்தணுப் பேதங்களை ஆராய்ச்சி செய்ததிடத்தால் இவற்றைக் கற்பனைகளெனக் கண்ணுற்று வந்தாலும், தேகபோகதாகஞ் சிறிதுமே அறுதுழி, ஷிதிபாவம் நாளுக்குநாள் தளர்ச்சியுற்று முன்போலவே இவற்றை ஒவ்வோர் முதலாக் நாடவேண்டிவருமே! வர்ன், நமது கருத்தின்வண்ணம் கொண்ட ஷி பரமாணுக்களை அபபொழுதேனும் எட்டவேண்டுமன்றே? எட்டாதுழி, கற்பனைக

ளாகிய இவ்விபரீதத் தோற்றங்கள் எங்ஙனம் நமது திருட்டியை விட்டகலும்? அகலாதாகலின்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எனக் குறள் மகாவாக்கியங் கூறியிருக்கின்றதே! இவ்வாக்கியத்தையேனும் கண்ணுறவேண்டுவது அவசியமன்றே? எட்டப்படுவதை எவ்வித்தத்தாலேனுங் கட்டமுற்று எட்டலாம், எட்டப்படாததை எட்டப்புகுவது விவர்த்தமன்றே? இதுபோல், ஷ பரமாணுக்கள் எட்டப்படுவனவன்றே எனின், அவ்வணுக்கள் தமக்குத்தாமே உள்ளவெனப்பட்டனவா? அன்றி வேறொன்றினுக்கு உள்ளவெனப்பட்டனவா? தமக்குத்தாமே உள்ளவெனப் பட்டனவெனின், அவ்வொவ்வோரணுவும் தன்னைத்தானே அறிந்துகொண்டிருக்கவேண்டும்! அங்ஙன மில்லாமையின், வேறொன்றிக்கே உள்ளதெனப்பட்டன. மேலும், கட்பொறிக்கு உள்ளவெனப் பட்டனவா? அன்றிக் கருத்தினுக்கு உள்ளவெனப் பட்டனவா? கருத்தினுக்கே உள்ளவெனப்பட்டன எனின் திரிசியமெனபபட்டனவா? அன்றி அதிரிசியமெனப் பட்டனவா? திரிசியமென்பது நாமரூபமும் அதிரிசியமென்பது சூனியமும் ஆகின்றன. அவ்வணுக்கள் சூனியப்பொரு ளாகுமா? சூனியமென்பது ஒன்றுமில்லாமையன்றே? அதாவது மனம் வாக்குக் காயம் இம்மூன்றினுக்கும் படாததென்க.

அணுக்கள் இங்ஙனம் கூறியதுபோலன்று, ஷ மனம் முதலிய திரிகரணங்களுக்கும் எட்டும் பொருள்களா யிருக்கின்றனவே! காயத்திற்கு எங்ஙனம் எட்டும் பொருள்களெனின், மகத்தணுப்பேதங்களாகச் சேர்க்கையுற்றுக் காயத்

திற்கு அனுபவப்படுவன் யாவை? அவ்வணுக்களன்றே? அவைகள் சேர்க்கையுற்ற ஞான்று காயத்திற்கும் சேர்க்கை யுறுஞான்றுகருத்திற்கும் வாக்குக்கும் அனுபவப்படுகின்றன. அன்றியும், புறக்காட்சி யெனவும் அகக்காட்சியெனவும் இரு வகையின. இவற்றுள், புறக்காட்சி யென்பது இத்தூல வடிவம், அகக்காட்சி யென்பது சூக்குமம் சாயை பாவனை முதலியன. இவ்விதக் காட்சிப் பேதங்களுள் அவ்வணுக்கள் எவை யெனப்படும்? தூல வடிவங்களெனின், கட்புலன் பூதக்கணங்களையைப் பெற்றுணரும் ஞான்றும் பெறுதுணரும் ஞான்றும் தோற்றுந் திரிசியங்க ளெனப்படும். சூக்கும வடிவங்களெனின், கருத்திற்கு அதிஷ்டப்பங்களாக மதிக்கப்பட்டன வெனப்படும். சாயைகளெனின், அவை ஒன்றின தெனப்படும். அன்றியும், அவை தோற்றன்மாத்திர மெனவும்படும். பாவனைகளெனின், பாவிப்பான யன்றி இன்றெனப்படும். இத்தன்மைத்தெனக் கணிக்கப்படாதவையெனின், சூனியப் பொரு ளெனப்படும்? படுவதுமன்றி, அச்சூனியம் பல தூட்பங்க ளெனப்படுமா? அது சேர்க்கையுற்று மகத்தணுவாகிய உருவபேதங்க ளாகுமா? இங்ஙனமிருக்க, பரமாணுக்கள் என வழங்குவானேன்? அதி தூட்டப் பொருள்களெனக் கணிக்கப்பட் டிருக்கின்றதே! அங்ஙனம் பொருள்படாமலா அவற்றை தூட்பப் பொருள்களெனக் கருதினார்? அங்ஙனம் கருதினது கருத்தன்றே? எதனால் அவை தூட்பப் பொருள் களென மதிக் கப்பட்டனவோ அதனால் அந்த தூட்பப்பொ ருள்களை எட்டுதற்கு முரணென்னை? இங்ஙனமிருக்க,

அவைகள் எட்டப்படாவென்றது என்னை? கட்புலனு கு எட்டும் பொருள்களை அக்கட்புலனும் அதன் காரண மாகிய கருத்தினாலும் எட்டப்படும். கருத்தினுக்கு எட்டுவது கட்புலனெட்டப்படாமல் கருத்தினுக்கே கூடும். முற்பொ

முது காணப்பட்ட நாமரூபங்களைப்போல் இப்பொழுது உன்னுந்தோறும் அவைகளாக அகத்தில் தோற்றும் நாமரூபங்களைக் கண்டுணர்வது கட்பொறியல்லவே! கருத்தன்றே? அங்ஙனமே, நீடி பரமாணுக்களை உணர்தற்கு இயைந்தது கட்புலனே? அல்லவே! கருத்தாகலின் இனியேனும் கருத்தறிதற்கு முரணென்னே ? அப்பரமாணுக்கள் எத்துணை எத்துணையெனப் பொருள் பட்டனவோ அத்தனை அத்துணையென உணரவேண்டுமே ! ஏனெனின், அவைகள் அதி நுடபமாக இருக்கின்றவெனக் கருத்து மதித்ததலுலென்க. ஆகலின், இபபோது அத்துணையதெனக் கண்ணுறுதற்கு முரணென்னே? முற்பொழுதே கருததிலுல் ஊநிக்கப்பட்டிருக்கின்றதாகலின், இப்பொழுது அத்துணை அத்துணையாக இக் கருத்து நிற்றற்கு மாறில்லையே ? கருத்தானது எத்துணை எத்துணையதென மதித்ததோ அத்துணை அத்துணையாகப் பல்ஞான்றும் பழகப்பழக அத்துணை அத்துணையாக நின்று விடுமன்றே? அங்ஙனம் நிற்குங்காறும், இச்சா ஞானக் கிரியை எழுதற்கு இடமுண்டாமோ ? அவற்றுல் இன்பதுன்பத்தாக்குகள் சிறிதேனும் உண்டாமோ ? அன்றியும் சுகாகாரமாயும் நிற்றற்கு இயையுமன்றே ? அச்சுகம்போன்ற சுகம் மகத்தணுப பேதங்களிலுண்டோ? இதனை, எந்த ஆறிஞர்கள் ஏலார் ? பொருளைப் பொருளென்று உணரவேண்டுமென விதித்திருக்கின்றதே! இதனையேனும்நாடவேண்டுவதில்லையா? இபபரமாணுவுக்கு மேலுறும் ஆராய்ச்சிக்கண் செல்லாவிடினும், இந்நெறியிலேனும நிற்கின கரணேந்திரியங்கள் சேட்டைக ளற்றிருத்தற்கு முரணின்றென்க.

கருத்தானது தான்சித்துப்பொருள் நீபரமாணுக்கள் சடப்பொருள், இங்ஙனமிருக்க, கருதது[1]பரமாணுத்துணையாக நிற்குமோவெனின்,

உத்தம வாதநூல்.

"சிந்தைசக மொன்றல்ல சிந்தை சகமானீர்
சிந்தைவடி வாக்கைக்கத் தேர்கிலீர்—சிந்தை
சுயஞ்சோதி லேசமன்றே தோலாப் புலவீர்
வயப்பமி னல்லார்பால் வந்து."

ஈன்றருளி யிருக்கின்றதில், நமது ஒவ்வொரு சிந்தையும் சுழுத்தியவத்தை நீங்கலாக ஏனைய ஈரவத்தைக் கண்ணும் நான் நீ அவன் அவள் அதுவாகிற நாமரூப ஆகாரமா யிருக்கின்றதா? அன்றிச் சுழுத்திக்கண் உள்ள சூனியவாகாரமாக வேனும், அஃதுமின்றிச் சமாதிக்கண் உள்ள சின்மாத்திராகாரமாகவேனும் இருக்கின்றதா? நாமரூப ஆகாரமாகவே இருக்கின்றதெனின், ஒவ்வொரு நாமரூபமும் அணுக்கள் சேர்க்கையா? அன்றிச் சுயம்பா? சேர்க்கைகளாமெனின், சேர்க்கையுற்றுக் காணப்படும் ஒவ்வொரு நாமரூபமும் மகத்தெனப்படுமென்றே? இம்மகத்தாகாரமாக இல்லாத சிந்தையென்பது இவ்விரவத்தைக் கண்ணும் உண்டோ? இல்லையே! ஒவ்வொரு சிந்தையும் சாக்கிராவத்தைக்கண் உள்ள நாமரூபங்களை அறிந்துகொண்டிருக்கின்றது மாத்திரமேயன்றி, எங்ஙனம் அதன் அதன் ஆகாரமாக இருக்கின்றதெனின், சொப்பனத்தின்கண் சாக்கிராவத்தா நாமரூபங்களைப்போல் தோற்றுவது யாது? இவ்வவத்தா நாமரூபங்கள் அச்சொப்பனத்தின்கண் வருவதுண்டா? இல்லையே! சாக்கிராவத்தைக் கண் எவ்வெச்சிந்தை நாமரூப ஆகாரப்பட்டு அழுந்தினதோ அவ்வச் சிந்தையும் சொப்பனத்தின்கண் அவ்வவ் நாமரூபங்களாகத் தோற்றுகின்றது.

ஈங்கு இவற்றின் ஆகாரம் ஆகாதழி, ஆங்கு இவற்றைப்போல் எங்ஙனம் தோனறும்? இவ்வவத்தையில் ஒருயிருக்கு

நான் எனதாகத் தோன்றும் நாமரூபங்கள் மற்றோர் அவத்தையில் மற்றோ ருயிருக்கு நான் எனதாக ஏன் தோன்றவில்லை? எவ்வெவ் வுயிருக்கு எவ்வெத் தேகபோகங்கள் நான் எனதாகத் தோற்றுகின்றனவோ அவ்வவ் வுயிருக்கும் அவ்வத்தேக போகங்களே நான் எனதாகத் தோற்றுகின்றன. ஒவ்வோருயிரும் சாக்கிராவத்தைக் கியைந்த அவ்வவ் நாமரூபமாக ஆகின்றதும், சொப்பனத்தின்கண் அவ்வவ் நாமரூபங்களாகத் தோற்றுகின்றதும், மகத்தாகாரமாக நின்றவிடத்தா? அன்றி வேறுகாரமாக நின்றவிடத்தா? மகத்தாகாரமாக நின்றவிடத்தெனின், சிந்தையானது மகத்தாகாரமாகவே நிற்பதற்குத்தானே அடிமைப்பட் டிருக்கின்றது? இம்மகத்தாகாரமாக நிற்பதற்கு அடிமைப்பட் டிருப்பது போல் வே பரமாணுக்களின் ஆகாரப்பட அடிமைப்பட் டிருக்கக்கூடாதோ? யாவும் பழக்கங் காரணத்தானே? அன்றியும்,

ஒவ்வொருவரும் எவற்றின்காரணமாகஎஞ்ஞான்றும் சுகித்துக்கொண்டு வருகின்றனர்? வேபரமாணுக்களானவை சேர்க்கையுற்றிருக்கின்ற மகத்தணுப்பேதங்களின்காரணமாகவன்றே? ஆங்ஙனம் நாம் சுகித்தற்கு இயைந்தெழும் பிரியமானது நமது பிரியமா? அன்றி அவ்வம்மகத்தணுப் பேதங்களின் பிரியமா? அவ்வவ்வணுமகத் பேதங்களின பிரியமெனின், அணுமகத்தாகிற ஒவ்வோர் நாமரூபமும அப்போதைக்கப்போது அப்பிரியமாகத் தோன்றுவானேன்? அவைகள் அப்பிரிய வடிவங்கள் அல்லவே! நாம் இவைகள்மேல் வெறுப்புற்றதனல் இவைகள் அப்பிரியமாகத் தோற்றுகின்றனவெனின், இவைகளேயன்றி நமக்குப் பிரியமென்பது வேறுகக் கிஞ்சித்தும் இலலாதிருக்க, இப்பிரிய வடிவங்களில் நாம் வெறுப்புறுவானேன்? நாம் சற்றேனும் விருப்பு அற்றவர்களா? அல்ல

வே! இஃதன்றியும், எவ்வெவ் நாமரூபம் பிரியவடிவாகத் தோற்றுகின்றதோ அவ்வவ் நாமரூபமும் மீண்டும் அப்பிரிய வடிவாகத் தோற்றுவானேன்? ஏனெயர்கள் அவற்றை வெறுப் புற்றதாலெனின், நாம் விருப்புற்றதனால் பிரியவடிவாகத் தோற்றுகின்றதாக்கும்! நமக்கு அப்பிரியவடிவாகத் தோற் றும் ஞான்றில் ஏனெயர்க்குப் பிரிய வடிவாகத் தோற்றுவா னேன்? அவ்வேனெயர்கள் அவற்றின்மேல் விருப்புற்றதால் அங்ஙனம் தோற்றுகின்றதெனின், நாம் வெறுப்புற்றே மாயின் அப்பிரியமாகத் தோற்றுகின்றதாக்கும்!

இங்ஙனமே எதெதன்மேல் எவ்வெவ்வுயிர் பிரியம் வைக்கின்றதோ அததுவும் அவ்வவ்வுயிர்க்குப் பிரிய வடிவா யும் எதெதன்மேல் எவ்வெவ்வுயிர் பிரியம் வைக்கின்றது இல் லையோ அததுவும் அப்பிரியவடிவாயும் தோற்றுகின்றதல்ல வா? ஆகலின், நமது பிரியத்தை எதெதன்மேல் ஏற்றி ஏற் றிய பிரியமாகப் பார்க்கின்றேமோ அததுவும் பிரியமாகக் காணப்படுகின்றன. அங்ஙனம நமது பிரியத்தை ஏற்றது பார்க்கும்ஞான்று அபபிரிய வடிவாகக் காணப்படுகின்றன. கற்பனைகளாயுள்ள மகத்தனுப் பேதங்களை ஒவ்வோர் முத லென மயங்கி அவற்றின்மேல் தற்பிரியத்தை ஏற்றி ஏற்றிச் சுகிப்பதுபோல் எதார்த்தமென்று ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கின்ற பரமாணுக்களின் மேல் நமது தற்பிரியத்தை ஏற்றி ஏற்றிச் சுகிகலாகாதா? கற்பனைகளின் மேல் ஏற்றி அனுபவித்தலை மிக்க சுகமாக இருக்கின், எதார்த்தங்களின் மேல ஏற்றி அனுபவித்தல் எத்துணைச் சுகமெனபபடும்? கற் பனைகளை ஒவ்வோர் முதலெனக்கொண்டு உணர்தல் மயக்க மென்பதா? அன்றித் தெளிவென்பதா? மயக்கமென்பது தானெனின், அக்கற்பனைகளின்மேல் தற்பிரியத்தை ஏற்றி ஏற்றிச் சுகித்தல் இரட்டித்த மயக்கமன்றே? பொரு

ளல்லாத மகத்தணுக்களின்மேல் ஏற்றி ஏற்றிச் சுகித்துக் கொண்டு வருவதைப்பார்க்கிலும், பொருளாகச் சம்மதிக்கப் பட்டிருக்கின்ற பரமாணுக்களின்மேல் ஏற்றி ஏற்றிச் சுகித் துக்கொண்டு வருவது எத்தணைச் சுகமூம விவேகமுமென்ப படும்? இம்மட்டிலேனும் பொருளைப் பொருளென்று உணர் ந்து சுகிக்காவிடில், இதற்குமேல் பரமாணுக்களைக் கற்பனை களாக்கும் ஆராய்ச்சியிற் செல்லுதற்கு எங்ஙனம் வழிவிடும்? பரமாணுக்களுங் கற்பனைகளாகுமோ எனின், அப்பரமா ணுக்களுள் ஒன்றை நன்கு ஊகிக்குதும். எங்ஙனம் எனின்,

அவ்வணு பொருளென்பதா? அன்றித்தெளிலும்குண மூம்என்பதா? பொருளென்பதுதானெனின், சுயமபப்பொரு ளென்பதா? அனறி விகாரப்பொரு ளென்பதா? சுயம்புப பொருள்தா னெனின், ஏகதேசபபட்டிருக்கும் பொருளா? அதாவது கண்டப்பட்டிருத்தலென்பது-அன்றி நிறைந்தி ருக்கும் பொருளா? ஏகதேசபபட்டிருக்கும் பொருள்தானெ னின், அஃது புறம் உற்றிருக்கும் பொருளா? அனறிப புறம் அறறிருகும் பொருளா? புறம் உற்றிருக்கும் பொருளெ னின், தசபுறமும் உற்றிருக்கும் பொருளா? அன்றி இரண் டொருபுறம் உற்றிருக்கும் பொருளா? தசபுறமும் உற்றிருக் கின்ற பொருளெனின், அத்தசபுறமும் யாது சூழ்ந்திருக் கின்றது? ஒன்றும் இல்லையெனின், யாதொன்றும் இல்லா மையன்றே சூனியமாகிற வெளிப்பொருள் என்பது? அங் ஙனம் சூழ்ந்து விளங்கும் வெளி என்பது வியாபகமுற் றிருக் கின்றதா? அன்றி ஏகதேசம் உற்றிருக்கின்றதா? வியாபக முற்றே யிருக்கினறதெனின், அவ்வியாபகம் நிறைவு உற்ற தெனப் பொருள்படுகின்றது! அன்றியும் அவ்வியாபகம் உட் புறம் அற்றிருக்கின்றதா? அன்றி உட்புறம் உற்றிருக்கின் றதா? அவ்வியாபகம் மேல் கீழ் முதலியனவாக வழங்கும்

பத்துத் திக்குகள் என்னும் பேதங்கள் இறந்திருக்கின்றதால் புறமும், நீக்கம் என்பது இல்லாத நிரந்தரம் உற்றிருக்கின்றதால் உள்ளும் அற்றிருக்கின்றதெனின், உட்புறம் அற்றிருக்கும் வெளியின்கண் உள்ள பரமாணுவாகிய நுட்பப்பொருள் புறம் உற்றிருப்பதுபோல் உள்ளும் இடையும் உற்றிருக்க வேண்டுமே!

அவ்வணு நுட்பம் சுயம்புப் பொருளாக இருக்கின்றமையால், உள் என்பதும் இடை என்பதும எங்ஙனம் உற்றிருக்குமெனின், இவற்றால் வெளியென்பது நிறைவு அற்றதாக இருக்கவேண்டுமே! வெளியென்பது ஓர் பொருளானலன்றே, அவ்வெளியைப்பற்றி நாம் விவகரிக்கலாமெனின், ஷே அணுவென்பது நிகழுந்தன்மையதா? அன்றி நிகழாத் தன்மையதா? நிகழுந் தன்மையதெனின், அஃது எங்கிருந்து நிகழப்படுகின்றது? தானே நிகழப்படுவது எனின், எதனால் நிகழுவது எனக் கேட்கின் அன்றே தானே நிகழுவது எனக் கூறவேண்டும்? அதற்குமேலே வருகின்ற ஆட்சேபத்தை விளக்கலாம். இஞ்ஞான்றெழுந்த கேள்வி அங்ஙனம் அல்லவே? அவ்வணு எங்கிருந்து நிகழுகின்றது என்பதுதானே அக்கேள்வி. அங்ஙனம் நிகழுவதற்கு ஓர் இடம் வேண்டுவது இன்றேயெனின், இடம் அற்றிருக்கின்றது ஏகதேசப்பொருள் அன்று, உள்புறம் இடை யென்பவை அற்றிருக்கும் நிறைந்த பொருளெனப்படும். வெளியானது ஓர் பொருள் அல்லவே! அதனை இடப்பொருளாகக் கோடற்கெனின், அதனை அன்றி வேறு எதனை இடமாகக்கொண்டு நிகழுகின்றது? வேறே இடமென்பது இன்றென்றுணர்க. இதுநிற்க, ஷே அணு உள்ளும் இடையும் அற்றிருப்பதாயின், அதைச் சூழ்ந்த வெளிப்பொருள் நிறைவு அற்றிருக்கவேண்டுமே என்பதற்கு என்செய்வது? உள்ளும் இடையும் அற்

றிருக்கும் சுயம்பு அணுப்பொருளாகலால் அதைச் சூழ்ந் திருக்கும் நிறைவு அற்றிருக்க வேண்டுமென்பது என்னை யெனின்,

உள்புறம் இடை என்பவற்றை ஏலாத ஓர் நிறைவில் புறம் உற்றிருக்கின்ற மற்றோர்பொருள் இருக்கின்றதாயின், அப்பொருளென்பது தொழிலுங் குணமுமாக இருக்குமா? அன்றிச் சுயம்புப் பொருளாக இருக்குமா? சுயம்பாகவே இருக்குமெனின், உள்ளும் புறமும இடையும் அற்றிருக்கும் நிறைவு தனக்கு எதிர்மறையாக இருக்கும் வேறு பொருட் டுணைக்கு எங்ஙனம் இடந்தரும்? அவ்வணு நுட்பத்திற்கு இயைந்த அணு நுட்ப நீர்ப்பொருள் வந்து தன்னைப் பரிசிக் கின், அந்நீரானது அதன்கண் சென்று முழுதும் வியாபிக்கு மன்றே? அந்நீர் வியாபித்தற்குத் தான் இடங்கொடுக்குமன் றே? அங்ஙனம் தான் இடங்கொடுத்தற்குத் தன்பால் யாதி ருக்கின்றது? தன்பால் வேறொன்று மின்றித் தானே இருக் கின்றதெனின், தத்தம்பால் வேறொன் றிருப்பதனாலன்றே மகத்தணு முதலிய பேதங்களுள் ஒவ்வொன்றும் தன்பால தன்பால் என வழங்கப்பட்டு வருகின்றது. அவைகள் உள்ளி லும் இடையிலும் இடம் இருப்பதனாலன்றே? நீர்ப்பொ ருளே ஒவ்வொன்றுந் தன்பால் ஏற்கப்படுகின்றது. எங்ஙன மெனின்,

நீர்ப்பொருளானது மட்பொருளைப்போல் பரமாணுத் துணையாயினும் இவ்விரண்டணுவுக்கும் மிக்க பேதமிருக்கின் றன. அவற்றுள் மட்பொருள கடினத்துவமாகிய அணு நீர்ப் பொருள் நெகிழ்ச்சித்துவமாகிய அணு. கடின அணுத்து வம் தன்னினதேதாயினும் தான் சேர்ந்திருக்குஞான்று இரண் டணுவும் ஒன்றுபடாதி வேறுபட்டே இருகுகும். இங்ஙன

மிருக்கு மிவ்விரண் டணுக்களும் ஒன்றேடொன்று சேர்தல் பிறவினையா லன்றித் தத்தம் வினையினலன்று. ஷெ கெழ்ச்சி அணு தன்னினத்தோடும் தான் சேர்ந்த அஞ்ஞான் றே இரண்டென்பதின்றி ஏகமாகிவிடும். இவ்விரண்டும் சேர்ந்து ஏகமாதல் பிறவினையாலின்றித் தத்தம் வினையி னலாகின்றன. இவ்வணு இதர அணுவோடு சேரின் அதாவது மட் பொரு ளணுவோடு சேரின் அஞ்ஞான்று ஒன்றுக்கொன்று விருத்தமான இவ்விரண்டணுவு மெவ்வாறிருக்கும்? இரண்டு மண்ணணுக்கள் சேர்ந்திருப்பதுபோலவா? அன்றி இதற்கு மாறுகவா? மாறுக அன்றெனின், நீர்ப்பொருளணுவுக்கு கெ கிழ்ச்சித்துவ மிருப்பது யாதுக்கு? அந்த கெகிழ்ச்சித்துவம் மற்றொன்றில் வியாபிப்பதற்கன்றே தனக்கியற்கையா யிருக் கின்றது? அன்றியும் மட்பொருள் நீர்ப்பொருளால் கலேகின் றதா? அன்றி நீர்ப்பொருள் மட்பொருளால் கலேகின்றதா? மட்பொருள் நீர்ப்பொருளால் கலேகின்றதாயினும் மட்பொரு ளும் நீர்ப்பொருளும் தத்தம் அம்சங்கள் ஒன்றேடொன்று சேர்ந்தனவன்று அவ்வச் சேர்க்கைகளுக்கு இடையிடையே வெளிப்பொரு ளிருக்கின்றமையால் அவ்வவ்விடைகள் தோ றும் நீர்ப்பொருளானது அணு அணுவாகச்சென்று சென்று வியாபிக்கின்றதே யன்றி மூடிவான பரமாணுவில் சென்று வியாபிக்கின்ற தன்றெனின், கடினத்துவமென்பது செயற் கையற்றதா? அன்றி இயற்கையாகவே உற்றிருக்கின்றதா? இயற்கையாகவே உற்றிருக்கின்ற கடினமெனின், இயற்கைக் கடினத்துணை வெளிப்பொருள் பிளவுபட்டிருக்கவேண்டுமே! வெளிப்பொருள் நிரந்தரத்துவமென முன்னமே தீர்பபாயி ற்றே! வெளியுள்ள இடமெல்லாம் இதரவத்துக்கள் சென்று வியாபித்தற்கு விருத்தமென்னே? எவ்விதக் கடினமாயினும் அருவத்தன்மைபெற்று நிகழும் காற்றென்பது செல்லாதது மூண்டோ? அஃது செல்லுழி அதுகாரணமாக நெருப்பென்

பதும் அவ்விரண்டின் காரணமாக நீரென்பதும் செல்லு மல்லவா? அவைகள் அங்ஙனம் செல்லுதற்கு இடந்தராத அணுவு முண்டோ? இதனால் இயற்கைக் கடினத்துவ மாயி னும் சேர்க்கையுறுத அணுவுமின்முகலின் அவ்வச் சேர்க்கை கட்கு இடை இடையே வெளிப்பொரு ளிருக்கின்றது. இருக்கின்ற அவ்வவ்விடைகள்தோறும் சலப்பொருளானது அவ்வவ்விடங்கட்குத தக்க சொரூபமுற்றுச் செல்லுகின்ற தற்கு விருத்தமென்னே? அன்றியும் நீர்ப்பொருளின் குளி ர்மை அந்நீர்த் துணையே யன்றிக் கிஞ்சித்தும் புறமுற்றி தன்று. இங்ஙனமாகிய நீர்ப்பொருளை எவ்விதமான கடினப் பொருளையுங் குழித்த அக்குழியின்கண் பரிசிக்கச் செய்யின் அந்நீர்ப்பரிசம் அக்குழியில் தாக்கிப் புறம் புகுவானேன்? தான் கெகிழ்ச்சிப் பொருளாகலின் அக் கடினத்தின்கண் வியாபிக்கின்றது. இந்நீர்ப் பொருளை உட்கொண்டிருந்த ஓர் கடத்தைப் புடைத்துப் பார்க்கு ஞான்று உடைந்த அவ் வோட்டின் முழுதும் சலமிருப்பானேன்? இருக்கின்றதால் அவ்வோடு முழுதும் யாது பொருளிருக்கின்றது? வெளிப் பொருளன்றே? அவ்வெளியானது நிறைவுற்றில்லாத இதர வத்துக்களு முண்டோ? இல்லையே! இங்ஙனமிருக்க, ஒவ் வோர் மட்பொருளணுவையும் சுயம்பாகிய கெட்டிப் பொரு ளென மயங்கிக் கூறுவதென்னே? அன்றியும், ஒவ்வோரணு வையும் அக்கினி பரிசிக்குமாயின், அவ் வவற்றின்கண்ணும் உட்டணசத்தி செல்லாதாக்கும்! இஃது மிக்க விந்தை!

உட்டணசத்தியை யேலாத அணுக்களும் உண்டோ? அச்சத்தி அருவமாயிற்றே! அருவசத்தி செல்லுதற்கேனும் இடந்தரத்தக்கவையன்றே? அச்சத்தி அருவமாகுலின் அவ் வணுக்களிற் செல்லுதற்குக் கூடும். உருவமாகிய நீர்ப்பொரு ளானது சென்று வியாபிப்பதற்குக் கூடாதேயெனின், அரு வ

சத்தியேனுஞ் சென்று வியாபிப்பதற்கு இடங்கொடுத்திருக்கின்றதன்றே? இதனால் ஒவ்வோரணுக்கண்ணும் முற்றும் இடம் இருக்கின்றதே! ஒவ்வோரணுவினுலும் வெளியானது கண்டப்படுதற்கு இயையுமா? இயையாதே! இயையுமாயின், இதனால் அவ்வணுக்கள் முதல்களெனப்படும். வெளி இங்ஙனம் இயையாமையின் அவ்வணுக்கள் முதலன்றென்க. இங்ஙனமிருக்க, ஒவ்வொருவரும் பூரணமாக இருக்கும் வெளியை லட்சியார்த்தமாக நாடவேண்டுமன்றே? அங்ஙனம் நாடுழி, அணுக்களென்பது இல்லையெனப்படுமா? அன்றி உண்டெனப்படுமா? உண்டெனப்படும் எனின், வெளிப்பொருள் இல்லாத இடத்தில் இருக்கவேண்டுமே! அங்ஙனம் இன்றெனின், தோற்றல் மாத்திரமாக இருக்கவேண்டுமே! அங்ஙனமும் இன்றெனின், வெளியானது அவ்வவ்வணுக்களின் பரிமாணத்துணை இடை இடையே இன்றுகவேண்டுமே! அங்ஙனமும் இன்றெனின், அவ்வவ்வணுப்பரிமாணமுழுதும் வெளியன்றே இருக்கின்றது? அணுக்கள் தோற்றுகின்றதே யெனின், அவ்வவ்வணுவும் தத்தம் இடத்தை விட்டகன்றுழி, அந்தந்த இடத்தும் வெளிப்பொருள் உண்டென்பதா? அன்றி இன்றென்பதா? உண்டென்பதா மெனின், அந்தந்த இடத்தும் முன்ஞான்று இல்லாத வெளிப்பொருள் இஞ்ஞான்று எங்கிருந்து வந்தது?

முன்ஞான்றே இருந்ததானெனின், அணுப்பொருள்கள் என்பதேது? இருக்கின்றதே எனின், வெளிப்பொருள் முன்ஞான்று இருந்தது அன்றெனவருமே! ஆகலின், வெளிப்பொருள் முன்ஞான்றில்லாததுமன்று, பின்ஞான்று வந்ததுமன்று, எஞ்ஞான்றும் இருந்தபடி இருக்கின்றதே! இங்ஙனமிருக்கும் வெளிநிறைவில் அணுநுட்பங்கள் எங்ஙனம் இருந்து நிகழும்? இருந்துதானே நிகழுகின்றனவெனின்,

அவை பொருளாக நிகழுகின்றதன்று, ஏனெனின், வெளிப் பொருள் இல்லாத இடமென்பது கிஞ்சித்தும் இன்றுகலி னென்க. வெளிப்பொருள் இல்லாத இடமென்பது இன்று யினும், அணுக்கள் இன்றுமோ வெனின், அகம்புறம் அற் றிருக்கும் இவ்வெளிக்கண் தோற்றல் மாத்திரமாகவா? அன் றிப் பொருளாகவா? பொருளாக அன்று, முன்னான்றே வெ ளிப்பொருளைத் தத்தம்பால் நிறைவாக ஏலாத ஓர்பொருளும் இன்றென்ப தாயிற்றே! ஆகவே, மெய்போல் தோற்றும் அணுக்கள் தொழிற் குணங்களா? அன்றித் தோற்றக்குணங் களா? தொழிற்குணங்களாமெனின், ஒன்றன்கூட்டத் தடிப் புக்களாகவேனும் அன்றிப் பலவின்கூட்டத் தடிப்புக்களாக வேனும் அஃதுமன்றித் திரிபிலுக்கத் தடிப்புக்களாகவேனும் இருக்கவேண்டுமே! ஒன்றன்கூட்டத் தடிப்புக்களாமெனின், ஒவ்வோர் பரமாணுவுக்கும் மேல் மிக்க நொய்தாகிய அணுக் கள் அனந்தம் இருக்கவேண்டிவரும். இவ்வாறே மிக்க நொய் தாகிய அவ்வணுக்களும் சுயப்பெனப்படாது. சேர்க்கைகளா கச் சென்றுகொண்டே அனவத்தாத்தோட மெய்திப்போம். அங்ஙனம் அனவத்தாத்தோட மெய்தினும், முடிவில் தனக் கெனச் சொரூபம் இல்லாதிருக்குமோவெனின், முற்றும் அனவத்தாத்தோடமென்பது இன்றுகுமாயின், அங்ஙனமே ஏற்குதும். இதனால் ஒன்றன்கூட்டத் தடிப்புக்களன்று. பல வின்கூட்டத் தடிப்புக்களாமெனின், நீர் நெருப்பு காற்றுகிய மூப்பொருள்களும், இப்பரமாணுத் துணையாகவே இருந்து, ஒன்றுடொன்று சேர்ந்த விகாரமாக முடியும்.

அன்றியும், மட்பொருளாகிய இப்பரமாணுக்களே வழ க்குமயமாயிருக்க, ஏனைய நீர் முதலிய மூப்பொரு ளணுக்க ளும் வழக்கற்றவைகளா யிருக்குமோ? ஆகலின், பலவின் கூட்டத் தடிப்புக்களும் அன்று. திரிபிலுக்கத் தடிப்பாமெ

னின், இப்பரமாணுக்களுக்கு மேல் ஓர் முதலிருந்து திரிந் திருக்கவேண்டும். அம்முதல் அழிந்து திரிந்ததுபோல் இவ் வணுக்களுந் திரிந்து வேறு விகாரங்களாகுமன்றே? அவ்விகா ரங்களும் திரிந்து வேறு விகாரங்களாயும் அவைகளும் திரிந்து வேறு விகாரங்களாயும் இங்ஙனம் இருக்குமாயின், இப்பரமா ணுக்கள் என்ன வெனப்படும்? கூடி மூவிதத் தொழிற் குணமும் அன்றெனின், தோற்றக் குணங்க ளெனவருமே! வரின், அவ்வணுத் தோற்றங்கள் எந்த முதலினது எனவரு மே! வருமாயின், அம்முதல் ஆரம்பப் பட்சமாகத் தோற்று கின்றதா? அன்றி விவர்த்தப் பட்சமாகத் தோற்றுகின்றதா? எனவருமே! வரின், ஆரம்பப் பட்சமாகவே தோற்றுகின்ற தெனின், அது மட்கடம் பொற்பணி நூற்படம் நீர்த்தரங் கம் என்பவைபோலாம். ஆயினும், நீர்த்தரங்கம் போன்றதா கக் கொள்வோமெனின், அதாவது சலப்பொரு ளொன்றே அலை திவலை நுரை குமிழிகளாக விகற்புறல். விகற்புற்றது மீண்டும் அவ்வலையாதிகளி னுருவழிந்து நீர்ப்பொருளாவது போல், அப்பரமாணுக்களழிந்து மேலே ஒருபாதான காரண மாய் முடியவேண்டுமே! இதனால், இருப்பது குணியாகிய காரணமெனவும், இருப்பில்லாதவை அறியாமையால் சுயம் பெனத் தேரப்பட்ட பரமாணுக்களெனவும் வருமே! நீரா னது அலையாதிகளாகக் காரியப்படுதற்குத் துணைக்காரணம் காற்றென் றிருப்பதுபோல் முற்பொழுது எந்த முதல் அணு க்களாகக் காரியப்பட்டதற்கு எது துணைக்காரண மெனப்படு வது? வினைய நீர் முதலிய மூப்பூதங்களே துணையாமெனின், அம்மூப்பூதங்களையும் தனித்தனியாக ஆராய்வுழி, இம்மட் பொருள்போலவே முற்றும் வழக்குமயமாயிருக்கின்றனவே! அவைகள் பொருள்களானலன்றே அங்ஙனம் எற்றற் கியை யும்? அன்றியும், அணுக்களாகக் காரியப்பட்டது எந்த முத லோ அந்த முதல் இதுகாறும் இன்னதெனப் பொருள்படவு

மில்லையே! எங்ஙனம் ஓர் முதல் காரியப்பட்டதென் றேற் பது? மட்கடம் முதலியவைபோல விவர்த்தப் பட்சமாகத் தோற்றுகின்றதெனின், கயிற்றின்கண் அரவுபோல் ஆகின்ற தெனவரும். வரவே, கயிற்றைப்போல் இருக்கின்ற முத லெது? அந்தமுதல் தான் காரியப்படாமல் தன்பாலெங்ஙனம் அணுக்களாகத் தோற்றும்? ஓர் முதலிருந்துதானே அதன் பாற் கயிற்றரவுபோலேனும் தோற்றவேண்டும். இதுநிற்க, அப்பரமாணுக்களுள் ஒவ்வோர் நுட்பமும்,

"பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டியிசல் பொருட்குணம்"

என நன்னூலார் கூறியிருக்கின்றபடி, ஒவ்வோரணுவும் பல் வகை வடிவுகட்கு இயைந்தனவா? அன்றி இயையாதன வா? வடிவங்கட்கு இயைந்த தன்றெனவெனின், வடிவற்றது சூனியமாகவேண்டுமே! சூனியமெனக் கொள்வோமெனின், அணுநுட்பமென வழங்கப்படா திருக்கவேண்டும். தோன்று கின்றதால், அவ்வவ்வணுவுக்கு மியைந்த உருட்சி நீட்சி குட் டை தட்டை முதலியனவாகிய வடிவப்பொருள்க ளென்ரு கின்றன. அங்ஙனமாகின்ற அவ்வொவ்வோ ரணுவும், பிரு திவி அம்சங்களாகலின், அவ்வவ் வடிவங்கட்கு இயைந்த கந்த பேதங்களும் சுவைப் பேதங்களும் பரிச பேதங்களும் வர்ண பேதங்களும் சத்த பேதங்களும் இயல்பா யிருக்குமன்ரே? இவ்வைவகைப் பேதங்களும் குணபேதங்க ளென்பவையன் ரே? இக்குணபேதங்களுக்குக் குணிப்பொருளாகியவோர்முதல் இருக்கின்றதன்ரே? இருக்கும் அம்முதலன்ரே மண்ணெ னப்பட்டு வழங்கி வருகின்றது? அம்முதலாகிய மண்ணின் காரியநிறித்தாகச் செல்லுழி, மகத்துக்கு மகத்தாகவும், அவையாவன - இதுகாறுங் கூறிப்போந்த முதல்விகாரப் பரமா ணுக்களும், அதன் பின்னர் அப்பரமாணுக்கள் ஒன்ரோடொ ன்று சேர்ந்து காணப்படும் இரண்டாம் விகாரச் சூக்கும

அணுக்களும் அதன் பின்னர் அச்சுக்கும அணுக்கள் ஒன் றோடொன்று சேர்ந்து காணப்படும் மூன்றும் விகாரத் தூல அணுக்களும், அதன்பின்னர் அத்தூல அணுக்கள் ஒன்றோ டொன்று சேர்ந்து காணப்படும் நான்காம் விகாரப் பிருதிவி யண்ட்மூமா யிருக்கின்றன.

மீண்டும் இம்மகத் பரிமாணத்திலிருந்து காரண நெறித் தாகச் செல்லுழி, ஒவ்வோர் காரியபேதங்களும் கலைந்து கலை ந்து மேல்மேல் காரணங்காரணமாகச் சென்று சென்று ஈற் றில் காரியகாரண பேதங்கள் கடந்து தானேயிருக்கின்றது ஷெ மட்பொரு ளென்பதன்றோ ? மண்னென வழங்கப் டும் பெயர்க்குப் பொருள்-காரணங்களுக்கெல்லாம் காரண மாகத் தோற்றும் ஷெ முதல் விகாரப் பரமாணுக்களா ? அன்றிக் காரியங்களுக்கெல்லாம் காரியமாகத் தோற்றும் நான் காம் விகார இம்மகத்வடிவமா? மேலும், இவ்விரண்டில் ஒன் றெனப்படாமல் இவ்விரண்டுமாக இருக்கின்றதா ? இரண்டில் ஒன்றெனப்படுகின்றதெனின், அதாவது-காரணங்களுக்கெல் லாம் முடிவான காரணப் பரமாணுக்களா யிருப்பது. அங் ஙனமாயின், காரியங்களுக்கெல்லாம் முடிவான காரியமாகிய இம்மகத்தா யிருப்பது யாது ? மட்பொருளன்றி வேறு பொரு ளெனப்படும். அங்ஙனமின்றி முடிவான காரியமாகிய இம்மகத்துருவம் என்பாமெனின், முடிவான காரணமாகிய ஷெ அணுக்களா யிருப்பது யாது ? காரணகாரியமென்னும் இவ்விரண்டுமாகவே இருக்கின்ற தென்பாமெனின், காரண மாகிய மட்பொருளொன்றும் காரியமாகிய மட்பொருளொ ன்றுமாக இரண்டு மண்ணிருக்கவேண்டுமே! அன்றியும், ஷெ முடிவாகிய காரண அணுக்களுக்கும் முடிவாகிய காரிய இம மகத்திற்கும் இடைக்கண் பெரிது சிறிது பேதங்களாகத் தோற்றுவன அனேகத்தும் யாவை ?

அவைகளும் மட்பொரு ளென்பாமெனின், எத்தனை மட்பொரு ளெனப்படுமோ தெரிகிலம்! எஞ்ஞான்றும் எங் கணுமிருக்கும் மட்பொருளென்பது ஒன்றன்றே? அணு மகத்தாய்ப் பல குணபேதங்கள் காரணமாகப் பல மண்ணென் பதா? அன்றிக் குணிகாரணமாகப் பல மண்ணென்பதா? குணியாகிய மட்பொருள் பலவா யிராவிடில் குணபேதம் பலவாயிருக்குமாவெனின், மகத்தணுவாகிய குணபேதங்களை நீக்கி இரண்டாகவேனும் பலவாகவேனும் இருக்கக் காட்டும். அங்ஙனங் காட்டக் கூடாதெனின், அணுமகத்தாகிற குண பேதங்கள் மட்பொரு ளெனப்படுமா? படாதே! இதற்கு யாது செய்கின்றது? இவ்விரு தர்மத்தையும் நீக்கிக் காட்டக்கூடாதாயின், முற்பொழுது குணிப்பொருள் உண்டென்ப தென்னை? அணுமகத்தைக் குணிப்பொருளாக மயங்கின திலைலாக்கும்! இவ்விரு குணங்களுள் ஒன்று பிறிதின்கிழ மையாயும் மற்றொன்று தற்கிழமையாயு மிருக்கின்றமையால, பிறிதின்கிழமையாகிய சேர்க்கையுற் றிருக்கும் மகத்தணுப் பேதங்களைப் பிரித்தாலும் பிரிக்கலாம், தற்கிழமையாயுள்ள பரமாணுத்தன்மையைப் பிரித்துக் குணியைக் காட்டக் கூடாதேயெனின், பிரித்துணர்ந்து காட்டவேண்டுமென்பது அக்குண பேதங்களை நாடும் நாட்டத்தைப் பிரித்து, மூதலிக் கண் ணுணர்த்துகின்றதே யன்றி, அக்குணங்களைப் பிரிக்கின்ற தன்று.

குணபேதங்களைப் பிரித்து மூதலிக் காண்பது, குண பேதமாகிய கடோபாதிகள் பிரியுமாறு அவற்றை யழித்து மட்பொருளைப் பார்ப்பது தூலமதியும், அங்ஙனம் குண பேதங்களாகிய கடோபாதிகளை நசிக்காது அவ்வுபாதிகளை நாடுந் திருட்டியை நீக்கி மூதலை நாடுவது சூக்குமமதியும் ஆகின்றன. இதுபோல் அபபரமாணுக்களாகிய குணபேதங்

களை நீக்கி யுணர்வதன்று, அக்குணபேதங்களை நாடுந் திருட்டியை நீக்கி உணருகின்றதென்க. முதலை எட்டும் முறைமை இங்ஙனமிருப்பதால், மகத்தணு நாட்டம் விட்டு நிட்டைகூட வேண்டுமன்றே? நிட்டையாவது பொருளல்லவற்றைப் பொருளென் றுணர்தலாகிய உன்னுதலும், அவ்வுன்னுத லொடுங்குதலுமாகிய இவ்விரண்டு மின்றி நிலைத்திருத்தல். அங்ஙனம் நிலைத்திருத்தலன்றே குணியாகிய மட்பொரு ளைப் பின்ஞான்றேனும் எட்டுதற்கியையுமென்க. இதுகாறும் இங்ஙனமிருந்து அம்முதலை எட்டின தில்லையேயெனின், எட்டுங்காறும் மகத்தணுவாகிய குணபேதங்கள் ஒவ்வோர் முதலெனப்பட் டிருக்கட்டுமே! அவைகள் முதலெனப்படாவெனின், முதலை எட்டுவதுதானென்றே? எங்ஙனம் ஊகித்தாலும் அம்முதல் எட்டவில்லையே யெனின், அஃது எளிதில் எட்டுவதோ? எளிதில் எட்டுவது தொழிலும் பண்புமாகிய அணுமகத் பேதங்களன்றே? முன்ஞான்று மகத்துருவத் திருட்டியில் தூல அணுக்கள் எளிதில் எட்டினவோ? அங்ஙனமே தூல அணுக்கள் திருட்டியில் சூக்கும அணுக்களும் சூக்கும அணுக்கள் திருட்டியில் பரமாணுக்களும் எளிதில் எட்டினவோ? சூக்கும அணுக்களும் தூல அணுக்களும் ஒருவாறு எளிதில் எட்டினவாயினும் இப்பரமாணுக்களை எட்டுவதற்கு எத்துணைக்கட்ட மெய்தியது? இதற்கு நீடித்த ஞான்று அகன்றதன்றே? இங்ஙன மிருக்க,

மண்ணுகிய குணிப்பொருள் எளிதில் எட்டுவது மூண்டோ? ஒவ்வோர் பூதங்கட்கும் பொருள் மகத்துருவ மென்றுணர்ந்து வருகின்றது தூலமதியினுலாகலின், எவ்வுயிர்க்கும் எளிதா யிருக்கின்றது. அவ்வம் மகத்துருவமும் கலையாஞான்றே, அவ்வம்மகத்துருவத்திற்கு நேர்காரணமாகியதூல அணுக்களை எட்டுவது தூலமதியாலல்லவே! தூலமதி யென்

பது - அபுத்தி பூர்வகமாயிற்றே? அதாவது - வாலமதி யென்க. சூக்குமமதியா லுணர்வதாகலின், தூல அணுவுக்கு மேல் சூக்கும அணுக்களை எட்டுவதும், அதற்குமேல் காரணமாகிய பரமாணுக்களை எட்டுவதும் சூக்கும மதியினலாகலின் இதற்கு எத்துணைக் கட்டங்தரும்? அவ்வப்பூதத்தின அணுக்களையே எட்டுதல் மிகவுங் கட்டமாயிருக்க அவ்வப் பூதமாகிய குணியை எட்டுதற்கு எத்துணைக் கட்டமென்பம்! இத்துணைக் கட்டங்களும் வாலமதியில் கிஞ்சித்தேனுமில்லையே! எத்துணைக்கட்டமும் ஊகமதியிலாகலின், வாலமதி அகன்றுழி மண்ணுகிய குணிப்பொருளை எட்டியுணர்வது எளிதன்றென்க. இங்ஙன மிருக்க, எத்துணைக் கட்டமுற்றேனும் அவ்வப் பூதக்குணிகளை எட்டவேண்டுவதை விட்டுத் தோற்றல்மாத்திரக் கற்பனைகளாக விளங்கும் அவ்வம் மகத்துருவங்களை ஒவ்வோர் முதலாக உணர்ந்தின்புறுதற்கோ மககளியாக்கையைப்பெற்றுவந்தது? தெய்வத்தன்மைபொருந்திய திருவள்ளுவரும் இந்த மக்களியாக்கையை நம்பியன்றே,

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளான மாணப் பிறப்பு." என்றும்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." என்றும்,

"இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு." என்றும்,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி."

என்றும், இவைபோல்வன பிறவு மரியதாய்க் கூறியிருக்கின்றனர்.

இங்ஙனம் கூறிய நெறிக்கணில்லாது, இவற்றிற்கு மாறுக நிற்றலோ விவேக்மெனற்பாலது? ஒன்றை மற்றொன்றாக உணர்ந்துவரும் அவிவேகமன்றே அனந்த அரிய வித்தைகட்கும் வித்முதலா யிருக்கின்றது? இதனால், அறிவுடைமை யென்பதெங்கே? இன்றுகலின், அறியாமை யுடைமையே பயனுமென்க. இதுகாறும் நாம் வாளாபோயினும் இனியேனும் குணியைக்குணியென நாடாதுழி அதற்கு மேலுறும் லட்சியார்த்தானுபவப் பிரிவுகள் எங்ஙனம் வாய்க்கும்? இந்த ஓர் பூதத்தை ஆராய்ந்து குணியை எட்டுதற்கே இத்துணைக் கட்டமிருக்கின் ஏனைய மூப் பூதப் பொருள்களையும் ஆராய்ந்து குணிகளை எட்டுதற்கு எத்துணைக்கட்ட மிருக்கலாம்! அதன்பின்னர், இந்நாற்பூதக் குணிகளையு மொன்றுபடுத்தற்கு எத்துணைக்கட்ட மிருக்கலாம்! நமக்கு நம்மாலும் பிறராலும் அறிவுடையோரென்கிற நற்சிறப்பு வந்திருக்கின்றமையால், இவ்வுழைப்பை எய்தவேண்டுமே! அன்றியும்,

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றுரோ டேனை யவர்."

என்றருளிய 414 குறள் மகாவாக்கியத்திற்கு நாம் சம்மதித்திருக்கின்றனமே! இச்சம்மதத்தைநோக்கியேனும், நாம்உழைக்கவேண்டுமே! நாம் இங்ஙனம் உழைக்கவேண்டிய உழைப்பை விட்டு முற்றும் அயலேட்டுப் பராக்கில் இறுமாந்து வாளாகழித்துவரின் மனமென்பது அலையாதிருத்தற்கும் சஞ்சலமென்பது அணுகாதிருத்தற்கும் அகத்துவப்பு மாறுதிருத்தற்கும் தானே தானுயிருத்தற்கும் எங்ஙனம் கூடும்? இந்நான்கு அருஞ்செல்வம் வாய்த்தற்கன்றே உழைக்கவேண்டியது? பொருளல்லவற்றைப் பொருளென மயங்கினதே முதல்பராக்காயின், இதை அதலாத இருப்பாகக்கொண்டு கிஞ்

சித்தும் இதற்கு விருத்தமின்றி முற்றும் உறவாயிருக்கின் கிஞ்சித்தும் பயனுருதென்க. இப்பரமாணு ஆராய்ச்சிக்கண் தோந்தவை எவையெனின், ஏழாவது அடுக்காயுள்ள அறிவறியாமைப் பேதமும் இவற்றிற்குமேல் உறுதிப்பொருளாயுளள அதிட்டானமாகிய மண்ணென்கிற குணிப்பொருளுமாமென்க.

ஏழாவது

மண்ணின் பரமாணுவென்னும் சத்தார்த்த

ஆராய்ச்சி விளக்கம்

முற்றிற்று.



எட்டாவது

அருவபாவ ஆராய்ச்சி விளக்கம்.

வெ ல்ஃ பா.

இந்தவா ராய்ச்சியின்க ணிவ்வருவ பாவமெனல்
சந்ததமு மீதுமுண்மைத் தானன்ரு—யெந்தவிதத்
துஞ்சதுர்ப்பூ தங்களுக்கும் சொல்லுங் குணிகளேயே
யெஞ்சலின்றி நோக்கமுறு மே.

எங்ஙனமெனின், இதுகாறும் பரமாணு ஆராய்ச்சியில் இருப்பாகத் தோரப்பட்டது மட்குணியாகிய அருவப்பொரு ளாயினும், அவ்வருவபபொருளை உணரும் உணர்வு அறி வெனப்படுமா? அன்றி அறியாமை யெனப்படுமா? அறிவெ னப் படுமெனின், அம்மட்குணியாகிய அருவம் நெ பரமா ணுக்களுக்கு இடமாயிருக்கும் இப்பூத அருவமா? அன்றி வேறு அருவமா? பூத அருவந்தானெனின், இஃது மட்பொரு ளெனப்படுமா? படாதே! மண் முதலிய சதுர்ப்பூத அணு மகத்துக்களுக்கும் இடப்பொருளாயிற்றே! ஆகலின், இஃ தன்று அக்குணிபபொருள். இப்பூத அருவப்பொருளையன்றி வேறு பொருள் ஒன்றுளதெனபபடவில்லையே! இருந்தா லன்றே அதனை எட்டலாமெனின், எட்டப்படாமையால் அம் முதல் இல்லையென்னலாமோ? நெ பரமாணுவென்பது உருவ பேதங்களுக்கெல்லாம் அதிருக்கும உருவமாயிருப்பதுபோல், மண்ணுகிய குணிப்பொருளானது அருவத்திற்கும் அதிருக் கும் அருவமாகலின், அதனை எட்டுமை சிந்தையானது எந்த பாவம் உற்றிருந்தால் அஃது எட்டுதற் கியையும்? உருவமா கிய மகத்தணுப்பாவம் அற்றிருக்க வேண்டுமன்றே? அதா வது - இபபூதமாகிய அருவபாவமாக நிலைத்திருத்தல்.

நாம் அருவபாவமா யிருக்கவேண்டு மென்பது இதுகா றும் கேட்டதில்லையே! எங்ஙனம் அருவபாவப்பட டிருத்த

லெனின், சதுர்ப்பூதாணுக்களும் தோற்றல் மாத்திரமாயும் சொல்மாத்திரமாயு மிருக்கின்றனவே! நாம் எந்தபாவமா யிருக்கின்றது? சதுர்ப்பூதாம்சங்களின் சேர்க்கையாகிய இத் தேகபாவமா யிருக்கின்றதா? அன்றி இத்தேகத்தைப் போன் றதாக நினைவின்கண்ணும் கனவின்கண்ணும் தோற்றுகின்ற சாயாவடிவபாவமா யிருக்கின்றதா? பரமாணுபாவமா யிருக்கி னும் அக்குணிப்பொருளை எட்டுதற் கியையாதாயின், அப்பர மாணுக்களின்சேர்க்கைகளாகிக் கற்பனையுருவபாவமாக நின்ற விடத்தா அஃது எட்டுதற் கியையும்? அக்குணிப் பொருளு க்கு நேர் அடுத்த விகாரம் யாது? சதுர்ப்பூதப் பரமாணுக் களா? அல்லவே! அல்லாதுழி, அப்பரமாணுக்கள் சேர்க்கைக ளாகிற சூக்கும அணு விகாரங்களா அடுத்த விகாரங்கள்? அவைகளு மல்லவே! அல்லாதுழி, ஏனைய தூல அணுக்களும் அவற்றின் சேர்க்கையுமாகிய இம்மகத்துருவமா அடுத்த விகாரம்? இவைகளுமல்லவே! அல்லாதுழி, அப்பரமாணுக்க ளுக்கு ஆதாரமா யிருக்கும் இப்பூத அருவமனறே? இப்பூத அருவத்தைக் கடந்த ஞான்றன்றே ஷி குணிப்பொருளை எட்டுதற்கியையும்? இப்பூத அருவத்தைக் கடக்கின்றதாயின், இவ்வருவபாவமாய் நின்று நீலத்தாலன்றே பின்ஞான்று இவ்வருவபாவத்தில் தனக்கெய்ப்பும் கைப்பும விளைந்துகடந் திருக்கக்கூடும்? அருவமென்பது சூனியத்துவமாயிற்றே! அச் சூனியபாவம் நாமாகிவிட்டால் சூனியம் ஒன்றுமில்லாமை யனறே? ஒன்றுமில்லாததாகிற நாமென்பது அக்குணியை எங்ஙனம் எட்டுவது? எட்டுதற்கு எட்டும் ஆள் இல்லாமற் போகுமேயெனின்,

இஞ்ஞான்று நாம் எந்த பாவமா யிருக்கின்றோம்? தூல பாவமா யிருக்கின்றோமல்லவா? இத்தூல சரீரம் சதுர்ப் பூதாம்ச சையோக எழுச்சியன்றே? இவ்வெழுச்சிக்கு முன்

ஞான்றும் பின்ஞான்றும் அச்சதுர்ப்பூதாம்சங்க ளிருக்கின் றனபோல் இஞ்ஞான்றிருப்பது யாதெனப்படும்? அப்பூதாம் சங்களே அன்றி வேறு பொருளுண்டோ? இல்லையே! இல் லாதுழி, நாம் இவ்வெழுச்சி பாவமா யிருக்கின்றனமா? அன்றி அப்பூதாம்சபாவமா யிருக்கின்றனமா? இவ்வெழு ச்சி பாவமாயிருக்கின்றே மெனின், இவ்வெழுச்சி தோற் றல்மாத்திரமேயன்றி வேறல்லவே! இப்பாவமா யிருக்கின்ற தானென்பது இதனுல் கற்பனையென்பதற்கு முரணென்னை? இன்றுகலின், ஷை குணிப்பொருளை எட்டுதற்கு இக்கற்பனை பாவ முற்றிருப்பதனுல் கற்பனையாகி விட்டோமா? ஆய்விட் டோமெனின், சொப்பனவுத்தைக்கண் சாயாவடிவ பாவமா குவது யாது? அஃதும் நாமன்றே? அதனுல், நாம் அப்பாவ மாகி விட்டோமா? ஆய்விட்டோமாயின், ஈங்கு இப்பாவமாய் விட்டோமென்பது உண்மையன்று. ஏனெனின், எப்பாவ முற்று இருக்கின்றோமோ அப்பாவமாகவே நில்லாது மீண் டும் மற்றோர் பாவமாகின்றனம். அந்தந்த அவசரத்தில் அந் தந்த பாவமாக இருக்கின்றனமே அன்றி, மீண்டும் மீளாத அவ்வப்பாவமாகி விட்டோமன்று. உருவபேதங்களை அறிய வேண்டுமாயின், அஞ்ஞான்று நாம் எந்தபாவம் உற்றிருக்க வேண்டுவது? உருவபாவம் உற்றிருக்கவேண்டுவது அவசிய மன்றே? ஆகலின், இஞ்ஞான்று உருவாகாரமாக நின்று உருவ பேதங்களை அறிந்து சுகிக்கின்றனம். இவ்வாறே, சொபப னுவத்தைக்கண் உருவாருவபேதங்களை அறிகின்றதற்கு உரு வாருவ பாவமாக இருக்கின்றனம். நாம் உருவாருவ பாவ மாக நிற்கின் தூலமாகிய உருவபேதங்கள் தோற்றுமா? நாம் உருவபாவமாக நிற்கின் உருவாருவ பேதங்கள் தோற்றுமா? அன்றியும், சுழுத்திக்கண் தோற்றுகின்றது உருவமா? அன்றி உருவாருவமா? இரண்டுமல்லவே! சூனியமல்லவோ? அச்சூ னியத்தை யறிகின்றது நாமாகலின், அங்கே நாம் எந்த பாவ

மா யிருக்கின்றனம்? சூனியபாவமா யிருக்கின்றனமன்றே? அங்கே, நாம் சூனியபாவமாக இல்லாது உருவமாகவேனும் உருவாருவமாகவேனும் பாவ முற்றிருக்கின், அச்சூனியத்துவம் தோற்றுமா? நாம் எவ்வெவ்வண்ணம் பொருளை அறிய வேண்டுமோ அவ்வவ்வண்ணமாகப் பாவமுற்றிருந்தாலன்றே அவ்வப்பொருளும் தோன்றும்? இவற்றைப்போல், அருவமாகிய ஷை குணிப்பொருள் விளங்குதற்கு நாம் அருவபாவமுற்றிருக்கவேண்டுவதன்றே? ஆகலின், உருவபாவமாகநிற்க ஞான்றும் அப்பொருள் சற்றும் எட்டாதென்க.

ஷை குணிப்பொருளாகிய அருவத்திற்கும் இப்பூத அருவத்திற்கும் பேதம் இருக்கின்றன. அவையாவன - இப்பூத அருவம் பொருளின்மையும் அக்குணி அருவம் பொருளுண்மையுமாயிருப்பது. பொருளின்றிய அருவபாவமுற்றிருக்கின், பொருளாகிய அருவமானது எங்ஙனம் விளங்குமெனின், உருவபாவத்தில் உருவாருவம் எட்டாததாயினும் எட்டுவதுமுண்டு. எங்ஙனமெனின், நனவு நினைவு கனவு சுழுத்தி என்னும் இந்நான்கவத்தையுள் நனவாகிய இச்சாக்கிராவத்தைக்கண் நாம் உருவபாவமா யிருக்கும்ஞான்று கனவின்கணுள்ள உருவாருவபேதம் தோற்றுதாயினும், இந்நனவை விடாத ஷை நினைவின்கணுள்ள உருவாருவ பேதம் தோற்றுதல் போல், நாம் பொருளின்றிய அருவபாவம் உற்றுழிப் பொருளாகிய அருவநிலை தோன்றுமென்பதற்கு முரணின்றென்க.

சுழுத்திக்கண் நாம் அருவபாவமாகவேண்டுமென்னுங் கருத்தும் அக்கருத்திற்கியைந்த முயற்சியுமின்றி உருவபாவமாகநின்று முக்கிய ஒழுக்கத்திலிருக்குஞான்றும் அச்சுழுத்திபாவம் தானே வருகின்றது. இந்நனவின்கண் அருவபாவம் ஆதற்கியைந்த அபேட்சையும் அவ்வபேட்சைக்கியைந்த

முயற்சியு மில்லாதழி, எங்ஙனம் அருவபாவம் வாய்க்கும்? ஒவ்வோருயிரும் உருவபாவத் தளர்ச்சிக்கு உடன்படவில்லை யே யெனின், ஷெ குணிப்பொருளே எஞ்ஞான் றெட்டுகின் றது? இப்பிறப்பின்கண்ணே யன்றே ஆகவேண்டும்? முற் பிறப்பின்கண் எட்டியிருந்தால் இப்பிறப்பின்கண்ணமாந்திருக்க வேண்டுவதின்று. இங்ஙனமே, மேற்பிறப்பின்கண் ஏமாந்து போகாததற்கு இப்பிறப்பின் கண்ணே எட்டவேண்டுமே! எட்டுதற்கு இவ்வுருவபாவம் நாளுக்குநாள் சிறுகச் சிறுகத் தளரவேண்டுமே! தளருகிறதற்கு எந்தபாவம் நாளுக்கு நாள் முதிரவேண்டும்? அருவபாவமன்றே? இவ்வுருவபாவத்தில் ஒருவருக்கும் அபேட்சையில்லாமை யாதுக்கு? உருவபோ கம் தளராதிருக்க வேண்டுமென்பதற் கன்றே? உருவபாவ மும் இப்பாவத்தாலுறும் போகமும் முற்றும் கற்பனைகளா யிருக்கின்றனவே! கற்பனையாகிய உருவபாவத்தில் நின்று சுகிப்பதைப் பார்க்கினும் அருவபாவத்தில் நின்று சுகிப்பது மிக்க அரியசுகமன்றே? அவ்வுருவபாவத்தில் நின்று சுகிப்பதி னும் ஷெ குணிப்பொருளைக்கண்டு சுகிப்பது எத்துணை அரிய சுகமெனப்படும்? இத்துணை நயமிருக்க, எங்ஙனம் அருவ பாவத்தைவிட்டு ஏமாந்திருக்கின்றது? மேலும், நாம் உருவ பாவமா யிருப்பதற்குத்தானே மாறது அடிமைப்பட் டிருக் கின்றனம்? இங்ஙனம் ஏமாந்திருப்பதனல் அருவபாவம் உற் றிருப்பதற்கு அடிமைப்பட இல்லையாக்கும்! உருவம் நசித் துப்போயின ஞான்றன்றே நாம் அருவபாவம் உற்றிருத்தற் கியையு மெனின், முன்ஞான்று பிருதிவி அண்ட ஆராய்ச் சிக்கண், இவ்வண்டமாகிய மகத்துருவம் அழிந்து போயின பின் தூல அணுக் கூட்டங்களையும், அதன் பின்ஞான்று அத் தூல அணுவாராய்ச்சிக்கண், அத்தூல அணுக்கள் அழிந்து போயினபின் சூக்கும அணுக்களையும், அதன் பின்ஞான்று சூக்கும அணுவாராய்ச்சிக்கண் அச்சூக்கும அணுக்கள் அழி

ந்து போயினபின் பரமாணுக்களையும் அறிந்தோமாக்கும்! எதனை ஆராய்கின்றோமோ அது அழிந்துபோயின பின்ஞான்று தான் அதன் உபாதானத்தை நாடுவதாக்கும்! மட்பொருளை நாடுவதற்குக் கடவுருவம் அழிந்துபோகுங்காறும் எதிர்பார்த்துக்கொண் டிருக்கவேண்டுவதாக்கும்! பொற்பொருளை நாடுவதற்குப் பணியுருவம் அழிந்துபோகுங்காறும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டுவதாக்கும்! இங்ஙனமே நாம் அருவபாவமாதற்கு உருவமாகிற அண்டாண்ட சராசர உருவங்க ளனைத்தும் அழிந்து போகுங்காறும் எதிர்பார்த்துக் கொண் டிருப்பதாக்கும்! தீபாபாவமே இருளென்றுற் போல உருவபாவ அபாவமே அருவபாவமாகின்றது இயல்பன்றே? அடையவேண்டிய பயனனைத்தையும் அடைந்தாக வேண்டியது பிறவி மாறுதற்கு முன்ஞான்றேயாயிருக்க உருவமாறிய பின்ஞான்று அருவபாவ மாதற்கு முயலுவது? இஃது விந்தையினும் விந்தை! ஆகலின், இது முறையன்றென்க.

நாம் உருவபாவத்தில் நின்றே மிகவும் வருந்தி முயன்று அருவபாவமாய் நிற்கின், பிராரத்துவ போகத்தை எங்ஙனம் அனுபவித்துக் கழிக்கின்றது? கூடாதேயெனின், உருவபாவத்தினுள்ள சிசுத்தன்மையில் நாம் எந்த பாவமுற்று கெடி பிராரத்துவ போகத்தை அனுபவித்துக் கழித்தனம்? உருவபாவமுற்றே கழித்துக்கொண்டு வந்தோமெனின், அச்சிசுவை உயிர்ப்போடு ஒருயரமுள்ள மேடைக்கண் கிடத்திக் கீழே விழுந்துவிடுதற்குத் திடீரென்று புரட்டிவிட்டஞான்று மனநடுக்கமும் அதனோடு தேக நடுக்கமும் கிஞ்சித்தேனு முண்டெனப்படுமா? உண்டெனப்படு மெனின், அச்சிசுத்தன்மை மாறியஞான்றே யன்றிக் கிஞ்சித்தேனும் அத்தன்மை மாறுஞான்றன்று. அச்சிசுத்தன்மை நாளுக்குநாள் சிறுகச் சிறுக மாறிவருந்தோறும் இத்தேகத்தோடு இது நான் இது நானென

னப் பழகப்பழக இவ்வுருவபாவம் நாளுக்கு நாள் சிறுகச் சிறுகப் பெருகிவரு மன்றே? பெருகியவாறு புத்திபூர்வகமாகக் குறைந்துகொண்டே வரின், கடை அருவபாவம் சிறுகச் சிறுக வளர்ந்து கொண்டேவரும். அங்ஙனம் வருந்தோறும் பிராரத்துவப் புசிப்பு அவ்வவ்வளர்ச்சிக்குத் தக்கவாறு நடவாதோ? இங்ஙனம் வளர்ந்து நிலைத்தஞான்றும் நடவாதென்பதற்கையமென்னை? அருவபாவத்தில் உருவதிருட்டியும் அது அதுவா உன்னுதலுமிராதே! எங்ஙனம் போக்குவரத்துப் புடைபெயர்ச்சிக லியங்குமெனின், நனவிற்சுழுத்தி யென்னும் ஓரணுபவநிலை யாதுக்கிருக்கின்றது? அதாவது, சாக்கிர சுழுத்தியென்க. அச்சுழுத்தி இருமை யுடையன. அவை தனதகத்தும் புறத்தும் கயிற்றரவு முதலியன போற் காணப்படுவனவாகிய சீவேசுர சகத் கற்பனைகளைச் சின்மாத்திரமாக, அதாவது தற்பிரகாசமாக ஆகுமாறு கரைத்துக் கொண்டே, இறத்தல் பிறத்தல் முதலிய பிராரத்துவ கன்மத்தைப் புசிக்கும்ஞான்று, இவ்வுலகானுபவம் முழுவதும் சாக்கிர அவத்தையா யிருக்குமா? அன்றிச் சுழுத்தி அவத்தையா யிருக்குமா? அவ்வனுபூதியில் முழுதும் சாக்கிர அவத்தையாகவே இருக்குமெனின், அஃது மனோவிகற்ப மெனப்படுமே! முழுதும் சுழுத்தி அவத்தையா யிருக்குமெனின், அஃது ஒன்றுந் தோன்றுத மக்கின மெனப்படுமே! இங்ஙனமிருப்பதால், அஃது எந்த நிலையதெனப்படுமெனின், சகல கற்பனைகளுந் தோற்றியுந் தோற்றுதுமா யிருக்கும் நிலையதெனப்படுமென்க. என்னை?

கைவல்லிய நவநீதம்.

"கற்பனை வந்த வாறு காட்டிடினுங் காண்ப வெல்லாஞ்
சொற்பனம் போல வெண்ணித் துணிந்தவன் ஞானி யாவான்."

என்றும்,

தத்துவராயர் பாடுதுறை.

"போதத்தை யுணராதே பொல்லாத மாயையால்
பேதத்தை யுணர்ந்தோமென் றுந்தீபற
பேதமும் பிரமமென் றுந்தீபற." என்றும்,

"தோற்றர வாகத் துணிந்தவு ரெங்களூர்
சோகமோ கங்க றெந்தவு ரெங்களூ
நாற்ற லுடையார்க் கடைந்தவு ரெங்களூ
ரானந்த மாயே யிருக்குமூ ரெங்களூர்."

என்றும் இருப்பதனுற்காண்க. ஷை மற்றொரு நனவிற் சூழத்தி யாவது, எந்த நிலை நானெனப்படுகின்றதோ அந்த நிலையை இது நான் இது நானெனப் பலகற்பமுங் கண்டுகண் டின்புறு தற்கு, அவத்தாத்திரய கற்பனாபாவங்கள் கடந்து, எது நான் எது நானென மேலே தன்னை நோக்கிக்கொண் டிருக்கும் அப்பியாசத்தில், முன்னூன்று தான் கூயப்பட்ட அவத் தாத்திரய பாவங்கள் நான் எனது நான் எனது என முன் போலவே வந்து வந்து தாக்குந்தோறும், அவைகள் நான் எனது அன்றெனத் தடுத்துக்கொண்டே அகநோக்கிற்பழகு ஞான்றுள்ள அவ்வவசர நிலை முழுவதும் சுழுத்தியெனப் படுமா? அன்றிச் சாக்கிரமெனப்படுமா? சுழுத்தியெனப்படு மெனின், சாக்கிரசொப்பனக் கற்பனைகள் தோன்றுதிருக்க வேண்டுமே! சாக்கிரமெனப் படுமெனின், அகநோக்க மில்லா திருக்கவேண்டுமே! இரண்டுமா யிருக்கின்றதெனின், அது தான் சாக்கிர சுழுத்தி யெனப்படுவது. ஷை சுழுத்தி ஞானு னுபவத்திலுள்ளதும், இச்சுழுத்தி அஞ்ஞானுபவத்திலுள்ள துமாமென்க. இச்சுழுத்திக் குதாரணம்:—

சசிவர்ணபோதம்.

"வினவிற் பரத்தையறி வுறுதற் கவத்தைபுலன்
வினமாறியே

னவிற் சுழுத்திநிலை வரினப் பொருட்டிகழு
நலனுகவே."

எனக் கூறியவாற்றுற் காண்க.

இஃதிங்ஙனமிருக்க, நாம் அருவபாவமாகப் பழகிக்கொண்டிவருதல் சுழுத்தியெனப்படுமா? அன்றிச் சாக்கிரமெனப்படுமா? இரண்டுமன்றெனின், இவ்விரண்டையுமன்றி வேறு எந்த நிலையதெனப்படும்? வேதின்முகலின், சாக்கிர சுழுத்தியெனப்படுமன்றே? படுவதால், நாம் அருவபாவ மாதற்குப் பழகவேண்டுமே! ஆங்காங்கும் நான் நானென்பதற்குச் சொந்த நிலை உருவமா? அன்றி அருவமா? உருவமும் நம்மாலறியப்படுவது அருவமும் நம்மாலறியப்படுவது. இதனுல், இவ்விரண்டும் சடப்பொரு ளென்பதற்கு விருத்தமென்னே? அன்றியும், இவ்விரண்டும் இங்ஙனமாயினும், இவற்றுள் எது மெய்ம்மை யெனப்படுவது? எது பொய்ம்மை யெனப்படுவது? உருவம் மெய்ம்மை யெனப்படுவதெனின், அருவமாகிய இப்பூதவெளிக்கு வேறிடத்ததாயும், இவ்வெளியைத் தன்பால் தான் ஏலாததாயும் இருக்கட்டுமே! ஏற்பதனுல் விருத்தமென்னேயெனின், அகம்புறமேலாத ஓர் நிறைவில் இருப்பது பொருளாகுமா? ஆகாதன்றே? ஆகாததால், அது தோற்றல் மாத்திரக் கற்பனையென்பதற்கு மூலனென்னே? இன்முகலின், அருவப்பொருள் இவ்வுருவத்திற்கு எதார்த்தமன்றே? இங்ஙனம் எதார்த்தமாயினும், நானென்பதற்குப் பொருளா? அல்லவே! இரண்டும் நானென்ப தல்லாதுழி, இவ்விரண்டிற்கும் நாம் வேறுபட்டிருக்கவேண்டு மன்றே? இங்ஙனமிருக்க, நாம் உருவபாவமா யிருப்பானேன்? இருப்பதால், அருவபாவமாயும் நாமிருக்கின் இடுக்கணென்னே? தாபத்திரயாக்கினிதகித்தல் உருவபாவத்திலேயா? அன்றி அருவபாவத்திலேயா? அருவபாவத்தில் யாதோரிடுக்கணும் இல்லையே!

இங்ஙனமிருக்க, நாம் யோசிக்காதிருப்பதென்னே? நாம் அருவப்படுவானேன்? உருவபாவமாகவே நின்று கேசரி பூசரி முதலிய முத்திரை நெறிக்கண் சென்று அங்குள்ள இன்பத்தை நுகர்ந்து நுகர்ந்து பதைபபற் றிருக்கலாமேயெனின், அம்முத்திரைகளிற் சென்று பதைப்பற விருக்கினும், அந்நிலை கலையுஞான்று, கீரைக்கறி சமைத்தாயிற்று பெண்ணே? என அக்கீரைக்கறிபாவம் வந்துற்றாற்போல, நானென்பதற்குப் பாவம் யாதெனப்படும்? இவ்வுருவபாவமன்றித் தற்பாவமென்பது கிஞ்சித்தேனுமுண்டா? இல்லையே! தற்பாவமாவது,

தத்துவராயர் பாடுதுறை.

"போகாத மாயையைப் போக்கிட லாவதும்
புண்ணிய பாவம் புறத்திட லாவது
மாகா தழியா திருந்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ."

என்றருளிய போதமாமென்க,

ஷ முத்திரை நெறிகளிற்சென்று பதைப்பற்றிருப்பது தற்பாவமென்பது கிஞ்சித்துமின்றி முன்போலவே மீண்டும் உருவபாவமாக வருவதற்கா? அவை தக்க நெறிகளல்லவே! அவ்வனுபூதி திடத்தால், இவ்வுருவபாவமாதற்குக் கூடுமோவெனின், அந்நிலை கலைந்து வந்துழி எந்தபாவமுற்றிருக்கின்றது? அவ்வனுபூதிபாவ முற்றிருக்கின்றதெனின், தற்பாவமென்பது அந்தச் சுகானுபூதியா? அன்றி இந்த உருவானுபூதியா? அச்சுகானுபூதிதா னெனின், அச்சுகானுபூதி தன்னைத்தவிர இன்றெனவருமே! வருவதால் இவ்வுருவானுபூதி தன்னைத்தவிர உண்டெனவருமே! தானென்பது மெய்யுணர்வன்றே? மெய்யுணர்வாயின்,

சசிவர்ணபோதம்.

"மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாந்
தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே."

என்றிருக்கின்றதால், தனக்கு அகம்புறமுளதுபோ லிருப் பவற்றுள், காணப்படுவன அனைத்தும் கற்பனைக ளாகவேண் டுமே! அங்ஙனமாலென்றே? தான் மெய்யுணர் வென்றதற் கும் தற்போதமென்றதற்கு மியையும்! இங்ஙனமியைவதால், ஷெ சுகபாவ அனுபூதி யென்றதும், இவ்வுருவபாவ அனு பூதி யென்றதும் கற்பனைக ளெனப்படுமே! படாதெனின், இவ்வுருவபாவத்தையன்றி அகம்புறமிருக்கட்டும். இவ்வுருவ பாவமே முழுக்கற்பனையாயின், இவற்றால் வந்திருக்கும் அகம் புறமிரண்டும் கற்பனைக ளெனப்படாவோ? இவ்வகம்புறக் கற்பனைகளிற் காணப்படுவனவாகிய சர்வமும் கற்பனைகளன் றே? ஆகலின், காமரூபங்களேயெனும் கற்பனைகளென ஞாயம் சோதனை பொருத்தமுகத்தா லாராய்ந்து தெளிந்த அத்தெ ளிவினால், அகமுகநெறிக்கண் சென்று அனுபூதிப்பட்டு, பின் ஞான்று அவ்வனுபூதி கலைந்து புறமுகநெறிக்கண் வந்துழி, இவ்வுருவபாவ மாதற்கியையுமோ? அங்ஙனம் கற்பனைகளெ னத் தெளியாது சத்தெனக் கொண்டிருக்கின், ஷெ அனுபூதி கலைந்த ஞான்று, தான் எந்தபாவமா யிருத்தற் கியையும்? முன்போல உருவபாவமா யிருத்தற் கியையுமன்றே? உருவ பாவத்தில் பழகி வந்ததுபோல் அருவபாவத்தில் பலஞான் றும் பழகிப் பின்ஞான்று அனுபூதிப்படின், அவ்வனுபூதி கலைந்தஞான்று தான் எப்பாவ முற்றிருத்தற் கியையும்? அவ்வருவபாவமாக வன்றே இருத்தற் கியையும்? அவ்வருவ பாவமும் கற்பனையென நன்கு ஆராய்ந்து தெளிந்து அகநெறி க்கண் அனுபூதிப்படின், மீண்டும் அஃது கலைந்த ஞான்று எப்பாவ முற்றிருத்தற் கியையும்? உருவபாவமும் உருவா ருவபாவமும் அருவபாவமும் யாவுங்கற்பனைகளெனத் தெளிந்

திருக்கின்றதால், தற்பாவமா யிருத்தற் கியையுமே! முன் ஞான்று இவ்வுருவபாவம்,

வைராக்கிய சதகம்.

"பொன்னே யுந்துகி லேயும்பிரித் திடின்வெறும்
புழுமலக் கூடல்லாற்
பின்னே யுண்டுகொல் கண்டுநீ மயங்குதல்
பிராந்தி."

என்றருளியபடி இதன்கண் முற்றும் விரக்தியுற்று ஷை முத்திரைகளில் நீடித்தழுந்தியிருக்கினும் அந்த முத்திரை அனுபவமானது,

தத்துவராயர் பாடுதுறை.

"அறிவிட் டறியாமைப் போக்குமூ ரெங்களூ
ரன்னிய மொன்றுமி லாதவூ ரெங்களூர்
குறியிட்டி தென்னவொண் ணுதவூ ரெங்களூர்
கோசங்க ளோந்துங் குலைந்தவூ ரெங்களூர்."

என்றருளியபடி தெளிந்திருக்கும் அனுபவமா? அல்லவே! மீண்டும், இப்புறமுக நெறிக்கண்வந்தும் அவ்வகமுகநெறிக்கணுள்ள சுகபோதை வசப்பட்டிருப்பதால், இவ்வுருவபாவம் குன்றியிருப்பது மாத்திரமேயன்றி, உருவபாவம் போயினதன்று. எங்ஙனமெனின், சர்வமும்-அதாவது சீவேசுர சகத்தினைத்தும், தன்பால் ஆரோபிதமா யெழுந்த விஸ்மரணையாகிய சங்கற்பத்தைச் சதுர்ஞான்றும் மித்தையென ஆராய்ந்து தேர்ந்ததுண்டா? இல்லையே! தேர்ந்திருந்தாலன்றே இம்மித்தைச் சொருபங்களனைத்தும் எதற்குக் காணப்படுகின்றனவென அம்முதலை ஆராயவேண்டிவரும்! வரின், பின்ஞான்று நானென்னும் அகப்பொருளன்றி இன்றென வரும். அதன் பின்ஞான்று, எது நான எது நானென எட்டப் பழகும் பரோட்சுக்கியானம் நாளுக்கு நாள் முதிர்ந்து

வருமன்றே? அது முதிரமுதிர முடிவில் அவ்வகம்பொருள் அபரோட்சானுபவப் படுமன்றே? அங்ஙனங் தெளிந்தபின் ஞான்று,

தத்துவராயர் பாடுதுறை.

"அன்னிய மில்லையென் றூதேடா காள
மானந்த மாஞ்மென் றூதேடா காளங்
தன்னுசுட ரேயென் றூதேடா காளஞ்
சோதியுட் சோதியென் றூதேடா காளம்."

என்கிற இத்திடபாவம் அவ்வனுபூதியில் எழுமன்றே? இங்ஙனமிருக்க, ஷெ முத்திரையாகிய அனுபவத்திற் குன்றியிருந்தால் அகம்புறமிறந்து தானே தானுக நிலைக்கச்செய்யுமோ? எச்சாத்திரங் கற்கினும் எத்தவம் புரியினும் எய்தவேண்டிய பயன் யாதெனின், மனமென்பது அயல் இன்றெனத் தான் அலைவற்றிருத்தலும், பின்ஞான்று சகலகேவல சஞ்சலமனுகா திருத்தலும், அதன் பின்ஞான் றுள்ளக்களிப்புக் கணமுமாறுதிருத்தலும், ஈற்றில் அயலாகாது தானேதானு யிருத்தலுமாமென்க. இச்சதுர்விதானுபவங்களும் மனநாசத்துக்கு ஏதுக்க ளெனப்படும். அந்த நாசம் இருமையன: அவை,முன்ஞான்று சொருபநாசமும், பின்ஞான்று அருவநாசமுமாம். சொருபநாசமாவது: சீவேசுரசகத் கற்பனைகளைத் தற்பிரகாசமாகக் கரைத்தல். அருவநாசமாவது : அவை கரைந்தது என்கிறவாசனையும் அவ்வனுபூதியில் சிறுகச்சிறுகத்தானே நழுவிவிடுதலென்க.

இதுகிற்க, ஷெ முத்திரைகளாகியஅனுபவங்களானவை, மனமென்பது நிலையுறுது மீண்டு மீண்டும் விடயாகாரமாதற்கு, ஆங்கு ஒடுங்கியிருத்தற் கியைந்தனவேயன்றி, ஷெ மனநாச முதலியனவாகிய சதுர்விதானுபவங்களுக் கியைந்தன அல்லவே! இச்சதுர்விதானுபவங்களும் வாய்த்தற் கியைந்த

அத்திபாரம் யாதெனின், வெளியாகிய அருவ பாவமாமென்க. இவ்வருவபாவமானது நாளுக்குநாள் முதிர முதிர ஷூகுணிப்பொருளை யெட்டிப்பிடித்துப் பின்ஞான்றுஅதுவாதற்கியையு மாகலின், தானல்லாத உருவத்தைத் தானெனப் பாவப்பட்டிருத்தல்போல், தானல்லாத இவ்வருவத்தைத் தானெனப் பாவப்பட்டிருத்தற்குக் கைப்பென்னை? இன்றாகலின், அருவபாவமாதற்கு நாமரூப பேதங்களைக் கணமுமாறாது கலைக்குங்காறும் கலைத்தலையும் முடிவில் கரைக்குஞான்று கரைத்தலையும் செய்யவேண்டியது அவசியமாமென்க. உருவபாவத்தைக் கலைத்தலாவது-ஈதுர்ப்பூத கற்பனாபாவங்களுள் ஒவ்வொன்றும் ஒன்றன்கூட்டமாகவும் பலவின் கூட்டமாகவும் சேர்ந்திருக்கும் சேர்க்கை எதுகாறுமோ அதுகாறும் கலைத்துக்கொண்டே யிருத்தலும், கரைத்தலாவது-கலைவுக்கிடமின்றித் தோற்றல் மாத்திர பாவமாயிருக்குஞான்று அத்தோற்றங்கட்கு உபாதான காரணமாயாக்குதலுமென்க. என்னை?

பிரத்தியட்சானுபூதி விளக்கம்.

"உழைப்பின் வகையறி யாரய லென்ப ருலகதனை
உழைப்பு தனதறி யாமை கெடுத்திடற் குற்றசெயல்
உழைப்பெது வென்னி லுலகணு வாக்கி யுலைவதறல் [றும்,
உழைப்பெது காறெனிற் றூலுகு மட்டென் றுணருமினே." என்

"உருவள வாத்தனைக் காணு மளவு முலகுருவாம்
உருவள வாத்தனைக் காணு மளவு முலகுண்மையாம்
உருவள வாத்தனைக் காணு மளவு முறவுளவாம்
உருவள வல்லவென் றுன்ன வெவையு மொழிநதிடுமே" என்றும்,

"அருவாத் தனையுன்ன வங்குட நேரன்று மடிக்கடிக்கு
அருவாத் தனையுன்னி யற்ற ரெவரக மல்லலற்றூர்
அருவாத் தனையுணும் வல்லா ரிலையெங்கு மாய்ந்திடுங்கால்
அருவோ சடமசத் தாகா, தனதுரு வற்பமுமே." என்றும்,

உபநிடதம்.

"ஐயமின்றித் தெய்வவுருத் தியானித்தா லதுவா
மருவுருவைத் தியானித்தா ல்ட்டமூர்த் தியுமாம்
பொய்யையிரண் டையுந்தவிர்த்து தானுகி யிருந்தாற்
பூரணமாஞ் சீவனெதிற் பொருந்துமது வாமான்
மையலுறு மனம்விடயத் தாசையுற்றே யதுவாய்
மரணசன னமும்வீளைந்த வாறதென்றே யுணர்ந்து
மெய்யறிவே தானுகப் பாவித்தா லதுவா [றும்,
விளங்குவர்யா வருஞ்சனியா வீட்டையுமெய் துவரே." என்

கைவல்லிய நவநீதம்.

"சடம தாகிய தியானமெய் யாகிய
சர்வமுத் தியைநல்குந்
திடம தானதெப் படியெனி லவரவர்
தியானமே பிறப்பாகு
முடல மாசையாற் றியானிக்கிற் றியானித்த
வுடல்களா குவர்மைத்தா
தொடர்ப வங்கெடச் சொருபமே தியானிக்கிற்
சொருபமா குவர்மெய்யே."

என்றுங் கூறியவாற்றூற் காண்க. இதுகாறும் கூறிப்போந்த தனால், எவரெவர் எதை எதை விடாது சிந்திக்கின்றார்களோ அவரவர் அது அது பாவமுற் றிருப்பாக ளென்பதாம். இவற்றில் ஐயம் உளதேல், நனவின்கண் நாம் எது எதுவாகச் சிந்தனையால் பாவப்பட்டு வருகின்றனமோ அது அதுவாக நீனவின்கண்ணும் கனவின் கண்ணும் தோற்றிக்கொண்டு வருவதே போதுமானசான்றென்க. அன்றியும் எஞ்ஞான்றும் உருவபாவத்திலுள்ள மாறுத அல்லலையும் அருவபாவத்திலுள்ள மாறுத அமைதியையும் குறிப்பித்து மிருக்கின்றதென்க.

எட்டாவது

அருவபாவ ஆராய்ச்சி விளக்கம் முற்றிற்று.

ஒன்பதாவது

மண்முதலிய சதுர்ப்பூத குணிப்பொருள் ஆராய்ச்சி விளக்கம்.

வெ ஸ்ரீ பா.

இந்தவா ராய்ச்சியின்க ணிச்சதுர்பூ தக்குணிதா
னந்தமிலாச் சிற்பொருளென் றுரையே—யெந்தவிதத்
தும்முழைத்துக் காணிலது சொல்லற் கெளிதன்றே
ரும்பிக்கை யல்லதது நான்.

பிராரத்துவத்தை நுகர்ந்து கழித்து வருகிறதற்கு உருவ பாவம் எய்தியிருப்பதுபோல் ஷி பரமாணு ஆராய்ச்சிக் கண் தேர்ந்த மட்சூனியை எட்டுவதற்கு, இவ்வுருவபாவம் சாமானியம் ஆகுமாறு செய்து அருவபாவம் விசேடமுற் றிருக்கினும், ஷி குணிப்பொருள் இஞ்சித்தும் எட்டுதற் கியையாது முற்றும் சூனியமாக இலட்சியப்படுகின்றதே? இங்ஙனம்விளங்கும் சூனியத்துவந்தானேஷி குணிப்பொரு ளென்பதெனின், விளங்குமிச் சூனியமானது முன்ஞான்று மகத்தணுப் பேதங்களை ஆராய்ந்துவந்த முடிவின்கண்ணை? அன்றி ஆராய்தற்கு முதற்கண்ணை? ஆராய்ந்த முடிவின் கண்ணேயெனின், அம்முடிவின்கண் சூனியமாகத் தோற்று வது ஆராயப்பட்ட மகத்தணுப் பேதங்களாகிய உருவங் களா? அன்றி மற்றொன்றென்பதா? உருவமன்று, மற் றொன்றாகிய இச்சூனியந்தானெனின், இச்சூனியமாகிய அரு வம் முன்ஞான்றிருந்தே அம்முடிவின் கண் தோற்றுவதா? அன்றி நூதனமாக உண்டாகித் தோற்றுவதா? நூதனமாக

உண்டாகியதன்று, முன்ஞான்றி ருந்ததே தோற்றியதெனின், அஃது ஆராய்ச்சிக்கு முன்ஞான்று தோற்றுததென்னே? உருவ பேதங்களால் மறைந்திருந்ததெனின், ஆராய்தற்கு முன்ஞான்று உருவமாகத் தோற்றியது யாது? இவ்வுருவந்தானெனின், இவ்வுருவம் முன்ஞான் றிருந்து தோற்றியுதா? அன்றி நூதனமாக உண்டாகித் தோற்றியதா? முன்ஞான்றிருந்தே தோற்றியதெனின், இவ்வுருவம் ஆராய்ச்சி முடிவின்கண் தோற்றுததென்னே? அருவத்தால் மறைந்திருந்ததெனின், இவற்றுல் அருவமும் உருவமும் இருப்பாயிற்று.

அங்ஙனம் இருப்பாயின், ஆராய்ச்சிக்கண் காரணகாரிய அடுக்குப் பேதங்களாகச் சிதைந்துபோவது யாது? உருவம் சிதைந்துபோகாவிடின், அருவமாய்த் தோற்றுமா? திபாபாவமே இருளென்றுற்போல, உருவபாவமே அருவமாகிய தோற்றமன்றே? அன்றெனின், உருவமானது காரணகாரிய பேதங்களாய்ச் சிதைந்து போவானேன்? அங்ஙனம் சிதைந்த சிதைவே அருவ இலட்சிய மென்பதற்கு முரணென்னையென்க. ஆராய்சசிக்கண், உருவநாசமே அருவ இலட்சியமாயின், அவ்வாராய்ச்சி இன்மைக்கண், அருவநாசமே உருவ இலட்சியமாக வேண்டுமேயெனின், ஆராய்ச்சிக்கண் அருவமாயும் அவ்வாராய்ச்சி இன்மைக்கண் உருவமாயும் தோற்றுவது யாதெனப்படும்? ஆராய்ச்சிக்கண் உருவத் தேய்வே அருவமாவதால், அருவத்திரிபே உருவமென்பதாயிற்று, அருவம் உருவமாகத் திரிந்து காண்பது எங்ஙனமெனின், உருவம் அருவமாய்த் தேய்வானேன்? அருவமாகிய அக்கினியானது உபாதி சகிதத்தால் சிவப்பு உட்டினம் பிரகாசமாக உருவப்பட்டதனலன்றே? மீண்டும், அபபேதங்கள் மாறி அருவமாகின்றன, அதுபோல், ஆராய்ச்சிக்கண்

தோப்பட்ட அருவமே தன்பாலுள்ள ஓர் விர்த்தியினாலே உருவபேதங்களாய்த் திரிந்தமையால், மீண்டும் இவ்வுருவபேதங்கள் அருவமாகத் தேய்கின்றன. இவற்றால் அருவமே உருவமாயும் உருவமே அருவமாயும் இருக்கின்றதென்றுயிற்று. ஆகவே, ஆராய்தலினாலும் ஆராய்தலின்மையினாலும் மாறி மாறித் தோற்றுவது அருவமும் உருவமுமா? அன்றி வேறென்ன? அருவமும் உருவமுமேயெனின், ஆராய்ந்தவர்க்கு உருவம் அருவமாய்த் தோன்றியஞான்று அவ்வுருவம் இல்லாததுபோல், ஆராயாதார்க்கும் அவ்வுருவம் இல்லாதிருக்கவேண்டுமன்றே? இருக்கின்றதே! ஆகலின், ஆராய்ந்தவர்க்கு மூடிவில் அருவமாகத் தோற்றுவது யாது? உருவமென்பதலலவே! இங்ஙனமே, ஆராயாதார்க்கு அருவம் உருவமாய்த் தோன்றியஞான்று அவ்வுருவம் இல்லாதது போல், ஆராய்ந்தவர்க்கும் அவ்வுருவம் இல்லாதிருக்கவேண்டுமன்றே? இருக்கின்றதே! ஆகலின், ஆராயாதார்க்கு முதலில் உருவமாகத் தோற்றுவதுயாது? அருவமென்பதல்லவே? ஆராய்ந்தவர்க்கு உருவமும் ஆராயாதார்க்கு அருவமுமின்றெனினும், அவ்வுருவாருவமாக மாறிமாறித் தோற்றுவது யாது? அன்றியும், உருவமென்பதும் அருவமென்பதும் சடபேதங்களா? அன்றிச் சித்துப்பேதங்களா? இரண்டும் திரிசியங்களாகலில், சடமென்பதாமெனின், இவ்விருசடமும் தம்மையும் மற்றொன்றையும் அறியாதே! மற்றொன்றுவது-இவ்விருசடங்களையும் இடைவிடாதறிந்துகொண்டிருக்கும் நாமாகிற அறிவெனப்படுவது. ஷி ஆராய்ச்சிக்கண்ணும் அஃது இன்மைக்கண்ணும் உருவாருவமாக மாறிமாறித் தோற்றுவது நாமென்பதா? அன்றி வேறென்பதா? வேறென்பது ஷி சடமாகிய உருவாருவ பேதங்களென்ப்படுவன. ஆகலின், மாறித் தோற்றுவது இவைகளன்று. நாமென்பாமெனின், நாம் உருவபேதங்களாக மாறினமாயின், அவ்வுருவ

பேதம் யாருக்குத் தோற்றுகின்றது ? அன்றி நாம் அருவ மாக மாறினமாயின் அவ்வருவம் யாருக்குத் தோற்றுகின் றது ? இவ்விரு தோற்றங்களையும் இருந்தபடி இருந்தறிகின் றது நாமாயிருக்க, இங்ஙனம் மாறி மாறித் தோற்றுவது நாமெனப்படுமா ? படாதே ? ஷே பரமாணுக்களுக்கு முத லாகிய குணிப்பொருளை எட்டாவிடினும், இங்ஙனம் மாறி மாறித் தோற்றுகின்ற இந்த ரகசியத்தையேனும் எட்டித் தெளியவேண்டுமன்றே? நாம் முற்பொழுது அக்குணியாகிய பொருள் எது எது என்றெட்டும் அப்பியாசத்தைக் கணமும் விடாதிருக்கின், அவ்வப்பியாசமானது முதிரமுதிரப் பிற் பொழுது அந்நினைவெழுச்சியும் அஃது ஒடுங்குதலுமாகிற இரு புடைபெயர்ச்சிகளும் தலைகாட்டுமா? அவைகள் தலை காட்டாதொழிய நிலைத்திருக்கும் நிலைமையன்றே உண்மை வெளிப்படுதற் கியைந்த நிட்டையெனப்படுவது. அங்ஙன மாகிய நிட்டை முதிரு முதிர்ச்சியினலன்றே மாறிமாறித் தோற்றுவது யாதென்கிற இவ்வரிய சந்தேகமகன்று பின் ஞான்று அயலின்றித் தானேயிருத்தற் கியையும். இச்சந்தே கத்தைப்போன்ற வேறு சந்தேகமும் உண்டா ? இச்சந் தேகம் ஒப்புயர்வற்றதாகின்றதே ? இவ்வரிய சந்தேக மிருப் பதுபற்றியும் நாம் உயர்திணையுற் றிருப்பது பற்றியுமன்றே,

> "ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
> வான நணிய துடைத்து."

எனத் திருக்குறள் மகாவாக்கியம் பிறந்திருக்கின்றது. இச்சந் தேகம் தெளிதற்கியையாவிடின், இவ்வாக்கியப்பெரும்பயனை இழந்துவிடவேண்டுவதுமன்றி இவ்வாக்கியமும் எங்ஙனம் மணம்பெறும் ? நிராசையின்றேல் தெய்வமுண்டோ - என் றருளிய தாயுமானவரது கருத்து யாதெனின், அகம்புற மீரி டத்தும் அயலென்பது முற்றுங் கற்பனைகளென ஆராய்ந்து

தெளிந்த தெளிவே நிராசை யெனவும், அநிராசையே தெய்வமெனக் கூறியது அந்நிராசைக்குத் தெய்வம அணிமைக்கெல்லாம் மிக்க அணிமையுற்றிருத்த லெனவுமாம். எனவே, அபலின்றென்னும் நிராசையே சிவானுபூதிவிளக்க மென்பதாம்.

இதுவன்றி, மனோநிக்கிரகமே உபசாந்த நிலையெனக் கூறிய வாசிட்டக்கவியின் அபிப்பிராயம்போல, சந்தேத நிக்கிரகத் தெளிவே மெய்யுணர் வென்பதாமென்க. அன்றியும், அக்குறள் மகாவாக்கியமே,

"ஓர்த்துள்ள முள்ள துணரி னெருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு."

எனவும் பிறந்திருக்கின்றது. மக்களியாக்கையைப் பெற்றும் அயலைப் பொருளென்றுணர்ந்து வாளாபோகாது இவ்வுழைப்புக்கு இயையவேண்டுமன்றே? நம்மாலும் பிறராலும் நாம் உயர்வு உறுதிருக்கின் இவ்வரிய உழைப்பு நாம் எய்தவேண்டுவதின்று. அங்ஙனம் உயர்வற் றிருக்கின்றதால்,

"தூக்கப் படுவோன் றுயரம்போற் றுனிருந்து
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க."

என்றருளிய உத்தமவாத நூலின்படி நின்று உழைக்கவேண்டுமே! அன்றியும்,

வாசிட்டம்.

"உலகெது நாமாரென்ன வுற்றுநின் றுணருமட்டுங்
கலகீமா பிறவிமோகங் கங்குல்போன் மூடிநிற்கு
மலகிலா வுலகும்யாமு மழிவில்சிற் சோதியன்றே
சலனமில் கண்ணுற்கண்டோர் தத்துவ நிலைமைகண்டோர்."

என்றருளியதில், உலகென்பது திரிசியம் நாமென்பது திருக்கு. இத்திரிசியம் மூவகையின:—அவை, உருவமெனவும் அருவமெனவும் உருவாருவமெனவுமாம். இம்மூன்றும் நிலையாது மாறிமாறித் தோன்றும் அனுபவமுடையவைபோலிருக்கின்றன. திருக்கு இங்ஙனந் தோன்றும் அம்மூன்றினையும் அவ்வப்பாவமாக நின்றுணர்ந்துகொண்டிருப்பது. இத்திருக்குத் திரிசிய மிரண்டும், ஏகமேவாத்வைத நிலைமையாகிய சொப்பிரகாசத்தின் பிரதிபலன மாகின்றன. என்னை?"அத்துவித வத்துவைச் சொப்பிரகாசத் தனியை" என்றூர் தாயுமானவர். இவ்வுளவு தெரியாது ஷி திரிசியங்களில் சதுர்ப்பூதாம்ச பரமாணுக்களே மாத்திரம் பொருளெனக் கொண்டனர் நாத்திகர். அந்த சதுட்டயத்தோடு அவைகளுக் காதாரத்துவமாகிய அருவத்தையும் ஷி திருக்கையும் பொருளாகக் கொண்டனர் ஆத்திகர். அங்ஙனம் இவ்வாறினையும் ஒப்புக்கொண்டதினும், திருக்கு.இரண்டெனவும், அவ்விரண்டில் ஒன்று ஏகமெனவும், மற்றொன்று கோடிக் கணக்கென்பதின்றிப் பலகோடிக் கணக்குக்கும் மிஞ்சியதெனவும் கொண்டனர். ஷி உளவு தெரிந்து பகிர்முகநோக்கால் திருக்குத் திரிசிய மிரண்டெனவும், பின்ஞான்று அந்தர்முகநோக்கால் இரண்டென்பதின்றி, அத்திருக்கை ஏகமேவாத்வைதமென்றும் கொண்டனர் அத்துவிதிகள். இவர்கள் இங்ஙனமிருக்க, நாம் ஷி சந்தேகத்தைப்பற்றி இன்னும் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், இந்த நாமரூபங்களே முன்னர் ஆராய்ந்ததொன்று முடிவிற் சூனியமாகத் தோற்றுவானேன்? சூனியமென்பது ஓர் முதலல்லவே! நாமரூபங்களே முதலல்லவெனின், சூனியமா ஓர் முதலெனப்படுவது? இஃதிங்ஙனம் நிற்க, ஷி ஆராய்ச்சியின்மையில் நாமரூபங்களாகத் தோற்றிக்கொண்டிருப்பது யாது? தோற்றுவதினும் இவைகள் இருந்து தோற்றுவதா? அன்றி இல்லாதிருந்தே தோற்றல்

மாத்திரமாகத் தோற்றுவதா ? இருந்தே தோற்றுகின்றன வெனின், ஆராய்தலில் காரணகாரியம் காரணகாரியங்களா ய்ப் போகவேண்டுவதின்று ? பொருளில்லாமலே தோற்றல் மாத்திரமாகத் தோற்றுகின்றனவெனின், அருந்தல் பொருந் தல் முதலிய அனுபவங்களுக் கியையவேண்டுவதின்று. அனு பவத்துக் கியைந்திருப்பதால் உண்மை யென்னலாமே·யெ னின், இத்தோற்றங்களா லுண்டாகும் அனுபவங்கள் விபரீ தானுபவமின்றி இருக்கவேண்டும்! எதார்த்த அனுபவமாக வே இருக்கின்றனவெனின், தூலமதி கிஞ்சித்து மில்லா தவர்க்கும் இருக்கவேண்டும்! அம்மதி இல்லாதவர்கள் யாரெ னின், ஆராய்ந்து தெளிந்த தெளிவுமயமா யிருக்கும் சூக்கும மதியையுடையோர். இவை எவர்க்கு அனுபவப்பட்டு வரு கின்றனவோ அவர்கள் தூலமதி யுடையாரென்றும், அத்தூல மதியாரால் அனுபவப்படு மீனத்தும் இல்லையென்றுங் கொள் ளலாமோவெனின், சொல்மாத்திரமாயும் தோற்றல் மாத்திர மாயு மிருப்பானேன் ? இங்ஙன மிருப்பதால், இந்த நாமரூப ங்களே என்னவென்கிற தெனின், துவைதசத்துப் பொரு ளென்கிறதென்க. எங்ஙனமெனின், ப்ராதிபாலிக சத்தென வும் விவகாரிக சத்தெனவுமாமென்க. ப்ராதிபாலிக சத்தென் பது - ககனாரவிந்தம்போல் சொல்மாத்திர மாகவும், கயிற் றரவுபோல் தோற்றல் மாத்திரமாகவு மிருப்பதாமென்க. விவகாரிக சத்தென்பது-இங்ஙனம் பிரதிபலித்துத் தோற் றும் தோற்றங்களே, இருப்பது மட்பொருளும் நூற்பொருளு மாயிருக்க, கடபேதங்களும் படபேதங்களும் தத்தம் உபா தானங்களல்லது, தாமே சகலானுபவங்களுக்கும் உடன்பட் டிருப்பனபோல் ஆராயவேண்டியவாறு ஆராயாது, எப் பொருளைத்தன்மைத் தாயினு மப்பொருளப்படி காணு மறிவுடைய தூலமதிகள், இச்சாஞானக்கிரியைகளியற்றி இன் புறுதற்கியைந் திருப்பதாமென்க. பாரமார்த்திக சத்தென்

பதோ டை அரவாகிய ப்ராதிபாலிகம் கயிற்றின் கண்ணும் கடபடமாகிய விவகாரிகம் மண் நூலின் கண்ணும் நிகழ்வன போல், தோற்றல்மாத்திரமாகிய நாமரூப ப்ராதிபாலிகமும், இவை அனுபவப்படும் விவகாரிகமும் நிகழுகின்றது எதன் பாலதோ அந்த அறிவாமென்க. இன்பதுன்பானுபவத்திற் கியைந்த இந்நாமரூபங்களைப் பாரமார்த்திக சத்தென்னுது, கயிற்றரவு கடபடங்களைக் காட்டிக் கற்பனை யென்னலாமோ வெனின், சன்னிதோடமும் சொப்பனவத்தாத்தோடமும் நேரிட்டனுன்று தோன்றுந் தோற்றங்கள், பாரமார்த்திக சத்துப்பொருள்களாயின், துவிதப்போலிசத்தாகிய இந்நாமரூபமனைத்தும் பாரமார்த்திகச் சத்தெனப்படும். அவ்வீரிடத்தும் தோற்றும் தோற்றங்களைப்போல் இவற்றை என்னலாமோவெனின், அவ்வீரிடத்துத் தோற்றங்களும் அனுபவத்துக் கியையாததுண்டா? அனுபவத்துக் கியைந்ததனால் இந்த நாமரூபங்கள் அவைபோன்ற தென்னலாமோவெனின், அவ்வீரிடத்துத் தோற்றங்களைப் பார்க்கினும் இவற்றில் என்ன விசேடமிருக்கின்றது? பந்தமுத்தி சாதனங்கள் நிகழ்ந்துவருகின்றதே மிக்க விசேடமெனின், சொப்பனவத்தைக் கண்ணும் பந்தமுத்தி சாதனங்கள் நிகழ்ந்து வருவதால் அக்காட்சிகள் மெய்ப்பொருளாகுமோ ? ஆகாதே! ஆகாததால், அப்பந்தமுத்திகள் அவ்வவத்தைக்கண்மருண்டதுபோலும்தெளிந்ததுபோலுமே அன்றி, இச் சாக்கிராவத்தையைப்போல் அவைகள் எதார்த்த மல்லவென்ப தாயிற்றேயெனின், இவ்வவத்தைக்கண்ணும்மருண்டதுபோலும்மீண்டுந்தெருண்டதுபோலுமேயன்றி இவற்றுல் எதார்த்தமென்பதென்னே? இவற்றுள், நிகழும் பந்தமுத்தி சாதனங்களுக்குப் பயன் போலிகளாயின், இச்சாதனங்களை நிகழ்த்துமாறு உணர்த்துவாமெனினென்,? தகுமே ஆன்மா போகமேமுத்தி, கண்டதேகாட்சி கொண்டதே கோல மென்றிருத்தலினுலென்க. இந்த காத்தி

காணுபவம் வருவானேனெனின், நாமரூப எழுச்சியினுலன்றி வேறன்றென்க. நாமரூப எழுச்சி வருவானேனெனின், கயிற்றின்கண் அரவு வந்தது உண்மையாயின், இவ்வெழுச்சியும் உண்மை யெனப்படுமென்க. பந்தமென்பது கயிற்றரவுபோலெனின், இதுகாரணமாகவரும் முத்தியென்பதும் பொய்யாகுமே! இவ்விரண்டு மிங்ஙனமிருக்கின், நாம் எங்ஙனமிருப்பதெனின், அவத்தாத்திரயங்களுக்கு விலட்சணமுற் றிருக்கின்றதென்க. அங்ஙனந்தான் இருப்பானேனெனின், மூன்ஞான்று பந்தம் கற்பிதமென்றதனுல் இக்கற்பிதத்தைக் கடந்திருக்கவேண்டுவது அவசியமாமென்க. பந்தமுத்தி கற்பித மென்றதற்கு உதாரணம்:—

சோருபசாரம்.

"என்னேயே யல்லாமல் யான்பெற்ற தேதுமிலை
யென்னேநான் பெற்றிருந்த தெப்போது - மென்னேயன்றிப்
பந்தமிலை வீடுமிலை பார்க்குளிவை யாராயிற்
சிந்தனையு மில்லாத தே." என்றும்,

வாசிட்டம்.

"அந்தமற் றொன்றுய் விகற்பமற் றறிவா
யழிவிலாப் பரம்பொரு ளிருக்கப்
பந்தமுற் றவரார் வீடுபெற் றவரார்
பாவனை விகற்பமே யனைத்துஞ்
சிந்தனை விரிவே பந்தமா மதனைத்
தீர்ந்திடன் முத்தியா மனத்தின்
றொந்தலீ லையினுற் றூரமா மணித்துங்
காரமு மண்ணிதாய்த் தோன்றும்."

என்றுங் கூறியவாற்றுற் காண்க. காரியபேதங்களில் முடிவாயுள்ள காரியமாகிய மகத்துருவ மெனப்படாமலும், காரண பேதங்களில் முடிவாயுள்ள காரணமாகியபரமாணுக்களெனப்

படாமலும் நின்றுள்ள மண்ணென்கிற பெயர்க்கியைந்த குணிப்பொருள் யாதென இதுகாறும் ஆராய்ந்து வந்ததில், ஓரறிவென்பதாயிற்று. அவ்வறிவின்பால் எழுமெழுச்சியாகிய சங்கற்பமே சோபாதிக சங்கற்பமென்றும், நிருபாதிக சங்கற்பமென்றும் இருமையின. அவற்றுள், சோபாதிக சங்கற்பமாவது - சதுர்ப்பூத அணுமகத்து முதலிய அனேக பேதங்களா யிருக்கின்றது. நிருபாதிக சங்கற்பமாவது - இம்மகத்தணுப் பேதங்களுக்கு ஆதாரம் நிரந்தரம்போலிருக்கின்றது. நிரந்தரமாவது - இடையின்மை, அதாவது நிறைவு. ஷி மகத்தணுப்பேதங்களா யிருக்கும் சதுர்ப்பூத சோபாதிக சங்கற்பமானது, ஆராய்ச்சிக்கண் காரணகாரிய பேதங்களாகத் தேயுந் தேய்வே நிருபாதிக சங்கற்ப சூனியமும், ஷி ஆராய்ச்சி யின்மைக்கண் இந்நிருபாதிக சூனியமே சோபாதிக சங்கற்ப அணுமகத்துக்களுமாக மாறிமாறிக் காண்பதே யன்றி, சங்கற்பத்தையின்றிச் சோபாதிகமாகிய அணுமகத்துக்களும், நிருபாதிகமாகிய சூனியமும் இல்லவேயில்லை. உண்டெனின், ஒவ்வோரு பூதமும் மகத்துமுதல் பரமாணுக்காறும் கலைந்து கலைந்துபோய் முடிவில் கலைதற் கிடமின்றித் தோற்றன்மாத்திரமாக நின்று, பின்ஞான்று -கரைந்துபோனது யாது? சதுர்ப்பூதங்களா? அல்லவே! ஏனெனின், ஆராய்தார்க்கு இச்சதுர்ப் பூதங்களும் தேய்ந்ததன்றென முன்ஞானறை சம்மதித்தாயிற்றே! ஆகலின், ஆராய்பவர்க்குக் காரண காரியமாய்த் தேய்வது யாது: தத்தம் சங்கற்பமாகிற பாவமன்றே? எங்கெங்கே ஆராய்ச்சியினுல் தத்தம் சங்கற்பமாகிய பாவமானது கலைதலையும் கரைதலையும் எய்துதலுண்டோ அங்கங்கும் சதுர்ப்பூத கற்பனைகளின்றியும், எங்கெங்கே ஆராய்ச்சி யின்மையினுல் தத்தம் சங்கற்பமாகிய பாவமானது கலைதலையும் கரைதலையும் எய்துத லில்லையோ அங்கங்கும் அச்சதுர்ப்பூத கற்பனைகளுண்டாயு மிருக்கின்றன. இவற்றை இனிது நிதா

னிக்கும் சூக்கும மதிகளுக்குத தத்தம் பாவம் தேய்வது நன்கு விளங்கும். அங்ஙனம் நிதானித்தற்குக் கிஞ்சித்தும் நேரமில்லாது முற்றும் கல்வி கேளவி ஞருண ஆச்சிரம மத வாத முதலியவைகளால், நான் இன்னான் நான் இன்னான் என்றும், நான் இன்னள் நான் இன்னள் என்றும், நாம் இன்னர் நாம் இன்னர் என்றும் மூபபாற் சொருபிகளாகத் தத்தமையும் கௌணமாய்க் கொள்ளாது, சத்தியமாக மயங்கிப் போகத்துக்கே அங்காந்துகொண்டு நிகழும் தூலமதிகளுக்குத் தோன்றவே தோன்றுது. கிஞ்சித்தேனும் நிதானிக்க நேரமில்லாமைக்கு ஏதுவென்னை யெனின், கிர்த்தியங்கள் தோறும் நான் நான் என மூந்துதற் கியைந்த போதமானது ஓர் மூதலாயின், அது எப்பொருள் எக்காலத்தது எவ்விடத்து எக்குணத்தது எச்சினையது எத்தொழிலுற்றது? அசேதனமும் அவயவமுமில்லாத அது எக்கிர்த்தியங்களையும் தான் எவ்வாறு நின்றியற்றுதற் கியைந்ததெனவும், பொருளன்முயின் குணந்தொழி லாகுமெனவும், அக்குணந் தொழிலுக்கு அதிஷ்டானுகார விளகமென்பது யாதெனவும், கலங்கும் கலக்கமானது கிஞ்சித்துமின்றி முற்றும் நாடரூபங்களிலேயே திருத்தியுற் றிருத்தலாமென்க.

இவ்விபரீத திருத்தியால் ஷி ஆராய்ச்சிக்கண் காரணகாரியங்களாகத் தேய்வது இத்தனமைத்தெனத் தோன்றுதிருக்கின், அதை அபரோட்சமாகவேனும் பலஞான்றும் பழகித் தெளிந்து அதுவாதற்கு எங்ஙனங் கூடும்? கூடாமையின், படிப்பாலும் குதர்க்க தர்க்க மொழிகளாலும் அஃது எட்டுதற் கியையுமா? இயையாதாகலின், நிதானித்தே தீர வேண்டு மென்க. அங்ஙனம் நிதானித்தஞான்று மட்பூதக் ணிக்குப் பொருள் ஒப்பற்ற ஓரறிவையன்றி வேறுகுணிப் குபாருள் இல்லையென் றுகின்றது. எனெனின், சங்கற்ப பாவ

மே அணுமகத்துப் பேதங்களாகிற மட்பூதமா யிருக்கின்ற தால், இம்மட்பூதமானது பாவத்தையன்றியும் அப் பாவமா னது சங்கற்பத்தையன்றியும் அசங்கற்பமானது அறிவாகை யன்றியும் இன்றுகலிஞலென்க. இம்மட்பூத குணிக்குப் பொருள் ஷ அறிவானேயன்றி வேறில்லாததுபோல, ஏனைய நீர் முதலிய மூப்பூத குணிகளுக்கும் பொருள் அவ்வறிவா னே அல்லாமல வேறின்றென்ப தாயிற்றென்க. ஏனெனின், அம் மூப்பூதங்களையும் அததன் மகத்துருவில் நின்று காரணை நெறித்தாக ஆராய்ந்து செல்லுழி, அணுவுக்குள் அணுவும் அணுவுக்குள் அணுவுமாய்க் கலைபப்பட்டு ஈற்றில் ஒவ்வொன றுக்கும் பொருள்படாது நிருபாதிக சங்கற்பமாய் முடிந்து, பின்ஞான்று நிதானித்துழி ஷ அறிவானுகவே முடிகின் றது சத்தியமாகலின்,

பிரத்தியட்சானுபூதி விளக்கம்.

"காலம் பொருளிட மேய மாறல கத்தியல்பு
காலம் பொருளிட மன்றி யுலகினைக் காட்டறியோங்
காலம் பொருளிட மெய்ம்மை யுணர்ந்தவர் கண்டறிந்தார்
காலம் பொருளிடத் தன்மை மயக்கறக் காட்டுதுமே." என்றும்,

"அணுமகத் தன்றி யவைமூன்று மில்லை யயலுருவா
யணுமகத் தென்றே யறிஞர் கணித்தத்தற் கையமில்லை
யணுமகத் தெங்ங னகம்பாவ மாகு மறிவிலர்க்கே
யணுமகத் தென்றறி யாதசை னுலங்ங னுயதுவே." என்றும்,

உத்தமவாதநூல்.

"அணுசைமோ கத்தா லகண்டமாக் கண்டிங்
கணுவாக மீண்டுமே யாகு—மணுவுந்தா
னுயுங்சா னுட்பநுட்ப மாகியெட்டா தாகுமெனின்
மாயுஞ் செயற்கையெனல் வந்து." என்றும்,

"தனக்கென் றொருருவுருவஞ் சற்றுமிலை யுண்டா
வெனக்குநீ காட்டுதியே லேற்ப—னனைத்தினுமே
யாக்கப் படுபொருளென் றுரேற்பர் நின்கொள்கை
வாக்கடங்கிக் கேட்டுய்க வந்து." என்றும்,

"இவ்வே யெதார்த்த மொன்று மெங்கெங்கு மாய்ந்திடினு
மெல்லாம் விகாரவுரு விவ்வுருவால்—வல்ல
படைப்பா னுளனென்னிற் பாமரின் மேலோ
அடைக்குங்கல் லிவ்வுத்தி யாம்." என்றும்,

சோடபசாமம்.

"பூதாதி யைந்தும் பொறிபுலன்க ளெல்லாஞ்சித்
தேதாதி யந்தமவை யெல்லாஞ்சித்—தோதரிய
கற்பனையுஞ் சித்தனைத்துங் காண்பானுங் காட்சியுஞ்சித்
தற்பமும்வே றில்லாமை யால்." என்றும்,

குறள்.

"சுவைவொளியூ றோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு." என்றும்,

தத்துவராயர் பாடுதுறை.

"உள்ளது போதமென் றூதேடா காள
முலகமோக் காளமென் றூதேடா காளம்
வெள்ள வெளியிதென் றூதேடா காளம்
வேதஞ் சொன்னவண்ண மூதேடா காளம்.

என்றும் உறுத்திக் கூறியிருக்கின்றன.

அன்றியும் உருவாருவமாகிய இப்பூதமைந்தையும் உயிராகிய அறிவையன்றிக் கிஞ்சித்து மினறென அவைறிவிலொடுக்கி, அவ்வறிவாகிய உயிரை அறிவானந்தமய ஆதாரபோதத்தை அனறி யின்றென அவ்வாதார போதத்திலொடுக்கி,

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

எனக் குறள் மகாவாக்கியம் பிறந்திருக்கின்ற தென்க.

இவ்வாராய்ச்சியில் சதுர்ப்பூதமாகிய குணங்களுக்குக் குணிப்பொருள் சங்கற்ப எழுச்சியையன்றி இன்றெனவும், அச் சங்கற்பமும் போதமாகிய என்னையன்றி இன்றெனவு மாயிற்றென்க.

ஒன்பதாவது

மண் முதலிய சதுர்ப்பூத குணிப்போருள் ஆராய்ச்சி விளக்கம்

மூற்றிற்று.



பத்தாவது

பிரமசைதன்னிய இலட்சியார்த்த விளக்கம்.



வெண்பா.

இந்தவா ராய்ச்சியினி லிப்பூத மைந்துமே
சந்தமசத் தாதிகளாய்த் தாமிருக்கிற் – சந்ததமுஞ்
சத்தா திகளாகச் சார்ந்தசகு ணத்தினுக்கே
யொத்திலகும் பிர்மமக மோர்.

முன்ஞான்முராய்ச்சிக்கண் நானென்னும் போதமானது பிரமசொரூபமென்ற தெங்ஙனமெனின், ஆங்காங்கும் தனித்தனியாக நின்றிலங்கும் ஆதார சாட்சி சைதன்னியங்களீனத்தும் ஒன்றுபட்டு வியாபித்து விளங்கும் அனுபூதி நிலையாமென்க. தனித்தனி ஆதாரசாட்சி சைதன்னியமென்ற தெங்ஙனமெனின், தனித்தனிச் சிவபோதமும் அவ்வச்சீவபோதங்கட்கும் தனித்தனி அவத்தாத்திரய முதலியவைகளும்தங்கியிருத்தற்கு இடமாகிய வியாபக விளக்கமாமென்க. சீவன் முதலியவைகளைத் தனித்தனி வியட்டிகளாகக் கூறுகின்ற தென்னையெனின், சிவபோத மென்பது உண்டெனப் பட்டதன்றே? அச்சிவபோதம் பலவென்பதா? அன்றி ஒன்றென்பதா? ஒன்றென்பதுதானெனின், தேகம் அபிமானம் கன்மம் போகம் ஆகிய இக்கான்குள் ஒவ்வொன்றும் பலவாக அனுபவப்படாதிருக்கவேண்டுமே! இருக்கின்றதால், எங்ஙனம் சிவபோதம் ஒன்றெனப்படும்? ஷ தேகாதிகள் நான்கும் பலவெனப்படுதலால் சிவபோதம் பலவெனப் படுமோவெ

னின், தேகங்களனேத்தும் நானென்று அபிமானிக்கப்படினும் அங்ஙனம் அபிமானிக்கும் வினைமுதல் சிவபோதமன்றே ? அச்சிவபோதம் ஒன்றுயின், ஓர் தேகத்தை நானென்று அபிமானித் திருத்தல்போல் ஆங்காங்குமுள்ள சர்வ தேகங்களையும் அவ்வொன்றே நானென் றபிமானிப்ப துண்டா ? உண்டெனின், ஓர் தேகங் காரணமாக வந்து அத்தேகாபிமானியைத் தாக்கும் இன்பதுன்பப் போகமானது ஏனைய தேகாபிமானிகளையும் தாக்குகிறதுண்டா? இன்பதுன்பங்கள் வாய்ப்பதை ஏற்றற்கு ஏதுவின்றிய தேகமு முண்டாவெனின், சர்வ தேகங்களும் இன்பதுன்பப்போகம் வாய்த்தற்கு ஏதுக்களா யிருக்கினும் அவ்வப் போகங்களையும் ஏற்பது அவ்வத் தேகாபிமானிக ளன்றே ? அவ்வத் தேகாபிமானிகள் சிவ போதங்களாகலின் பலவென்பதற்கு முரணென்னே ?

அன்றியும் ஓர்தேகம் ஏதுவாக இன்பம் வாய்க்கும் ஞான்று மற்றோர் தேகம் ஏதுவாகத் துன்பம் வாய்க்கின்றது. ஓர் தேகம் ஏதுவாகத் துன்பம் வாய்க்கும் ஞான்று மற்றோர் தேகம் ஏதுவாக இன்பம் வாய்க்கின்றது. ஓர் தேகம் ஏதுவாக வாய்க்கும் இன்பத்தை அத்தேகாபிமானி அனுபவிக்கும் ஞான்று மற்றோர் தேகாபிமானி அவ்வினபத்தை அனுபவித்தலின்று. ஓர் தேகம் ஏதுவாக வாய்க்கும் துன்பத்தை அத்தேகாபிமானி அனுபவிக்கும் ஞான்று மற்றோர் தேகாபிமானி அத்துன்பத்தை அனுபவித்தலின்று. ஓர் அபிமானியை அடுத்திருக்கும் தேகம் அவ்வபிமானியை விட்டகலும் ஞான்று மற்றோர் அபிமானியை அடுத்திருக்கும் தேகம் அவ்வபிமானியை விட்டகலுதலின்று. ஓர் தேகாபிமானி பின்ஞான்று அதாவது மறுமைக்கண் எவ்வெவற்றை அனுபவித்தற்கு அவற்றிற்கியைந்த ஆகாமியம் சஞ்சிதமிரண்டும் அவ்வபிமானிக்குக் கட்டுப்பட்டு வருகின்றனவோ அவ்வா

காமியம் சஞ்சிதமிரண்டும் மற்றோர் தேகாபிமானிக்குக் கட்டுப்படுகின்றதின்று. ஓர் தேகாபிமானிக்கு எது எனதென்று பந்திக்கப்படுகின்றதோ அது மற்றோர் தேகாபிமானிக்குப் பந்திக்கப்படுகின்றதின்று. ஓர் அபிமானி கர்மகாண்டியா யிருந்து யாகாதி கிருத்தியங்களை இயற்றின் மற்றோர் அபிமானி உபாசனை காண்டியாகவேனும் அன்றி ஞானகாண்டியாக வேனுமிருந்து அதற்கியைந்த உழைப்புக்களை எய்துதலும், ஓர் அபிமானி உபாசனை காண்டியா யிருக்கின், மற்றோர் அபிமானி மற்றிரண்டி லொன்று யிருந்தொழுகுதலும், ஓர் அபிமானி ஞானகாண்டியா யிருக்கின் மற்றோர் அபிமானி மற்றிரண்டி லொன்று யிருந்தொழுகுதலும், இங்ஙனம் ஒவ்வோர் அபிமானியும் ஒவ்வோர் கிலைமைத்தா யிருக்கின்றதாயின், அபிமானியாகிய சிவபோதம் ஒன்றென்பதா ? அல்லவே ! தேகம் அபிமானம் கன்மம் போகம் ஆகிய இந்நான்கும் ஓர் வகுப்பா யிராமல் கணித்தற்கரிய பலவகுப்புகளா யிருப்பது கண்கூடாகலின், அவ்வவ்வோர் வகுப்புக்கும் ஒவ்வோர் அபிமானி இருக்கின்ற தென்பதற்குக் கிஞ்சித்தும் முரணினமுமென்க.

இங்ஙனமிருக்கும் அபிமானிகளாகிய சிவபோதங்களுள் ஒவ்வொன்றுக்கும் தூல முதலிய சரீரத்திரயமும், விசுவன் முதலிய அபிமானத்திரயமும், சாக்கிர முதலிய அவத்தாத்திரயமும் உண்டாயிருக்கின்றது அனுபவமன்றே ? ஓர் சிவபோதமும் அதற்கியைந்த சரீரத்திரயமும் அபிமானத்திரயமும் அவத்தாத்திரயமும் ஆகிய இந்நான்கும் ஓர் வகுப்பா யிருப்பதுபோல் ஆங்காங்கும் பலவகுப்புகளா யிருக்கின்றதன்றே ? ஓர் வகுப்பாகிய சிவபோத முதலிய நான்கும் தேர் உருளையைப்போல் மாறி மாறி வருகின்றதன்றே ? இங்ஙனமே ஒவ்வோர் வகுப்பாகிய சிவபோத முதலிய நான்

கும் ஆங்காங்கும் கூடி உருளையைப்போல் மாறி மாறி வருகின்றதன்றே ? இங்ஙனம் இவ்வகுப்புக்குள் மாறிக்கொண்டு வருகின்றது யாதின்பா லெனப்படும் ? ஓர் வகுப்பாகிய சீவபோத முதலிய நான்கும் தோன்றும்ஞான்றும் தோன்றுஞானறும் இவ்வகுப்போடு தான் தோன்றுதலும் தோன்றுதிருத்தலுமின்றி இதற்கு விலட்சணமாக நின்றுணர்ந்து வருகின்ற ஓர் மாறுப் போதமுண்டன்றே ?

இங்ஙனமே ஆங்காங்கும் அவ்வவ் வகுப்புகளோடு தோன்றுதலும் தோனறு திருத்தலுமின்றி அவ்வவற்றிற்கும் விலட்சணமாக நின்று நின்றுணர்ந்து வருகின்ற ஒவ்வோர் போதமு முண்டன்றே? அவ்வப்போதமும் அவ்வவ் வகுப்புகளுக்கும் சாட்சி சைதன்னிய மென்பதன்றே ? அவ்வச் சாட்சி சைதன்னியமும் கூடி சீவபோதங்களுள் எதற்குண்டெனப்படும் ? எதற்கின்றெனப்படும் ? பிரமன முதலாக நிகழும் ஒவ்வோர் உயிராகிய போதத்துக்கும் சாட்சிசைதன்னியம் சதோதயமாக விளங்கிக்கொண்டிருக்கின்றதன்றே ? அவ்வச் சாட்சிக ளனைத்தும் ஒன்றெனப்படுமா ? அன்றிப் பலவெனப்படுமா ? பலவெனப படுமெனின், யாதினால் பல வெனப்படும் ? அனுபவங்களாலெனின், அவ்வனுபவம் கூடி சீவபோதமுதலாகிய பலவகுப்புகளாக நிகழ்கின்றனவன்றே? இப்பலவகுப்புகளுள் ஒவ்வொன்றும் வியட்டி வகுப்பன்றே? இப் பலவியட்டி வகுபபுகளால் அவ்வாதார சாட்சி சைதன்னியபோதம் பலவாகின்றதானால், வியட்டிகளாகிய இப்பல வகுப்பெனபதின்றி ஓர் வகுப்பாகிய சமட்டி மாத்திரமாயிருக்கின், அஞ்ஞான்று அதனால் அவ்வாதார சாட்சி சைதன்னிய போதமானது பலவெனப்படுமா? படுமெனின், வியட்டியுபாதித்திரய முதலிய பல வகுப்பாகிய இவ்வேதுக்களன்றி அவ்வாதார சாட்சி போதம் பலவெனப்படாட்டுமே.

வியட்டிகளாகிய இப்பல வகுப்புகளின்றி அவ்வாதார போதம் பலவெனப் படாதோ வெனின், வியட்டிகளாகிய இப் பலவகுப்புக ளிருக்கும் ஞான்றும் அப்போதம் ஒன்றெ னப்படாதோ ? படாதெனின், பலவென்பதும் படாதென் பமே ! அங்ஙனமாயின், பலவகுப்பாகிய உபாதித்திரய முத லியவைகள் இல்லாதிருக்கட்டுமே யெனின், இவ்வியட்டி உபாதித் திரயங்களுள் ஓர் பாகமாகிய ஒவ்வோர் தூலோபாதி யும் சமட்டி பஞ்சீகிரத தூல பஞ்சபூதங்களென்றிக் குணம் தொழிலெனப்படாது ஒவ்வோர் பொருளெனப் படட்டும் ! இங்ஙனமே, ஷை வியட்டி உபாதித்திரயங்களுள் மற்றோர் பாகமாகிய ஒவ்வோர் சூக்குமோபாதியும் அபஞ்சீகிரத சூக் கும பஞ்சபூதங்களென்றிக் குணந்தொழி லெனப்படாமல் ஒவ்வோர் பொருளாயிருக்கட்டும்! இங்ஙனமே, ஷை வியட்டி உபாதித்திரயங்களுள் ஓர் பாகமாகிய ஒவ்வோர் காரணோ பாதியும், அவையாவன - அவித்தையோபாதிகள், அவ்வவித் தையோபாதிகளும் சமட்டி காரணோபாதியை யன்றி அதா வது - மாயோபாதியை அன்றிக் குணம் தொழிலெனப் படா மல் ஒவ்வோர் பொருளா யிருக்கட்டும் ! அங்ஙனமில்லையே !

அன்றியும், ஆங்காங்கும் அவ்வவ் வியட்டி தூலோபாதி சகிதமின்றி விசுவனென்னும் அபிமானியும் அவ்வவ் வியட்டி சூக்குமோபாதி சகிதமின்றித் தைசதனென்னும் அபி மானியும் அவ்வவ் வியட்டி காரணோபாதி சகிதமின்றிப் பிரா க்ஞனெனனும் அபிமானியு மிருக்கட்டுமே ! அன்றியும், வியட்டி தூலவிசுவாபிமானியை யன்றி வியட்டி சாக்கிராவத்தை யும், வியட்டி சூக்கும தைசாபிமானியை யன்றி வியட்டி சொப்பனவத்தையும், வியட்டி காரணப் பிராக்ஞாபிமானி யை யன்றி வியட்டி சுழுத்தியவத்தையு மிருக்கட்டுமே ! அன்றியும், ஷை வியட்டி தூல முதலிய உபாதித் திரயங்

கரும் வியட்டி விசுவன் முதலிய அபிமானத் திரயங்களும் வியட்டி சாக்கிர முதலிய அவத்தாத் திரயங்களும் ஆகிய இம் மூப்பாகங்களின் சகிதமின்றி ஷை வியட்டி சீவபோத மென்பது தனித்தனி ஒவ்வோர் முதலாயிருக்கட்டுமே! இன்ரூகலின், இவ்வியட்டிகளாகிய எண்ணரிய பேதங்களும் சொல் மாத்திரமும் தோற்றன்மாத்திரமுமா யிருக்கின்றனவன்ரே? இங்ஙன மிருக்கும் இக்கற்பனைகள் அனுபவப்படுவது யதார்த்த அனுபவமா? யதார்த்த அனுபவமென்பது பழுதை பழுதையாகவும் கிளிஞ்சல் கிளிஞ்சலாகவும் கட்டை கட்டையாகவும் சம்பந்தப்படுவதுபோல் ஷை உபாதித்திரய முதலிய வைகள் பொருள்களாயிருந்து சம்பந்தப் படுவனவன்ரே?

அங்ஙனமின்றி, அரவும் வெள்ளியும் கள்ளனும் சம்பந்தப் படுவதுபோல் சம்பந்தப்பட்டு வருவது விபரீதானுபவமன்ரே? இங்ஙனம் சம்பந்தப்படு மனுபவமே விபரீதானுபவமாயின், இவ்விபரீத அவத்தாத்திரய முதலியவைகள் மாறி மாறி வருகின்றதுபோ லிருப்பதும் விபரீதமன்ரே? இவ்விபரீதானுபவம் ஏதுவாக இதற்காதார சாட்சி சைதன்னிய போதம் பலவெனப்படுவது என்னவெனப்படும்? அஃதும் விபரீத மெனப்படு மன்ரே? அவ்வாதாரம் பல வென்பதுபோற் காணும் விபரீதத்தால் அஃது கற்பித மெனப்படுமே? கற்பிதமெனக் கொள்வோமே யெனின், அரவு வெள்ளி கள்ளன் என்கிற இக்கற்பனைகளால் இவற்றிற்கு ஆதாரமாகிய கயிறு கிளிஞ்சல் கட்டை இவைகளும் கற்பனைகளாகட்டுமே! ஆகவில்லையே! ஆகலின், அவ்வாதார சைதன்னிய போதம் ஏகமென்பதற்கு முரணென்னே? பலவாயிருக்கின்ற கடங்கள்தோறும் நிறைவுற் றிருக்கின்ற ஆகாயமானது அக் கடபேதங்களால் பலவாகுமா? பலவாகக் கோடல் மயக்கமா? அன்றித் தெளிவா? மயக்கமாதல்போல்,

ஷை எண்ணரிய வகுப்புகளாகிய வியட்டி யுபாதித்திரய முத லியவைகளுக்கு ஏக ஆதாரமா யிருக்கின்ற சாட்சி சைதன் னிய போதம் பலவெனக் கோடல் மயக்க மென்பதற்கு மூர ணைன்னே ?

சமூத்திர வியாபகத்தில் அலை திவலை நுரை குமிழிகள் தனித்தனி அனந்த வியட்டி பேதங்களா யெழுவதால் அச் சமூத்திரமானது பலவெனப் படுமோ ? அஃது படுமாயின், ஆதார சைதன்னியபோதமும் அனந்தமெனப்படும். ஆதார நாட்டம் வாய்க்காக்காறும் அவ்வாதாரபோதம் ஏகமென் பதைப் பற்றி ஐயமயமாகத்தா னிருக்கும். கற்பனைகளாகத் தோற்றும் எண்ணரிய கடபேதங்களையும் அவற்றிற்கு உபா தான காரணத்திலொடுக்கிப் பார்க்கும் ஞான்று மட்பொருள் ஒன்றெனப் பொருள்படுமன்றே ? இங்ஙனமே, தனித்தனி எண்ணரிய வியட்டி யுபாதித்திரய முதலியவைகளும் அவ் வவற்றிற்கும் ஞாதுருவாயிருக்கும் சீவபோதங்களுமாய் நிகழ் வன எவ்வெவ் விருத்திகளோ அவ்வவ் விருத்திகளையும் அவை களுக்கு உபாதான காரணத்தில் ஒடுக்கிப பார்க்கும் ஞான்று அம் முதற்காரணமாகிய ஆதாரபோதம் ஒன்றுக வ்ளங்கு தற்கு மூரணைன்னே ? அங்ஙனம் நாடாத தோடமே யன றிப் பலவென்பதற்குக் கிஞ்சித்தும் பொருளேது ? முன் ஞான்று ஆராய்ந்த ஆராய்ச்சிக்கண் மட்பொருள் முதலிய சதுர்ப்பூத கற்பனைத் தோற்றங்களும் அவைகளுக்கு ஆதா ரம்போல நிரந்தரமாகத் தோற்றும சூனியமும் எவ்வகைப பொருள்களாய் முடிந்தன ? ஷை சதுர்ப பூதங்களும் சோபா திக சங்கற்பமும் சூனியம் நிருபாதிக சங்கற்பமுமாக வன் றே ? இஞ்ஞான்றே அச்சதுர்ப் பூதங்களையும ஆராயின் முடிவில் நிருபாதிக சங்கற்பமாயும் அவ்வாராய்ச்சியில் நின் றகன்றுழி ஷை சூனியம் சோபாதிக சங்கற்பமாயும முடிகின்

றதே ! மூடிகின்றதால், சோபாதிகத்தில் நிருபாதிகமும் நிருபாதிகத்தில் சோபாதிகமும் அபாவ மெய்துகின்றன. இதனியன்றே அறிஞர்கள் அன்னியோன்னியாபாவ மென்றனர் !

எங்ஙனமெனின், எவ்வுருவமேனும் காரணகாரியமயமா யில்லாதிருக்கட்டும் ! அங்ஙன மின்றெனின், ஒவ்வொரு நாமரூபங்களிடத்தும் அக்காரண காரிய நெறித்தாக நாம செல்லவேண்டுமன்றே ? செல்லவேண்டுவ தின்றெனின், அவ்வவ் நாமரூபத்தையும் நாம் யாது பொருளெனச் சம்மதித்துக்கொண்டிருக்கின்றது? மெய்ப்பொருளாகச் சம்மதித்துக்கொண் டிருக்கின்றதெனின், ஒவ்வொன்றும் காரண காரியமயமா யில்லாதிருக்கட்டும் ! மேலும்,

ஞானவாசிட்டம்.

"உலகெது நாமாரென்ன வுற்றுநின் றுணருமட்டுங்
கலகமார் பிறவிமோகங் கங்குல்போல் மூடிநிற்கு
மலகிலா வுலகும்யாமு மறிவில்சித் சோதியன்றே
சலனமில் கண்ணற்கண்டோர் தத்துவ நிலைமைகண்டோர்."

என்றருளி யிருப்பானேன் ? அன்றியும்,

குறள்.

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளார்ஞ மாணப் பிறப்பு." என்றும்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொரு
ளப்படி காண்ப தறிவு." என்றது,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்றருளியு மிருப்பரனேன் ? ஆகலின், நாம் ஒவ்வொன் றினையும் ஷை காரணகாரிய நெறித்தாகச் சென்றுதானே தெளியவேண்டும். அங்ஙனம் சென்றமுடிவில் ஆராயப்பட்ட நாமரூபங்களுண்டா ? இல்லையன்றே ? இல்லையாயின், அஞ் ஞான் றிருப்பது யாது ? சூனியமன்றே ! அதாவது - அரு வப்பொருளெனப்படுவது. அவ்வருவபாவமன்றே நிருபாதிக சங்கற்பமென்பது? நாம் ஷை ஆராய்ச்சி முடிவில் நில்லாதன் றுழி, நிருபாதிக சங்கற்பமாகிய அருவபாவ மென்பது ண்டா? இல்லையன்றே? இல்லையாயின், அஞ்ஞான் றிருப்பது யாது? உருவப்பொருளன்றே ? அவ்வுருவ பாவமன்றே சோபாதிக சங்கற்பமென்பது? சோபாதிக சங்கற்பத்தை யன்றி உருவபேதங்களென்பதும், நிருபாதிக சங்கற்பத்தை யன்றி அருவமென்பதுமுண்டா? இன்றுகலின், இருப்பதியா தெனப்படும் ? இவ்விருவித சங்கற்பமுமன்றே ! இவ்விரு விதமும் புடைபெயர்ச்சிகளாகலின், இப்புடைபெயர்ச்சிகள் மாறுவது எதன்பாலெனப்படும்? ஓர் அகண்டபரிபூரண வியா பக விளக்கமாகிய உணர்விலன்றே? அவ்வுணர்வன்றே சர்வா தாரசாட்சி சைதன்னிய போதமெனப்படுவது? அவ்வகண்ட பரிபூரண போத சொரூபத்தை யன்றி அயலென்பதெங்கே? மூன்ஞான்று வியட்டியுபாதித்திரய மூதலியவைகளை ஆராய்ந் துவந்த முடிவில், ஐந்தாவது அத்தியாயத்தில் தேரப்பட்டு விளங்கிய சொப்பிரகாச சைதன்னியமே சீவசாட்சிபோத மெனவும், பிரத்தியேகாத்மபோதமெனவும், கூடத்தபோத மெனவும் பொருள்பட்டதுபோல், இஞ்ஞான்றாராய்ச்சியில் சர்வவியட்டி தூலசரீர கற்பனைகளையும் ஓர் சமட்டி தூல சரீர கற்பனையாகவும், சர்வவியட்டி சூக்கும சரீர கற்பனைகளையும் ஓர் சமட்டி சூக்கும சரீர கற்பனையாகவும், சர்வவியட்டி கார ண சரீர கற்பனைகளையும் ஓர் சமட்டி காரணசரீர கற்பனை யாகவும் தேர்ந்து, பின்ஞான்று இச்சமட்டி யுபாதித்திரயங்

கள் கூ சோபாதிக நிருபாதிக சங்கற்பத்தையன்றி இன்றெனவும், இச்சங்கற்ப மிரண்டும் தன்னியன்றி இன்றெனவும் தேரப்பட்டு, இஞ்ஞான்று விளங்கிய சொப்பிரகாசமே ஈசுரசாட்சி போதமெனவும் பரமாத்ம போதமெனவும் பிரம போதமெனவும் பொருள்படுகின்றதன்றே?

தனித்தனி வியட்டி தூலசரீரமும் தனித்தனி வியட்டி சூக்குமசரீரமும் தனித்தனி வியட்டி காரண சரீரமுமாகிய இம்மூன்றும் தனித்தனிச் சிவபோதத்துக்கும் காரியோபாதி சொருபமா யிருப்பதுபோல, இம்முவித வியட்டி உபாதிகளோடத்தும் முறையே ஒன்றெனப்படும். சமட்டி தூல சரீரமும் சமட்டி சூக்குமசரீரமும் சமட்டி காரணசரீரமும் ஆகிய இம்மூன்றும் ஈசுரபோதத்துக்குக் காரணோபாதி சொருபமா யிருக்கின்றதன்றே ? அகண்டபரிபூரண வியாபக சொப்பிரகாசமொன்றே, கூ ஐந்தாவது அத்தியாயத்தில் வியட்டி காரியோபாதி சொருபியாகிய சிவபோதத்துக்குச் சாட்சி சைதன்னியமாயும், இவ்வத்தியாயத்தில் சமட்டி காரணோபாதி சொருபியாகிய ஈசுரபோதத்துக்குச் சாட்சி சைதன்னியமாயும் விளங்குகின்றதாயின், இவற்றுள் சாட்சிபோத மிரண்டெனப்படுமா ? படாதே ! சமட்டி உபாதித்திரயக் கற்பனைகளாகிய சர்வத்துக்கும் ஆதாரமா யிருப்பதால் இச் சர்வாதாரப் பொருளொன்றே தனித்தனிச் சமட்டி யுபாதித்திரயக் கற்பனைகளுக்குத் தனித்தனி ஆதாரம்போ லிருக்கின்றதாகக் காண்டலே நிதானிக்காமல் இவ்வாதாரபோதத்தைப் பலவாகக் கோடலால் பலவெனப்படுமோ ? கூ ஐந்தாவது அத்தியாயத்தில் கூடத்தசைதன்னிய போதமானது பிரமன் முதலாக நிகழும் ஒவ்வோர் உயிரினது சிந்தை வடிவென ஐயந்திரிபின்றித் தேரப்பட்டிருக்கின்றதே !

ஒருவரது சிந்தைவடிவான சிதாகாசம் இத்துணைத் தெனக் கணிக்கப்பட்டதா ? கணிக்கப்படவில்லையே ! ஒருவரது சிந்தை வடிவம் அகண்ட பரிபூரண வியாபக விளக்கமயமா யிருக்கின்றதாயின், அவ் வியாபக விளக்கத்தை அன்றி ஏனைய ஒவ்வொருவரது சிந்தைவடிவு பலவென்பதற்குப் பொருள் எங்ஙன மிருக்கின்றது ? அங்ஙன மில்லையே ! கேவிரமன் முதலிய எண்ணரிய உயிர்களுள் எவரெவர் தத்தமது சிந்தைவடிவை எட்டினார்களோ அவரவர்களுமன்றே மக்களெனப்படுவர் ? அம்மக்களன்றே சிவன்முத்த ரென்பவர் ? அங்ஙனம் தமது இதயாம்பரத்தை எட்டாதவர்கள் பிறவெனப் படுவரன்றே. அங்ஙனம் எட்டினவரது சிந்தையும் எட்டாதவரது சிந்தையும் ஓர் அகண்டபரிபூரண வியாபகவிளக்கமாயினும், உள்ளவாறுழைத்து எட்டினவர்க்குச் சதோதயமாகப் பிரகாசிக்கின்றதன்றே ? அவர்களுக்கு அங்ஙனம் பிரகாசிக்கின்றதிலும் அயலென்பது கிஞ்சித்தும் உண்டாயிருக்கப் பிரகாசிக்கின்றதா ? ஒவ்வோர் ஞானமுண்டாயிருக்கப் பிரகாசிக்கினும் அவ்வயலனைத்தும் அவ் வியாபகத்தின் சங்கற்ப சத்திகளாகலின், அவை கயிற்றரவு முதலியவைபோல் தோன்றவன்றே பிரகாசிக்கின்றது ? அங்ஙனமாயிய அயலனைத்தும் தமது சிந்தை வியாபகத்திலும், தமது சிந்தை வியாபகம் அவ்வயலனைத்திலுமாகவன்றே பிரகாசிக்கின்றது ? அங்ஙனம் சதோதயமாகப் பிரகாசிக்கின்றதனலன்றே,

பகவற்கீதை.

"யாவ ளொருவ னெனையெல்லா
வுயிர்க ளிடையு மென்னிடையே
மேவ வெல்லா வுயிர்களையும்
வேறு கர்மை யெய்காண்பான்

றேவர் பகைமுன் செயித்தோனே
யவன்யா தேனுஞ் செய்திடினு
மாவ வவனு கின்றேனு
னதினீ யாது மையுறலேன்." என்றும்,

ஞானவர்சிட்டம்.

"முழுதுசத் தியுமாய்ப் புரணமா யென்று
முடிவறு பிரமமா வதுதான்
பழுதின்ஞா னிகடம் மனமலர் தில்லைப்
பரமமா மிதிலிலா தில்லை
யெழுதருஞ் சத்தி யாவுமா யிலங்கு
மிவைகளோர் காலமான் முளதாம்
வழுவிலாப் பிரம முடையசிற் சத்தி
மறிதரு முடல்களிற் றோன்றும்."

என்று மருளியிருக்கின்றது.

இதனால் ஞானவான்களது தெளிந்த மனமே பிர்ம சொரூப மென்றுயிற்று. அஞ்ஞானிகளது உள்ளமும் பிர்ம சொரூபமாயிருக்கினும் அவ்வுள்ளம் அறியாமையினால் மூடப் பட்டதுபோ லிருக்கின்றமையின், அவர்களுக்கு அப்பிர்ம சொரூபம் வேறுபோ லிருக்கின்றதென்க. இருவரது உள்ள மும் ஒப்பற்ற பிர்மசொரூபமாய்ப் பிரகாசிக்கின்றமையின் இஃது எட்டாதவர்க்குப் பயனற்றதுபோ லும், எட்டினவர்க் குப் பயனுற்றதாயு மிருக்கின்றது. இங்ஙனம் பயனுற்றிருக் கினும் அப்பயன் வியட்டி யுபாதித்திரயங்கள் நானன்றென் றகன்ற அகத்தாராய்ச்சி முடிவில் இது நான் இது நானென் றெட்டப்பட்டுச் சீவசாட்சியா யிலகும் பயனுகியும், சமட்டி உபாதித்திரயங்கள் நானன்றென்றகன்ற புறத்தாராய்ச்சி முடிவில் இது நான் இதுநானென் றெட்டப்பட்டு ஈசுரசாட் சியா யிலகும் பயனுகியுமாமென்க. இப்பால், சமாதியென். ப்து இருவகையின. அவற்றுள் ஒன்று மருட்சமாதியும் மற்

மென்று தெருட்சமாதியுமாம். மருட்சமாதியென்பது கிரியாசமாதியும் தெருட்சமாதி யென்பது ஞான சமாதியுமாம். மருளாகிய கிரியாசமாதி யென்பது மூலாதார முதலியனவாகிய ஆறுதார தரிசனம். பிராணபந்தனம், அதாவது-இரேசக பூரகம் முறையாய்ச் செய்தலும் பின்ஞான் றவற்றைக் கும்பித்தலும் கேசரி பூசரி மத்திம சண்முகி சாம்பவி இவை முதலியவற்றால் மனோவிருத்தியை ஒடுங்கச் செய்தலுமாமென்க.

தெருளாகிய ஞானசமாதி யென்பது சொரூபசமாதி யெனவும் சகசசமாதி யெனவுமாம். க-வது, சொரூபசமாதி யென்பது - ஷி சிவபோதமுதலிய கற்பனைகளுக்குச் சாட்சி மாத்திரமாய்ப் பிரகாசிப்பது. அன்றியும், இச்சமாதி விளக்கம் வத்துநிலை அணுவுக்கு மணுவா யிருக்கின்ற தென்னும் சுருதிவாக்கியத்திற் கிணங்க ஷி வியட்டி கற்பனைகளுள் அணுவுக்குள் அணுவா யிருக்கும் தன்னை, அக்கற்பனைகளை ஒன்றிலொன் றழுக்கிக் கொண்டுபோய்ச் சிற்பிரகாசமாகத் தெரிசித்தலாமென்க. இதனாலன்றே முன்ஞான்று தான் தனிச்சாட்சி யெனப்பட்டது. உ-வது, சகசசமாதியென்பது-ஈசுரபோத முதலிய கற்பனைகளுக்குச் சாட்சிமாத்திரமாய்ப் பிரகாசிப்பது. அன்றியும், இச்சமாதி விளக்கம் வத்துநிலை மகத்துக்கும் மகத்தாயிருக்கின்றதென்னும் ஷி சுருதிவாக்கியத்திற் கிணங்க ஷி சமட்டி கற்பனை மகத்துக்குமேல் மகத்தா யிருக்கும். அதாவது வியாபகமா யிருக்கும் தன்னை, ஷி சமட்டி கற்பனைகளைத் தற்பிரகாசமாகக் கரைத்துத் தகாகாரமாய் விளங்குவதாமென்க.

அன்றியும், அவ்வனுபூதி தொம்பத வாச்சியார்த்தமாகிய விசுவன் முதலியவாக நிகழும் சிவபோதமன்று, அத்தொம்பத இலட்சியார்த்தமாகிய கூடத்தானபவமும், இவ்

வனுபூதி தற்பத வாச்சியார்த்தமாகிய விராட்டு மூதலியவாக நிகழும் ஈசுரபோதமகன்று, அத்தற்பத இலட்சியார்த்த மாகிய பிரமானுபவமுமென்க.

அன்றியும், அக்கூடத்தானுபவம் அயலினைத்தும் கபிற் றரவு முதலியன போலாகலின், அவைகளுக்குத் தான் விலட் சணமாயும் அறிவே வடிவாயும் அதாவது - உணர்வொளியே சொரூபமாயும் விளங்குவதாமென்க. இப்பிரமானுபவம் கபிற்றரவு முதலியவைபோற் றோன்றும் அயலினைத்தையும் தகித்து அன்னியமென்பது சற்றுமின்றி ஆனந்தமே வடி வாய், அதாவது - இன்பமயமாகவே விளங்குவதா மென்க. எனவே, அவ்வனுபவம் அனைத்தும் தானல்லவாய் விளங்க லும், இவ்வனுபவம் எல்லாமாய் விளங்கலுமாமிமென்க. இவை களுக் குதாரணம்:—

ஞானவாசிட்டம்.

"விளக்குமிர வியுமலரு முண்டா லுண்டாம்
வீசொளியும் பகற்பொழுதும் விரையும் போலத்
துளக்கமில்சித் துண்டாகி லுண்டா ஞாலந்
தோற்றரவு மாத்திரமே சொரூப மாகுங்
கிளத்தபர மார்த்தத்தா லில்லை யென்னக்
கேட்டலுமே பாற்கடல்போற் கெம்பீ ரத்தா
லளக்கரிதாய்ச் சீதளமா யமல மாகி
யற்புதமா நின்மொழியென் றண்ணல் சொல்வான்."

என்றும்,

"உன்னுறு மனத்தினுலே யுலகமா நிந்திரஞாலந்
தன்னுறு பணிகளென்னுஞ் சொற்பொருள் பொன்னுயன்றி
யன்னிய மில்லைபொன்னுற் பணியென வறையவேண்டாம்
பன்னிய வுலகாஞ்சொற்குப் பரமன்றிப் பொருள்வேறில்லை."

என்றும்,

"களங்கமற்ற கண்ணுடி தன்முன் வேரூர்
களங்கமற்ற கண்ணுடி காட்டும் போது
விளங்கியதன் மயமாகி யபேத மாகி
விகற்பமின்றி நிருவிகற்ப மாறுற் போல
வளந்தறியப் படாவிபுவாய்ச் சத்தாய்ச் சித்தா
யானந்த மாம்பிரமத் தயிக்க மான
வுளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே
யுலவெங்கே யென்றுசங்கை யொழித்தி டாயே."

என்றும்,

தத்துவராயர் பாடுதுறை.

"அன்னிய மில்லையென் றூதேடா காள
மானந்த மானுமென் றூதேடா காளந்
தன்னு சுடரேயென் றூதேடா காளஞ்
சோதியுட் சோதியென் றூதேடா காளம்." என்றும்,

"சாதி கழிந்ததென் றூதேடா காளஞ்
சங்கை தவிர்ந்ததென் றூதேடா காளஞ்
சோதி சுகமேயென் றூதேடா காளஞ்
சொல்லவொண் ணுததென் றூதேடா காளம்." என்றும்,

"தோற்றர வாகத் துணிந்தவு ரெங்களூர்
சோக மோகங்க ரெந்தவு ரெங்களூ
ராற்ற லுடையார்க் கடைந்தவு ரெங்களூ
ரானந்த மாயே யிருக்குமூ ரெங்களூர்."

என்றுங் கூறியவாற்றுற் காண்க.

இதுகாறும் கூறிப்போந்த பிரமசாட்சி சைதன்னிய லட்சியார்த்த விளக்கமென்னும் இவ்வத்தியாயத்தில் சோபாதிக நிருபாதிகமாகிய சகமாதி திரிபதார்த்தங்களும் அசத்து சடம் துக்கமுதலிய இலக்கணங்களுக் கிலக்கியங்களென்றும், இக்குணங்களுக்கு எதிர்மறையாகிய சத்து சித்து ஆனந்தம்

முதலிய விலக்கணங்களுக்கு ஷே சாட்சிபோதம் இலக்கிய மென்றுங் கூறியிருப்பதை இன்னும் யூகிக்குதும். எங்ஙனமெனின், இச்சகத்து ஏதுவாக சீவேசுரத்துவம் வழங்கப்படுவனவா ' அன்றிச் சீவேசுர ஏதுவாகச் சகத்து வழங்கப்படுவதா? சீவேசுரத்துவம் ஏதுவாகச் சகத்து வழங்கப்படுவதினால், எண்ணிலளவையில் அணுமான அளவை யாதுக்கிருக்கின்றது? அவ்விரண்டும் தொம்பத தத்பத வாச்சியார்த்தப் பொருள்களாகலின், அவற்றை நிச்சயித்தற்கு ஓர் அளவை வேண்டுமன்றே? ஆகலின், அவற்றிற் கியைந்ததாகிய அணுமான அளவை வேண்டுமென்பதாமெனின், அவ்விரு பொருளும் இலட்சியார்த்ததத்திற் கியைந்தனவாயின், இவ்வளவை வேண்டுவதின்றன்றே? அவ்விலட்சியார்த்ததத்திற்கு இணங்காதவற்றை இவ்வளவையால் நிச்சயிப்பானேன்? கர்மோபாசனாகாண்டிகட்கு அவசியம் வேண்டுவதாமெனின், ஞானகாண்டிகட்கு வேண்டுவது ஷே தொம்பத தத்பத இலட்சியார்த்தப் பொருள்களாகின்றன!

ஆக்வே, அவ்விருகாண்டிகட்கும் வாச்சியார்த்த மிரண்டும் வழிபடுதற்கியைந்தன. இயையினும், வாச்சியார்த்த இலட்சியார்த்த இவ்விருவகுப்பில் எது யதார்த்தமெனப்படுவது? எது கற்பிதமெனப்படுவது? இவ்விருவகுப்புமே எதார்த்தமெனப் படுவதாமெனின், இவற்றை வாச்சியார்த்த மெனவும் இலட்சியார்த்த மெனவும் பிரிப்பானேன்? ஞானகாண்டிகளென்றும் உபாசனா கர்மகாண்டிகளென்றும் பிரிவுற்றிருப்பதாலெனின், இவற்றுள் ஞானகாண்டிகளுக்கு வாச்சியார்த்தப் பொருள்களும் உபாசனா கர்மகாண்டிகளுக்கு இலட்சியார்த்தப் பொருள்களும் பயனுறுதிருக்கின்றன. இங்ஙனமிருக்கினும், இலட்சியார்த்தப் பொருள்கள் யதார்த்தமும் வாச்சியார்த்தப் பொருள்கள் கற்பீதங்களுமாகலின் அணுமான

அளவை வேண்டுவது அவசியமாமென்க. அணுமான அளவைக் கியைந்தவை யெல்லாம் கற்பனைகளாயின், நமக்கு எஞ்ஞான்றும் காணப்படாத பிறதேச வத்துக்கள் அணுமானிக்கப்படுவதால் அவைகள் இன்றெனப்படுமோ? ஏன் இன்றெனப்படாது! அவ்வத்துக்களுக்குச் சேய்மையுற் றிருக்கும் நமக்குத் தோன்றுது மே அளவைக் கியைந்திருக்கினும், அவ்வத்துக்களுக்கு அணிமையுற் றிருப்பவர்க்கேனும் அவை தோன்றுகின்றனவல்லவா? அதனால் அவ்வத்துக்கள் அணுமான அளவைப் பொருள்களென்ப தென்னையெனின், எஞ்ஞான்றும் அவத்தாத்திரயங்களுள் எவ்வவத்தைக் கண்ணும் எத்திறத்தருக்கும் காண்டலளவைக் கியையாதவைக ளெவைகளோ அவைகளன்றே கருதலளவையாகிய அணுமான அளவைக் கியைந்தவைக ளெனப்படும்!

அங்ஙனமாயின், மலையின்கணுள்ள அக்கினியானது அம்மலைக்குச் சேய்மையுற் றிருப்பவர்க்குக் கண்கூடின்றியிருக்கினும், அம்மலையின்க ணுள்ளார்க்கு அஃது கண்கூடன்றே? அங்ஙனம் கண்கூடாகிய அவ்வக்கினியை அணுமான அளவையா யேற்பானே னெனின், இவ்வனுமானம் ஏகதேசானுமானமும் மே சேவேசுரானுமானம் சம்பூரணானுமானமுமாம். ஆயினும், சேவானுமானம் விபரீதானுபவ அனுமானமும் ஈசுரானுமானம் அங்ஙனமின்றி வெறும் தோற்றானுமானமுமாம். விபரீத அனுபவானுமானமென்பது கற்பனைகளாகிய உபாதித்திரயங்களே நானெனதாக மயங்கிய மயக்க மேதுவாகக் கருதுதல். தோற்றானுமானமென்பது சமட்டி. வியட்டிகளாகத் தோற்றும் உபாதித்திரய முதலிய கற்பனைகளைக்கொண்டு கருதுதல். இஃது மலையின்க ணின்றெழும் முகில்களைப் புகையெனக் மயங்கி அம்மலைக்கண் அக்கினி யுளதெனக் கருதுதல் போலாமென்க.

மாயாப்பிரதிபிம்பம் ஈசுரனெனவும், அவித்யாப் பிரதி பிம்பம் சீவனெனவும் சத்பிரமாணங்கள் கோட்டித்திருக் கின்றனவே ! ஈசுரபோதம் இன்ருமோவெனின், தனித்தனி மரங்களின் சேர்க்கையன்றிச் சமட்டியென்னும் தோப் பென்பது உளதாயிருக்கின், தனித்தனி அவத்தாத்திரயங் களுக்குக் கார்ணமாகிய தனித்தனி அவித்தைகளின் சேர்க் கையன்றிச் சமட்டி யென்னும் மாயையென்பது ஒன்றுளதா யிருக்கலாம். வியட்டி உபாதித்திரயங்களைப் பற்றிச் சமட்டி உபாதித்திரயங்களும் வியட்டி அவித்தையைப்பற்றிச் சமட்டி மாயையும் வியட்டி சீவபோதத்தைப் பற்றிச் சமட்டி ஈசுர போதமும் இருப்பாகக் கொண்டதேயன்றி இவ்வியட்டியா கிய உபாதித்திரய முதலியவைகளை நீக்குழிச் சமட்டியாகிய உபாதித்திரய முதலியவைக ளேது ? இருக்குமாயின், ஈசுர போதமு மிருக்கலாமென்க. அங்ஙனமாயின்,

ஒழிவிலொடுக்கம்.

"பெண்ணு லலியாய்ப் பிறந்துவளர்ந் தேயழியு
மெண்ணுத பேத மியல்பின்றிப்—பண்ணுங்காற்
காரணகர்த் தாவொருவ னுண்டவனைக் காட்டுநூ
லாரணமு மாகமு மாம்."

எனத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றதென்னை ? பதி பசு பாசம் ஆகிய இம்மூன்றும் அநாதி நித்திய சத்தா யில்லா மலும் இவற்றில் சிவனென்பது பாசமாகிய மாயைக்கண் அநாதியிலேயே இன்பதுன்பமின்றி வாளா மழுங்கி யில்லா மலும் இவற்றுல் பதிப்பொருளானது தனது கருணையால் இச்சீவர்களை யிழுத்து வெளிப்படுத்தித் தனுவாதிகளைக்கொ டுத்து வழிப்படுத்த வேதாகமங்களையும் கற்பித்தில்லாமலுமா அங்ஙனம் திருவாய்மலர்ந் திருக்கின்றன ரெனின், இம்முப்

பொருளையும் இருப்பெனக் கொண்டன்றே அங்ஙனம் அவ் வறிஞர் திருவாய்மலர்ந்தருளினர் ? அங்ஙனமாயின்,

சோருபசாரம்.

"ஆண்பெண் ணில்லியென் றனேக விதமாகக்
காண்பனவு மொன்றுகக் காண்பனவு—மாண்புடைய
சித்தினிடைத் தோற்றமல்லா லுண்டோ விவைதெளியர்
பெத்தனேசா தித்தாலு மென்."

எனத் திருவாய்மலர்ந்தருளி யிருப்பானேன் ? பாசமாகிய இப்பிரபஞ்சப் பொருள்களானவை கற்பனையா யில்லாமலும் இவற்றைக் கொண்டு கருதுதற் கியைந்ததும் கற்பனையா யில் லாமலுமா அங்ஙனம் திருவாய்மலர்ந் திருக்கின்றனர் ? கருதல் அளவைமட்டில் நின்றின்புறும் ஷை பட்சமானது ஐயந் திரிபகன்றதா ? அகன்றதெனின்,

உத்தமவாதநூல்.

"உலகின் மதநிறுத்து முத்தமரே கேண்மி
னுலகமு நாமு மொருங்கே—நிலையின்றி
யெங்கே வெளிப்படுத லெங்கே மறைதனித
மங்கிருந்து காணுமெ னுய்ந்து."

என்றருளி யிருக்கின்றனரே ? ஆங்காங்கும் தான் தானெனற் கியைந்த தேகோகமும் எனது எனதெனற் கியைந்த இப்பிர பஞ்சமும் ஒத்துத் தோற்றுகின்ற சகலாவத்தையும் ஒத்து மறைகின்ற கேவலாவத்தையும் எவ்வாதாரத்தி லெனப் படும்? இவை திரணுபவ மென்பதற்கு மூரணின்று ! அன்றி யும், ஷியானெனதென்பவற்றை ஆராய்வழி முடிவில்சூனிய மாயும் அவ்வியக்கம் விட்டழி மீண்டும் பழமையாயும் தோற் றுகின்றது எவ்வாதாரத்தி லெனப்படும் ? அவ்வாதாரம் வெளிப்பட்ட பின்ஞான்றன்றே சிவேசுரசகத் தென்பதற் குப் பொருள் சித்திக்கும் ? முன்ஞான்று பெண்ணுணவி

யென்றெடுத் தோதியதைச் சற்றாகிப்பம். இப் புறத்தாரா
ய்ச்சி விளக்கத்தில் மூன்றாவது அத்தியாயமளவும், கெ
ஆண் பெண் அலி ஆகிய அறிவகைப் பிறப்பாயுள்ள வடிவங்
கள் யாதாய் முடிந்தன? மட்பொருளாய் முடிந்தனவன்றே?
அம்மட்பொருள் ஒன்றெனப் பட்டதன்றே? அம்மட்பொ
ருள்மட்டில் நில்லாது அதனையும் ஆராய்வழி வெளியாகின்ற
தன்றே? அவ்வெளி ஒன்றென்பதன்றே? அவ்வெளிமட்
டில் நில்லாது அதனையும் ஆராய்வழி அவ்வெளியானது எத
ற்குக் காணப்படுதலும் மறைதலும் முடிவில் எதுவாதலுமோ
அதுவன்றே ஏகசைதன்னிய மெனப்படுவது? திரவறிவெ
ன்பது அதையன்றிச் சிற்சட பேதங்களென வழங்குவது
அணுத்துணையுமுண்டோ? உளதாக வழங்குகின்றதே யெ
னின், தோற்றல் மாத்திரமாகவன்றே, அங்ஙனம் வழங்கு
தற் கியைந்தன? இங்ஙன மிருப்பதனலன்றே,

"ஆண்பெண் ணலியென் றனேக வீதமாகக்
காண்பனவு மொன்றாகக் காண்பனவு—மாண்புடைய
சித்தினிடைத் தோற்றமல்லா லுண்டோ விவைதெளியா
ரெத்தனைசா தித்தாலு மென்."

என்றருளி யிருக்கின்றனர்? அன்றியும்,

எதார்த்தவாக்கட்டளை.

"தேகாதி தோற்றத்சாற் சீவே சுரசென்பாய்
தேகாதி தோற்றமன்றிச் செப்புவையோ—தேகாதி
தோன்று மிடமெங்கே தோன்று விடமெங்கே
யூன்றிப்பார்த் தங்கேநீ யோது."

எனவும் கூறியிருக்கின்றனர். இதனையேனும் நன்குணர்வே
ண்டுமன்றே? அன்றியும்,

வேதாந்தசூளாமணி.

"சீவனுடு சன்கூடத் தன்பிரம மென்னச்
சித்துநான் காங்கடநீர் கதுவுமுவெண் மீன்வகண்

நாவுபனி நீர்வீம்ப வனுபிதா காசஞ்
சொற்கடா விச்சின்னு காயலாடு மாவான்
வேவுவிலை யனைத்தினுக்குந் திட்டாந்த முறையாம்
விடயமொடு பிரமவா சனைமுக்கி யம்பி
னேவுகிச மான்மாவோ டத்துவிதம் வித்தை
யெனுமிவற்றின் பெயராலெண் வகைப்படுமொ னந்தம்."

என்றருளியதில் கலோபாதியிலும் மேகோபாதியிலும் வெளியானது நிறைவுற்றுத் துவிதவெளியாகத் தோற்றுதல்போல், அவித்யோபாதியிலும் மாயோபாதியிலும் இந்நூல் முகவுரையில் விளக்கிய தற்போதமானது நிறைவுற்று இருவகைச் சமாதிக்கண்ணும் கூடத்த பிரமமாயும், சுத்த கலோபாதி மேகோபாதி சலத்தில் வெளியானது பிரதிபலனங்களாகத் தோற்றுதல்போல், சுத்த அவித்யாந்தக்கரணத்திலும் மாயாந்தக்கரணத்திலும் சுத்த போதமானது சீவேசுவராகப் பிரதிபலித்துத் தோற்றுகின்றதென் முகின்றன. ஆகவே, சுத்த தொம்பத தத்பத வாச்சியார்த்தமாயும் கருதலளவைக் கியைந்ததாயும் ஆகின்றன. இதுகாறும் கூறிப்போந்த இத்துணைக்கும் ஏது யாதெனின், வியட்டி சமட்டியாகிய இவ்வுலகமன்றே ? இவ்வுலகை நன்காராய்ந்து மித்தையானுபவம் வாய்த்திருந்தால் சிற்றறிவு பேரறிவென்றபேதம் எங்கிருந்துவரும்? பொருளல்லவற்றைப் பொருளென மயங்குழியன்றே இவ்விபரீதத்துவைதம் மேற்கொண்டுவிட்டது ? இவ்வுலகம் ஆராய்வுழி இன்மையாயும் அஃதில்லாவுழி உண்மையாயும் ஆகிய இவ்விருவித ஜாலமும் எதன்மாட்டு நடக்கின்றதோ அவ்வாதாரத்தை,

"நோக்கா நோக்கை நோக்க நோக்க
நோக்கா நோக்க நோக்கு மன்றே."

எனச் சிவஞான வள்ளல் அருளியவண்ணம் விடாது திருட்டித்துக்கொண்டிருக்கிற், இச்சீவேசுர சகத்தென்பவை முற்

றும் இல்லாமற் போகுமன்றே? ஒவ்வோர் ஞான்று தோன்றினும் கயிற்றரவு முதலியவைபோல் இருக்குமன்றே? இங்ஙனம் இருப்பதனாலன்றே இவை அசத்து சடம் துக்கம் முதலியவற்றிற்கியைந்த இலக்கியப்பொருள்க ளாகின்றன? இருக்கவே, இவ்வசத்தாதி யிலக்கணங்களுக்கு எதிர்மறை யிலக்கணங்கள் இருக்கவேண்டுமன்றே? இருக்கவேண்டுமெனின், அவ்விலக்கணம் சத்து சித்து ஆனந்தம் முதலியனவா யிருக்கின்றதன்றே? இருக்கின்றதால், இவ்விலக்கணங்களுக்கு இலக்கியப்பொரு ளியாதெனப்படும்?

முன்ஞான்று மனமானது விடாது நோக்குதலுக்கியைந்திலகும் ஆதாரபோதமன்றே? அப்போதம் இசசத்தாதிக ளாகிற சகுணப்பொரு ளெனப்படுமா? அன்றி நிற்குணப்பொரு ளெனப்படுமா? சகுணப்பொரு ளெனப்படுமெனின், அப்பிரம போதத்துக்கு இச்சகுணத்துவம் இயற்கையா? அன்றிச் செயற்கையா? இயற்கையேயெனின், அப்போதத்துக்கு இச்சகுணத்துவம் எதன் ஏதுவாக வந்தது? இயற்கைக்கு ஏது வினவுவது விவர்த்தமொழியாமெனின், சகுணமாகிற இச்சத்தாதி குணங்களுக்கு எதிர்மறையாகிய அசத்தாதி குணங்கள் இருக்கலாமா? இருக்கின்றதால் தோடமென்னையெனின், தனதனுபூதி விளக்கத்தில் கூடி சிவேசுர சகத்துத் தோன்றுங்காறும் இவை எப்பொருள்க ளெனப்படும்? அசத்தாதிக ளெனப்படுமன்றே? படுந்தோறும் இவற்றிற்கெதிர்மறையாகிய சத்தாதிகள் எவையெனப்படும்? இச்சிவேசுர சகத்துக்களுக்கு ஆதாரபோத மெனப்படுமன்றே? அவ்வாதாரபோதம் அசசத்தாதி குணங்களே யேற்பது யாதினாலெனப்படும்? இவ்வசத்தாதிகளினாலெனின், எதுகாறுமேற்கப்படும்? எஞ்ஞான்றுமே ஏற்கப்படுகின்றதெனின், கூடி தனது சுவானுபவத்தில் இச்சிவேசுரசகத்து எஞ்ஞான்

றுமே தோன்றுகின்றனவா ? எஞ்ஞான்றுமே தோற்றுகின்றனவெனின்,

கைவல்லிய நவநீதம்.

"அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பாழுக
மாகிலு யம்மட்டு
நிசத்தி லுள்விழிப் பார்வையா யிப்படி
நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர
வடிவமா கிடின்மைத்தா
கசத்த தேகத்தி லிருக்கினு மானந்தக்
கடல்வடி வாவாயே."

என்றருளி யிருப்பாமென் ?

அங்ஙனம் அருளிய ஞானப்பியாசம் பலகற்பமும் பழகிக் கிருதகிருத்திய மானலன்றே அகம்புறக் கற்பனைகளாகிய சிவேசுர சகத்தென்னு மறியாமை முற்றும் ஒழிந்து விடும் ? இங்ஙனமிருக்கச் சிவேசுரசகத் கற்பனைகள் எஞ்ஞான்றும் தோற்றிக்கொண் டிருக்குமென்பதென்னை ? மெய்ப்பியாச முதிர்ச்சியில் சிவேசுரசகத் கற்பனைகளில்லாஞான்று அசத்தாதி இலக்கணமென்பதேது ? இல்லாதுழி மெய்ப்பிரமசைதன்னியம் எவற்றிற்குத்தான் சத்தாதி இலக்கணங்களுடைய தெனப்படும் ? எதுகாறும் சிவேசுரசகத் கற்பனைகள் தோற்றுகின்றனவோ அதுகாறும்தான் சத்து முதலிய சகுணத்துவ மேற்குமன்றே ? பொய்ம்மையென்ப தொன்றிருந்தாலன்றே மற்றொன்று மெய்ம்மையென்னு நிலைமையேற்கும் ? என்னை,

கைவல்லிய நவநீதம்.

"குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினு னீர்மூன்று
கூறு யிற்றே

வொளிதவனஞ் செம்மையென்ற பதங்களா லக்கினியு
மொருமூன் ருமோ
வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து
விலக்கி வேத
மெளிதறிய முரண்மொழிந்த சத்தாதி யெனும்பிரம
மேகந் தானே."

எனக் கூறியிருக்கின்றதே.

சலமும் அக்கினியும் இணையதென விளக்குவித்தற்காகக் குளிர் முதலியவற்றையும் ஒளி முதலியவற்றையும் பிரித்துரைக்கவந்த சொல் வேறுபாடென்பதன்றிப் பொருள் மும்மூன்றுகப் பிரிந்திருக்கின்றதா ? இலையன்றே ? அவ்வாறே சீவேசுர சகத்துக்களும் பிரமபோதமும் இணையதெனப் பரிபாகிகளுக்கு விளக்குவித்தற்காக அசத்து முதலியவற்றையும் சத்து முதலியவற்றையும் பிரித்துரைக்கவந்த சொல் வேறுபாடென்பதன்றிப் பொருள் மும்மூன்றுகப் பிரிந்திருக்கின்றதன்று. சீவேசுரசகத்து எத்திறத்தார்க்கும் எஞ்ஞான்றும் எங்கணும் சச்சிதானந்த முதலியவாகத் தோற்றுகின்றனவா ? அன்றி வேறுகத் தோற்றுகின்றனவா ? சச்சிதானந்த முதலியவாகவே தோற்றுகின்றதெனின், அங்ஙனந் தோற்றுவானேன் ? அங்ஙனம் பார்ப்பதனாலெனின், அங்ஙனம் பார்ப்பதைத் தடுக்கவேண்டுமன்றே ? தடுத்தற்கு யாது செய்யவேண்டியது ? அசத்து முதலியவாகக் கூறவேண்டுமன்றே ? அங்ஙனம் சொல்லுழி, இவ்வசத்து முதலியவற்றிற் கெதிர்மறை யாதென நாடுவார்களன்றே ? எதிர்மறையாவது சத்து முதலியவைகளாமென்க.

அங்ஙனம் நாடுபவர்க்கு ஷ பிரமபோதம் சத்து முதலிய சகுணப்பொருளென் றுணர்த்தவேண்டுமன்றே ? அங்ஙன முணர்த்துவதால் அப்போதம் சகுணப்பொரு ளெனப் படுமோ ? படுமெனின், ஷ அசத்தாதி யிலக்கணங்களே

நோக்காதுழி இருக்கட்டும்? நோக்கியஞான்றுகலின், சகுணத்துவம் செயற்கை யென்பதற்கு முரணின்று. இன்றுகலின், வஸ்துவென்பது நிர்க்குணப் பொருளாமென்க. என்னை?

கைவல்லிய நவநீதம்.

"நிர்க்குணவத் துவின்குணங்க ளுரைப்பதுதாய் மலடியென
னிகரென் னுதே
சற்குணனே வத்துநிலை யுரையாம லறியவல்ல
சதுர னுண்டோ
நற்குணவே தங்களிதச் சீவன்மூத்தி பெறப்பிரம
ஞானந் தோன்றச்
சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களல்ல பிரமமாஞ்
சொருபந் தானே."

நமக்குச் சூரியன் விளங்குவ தியாதினு லெனப்படும்? பிரகாசத்தாலன்றே? அச்சூரியன் நமக்கு வேறுபினும் பிரகாசத்திற்கு வேறெனப்படுமோ? அல்லவே! பிரகாசவடிவமே சூரியனெனபதற்கு முரணென்னை? இங்ஙனமே பிரமபோதமும் சத்தாதிகளின் ஓருமைப்பொரு ளென்பதற்கு முரனின்றுமென்க.

ஆகலின் இவ்வாராய்ச்சியில் தேர்ந்தது சுவகதபேதம் இறந்தொளிரும் பிரமசைதன்னியமாமென்க.


பத்தாவது

பிரமசைதன்னிய இலட்சியார்த்த விளக்கம்

முற்றிற்று.

பதினேன்றாவது

அறிவானந்த ஐக்கானுபவ விளக்கம்.



வெண்பா.

இந்தவா ராய்ச்சியினி லெய்தியநா ளானந்தஞ்
சந்ததமைக் கானுபவந் தான்விளங்கிப்—பந்தமுத்தி
யீதிரண்டு மின்றெனவே யேற்கு முழைப்பினர்கட்
கேதமென வுண்டோ ரிசை.

அறிவானந்த ஐக்கானுபவ மென்பது அறிவே ஆனந்த மும் ஆனந்தமே அறிவும் என்றுகின்றன. இவற்றுள், அறிவே ஆனந்த மெனப்படுமாயின், அறிவு அயலின்பத்தைத் தாவ வேண்டுவதின்று. தாவுகின்றதால் அங்ஙனம் கூறுவது, இனிப் பாகிய கன்னற்கட்டி மற்றோர் இனிப்பைத் தேடுற்றுற் போலாம். ஆனந்தமே அறிவெனப்படுமாயின், அவ்வானந் தம் அறிவினுல் அறியப்பட வேண்டுவதின்று. அறியப்படு கின்றதால், அங்ஙனம் கூறுவது உருவத்தை அறியும் விழி தான் உருவமென்பது போலாம். அவற்றுல் அறிவானந்தம் ஈரிடத்தும் ஆபத்தாகின்றது. ஆகவே, எங்ஙனம் ஐக்கானு பவ மெய்துமெனின், அறிவானது தான் இயற்கை இன்ப வடிவமாயினும், தன்பால் தான் நாமரூப விடயாகாரமாய் ஆரோபிதப் பட்டமையால், அவ்வவ் வாரோபிதங்களும் யானெனதாகக் காணப்படுகின்றன. அங்ஙனம் காணப்படு பவை இன்பம்போலத் தோற்றுகின்றனவேயன்றி வேறன்று. தான் தன்பால் அயலாக விகற்புரூது தானுக நிற்கின், தனியன்றி அயலென்பதும் அயற்சுகமென்பதும் ஏது? நிஜானுபவ சொப்பனத்தில் அறிவானுக்குச் சுகம் அயற்போல விருக்

கின்றதா? அன்றித்தற்சுகமாகவே விளங்குகின்றதா? ஆங்குக் காணப்படும் அயலனைத்தும் அறிவானியன்றி இன்மையின், அயலென்பதும் அயற்சுகமென்பதும் ஏது? இதனுல் அறிவே ஆனந்தமும் ஆனந்தமே அறிவுமென்ப தாயிற்றென்க.

அன்றியும், விழிப்பாகிய சகலாவத்தை முழுவதும் அல்லல்மயமா? அன்றி அமைதிமயமா? மயமென்பது வேறு கலப்பின்றித் தான்மாத்திரமா யிருத்தல். அது சலமயம் சமுத்திர மென்றுற்போலும் மண்மயம் பூமியென்றுற் போலுமாம். இச்சகலாவத்தை முழுவதும் சுகக்கலப்பின்றிய துக்க மயந்தானேவெனின், துக்கமாகாத சுகமென்பது இருக்கின்றதா? இருக்கின்றதெனின், நாம் எவ்வாறிருத்தல் சுகமெனப்படும்? மண் பெண் பொன் ஆகிய மிக்க இலாபத்தைக் கருதினேன் விரைவாகச் செல்லுதல் சுகமெனப்படுமா? அன்றித் துக்கமெனப்படுமா? சுகமெனப்படுமெனின், அங்ஙனம் செல்லுதல் நீடித்துழி அச்செல்லுதலாகிய சுகம் யாதாய் முடிகின்றது? பெருந்துக்கமாய் முடிகின்றதன்றே? முன்ஞான் றின்பமாயிருந்த அந்நடையானது பின்ஞான்று துக்கமயமாயின், இன்பமென்பது எதுவெனப்படும்? விரைந்து நடப்பதன்றே! ஆகலின், பொறுமையாகச் செல்லுதல் சுகமெனப்படுமா? அன்றித் துக்கமெனப்படுமா? சுகமெனப்படுமெனின், பொறுமையாகச் செல்லும் அந்நடையானது நீடித்துழி அஃது பின்ஞான்றியாதாய் முடிகின்றது? துக்கமாய் முடிகின்றதன்றே? இத்துக்கம் முற்பொழுது இன்பமாயும் பிற்பொழுது இயல்பாய் முடிகின்றது. அதன் பின்னர் உட்கார்ந்திருத்தல் சுகமாயும், அஃதும் நீடித்துழித் துக்கமாயும், அதன் பின்னர் சயனித்திருத்தல் சுகமாயும், அச்சயனம் எவ்வெவ்வா றிருக்கினும் அவ்வவ்நிலைமையும் பின்னர் துக்கமாய் முடிகின்றது. நாம் எவ்வெவ்வா றிருக்கினும் அவ்வவ்

விருப்பும் முன்ஞான்று சுகம்போலிருந்து பின்ஞான்று துக்கமாய் முடிகின்றதாயின், நாம் எவ்வாறுக இருப்பது சுகோதயமெனப்படும்.

அன்றியும், ஷ மண் பெண் பொன் முதலியவற்றை அனுபவித்தல் சுகமென்போமெனின், அவ்வவ் வனுபவமும நீடித்துழித் துக்கமின்றி யிருக்கட்டும். சத்தம் பரிசம் முதலியவற்றைத் தனித்தனி அனுபவிப்பதனால் ஈற்றில் துக்கமாகின்றதெனக் கருதி, இவ்வைந்தையும் தக்க சாதனக் கருவிகளோடு ஒருங்கே அனுபவிக்கினும அவ்வனுபவமும் நீடித்துழித் துக்கமாகாதிருக்கட்டும். தனித்தனுபவிக்கு மனுபவமும் ஒருங்கே அனுபவிக்கு மனுபவமும் முனைஞான்று சுகம்போலும் அவ்வனுபவம் நீடித்த பின்ஞான்று துக்கமாயும் முடிகின்றதாயின், இங்ஙனம் மாறாது எத்துணை ஞான்று நீடிதிருக்கினும் அத்துணை ஞான்றும் இன்பமுற் றிருத்தலன்றே துகக்கலப்பின்றிய சுகமய மென்பதற்குப பொருள் ? இது காறு மாராய்ந்துழியுள்ள அனுபவங்க ளனைத்தும இக்கதியாயிருக்கின்றமையின், உறக்கமாகிய கேவலாவத்தையேனும் அமைதியெனப்படுமா ? அன்றி அல்லலெனப்படுமா ? எனச் சற்றாகிக்குதும்.

அவ்வுறக்கமாகிய கேவலாவத்தையானது அமைதிமயமன்றென்போமெனின், எவ்வுயிரும் உறக்கத்தை விரும்புவானேன் ? இச்சகலாவத்தையின் அல்லல் தணிந்திருத்தற்கன்றே ? உட்டினம் தணிதற்குச் சீதளம் எதுவா யிருத்தல் போல இவ்வல்லல் தணிதற்கு எது யாதெனப்படும்? அமைதியன்றே ? அவ்வமைதி உறகக முழுவதுமன்றே ? அவ்வுறக்கத்தை யன்றி உயிர்களுக்குச் சுகமென்பது எது? இன்றுகலின், அவ்வுறக்க முழுவதும் சுகமயமாமென்க. ஆங்குச் சுகமயமா யிருத்தற் கேதுவென்னே ? அறிவு சோபாதிகமாய்

நில்லாது அதாவது உருவபாவமாய் நில்லாது நிரூபாதிக மாய் நிற்கின்றதால் அதாவது அருவபாவமாய்த் தனித்து நிற்பதால் அஃதே சுகபபேறெனின், அங்ஙனம் தனித்து நில்லாது பிரவிர்த்தியுற்று நிகழுதல் அல்லலெனப்படினும், இவ்விழிப்பு முழுவதும் இச்சா ஞானக் கிரியைகள் அற்றதன் றுகலின், இஃது அறிவுமய மெனப்படுமா? அன்றி அறி யாமைமய மெனப்படுமா? அறியாமைமய மெனப்படுமெ னின், ஷி உறக்கமாகிய கேவலாவததை முழுவதும் அறிவு மயமாயிருக்கவேண்டுமே! அஃதறிவுமயந்தானெனின், ஆங்கு இச்சா ஞானக் கிரியை இயங்கவேண்டுமே! அவைகள் இயங் காமைபால் அறிவின்றெனின், இருந்தும் மக்கினப்பட் டிருக்கின்றதன்றே? மக்கினமாவது பிரவிர்த்தியின்றியிருத்த லென்க. பிரவிர்த்தியின்றி யிருத்தலும் யாது? அறிவன்றே? அவ்விர்த்தி உற்றிருத்தலும் அற்றிருத்தலு மறிவின்பாலா யின், அவ்வறிவாகிய போதம் சகல கேவலமென்னு மீரிடத் தும் உண்டென்பதற்கு முரணென்னே? இன்றுகலின், இச்சக லாவத்தையை மாத்திரம் அறிவுமயமென்பா னேனெனின், இவவவத்தை முழுவதும் விர்த்திமயமா யிருத்தலால் பந்த முத்தி சாதனங்கள் இயங்குகின்றனவாகலின், அறிவுமய மென்பதற்கு முரணின்று மென்க.

முன்ஞான்று அறிவே ஆனந்தமும் ஆனந்தமே அறிவு மென்ற துண்மையாயின், இவவீரவதத்தக கண்ணும் அறி விருக்கின்றதுபோல் ஆனந்தமும் அவ்வவத்தைகளே விடாதிரு க்க வேண்டுமன்றே? அங்ஙனமினறி இசசகலாவத்தைக்கண் இன்பமற்றிருப்பா னேனெனின், இவ்வவத்தை முழுவதி னும் ஆறிவு எதனைக் கணஞான்றும் மாறாது நாடிக்கொண் டிருக்கின்றது? சுகத்தை யன்றே? அதாவது நித்திய திரு ப்தியை. அநத நித்திய சுகத்தை விடாது நாடுவானேன்? இவ்

வவத்தைக்கண் பிரமசாலோக மூதலிய நவவிதப் பதவிப்பே றெய்தினும், திருப்தியுறுது மேலுமேலும் நித்திய திருப் திக்கே அங்காந் திருப்பானேன்? மேலாகிய அப்பதவி சுகங் களே சாலுமான தன்றெனின், இவ்விக சுகங்களா சாலுமான தற் கியைந்தது? அல்லவே! எவ்வெச் சுகத்தையும் அவ்வவ் விற்றில் அதிருப்தியாகக் கொண்டு, சதோதயமாகிய நித்திய திருப்தியைத் தாவிக்கொண் டிருப்பானேன்? சுபாவமெ னின், மூடிவின்றிப்போமே! போகவே, ஞான சாதனங்கள் எற்றுக்கு?

அன்றியும், அறிவாகிய நாம் திருப்தியை விடாது நாடு வதுபோல் அதிருப்தியையும் விடாது நாடவேண்டுமன்றே? கிஞ்சித்தும் நாடவில்லையே? சுகத்தையே நாடுவானேன்? நாம் இடையறுது நாடுவது சுகத்தையும் இடையறுது அனு பவிப்பது துக்கத்தையுமா? சுகத்தை நாடுவது அகன்றுலன் றே துக்கமென்பவை அஞ்ஞான்றே ஒருங்கே அகன்றுவிடும். துக்க மென்பவை அகலவேண்டுமாயின், சுகதாக மூன் ஞான்றே ஒழிந்துவிட வேண்டுமே! அத்தாகம் மாறுதிருத் தற்கு ஏதுவென்னை? இதனுல், வேண்டுகோளாகிய சுக மென்பது அறிவைவிட்டுக் கணஞான்றேனு மூண்டென்பதற் கியைந்ததா? இல்லையன்றே? ஏன் இன்று? அன்றியும், இவ்வின்பம் அறிவை விடாததுபோல் அறிவும் சுகத்தை விடாதிருக்கின்ற தன்றே? அறிவென்பதைச் சுகமும் சுக மென்பதை அறிவும் கணஞான்றும் விடாதிருக்கின்றதே! இஃதென்ன வியப்பென்பம்! இச்சகலாவத்தைக்கண் நின்று நிகழுமறிவு கேவலாவத்தாச் சுகமன்றே? அக்கேவலா வத் தைக்கண் நின்றிலங்கும் சுகம் இச்சகலாவத்தை அறிவன் றே? இவற்றுல் அச்சுகத்தையன்றி, இவ்வறிவும் இவ்வறி வையன்றி அச்சுகமும் வேறன்று. எஞ்ஞான்றும் இவ்விரண்

டும் ஒன்றுக்கொன்று அபேத முற்றிருக்க, மாறுகின்றதாக அனுபவப்படுகின்றதே யெனின், சகல கேவல அவத்தையின் தர்மங்களாலன்றி வேறன்று.

எங்ஙன மெனின், இவ்வீரவத்தைகளும் ஒன்றுள்ளஞான் றொன்றின்றிப் மாறிமாறித் தோற்றுகின்றன. தோற்றவே, சகலமென்பது பிரவிர்த்தியும் கேவலமென்பது நிவிர்த்தியுமா யிருக்கின்றதால், சகலாவத்தையில் ஆனந்தம் குன்றியதுபோலும் கேவலாவத்தையில் அறிவுகுன்றியதுபோலுமன்றி, அவையிரண்டும் குன்றினவன்று. எங்ஙனமெனின், நிவிர்த்தியாகிய கேவலாவத்தையில் அறிவென்பது குன்றினதாயின், அக்கேவலத்தில் இலட்சியார்த்தம் யாது ? ஒன்றும் தோன்றுமையன்றே ? அத்தோன்றுமையில் சுகோதயமன்றே ? அத்தோன்றுமையும் சுகோதயமும் யாருக்கு ? தமக்குத்தாமே யென்பமா ? அன்றி வேறொன்றிற் கென்பமா ? தமக்குத்தாமே யென்போமெனின், அவ்விரண்டும் தம்மைத்தாமே உணர்ந்ததும் சுகித்ததுமா யாகின்றன. ஆகவே, அத்தோன்றுமையும் அச்சுகமுமாகிய விரண்டும் திருக்குத் திரிசியமாகின்றன. ஆகவே, அக்கேவலாவத்தையிலும் அறிவுண்டென்பதற்குக் கிஞ்சித்தும் ஐயமின்றுமென்க. இன்றுகலின், ஆனந்தமுமறிவும் ஏகமாகின்றன. ஆகவே, இச்சகலாவத்தை அறிவுமயமென முன்ஞான்றே ஒப்புக்கொண்டதால், இவ்வவத்தையிலும் ஆனந்தம் அறிவைவிட்டிருத்தற் கெங்ஙனமியையும் ?

அன்றியும், சே கேவலாவத்தையில் நின்று விழித்தழி அக்கேவலத்தில் யாதும் தோன்றவில்லையென்றும், தோன்றுவிடினும் மிக்க சுகமா யிருந்தேனென்றும், கருதிப் பிறர்க்குரைத்தலும் எது ? அறிவன்றே ? அவ்வறிவு ஆங்குள்ள தோன்றுமையையும் சுகப்பேற்றையும் ஆங்கு உணர்ந்ததை

சுகு வந்துணர்த்துகின்ற தன்றே? அன்றியும், ஒருவன் உறங்கும்ஞான்று அவன் இயல்பாக விழித்துக்கொள்ளுதற்கு முன்ஞான்றே மற்றொருவன் அவ்வுறக்கத்தைக் கலைத்துழி, உறங்கினவன் சிங்கம்போற் சீறியெழுந்து மிகவும் வெறுத்துக்கொள்ளுதல் யாதுக்கு? ஆங்கனுபவித்தற் கியைந்திருந்த சுகம் பின்னமாயிற் றென்றன்றே? ஆனந்தம் அறிவைவிட்டதன்றென முன்ஞான் றெப்புக்கொண்டு, இஞ்ஞான்று அவ்வானந்தம் பின்னமாயிற்றெனக் கூறலாமோ வெனின், அவ்வானந்தம் சகலாவத்தையாகிற பிரவிர்த்தியிஞற் குன்றினதுபோலும் அறிவு கேவலாவத்தையாகிற நிவிர்த்தியிஞற் குன்றினதுபோலு மிருக்கின்றதென முன்ஞான்றே ஒப்புக்கொண்டு, இஞ்ஞான்று அவ்வானந்தம் அறிவுக்குப் பின்னமாகலாமோ வெனக்கூறலாமா? அறிவுக்கு ஆனந்தமும் ஆனந்தத்திற்கு அறிவும் எஞ்ஞான்றேனும் பேதித்ததுண்டா? சகலாவத்தைக்கண் ஏகதேசமேனும் சுகதாகம் விட்டதுண்டா? கேவலாவத்தைக்கண் ஏகதேசமேனும் சுகவாழ்வை விட்டதுண்டா? இல்லையே! நீரின்கண் ஒருவன் தனது சிரம் மறைய மூழுகியிருந்தும் தனது சலதாகமாறுது உற்றிருந்தால் அந்நீர்பபொருள் சேய்மையுற்றதா? அதுபோல் சகலாவத்தைபில் அறிவானது சுகாகாரமா யிருந்தும் தனது பிரவிர்த்திப் பரராக்கிஞற் சுகம் சேய்மையுற் றிருக்கின்றதாக மயங்கியது குறித்துச் சுகமானது தனக்கயலா யிருக்கின்றதென்னலாமா?

அன்றியும், ஆங்காங்கும் பெண்பாற் குழாங்கள் வக்கூணையோடி துக்கிக்கும் ஞான்று அவ்வவ் வாராமைகள் எங்கிருந் தெழுகின்றனை? அறிவிலிருந் தெழுகின்றனவெனின், அங்ஙன மெழுவானேன்? தம்மால் அபிமானிக்கப் பட்டவர் கருக்கு ஆனியுற்றதஞ லெனின், அவ்வானி யுரைக்காறும்

அம்மாதர்களுக் கியாதிருந்தது? சுகமிருந்ததன்றே? அவ்வச் சுகத்தையும் அவ்வவரும் கருதாதுழி, ஷ அவ்வவ் வாரா மையும் ஏது? முன்ஞான்றிருந்த அவ்வச்சுகத்தையும் உன்ன உன்னத் துக்கவெழுச்சியாயின், அவ்வுன்னல் சுகத்தையன்றி யும், அச்சுகம் சுகிப்பானுகிய அறிவை யன்றியும், அவ்வறி வும் சுகத்தை யன்றியு முண்டெனப்படுமோ? படாதாகலின், எஞ்ஞான்று மிருப்பது ஞெப்திப் பிரிய மென்றுயிற்று. ஆக வே, அறிவானந்த ஐக்கானுபவமென முன்ஞான்று கூறிய தற்கு மூரனென்னை? அஞ்ஞானமாகிய இவ்வசுத்த சகல கேவலங்கள் முழுவதிலும் அறிவைவிடாத ஆனந்தமும் ஆன ந்தத்தை விடாத அறிவுமின்றுயின், ஞானமாகிய சுத்த சகல கேவலங்களிலேயா இவ்வறிவானந்தம் பேதித்திருக்கும்? அறிவுக்கு ஆனந்தம் வேறெனின், அறிவு என்ன அறிவாய் முடியும்? இன்பங் கெட்டதாய் முடியுமன்றே? இன்பங் கெட்டதாயின், துக்கமுற்றதெனப்படுமன்றே? துக்கமுற்றது சடமெனப் படுமன்றே? துக்கசட மென்பது அசத்தெனப் படுமன்றே? துக்கம் சடம் அசத்து எனப்படுவது யாதெனப் படும்? அறியாமை யெனப்படு மன்றே? இவற்றுல், அறி வென்பதற்குப் பொருளெங்கே! இதுநிற்க.

ஆனந்தத்திற்கு அறிவு வேறெனின், ஆனந்தம் என்ன ஆனந்தமாய் முடியும்? அறிவு கெட்டதாய் முடியுமன்றே? அறிவு கெட்டதாயின், சடமெனப் படுமன்றே? சடமெனப் படுவது அசத்தெனப் படுமன்றே? சடமசத்தென்பது துக்க மெனப் படுமன்றே? சடம் அசத்து துக்கம் எனப்படுவது யாதெனப்படும்? அஃதும் அறியாமையெனப் படுமன்றே? அறிவானந்தம் தனித்தனிப் பொருளென எங்ஙனம் ஏற் கின்றது? ஞானமாகிய சுத்த சகல கேவலமென்ப தியாதெ னின், ஷ அஞ்ஞான சகலாவத்தை அசுத்தத் திரிபுடியாக

இருக்குமாறுபோல், ஞான சகலாவத்தை யென்பது சுத்தத் திரிபுடியாக இருக்கின்ற தென்க. திரிபுடியாவது - ஞாதுரு ஞானம் ஞேயம் எனப்படுவனவாம். ஞாதுருவென்பது முதற் பொருளாகியும், ஞானமென்பது அம்முதலினது சத்தியாகி யும், ஞேயமென்பது அச்சத்திபின் காரியமாகியு மிருப்பது. அசுத்தத் திரிபுடியாவது - அவித்யாப் பிரதிபிம்பனை சிதா பாசாந்தக்கரணைந்திரியோபாதிக ளணைத்துமா மென்க. இத் திரிபுடி மூவிதமா யுள்ளன. அவை பாகியத் திரிபுடியென வும், ஆந்தரத் திரிபுடியெனவும் (அதாவது உள் திரிபுடி யெனப்படுவது) மத்தியத்திரிபுடி யெனவுமாம்.

க-வது, பாகியத்திரிபுடி யென்பது - எத்துணைக் கல்வி கேள்விகளிற் சிறந்தும் தூலசரீரம் வீணமுதலாகக் தோற்று கின்றதால், இத்தூலமே ஞாதுருவெனவும், இத்தூலத்திற்கு ஐம்பொறிகளில் பரிசேந்திரியம் ஆதாரமா யிருந்தும் இத் தூலத்துள் மற்றவிந்திரியங்களோடு நின்றுணர்வதுபோ லிருத் தலால் இவ்வைந் திந்திரியமும் ஞானமெனவும், சத்த முதலிய ஐந்து விடயங்களும் ஞேயமெனவுமாம்.

உ-வது, மத்தியத்திரிபுடி யென்பது - மன முதலிய அந் தக்கரணம் ஞாதுருவெனவும, ஷ தேகேந்திரியங்கள் ஞான மெனவும், ஏனைய சத்த முதலிய விடயங்கள் ஞேயமெனவு மாம்.

ரு-வது, ஆந்தரத்திரிபுடி யென்பது - சிதாபாசன் ஞாதுருவெனவும், ஷ மனமாதிகள் ஞானமெனவும், ஏனைய தேகேந்திரியாதி யனைத்தும் ஞேயமெனவுமா மென்க.

இத்திரிபுடிகள், பொருளல்லாததைப் பொருளென் றுணர்தலும், பொருளல்லாதது பொருள்போற் றோற்றுதலு மாகலின், இஃது அசுத்தத்திரிபுடி யெனப்பட்டதென்க.

சுத்தத்திரிபுடியென்பது "இருளிற் சுடரென்ன விந்திர வின்ன" என்றறிஞர் அருளியவாறு சொரூப சமாதிக்கண் மின்மினியொளிபோல் தற்பிரகாசம் வெளிப்பட்டது முதல் வயோதிகப் பருவம்போன்ற அந்தச் சொப்பிரகாசானுபவ மூதிர்ச்சிகாறுமுள்ள இலட்சியார்த்தமே ஞேயமெனவும், அந்த ஞேயமாகிய விளக்கக்குறியைக் குறியாது குறித் துணரும் நெறியாகிய மெய்யுணர்வே ஞானமெனவும், அம் மெய்யுணர்வுக்கு விஷமுதலாகிய சிவமே ஞாதுருவெனவுமா மென்க. அவ் விஷமுதலேச் சிவமென்பா னேனெனின், சிவ மென்பது காந்திமான் என்பதனலென்க. காந்திமான் என் பா னேனெனின், பிரகாச மென்றும் பிரகாசியென்று மிரு வகையின. அவற்றுள், பிரகாசமென்பது காந்தியெனவும், பிர காசியென்பது காந்திமானெனவு மாகின்றதால், சிவப்பிரகாச மென்றுபிற்று. அதாவது - வியாபக விளக்கமென்க. வியா பகம் ஞாதுருவெனவும், விளக்கம் ஞேயமெனவும், இந்த ஞா துரு ஞேயமாகிய இவ்விரண்டின் மத்தியில், இவ்விரண்டினை யும் தழுவி நிகழும் ஸ்புரணவடிவமே ஞானமெனவுமாமென்க. இங்ஙன மிலங்கும் திரிபுடியானுபவமானது, தானென்னும் ஓர் உபசாந்த நிலையையன்றியின்றுயினும், இவ்வனுபவமுள்ள ஞான்றும் இஃது சித்துத்திரிபுடி யென்பதா? அன்றிச் சடத் திரிபுடி யென்பதா? சித்துத் திரிபுடியாகலின் இத்திரிபுடி ரகித அகம்பொருளே வேதாக்தமென்னும் சுவானுபவாதீதப் பிர்மோக மென்பதாமென்க. இதற்குதாரணம்:—

ஞானவாசிட்டம்.

"இருளன்றி யொளியன்றி யளவன்றி யலவன்றி
யியல்பொன் றின்றிப்
பொருகின்ற பூதங்கள் பலபொருள்க ளன்றிநிறை
பூரண மாகி

யுருவன்றி யருவன்றி யுளதன்றி யுண்டில்லை
யென்று மொன்றாய்
வருகின்ற திரிபுடியி னதித்தோன்று மறவாது
மதித்துக் கொள்வாய்.''

எனக் கூறியவாற்றாற் காண்க. ஷெ சொரூபசமாதிக்கணுள்ள திரிபுடியானுபவம்அறிவெனப்படுமா? அன்றி ஆனந்தமெனப் படுமா? ஆனந்த மெனப்படுமெனின், திரிபுடி ரகிதம் யாதெனப்படும்? அஃது அறிவுமய மென்பதாக்கும்! ஆகவே, அந்த ரகிதம் சகலாவத்தையெனப் படவேண்டுமே! ஷெ அஞ்ஞான திசைக்கணுள்ள சுழுத்தியவத்தை சகலாவத்தை யென்பதாயின், இத்திரிபுடி ரகிதானுபவமும் சகலாவத்தையெனப் படும். அஃது அங்ஙனமில்லையே! இஃது இங்ஙனமிருக்க. அச்சுழுத்தியவத்தை திரிபுடிரகிதமாகலின், அஃது கேவலாவத்தை யெனப்பட்டது. அங்ஙனமே, இஞ்ஞான திசைக்கண் இத்திரிபுடி ரகிதமானது கேவலாவத்தை யெனப்படாது சகலாவத்தை யெனப்படுமோ? அன்றியும், திரிபுடிரகிதானுபவம் சகலமென்பதால் இச்சுத்த சகலமே துரியாவத்தை யெனவும், இத்திரிபுடி ரகிதானுபவம் கேவலமென்பதால் இச்சுத்தகேவலமே துரியாதீதாவத்தை யெனவுமாமென்க. துரியாவத்தை அறிவுவிளக்கமும், துரியாதீதாவத்தை ஆனந்தோதயமுமா மென்க.

அன்றியும், சங்கற்பமென்பது மூன்றுவகையின. அவை-மனவிகற்ப சங்கற்பமெனவும், நிர்விகற்ப சங்கற்பமெனவும், சவ்விகற்பசங்கற்ப மெனவுமாம். மனவிகற்ப சங்கற்ப மென்பது-அஞ்ஞான திசைக்கண் ஷெ பாகியத் திரிபுடிமுதல் மூவித்திரிபுடிகளும், நிர்விகற்பசங்கற்ப மென்பது-ஞான திசைக்கண் தன்னைச் சொப்பிரகாச வடிவமெனக் கண்டுகீண்டனுபவிக்கும் ஷெ திரிபுடி சகிதானுபவமும், சவ்விகற்ப சங்கற்ப

மென்பது - தன்னை ஆனந்த வடிவமெனக் கண்டுகண் டின் புறும் திரிபுடிரகிதானுபவமுமாம். அறிவு வடிவாய் விளங்கும் நிர்விகற்பமும் ஆனந்தவடிவாய் நிற்கும் சவ்விகற்பமும் சங் கற்பமெனப்படுமோ வெனின், தானென்பது சுசாதிமுதலிய மூன்று மயக்கமுமின்றி, அறிவேவடிவாய் விளங்கினும் அவ் விளக்கம் ஓர்ஞான்றுகலின், (அதாவது சொருபசமாதி மட்டு மென்பது) அவ்வோர்ஞான்றும் மூடவிருத்தி கோரவிருத்தி. யெனப்படாது சாந்தவிருத்தியாயினும் அது விவேகவிருத்தி யெனப்படுதலினாலும், தானென்பது ஷை சுசாதி முதலிய மூன்றுள் சுகதபேத கற்பனை மயக்கங்களுக் காதாரம்போ லிருக்கு மின்பமே வடிவாய் நிற்கினும் அவ்வின்பநிலை ஓர்ஞான் றுகலின் (அதாவது சகசசமாதிமட்டு மென்பது) அவ்வோர் ஞான்றும் மூடவிருத்தி கோரவிருத்தியிறந்த சாந்தவிருத்தி யாயினும் அது அகண்டாகார விருத்தியெனப்படுதலினாலும், சங்கற்பமென்பதற் கையமின்றென்க. ஷை மனவிருத்தியின் சேட்டையும் அச்சேட்டை யின்மையுமாகிய அசுத்த சகல கேவலாவத்தையிலேயே ஷை அறிவானந்தம் பிரிவற் றிருக் கின்றதாயின், ஷை வியாபகவிளக்க வுணர்வாகிய சுத்ததத்திரி புடியென்னும் விவேக விருத்தியே சுத்த சகலமும், இத்திரி புடியாகிய விவேகவிருத்தியின் அயர்வே சுத்தகேவலமுமாக லின், இச்சகல கேவலத்திலேயா அவ்வறிவானந்தம் பிரிவற் றிருக்கின்றது? அக்கினியினது உட்டினமும் பிரகாசமும் பிரிவுற் றிருக்கின்றதா? இன்றன்றே? அவ்வபேதமானது விளக்கின்கண் ஒளிமிகுதியாயும் கட்டையின்கண் உட்டினம் மிகுதியாயு மிருக்கினும், அவ்விளக்கின்கண் உட்டினமும் கட்டையின்கண் ஒளியுமின்றே? இருக்கினும், அவ்வவற்றில் அததுவும் குன்றியிருக்கின்றது. அதுபோல், தானேதானு கிய அறிவானந்த ஒருமை ஷை சுத்தாசுத்த சகலாவத்தை களில் அறிவு மிகுந்திருக்கினும், ஆனந்தமின்றே? இன்ற

னின், அவ்விரண்டிலும் அறிவு ஆனந்தானுபவ மின்மையினும், ஆனந்தாகாரமாகவேனும் இருக்கின்றதன்றே? அங்ஙன மிருத்தல் ஆனந்தம் குன்றினதுபோலும். ஷை சுத்தாசுத்த கேவலாவத்தைகளில் ஆனந்தம் மிருந்திருக்கினும் அறி வின்றே? இன்றெனின், அவ்விரண்டிலும ஆனந்தம் பிர வீர்த்தியானுபவ மின்மையினும், நிவிர்த்தியாகவேனு மிருக் கின்றதன்றே? அங்ஙன மிருத்தல் அறிவுகுன்றினது போ லுமாமென்க.

இவற்றுல் அறிவானந்தம் பிரிவற்றதாயிற்று. ஆகின்ற தால், ஒவ்வொரு போதமும் இருவகைச்சமாதிகளிலும் பல கற்பமும் பழகிப் பழகி இவ்வறிவானந்த ஒருமையானுப வம், அதாவது தானுனந்தானுபவம் எய்தவேண்டுமன்றே? இங்ஙன மெய்தியிருத்தலே தானறிவானந்த மாயிற்று. இத் தானென்பதை யன்றி விடயானந்தம் வேறுகவிருக்குமாயின் ஷை அறிவானந்தமும் வேறுக விருக்கலாம். இருக்கின்றதே யெனின், ஒவ்வோர் விடயமும் சோதனையில் தானுக முடியா திருக்கட்டும். முடிகின்றதால், அவ்வறிவானந்தமும் தானென் பதையன்றி இன்றென்பதாயிற்று. ஆகலின்,

தீருக்குத்தீரீசிய விவேகம்.

"தானறிவா னந்தமதாற் ருன்விடயா னந்தமதாந்
தானவத்தை யாதியெனல் சாற்றவோ—யானிதனை
யொவ்வோர் விடயத்து மொவ்வொன்ருக் காட்டிடுவன்
செவ்விதாக் காண்பவர்க்குச் சென்று."

என்றருளியிருக்கின்றதைக் காண்க. அன்றியும் இவ்வறிவா னந்த ஒருமையினை,

தத்துவராயர் பாடுதுறை.

"சாதி கழிந்ததென் ருதேடா காளஞ்
சங்கை தவிர்ந்ததென் ருதேடா காளஞ்

சோதி சுகமேயென் றாதேடா காளஞ்
சொல்லவொண் ணுதலென் றாதேடா காளம்." என்றும்,

"அதுவேகா ணிதுவென்றொன் றாரிய னருள்செய்ய
விதுவது வாகுமென் றுந்தீபற
விலக்கணைப் புகுந்ததென் றுந்தீபற."

என்றும் கூறியவாற்றாற் காண்க.

ஒவ்வோர் போதமும் எத்தகையதாகிய பக்குவமுற்றிருக்க வேண்டியது? பின்ஞான்று எத்திறத்தர்பாற் சென்று தஞ்சமென் றடையவேண்டியது? அதன் பின்ஞான்று அத்திறத்தர்பாற் சென்று எவ்வாறுழைத்து எவ்வாறு தெளிந்திருக்கின்ற தெனின், அகத்தும் புறத்தும் காணப்படுவன வாகிய,

முதலாவது

சார்வமும் தமக்கெனச் சற்றும் பொருளின்றிய ஆரோப மெனக் கண்டு இவற்றின்மீது முற்றும் விரக்தியுற்று,

உத்தமவாதநூல்.

"அல்லவற்றை நானெனவி லற்பரினு மென்சிறந்தோ
மல்லவற்றைக் கோனெனினு மங்ஙனமே—சொல்லளவா
வாதிக்கக் கற்றுணர்ந்தீர் வாயடங்கிக் கேட்டுய்மின்
போதிக்கத் தக்கவர்பாற் புக்கு." என்றும்,

"தன்னேத்தான் காணிற் றலைவன் றலைவல்ல
தன்னுருவ மல்லவெலாந் தானன்று—தன்னே
யறியாத் தகையதனு லாய்துமுன் வல்லீ
றெறியன்மி னென்சொல்லே யீங்கு." என்றும்,

அருளிய இவ்வாக்கியங்களுமன்றி இவைபோன்ற அரிய வாக்கியங்களையும் நன்குணர்ந்து நானென்னும் அப்போத மானது தன்னை எது நான் எது நானெனப் பலகற்பமும்

தேடியும் காணேனென்னு மாராமையும் அதி தீவிரதர முற் றிருத்தலும்,

இரண்டாவது

குறள்.

"இழுக்க லுடையுழி யுன்றுகோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்."

எனக் கூறிய இவ்வரிய வாக்கியத்திற் குறிக்கப்பட்ட அகம் புறமென்ப திறந்து தானேதானுகிய ஞானசற்குருவின்பா லடைந் திருத்தலும்,

மூன்றுவது

தாயுமானவர்.

"கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றே தான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்."

என்றருளிய இவ்வாக்கியமுமன்றி இதுபோன்ற வாக்கியங் களையும் நன்குன்னிச் சிரவணம் மனனம் நிதித்தியாசன மட்டில் நில்லாது, மேலே பலகற்பம் சமாதி கூடி சுற்றில் ஷி அறிவானந்த ஒருமையாகிய சாட்சாத்கார மாதலா மென்க.

அன்றியும், இப்பரிபாகிகட்கு அப்பரமாசிரியர்கள் நேரிடு தலும் அங்ஙனம் நேரிட்ட பின்ஞான்று அவர்கள் இவர் களைப் பாதுகாத்தலையும் அங்ஙனம் பாதுகாத்தலுக்கு இவர் கள் ஒத்திருத்தலையும் திருட்டாந்த பூர்வகமாக உணர்த்துதல். இவ்வதிதீவிரதர பரிபாகிகள், கப்பலைச் செலுத்துமி மாலுமி கள் தமக்குக் கிஞ்சித்தும் எல்லை கரைகாணுது அவ்வகண்ட

சமுத்திரத்திற் கிடையில் திசைதப்பித் திகைதிகைத்து அலையும் ஞான்று அவர்களுக்குத் தெய்வகதியாக ஓர் தீவு கண்கூடாஞற்போல், இவர்கட்குப் பொருளல்லாதவை பொருள்களாக ஆரோபிதமாய்த் தோற்றினும், அவற்றினுக்கும் தற்போத மெட்டாமைக்கும் கிஞ்சித்தும் சகியாமல் திகைத்து அலையும் ஞான்று அவ்வாசிரியர்கள் நேரிட்டு,

கைவல்லிய நவநீதம்.

"வாராயென் மகனே தன்னே மறந்தவன் பிறந்தி றந்து
தீராத சுழல்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போத
மாராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே." என்றும்,

வேதாந்த இலக்கணம்.

"பூர்வசித் தாந்த வடுக்கு நெறியால்
வலித்திழுத் துப்போய் மாரு வாழங்
தெரிக்கவல் லவனுற் றேர்தன் ஞானம்."

என்றும் அருளியிருக்கின்றபடி அவ்வாசிரியர்கள் தாம் மார்ச்சால நியாயம்போல், அதாவது பூஞைகள் தாம் செல்லுமிடமெல்லாம் தமதுகுட்டிகளைக் கவ்விக்கொண்டுபோய் வைத்து வைத்துப் பாதுகாத்து அவற்றை வளர்த்து விடுவதுபோல், இவ்வாசிரியர்கள் தம்மை வந்தடுத்த பரிபாகிகளைத் தாம் முன்ஞான்று அகமுக நெறிக்கண் வாச்சியார்த்த லட்சியார்த்தமாகத் தெளிந்த ஆங்காங்கும் அழைத்துக்கொண்டுபோய் வைத்து வைத்துத் தானே தாஞக்குவிக்க, அங்ஙனமே இப் பரிபாகிகள் மர்க்கட நியாயம்போல், அதாவது குரங்கின் குட்டிக் குழாங்கள் தத்தம் தாய் செல்லுமிடங்களோறும் அத்தாயைக் கணமும் விடாது சென்று சென்று வளர்ந்து நிகழுவதுபோல், ஆசிரியர்களது திருநோக்கின்படியே இப்

பரிபாகிகளும் அகமுகநெறிக்கண் கூடவே சென்று சென்று ஷ வாச்சியார்த்த லட்சியார்த்தமாகத் தெளிந்து தானே தானாக இருத்தலுமா மென்க.

இஃது இங்ஙனமிருக்க, மூன்ஞான்று ஞான சற்குரு வென இரண்டாகக் கூறியது எற்றுக்கெனின், ஞானானுபவ மெனவும், தானானுபவமெனவு மிரண்டாக விருக்கின்றதனா லென்க. இவ்விரண்டனுபவத்துக்கு மியைந்தவர் ஒருவரா யிருக்கினும், இவ்விருவரையே ஞானகுரு வெனவும் சற் குருவெனவும் இரண்டாகப் பிரித்துக் கூறியிருக்கின்றது, ஞானகுருவெனப் பிரித்த தியாதுக்கெனின், ஞானமென் பது இருவகையின. அவை - போலிஞான மெனவும், உண் மைஞான மெனவுமாம். அவ்விரண்டுள் போலிஞான மென் பது இஃதெனத் தெரியாத தம்மைத்தாம் ஞானிகளென நடிப்பது. அவ்வாறு நடிப்பவர்கள் விடயகதப் பிரத்தியட் சத்திற் கியைந்த சரியை கிரியை யோகம் என்னும் இம்மூன் றின் மாத்திரம் நன்கழுந்தி முறைபிறழா தொழுகி, இம்மட் டிலே தம்மைத் தீர்ந்த ஞானிகளாக மதித்து நாமரூபங்களைக் கரைத்தற் கிணங்காது, அவற்றை விசேமுதலாக மயங்கிய சரித்திரங்களேயன்றி முடிவென்பதுவேறேயின்றெனத்துணி புற்று, மேல் நிகழும் ஞானமொன் றுண்டென்பவரைத் தூடி த்துக்கொண் டிருப்பவரும், இச்சரியையாதிகளில் நன்கழுந் தினவர்போல் தமமைக் காட்டிக்கொண்டு வேடத்தாலும் சொல்லாலும் நடித்துப் பிறபோதையினிடத்தும் கைம் பெண்களிடத்தும் நன்கழுந்தி ஞானநூல்களையும் மிகக் கற் றுத் திரிபவருமாம். இவ்வண மிருப்பவரைக் கள்ள ஞானிக ளெனப் பிரித்தற்கு அங்ஙனம் ஞானகுருவெனக் கூறினதே யன்றி வேறனமென்க.

எனவே, முதற்கண் கூறப்பட்டவர்கள் தீர்பபென்ப தியாதோ அதை வறிய சொல்லாற்றலினாலும், இரண்டாவது

கூறப்பட்டவர்கள் வறியசொல்லோடு வேடத்தாலும் மயக்குபவருமாமென்க. அங்ஙனம் கூறியது இவர்களே நிக்கிரகித்தற்கேனும், அவ்வகையான ஞானகுருவினது ஞானானுபவமென்ப தியாதெனின்,

ஞானகுருவினிலக்கணம்.

முன்னர் அனேத்தும் சதுர்ஞான்றும் தமக்கெனச் சற்றும் இருப்பென்பதின்றிய மித்தையெனத் தேர்ந்திருக்கினும், மீண்டு மீண்டும் அவைகள் தோற்றிக்கொண்டேதானிருக்கும். ஆயினும், அவ்வத்தோற்றங்கள் முன்ஞான்றுபோலின்றிக் கயிற்றரவு முதலியவைபோல் தோற்றுமாகலின், கன்னற்கட்டியை யூட்டிச் செய்யப்பட்ட பணியாரங்கள் இனிப்பு மயமாவதுபோல், ஷை தோற்றல் மாத்திரமாகிய சீவேசுர சகத்துக்கள் ஒவ்வொன்றினும் சமாதிக்கண் விளங்கிய தனது ஞானப்பிரகாசத்தைக் கொடுத்துக் கொடுத்துத் திருட்டியழுந்துந்தோறும், அத்தோற்றங்கள் ஒவ்வொன்றும் கரைந்து கரைந்து பின்ஞான்று அனேத்தும் ஷை தனது ஞானப்பிரகாசமாகத் தோன்றுமன்றே? அங்ஙனமிலங்கும் சுயம்பிரகாசத்தையன்றி அன்னியமாக அனுபவமேனு முண்டெனப்படுமோ? இல்லாவழி, எது அகமென்பதற்குப் பொருள்படும்? வேறின்மையின், அச்சுயம்பிரகாசத்தையே இது நான் இது நானெனப் பலகற்பமும் கண்டுகண் டின்பாகாரமாய்ப் பழகிக்கொண் டிருக்கவேண்டி வருமன்றே? இங்ஙனம் மொழிவது ஞானானுட்டானமாகலின், இந்த ஞானானுட்டானிகளைத்தான் ஷை ஞானகுருவென் றுரைத்திருக்கின்றதென்க.

இங்ஙனம் விடாது அப்பியாசிக்கு மனுபவம் ஞானமாயினும், இம்மை ஐந்துவித அனுபவமாயிருக்கின்றன. அவை க-வது, தனக்கெனப் பொருளின்றித் தோற்றல் மாத்திர

மாக நிகழும் சீவேசுரகற்பனைகள் சின்மாத்திரமாகக் கரையப் பட்டுக்கொண்டிருக்கினும் இவை அநாதி மயக்கமாகலின், ஷ ஞாணுட்டானம் நன்கு நிலைக்குங்காறும் இடையிடையே கரைத்து கரைத்து தோற்றுவது இயல்பாகுமன்றே? இயல் பாயினும் எது இங்ஙனம் தோற்றுவது? தற்பிரகாசத்தை யன்றி யுண்டெனப்படுமோ? படாமையால், இவையனைத்திற் கும் உபாதானகாரணம் யாதெனப்படும்? தானுகலின் தானே முதற்காரணமாயும், உ-வது, அவ்வாறாயினும், இத்தோற்ற ங்கள் தானெனப்படுமா? படாததால் இவற்றிற்குத் தான் விலட்சணமாயும், ஊ-வது, இத்தோற்றங்கள் மாறிக்கொண் டே யிருப்பது எதன்பா லெனப்படும்? தன்பா லெனப்படு மன்றே? ஆகலின் தான் வியாபகமாயும், ச-வது, இத்தோற் றங்கள் காணப்படுவது எதற்கு? தனக்காகலின் தான் சாட்சி யாயும், நு-வது, இத்தோற்றங்கள் விளங்குவது யாதினலை னப்படும்? தன்னொகலின் தான் விளக்க வடிவாயும் ஆகின் றன. எனவே, தானென்பது சர்வோபாதானமெனவும் சர்வ விலட்சணமெனவும் சர்வாதாரமெனவும் சர்வசாட்சியென வும் சர்வப்பிரகாசமெனவும் ஆயிற்று. ஆகவே, இச்சீவேசுர சகத்தினைத்தும் தனது சாயைகளாகலின், சர்வமும் நானெ னவும், இச்சாயைகளுக்கு ஆனி விருத்தி எத்தனை மீக்குறி னும் கிஞ்சித்தும் தனக்கின்றுகலின் சர்வாதீதமெனவும், இச் சாயைகளுக்குத் தான் இடமாயிருத்தலின் சர்வாதாரமென வும், இவற்றைச் சர்வக்ஞத்துவமாக நின்றுணர்தலின் சர்வ சாட்சியெனவும், இவையனைத்தையும் விளக்கிக்கொண்டிருத் தலின் சர்வப்பிரகாசமெனவுமா யிருத்தலே, ஷ முக்கியானு பவமாமென்க.

அங்ஙனமாயின், ஞானகுருவென்னது சற்குருவெனப் பிரித்த தியாதுக்கெனின்,

இஃது போலிஞானம்.

சிலர் அஞ்ஞானமென்பது முழுதும் நசித்தற் கியைந்த அபரஞானமெனவும் பரஞானமெனவும் திரஞானமெனவும் மூன்றுண்டெனக் கூறி, அவற்றுள் திரஞானத்தைக் கேட்டு மறியாமலும், கெ பரஞானுபவ மின்றியும், அப்பரஞானுபவத்திற்கு எதிர்மறையான ஓர்வித ஞானுபவத்தையெய்தி (அதாவது கிஞ்சித்தும் அஞ்ஞானமென்பது நசிப்புறாது நீங்கியதுபோ லிருக்கும் ஞானம்) இந்த ஞானத்தினால், மோட்சானுபவிகளைப்போல், (அதாவது ஞாஞ்ஞானரகித நிரதிசயானந்தானுபவிகள் போலிருந்து) அடுத்தவரது அஞ்ஞானநிகளை யகற்றற்கு இவ்வஞ்ஞானுதிக ளகலாத வேதபாகிய அந்த ஞானுபவத்தாலும், அவ்வனுபவத்திற் கியைந்த வேதபாகிய சுருதிகளாலும், (அச்சுருதிகளாவது சதுர்த்தசவித்தைகளாகிய சத்பிரமாணங்களுக்கு மிணங்காதவைகள்) அஞ்ஞானநிகளை மறையச் செய்பவர்களும், இங்ஙனமாகிய ஞானுபவ ஆதரவு சற்றுமின்றி வேதபாகியமான கெ சுருதிகள் மாத்திரத்தாற் பிறரை மயக்கி வைத்துக்கொண்டிருப்பவர்களுமாகிய இவ்விருபட்சத்தாரும் தீர்த்தானுபவிகளன்றெனக் களைதற்கு கெ சற்குருவெனக் கூறினதேயன்றி வேறன்றென்க.

அஞ்ஞானமென்பது சற்றும் நசிப்புறாது அகன்றது போ லிருக்கும் ஞானுபவமென்ப தியாதெனின்,

ஒழிவிலொடுக்கம்.

"சாணு மறிவுநீ சாட்டறிவு நாமவற்றைக்
காணக் கழலுங் கழற்றியிலே — ணாணி
றைத்திரும்பிப் பாராதே நான்றுனென் ஞதே
யமிழ்த்துகர கம்போனிற் பாய்."

என்னும்,

"வதுவைச் சடங்கதனே மைதுனமாக் கொண்ட
புதுமைச் சிவானந்தம் போதும்—பதையா
விளக்கொளியி லெண்ணெய் வியாபியா ஞற்போற்
கொளக்கொடுத்தல் சத்தியமாக் கொள்."

என்றும் கூறியிருக்கின்றது.

தத்துவங்கள் ஒவ்வொன்றையும் ஆத்மாவானது நான் என்று நானன்றென நியதி களைந்து களைந்து சென்று தனிப்பட்டிருக்கும் முடிவில், எஞ்ஞான்றும் அறிவுக்கறிவாய் நின்றிலங்கும் திருவருளானது வெளிப்பட்டு, முன்ஞான்று தனிப்பட்டிருந்த ஆத்மாவை அயத்தை இழுக்கும் காந்தம் போல் இழுத்து, தனக்காதார குணியாகிய சிவவியாபகத்தில் கடலின்கண் கடமானது அமிழ்ந்துவிடுவதுபோல் அமிழச்செய்து, பின்னர் விளக்கொளியில் எண்ணெயானது வியாபித்து அவ்விளக்கொளிக்குத் தான் உணவாய்விடுவதுபோல், ஷை சிவத்தி லழுந்திய இவ்வாத்மா அச்சிவத்திற்கு உணவாகுமாறு செய்விக்கின்றது ஷை திருவருளெனக் கூறுகின்றதன்றே? இவ்விருகவிகளும் சித்தாந்த பட்சம் கவது, ஷை முதற்கவியில் சலவியாபகத்து ளொடுங்கிய கடப்பொருளானது அச்சலத்துக்குத் தான் வேறுபொருளா யிருக்கின்றது போல், சிவத்துவொடுங்கிய சீவப்பொருளானது அச்சிவத்துக்குத் தான் வேறு பொருளா யிருக்கின்றது. இதனால், முத்தியென்பது இரண்டறக் கலத்தலென்பதெங்கே? இன்றுகலின், அத்துவிதமென்பது விருத்தமாகின்றதே! சிவமும் ஆன்மாவும் பிரிவற்றிருக்கும் ஐக்கானுபவமே ஒன்றெனவும் இரண்டெனவும் படாத அத்துவித முத்தியென்பதெனின், சிவமுமான்மாவும் அணுகி இரண்டாகலின், முத்தியில் ஒன்றல்லவென்பது உண்மையே! அதனோடு இரண்டு மல்லவென்பது எங்ஙனம் கூடும்? பிரிவற்றிருத்தலே இரண்டென்ப

தல்லவெனின், கதிரொளியில் விளக்கொளி இரண்டுபடாதிருக்குமாயின், சிவவொளியில் சீவனுகிற சிற்றொளி இரண்டுபடாதிருக்கும். கதிரொளி மிகுதியில் விளக்கொளி தோன்றுதிருக்கில் அவ்விளக்கொளி வேறன்றெனப்படுமோ? இதுபோல், சிவப்பிரகாசத்தில் சீவ சிற்றொளியானது தோன்றுதாயின், சீவன் வேறன்றெனப்படுமோ? சிவமும் ஆன்மாவும் அனுதி இரண்டாகலின் அவ்விரண்டும் கலந்த ஞான்றும் கலக்காஞான்றும் இரண்டென்பதற்கு முரணென்னை? இன்றுகலின், அத்துவிதமென்பது அடாதென்பதாயிற்றென்க.

ஷ இரண்டாவது கவியில் விளக்கொளியில் வியாபித்த எண்ணெயானது அவ்விளக்கொளிக்குத் தான் உணவாகிய பின்னர், எண்ணெயென்பது அணுவணுப் புகைவடிவாயெழுச்சியுற்றுச் சூனியமாகிப் போகுமன்றே? அதுபோல், சிவத்திலொடுங்கிய ஆன்மாவானது அச்சிவத்தில் வியாபித்துப் பின்னர் அதற்குத் தான் உணவாகிய ஞான்று, ஆன்மாவென்பது உண்டெனப்படுமோ? படாதாகையால், இவ்வான்மா அநித்திய விலக்கண மேற்பதுமன்றி அனுதி நித்திய மெனக் கூறியிருப்பதும் பொய்ப்பட்டுப் போகின்றதென்க. அன்றியும், சிவத்தோடு ஏகமாதற் கியைந்த ஆன்மப் பொருளானது தான் அனுதியாயுள்ள பாசத்தை நோக்குங்கால் சத்தெனவும், பதியை நோக்குங்கால் அசத்தெனவு மாகின்றது. இவ்வான்மா பாசநோக்கிற்சத்தாயிருக்குங்காறும் அசத்தெனப் படாமலும், பதிநோக்கில் அசத்தாயிருக்குங்காறும் சத்தெனப்படாமலு மாகின்றதாயின், இதற்கு இவ்விரண்டுள் எதுவா யிருக்கு மிருப்பு மாறுத நிலையெனப்படும்? பதிபின்கண் அசத்தாயிருக்குமிருப்பே நிலையெனப்படுமெனின், மூன்ஞான்றுபாசத்துள் சத்தாயிருந்த இருப்பு நிலையாயிற்றே? பின்ஞான்று பதியுள் அசத்தாயிருக்கு மிருப்பு நிலையெனப்

பட? அஞ்தியாயுள்ள பாசவசமே நிலையாவுழி, இடை ஞான்று வாய்க்கும் அருள்வசமோ நிலைத்திருக்கும்? அன்றியும், ஆன்மா சதசத்துப் பொருளாயின், இவ்விரண்டு எதிர் மறை நிலைமையும் எங்ஙனம் அபேதமாயிருக்கும்? சத்துள்ள ஞான்று அசத்தும் அசத்துள்ள ஞான்று சத்துமின்றி அன்னியோன்னியாபாவ மாகின்றன. ஆகவே, ஆன்மாவென்பத்திற்குப் பொருளெங்கே? ஓர் பொருள் சத்தாயும் அசத்தாயுமிருப்பதுண்டோ? இராதே! ஓர்முதல் ஓரவசரத்தில் சத்தைப்போலும் மற்றோர் அவசரத்தில் அசத்தைப்போலுமிருப்பதுதான் முறையெனப்படும். எங்ஙனமெனின், அனுபவத்தை நோக்கச் சத்தாயும் ஆராய்ச்சியை நோக்க அசத்தாயு மிருப்பது. அங்ஙன மிருப்பது அநிர்வசனீயமென்பரறிஞர். அஃது யாதெனின், கயிற்றரவு கானல்நீர் கனாக்காட்சி போன்ற, அசத்தும் புறத்தும் விடாது காணப்பட்டுக் கொண்டிருக்கும் நாமரூபங்களாமென்க.

அவற்றுள், ஒன்றை யூகிக்குதும். ஆடையானது உடுத்தல் முதலிய அனுபவத்தை நோக்குழி உளதாயும், அதனை யாராய்ந்து நூற்பொருளை நோக்குழி இலதாயும் முடிகின்றது. இங்ஙனமே சர்வமும் ஆகின்றன. ஆன்மாவென்பதுஇவற்றைப்போலாயின், அநிர்வசனீயமாகுமே! அன்றியும், ஆன்மா சதசத்துப் பொருளாயின், சத்தும் அசத்தும் சேர்ந்திருக்கும் சேர்க்கையாம். அச்சேர்க்கை விகாரமெனப்படும். அவ்விகாரம் ஒன்றன்கூட்ட விகாரமும் திரிபிணக்க விகாரமுமன்று, பலவினீட்ட விகாரமாகின்றது. ஆகவே, அது தோற்றல்மாத்திரமும் சொல்மாத்திரமுமா? அல்லவே! ஏனெனின், ஓர் முதலன்றுகலினென்க. இங்ஙனமிருக்க, முன்ஞான்று திருவருளானது தத்துவங்களை யெல்லாம் ஈது ஈதென அறிவித்தவாறு இவ்வான்மா அத்தத்துவங்களுள் ஒவ்வொன்றை

யும் தனதுருவ மன்றெனச் செல்லுழி, இங்கே அன்றென்ப தற்கு எதிர்மறை யென்பது எதுவெனப்படும்? ஆம் என்ப தன்றே? அவ்வாமென்பதற் கியைந்திருப்பதியாது? மேலி ருந்து இவ்வான்மாவை இழுத்துச் சிவத்தோடு கலக்கச் செய் யும் திருவருட் பிரகாசமெனின், ஷெ தத்துவங்களைக் கீழ் ந்து செல்வது எது? ஆன்மாவன்றே? அவ்வான்மா நா னல்ல நானல்ல வென்றன்றே செல்வது? நான் அல்லவெனச் செல்லும் ஈற்றில் நான் ஆமெனப்படுதற் கியையவேண்டு மன்றே? இத்தத்துவங்களை நானல்ல நானல்ல வென்று ஏகாது திருவருளல்ல திருவருளல்லவென்று ஏகியிருக்கின் ஈற்றில் நானும் நானுமென்பதற் கியையாது திருவருள் ஆம் திருவருள் ஆம் என்பதற் கியையும். அங்ஙனமின்றி, இவற்றை நானல்ல நானல்ல வென்றேகுவதால், ஈற்றில் நானும் நானு மெனப் பொருள்படுதற்கு முரணெங்ஙனே?

ஆராய்ச்சியில் தத்துவங்கள் நானல்லவென்பதனால் அந் தத்தில் விளங்கிய அச்சிற்பிரகாசம் நானென்பதாகின்றதே! அன்றியும், ஷெ தத்துவக் குழாங்களை நீ அன்று நீ அன்றெ னச் சென்றுலன்றே ஈற்றில் நீ ஆம் நீ ஆமென்பதற்கு அத் திருவருள் இயையும். அங்ஙனமில்லையே! தத்துவக்குழாங்களை நானன்று நானன்றென நியதி கூவுதியாதுக்கு? நானென்ப தற்கு உள்ளீடா யிருக்கும் திருவருளை ஆமெனக்கண் டுணர் தற்கெனின், நானென்பதல்லாததை நான் அன்றெனக் கழிந் தழி ஈற்றில் நானென்பதற்கு எப்பொருள் இலட்சியமாயி ற்று? வெறும் சொல்மாத்திரமா யிருக்கும் பொருளா யாகி ன்றதன்றே? சொல்மாத்திரப் பொருளன்றெனின், கற்பனை களாகிய கயிற்றரவு கானல்நீர் முதலியவைகள் அனர்த்தமாக இருந்தும் தோற்றுகின்றதாகலின், ஷெ திருவருளைப்போல் நானென்பது இருப்பா யிருக்கின்றமையால் ஏன் தோன்று

மற்போகும்? எனக்கு நான் தோன்றுதுழி, அயலாகிய திரு வரு ளிலட்சியத்தை ஏற்கவேண்டுவ தென்ன? என்னை நான் கண்டன்றே அங்ஙனம் கண்ட என்னைக்கொண்டு யான் மேலே யிருக்கின்றதைக் காணவேண்டும்? முன்ஞான்று என்னை நான் காணுது மேலேயிருக்கின்றதைக் காணவேண்டு மென்பது மிக்க அறியாமை யென்றே லென்னை? மேலே யிருக்கும் அயல் இலட்சியம் வேண்டுவதின்றெனக் கூறின், இதுகாறும் அயலாகிய நாம ரூப இலட்சியத்தை என் ஏற்க வேண்டுவதெனின், அறியாமையினால் அங்ஙனம் ஏற்றமை யினலன்றே இஞ்ஞான்று விவேகத்தால் நானன்றெனக் களைந்து செல்லவேண்டுவ தாயிற்று.

ஆகவே, பின்ஞான்று அயலே நானென மயங்கிய நானென்பதியார்? நானென்பதியார்? எனப் பன்ஞான்றும் பழகிப் பழகி இலட்சியப்படக் கண்டுணர வேண்டுமன்றே? அங்ஙனம் நானென்பதைக் கண்டுதெளியாது, ஒன்றை நானன்றெனக் களைந்து மற்றொன்றை நீ ஆமெனக் காண்கிறதற்கா? அல்லவே? நானன்று நானன்றென அவ்வப் பாவத்தை விட்டுச் செல்வது எத்துணைக் கட்டமெனப்படும்? இத்துணைக் கட்டமுற்றுச் சென்றதனல் ஈற்றில் தன்னை விட்டு விட்டு அருளென்றும் பரையென்றும் ஆனந்தமென்றும் அதீத மென்றும் மோசம்போய் விடலாமோ? இம்மோசம் ஒருவன் குளிக்கபோய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோ லன்றே இருக்கின்றது? தன்னுற் களையப்படும் தத்துவக் குழாங்கள் தன்னையன்றி இன்றெனத் தெளிந்து செல்லின், ஈற்றில் தன்னுற் பற்றப்படும் அருளென்பது தன்னையன்றி யுண்டெனப்படுமோ? முன்ஞான்று தத்துவக் குழாங்களையும், தன்னையும் உண்டென ஏமாந்து விட்டதனலன்றே, பின்ஞான்று ஈற்றில் விளங்கிய தன்னை அயலென நன்கு ஏமாந்

து மோசம்போய்விட நேர்ந்தது ? தன்னை உழைப்பின்றிய மூடதிசைக்கண்ணும் அவ்வுழைப்பு முதிர்ந்த விவேகதிசைக் கண்ணும் ஏமாந்துவிட்ட கொடுமையிலுன்றே இன்னும் நன்கு ஏமாந்து மோசம்போய் விடுதற்குக் காரணமாகத் தன்னை வாச்சியார்த்த இலட்சியார்த்தமாய் விளக்கிவைத்த தற்கு மிக்க ஆபத்தமாயிருக்கின்ற அனுதியாகிய வேதமாதாவை, விபசாரி யென்றும் அவிசாரி யென்றும் மயக்கியென்றும் மோகியென்றும் பிரேதமென்றும் பசுவென்றும் வறுமை யென்றும் இவ்வாறே அனேகமாக வைதுகொண்டு வருகிற தற்கிடனுயிற்று. அன்றியும், தன்னுல் தானன்றெனக் கூ ளியப்படும் அயலனேத்தையும்,

தோநபசாரம்.

"நாமா யிருந்தோமு நாமேநா மல்லவாப்
போமாறு போகும் பொருளுநாம்—யாமத்துத்
தானே யுறங்கிச் சகத்துருவாய்த் தோற்றிவிழித்
தானே யவன்போலத் தான்."

என்றருளியபடி காரணகாரிய முதலிய அபேதவாதம் ஐந்தா லும் ஆராய்வுழிக் காரியப்பொருளாய் முடிகின்றதன்றே ? முடியவே, இக்காரியங்களுக்கு உபாதான காரணம் யாதாய் முடிகின்றது ? ஆராய்ந்து நின்ற நானென்பதன்றே ! அங் ஙனமாயின், ஆராயப்பட்ட அனேத்தும் எதனது காரியமா கின்றன? ஆராய்ந்துநின்ற தனது காரியங்களன்றே ? தனது காரியங்கள் தன்னேத்தவிர உண்டா ? இன்றெனின், தான் மாத்திரமன்றே இருப்பா யிருக்கின்றது ? இருக்கவே, ஷை ஆராய்ச்சி முடிவில், பூதவிருளைக் கெடுத்தெழுகின்ற அருண ஹுதயம்போல், இவ்வாணவாதி அஞ்ஞானவிருளைக் கெடுத் தெழும் ஒப்பற்ற சொப்பிரகாசம் யாதெனப்படும் ? தற்பிர காச மெனப்படுமன்றே ? அதனுலெழுகின்ற ஆனந்தம்

என்ன ஆனந்தமெனப்படும்? தானந்தமெனப்படுமன்றே? ஆங்கு நானென்றிலங்கும் போதமானது என்னபோத மெனப்படும்? தற்போத மெனப்படுமன்றே? ஆங்கு இதராகார மென்பது கிஞ்சித்துமின்றி யிருக்கின்றமையின் (அதாவது விடயர்கார மெனப்படுவது) அஃது என்ன ஆகாரமெனப்படும்? ததாகார மெனப்படுமன்றே? (அதாவது தத்பாவ மெனப்படுவது) இத்ததாகாரம் ஞானானுபவமாகலின், என்ன ஞான மெனப்படும்? தத்ஞான மெனப்படுமன்றே? அத் தத்ஞானத்தையன்றி அயலென்பது தோன்றுமோ? ஒவ்வோ ஞான்று தோன்றிலும் பொருளுண்டா? இன்றுகலின், சர்வமும் என்னமய மெனப்படும்? தன்மயமெனப் பொருள்படுமன்றே? ஒன்றையொன்றுக உணர்தலும் ஒன்று ஒன்றுகத் தோன்றுதலும் உள்ளதை உள்ளதாக உணர்தலும் உள்ளது உள்ளதாகத் தோன்றுதலுமாகிய பிரவிர்த்தி நிவிர்த்தியென்னும் இப்புடை பெயர்ச்சிகள் எதன்பாலது? தன்பாலதாகலின், தற்செய லெனப்படுமன்றே? இங்ஙனம் யாவும் தானுயிருக்கின்றதால் ஷை தற்காரிய மெனவும், தற்பிரகாச மெனவும், தானந்த மெனவும், தற்போத மெனவும், ததாகார மெனவும், தத்ஞான மெனவும், தன்மய மெனவும், தற்செய லெனவுமாகிய இச்சிலேகள்விளங்க, ஷிவே தமாதா உணர்த்தியிருக்கின்றது. இங்ஙனமிருக்கு மிலக்கணங்கள் தன்னுடைய தென் றுழைத்துத் தெளிதற் கியையாததால், பதின்மர் கதைக்கிணங்க முழுதும் தன்னை விட்டுவிட்டுத் தற்காரியத்தை மாயாகாரியமெனவும், தற்பிரகாசத்தை அருட்பிரகாச மெனவும், தானந்தத்தை அருளானந்த மெனவும், தற்போதத்தை அருட்போதமெனவும், ததாகாரத்தை அருளாகாரமெனவும், தத்ஞானத்தை அருண்ஞானமெனவும், தன்மயத்தை அருண்மயமெனவும், தற்செயலை அருட்செய லெனவும் முழுதும் முன்னிலை படர்க்கைப் பராக்காயிற்று.

இத்துணைப் பராக்கும் தன்னைவிட்டு ஏமாந்து விடுதற்காயிற்று. இதனால் அறிஞர்கள்,

சொருபசாரம்.

"ஏது சிவனந்தமோ வேதுசிவ காரமோ
வேது சிவன்செயலென் றெண்ணுதே—யேதும்
பிரிவாகா வொன்றுகாப் பேதமா காத
வறிவா றிறைவே யது."

எனக் கூறியிருக்கின்றனர்.

இங்ஙனம் கூறிய வேதமாதாவைக் கிஞ்சித்தும் முகராது, இந்துக்களே முழுதும் அஞ்ஞானிகளென்றும் தாம் முழுதும் ஞானிகளென்றும் மயங்கிய கிறிஸ்தவர்கள் போலும், இவ்விந்துக்களது ஆசாரங்களுக்கு நேர் எதிர்மறையாக மயங்கியிருக்கும் மகமதியர் போலும், காலதேசவஸ்து பரிச்சேதமின்றி விளங்கும் அத்வைத பரமஞானிகளே மாயாவாதிகளெனவும், முத்தியிலும் அம்மாயையை அனுபவித்துக்கொண்டிருக்கின்ற தாம் அருண்ஞான வாதிகளெனவும், இன்னும் பிறவுமாகத்தூடித்துவருவது என்னகொடுமை யெனப்படும்? மாயாவாதிகளென்பவர்கள்,

சொருபசாரம்.

"சிற்சொருபந் தானே செகசொருப மானவெலாந்
தற்சொருப சாரமாய்ச் சாற்றவே—பொற்சொருப
மச்சுருவாம் போல வதுவதுவாத் தோற்றுமொரு
சொற்சொருபந் தானே துணை." என்றும்,

"பூதாதி யைந்தும் பொறிபுலன்க ளெல்லாஞ்சித்
தேதாதி யந்தமவை யெல்லாஞ்சித்—தோதரிய
கற்பனையுஞ் சித்தனைத்துங் காண்பானுங் காட்சியுஞ்சித்
தற்பமும்வே றில்லாமை யால்." என்றும்,

ஞானவாசிட்டம்.

"பொருகடலிற் றிரைமுதலாப் பிறந்த வெல்லாம்
புனலாகி விளங்காமற் புழுதி யாமோ
வொருபொருளாம் பிரமமாத் திரமே யல்லா
லுபயமெனுங் கற்பிதப்பே சொன்று மில்லை
யெரியிடத்திற் சூடுமாத் திரமே யல்லா
லிரண்டுண்டோ வவ்வகைபோ லென்று மொன்றுஞ்
சரியைகிரி யாயோக பதத்தின் முற்றிச்
சாதனங்க ணிறைந்தவர்க்கே சாற்றல் வேண்டும்."

என்த் தெளிந்தவர்கள்தானு? அல்லவே! அன்றியும், இங்ஙனம் தெளிந்திலங்கும் தானுனுபவிகள் மாயாவாதிகளன்றென்று அனந்த உபநிஷத்துக்களும் கீதைகளும் பராணேதிகாசமுதலிய சதுர்த்தச வித்தைகளும் கோஷ்டித்திருப்பதைப் பலரும் கண்டுபிடித்து உணர்தற்கு மிக்க அரிதா யிருக்கின்றதால், அப்பலரும் இம்முடிவாகிய சித்தாந்தத்தை நகருகிறதற்கும் சிலர் ஷை பராக்காகிய கள்ள நெறிகளிற் சென்று தடுக்காகப் பேசுகிறதை இனிப் பேசாவண்ணம் அநேகர் தமது மிக்க கருணையினல் ஷை சதுர்த்தச வித்தைகளிற் பூரித்திருக்கின்ற தானுனுபவ ரசத்தை நவநீதமாகத் திரட்டி அநேக அணுபந்தமாக அரிய நூற்களி அனேக யுத்தி யணுபவங்களோடுவிளக்கியிருக்கின்றனர். இவற்றையேனும் உணரவேண்டுமன்றே? இங்ஙன முணராது பிடிவாதமும் அபிமானமு மூற்றிருக்கின், ஆரம்பத்தில் சர்வமும் தற்காரியமெனப்படுமோ? படாவழி, ஏகீய தற்பிரகாசம் தானுனந்த முதலிய அணுபவங்கள் எங்ஙனம் வாய்க்கும்? வாய்க்காதாகலின், அறிஞர்கள் வேதபாகியமான நெறிகளனைத்தும் சூழ்க்குவழிகளெனப் பலரும் நன்கு கருதுமாறு,

தத்துவராயர் அடங்கன்முறை.

கூழ்வார்ப்பு.

"ஞானம்போலச் சிலசொல்லி
நாடற்கரிய முத்தியினுங்
தானுஞ்சிவமும் பாசமுமாஞ்
சைவப்பேய்க்கும் வாரீரே." என்றும்,

"வேதாகமங்கள் சொன்னபொருண்
மெய்யேயறிவார் போன்றிருந்து
பேதாபேதஞ் சாதிக்கும்
பெரும்பேய்தனக்கும் வாரீரே." என்றும்,

"படித்துமறைகள் பொருள்படித்துப்
பயனினெட்டிப் பாராமீத
வடித்தகிளிபோல் வருமாயா
வாதப்பேய்க்கும் வாரீரே." என்றும்,

சிவஞானவள்ளார்.

"ஒன்ரு யுலகனைத்து மாஞரென் றப்பமுனி
பொன்ரு மொழியாற் புகன்றிருக்கக்—குன்ரு த
முத்தியினு மும்முதலு முண்டென் றுரைத்தலெவன்
பித்தமுறுஞ் சைவாநீ பேசு." என்றும்,

"ஓசை யொலியெல்லா மாஞய்நீ யென்றபினர்ப்
பேச வீரண்டுண்டோ பேய்ச்சைவா—வாசையெல்லா
மற்றவிட முத்தி நிலையோ வஃதெல்லா
முற்றவிட முத்திநிலை யோ." என்றும்,

ரிபுகீதை மகாவாக்கியம்.

"அற்பமுமே யறியாத ஜலமா மூட
ரத்துவித மேதறியார் வெறும்பொய் யான
கற்பிதமாந் துவிதமதே யுண்மை யென்று
கழறுவரம் மாமூட ருடனே யென்று

மற்பமுமே பேசவொணு தன்னே ருர்கோ
ரணுவேணு மளிக்கவொணு தவரைக் கண்டாற்
சொற்பமுமே வணங்கவொணு தவரெந் நாளுஞ்
சுத்தமகா மூடரென்றே யுரைத்தல் வேண்டும்." என்றும்,

இங்ஙனம் அனேகரும் நன்கு உறுத்தியிருக்கின்றார்கள். இவற்றால் மாயாவாத மென்பது யாதெனப் படுகின்றது? பொருளல்லாததைப பொருளாக உணரும் அனுபவமன்றே? அதாவது,

குறள்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் அனுபவத்துக்கு எதிர்மறையா யிருக்கின்றது. அவ்வனுபவம்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொரு
ளப்படி காண்ப தறிவு."

என்னும் தகையது. இங்ஙனம் கூறிய அனுபவத்தையன்றி மாயாவாத மென்பது வேறிருக்கின்றதா? இல்லையே! அன்றியும்,

உத்தமவாதநூல்.

"கிலேவழி போகிற் கிடைக்குமுள் கள்ளர்
களேந்து பெருவழி காணி—லுளேவுறுமோ
வில்லேயுண் டென்னன்மி னெல்லமவசரமே
யல்லவிது வத்துகிலே யாம்,"

என்று கூறியிருப்பது யாதுக்கு? முன்னிலே படர்க்கையாகிற பராக்கிற் செல்லாதிருத்தற்கன்றே? முன்னிலே படர்க்கையாகச் செல்லவேண்டாவெனின், கர்மோபாசனை காண்டமிருப்பது யாதுக்கு? இதுகாறும் கூறிப்போந்த கிலே

மார்க்கப் போலியானுபவிகள் மீக்கூர்ந் திருக்கின்றமையால், இவர்களைக் களைதற்காக முன்ஞான்று சற்குருவெனத் தானு ணுபவிகளைப் பிறித்துக் கூறவந்ததென்க. அத்தானுணுப வமாவதிபாதெனின், சர்வம் என்கிற ஆரோபிதமிருப்பதால் நானென்கிற போதம் சர்வம் சர்வாதாரம சாவாதிட்டானம் சர்வசாட்சி என்னும் இவை முதலியவைகளாகத் தன்னை யனுபவித் தின்புறுதல். அங்ஙன மின்புறுதல் ஞானுணுபவ மென்பதாயிற்று. அவ்வாரோபிதம் இல்லாவுழி, அஞ்ஞான்று நானென்கிற போதம் எங்ஙன மிருகின்றது ? நிராதாரமாகி யும் நிரந்தரமாகியும் குணாதீதமாகியும் சுவானுபவாதீதமாகி யும் தானே தானுகியு மிருந்திலங்குகின்றதன்றே ? இங்ஙன மிருக்குமிருபே சை சற்குருவின் அனுபவமாமென்க.

ஞானுணுபவம் தானுணுப விரண்டனையுமுள்ள அனு பவிகளையடுத்த சாதகாதிகாரி, இவர்கள் திருச்சந்நிதானத்திற் கேட்டுக்கொள்ளும விண்ணபபமாவ தியாதெனின், ஐயனே! முன்ஞான்று கிரியாகாண்டத்திற் கட்டுண்டு, இத்தேகபோகங் களை யாமெனனதென்னும் அகங்கார மமகாரங்கள் கிஞ்சித்துங் குன்று தொழுகிவந்ததும், பின்ஞான்று உபாசனாகாண்டத் திற் கட்டுண்டு சை தேகபோக அகங்கார மமகாரங்கள் இறக் காது, அவை குன்றுமாறு செய்யவேண்டிய கருமமனைத் தும் ஈசுரார்ப்பணமாகமுடித்துவந்ததும் நானென்பதாகலின், அந்த நானெனப்படுவதியாது பொருளெனக் கண்டுகண டின் புறுகின்றது ? அங்ஙன் அவத்தைத் திரயங்களுள் சாக்கிரா வத்தை நானு ? அன்றிச் சொப்பனுவத்தை நானு ? அன்றி சுழுத்தியவத்தை நானு ? சாகரகாவதையுள்ள நானென் பது பஞ்சபூதாம்ச இத்தூல சரீரமும், சொபபனுவத்தை நானென்பது மனோவிகற்பமாகிற சூகுகும சரீரமும், சுழுத்தி அவத்தை நானெனபது அந்தகாரமாகிய சூனிய சரீரமும்

ஆகின்றன. ஆகவே, நானென்பதற்குப் பொருள் யாதெனத் தெளிவுற்றிருக்கின்றது ? நான் கல்விகேள்விகளில் எத்துணை வல்லவனாயிருந்தும், தேவரீர்போல்வார் நீயாரெனவும் இது காறும் நீ யெய்தியது எதையெனவும் வினவில் அதற்கு நான் என்னவென் றுரைப்பேன்? அகத்தும் புறத்தும் ஆராய்வுழி அனைத்தும் கற்பனைகளாக இருக்கின்றனவே ! இதுகாறும் வ்யர்தியது யாதுமில்லையே ! என்னே நான் கண்டவிடத்தன் றே யான் எய்தியது இஃதென நன்கு விளங்கும் ?

உபாதித்திரயங்களையன்றி நானென்பதற்குப் பொருள் இனையதென்பு பரோட்சமாகவேனும் இதுகாறும் கிஞ்சித்தும் முகாந்தரில்லையே ! நான் நானென்று விடாது குளறிக் கொண் டிருக்கின்றேனே! இக்குளறல் சற்றும் வெட்கமில்லாமையாயினும், இதற்குமேல் ஒவ்வொரு கற்பனையிலும் தலை பிட்டுக்கொண்டு நான் இன்னான் நான் இன்னனெனக் குளறிக்கொண் டிருத்தல் எத்துணை வெட்கமில்லாமையென்பன? இத்துணை வெட்கமில்லாமையை உள்ளத்திற் சற்றும் கருதாது ஏமாப்புற்றிருத்தல் என்னவெனப்படுகின்றது ? அடியேன்பால் கல்வி கேள்விக ளிருத்தலில் அடியேன் போல்வாரால் வல்லவனெனவும், நல்லவனெனவும் மதிப்புற்று மதிப்புற்று முற்றுங் கெடுதியுற்றேனே யன்றி, அறிஞர்களால் கிஞ்சித்து மதிப்புற்றேன் அல்லவே ! அவர்களுக்கு அடியேன் முற்றும் இழிந்தோனு யிருப்பதுபோலும், அடியேனுக்குப் பிறர் இழிந்தோரா யிருப்பதுபோலும், அடியேன் முற்றும் இழிந்தோனு யிருக்கினறது அடியேனுக்கே நன்கு பட்டாலன்றே அதுமுதல் அழுக்காறு புறங்கூறல் முதலிய கெடுதிகள் சிறுகச் சிறுகக் குன்றி, விடயக் கைப்புந்தோன்றி, அகமுகநெறிக்கட் செல்லுதற் கியையும்? ஒவ்வொரு கற்பனையையும் பொருளாகவே மயங்கி மயங்கி அவ்வவற்றின்கண்

ணும் நான் நானென முந்தும் இவ்வகந்தையானது எத்திசைக் கண்ணும் தலைகாட்டா தொழியுமாறு அடியேனைத் திருத்த வேண்டுவது எவ்வாறே அவ்வாறு திருத்தல் செய்து, மகா வாக்கியமென்பது யாதோ அதனை அனுக்கிரகித்து, அடியே னைத் தெளிவிக்கவேண்டுமென வினவிப்பணிகின்றதாமென்க. அங்ஙனம் பணிந்துநிற்கும் மாணாக்கனுக்கு அம்மகாவாக்கிய பேதங்களைக் கூறுதல்,

இஃது மகாவாக்கிய நிரூபணம்.

இம்மகாவாக்கியானுபவம் யாதெனின், விதிவாக்கியம் நிடேதவாக்கியம் அவாந்தரவாக்கியம் ஆப்தவாக்கியம் என நான்காம். இந்நான்கும் வாக்கியமாயினும், இறுதியிற் கூறிய ஆப்தவாக்கியமே மகாவாக்கிய மெனப்படுவதாம். அஃது ஞாஞ்ஞானரகித அகம்பொருளென்னும் சுத்த சைதன்னியம் உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றோன்ற விளக்குவ தால் மகாவாக்கிய மெனப்பட்டது. இஃதே சித்தார்த்த போ தக வாக்கியமெனவும் பொருள்பட் டிருக்கின்ற தென்க. சித் தார்த்த போதகமென்பா னேனெனின், சத்தாசாமானிய மென்னும் உறுதிப்பொரு ளாகலினென்க. உறுதிப்பொரு ளென்பது கூடஸ்த பிரமைக்கிய மெனற்பாலது. ஞானகாண் டத்தில், இவ்வாக்கியப் பொருளொன்றே நான்கு வேதங்களி னிறுதிக்கண் நான்கு விதமாக வந்திலங்குகின்றது. எவ்வெவ் வேதத்துக் கெவ்வெவ் வாக்கியம் நிகழுவதெனின், இருக்கு வேத ஐத்திரிய உபநிஷத்தில் பிரக்ஞானம் பிரமமெனவும், எசுர்வேத தைத்திரிய உபநிஷத்தில் அகம்பிரமாஸ்மி யென வும், சாமவேத சாந்தோக்கிய உபநிஷத்தில் தத்தொமசி யெ னவும், அதர்வணவேத மாண்டூக்கிய உபநிஷத்தில் அயமான் மாப்பிரமமெனவு மூண்டாயினவென்க. இவ்வரிய நான்கு

வாக்கியங்களுள் சிவபதம் நான்கும் சிவபதம் ஐந்தும் சொருப பதம் இரண்டும் ஆகிய பதினெரு பதங்க ளிருக்கின்றன

அவற்றுள், சிவபதம் நான்கும், முதல் வாக்கியத்தின் கடைக்கண் பிரமபதமொன்றும், இரண்டாவது வாக்கியத்தின் இடைக்கண் பிரமபதமொன்றும், மூன்றாவது வாக்கியத்தின் முதற்கண் பிரமபதமொன்றும், நான்காவது வாக்கியத்தின் கடைக்கண் பிரமபதமொன்றுமாக இருக்கின்றன. சிவபதம் ஐந்தும், முதல் வாக்கியத்தின் முதற்கண் பிரக்ஞான பதமொன்றும், இரண்டாவது வாக்கியத்தின முதற்கண் அகம் பதமொன்றும், மூன்றாவது வாக்கியத்தின் இடைக்கண் தொம்பதமொன்றும், நான்காவது வாக்கியத்தின் முதற்கண் இடைக்கண் அயம் ஆன்மா வென்னும் பதமிரண்டுமாக இருக்கின்றன.

சொருபபதம் இரண்டும், இரண்டாவது வாக்கியத்தின் கடைக்கண் அஸ்மிபதமொன்றும், மூன்றாவது வாக்கியத்தின் கடைக்கண் அசிபதமொன்றுமாக இருக்கின்றனவென்க. ஈண்டு கூடஸ்த பிரம ஐக்காணுபவத்தை விளக்குதற்கு இந்நான்கில் ஒன்றுபோதாதா? நான்கும் வேண்டுவதற்றுக்கெனின், மூன்னர் ஆரோபநாட்டமகன்று அதிட்டான நாட்டம் வாய்த்தற்கும், பின்னர் அவ்வதிட்டானஞானுபவமும் தன்மையானுபவமாய் முடிதற்கும், அதன்பின்னர் இவ்விரண்டானுபவமும் பரிபாகிகளுக்கு வாய்த்தற்கும், ஈற்றில் கிருதகிருத்தியானுபவமாதற்கும், இந்நான்கு வாக்கியங்களும் வேண்டிற்றென்க. அவ்வாக்கியங்களின் இலக்கணமாவன-பிரக்ஞானம் பிரமமென்கிற முதல் வாக்கியம் இலட்சணை வாக்கியமும், அகம் பிரமாஸ்மியென்கிற இரண்டாம் வாக்கியமும் அனுபவ வாக்கியமும், தத்தொமசி யென்கிற மூன்றும் வாக்கியம் உபதேச

வாக்கியமும், அயமான்மாப் பிரமமென்கிற நான்காம் வாக்கியம் சாட்சாத்கார வாக்கியமுமா யிருக்கின்றதென்க.

இ நானல்லவற்றைப் பொருளென்றுணரு மருளானுபவமொழிந்து, "எப்பொருளெத்தன்மைத் தாயினும்பொருள்" மெய்ப்பொருளானுபவம் வாய்க்குமாறு செய்வித்தற்கு வந்தது முதலாவது லட்சணவாக்கியமும், இவ்வனுபவம் முன்னிலையுற்றுத் துணைதமாக இருத்தலே மறுத்துத் தன்மைபானுபவம் வாய்க்குமாறு செய்வித்தற்கு வந்தது இரண்டாவது அனுபவ வாக்கியமும், பரிபாகிகள் இவ்விரண்டாம் வாக்யானுபவ அகம்பொருளையன்றி முதல் வாக்கியானுபவப் பிரக்ஞானப்பொருள் இன்றெனுமனுபவம் வாய்ந்து நிலைத்திருத்தற்கு முன்ஞான்றே, முதல் வாக்கியானுபவப் பொருளாகிய பிரக்ஞானத்தை யன்றி இரண்டாவது வாக்கியானுபவப் பொருளாகிய அகமென்ப தின்றெனவும், பின்னர் இரண்டாவது வாக்கியானுபவப் பொருளாகிய அகமென்பதையன்றி முதல் வாக்கியானுபவப் பொருளாகிய பிரக்ஞான மின்றெனவும் அனுபூதிவாய்த்தற்கு வந்தது மூன்றாவது உபதேசவாக்கியமும், இம்முதல் வாக்கியானுபவமும் இரண்டாம் வாக்கியானுபவமும் பேதியாது அபேதமாய் நிலைத்துத் தானே தானுகுமாறு செய்வித்தற்கு வந்தது நான்காவது சாட்சாத்கார வாக்கியமுமாமென்க. அன்றியும், (முதலாவது) இலட்சணவாக்கியானுபவமாவது - அகத்தும் புறத்தும் காணப்படுவனவாகிய சிவேசுர சகத்தாரோபிதங்கள், தமக்கியையாதனவாகிய சச்சிதானந்த இலக்கணங்கள் இயைந்தனவாகத் தோன்றுவதுபோல், திருக்குவாகிய ஞானமானது - தனக்கியைந்தனவாகிய சச்சிதானந்த லிலக்கணங்கள் இயையாதனபோலிருக்கினும் இயற்கையில் அச்சச்சிதானந்த சொருபமுற் றிருப்பதால், அச்சொருபமாகவே கடாதிகள்

பிரத்தியட்சப்படுவதுபோல், இருவகை நிட்டையிலும் அபரோட்சமாகின்றது. இதனால் அறிவே ஆனந்தமாயிற்றென்க.

மூன்றாவது

அனுபவ வாக்கியமென்பது - அவ்விருவகை நிட்டையிலும் சச்சிதானந்தசொரூபமாக விளங்கியதியாது? அகமென்பதன்றே! அதாவது - நானென்னும் பொருளது. எங்ஙனமெனின், பகிர்முகத்ததாகிய மருள்திசைக்கண், சீவேசுர சகத்தாக விளங்குவது நானென்பதன்றுயின், அந்தர் முகத்ததாகிய கூடி இருவகை நிட்டைக்கண்ணும் சச்சிதானந்த சொரூபமாக விளங்குவது நானென்பதன்றெனப்படும். விஸ்மரணையாக விளங்குவது நானென்பதாகலின், தஸ்மரணையாக விளங்குவதியாதெனப்படும்? அஃதும் நானெனப் படுமன்றே? நானென்பது இங்ஙனமாயும் அங்ஙனமாயும் விளங்குவதாகலின், நானென்பது பிரமமாயிற்றென்க. இதனால் நானென்னும் போதமே ஆனந்தமாயிற்று.

மூன்றாவது

உபதேசவாக்கிய மென்பது கூடி இரண்டாவது வாக்கியானுபவம் திரிபுடியிறந்து அதீதமாகிய அஃதானென்பதை,

ஞானவாசிட்டம்.

"ஆன்மாவை யறிந்தலேவற் றிருந்த வென்னே
யயன்பார்த்து நாமேன்ன றறிவை மாற்றி
யூன்மரையப் பின்பொழித்தோ முலகெ லாஞ்சின்
னுபதேசம் பெற்றுய்ய வுபாயஞ் செய்தோ
மேன்மாயும் வினைநிறைந்த சம்புத் தீவின்
மேவியபா ரதவருடம் விரைவின் மேவித்
தான்மாளாக் கிரியையர்க்குக் கிரியை சாற்றிச்
சரதனமுன் னோர்க்குணர்வைச் சாற்று கென்றான்."

என்று கூறியவாறு, நானலதை நானெனவும் எனதலதை யெனதெனவும் மயங்கிய கர்மோபாசனை சற்கிருத்தியங்களா கிய பரம்பரா சாதனங்களை வழுவி யொழுகுபவர்க்கும், வழு வாதொழுகுபவர்க்கு முணர்த்தாமல், சாதன சதுட்டயத் தைதப் பெற்ற அதிதீவிரதர பக்குவர்க்கே எடுத்துரைக்கவே ண்டுவது அவசியமாகலின், ஷை அனுபவத்தைச் சுத்தாசுத்த இலட்சியார்த்த வாச்சியார்த்த முதலிய பேதங்களை யெல் லா முள்ளடக்கி, முப்பதமாக முடித்து நன்குணர்த்துவதா மென்க. இதனால் அதுவே நான் நானே அதுவென்னும் ஐக் கானுபவ மாயிற்றென்க.

நான்காவது

சாட்சாத்கார வாக்கியானுபவமென்பது - மூன்ஞான்று சுயம்பிரகாசமாய் விளங்கிய அகம்பொருளானுபவம் நீலித்த பின்னர்க் காலதேசவஸ்து பரிச்சேதமின்றித் தானே தானுக இருத்தலாமென்க.

ஷை முதல் வாக்கியமாகிய பிரக்ஞானம் பிரமமென்ப தற் கர்த்த மென்னையெனின், சடவடிவாகநின்று காணப்படு வனவாகிய விடயங்களும், இவ்விடயங்களைப் பொதுவா யுண ரும் ஞானகளுக்கு முதலாகிய பொறிகளும், இப்பொறிகளை யும் விடயங்களையும் இன்னதின்னதெனச் சுட்டியுணரும் ஞானகளுக்கு முதலாகிய அந்தக்கரணங்களும், இவ்வந்தக்கர ணங்திரிய விடயங்களை இன்னதின்னதெனச் சுட்டியுணரும் ஞானகளுக்கு முதலாகிய சிவனும், இச்சிவாந்தக்கரணேந்திரிய விடயங்களனைத்தையும் ஆரோபமாக ஒருங்கேயுணர்தற்கியை ந்த சாட்சிமாத்திரமாயும் ஆதாரமாயும் அதிட்டானேபாதா னமாயும் விளக்கவடிவாயு மிலங்குவது யாதோ அதுவே பிரக் ஞான மெனப்படுவதாம். இவற்றுள், இப்பிரக்ஞானம் போலி ஞான மன்றெனவும், ஏனைய சிவாந்தக்கரணேந்திரியங்கள்

உண்மைஞான மன்றெனவுமாயிற்று. ஆகவே, பிரமன் முதல் பிபீலிக மீறாக நிகழும் ஒவ்வோர் வகுப்பாயுள்ள இச்சீவாந்தக் கரணேந்திரியங்களையும் ஒவ்வோர் பிரக்ஞானமும் சாட்சி யா யறிந்துகொண் டிருக்கின்றமையால், அவ்வப் பிரக்ஞான மும் அவ்வவ் வகுப்பாகிய சீவாந்தக்கரணேந்திரியத்திற்குத் தனித்தனி சாட்சி சைதன்னியமா யிருத்தலின் பிரக்ஞான மென்ப தாயிற்றென்க.

ஷை அம்முதல் வாக்கியத்தில் இரண்டாவதுபதம் பிரம மென்பது, அது ஷை பிரமன் முதலியனவாகிய உபாதிகுணந் தொழில்களையும், அவ்வவற்றின் ஆகாரமாயிருந்து நிகழும் சீவாந்தக்கரணேந்திரியங்களையும் ஒருங்கே பிறித்துப் பார் க்கும் ஞான்று, அவ்வச் சீவாந்தக்கரணேந்திரியப் போலி ஞானங்களுக்குத் தனித்தனிச் சாட்சியாயிலங்கும் ஷை பிரக் ஞானம் பலவென்பதின்றி. ஏகமென்பதற் கியைந்து, சர்வ சாட்சி யெனப்படுமன்றே? இவற்றுள் பிரக்ஞான மென் பது பன்மைப் பொருள்களாயும், பிரமமென்பது ஒருமைப் பொருளாயு முடிகின்றன. முடியவே, இப்பன்மை யகன்ற ஒருமையாகிய சுயம்பிரகாசமே முதல் வாக்கியானுபவப் பொருளாமென்க.

இரண்டாம் வாக்கியத்தில் முதற்பதம் அகமென்பதற் குப் பொருள் ஷை தனித்தனி யவத்தாத்திரய விலட்சண சாட்சியாயுள்ள சுயம்பிரகாச சொரூப நானமென்க. அஃ தெங்ஙனமெனின், வியட்டி தேகேந்திரியாந்தக்கரண சிதா பாச விருத்திகள்! மருட்டிசைக்கண் நான் நானென்று நிகழு மவற்றை ஆராயின், ஒவ்வொன்றும் நானன்று நானன்றென அகன்றுழி யிருப்பது ஷை தனிச் சாட்சியாகிய சுயம்பிர காசமாகலின், அதுவன்றே எது நான் எது நானெனத் தேடி தற்குப் பொருள்? இத்திண்ணம் நோக்கி, அம்முதற்பதம்

அகமெனக் கூறியதென்க. இவ்வகமே ஷி வாக்கியத்தில் இரண்டாம் பதப்பொருள். பிரமமென்பது எங்ஙனமெனின், சர்வ உபாதிகுணந் தொழில்களாகிய சமட்டிக்கு ஷி தனித் தனிச் சாட்சிகளின் ஒருமையாகிய பெரும்போதமே உபாதானமாயும், ஏகமாயும், உள்ளும் புறமும் இடையும் பூரண சச்சிதானந்த சொரூபமாயு மிலங்குவதேயா மென்க. ஷி இரண்டாம் வாக்கியத்தில் மூன்றும் பதப்பொருள் அஸ்மி யென்பது எங்ஙனமெனின், முன்னர் வியட்டி பேதங்களாற் பலவாயும், பின்னர்ச் சமட்டியினல் ஏகமாயும் விளங்கியது. அகாரண அத்துவிதாகண்ட அஸ்திபாதிப்பிரிய ரசிதமாகிய தானே தானுகும் பொருளென்பதாமெனக:

மூன்ஞான்று தத்தொமசி வாக்கியமானது வாச்சியார்த்த லட்சியார்த்த முதலிய அனேக கூறுபாடுகள் அடங்கப் பட்டு வழங்கி வருகின்றதெனக் கூறிய தெங்ஙனமெனின், இஃது நான்கு வர்னமும மூன்று பதமும் மூன்று பதார்த்தமும் மூன்று லக்கணையுமாகிய இவ்வரிய பேதங்களே யெல்லா முட்கொண்டு நிகழுகின்றது. நான்கு வர்னங்களாவன— சத்தியம் ஞானம் அனந்தம் ஆனந்தமென்பவைகளாம். இவற்றுள், சத்தியமென்பது பரமெனவும், ஞானமென்பது சீவனெனவும், அனந்தமென்பது சராசர பேதங்களெனவும், ஆனந்தமென்பது சகலபுவன பேதங்களெனவுமாமென்க. மூன்று பதங்களாவன—தத்பதமெனவும் தொம்பதமென வும் அசிபதமெனவுமா மென்க. இவற்றுள், தத்பதமென் பது அதுவெனவும், தொம்பதமென்பது நீ யெனவும், அசி பதமென்பது ஆனையெனவுமா மென்க.

என்னவே, அதுவென்பது பிரமமெனவும், நீ யென்பது கூடஸ்தனெனவும், ஆனையென்பது ஐக்கியானுபவ மெனவு மாமென்க. மூன்று லக்கணையாவன—விட்டலக்கணை யென

வும் விடாதலக்கணை யெனவும் விட்டுவிடாத லக்கணை யெனவுமாமென்க. விட்டலக்கணையென்பது—சத்தித்தற்கு வினை முதல் குச்சுவி டன்றென அக்குச்சு வீட்டை விட்டு அவ்வீட்டில் ஓர் புருடனிருந்து சத்திக்கின்றான் என்றாற்போல், இச்சாஞான மெழுதற்கு வினைமுதல் உபாதிக ளன்றென இவ்வுபாதிகளை விட்டு, இவ்வுபாதிகடோறும் ஓர் உணர்வான் இருக்கின்றனெனக் கோடலென்க. விடாதலக்கணை யென்பது—ஒருவனுல் கறுப்பென்பதும் சிவப்பென்பதும் செல்கின்றதெனக் கேட்ட அக்கணமே, அக்கறுப்பு சிவப்பாகிய குணங்களைவிடாது அக்குணங்களுக்குக் குணியாகிய குதிரைக ளென்னும் உடலைவிடாது லட்சியிப்பதுபோல, ஷை உபாதிகள்தோறும் நான் நானென்னும் போதத்தைச் சத்தாதி குணங்கள் விடாமற் பற்றுதலாமென்க. விட்டுவிடாத லக்கணையென்பது—ஓர் புருடன் சிலஞான்று குடும்பியாயும் சிலஞான்று சந்நியாசியாயி மிருந்தா னென்புழி, அக்குடும்ப வேடமும் அக்காலமும் அத்தேசமும் அக்கிருத்தியமும் இச்சந்நியாச வேடமும் இக்காலமும் இத்தேசமும் இக்கிருத்தியமும் அவ்வோர் புருடனையன்றி இன்றென்பதாயினும், அவ்வேட முதலியனவாகிய நான்கு வகுப்பும் இவ்வேடமுதலியனவாகிய நான்கு வகுப்பும் ஒன்றிலொன்றில்லாமல், அக்குடும்பப் புருடனே இப்புருடனையும் இச்சந்நியாசப் புருடனே அப்புருடனையும் ஏகத்துவம் வந்துழி, இவ்வேகத்துவ புருடனையன்றி அக்குடும்பியும் அக்குடும்பியைச் சார்ந்தவர்களும் இச்சந்நியாசியும் இச்சந்நியாசியைச் சார்ந்தவைகளும் இன்றாகலின் விடாதலக்கணையும், இவைகளுள் ஒன்றேனும் அப்புருடன் அல்லனாகலின் விட்டலக்கணையுமாம். அது போல, ஷை குணங்கள் காரணமாக லட்சியிக்கப்பட்ட அப்போதமானது—பிரமன் முதலிய சீவ உபாதி குணந்தொழில்களுள் எதை யடைந்தது? யாதுக்கு மியைந்ததன்றெ

னின், அப்போதத்தை யன்றி யாதிருக்கின்றது? ஒன்றேனு மின்றெனின், யாவும் தான் அன்றென்பதனால் அவைகளைத் தான் விட்டதாயும், தன்னையன்றி அவைகளுள் ஒன்றேனு மின்றென்பதனால் அவைகளைத் தான் விடாததாயு மிருக்கின் றது. இங்ஙன மிருப்பதே விட்டுவிடாதலக்கணை யென்க.

ஷை தத் என்கிற முதற்பதம் அசுத்தமெனக் கூறியது வாச்சியார்த்தமும், சுத்தமெனக் கூறியது இலட்சியார்த்த முமாம். இவ்வாச்சியார்த்தத்திற்குப் பொருள்—சமட்டியில் விராட்டு இரணியகருப்பன் அந்தரியாமியாகிய மூன்று உருவ மாய் நிகழும் மாயாந்தக்கரணப் பிரதிபிம்ப ஈசுர சைதன் னியமும், ஷை லட்சியார்த்தத்திற்குப் பொருள்—ஷை விரா ட்டு முதலியனவாக நிகழும் மூன்று உருவமான அம்மாயா சகித ஈசுரபோத முதலிய சர்வத்திற்கும் விலட்சணமாயும், ஆதாரமாயும், அதிட்டானமாயும், சாட்சியாயு மிலங்கும் பிரமசைதன்னிய போதமாமென்க.

ஷை தொம் என்கிற இரண்டாம் பதம் அசுத்தமெனக் கூறியது வாச்சியார்த்தமும, சுத்தமெனக் கூறியது இலட்சி யார்த்தமுமாம்.இவ்வாச்சியார்த்தத்திற்குப்பொருள்—வியட் டியில் விசுவன் தைசதன் பிராக்ஞன் ஆகிய மூன்று உருவ மாக நிகழும் அவித்யாந்தக்கரணப் பிரதிபிம்ப சீவ சைதன் னியமும், ஷை லட்சியார்த்தத்திற்குப் பொருள்—ஷை விசு வன் முதலியனவாக நிகழும் மூன்று உருவமான அவ்வவித் யா சகித சீவபோத முதலியவைகளுக்கு விலட்சணமாயும், ஆதாரமாயும், அதிட்டானமாயும், சாட்சியாயு மிலங்கும் கூடஸ்த சைதன்னியமுமா மென்க.

அன்றியும், ஷை இருவகை வாச்சியார்த்தங்களான சீவே சுர ரிருவரும் கற்பனைத்துவைதமாயும், இருவகை லட்சியார்

த்தங்களான கூடஸ்த பிரமாதிருவரும் சாட்சித்துவைதமாயு மிருக்கின்றனரென்க.

அசி என்கிற மூன்றும் பதம் அசுத்தமெனக் கூறியது வாச்சியார்த்தமும், சுத்தமெனக் கூறியது இலட்சியார்த்தமு மாம். இவ்வாச்சியார்த்தத்திற்குப் பொருள்—கூடஸ்த பிரம மாகிய சாட்சித்துவைதமும், லட்சியார்த்தத்திற்குப் பொ ருள்—இச்சாட்சித்துவை பதங்களின் ஒருமையான அத்வைத சொரூப சாட்சாத்கார அகம்பொருளுமா மென்க. இங்ஙனம் நிலைத்து நின்றிலங்கும் அகம்பொருளே தீர்ந்த அதிட்டான சொரூபமாயும், இவ்வதிட்டானத்திற்கு வெ சாட்சித்துவை தம் ஆரோபமாயும், இவ்வாரோபத்திற்குச் சீவேசுரதுவை தம் ஆரோபமாயு மிருக்கின்றன வென்க.

அன்றியும், வெ சாமவேத மகாவாக்கியமானது மூப் பத மூடைத்தாயினும், அம்மூன்று பதங்கட்கும் மூவித சம் பந்த முள்ளனவாம். அவையாவன—சமாநாதிகரண சம்பந்த மும், விசேடண விசேடிய சம்பந்தமும், இலக்கண இலக்கிய சம்பந்தமுமா மென்க.

முதலாவது சமாநாதிகரணசம்பந்தமென்பது—தத் தொம் எனுகிற அத்துவைதபதம் அர்த்தத்திற் பிரிபடாது ஒத் திருத்தலால் சமானமும், இப்பதங்க ளிரண்டும் அசிபதப் பொருளா யிருக்கின்றமையால் அதிகரணமும், இம்மூப்பத மும் அர்த்தத்தில் ஏகமாயிருத்தலால் சம்பந்தமுமாமென்க.

இரண்டாவது விசேடண விசேடிய சம்பந்தமென்பது—கூடஸ்த பிரமாதிருவரும் ஒருவர்க் கொருவர் பேதமுறாது தற்கிழமையே மீக்கூர்ந் திருத்தல் விசேடணமும், அவ்விசே டணத்தினது ஒருமையான ஆனியென்னும் பொருளாய்க்

காண்பது விசேடியமும், இத் தத் தொம் அசி என்கிற பொருள் மூன்றும் ஒன்றுகவே ஒத்திருப்பதனல் சம்பந்தமுமாமென்க.

மூன்றுவது இலக்கண இலக்கிய சம்பந்தமென்பது—இம் மூப்பொருளாய் நிற்குந் தானென்பது அறிவானந்த ஏகமாயிருத்தலால், அவ்வேகமானது இலக்கணமும், இவ்வேகமென்பதின்றிச் சுயமாயிருத்தலால் அச்சுயமானது இலக்கியமும், ஷி ஏகமென்பதும், சுயமென்பதும் பிரிவின்றி ஒத்திருத்தலால் அவ்வொருமையே முடிவாகிய சம்பந்தமுமாமென்க.

எனவே, ஷி தத் தொம் அசி என்கிற பதங்களுக்குச் சமானாதிகரண சம்பந்தமும் அது நீ ஆனுய் என்னும் பதார்த்தங்களுக்கு விசேடண விசேடிய சம்பந்தமும் இப்பதார்த்த மூள்ள வாக்கியார்த்தங்களுக்கு இலக்கண இலக்கிய சம்பந்த முமாமென்க.

இந்த சாடவேத மகாவாக்கியத்தினது பதங்களும் பதார்த்தங்களும் வாக்கியார்த்தங்களுமான இம்மூன்றினுக்கு முண்டாகிய சம்பந்தங்கள், இம்மூன்றினது முண்டாகிய கூடஸ்த பிரம ஐக்கியமான அத்வைதசொரூப சாட்சாத்கார அகம் பொருளென்கிற பிரயோசனமாமென்க.

இவ்வரிய அனுபவ ரசங்களையுடைய இம்மூன்றும் வாக்கியத்தைப் பிரகடனமாக அனுக்கிரகித்துக் கொள்ளுதல் யார்பாலெனின்,

இஃது முதலாவது கேட்டலென்பது.

குறள்.

"இழுக்க லுடையழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்."

என முன்ஞான்றே எடுத்துக்காட்டிய ஞானசற்குருநாதன் பாலென்க. அவன்பால் எவ்வாறு கேட்கின்றதெனின், தனது கணவன் இறந்தானெனக் கேட்ட அக்கணமே, தானுமிறந்த முதற்றரமான கற்புடை மகளிர்போல், பரிபாகி தனது தேகோகமானது வாக்கிய சிந்தனை உழைப்பில்லாமலே கணத்திற்றானே இறக்குமாறும்,

தனது கணவனிறந்தானென்பதைக்கண்டும் அக்கணமே தான் இறவாது சிலகடிகைசென்ற பின்னர் இறந்த அக்கணவனோடு தீப்புகுந் திறந்த இரண்டாந்தரமான கற்புடைமகளிர் போல், ஷை தேகோகமானது தனது வாக்கிய சிந்தனை உழைப்பு முதிர்ந்த சில ஞான்று சென்ற பின்னர் இறக்குமாறும்,

தனது கணவன் இறந்தா னென்பதைக் கண்டும் அவனோடு தானுமிறவாமலும், சிலஞான்று சென்றேனும் அக்கணவனோடு தீப்புகாமலும் தனது தேகமுவங்காறும் போகத்தை முற்றும் மறந்து மனம் ஒருவழிப்பட்டு தவநெறிக் கண்ணே விடாமல் நிற்கும் மூன்றாந்தரமான கற்புடைமகளிர் போல், ஷை தேகோகமானது தனது ஷை வாக்கிய சிந்தனை உழைப்பு முதிர்ந்த சிலஞான்று சென்ற பின்னரேனு மிறவாவிடினும், அவ்வுழைப்பு முதிர்ந்த இறுதியிலேனு மிறக்குமாறும், அவ்வாக்கிய உபதேசத்தைக்கேட்டின்புறுதலா மென்க.

இஃது இரண்டாவது சிந்திந்தலென்பது.

பரம சற்குருநாதன்பால் இங்ஙனங் கேட்டுக் கிரகித்த அவ்வரிய வாக்கிய உபதேசத்தை நிலத்தில் நாட்டப்பட்ட தம்பமானது ஆசைவற் றிருக்கத் தக்கபடி செய்வார்போல், தனது சிந்தையிற் படிந்த இவ்வாக்கிய உபதேச அர்த்தமானது இலட்சியப்படுங்காறும், விடயப் பராக்குகளால் சிந்

சித்தும் பேதியாதிருத்தற்கு மனன உழைப்புக்களினல் இறுகச் செய்தலும்,

பசுக்குழாங்கள் பயிர்களை விரைவில் ஒன்றுபாதியாகக் கறித்துக் கறித்து விழுங்கியவற்றை மீண்டும் ஒவ்வொன்றுகவியத்தப்படுத்தி மென்று மென்று ருசித்து விழுங்குவது போல், ஆசிரியர்பால் இவ்வாக்கியானுபவ ரசங்களைப் பல்ஞான்றும் கேட்டு உட்கொண்டவற்றை யெல்லாம், தனித்திருந்து ஒவ்வொரு ரசத்தையும் தனது நினைவிற் கொண்டுவந்து கொண்டுவந்து அததிலுமுண்டாம் ஐயம்திரிபறுமாறு, ஒருவன் தானுண்ட கள் முதலியவைகள் தமது போதையாகிற வெறிவசத்தி லிழுக்குமாறுபோல், மனனமென்னும் வெறிவசத்திலிழுக்க அவ்வெறியில் விடாதழுந்தியிருத்தலாமென்க.

இஃது மூன்றவது தெளிதலென்பது.

இப்பரிபாகி கணப்போதும் மாறுது மனனித்து மனனித்துத் தற்போதையாகிற வெறிவசப்பட்டு வருகின்ற நெடுஞான்று முதிர்ச்சியினல், ஒருவன் இரவு பொழுதுக்குக் கிஞ்சித்தும் சகிக்கப்படாது அருணன் உதயமாதற்கு முன்னர் விடியற்காலம் வந்தழித் தனது மனத் தெளிவும் அம்மனத் திட்பமும் வாய்க்குமாறு போலும்,

ஆற்றின்கண் நீர்பெருகி வரும்ஞான்று ஓர் கடிகை அன்றி அரைக்கடிகைக்கு மூன்ஞான்றே அவ்வாற்றின் மணல்களுக்குள் சலம் விரைவிற் செல்லுழி, அதனல் அம்மேல் மணல்கள் கொந்தளிக்குமாறுபோலும்,

ஞானப்பிரகாசமானது பூரித்துவருகிறதற்குச் சின்னுள் முன்னரே, இப்பரிபாகியின் மனமானது தனதெதார்த்த வடிவம் கணஞான்றேனும் விளங்கவில்லையே என்னும் ஆரா

மை மேலிட்டிருத்தலினால், தனது மெய்முழுதும் வாடியிருத்தலும், என்புகளானவை தத்தம் கட்டுகளெல்லாம் தளர்வுற்றிருத்தலும், இருவிழிகளிலும் மணற்கேணியில் மோழைநீர் வெளிப்படுமாறுபோல் தாரை தாரையாக ஆனந்த நீர் பெருகுதலும், காந்தச்சிலை மூன் இருப்பூசியானது அதனை டனேவதற்குச் சேட்டிக்குமாறுபோல் இனி வெளிப்படும் தனதெதார்த்த வடிவில் அணைந்து கரைந்து விடுதற்கு மை அம்மனமானது நெளிந்து நெளிந்து பரோட்சமாக உறைந்துகொண் டிருத்தலும், இப்பிராரத்துவ சரீரம் அகன்றிடில் மீண்டும் எப்பிறவி வாய்த்துவிடுமோவெனப் பயகம்பன முதலியவைக ளுற்றிருத்தலும், ஓர் ஞான்று ஆரவாரித்தலும், இடையிடையே தனக்குக் கிஞ்சித்துந் தோன்றுத களிப்புற் றிருத்தலும் அதாவது உன்னுக் களிப்பென்பது தான் இதுகாறும் மறைக்கப்பட்ட தனது எதார்த்தத் தீர்ப்பையன்றி ஏனைய தீர்ப்பனைத்தும் மூடிந்த தீர்ப்பனெறனக் கூளைந்து தன்னை அத்துவிதானுபவமாகத் தெளிந்து அத்தெளிவின்படியே நிற்றற்கு முன்னர்த் துவிதானுபவமாகவும் பின்னர் விசிட்டாத் துவைதானுபவமாகவும் தெளிய வேண்டுவதும் அவசியமாகலின், இதுகாறும் பரிபாகப்பட்டு வந்த முதிர்ச்சியினால் முன்னர்த் தெளிய வேண்டியது துவிதானுபவத் தெளிவேயாம். இத்தெளிவே மை கேட்டல் சிந்தித்தல் இரண்டிற்கும் மேலாகியதாமென்க.

வழிபடுதற் கியைந்த துவிதம்,

துவிதமென்பது இருமை யுடையன. அவை உயிர்கள் வழிபடுதற் கியைந்த அஞ்ஞான மகலாத துவிதமெனவும், அஃதகலும் துவிதமெனவுமாம். அஞ்ஞான மகலாத துவிதமென்பது திருக்கெனவும் திரிசியமெனவு மிருக்கு மிரண்டில் திருக்கு அதிட்டானமெனவும் திரிசியம் ஆரோபமெனவும்

வாச்சியார்த்தமாகவும் லட்சியார்த்தமாகவும் தெளிந்தின் புறுது, ஓர் வத்து அணுமான அளவையால் உளதெனவும் அவ்வத்துவுக்குச் சுசாதிக பேதங்களும் விசாதிகபேதங்க ளும் அதை சத்துக்களா யிருக்கின்றதென்னும் மயக்க மக லாமையேயாமென்க.

எங்ஙனமெனின், அந்தத்துவிதம் உலகு உயிர் பரம் இம்மூன்றும் அதை சத்துப்பொருளெனக் கூறியிருக்கின் றது. இம்மூன்றுவித சத்துள் உலகாகிற சத்துக்கு உபாதான காரணம் யாது? உயிருமன்று பரமுமன்று, பின்னர் யாதெ னப்படும்? மாயையெனப்படுவதாகலின், மாயாகாரியம் சகத் தெனப்பட்டது. படவே, ஓர் சத்தாகிய உலகப்பொருளு க்கு உபாதானகாரணம் ஒன்றிருக்கின்றமையால், ஏனைய இருவித சத்தாகிற உயிர்பர மிரண்டினுக்கும் உபாதான கார ணங்கள் இரண்டிருக்க வேண்டுமே! அவ்விரண்டையும் சேர் த்துக் கணிக்கில் திரிபொருளென்பதின்றிச் சடவிதப்பொரு ளென்றாகின்றதே! உயிர் பரம் என்னும் இரண்டு சத்துப் பொருள்களுக்கும் வே உபாதான காரணம் வேண்டுவதின் றெனின், உலகாகிற சத்துப்பொருளுக்கு மாத்திரம் உபா தானகாரணம் ஏன் இருக்கக்கூடும்? பிரதிபாலிக சத்துக்கும் விவகாரிக சத்துக்குமே கூடுமன்றிப் பாரமார்த்திக சத்து க்கு எங்ஙனம் உபாதான காரணம் இருக்கக்கூடும்? உபாதான காரணத்தைக் காரியப்பொருள் ஏற்குமே அன்றிக் காரிய காரணம் கடந்திருப்பது எங்ஙனம் ஏற்கும்? இவ்வுலகம் காரி யப் பொருளா? அன்றிக் காரணப்பொருளா? காரியப்பொரு ளாயின், இக்காரியம் கற்பனை யெனப்படுமே? படுமாயின் மேலே காரணமிருத்தற்கு விருத்தமின்று. அங்ஙனமின்றி இவ்வுலகு எதார்த்தப்பொருளா யிருக்கின்றமையால், இத ற்கு மேலே காரணப்பொருள் வேண்டுவதின்று. இருக்

கின்றதெனின், இவ்வுலகு ஓர் சத்துப்பொருளும் இச்சத்துக்குமேல் இன்னும் ஓர் சத்துப்பொருளுமாகி இரண்டு சத்தாகின்றன. இவ்விரண்டு சத்தோடு உயிர்ச்சத்து ஒன்றும் பரச்சத்து ஒன்றும் ஆக நான்கு சத்துப்பொருள்களாகின்றன. உயிர் பரமென்னு மிரண்டு சத்தும் தமக்குமேல் காரணங்களா ஏலாதாயினும் சதுர்வித்தச்சத்து இருக்கின்றதற்குச் சற்றும் விருத்தமின்று. இங்ஙனமிருக்கத் திரிபொருள் நிச்சயஞ் சாதிப்பது கிஞ்சித்தும் பொருத்தமின்று. இதுநிற்க. உலகென்பது தனிப்பொருளா? அன்றி, ஒன்றின் காரியப்பொருளா? தனிப்பொருளன்று, ஒன்றின் காரியப்பொருளெனின், காரியப்படுவது முன்னில்லாமை யன்றே? முன்னில்லாமை காரியப்படின், அஃது எஞ்ஞான்று மிருக்கின்றதா? காலவரையறைப்படியிருந்து பின்ஞான்றில்லாமற் போகின்றதன்றே? முன்ஞான்றில்லாததுபோலப் பின்ஞான்று மில்லாமையன்றே, காரியமெனப்படுவது? முன்ஞான்றும் பின்ஞான்று மில்லாமையே காரியமாயின், அக்காரியம் தோற்றமாக இருக்கின்றதா? அன்றிப் பொருளாக இருக்கின்றதா? பொருளாகவே இருக்கின்றதெனின், பொருளல்லதாக இருக்கின்றது முன்ஞான்றும் பின்ஞான்றும் இஞ்ஞான்றும் எஞ்ஞான்றும் மாறாது ஒருபடித்தாயிருப்பதாக்கும்! இஃது விந்தையினும் மிக்க விந்தை! காரியப்படுவதெல்லாம் முன்ஞான்றும் பின்ஞான்று மில்லாமையாயின், அஃது இடைஞான்று மாத்திரந்தானே இருப்பெனப்படுகின்றது? ஓர்ஞான்றிருப்பது பொருளாயும், சதுர்ஞான்று மிருப்பது பொருளென்பதின்றிக் கற்பனையாயு மிருக்கின்றதாக்கும்!

அன்றியும், உலகமென்பது காரியப்பட்ட பொருளாயின், உலகம் என்கிற இப்பெயர் அர்த்தப்பெயரா? அன்றி அனர்த்தப் பெயரா? அர்த்தப்பெயரெனின், எந்த அர்த்தத்

திற்கு உலகமென்கிற பெயர்? காணப்படுதலுக்கெனின், அஃது தோற்றுதலுக்கென் றுகின்றது. அத்தோற்றம் தொழிற்குண மாகின்றது. அத்தொழிற்குணமா உலகமென்று வழங்குகிறதற்குப் பொருள்? அல்லவே! இப்பெயர் அனர்த்தப்பெய ரென்பதற்கு முரணென்னே? ஆகலின், இருக்கின்றது மண் மூதலிய பஞ்ச பூதங்களும் அண்டபிண்டங்களு மன்றே? இவற்றுள் எது உலகெனப்படுவது? எதுவுமல்லவே! பஞ்சபூத மூதலியவைகளின் சேர்க்கையாகிய பலவின் சட்ட விகாரமன்றே விருக்கின்றது? இச்சேர்க்கைக்கன்றே உலகெனப்பெயர் வழங்குவது? உலகென்கிற பெயரே அனர்த்தமாயின், சேர்க்கையுற் றிருக்கின்ற பல நாமரூபங்களுமா பொருளெனப்படும்? படுமெனின், ஆராய்தலில்லாத மூடத்திறகின்றி ஆராய்ச்சியாகிற விவேகததிற்கு இவை அன்மை இன்மை என்பதற் கியையாதிருக்கட்டுமே! அற்றேல், இத்தூணென்பது இன்றுவெனின், தூணென்பது என்ன நிலைமையது? மேலேயிருக்கும் பரப்பு மூதலியவைகளைச் சுமக்கு நிலைமையதெனின, சுமக்குந் தொழிலுக்குத் தூணென்பதா? அன்றிப் பொருளுக்குத் தூணென்பதா? பொருளுக்கேயெனின், இஃது எப்பொரு ளெனப்படுவது? உருட்சி நீட்சியா யிருத்தலெனின், அவை குணங்களாயிற்றே! பொருளென்பதெங்கே? ஆகலின், இக்குணங்களையுடையது யாதெனப்படும்? கற்பொருளெனின், கற்பொருளுக்குத் தூணென்கிற பெயருண்டா? இன்றெனின், மற்றதற் கியைந்தது? உருட்சி நீட்சி மூதலியவைகட்கெனின், பண்புப்பெய ராகின்றதே! பண்புந் தொழிலுமா யிருக்கின்ற இத்தூண் சுமந்திருத்தல் முதலிய அனுபவத்தால் உண்டெனவும், சொருபத்தால் ஆமெனவும் படுகின்றதேயன்றி, பொருளாயிருப்பது கல்லேயன்றி யில்லையே!

அன்றியும், இது தூணைனச் சுட்டிப் பரிசிக்கின், இச் சுட்டை யேற்பது ஷெ கற்பொருளையன்றி வேறுயிருக்கட் டுமே! இவ்வாறே எவ்வெங்காமரூபமும் நமது அறியாமைக் குப் பொருளாகக் காணப்படுகின்றதே! அதனையும் சுட்டிப் பரிசிக்கின் அதனுவும் அவ்வச் சுட்டையும் கிஞ்சித்தும் ஏலா மற் போகின்றதே! போகின்றதால் ஈற்றில் இருப்பு யாதெ னப்படும்? அதுதன் உபாதான காரணமன்றே? இதுபோல், உலகென்கிற ஆனர்த்தப் பெயரை ஏற்றி நிகழ்கின்ற பண் புக்கும் தொழிலுக்கும் எதுமுதலெனப்படும்? மாயையெனப் படுமெனின், அம்மாயை மயக்கமெனப்படா திருக்கட்டும்! எங்ஙனமெனின், அனைத்தும் பண்புதொழிலுமாகிய தோற் றல்மாத்திரமா யிருக்கச் சத்தாகத் தோன்றுவானேன்? சத் தாகப பார்ப்பதனுலெனின், அங்ஙனமுணர்வது பொருளல்ல வற்றைப் பொருளென்றன்றே? அஃதன்றே மயக்கமெ னறபாலது? இம்மயக்கத்தையன்றி மாயையென்பது ஏது? அதனை இத்தகையதென,

குறள்.

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணப் பிறப்பு." என்றும்,

பிரபுலிங்கலீலை.

"விருப்பு வெறுப்புரு காம்விட யத்தோ
டிருக்கு மயற்சக மென்ப திலாமை
பாப்பிர மத்தியல் பார்ப்ப தெமக்குத்
தெரித்தரு ளென்றுரை செய்து திருத்தான்." என்றும்,

ஞானவாசிட்டம்.

"பேதமுறு புந்தியே மாயை யாகும்
பெரிதுவருந் தியுமிதனைப் போக்கல் வேண்டும்

போதமுறு பேற்றினு லன்றி மாயைப்
பொருந்தியின் கமைதோன்றுப் புகலத்தோன்றி
லேதமறு மப்பதமே யிறவா வீடா
மிம்மாயைப் பிறப்பிடமே தென்னல் வேண்டாஞ்
சேதமுறக் கொல்வழியே தென்று தேர்வாய்
சிதைவுற்று லிதனியல்பு தெரியு மன்றே.''

என்றும் கூறியிருக்கின்றன.

இவற்றுல், மாயையென்பது மயக்க மென்பதற்கு மூல மனைனீனை? இங்ஙனமிருக்கும் மாயையை வேருகக் கொள்ளில் அஃது பொருளெனப்படுமா? படுமெனின், இவ்வுலகம் என்னவெனப்படும்? இஃதும் பொருளெனப் படுமெனின், காரணமாகிற மாயையும் காரியமாகிற இவ்வுலகமும் ஓர் முதலென்பதா? காரியமென்பது மூன்ஞான்றும் பின்ஞான்று மின்மையாயும், காரணமென்பது அம்மூன்பின்னேடு இடைஞான்று முண்மையாயு மிருக்கின்றதன்றே? இவ்வுலகம் காரிய சத்துப் பொருளா யிருந்தா லிருக்கட்டும்! மாயையென்பது இவ்வுலகமாகக் காரியப்பட்டது பரிணம பட்சமாகவா? அன்றி ஆரம்ப பட்சமாகவா? அஃதுமன்றி விவர்த்த பட்சமாகவா?

க-வது, பரிணமபட்ச மென்பது—ஓர் முதல் திரிந்து மற்றேர் முதலாக இருப்பது. அது பாலென்பது கெட்டுத் தயிராக இருப்பது.

உ-வது, ஆரம்ப பட்சமென்பது—ஓர் முதல் மற்றேர் முதலின் ஆற்றலினுல் குணபேதமாகக் காரியப்பட்டிருப்பது. அது மட்பொருள்ளானது கடவடிவமாகக் காரியப்பட்டிருப்பது.

ங-வது, விவர்த்தபட்சமென்பது—ஓர்முதல் மற்றொன்றுகத் திரியாமலும் மற்றே ராற்றலினுற் குணபேதமாகா

மலும் தன்பால் மற்றோர் முதல்போலத் தோற்றுகின்றது. அது கயிற்றின்பால் அரவுபோற் றோற்றன் மாத்திரமாகத் தோற்றுவது. இஞ்ஞான் றிங்ஙனம் விளக்கிய இம்மூப்பாகத் துக்குள் மாயையை எதுவென் றேற்கப்படும்? பாலென்பது திரிந்து தயிராவதுபோல் ஏற்போமெனின், அந்தப்பால் தயிராகத் திரிந்த பின்ஞான்று பாலென்பதில்லாமற் கெட்டுச் சற்றும் பொருளில்லாமைபோல் அம்மாயை உலகாகத்திரிந்த பின்ஞான்று அஃது கெட்டுச் சற்றும் பொருளின்றிப்போகுமே? போகுமாயின், காரியப்பட்ட இவ்வுலகு காலவரையறைப்படி மாறுஞான்று, எதன்கண் ஒடுங்கி எதுவாய் விடுகின்றது? மாயையின்கண்ணெடுங்கி அதுவாய் விடுகின்றதெனின், இங்ஙனங் கொள்வதனால், மாயையென்பது கெட்டு உலகாகக் காரியப்பட்டதன்று. அன்றுகவே, இவ்வுலகுக்கு மாயை பரிணமோபாதானமுமன்று. மட்பொருள் குணபேதமாகக் காரியப்படுகின்றதுபோல், அம்மாயை குணபேதமாகக் காரியப்பட்டதெனின், அம்மட்பொருள் கடவடிவாகக் காரியப்பட்டஞான்று, அக்காரியமாகிய கடம் முன்னும் பின்னுமின்றித தோற்றன் மாத்திரமாகவும் சொன்மாத்திரமாகவும் நிகழும் விவகாரிக சத்துக்கற்பனை யெனப்படுவதுபோல், அம்மாயை உலகாகக் காரியப்பட்டிருக்கும் ஞான்று, காரியமாகிய உலகு முன்னும் பின்னுமின்றித தோற்றன்மாத்திரமாகவும் சொனமாத்திரமாகவும் நிகழும் விவகாரிக சத்துக்கற்பனை யெனப்படுமே!

இதனால், மாயையென்பது உலகாகக் காரியப்பட்டதன்று. அனறுகவே, இவ்வுலகுக்குத் தான் ஆரம்போபாதானமுமன்று. கயிற்றின்கண் அரவு தோற்றுதல்போல், மாயையின்கண் இவ்வுலகு தோற்றிக்கொண்டிருக்கின்றதெனின், மாயையானது கெடாமலும், குணபேதப்படாமலும்

இருந்தபடியிருக்கும் தன்பால் இவ்வுலகு பிராதிபாலிக சத்தா கிய கற்பனைத்தோற்ற மென்பப்படுமே! இதனால், இவ்வுலகு மாயையின்கண் ஓர் முதற்போற் றோற்றிக்கொண் டிருப்ப தன்று. அன்றுகவே, இவ்வுலகுக்கு அம்மாயை விவர்த்தோ பாதானமு மன்றென்க.

இங்ஙனமிருக்க, இவ்வுலகம் அம்மாயையின் காரியமென் றெங்ஙன மேற்கின்றது? உலகைக்கண்டு ஆராயவேண்டியவா றாராய்ந்து தெளியாது, வெறும் உத்தேசமாத்திரத்தால் மா யையின் காரியமென்று கொண்டதேயன்றி வேறன்று. இங் ஙனம் உத்தேச மாத்திரமாகக் கொண்டதனால், முற்று முர ணுகவே யிருக்கின்றது. ஒரு மாயையைப் பொருளெனக் கொள்ளாது குணமெனக் கொண்டாற் றோடமென்னையெ னின், குணமென்பது ஓர் முதலினது தர்மமெனப்படும். அத் தர்மம் குணமாகலின், ஓர் முதலினது குணம் மற்றோர் பொரு ளாகக் காரியப்படுமா? அங்ஙனம் காரியப்படுவதிலும், உண் மைப்பொருளாகவும் காரியப்படுமா? ஒருண்மைப்பொருளே மற்றோருண்மைப்பொருளாகக் காரியப்படாதுழி, ஓர் முத லின் குணமா மற்றோர் உண்மைப் பொருளாகக் காரியப்பட்டு நிகழும்? மட்பொருளின்கணுள்ள கடசத்தியாகிய குணமா னது கடகலசாதி பேதங்களாகக் காரியப்படுதல்போல், குண மாகிய மாயை காரியப்பட்டிருக்கின்றதெனின், மண்ணின் பாலுள்ள சத்தியே கடமாகக் காரியப்படுவதாயின், அம்மண் ணானது கடமாதிகட்கு உபாதான காரணமெனப்படா திருக் கட்டும்! கடமாதிகளாகக் காரியப்படுதற்கு அச்சத்தி சகாய காரணமா யிருக்கின்றதே யன்றி முதற்காரணமாக நின்று தான் காரியப்பட்டதன்று.

அன்றியும், அயமான்னது அக்கினியின் சகாயத்தால வீர் தல் குவிதல் முதலியனவாகக் குணபேதமாய்க் காரியப்படு

கின்றதேயன்றி, ஷி அக்கினியானது வீரதல் குவிதல் முத லியனவாகக் குணோபதமாய்க் காரியப்படவின்று. இவைகளோப போல் மாயையானது சகாயமாய் நிற்க, இப்பஞ்சபூத பவு திக முதலியனவாகக் குணமாய் வதோ ஓர் மூதலிருந்து காரி யப்பட்டிருக்கவேண்டுமே! இதனால், உருகுகுபாயை முதற் காரணமன்றென்பதாகின்றது. இதற்கென செய்தும்! இத னால் மாயையை ஓர் பொருளெனக்கோடற்கும் குணமெனக் கோடற்கும் இயையாமல் இவ்விரிடத்தும் மிக்க ஆபத்தா பிருக்கினறதே! இவ்வாபத்து இருதலைக் கொள்ளிபில அகப் பட்ட எறும்புபோ லிருக்கின்றதே! இதனுணை ஆபத்தில் நின்று திரிபதார்த்த நிசசயம் சாதிபபது என்ன வியபபென் கின்றது! இமமருட்சிக்குக் காரணம் யாதெனின்,

குறள்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" என்றும்,

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்,
வகைதெரிவான் கட்டே யுலகு." என்றும்,

பிறந்திருக்கின்ற மகாவாக்கியத்தை வேதபாகியர்களோவிட்டு, அவ்வேத முதலிய சதுர்த்தச வித்தைகளாகிய சத்பிர மாணங்களோயும் அனேக யுத்திகளாலும் இலட்சியார்த்த அனு பவங்களாலும் பலமுறையு மெடுத்தெடுத்து உணர்த்திக்கொ ண்டுவரும் அறிஞர்களாகிய ஆப்தர்கள்பால், நன்கு உன்னி யுன்னித் தேராததேயாமென்க.

அன்றியும், பொருளெனவும் குணமெனவும் இயையாத ஷி, அநாதி சத்தாகிற மாயையும் அதன் அபேதகாரியமாகிற பாரமார்த்திக சத்துப்பொருளாகிய இவ்வுலகும் இவற்றோடு அநாதிசத்துப்பொருளாகிய உயிரும் பரமும் ஆகிய இச்சது

ர்ப்பொருளும் கூறுபாடுடைத்தாகலின், ஒன்றுள்ளவிடத்தில் மற்றொன்று உண்டாயிருக்குமா? இராதன்றே? இங்ஙனமிருக்கும் இந்நாற்பொருள்களும் எங்கிருக்கின்றன? ஓர் ஆதாரத்திலிருக்கின்றனவா? நான்காதாரத்திலிருக்கின்றனவா? நான்காதாரத்திலிருக்கின்றனவெனின், அந்நான்கு ஆதாரமும் நான்கு என்கிற கூறுபாடுற் றிருக்கின்றனவாகலின், அந்நான்கும் எந்த ஆதாரத்திலிருக்கின்றனவெனவருமே! ஆகலின், அங்ஙனமன்று ஈநாற்பொருளும் ஓர் ஆதாரத்திற்றானே இருக்கவேண்டிய தவசியமாகின்றது. அவ்வாதாரத்தில்ஆதேயங்களாகிய இச்சதுர்விதப் பொருள்களுள் ஆகாயமுதலிய பஞ்சபூதமயமாகியும் இருப்பாகியுமுள்ள இவ்வுலகுக்கு,எல்லையென்பது இத்துணைத்தென் றேற்கப்பட்டிருக்கின்றதா? இல்லையன்றே? அங்ஙனம் எல்லையின்றிய இவ்வுலகமும் வியாபகமாகிய மாயையும் உயிரும் பரமும் ஆகிய ஒவ்வொன்றும் எங்ஙனம் கூறுபாடுற் றிருக்கும்? கூறுபாடுற் றிருக்கின்ற இந்நான்கும் எங்ஙனம வியாபகமுற் றிருக்கும்? வியாபகமாயும் கூறுபாடுடையதாயு மிருக்கின்றது அவற்றிற் கியைந்ததெனின், கண்டத்துலமாயிருக்கும் வியாபகமுமுண்டா? உண்டாயிருக்கின்றதாகவே கொள்வம். இந்த நான்கும் நிகழும் அவ்வோரிடமானது யாதெனப்படும்? அந்த நாற்பொருள்களுள் பரமென்கிற பொருளில் ஏனைய மூனறு மிருக்கின்றனவெனின், இதனால் இவைகள் வியாபக வியாப்பிய மெனப்படுகின்றன. இவ்வியாபக வியாப்பிய நித்தாந்தம் வேறே யிருக்கின்றதே? அவ்வெல்லையில் தலைபிட்டுக்கொள்ளுவானேன்? ஓர் பட்சத்தைச் சாதிக்கப்போந்தால் மற்றோர் பட்சத்தைத் தொட்டுக்கொள்ளலாமா? துவைதம் சாதிக்கப் போந்தால், அப்பட்சத்திற் பொருள்கள் எத்துணையாயிருக்கினும் அவைகள் வெவ்வேறு கண்டத்துவமா யிருக்கவன்றே சாதிக்க வேண்டும்.

துவைதமென்பதற்கு வியாபக வியாப்பியம் சொல்லும் பட்சத்தில் சீவர்கள் மாயை உலகு ஆகிய இம்மூன்றும் அப் பரத்தில் கற்பனைகளாக வியாப்பியமா! அன்றிப் பொருள்க ளாக வியாப்பியமா? பொருள்களாகவே வியாப்பியமெனின், இதனில் பரமென்பது புரையுடைமை யேற்கின்றதே! எங் ஙனமெனின், சீவர்கள் முதலிய ஒவ்வொரு பொருளின் பரி மாணம் எத்துணை எத்துணையோ அத்துணை அத்துணைக் கும் அப்பரம்பொரு ளின்முகலினென்க.

இதனுற் பரத்துக்கெனப் பொருள் கிஞ்சித்துமின்றி அப்பரமானது புரைமயமாகி விடுமே! அதாவது சூனிய மெனப்படுவது. அச்சூனிய நிறைவில் இருக்கின்ற சீவர்கள் முதலிய மூன்றும் என்ன பொருள்க ளெனப்படும்? சூனியப் பொருள்க ளெனப்படுமன்றே? இதற்கென்செய்தும்! இச் சீவர்கள் முதலிய மூப்பொருள்களும் அப்பரத்தில் வியாப் பியமுற் றிருக்கினும் அதற்குத் தோடமின்று? என் இன்று! இடமா யிருப்பதோடு இம்மூன்றுக்கும் உள்ளும் இடை யும் வியாபித்திருக்கின்றதாலெனின், ஓர் பொருளுக்குத் திரிபுறமும் மற்றோர் பொருள் நிறைவுற் றிருக்கின், அந் நிறைவையன்றி அந்நிறைவைத் தன்பால் ஏற்கும் பொருள் தோற்றமா யிருக்குமா? அன்றி ஓர் மூதலா யிருக்குமா? மூத லாயிராதே! அதுபோல், அப்பரம்பொருள் தெரி மூன்றிற் கும் திரிபுறமும் வியாபியா யிருக்குமாயின், இவ்வியாபகத்தை யேற்கும் இம்மூன்றும் கற்பனைகளெனப்படுமன்றி ஒவ்வோர் முதலெனப்படுமா? படாதுழி, துவைதமென்பது இங்ஙனந் தான் இருக்கின்றதோ? துவைதமென்பது எவ்வாறாகிலும் இரண்டெனப்பட்டே யிருக்கவேண்டுமே! அங்ஙனமின் றித் திரிபதார்த்தமென்பதையுங் கடந்து சதுர்ப்பதார்த்தங் களா யிருக்கின்றதே! இவைகள், துவைதானுபவமாகுமா?

சதுர்ப்பொருள்களேனும் இருக்கின்றனவே அவைகள் பேதித் திருக்கின்றனவெனக் கொண்டு, துவைதமே கூறலாம். அங்ஙனமும் பொருளாயில்லையே! இவற்றுள், மூப்பொருள்களுள் சகமென்கிற ஓர் பொருள் விபரீதப் பிரத்தியட்சமாயும், சீவர்களென்கிற ஓர் வகுப்புப்பொருள்கள் விபரீதானுபவ அனுமானமாயும், மாயையென்கிற பொருளும் விபரீதத்தோற்ற அனுமானங்களாயு மிருக்கின்றனவே! இதனால், எங்ஙனம் துவைதமெனப்படும்? ஆகலின், துவைதமென்பது இம்மதன்றென்க. அறிஞர்களால் புராதனமா யேற்கப்பட்டு வருகின்ற தேயினின், இத்துவைதம் நாத்திகானுபவத்தை மறுத்து வழிப்படுத்தற்குக் கற்பிக்கப்பட்டதே யன்றி, மனமானது அயல்போதமின்றிக் தற்போதமாதற்காக முன்ஞான்றே தெளிந்திருத்தற் கியைந்த துவைதம் வேறே யிருக்கின்றது. அஃதன்றே இணக்கமாகியது? இதுகாறுங் கூறிய இத்துவைதம் இணக்கமன்றென்பதற்கு உதாரணம்:—

பிரபுலிங்கலீலை.

"தூய்தா கியநெஞ் சுடையார்க்குத்
தாமே சிவமாத் தோன்றுமால்
நீதா கியநெஞ் சுடையார்க்குத்
தெளிய வபேத மிகலின்றி
வேதா கமங்கள் விளம்பிடினும்
விளங்கா தென்றும் வேறென்னும்
வாதா லழிவ ரவர்மாயை
மயக்க மயங்கு மதியினர்." என்றும்,

அத்துவித்தக் கலிவெண்பா.

"ஈசன்வேறி யான்வேறென் றெண்ணுகின்ற பாதகரை
நீசரிற் கண்டு நினையென்ரு—னுசையொடும்
வேத முடிவறிந்த வேதியனைக் கூடென்ரு
னேதமிலை யெல்லாம் பிரியென்ரு." என்றும்,

வைராக்கிய சதகம்.

"புகலரும் பரப் பிரமமாங் கடறனிற்
புணர்பரை திரை யீசன்
சகமொ டாருயி ரெனுநுரை யாதிக
டருமாற் றிடுமென் றே
பசரு ஞான்மறை யெனிலதி லெதையெதைப்
பற்றுவாம் விடுகிற் பாஞ்
சுகசொ ரூபமே யனைத்துமென் றகற்றுதி
துவிதபா வனைவெஞ் சே."

என்றும் கூறியிருப்பதனாற் காண்க.

இஃது

வழிபடுதற்கியைந்த விசிட்டாத்துவைதம்.

இவ்விசிட்டாத்துவைதமானது ஷே மகாவாக்கிய சதுட்டயத்தில் எந்த வாக்கியத்தக்கியைந்ததெனின், தத்துவமசி வாக்கியத்துக்கியைந்தது. அது தத் என்பது அதுவெனவும் துவம் என்பது நீயெனவும் அசியென்பது ஆனையெனவும் பிரிக்கப்பட்டுவழங்குகின்றது. அவற்றுள், அது என்பது பரமெனவும் அதாவது பரமாத்மாவினது. வெனவும், நீயெனபது தர்மமெனவும் அதாவது பரத்தினது தன்மையாக வெனவும், அசி என்பது ஆனையெனவும் அதாவது நீ அவ்வாறிருக்கின்றாயெனவுமாம். அங்ஙன மிருத்தல், பரத்தினது தர்மமாக இருக்கின்றாயெனக் கொள்ளப்பட்டது. அவ்வாக்கியம் தனது மூப்பதத்துள் இடைப்பதமாகிய துவமென்பதற்குத் துவைதிகள்போல் நீயென்னப் பொருள்கொள்ளாது, தர்மமெனப் பொருள் கொள்ளுதற்கு இடமுண்டாயிருக்கின்றதாவெனின், தஸ்சியாபாவ தத்வம் எனறுகின்றன. அவை தஸ்சியா என்பது பரமாத்மாவின் பாவ என்

பது தர்மமாக இருக்கின்றனவென ஆகின்றன. ஆதி துவைத பட்சத்தில் மதிமுகம் பவளவா யென்புழி, இவ்விரு பதங்க ளின் இடையில் போலவென்கிற உவமை உருபு குன்றியிரு க்குமாறுபோல், இங்கு தத்துவம் என்கிற பதத்தில் நீ என் கிற எழுவாய்குன்றி துவமென்கிறது தர்மமெனப் பிரிக்கப் பட் டிருக்கின்றதென்க. அஃதெங்ஙனமெனின், பிரமணத் துவம் சங்கியாசத்துவ மென்புழி, துவமென்பது தர்மமென் றாயதுபோ லென்க. ஆகவே, சேதனு சேதன மிரண்டும் பர மாத்மாவினது தர்மமெனப் பொருள்பட்டன. இதனை நன்கு விசாரித் துணர்பவர்க்கே வெளியாகுமென்க.

எங்ஙனமெனின், விசிட்டாத்துவைத மென்பதற்குப் பொருள் கூடியிருக்கிற அத்துவைதமா? அன்றி மேன்மை யான அத்துவைதமா? மேன்மையாகிய அத்துவைதமெ னின், தாழ்மையாகிய அத்துவைதமான் றிருக்கவேண்டுமே! இவற்றுல் அத்துவைதமென்பது இரண்டாகின்றன. இரண்டு அத்துவைத மிருக்குங்கால், இரண்டு துவைத மிருக்கவேண் டுமே! அவை என்ன துவைதங்க ளெனப்படும்? ஒன்று கூடாத்துவைதமும் மற்றொன்று கூடுந்துவைதமு மாகுமன் றே? ஆகவே, மேன்மையாகிய அத்துவித மென்பதற்குப் பொருளென்னை? அத் துவிதம் அத்துவித மென்னின், அஃது இரண்டற் றிருக்கின்றதெனப் பொருள்படுகின்றது! இரண்டற்றது என்பதில் இரண்டென்பது எவை? பரமாத் மாவும் சேதனு சேதனப் பிரபஞ்சமுமெனின், இவ்விரண்டு மற்றதே அத்துவிதமெனப் பொருள் படுகின்றது. இதனுல் பரமாத்மாவாகிய குணியும் பிரபஞ்சமாகிய குணவேற்றுமை களு மில்லாததா அத்துவித மெனற்பாலது? இது மேலான அத்துவிதமா? அல்லவே! அங்ஙனமன்று, குணியாகிய பர மாத்மாவை விட்டுக் குணவேற்றுமைகளான சேதனு சேத

னங்கள் பிரியாதிருக்கின்றதே அத்துவிதமெனின், இதனுல், குணிகுண மென்னுந் துவைத மகன்றதா ? இல்லையே! குணி குணமாகிய துவைதம் சத்தியமாயிருக்க, இவற்றை அத்து விதமென்பது கருங்காக்கையை வெண்காக்கை யென்பது போலாம். அத்துவிதமென்பது நான்கு விதமா யிருக்கின் றதே ! அந்நான்கு விதத்துள், இவ்வத்துவிதம் ஒன்றேனு மல்லவே ! அந்த நான்குள், ஒன்றிருந்தால் வேறைய மூன்றும் ஏகாத்துவித மெனப்படுமே !. முடிவில், ஏகாத்துவிதமாயி னும், அதுகாறும் நான்குவித அத்துவிதமு முண்டோவெ னின், துவைதம் நான்குவிதமா யில்லாதிருக்கட்டும் ! அந்நா ன்குவித மென்ப தெங்ஙனமெனின், காரண காரியம், குணி குணம், பிம்பப் பிரதிபிம்பம், அம்சாம்சிக மென்பனவாம். அவற்றுள் காரணகாரிய மென்பது மட்கடம் நூற்படம் என்பன. குணிகுணமென்பது நீலோற்பலம் கருங்குயில் என் பன. பிம்பப் பிரதிபிம்பமென்பது வான்கதிர் நீர்க்கதிர் முகம் முகச்சாயை என்பன. அம்சாம்சிக மென்பது நீர்த்தரங்கம் ஆலாங்கட்டி என்பன.

கூ. க-வது, காரணங்களாகிய மட்பொருளும் நூற் பொருளும் காரியங்களாகிய கடப்பொரு ளெனவும் நூற் பொருளெனவும் படுமா ? படாதன்றே ?

இங்ஙனமே உ-வது, குணிகளாகிய உற்பலப் பொரு ளும் குயிற்பொருளும் குணங்களாகிய நீலநிற மெனவும் கரு நிற மெனவும்,

ங-வது, பிம்பங்களாகிய சூரியப்பொருளும் முகமாகிய பொருளும் சசூரியப் பொருளெனவும் ஆடிமுகப் பொரு ளெனவும்,

சவது, அம்சமாகிய நீர்ப்பொருள் அம்சிகங்களாகிய அலேயாதி பொருளெனவும், ஆலாங்கட்டிப் பொருளெனவும் படுமா ? படாதன்றே ? இங்ஙன மிருப்பதால், காரணகாரிய மூதலிய இங்ஙான்கு வகுப்புக்களுள் ஒவ்வொன்றும் துவைத மெனப்படுமா ? அன்றி அத்துவித மெனப்படுமா ? ஒன்று மற்றொன் றெனப்படா திருக்கின்றதால், துவைதங்க ளென் பதற்கு முரணென்னே ? ஆகலின், இத்துவைத பேதங்கள் சதுர்ஞான்றும்காரணம் குணிபிம்பம் அம்சம் ஆகிய இங்ஙான் கையுமன்றிக் காரியம் குணம் பிரதிபிம்பம் அம்சிகம் ஆகிய இங்ஙான்கு மின்றெனவும், காரிய மூதலிய இங்ஙான்கும் சே காரண மூதலிய அங்ஙான்கு மன்றெனவுமாகத் தெளியுமித் தெளிவே விட்டுவிடாத லக்கணையாம். இந்த லக்கணையே அத்துவித மென்பதற்கு மூரணின்று ? இன்றுகவே, சே காரண மூதலிய ஙான்கும் காரிய மூதலியனவாகிய எல்லாமா யும், அவை தாம் அல்லவாயு மாயிற்றென்க. அத்துவிதமென் பது எல்லாமாயும் அல்லவாயும் தெளிந்திலங்கும் விட்டு விடாத லக்கணையா யிருக்க, விசிட்டாத்துவித மென்பது என்னவெனப்படும் ? விடாதலக்கணை யெனப்படுமன்றே ? இவ்விரண்டும் விட்டுவிடாத லக்கணையும் விடாத லக்கணையு மாயின், சே துவிதமென்பது என்னவெனப்படும் ? விட்ட லக்கணை யெனப்படுமன்றே ? இவ்வத்தியாயத்திற்கு மூன் அத்தியாயத்தில் துவிதமென வழங்குவதும் இவ்வத்தியாய த்தில் விசிட்டாத்துவித மென வழங்குவதும் பொருத்த மிருக்கின்றனவா ? இல்லையே ! இவைநிற்க.

விசிட்டமென்பதற்குப் பொருள் கூடியிருக்கின்றதென் பதா ? அன்றிக் கூடாதிருக்கின்ற தென்பதா ? இவ்விருபதத் துள் ளடைப்பதம் அத்துவிதமென் றுரைக்கின்றதால், எங்ஙனம் மூதற்பதம் கூடியிருக்கின்ற தெனப்படுமெனின், அக்கடைப்

பதம் துவிதமாய் பிருப்பதை அத்துவிதமாகக் கொண்டதனு லன்றே, கூடியிருக்கின்ற தென்னு முதற்பதம் மேன்மை யைத் தரற்பால தெனக்கொண்டு மேன்மையாகிய அத்து விதமென வழங்கப்படுகின்றது? இதனல், விசிட்டத் துவித மெனப்படாது விசிட்டாத்துவித மெனப்பட்ட தாகும்! அங்ஙனமாயின், பரமாத்மாவை வியாபகப்பொரு ளென்பா னேன்? ஓர் பொருள் வியாபகமா யிருக்கின்றதாயின், அவ் வியாபகம் எதற்கென வினவவருமன்றே? அதுபோல், பர மாத்மா எதற்கு வியாபகமெனப்படும்? சிற்சடமாயுள்ள பிர பஞ்சப் பொருள்களுக்கெனின், இதனல் பிரபஞ்சப்பொருள் வியாப்பிய மாகின்றன. ஆகவே, பிரபஞ்சம பரமாத்மப் பொருளென்பமே! கூடாதெனின், பரமாத்மாவுக்கு இப்பிர பஞ்சம் வேறுபொரு ளென்பமே! அங்ஙனமும் கூடாதெ னின், ஏன் கூடாது? இவை பரமாத்மாவின் தன்மைகளா மெனின், அவையாவன குணவேற்றுமைகளா யிருத்தல். இக்குணங்களுக்குக் குணிபொருள் பரமாத்மாவன்றே? பரமாத்மா குணியும் சிற்சடப்பிரபஞ்சம் குணங்களு மாகின் றன. இச்சிற்சடங்கள் பரமாத்மாவிற் கூடியிருக்கின்றனவா? அன்றிக் கூடாதிருக்கின்றனவா? அதாவது—பரமாத்மாவை விட்டு அஃதில்லாவிடத் திருக்கின்றவைகளா வென்பது. பர மாத்மாவிற் கூடியே இருக்கின்றனவெனின், அதனல் துவித மெனற்பாலதா? அன்றி அத்துவித மெனற்பாலதா? அத் துவித மெனற்பாலதெனின், ஐ காரணகாரிய மூதலிய ஐந்து விதங்களில் இஃதென்ன அத்துவித மெனப்படும்? மேல் அத்தியாயத்தில் சுசாதிகம் விசாதிகமுள்ள துவித மும், இவ்வத்தியாயத்தில் இஃது அச்சுசாதிக விசாதிகமின் றிய சுகதபேதமென்னும் கூடியிருக்குந் துவிதமுமாகின்றன.

அங்ஙனமன்று, இஃது அத்துவிதமே யெனின், பரமா த்மாவோடு சிற்சடங்கள் பிரிவற் றிருத்தலால் அத்துவிதமா

கின்றது. இவைகள், வியாப்பிய முற்றிருத்தலால் என்ன வெனப்படும்? வியாபக வியாப்பியம் ஏற்குங்காறும் கூடுந் துவிதமும், அங்ஙனமின்றி ஒவ்வொன்றும் தனித்தனி வெவ் வேறிடத்தது என்றேற்குங்காறும் கூடாத் துவிதமுமாகு மன்றே?

அன்றியும், வியாபக வியாப்பியமென்பது இருவகைத் தாயது. அவை—ஓர் பொருளின்கண் நின்று நிகழும் சினை குணம் தொழில் இம்மூன்றும் வியாப்பியமும், அவற்றுள் அப்பொருள் வியாபகமு மாகின்றன. அவை சாத்தனது உறு ப்பும் நிறமும் தொழிலும் போல்வன. ஷி பொருளின்கண் ணே நின்று நிகழும் மற்றோர் பொருள் இடம் காலம் இம் மூன்றும் வியாப்பியமும் அதனால் அப்பொருள் வியாபகமு மாகின்றது. அவை சாத்தனது ஆடையும் மணியும் ஆயுளும் போல்வன. முன்ஞான்று கூறிய சினை குணம் தொழில் மூன் றும் தற்கிழமையாகிய வியாப்பியமும், பின்ஞான்று கூறிய பொருள் இடம் காலம் மூன்றும் பிறிதின் கிழமையாகிய வியாபபியமுமாம். இவ்விருவிதவியாப்பியங்களில் எதுகூடுந் துவிதமெனப்படும்? எது கூடாத்துவித மெனப்படும்? தற் கிழமையாகிய வியாப்பியம் கூடுந்துவிதமும், பிறிதின்கிழமை யாகிய வியாப்பியம் கூடாத்துவிதமு மாகின்றன. இவற்றைப் போல், பரமாத்மாவும் சிற்சடங்களும் என்ன துவித மெனப் படும்? கூடுந்துவித மென்பதன்றே? மேன்மையான அத்து வித மென்பதற்குப் பொருளெங்கே? அத்துவித மென்பது ஷி காரணகாரியம் குணிகுண முதலிய துவிதபேத மற்ற தன்றே? கூடியிருக்கின்ற துவிதம் என்கிற இருபதங் களின் இடைக்கண் ஆகாரத்தை வருவித்து இதுவடமொழிச் சந்திகளில் ஒன்றென மயங்கி விசிட்டாத்துவித மென்ன லாமா?

இஃதன்றியும், சேதனசேதன உலகம் பரமாத்மாவின் குணபேதங்களா யிருக்கின்றமையின், இக்குணபேதங்கள் விகாரமெனப்படுமா? அன்றிச் சுயம்பெனப்படுமா? சுயம் பென்ப படுமெனின், சமட்டி வியட்டிகளாகக் காணப்பட்ட வைகளுள் ஒன்றேனுமுண்டா? இல்லையே! இருக்கின், கார ணகாரியம் கடந்ததா யிருக்கட்டுமே! ஒவ்வொன்று காரிய மாயினும் ஒவ்வொன்று காரணமாகவேனு மிருக்கின்றதன் றே? அவைகள் சுயம்பென்பதற்கு மூரணென்னையெனின், எதெது காரணப்படுகின்றதோ அதுவும் மேலொன்றுக் குக் காரியமெனப் படாதிருக்கட்டும்! அங்ஙன மில்லையே! முற்றும் காரியமயமா யிருக்கின்றதே! எங்ஙனமெனின், பிரு திவிக்கு வித்து காரியமாயும், அவ்வித்துக்கு அங்குரம் காரிய மாயும், அவ்வங்குரத்திற்கு இதழ் காரியமாயும், அவ்வித ழுக்குச் சாகை காரியமாயும், அச்சாகைக்குத் தளிர் காரிய மாயும், அத்தளிருக்கு அரும்பு காரியமாயும், அவ்வரும்புக் குப் பிஞ்சு காரியமாயும், அப்பிஞ்சுக்குக் காய் காரியமாயும், அக்காய்க்குக் கனி காரியமாயும், அக்கனிக்குப் பஞ்சு காரியமா யும், அப்பஞ்சுக்கு நூல் காரியமாயும், அந்நூலுக்கு ஆடை காரியமாயும், அவ்வாடைக்கு அலங்காரம் காரியமாயும், அவ் வலங்காரத்திற்குத் திருப்தி காரியமாயு மிருக்கின்றன. இங் ஙனமே ஏனைய ஒவ்வொன்றும் அபாவத்தை மேற்கொண்டு உதித்து ஒவ்வோர் முதலாகத் தோன்றுகின்றன. இவற்றால், சர்வமும் காரியமயமே யன்றிக் காரணமென்பது எஞ்ஞான் றும் எவ்விடத்தும் இல்லவேயில்லை! இங்ஙனமிருக்க, சுயம் பென்ப்படுவது ஏது? இன்றுகலின், சர்வமும் விகாரமென் பதற்கு மூரணின்றென்க.

அன்றியும், இவ்விகாரங்களனைத்தும் அசுத்தமெனப் படுமா? அன்றிச் சுத்தமெனப்படுமா? சுத்தமென்பதற்குத்

தோட மென்னையெனின், காரியமாகிற விகார்ரமென்பது சுத்
தத்துவ மாகுங்கால் காரணமாகிற நிர்விகார மென்பது அசுத்
தத்துவமாக்கும்! ஆங்காங்கும் தொழிலும் பண்புமாயுள்ள
அனைத்தும் விகாரமாயும், அசுத்தமாயு மிருப்பதன்றே? இங்
ஙனமிருக்கு மனைத்தும், மாறுந் தகைபதன்றே? ஆகலின்,
அநித்திய மென்பதற்கு முரணென்னை? மாறுத்தகையவை
கண்டிதப்பொருள்களா? அன்று! கண்டிதப்பொருள்க ளாகின்
றவே! கண்டிதமாகிய இவ்விகாரங்க ளனைத்தும் அநிருப்தி
யைத் தரற்பாலனவா? அன்றித் திருப்தியைத் தரற்பாலன
வா? திருப்தியைத் தரற்பாலனவெனின், இதுகாறும் பிர
மன் முதலிய சாவ உயிர்களில் எவ்வுயிர் திருப்தியடைந்தது!
சிற்றின்ப மென்னும் திருப்தியையேனும் பெற்றிருக்கின்ற
தேயெனின், அஃது நிலையற்றதாகலின் போலியின்ப மாகின்
றன. ஆகின்றதால், அவ்வவ்வின்பமும் ஈற்றில் துக்கமாய்
முடிகின்றது. முடிவதால், கெ தொழிலும் பண்புமாகிய
குணபேதங்கள் விகாரம் அசுத்தம் அநித்தியம் கண்டம் துக்
கம் ஆகிய இவ்வைந்துவித விபரீதமும் உற்றிருக்கின்றன.
உற்றிருக்கு மிவைகள் எந்த முதலை உடையன? பரமாத்மா
வாகிய முதலை யுடையனவனறே? நீலோற்பலம் செந்தா
மரை யென்புழி, நீலநிறமும் செம்மை நிறமும் எந்த முதலை
யுடையன? எந்த முதலையும் உடையனவன் றென்னலாமோ?
அவ்வவற்றிற்கு முதல் புட்பமன்றே? அவைபோல், கெ
குணபேதங்களாகிய விகார முதலியவைகள் பரமாத்மாவை
உடையனவாயின், இவற்றையுடைய பரமாத்மா என்னவெ
னப்படும்? கற்பனையுடைய தெனப்படுமன்றே? அப்பர
மாத்மா நிர்விகாரமாயும், சுத்தமாயும், நித்தியமாயும், அகண்
டிதமாயும், இன்னும் அனந்த இலக்கணங்களை யுடையதாயு
மிருத்தல்பற் விகார முதலியவைகளை ஏற்காதெனின், இவ்
விகார முதலிய அசுத்த குணங்களை ஏற்குமுதல் எது? பிர

கிருதி என்கிற மாயையேயெனின், அம்மாயையானது பரமாத்மாவுக்கு வேறு பொருளாக்கும்! ஆகவே, கூடாத்துவித மொன்று இருக்கின்றதாக்கும்!

அன்றியும், மாயை என்கிற ஓர் பொருள் தவிர மற்றவற்றிற்கு அப்பரம் வியாபகமாக்கும! இகனல் அரைப்பாகம் கூடும் துவிதமும் அரைப்பாகம் கூடாத்துவிதமுமாகின்றதே! ஷ சேதனாசேதன விகாரம் முதலிய குணங்களோடு அப்பிரகிருதியும் குணப்பகுதியன்றோ? யாவும் தற்கிழமைக் குணபேதங்களாகலின், அப்பரம் சர்வவியாபக மெனப்படுகின்றது. இச்சர்வமாகிய விகாரம் அசுத்த முதலியவைகளையுடையது பரமாத்மா ஆகலின், அப்பரம் விகார முதலியவையென்பதற்கு முரணின்றுமென்க. அங்ஙனமன்று,

திருமழிசைப்பிரான் பிரபந்தம்.

தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண் டடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவுஞ் சரிப்பவு
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்க ணின்றதே."

எனக் கூறியிருக்கின்றதால் அப்பரத்திற்கு என்னதோடமிருக்கின்றது? சலவியாபகத்தில்நின் றெழுகின்ற அலையாதிகளால் அச்சலம் விகாரமுதலியவைக ளாயிற்றோ? அதுபோல், பரமாத்மா இருக்கின்றதாமெனின், அலையாதி விகாரங்களாற் சலப்பொருள் விகாரமென்பதற் கியைந்ததன்றோ? ஏனெனின், அவ்வலையாதிகள் ஓர் மூதலன்றுகலினென்க. எங்ஙனமெனின், பிராதிபாலிக சத்தினவும் விவகாரிக சத்தினவு மிரண்டாம். அவற்றுள், பிராதிபாலிக சத்தினபது, தனக்கெனக் கிஞ்சித்தும் பொருளின்றிச், சொல்மாத்திரமாயும், தோற்றல் மாத்திரமாயு மிருக்கின்றது. அது கயிற்றரவுபோல்

வது. விவகாரிக சத்தென்பது ஐம்புலனுலும் அனுபவித்தற் கியைந்ததுபோ லிருக்கின்றது. அது சன்னிவிகாரம் கனவின் விகார முதலியன போல்வது. அலோபாதிகள் சலப்பொருளை யன்றி ஓர் முதலெனப்படுமா? படுமெனின், சலத்தையன்றி வேறுற்றிருக்கவேண்டும்! வேறுற்றிராவிடினும், அச்சலத் தின்கண்ணேநின்று நிகழுகின்றன வெனின், ஒருவன் அலை யால் மோதப்பட்டழி, சலப்பரிசமின்றி அலைப்பரிச மாத்தி ரந்தா னிருக்கின்றதாக்கும்! அலை மோதும் ஞான்று, சலம் எங்குபோயிற்று? இருப்பது சல இருப்பின்றித் தோற்றன் மாத்திரமாய் நிற்பது அலையுமாகின்றதே! இருக்கின்றதால் இவ்வலோபாதிகள் என்ன சத்தெனப்படும்! இருப்பின்றித் தோற்றுவதால் பிராதிபாலிகசத்தும், இத்தோற்றம் ஐம்புலா னுபவத்திற் கியைந்ததுபோ லிருத்தலால் விவகாரிக சத்துமா கின்றன. இங்ஙனமே, பரமாத்மா யதார்த்தமாயும், ஷி பிர கிருதி முதலிய சர்வ வியாப்பியங்களும் சொல்மாத்திரமும் தோற்றன்மாத்திரமாயும் ஆகின்றவே! ஷி திருமழிசைப் பிரான் திருவாக்கு அத்துவிதிகளுக்கு இணக்கமா யிருக்கின் றதே! அதை நாம் ஏன் எடுத்தாளவேண்டும்? நாம் ஆளவே ண்டியது பரமாத்மாவைச் சர்வவியாபகமெனவும், அவ் வியா பகத்தில் வியாப்பியமாய் நிகழும் பிரகிருதி முதலிய சேதனு சேதன மனேத்தும் குணபேதங்க ளெனவும், அன்றியும் அவை எதார்த்தமெனவு மன்றோ? இங்ஙனமிருக்க, அலோபாதி திட்டாந்தம் வருவித்ததென்னை? பரமாத்மா சொரூபம் கற் பனைகளுக்கு வியாபகமெனச் சொன்னால், அவ்வியாபகம் கிஞ் சித்தேனும் இழுக்குறுமா? எதார்த்தங்களுக்கு வியாபக மெனச் சொன்னால் அவ்வியாபகம் புரையுடைமையாய் முடி யுமே! குணபேதங்களுக்கு வியாபகமெனச் சொன்னால், அவ் வியாபகம் அக்குணபேதங்களுக்கு வரும் இன்ப துன்பம் இற த்தல் பிறத்தல் முதலியவை அப்பரமாத்மாவுக்கே வாய்க்

குமே! ஏனெனின், குணங்கள் ஒவ்வோர் முதலாகாமையினாலென்க.

குறள்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எனபதற்கு விருத்தமாக உணர்ந்து, அதாவது "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொரு ளப்படி காண்ப தறி வென்பது." இங்ஙன முணர்ந்து அப்பரமாத்மா இழிவுறு மாறு செய்வது ஓர் கற்புடை மகண்மேல் இல்லாப்பழியை உள்ளதாகச் சுமத்திக் களிப்புறுவதுபோலாம். அன்றியும்,

நாலடியார்.

"தெளிவிலார் நட்பில் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்று—ளிய
விகழ்தலிற் கோற லினிதே மற்றில்ல
புகழ்தலின் வைதலே நன்று."

என அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். என்னை! சுசாதிகம் விசாதிகம் சுகதபேதமென்னும் வஸ்து பரிச்சேத மின்றிய சுபம்பிரகாச வஸ்துவுக்கு, அறிஞர்கள் முனிவுறச்சுசாதிகமும் விசாதிகமும் இருப்பதாகக் கற்பித்துத் துவிதபட்சம் சாதிப் பதுபோல், நாம் மேலே சுசாதிகம் விசாதிகமிரண்டும் அவ்வஸ்து வினது குணபேதங்களெனச் சுவகதபேதம் சாதிக்கின்றதும் அவ்வஸ்துவுக்கு இழுக்கென்பதற்கு மூலமென்னை? வஸ்து வென்பது எங்ஙன மிருக்கவேண்டுமெனின், ஒப்பு உயர்வு தாழ்வு என்னு மிம்மூன்று மின்றியதா யிருக்கவேண்டு மென்க.

அங்ஙனந் தெளிதற்கன்றே மேலே காரணகாரிய முதலிய அபேதவாத மிருக்கின்றன? அக்காரணகாரிய முதலியவை

கள் இறந்து தானேதானுய்த் தெளிந்திருக்க வேண்டுமே! அங்ஙனம் தெளிதற்கு மூன்ஞான்று துவிதானுபவ சோபானமும் விசிட்டாத்துவிதானுபவ சோபானமும் வந்திருக்கின்றன! இதுகாறும் கூறிப்போந்த இத்துவித விசிட்டாத்துவித மிரண்டும் உயிர்கள் வழிப்படுதற் கியைந்த சோபானங்களே யன்றி, இவைகள் சித்தாந்தமன்று. சோபானங்களாமோவெனின், தானேதானுகத் தெளிவித்தற் கியைந்த துவிதம் விசிட்டாத்துவித மிரண்டுமே தீர்ந்தனுபவம் அன்றென்பதாயின், பரத்திற்குப் பரிபூரண தோடமும் விகார மூதலிய தோடங்களும் செய்விக்கும் இத்துவித விசிட்டாத்துவித மிரண்டுமா சித்தாந்த மெனப்படும்? பரமென்பது எங்ஙனமிருக்கச் சம்மதிக்கின்றதெனின், சுசாதி விசாதி சுகதபேதமென்னும் மூன்றும் கயிற்றின்கண் அரவுபோலிருக்கச் சம்மதிப்பதாமென்க. தானேதானுகத் தெளிவித்தற் கியைந்த ஒரு துவித விசிட்டாத்துவித மென்ப தெங்ஙனமெனின்,

அவிவிராம்டிலி இல்து எதார்த்த துவிதம்.

பதி பசு பாசம் என்னும் மூன்றில், பதியும் பசுவும் சித்துப்பொருளும் பாசம் சடப்பொருளுமாயினும், இவை அறியப்படும் பொருள்களா? அன்றி அறியப்படாப் பொருள்களா? பாசம் சடமாகலின், அறியப்படும் பொருளாகும். பதியும் பசுவும் அறிவுப் பொருளாகலின் எங்ஙனம் இவை அறியப்படுகின்றதெனின், பதி ஒன்றுளதென எங்ஙனம் ஏற்கப்படுகின்றது? பாசமாகிய பிரபஞ்சத்தாலெனின், அங்ஙனம் ஏற்பது அனுமான அளவை யெனப்படும். படினும், அவ்வளவையால் அறிந்து ஏற்பது எது? உயிரெனின், அவ்வுயிரால் அறியப்படுகின்றதன்றே? பாசமாகிய பிரபஞ்சம் இந்திரியப் பிரத்தியட்சமும் பரமாகிய வஸ்து மானதப் பிர

த்தியட்சமும் மாகின்றன. ஆகவே, இவ்விரண்டும் திரிசியப் பொருள்க ளென்பதற்கு முரணில்லையே! இல்லையாயினும், உயிரேனும் அறியப்படாத பொருளன்றேவெனின், உயிராகிய பொருள் அறிவாயினும் பரமாகிய அறிவு அறியப்படுதற் கியைந்திருப்பதுபோல, இவ்வுயிரும் அறியப்படுதற் கியைந்திருக்கின்றதன்றே? யாவும் உயிருக்குக் காணப்படுகின்றமையின், உயிர் எதற்குக் காணப்படும் தகையதெனின், உயிரென்பது அறிவாயினும் இஃது அவத்தாத் திரயங்களிலுள்ள காட்சிகளே உணருகின்றதன்றே? அவற்றை யுணருமிவ்வுயிர் நானென் றறிகின்றதா? அங்ஙனமின்றி அறிகின்றதா? நானென் றறிகின்றதெனின், எத்துணை நானென கின்று அறிகின்றது? உடற்றுணைபாக வெனின், அவ்வவ் வவத்தா உடற்றுணைபாகவா? அன்றி இச்சாக்கிரா வத்தை யுடற்றுணை மாத்திரமாகவா? அவ்வவ்வவத்தா உடற்றுணை யாகவெனின், அவ்வத்தத்துணையாக நின்றுணர்தலுக்கன்றே உயிர் என வழங்குகின்றது? அங்ஙனம் உயிரென வழங்கப் படினும் அஃது எதற்கு வழங்கப்படுகின்றது?

கூ அவத்தாத்திரய அகம்பொருளுக்கன்றே? அஃதன்றி எதற்குமல்லவே? அங்ஙனம் வழங்கப்படுவது என் றேகம் என்னிந்திரியம் என் அந்தக்கரணம் என இவை கிழமைகளாக வழங்கப்படுவனபோல், என் உயிர் என் உயிரென வும் கிழமையாக வழங்கப்படுகின்றது. அங்ஙனம் என்னுயிர் என வழங்கப்படுவதால், உயிர் அறியப்படும் பொருளாய் விடுமோவெனின், நானென்னும் அகம்பொருள் இலட்சியார் த்தப்பொருளா? அங்ஙனம் அல்லாப்பொருளா? அல்லாப் பொருளெனின், விடாநிட்டை கூடுவது யாதுக்கு? நானென் கின்ற அகம்பொருள் வெளிப்படுதற் கன்றே? நான் என க்கு வெளிப்பட்டுழி நான் ஆத்மா வென வழங்கப்படுகின்ற

தன்றே? அஞ்ஞான்று நான் உயிரன்றெனப் படுமன்றே? அவத்தாத்திரய திசைக்கண் நானென்பதற்கு உயிரெனவும், சமாதி திசைக்கண் ஆத்மா எனவுமாயின், இச்சுத்தாசுத்த இரண்டு தர்மமும் நானென்பதற்குக் கிழமைகளன்றே? இக் கிழமைகளில் எது தற்கிழமை எது பிறிதின்கிழமை யெனப் படும்? ஆத்மா தற்கிழமையும் உயிர் பிறிதின் கிழமையு மன்றே? இதனால், இவ்வுயிர் அறியப்படும் பொருளென்பதற்கு முரணென்னை? இவ்வுயிரென்பதே அறியப்படும் பொருளாயின் ஏனையிரண்டும் இவ்வுயிரால் கண்கூடாகவும் அனுமானமாகவும் அறியப்படும் பொருள்க ளென்பதற்கு முரணென்னை? இங்ஙனம் ஆராய்ந்ததால் தேர்ந்தது பதிபசு பாசமென்னும் மூன்றும் திரிசியங்களாயும், நானென்கிற போதம் திருக்காயும் முடிந்தன. முடியவே, உயிரென்பது அனுபவ அனுமான அளவைப் பொருளாயினும், தனக்கெனக் கிஞ்சித்தும் பொருளுண்டா?' எனினின், அறியாமையாய் முடிவதா லென்க.

எங்ஙனமெனின், இத்தூலமுதலிய உபாதித்திரயங்கள் தமக்கெனப் பொருளின்றித் தோற்றல் மாத்திரமாக இருப்பதைப் பொருளாகக் கொண்டது மயக்கமா? அன்றித் தெளிவா? மயக்கந்தானெனின், இம்மயக்கத்தால் அவ்வவ் வுபாதித்துணை நானென மருவியது யாதெனப்படும்? அஃதும் மயக்கமன்றே? இங்ஙனம் இரட்டித்த இம்மயக்கம் யாதெனப்படும்? அறியாமை யெனப்படுமன்றே? இவ்வறியாமை வடிவா யிருக்கின்றதன்றே சிவனெனப்படுவது? இரட்டித்த அறியாமையாயுள்ள சீவன் தனது உபாதான அதிட்டானத்தை எஞ்ஞான்றேனும் கிஞ்சித்தும் நாடுவதுண்டா? அங்ஙனம் நாடாமையாலும் அறியாமை யென்பதற்கு முரணின்று. இன்றுகவே, சொல்மாத்திரமாக வழங்கப்படுகின்ற

தன்றோ? இச்சொல் மாத்திரமாக உபாதித்திரய விபரீதாணு பவ அணுமானத்தால், ஓர் சீவப்பொருளுண்டென வழங்கப் படுகின்றதால், கற்பனையாகிற பாவனைத் தோற்றமாகின்றது. ஓர்பரம் உண்டென வழங்குவதும் சீவப்பொருளுண்டென் பதைப்பற்றியன்றோ? சீவன் என்பது இக்கதியாயிருக்கின், மேலை ஓர்பரம் உண்டென்பதும் எக்கதியெனப்படும்? அஃ தும் பாவனைத் தடிப்பன்றோ? ஆகலின், இவ்விரண்டும் பாவ னைத் திரிசிய மென்பதாயிற்று. ஆகவே, பிரபஞ்சம் தூலதிரி சிய மென்பதாயு மாயிற்றென்க.

இம்மூன்றும் திரிசியமாயின், இவற்றிற்குத் திருக்கென் பது யாது? அதிட்டானமாகிய அகம்பொருளன்றோ? சிவே சுரசகத்தென்பது மும்பொருளாயினும், திரிசிய மென்ப தில் ஒன்றன்றோ? இதனால், திரிசியம் ஒன்றும் திருக்கென் பது ஒன்றும் ஆக இரண்டாயிற்று. இவற்றையன்றித் துவித மென்பது ஏது? இங்ஙன மிருக்க, பதி பசு பாசம் இம்மூன் றும் வெவ்வேறு சத்துப்பொருளெனவும், இவற்றுள் ஓர் கூறுகிய மாயையினது காரியம் பிரபஞ்சமெனவும், இப்பிர பஞ்சம் அம்மூன்றைப்போல எதார்த்த சத்துப்பொருளென வும், இக்கூன்கு கூறுபாடுள் பரமென்பது எவற்றிலும் நிறைந்திருக்கின்ற தெனவும், அந்நிறைவில் அனைத்தும் தங்கி யிருக்கின்றதெனவும், அங்ஙனம் நிறைவுற்றிருத்தல் எள்ளுக் குள் எண்ணெய் பூரித்திருக்கின்றதுபோ லிருக்கின்றதென வும், முத்தியில் பதிப்பொருளும் பசுப்பொருளும் இரண் டறக் கலந்திருத்தலே அத்துவிதமெனவும் கூறுவதுதானே துவித சித்தாந்த மெனற்பாலது? ஆண்டான் எனவும் அடி மை எனவுமா யிருப்பதனால் துவித மென்பதேயன்றி வேறு விதத்தா லன்றெனின், விசிட்டாத்துவிதபட்சம் ஆண்டான் அடிமை என்பதல்லவோ? அதிற்கூறிய அடிமை இறைவனை

விட்டு நீங்காதிலகும் சேதனு குணமாயும், இதிற் கூறிய அடிமை இறைவனுக்கு அனுதி வேறுசத்துப் பொருளாயு மிருக்கின்றதெனின், அவ்வடிமை இறைவனது அம்சமாக லின் அஃது பந்தமுத்தி யிரண்டிலும் கூடியிருக்கும் துவித மும், இவ்வடிமை வேறு சத்துப்பொருளா யிருக்கின்றமை யின் அப்பந்தமுத்தி யிரண்டிலும் கூடாத்துவிதமுமா யிருக் கின்றன.

ஆகலின், இவ்விரண்டு பட்சமும் துவித மென்பதற்கு மூரணின்று. இங்ஙனமிருக்க, இறைவனென்பது ஒன்று ? அன்றி இரண்டா ? ஒன்றுகலின், அவ்வோரிறைவன் சில உயிர்களைத் தனது சேதனுஞ்சங்களாகவும் சில உயிர்களைத் தனக்கு வேறு சத்துப்பொருள்களாகவும் கொண்டிருப்பது மூண்டா ? இங்ஙனம் எவ்வெவ்வுயிர் எவ்வெப் பட்சத்தை அபிமானிக்கப்பட்டதோ அவ்வவ்வுயிரும் அதன் நிலை மைத்தா யிருக்கின்றதெனின், இவ்விரண்டு பட்சத்தையும் அபிமானிக்காதுழி அவ்வுயிர்கள் என்ன நிலைமைத்தா யிருக் கின்றன ?

ஆங்காங்குமுள்ள பட்சங்களில், எவ்வெப் பட்சங்களில் எவ்வெவ்வுயிர் அபிமானித்ததோ அவ்வப்பட்சத்தின் நிலை யையதாய் அவ்வவ்வுயிரு மிருக்கின்றனவெனின், அவ்வப் பட்சத்தில் நின்றும்மாறி வேறொன்ற எவ்வெப்பட்சத்தை எவ் வெவ்வுயிர் அபிமானிக்கின்றதோ அவ்வப்பட்சநிலையையதாய் அவ்வவ்வுயிரு மிருக்கின்றதாக்கும்! அன்றியும், மானுடராக் கையைப் பெறுமல் வேறொன்ற யாக்கைகளைப் பெற்றுள்ள உயிர் கள் அவ்விறைவனுக்குச் சேதனுஞ்சங்களா யிருக்கின்றனவா? அன்றி வேறு அனுதிசத்துப் பொருள்களாக யிருக்கின றனவா ? வேறு அனுதிசத்துப்பொருள்களாகவே இருக்கின் றனவெனின், அவைகள் இறைவனது சேதனுஞ்சங்களா

யிருக்கின்றனவென்று லென்னே ? உயிர்கள் அனந்தமாயி னும் இறைவன ஒன்றுதானே யெனின், அவ்வோரிறைவனுக்கு உயிர்கள் எவ்வாறிருக்கின்றன ? தனது சேதனம்சங்களா யிருக்கின்றனவா ? வேறு அனாதி சத்துப்பொருள்களாயிருக்கின்றனவா? இப்பட்சங்களனைத்தும்,

உத்தமவாதநூல்.

"உலகின் மதகிறுத்து முத்தமரே கேண்மின்
உலகமு நாமு மொருங்கே — நிலையின்றி
எங்கே வெளிப்படுதெ லெங்கே மறைதனிதம்
அங்கிருந்துங் காணுதெ னுய்ந்து."

என்று கூறியபடி, உலகையும் இவ்வுலகையறியும் நம்மையும் கற்பனை வியாப்பியமாகப்பெற் றிலங்கும் அதிட்டான அகம் பொருளைப் பரோட்சமாகவேனும் எட்டி யுணராமல், இவ்வுலகை ஏதார்த்த சத்துப்பொருளென மயங்கி இதற்குமேல் ஓரிறைவ னுண்டெனவும் மயக்க மிரட்டிக்கப்பட்டு, இது காரணமாகப் பற்பல வேறுபாடுகளைக் கற்பித்து அபிமானம் பிடிவாத முற்றிருப்பதனால், இவைகள் ஏதார்த்த துவிதமும் ஏதார்த்த விசிட்டாத்துவிதமு மாகுமோ ?

இவற்றுள், ஏதார்த்த துவிதமென்பது—மூன்ஞான்று அதிட்டான அகம்பொருள் திருக்காயும், தேகாதிப்பிரபஞ்சங்கள் திரிசியமாயு மிருப்பதில், தேகமுதலிய திரிசியம் பஞ்சேந்திரியானுபவமாயினும் இவை தோற்றல்மாத்திரத் திரிசியமா ? அன்றி இருப்புள்ள திரிசியமா ? தொழிற்குணம் தோற்றக்குண மயமாகிய மூவிதவிகார திரிசியமே யன்றிப் பொருளின்று. இவ்விதமாயுள்ள கற்பனைகளில் ஒன்றேனும் நானென்னும் அகம்பொருளைக் கிடைந்ததன்றுகளின், நானென்னும் அகம்பொருள் வேறென்பதல்லவோ? அஃது வெளிப்

படாக்காறும் நான் நான் என வழங்குவது சொல்மாத்திர மன்றே ? சொல்மாத்திரமாக வழங்குவது ஒன்றும் கற்பனை யேனும் கண்கூடாத் தோற்றும் பிரபஞ்சமொன்றுமாக இங் ஙனம் வழங்குவது தானே துவிதமெனற்பாலது ? அல்லவே! அன்னியமாகிய தேகாதிகள் நமக்கு விளங்குவதுபோல் நாமும் நமக்கு விளங்கினலன்றே துவிதமெனப்படும் ? நமது திருட்டியை அகமுகத்திற் றிருப்பில் நமது சுயம்பிர காசமும் புறமுகத்திற் றிருப்பில் சிவசுரசகத் கற்பனையும் விளங்கவேண்டுமே ? நமது திருட்டியைச் சிவசுரசகத் கற் பனைய மாத்திரம் நோக்கிக்கொண் டிருத்சற்குத் தானே ஒதுக்கப்பட் டிருக்கின்றது. அத்திருட்டியை அகமுகமாகத் திரும்புமாறு பழக்கிக்கொண்டுவந்தால் றீடித்தேனும் பழகித் திரும்பாதோ ? அங்ஙனம் மிகவும் கட்டமுற்றுத் திரும்பி னலன்றே நமது உண்மை வடிவம் விளங்கும் ? அஃது விளங் காக்காறும் ஷை திரிபதார்த்த நிச்சயம் சாதிக்கும் சொல்லா ற்றல் துவிதம்போலன்றே முடியும்! அங்ஙனமுடியின் விசிட் டாத்துவித மென்னும் கூடியிருக்கும் துவிதம் கைவல்லிய மாகாதே ! அஃது ஆகாதுழி ஈற்றில் அத்துவிதமென்னும் ஐக்கானுபவம் விளங்காதே ? ஆகலின், திருக்கும் திரிசிய மும் கண்கூடும் அனுபவமுமே ஷை எதார்த்தமாமென்க.

இஃது எதார்த்த விசிட்டாத்துவிதம்.

உருவம் அருவம் உருவாருவமாகிய சிற்சடபேத சர்வ மும் அவத்தாத்திரயத்தை விட்டதன்று. ஆகலின், அவத் தாத்திரயத்தைப் பிடிக்கின் அனேத்தும் வேறன்று. இங்ஙன மிருக்க, இவ்வவத்தாத்திரயம் கயிற்றரவு கானல்நீர் கனைக்கற் பிதம்போலாகலின், இக்கற்பிதங்கள் மாறிமாறித் தோற்று கின்றனவா ? அன்றி நிலையாயிருக்கின்றனவா ? மாறிமாறித் தோற்றுகின்றனவெனின், எதன்பால் மாறுகின்றன ? ஓர்

பரத்தின்பாலென்னின், அவத்தாத்திரயம் மாறுகின்றதை உணருகின்றது எது? அப்பரத்தானெனின், அங்ஙனம் மாறி மாறித் தோற்றுதலாலுண்டாம் இன்பதுன்பானுபவம் யாருக்கு? நமக்கெனின், இவ்வவத்தைகளுக்கு இடமாயிருந்து உணர்தலுக்கு ஓர் பரமும், இன்பதுன்பம் அனுபவித்தற்கு நாமுமா? அங்ஙனமாயின், நாம் உணருகின்றது எதை? அப்பரத்தை உணருகின்றதாக்கும்! நாம் சுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டே பரத்தை உணருகின்றதும் அப்பரம் அவத்தாத்திரயங்களுக்கு இடமாயிருந்து அவற்றை உணருகின்றதுமா? இஃது விந்தையினும் மிக்க விந்தை! நாம் நிட்டை கூடுவது யாதுக்கு? பரத்தை உணருகிறதற்கெனின், அதற்கு நிட்டைகூடுங்காறும் நாம் எதை உணருகின்றனம்? அவத்தாத்திரயங்களை அன்றி வேறல்லவே! அங்ஙனம் அவத்தாத்திரயங்களை உணர்ந்துகொண்டிருக்கும் நமக்கு அவை எங்கிருந்து காணப்படுகின்றன? வேறொன்றிலெனின், நாம் எங்கிருந்து உணருகின்றன மெனவருமே?

அன்றியும், அவத்தாத்திரயங்கள் மயக்கமா? அன்றித் தெளிவா? மயக்கமன்றெனின், இவ்வவத்தாத்திரயங்களில் பொருளல்லாதது பொருளாகத் தோன்றுது பொருள் பொருளாகத் தோன்றட்டுமே! இதனால், இவைகள் மயக்கமென்பதற்கு விருத்தமென்னை? இன்றுகலின், இம்மூவித மயக்கமும் யாருடையது? பரத்தினுடையதா? அல்லவே! நம்முடையதாகலின், இம்மயக்கங்கள் பிறிதின்கிழமை என்பதாயிற்று. ஆயினும், இம்மயக்கத்திற்கு ஆதாரம் யாது? பரமென்பதா? அல்லவே! அஃதும் நாமென்பதன்றே? இதனால் என்ன ஆயிற்றெனின், அவத்தாத்திரயம் முதலிய சர்வ கற்பனைகளுக்கும் நானென்னும் போதமானது வியாபகமாயும் சாட்சித்துவமாயு முடிந்தன.

இவற்றிற்கு ஐயமிருக்கின், அவரவரும் நிட்டைகூடிப் பார்க்கில் நன்கு விளங்கும். அந்நிட்டை கூடுதற்கு ஏது வென்னவெனின், ஷ அவத்தாத்திரயம் முதலிய சர்வசரா சரமும் கயிற்றரவு கானல்நீர் முதலியவைகள்போ லெனத் தக்கவா றாராய்ந்து தெளிவுற் றிருத்தலாமென்க. இங்ஙனந் தெளியாமலும் பின்ஞான்று அவ்வவத்தாத்திரயம் முதலிய வைகள் தத்தமது சிந்தையிற் படாதிருக்கின்ற நிட்டைகூடி நிலைக்காமலும், அதன் பின்ஞான்று நாளுகும் வியாபக விளக்கத்தைக் கண்டுகண் டின்புறுமலும், அவ்வியாபக விள க்கத்தோடு ஷ கற்பனைகளாகிய நாமரூப வியாப்பியங்களை யும் ஒருங்கேகண் டுணராமலும் வாளா போவதென்னை ?

ஞானவாசிட்டம்.

"நானெனும் பொருள்கா ணுதோர்
ஞானவா காயங் காணர்
நானெனும் பொருளைக் கண்டோர்
ஞானவா காய மாவார்
நானெனு மகங்கா ரக்கார்
ஞானவிண் மதியை மூடி
ஞனெனுப் பரம வாம்ப
னன்மலர் விரியா தன்றே." என்றும்,

கைவல்லிய நவநீதம்.

"பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமனு
பவம் விடாமற்
பலமலரின் மதுப்போலச் சச்சிதா நந்தமொன்றும்
பரமார்த் தத்தைப்
பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப்
பார்த்த போது
பலவடிவாஞ் சராசரமித் திரங்களெலாந் தோன்றுமொரு
பெருமா னனே."

என்றும் கூறிய இவ்வனுபவ ரசங்களை இனியேனும் கேள்வியுற்று உள் நோக்கிற் சென்று நிலைத்திருக்கலாமே! இதற்கு முக்கென்னை? அன்றியும், விசிட்டாத்துவிதமென்பது தானே தானுகத் தெளிதற்கு முன்னூன்று நானென்பது யாது, யாதென ஆராய்ச்சியிற் செல்லும் இடைக்கண் விளங்கிய ஆகார ஆதேய மிரண்டையும் ஒருங்கேகண் டனுபவிக்கு நிலையா? அன்றி வாதிட்டுக்கொண் டிருத்தற்குக் கற்பித்ததா? கற்பித்த தன்றெனின், சர்வமும் மித்தையாமனுபவம் முன்னூன்று வரவேண்டுமே! அவ்வனுபவம் வாராவுழி, பின்னூன்று வியாபக வியாப்பியானுபவம் வாய்ப்பது எங்ஙனம் கூடும்? அம்மித்தையானுபவமும் இவ்வியாபக வியாப்பியானுபவமும் வாராவுழி, சற்றில் அகம்பொருள் ஏக மேவாத்வைதானுபவமாதற் கெங்ஙனங் கூடும்? சுத்த துவிதானுபவம் முதலிய இம்மூவித அனுபவமும் வாய்ப்பதற்கே சர்வம் மித்தையென உபநிஷத் கோஷ்டிக்கின்றனை உள்ளவாறே ஏற்கற்பாலதென்க. இதுகாறும் கூறிப்போந்த ஏகாத்த துவிதானுபவத்திற் குதாரணம்:—

ஞானவாசிட்டம்.

"செங்கெல்வா லினுஞ்சற்றுகிச் செகங்களுக்
கயலா யென்று
மன்னுது மெனக் கொள்போத மற்றையாங்
காரமாகும்."

என்றும்,

தத்துவராயர் பாடுதுறை.

"தோற்றர வாகத் துணிந்தவு செங்களூர்
சேருகமோ கங்கை தந்தவு செங்களூர்
சாற்ற லுடையார்க் கடைந்தவு செங்களூர்
ரானந்த மாயே யிருக்குமூ செங்களூர்."

என்றும் கூறியவாற்றுற் காண்க. விசிட்டாத்துவித மென்ப தற் குதாரணம்:—

பகவத்கீதை.

"யாவனெருவ னெனையெல்லா வுயிர்களிடையு மென்னிடையே
மேவவெல்லா வுயிர்களையும் வேறுகாமை மெய்காண்பான்,
றேவர்பகைமுன் செயித்தோனே யவன்யாதேனுஞ் செய்திடினு
மாவவனு கின்றேனு னதின்யாதேனு மையமுறேல்." என்றும்,

ஞானவாசிட்டம்.

தானது மிருதொய்தா மாகாயத்திற்
சகத்திரளாஞ் சித்திரத்தைத் தானேகோட்டு
மானுத வுலகமெலாந் தனதுசோதி
யாதலினு லதற்குவே றயலொன்றில்லை
நீநானுஞ் சகபேத வடிவந்தானு
நிலைநிற்க வதன்பொருளாய் நீங்காதென்று
நானுவரம் பொருட்புணர்வா னடந்ததாகு
நடக்கவிட மிலாமையினு னடவாதாகும்."

என்றும்,

"எழுதுவோனு மெழுதிடமு மெதிர்காண் பொருளு
மிலதாகி
வழுவிலாத விண்ணிடையே வந்துதோன்று
மோவியந்தான்
பழுதின்மேவுந் தனைத்தானே பாராதிற்கும்
பலபொறியு
நழுவுதுயிலி னுலின்றி நனவான்மேவுங்
கனவொக்கும்."

என்றும் கூறியவாற்றுற் காண்க.

இம்மது அத்துவிதம்.

இவ்வத்துவிதம் மேற் மகாவாக்கியங்களில் எந்த வாக்கி யத்துக் கியைந்ததெனின், சாமவேத தத்துவமசி வாக்கியத்

துக் கியைந்திதென்க. அத்தத்துவமசி வாக்கியம் துவிதம் விசிட்டாத்துவிதம் என்னு மிரண்டுக்கு மியைந்திருக்க, இவ் வத்துவிதத்துக்கும் எங்ஙன மியையுமெனின், ஷி துவித முதலிய மூன்று பட்சங்களையும் விளக்கும் அத்தத்துவமசி யென்கிற மூப்பதத்துள், அசி என்கிற கடைப்பதத்திற்கு ஆனைய் என்கிற பொருள் இறந்த ஞான்றதாக ஏற்றி வழங்கி னும் பேதமிருக்கின்றது. எங்ஙனமெனின், துவிதபட்சத் தில் மதிபோல் முகம் பவளம்போல் வாய் என்னு மிவ்விரு மொழிகளுள்ளே போல வென்கிற உவமையுருபு குன்றி மதி முகம் பவளவாய் என வழங்கப்பட்டு வருவனபோல், தத்துவா துவம் தத்துவமென வழங்குகின்றது. அவற்றுள், தத் என் பது பரம் இவா என்பது போல என்னும் உருபுகுன்றிய தொத்துக் குன்றித் தத் துவம் என்றாய், அதனுடன் அசி என்பது கூடி வழங்குகின்றது. இதற்குப் பொருள எங்ஙன மெனின், தத்வா என்பது பரத்தைப்போல துவமென்பது நீ அசியென்பது ஆனாய் என்றாகின்றது. அது முத்தியில் பரவத்துவைப்போல் உயிராகிய நீ ஆனையென்றாகின்றதென்க.

இவ்வாக்கியத்துள், ஈற்றில் ஆனாய் என இறந்த ஞான்ற தாக இருப்பதில் பேதமிருக்கின்றதாய் முன்னார்க் கூறிய தைப் பற்றி யூகிக்கின், ஆனையென்பதனால் முத்தி யெய்து தற்கு முன்னமே நாம் பரவத்துவைப்போல் ஆயிருக்கின்றோ மென்றாகின்றது. அங்ஙனமாயின், நாம் கர்மோபாசனை ஞான காண்டிகளாய் முயல்வானேன்? முயனற பின்ஞான்றவ்றோ பரவத்துவைப்போல் ஆகவேண்டும்? வாக்கியத்தின் பதம் முன்ஞான்றே ஆயிருக்கின்றதாய் நிகழுகின்றதே! அங்ங னம் நிகழுவானேனெனின், எவ்வெவ்வுயிர் கர்மகாண்ட விதி விலக்கின் பீடி சற்றும் வழுவின்றி ஒழுகுகின்றதோ அவ்வவ் வுயிரும் நீடித்த பின்ஞான்று உபாசனை ஒழுக்கத்துக் குடன்

படுதற்குச் சற்றேனு முரணுண்டா? அவ் வொழுக்கமும் நன்கு முதிர்ந்துழி பின்ஞான்று ஞானகாண்ட ஒழுக்கத்துக் குடன்படுதற்குச் சற்றேனு முரணுண்டா? இம்மூவித ஆற்ற லும் முடிந்த பின்ஞான்று முத்தியில் ஷை உயிர்கள் பரவத்து வைப்போ லாகிறதற்குச் சற்றேனு முரணுண்டா? இன்றுக வின், இத்திண்ணம் நோக்கி ஆவாய் என்னது ஆஞய் என் னும் பதம் வந்து நிகழுகின்றது. என்னை, எறும்பு மூட்டைக் கொண்டு திட்டையேறின் பெய்தது மழை என்றும், காலான் முதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்ததாமே என்றும் கூறியவாற்றுற காண்க.

இரண்டாவது விசிட்டாத்துவித பட்சத்தில் உயிர்கள் இயற்கையில் அப்பரத்தினது அம்சங்களா யிருக்கினும், முத்தியில் ஷை துவித பட்சத்தைப்போல் ஆவாய் என்னது ஆஞய் என இறந்தஞான் றனுபவமாகப் பொருள்கொண்டு தஸ்யாபாவ தத்துவம் என நிகழ்கின்றது. அவற்றுள், தஸ் யா என்பது பரத்தினது பாவமென்பது தன்மையா யிருக் கின்று யென்றுகினறது. அப்பதங்களுள், நீ யென்பது தோ ன்று எழுவா யாகினறதென்க. என்னை, பிராமணத்துவம் பிராமணரின் றன்மையெனலும் சூத்திரத்துவம் சூத்திரரின் றன்மையெனலும் போலாமென்க. ஆவாக்கியம் அத்துவிதத் துக் கியைந்தது எங்ஙனமெனின், இவ்வத்துவிதம் ஷை துவி தம் விசிட்டாத்துவிதங்கள்போற் குறுக்கு நெறியிற் செல் லாது நேர்நெறித்தாச் சென்றது. அதாவது, தத் என்பது பரமெனவும் துவம் என்பது நீயெனவும் அதாவது ஜீவாத் மனவும் அசி யென்பது ஆஞயெனவும் அதாவது ஐக்கிய மெனவும் நேராகவே பொருள்கொண்டு, ஷை தற்பத அர்த் தத்துக்கும் துவம்பத அர்த்தத்துக்கு மிடைக்கண் தேற்றே காரம் குன்றி யிருக்கும். அவ்வேகாரத்தை வருவித்து தத்

என்கிற பதப்பொருளாகிய பரமே துவம்என்கிற பதப்பொரு ளாகிய உயிரெனவும், இத்துவம் என்கிற பதப்பொருளா கிய உயிரே அத்தத் என்கிற பதப்பொருளாகிய பரமென வும், அசி என்கிற ஐக்கியத்தைக் கொடுத்து யுத்தி அனுபவத் தோடு வழங்குகின்றதென்க. எங்ஙனே, சோ அயம் தேவ தத்த னென்புழி, சோ என்பது அவனே அயம் என்பது இவனெனவும், அயம் சோ தேவதத்த னென்புழி, அயம் என்பது இவனே சோ என்பது அவனெனவுமாம். அவை, தேவதத்தனென்னும் ஓர் புருடன் கதம்செய்த புண்ணிய பரிபாகத்தால் காசியில் அரசனுகவும் பின்னர் அவ்விராஜ போகத்தில் விரக்திதோன்றுழி சிதம்பரத்தில் சந்நியாசியாகவு மாறு னென்புழி, ஆங்கு அவ்வரசனு யிருந்த தேவதத்தனே ஈங்கு இச்சந்நியாசியாயிருந்த தேவதத்தனெனவும், ஈங்கு இச்சந்நியாசியாயிருந்த தேவதத்தனே ஆங்கு அவ்வரசனு யிருந்த தேவதத்தனெனவும் ஏகத்துவம் வாய்த்திருத்தல் போலாமென்க.

இதுபோல், தாட்டாந்தத்தை இன்னும் நன்கூகிக்குதும். எங்ஙனமெனின், ஷை வாக்கியத்தில் ஆனையென்னும் ஐக்கத் துவமானது முதற்பதம் இரண்டாம் பதம் அர்த்தத்தோடு வழங்கும் ஞான்று தேற்றேகாரமாய் விரிந்தும், அவ்வர்த்த மின்றி அவ்விருபதமாத்திரம் வழங்கும் ஞான்று அத்தேற் றேகாரம் தொக்கியும் வருகின்றது. அப்பதங்கள் அர்த்தங்க ளோடு வழங்குஞான் றெங்ஙனம் விரிகின்றதெனின், அது என்னும் பிரமமே நீ என்னும் கூடஸ்தனெனவும் நீ என் னும் கூடஸ்தனே அது என்னும் பிரமமெனவும் அத்தேற் றேகாரம் விரிந்து வருகின்றது அர்த்தமின்றிப பதமாத்திர மாய் வழங்குஞான் றெங்ஙனம் தொக்கியிருக்கின்றதெனின், அது நீ ஆனையெனவும் நீ அது ஆனையெனவும அவ்வேகாரம்

தொக்கி வருகின்றது. அவை பரமாத்மா பிரத்தியகாத்மாக் கியமெனவும் பிரத்தியகாத்மா பரமாத்மாக்கியமெனவும் ஐக் கிய பதம் விரிந்து வழங்குகின்றதாம். இவ்வைக்கியத்துவம் இடைக்கண் வரும்போது தேற்றேகாரமாகவும் ஈற்றில் வரும்போது ஆனெனவும் வழங்கி வருகின்றது. மேலும், இவ்வசியென்கிறபதம் தேற்றேகாரமாகவும் எதிர்ஞான்றைக் கிஞ்சித்தும் தழுவாமல் இறந்த ஞான்றையே தழுவி ஆனெ னவும் வழங்குகின்றதென்க. இவ்வரிய வாக்கியப்பொருள் கள் வாச்சியார்த்தமட்டிலிராமல் இலட்சியார்த்த அனுபூதிப் பொருள்களாகலின், இவற்றுள் மூதற்பதம் இடைப்பத பிர ண்டுள் மூதற்கண் தொம் எனவும் இடைக்கண் தத் எனவும் அமைத்துத் தொந்தத்தசியென்னுது தத் தொம் அசி யென் பானேன் ? இவ்விருவகையில் முக்கியமானது தத் தொம் அசி யென்பதா ? அன்றித் தொந்தத் தசி யென்பதாவெ னின், இரண்டும் முக்கியமேயாயினும், தொந் தத் தசி யென் பதே மிக்க முக்கியமாமென்க. எங்ஙனமெனின், தத் தொம் அசி எனத் தெளிந்திலங்குந் தெளிவினுல் அவித்தையும் தொம் தத் அசி எனத் தெளிந்திலங்குந் தெளிவினுல் மாயை யும் நசித்தற் கியைந்திருத்தலா லென்க.

இம்மாயை அவித்தை யிரண்டில் முன்ஞான்று கெட வேண்டியது யாதெனப்படும் ? அவித்தை யன்றே ? அவ் வவித்தை எத்தெளிவினுற் கெடவேண்டியது ? தத் தொம் அசி எனத் தெளிந்திலங்குந் தெளிவினுலன்றே ? பின்னர் மாயை என்பதும் கெடவேண்டுமே ? அஃது எத்தெளிவாற் கெடவேண்டியது ? தொம் தத் அசி எனத் தெளிந்திலங்குந் தெளிவினுலன்றே? ஆகலின், கூட மகாவாக்கியம் தத் தொம் அசி என்ப் பிறந்திருக்கின்றது. தத் தொம் அசியால் அவித் தை கெடுவது மிக்க அரியதாயினும், பின்ஞான்று மாயை

கெடுவது திரிலோகத்தினு மிக்க அரிதெனப்படுமென்க. ஆகலின், முதற்றெளிவான நானென்கிற தொம்பதார்த்தி சோதனையும், இரண்டாவது தெளிவான அவனென்கிற தற்பத சோதனையும் செய்து நிலைக்கவேண்டுமென்க. அன்றியும், மூன்ஞான்று தத்துவமசியெனத் தெளிந்தனுபவியாதுழி, அதாவது (அதுவே நானெனத் தெளிதல்) பின்ஞான்று தொந் தத்தசி யெனத் தெளிந்தனுபவித்தற் கியையாது. அதாவது (நானே அதுவெனத் தெளிதல்). இவற்றுள், அது நானென் பது பிரமமகமெனவும், நான் அதுவென்பது அகம்பிரம மெனவுமா மென்க.

அங்ஙனமாயின், பிரமமென்பது நானெனப்படுமா? அன்றியும், நானெனவு நிகழுமா? பிரமமென்பது தேகேந் திரியாதிகள் இறந்ததாயிற்றே! அது எங்ஙனம் நான் நானென நிகழும்? அப்பிரமம் நானென்பதற்கே இயையா திருக்க, அது நானென நிகழுவதெங்ஙனம்? நானென்பதோ வெனின், தேகேந்திரியாதிகளைச் சுமந்து சுமந்து இன்ப துன் பங்களில் மொத்துண்டு மொத்துண்டு திரிபவனுயிற்றே! ஆகலின், இந்த நானென்பது எங்ஙனம் அந்தப் பிரமமெனப் படும்? அந்தப் பிரமம் நானெனவும் படாது, நானெனவுந் திரிந்துழலாது, இந்த நான் பிரமமெனவும் படாது, பின்னர் தானே தானுகவு மிராது. இவ்விரண்டும் இங்ஙனமிருக்க, அது நானெனவும் நானதுவெனவுந் தெளிதலே ஞானுனுபவ மென்றும் மோனுனுபவமென்றும் மயங்கி யிருக்கலாமோ வெனின், இவ்விரண்டனுபூதி பட்சமும் ஞானப்பியாச சாதக திசைக்கண்ணேயன்றி முடிந்த சாத்திய திசைக்கண்ணும் சாதகதிசைக்கு முன்னுமன்று. இச்சாதக திசையில் முன் ஞான்று அது நானென்றும் பின்ஞான்று நானதுவென்றுங் கூறுபவை நினைவுமாத்திரமாகவும் சொல்மாத்திரமாகவுமன்

றிக் கண்டறிந்தது ஞானமென்ற கைவல்லியநவநீதக் கவியிற் கூறியபடி, இலட்சியார்த்தமாகப் பன்ஞான்றும் பழகாவிடின், நான் நீ என்கிற இருமையு மிறந்து தானே தானுதற் கியையா தென்க. பிரமமகம் அகம்பிரம மென்பதற் குதாரணம்:—

ரிபுகீதை மகாவாக்கியம்.

"பிரமமக மகம்பிரம மென்றிவ் வண்ணம்
பேதமிலா வகம்பிரம நிச்ச யத்தைச்
சரிவரவே சந்ததமும் பழகா நின்றோன்
சத்தியசிற் சுககனமாம் பரமே யாவ
னரியவனே யாதலினு னீயெப் போது
மன்புடனே யகம்பிரம நிச்ச யத்தைப்
பிரிவறவே பழகியதாற் பேதந் தீர்ந்து
பின்னமிலா வகண்டபரப் பிரம மாவாய்." என்றும்,

"அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றநவரத மதிதிடமாய் நிச்ச யித்து
மிகும்பிரம பாவனையே தொடர்பாய்ச் செய்து
மேவியவித் துவிதமெலா மிக மறந்தே
யகம்பிரம ஞானமது நிருவி கற்ப
மானவுட னசஞ்சலமாய்ச் சிலையே போலத்
தகும்பிரம வடிவாகித் தளர்வு தீர்ந்து
தடையற்ற வாநந்த மனுப விப்பாய்." என்றும்

கூறியவாற்றுற் காண்க.

அது நானெனவும் நானது வெனவுமாகிய ஒருமை யென்பது ஷி சாதகக் முதிர்ச்சியில் வாய்க்கின்றதாயின், அச்சாதக மில்லாஞான்றில், அவ்வொருமை இல்லையென் றுகின்றது. ஆகவே, ஷி தத்துவமசிவாக்கியம் ஈற்றில் எதிர் ஞான்றைத் தழுவி நிகழாது இறந்த ஞான்றைத் தழுவி நிக ழுவானெனினின், அவ்வொருமை யென்பது சாதக முதிர்

ச்சியில் மாத்திரமன்று, அச்சாதக மில்லாத எஞ்ஞான்றும் மாறுதிருக்கின்றதென்க. அவ்வொருமை இஞ்ஞான்றிருக்கு மாயின், எஞ்ஞான்றும் பிருக்கு மென்பதற்கு மூரணின்று. ஆகலின், இஞ்ஞான்றிருக்கின்றதாவெனின், அவித்தை மாயையென்னு மாரோபத்தால் நீ நான் என்னுந் துவிதங் காண்டலேயன்றி, அந்த துவிதாரோபத்தை இஞ்ஞான்றே நீக்கிக் காணுழி அவ்வொருமை இஞ்ஞான்றே விளங்குதற்கு விருத்தமின்றென்க. எங்ஙனமெனின், முன்னர் இருமையியலுண்டாந் தோடத்தை யூகித்துப் பின்னர் அவ்வொருமை இஞ்ஞான்று பிருப்பதைப் பற்றி நன்கு யூகிக்குதும். என்னை? பிரமமென்பது நானன்றுயின், பிரமத்திற்கு நானென்பது வேறெனப்படும். நானென்பது பிரமமன்றுயின், நானெனற்குப் பிரமமென்பது வேறெனப்படும். படவே, பிரமமென்பது ஓர் பொருளும் நானென்பது ஓர் பொருளுமாகி இரண்டுபட்டுப்போம். போகவே, இவ்விரண்டும் கண்டப்பட்டுவிடும். விடவே, பிரமமென்பது பரிபூரணத்துவ மில்லாமற் போம். போகவே, பிரமமென்பது ஓரிடத்ததும், இதனல் நானென்பது பலவென் றேற்படுதலின், ஒவ்வோர் நானும் ஒவ்வோரிடத்ததுமாய் முடியும். முடியவே, அவ்வொவ்வோரிடமும் வேறே ஓரிடத்ததாக வேண்டுமென வரும். வரவே, அவ்வோரிடமானது யாதெனவருமே! இதற்கென்செய்தும்! நானென்பது எண்ணரியதாயினும், ஒவ்வொரு நானுக்கும் உள்ளும் புறமும் இடையும் நீக்கமின்றி விரிந்திருக்கின்றதால், எங்ஙனம் அப்பிரமம் அபரிபூரணமெனப் படுமெனின், பரமாணுவுக்கும் பரமாணுவும் நீக்கமின்றிய அப்பரமாகிய நிறைவில் மற்றோர் பொருள் அணுத்துணையேனு மிருக்காதாயின், எண்ணரிய நானென்பவைகளும் பாஞ்சபூதமும் அவற்றுலாகிய அண்டநிரைகள் பலகோடிகளும் அவ்வவ்வண்டங்களுக்கியைந்து நிகழும் எண்ணரிய பிரதிகங்களும் எங்ஙன

மிருந்து நிகழும்? அனைத்து மிருந்துதானே நிகழுகின்றதெனின், இதனால் அப்பரவத்து நிறைவெனப்படாதே! பரமென்பது நிறைவற்று மிருக்குமாவெனின், அந்நிறைவில் தங்கி நிகழுகின்றவை பொருள்களெனப்படுமா? படுமெனின், பாஞ்ச பூத பவுதிகமயமாயுள்ள இப்பிரபஞ்சத்துணை அப்பரவத்து இல்லையெனப்படாதோ? படாதெனின், அந்நிறைவிலிருக்கும் மகத்தாகிய இப்பிரபஞ்சப்பொரு ளில்லையெனப படாதோ? இம்மும் படாதெனின், ஓர் மசகமானது அகம்புற மிறந்திருக்கும் இவ்வாகாயத்தை விழுங்கியிருக்கின்ற தென்றுற்போலாம். இம்மது விநதையினும் மிக்கவிநதை யென்க.

இது நிற்க. மூன்ஞான்று பிரமமே அகமெனவும்அகமே பிரமமெனவுமா யிருக்கின்ற அவ்வொருமையானது இஞ்ஞான்று மிருக்கின்றதென்பதைச் சற்றாகிபபம.

எங்ஙனமெனின் 1-வது பிரமமக மென்பது பிரமன் முதலாக நான் நானென நிகழும் ஒவ்வோருயிரும் நானென்னுதலின்றுகலின், அவ்வவ்வுயிருக்கும் நானென்பது அவ்வவ்வுபாதித்திரயமா? அன்றி வேறு? அவ்வவ்வுபாதித் திரயந்தானெனின், ஒவ்வோ ருயிருக்கும் மூன்று மூன்று நான் இருக்கின்றதாகின்றதே! ஒவ்வோருயிருக்கும்ஒவவோர் நானமேறு இருக்க வேண்டியது? அவ்வவ் வுபாதிதிரயம் ஒன்றுள்ளஞான்று ஒன்றில்லாமற் போகின்றன. போகவே, ஒவ்வோருயிரும் நானென்னுத நேரமுமுண்டா? இல்லையவேறு? இல்லாவுழி, இம்மூன்றில் எது நானென்பதற்கியைந்தது? ஒனறுமல்லவே! அல்லாவுழி, பின்னர் எது நானெனப்படுவது? ஆங்காங்கும் அவ்வவ் வுயிரேயெனின், அவ்வவ் வுயிரும் அறிவுவடிவன்றி வேறன்று. அறிவென்பது எங்ஙிலைமைத்தாயது? ஙிலைமையாவது இருவகையின. அவை—அவத்தாதிரயமாகிய அஞ்ஞானநிசை யெனவும், இருவித சமாதியாகிய ஞான

திசையெனவு மாகின்றன. ஆகவே, இவ்விரண்டு திசைக்கண் ணும் கூடி அறிவு இருக்கின்றது. இருக்குமவ்வறிவுக்கு இவ் வஞ்ஞான திசைக்கண் இவ்வுபாதித்திரயம நாஞகத் தோறு கின்றதால் இநத நான் அகலுகிறதற்கன்றே,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்."

எனக் குறள் மகாவாக்கியம் பிறந்திருக்கின்றது. இந்த உபா திதிரய நானைக் கொய வேண்டுமாயின், மேலே எந்த நானை நானெனக் கண்டு பிடிக்கின்றது? இந்த நான் ஆரோபித நாண கலின், அந்த நான் அதிட்டான நானன்றே? அவவதிட்டான நான் கூடி இருவகைச சமாதியில் வெளிப படுகின்றதன்றே? இந்த உபாதித்திரய நான் விகாரமெனப படுமாயின், அநத நான நயம்பெனபபடுமன்றே? அசுயம்பாகியவியாபகவின் கதனதைக் கண்டுபிடிக்க வேண்டு மென்பதற்கே,

ஞானவாசிட்டம்.

"நானெனும் பொருள்கா ணுதோர்
ஞானவா காயங் காணர்
நானெனும் பொருளைக் கண்டோர்
ஞானவா காய மாவார்
நானெனு மகங்கா ரக்கார்
ஞானவிண் மதியை மூடி
ஞனெனுப் பரம வாம்ப
னண்மலர் விரியா தன்றே."

எனக் கூறியிருக்கின்றது. இதனால் இவ்வியாபக விளக்க உணர்வையன்றிப பிரமமென்பது வேறெனபபடுமோ? உபா திதிரய விகாரத்தையன்றி அறியாமை யென்பது வேறெ னபபடுமோ? படாததால் அபரிநமம் நானெனப்படுமா? இவ்வறியாமையே நானெனபபடுமெனின், இஃதகல்வதற்கு

யானெனதென்னுஞ் செருக்கு அகலவேண்டு மென்பானேன்? அச்செருக்கு நானல்லவற்றை நானெனவும் எனதல்லவற்றை யெனதெனவும் மயங்கிய மயக்கமென்க. இம்மயக்கம் எதன்பாலதெனின், இஃது தொழிற்குணமா? அன்றித் தோற்றக்குணமா? தோற்றக்குணம் கண்கூடாக வேண்டும்! ஆகலின், தொழிற்குண மென்பதற்கு ஐயமின்று. இன்றுகே வே, இம்மயக்கம் உயிரினது எனபோமெனின், உயிரென்பது அறிவெனவும், அவ்வறிவு ஷே வியாபக விளக்கத்தையன்றி இன்றெனவும், அவ்வியாபக விளக்கமே பிரமமெனவும் முனனர்த் நிர்மானித்தோமாகலின், ஷை மயக்க மென்பது யாதின்பாலதென்பம்! பிரமத்தின்பால தென்போமெனின், அம்மயக்கம் என்னுடையதெனப் பிறிதின் கூறுமையாக மொழுங்குகின்றதே! இதனால் யாதின்பாலதென்பம்! நானென்பதன்பாலதெனின், நானென்பது பிரமமா யிருக்கின்றதே! இதனால், அம்மயக்கமாகிய அறியாண்மை நானென்பதை யன்றியும், அஃது நானென்பதன்றியு மிருக்கின்றதால், இவ்வறியாமை ஷே பிரமத்தின்கண் கயிற்றரவுபோ லிருக்கின்றது. இருக்கின்றதால், இஞ்ஞான்றும் நானென்பது பிரமத்தையன்றி வேறன்று யிருக்கின்றதென்க.

இன்பதன்பானுபவமும் பிறத்த லிறத்தல் முதலியனவும் யார்பாலதெனின், அறியாமையின்பாலதேயன்றிவேறன்றென்க. அவ்வின்பதுன்ப முதலியவைகளை அறியாமை அனுபவிக்குமோவெனின், அறிவென்பது அனுபவிக்குமோ? அறியாமை சடப்பொருளாகலின், எங்ஙனம் அனுபவிக்குமெனின், அறிவு சித்துப்பொருளாகலின் அஃது எங்ஙனம் அனுபவிக்கும்? இரண்டும் அன்றுயின், வேறேயிருந்து அனுபவிப்பது யாதெனப் படுமெனின்; ஒன்றை மற்றொன்றாக உணர்வது அறிவாயினும், அவ்வவஞரம் அஃதறியாமை யெனப்படுமா?

அன்றி அறிவெனப்படுமா? அறிவெனப் படுமெனின், உள்ளதை யுள்ளதாக உணர்வது அறியாமையாக வேண்டுமே! இஃது விந்தையெனப் படுமன்றே? உபாதித்திரயம் அவத்தாத்திரய முதலியவைகள் கற்பனைகளாகலின், இக்கற்பனை எதார்த்தமாக மயங்கின மயக்கங் காரணமாய் துன்பங்களை அனுபவிப்பது யாது? அம்மயக்கத்தையன்றி வேறே யாதிருக்கின்றது? அறிவாகிய நாம் அனுபவிக்கின்றோமெனின், அவ்வறிவாகிய நாம் இலட்சியப்பொருளா? அஃதல்லாப்பொருளா? அஃதல்லாப் பொருளெனின், கிட்டை கூடுவது யாதுக்கு? நாமென்பது வெளிப்படுதற்கன்றே? அங்ஙனம் வெளிப்படுவது யாதுபொருளாகின்றது? சுத்த வியாபக விளக்க உணர்வுப்பொருளாகின்றதன்றே? அவ்வியாபக விளக்க உணர்வையன்றி நாமென்பது ஏது? அவ்வியாபக விளக்க உணர்வாகிய பிரமமே நாமாயின், சுத்த இன்ப துன்ப முதலியவைகளை அனுபவித்தற் கிருப்பது யாது? ஒன்றை யொன்றுக உணரு மயக்கமன்றே? அம்மயக்கம் சிவனெனவும் சிதாபாச னெனவும், அறியாமை யெனவுமாகின்றது. ஆகவே, இவ்வறியாமை யுள்ளஞான்றும் பிரமமாகிய நானென்பது சுத்த சிவனெனவும், சிதாபாச னெனவுமாகின்றது. ஏதுபோலெனின், களிம்புள்ளஞான்றும் தங்கமானது செம்பு எனப்படுமாறுபோலன்று. ஏனெனின், செம்பென்பது தோற்றன் மாத்திரக் கற்பனையாயினும் தங்கமென்பதும் களிம்பென்பதும் ஒவ்வோர் பொருளாயிருப்பதனாலென்க. ஆகலின், ஒளியின் அபாவமே இருளெனப்பட்டது. அவ்விருள் உள்ளஞான்றும் பழுதையானது பாம்பாக இருக்குமாறுபோலாகின்றது. ஆகவே, கற்பனையாகிய பாம்பானது சரித்தல் கடித்தல் முதலிய புடை பெயர்ச்சியையுடையதாகக் காண்டலபோல் கற்பனையாகிய சிதாபாசனது இச்சாஞானக் கிரியையாதி புடைபெயர்ச்சி யுடைய

தாகக் காண்கின்றதென்க. இதனால் என்ன ஆயிற்றெனின், பழுதையானது யாதோர் செய்கையும் அற்றிருத்தல்போல், பரமாத்ம சொரூபமாகிய நானென்பது யாதோர் செய்கையு மற்றிருத்த லென்றுகின்றது. ஆகவே, இவ்வப்பியாச அனுபவம் பிரமமக மென்பதாயிற்று. அப் பிரமமக மென்பதற்கு தாரணம்:—

தத்துவராயர் பாடுதுறை.

"அஞ்ஞான காரிய மனைத்து மறவிட்டு
விஞ்ஞான மாஞ்மென் றுந்தீபற
வெளியாகி நின்றுமென் றுந்தீபற." என்றும்,

"அதுவேகா ணிதுவென்றுன் குரிய னருள்செய்ய
இதுவது வாகுமென் றுந்தீபற
இலக்கணைப் புகுந்ததென் றுந்தீபற." என்றும்,

நிஜானந்த உத்தியார்.

"தானுகி நின்ற தனித்த பரம்பொரு
ளானுகி நின்றேனென் றுந்தீபற
நாடிலொன் றில்லையென் றுந்தீபற." என்றும்,

ஈசுரகீதை.

"இந்த ஞானத்தை யெய்திய வின்பத்தா
ரந்த மில்பிர மத்துரு வாயினோர்
பந்த மேவிடார் பண்டுநின் றுமென்றே
யெதை யீறிலி யீச னியம்பினன்." என்றும்

வருவனவற்றுற் காண்க.

2-வது அகம்பிரமமென்பது.

இவ்வுபாதித்திரயம் கயிற்றரவு முதலியவைபோல் சொல் மாத்திரமும் தோற்றன் மாத்திரமுமா யிருப்பதால், நானன்

றென நியதி கூறியப்பட்டன. படவே, எது நானன்றென நியதி கூறியப்படாதது? நியதி கூறியப்பட்ட இவ்வுபாதித் திரயும் அவத்தாத்திரயம் அபிமானத்திரய முதலியவைகளுக்கு ஆதாரமாயும், சாட்சியாயு மிலங்கும் வியாபக விளக்கமன்றோ? அவ்வியாபக விளக்கமே நானெனத் தெளிந்தின்புற்றாற்போல் நான் அதுவெனத் தெளிந்தின்புற வேண்டுமோ? அனறி வேண்டாவா? இங்ஙனந் தெளிந்தின்புற்ற தெளிவானந்தமே நிரதிசயானந்த மாகலின், நான் அதுவெனத் தெளியவேண்டுவது எற்றுக்கு? அது நானென்பதற்குப் பொருத்த மிருக்கின்றது, நானது வென்பதற்குப் பொருத்த மில்லையே! அது நானென்பதனால் அதுவே நானெனப் படுகின்றது. இதனாலன்றோ தத்துவமசி வாக்கியம் பிறந்திருக்கின்றது? நானென்பது ஓர் முதலானால் அவ்வாக்கியம் அங்ஙனம் பிறக்குமா? ஆகலால், நான் அதுவெனத் தெளிந்தின்புற வேண்டுவ தின்றெனின், அவ்வாக்கியம் ஐக்கியானுபவத்தை விளக்கவந்ததென்? அஃது தத்துவமசி யென்பது மாத்திரமா? தொந் தத் தசியென்பது மன்றோ? அன்றெனின், வியாபக விளக்கத்தை நானெனத் தெளிந்தின்புற வேண்டுவதென்னை? இவ்வுபாதித்திரயத்தை நானன்றெனக் கூறுந்தனாலன்றோ? எதை நானெனப் பரோட்சமுற்று இவ்வுபாதித்திரயத்தைக் கூறுகின்றது? வியாபக விளக்கத்தையாகலின், அவ்வியாபக விளக்கத்தைப் பரோட்சமாகக் கொண்டு இவற்றைக்கூறுந்த பின்னான்றே, அவ்விளக்கத்தை அபரோட்சமாகத் தெளிகின்றது. இங்ஙனந் தெளிவது நானதுவெனத் தெளிதற் காகலின், சோயந் தேவதத்தனென்பதுபோல, அயம்சோ தேவதத்தனெனவும் வழங்குகின்றது. அயம்சோ தேவதத்தனென்பதே தொந்தத் தசி யெனப்பட்டது. இத்தொந்தத் தசி யென்பதே அகண்டபிரம மெனப்பட்டது.

அகம்பிரம மென்பதற்குப் பொருளுண்டோவெனின், மூன்ருன்று களையப்பட்டவை உபாதித்திரய முதலியவைக ளன்றே? இவை யனைத்தும் உண்மைப் பொருள்களாகத் தோற்றுகின்றனவா? அன்றிக் கயிற்றரவு முதலியனபோற் ருேற்றுகின்றனவா? உண்மையாகவே தோற்றுகின்றன வெனின், இருப்பாயிருந்து உண்மையாய்த் தோற்றுகின்ற னவா? அன்றித் தோற்றன்மாத்திரமாக இருந்து உண்மை போலத் தோற்றுகின்றனவா? இருப்பாயிருந்தே உண்மை யாய்த் தோற்றுகின்றனவெனின், இவ்வனைத்தும் ஆராய்ச் சிக் கியையா திருக்கட்டும்! இயைவதாற் ருேடமென்னை யெனின், அன்மை யெனவும் இன்மை யெனவு முடியாதிருக் கட்டும்! அங்ஙன முடிவதாற் பொருளின்ருே வெனின், ஆம் எனவும் உண்டு எனவுமா யிருப்பது பொருள் இல்லாத தாக்கும்! பொருளென்பதும் பொருளல்ல வெனபதும் இங் ஙனந்தான் மாறுக இருக்கின்றதோ? இஃது விந்தையினும் மிக்க விந்தை யாகின்றதே! காணப்பட்ட நாமரூபமனைத்தும் அன்மை இன்மை யென்பதனல் இழுக்கென வெனின், தோற்றன்மாத்திரமென்பவற்றிற் கியைந்ததன்ருே? அன்றி யும் இத்தோற்ற மனைத்தும் உண்மையாகத் தோற்றுவா னேன்? அங்ஙனந் தோற்றுதல் சுபாவமெனின், கயிற்றரவு முதலியவைகள்போலன்றி உண்மையாகத் தோற்று மிவை கள் தெளிந்த ஞான்ரு? அன்றித் தெளியாஞான்ரு? தெளியாஞான மெனின், அதுபோல் இவ்வனைத்தையும் ஆரா ய்ந்து தெளிந்தஞான்று உண்மைபோற ருேற்றுகின்றனவா? தோற்றுதெனின், உண்மையாய்த் தோற்றுதல் சுபாவமென் பானேன்? சுபாவமென்பது என்றும் ஒரு படித்தா யிருப்ப தன்ருே? இவையனைத்தும் அங்ஙனமில்லையே! தெளியா துழி உண்மைபோலும், தெளிந்துழி இன்மையாயு மிருக் கின்றதே! தெளிபாமை மூடமாகிய அவித்யைகமும் தெளிவு

அம்மூட மின்றிய விவேகமுமன்றே? அவிவேகத்தால் அனைத்தும் உண்மைபோற் றோற்றுவானேன்? உண்மையாகப் பார்க்கின்றதலைன்றே? தெளியாதுழி உண்மையாகப் பார்க்கினும், தெளிந்துழிக் கற்பனைகளாகப் பார்க்கினும், அனைத்தும் கனாரவிந்தம் கயிற்றரவு கானல்நீர் கனாவுலகம் ஆகிய இந்நான்கினைப்போன்ற தென்பதற்கு முரணைன்னை? இன்றுகலின்,

இத்தோற்ற மனைத்தும் எதற்குக் காணப்படுகின்றன? ஆங்காங்குமு நானென்பதற்கன்றே? நானென்பதற்குக் காணப்படும் இவ்வனைத்தும் எவ்விடத்தது? ஷை பிரபமாகிய ஆதாரத்தினின், எது இவற்றுதி தோற்றங்களாகத் தோற்றுகின்றது? ஷை பிரமசொரூபந்தானெனின், இத்தோற்றங்க ளனைத்தும் உண்மைபோற் றோற்றுதற்கு உண்மையாகப் பார்ப்பதும், கற்பனையாகத் தோற்றுதற்குக் கற்பனையாகப் பார்ப்பதும் எது? ஷை பிரமந்தானே? அல்லவே! அல்லாவுழி, நானென்பதன்றே? அந்நானென்பது மயங்கியஞ்ஞான அனைத்துமென்பது விவகாரிக சத்தாயும், அவ்வனம் மயங்காஞான்று அவ்விவகாரிக சத்தனைத்தும் பிராதிபாலிக சத்தாயு மிருக்கின்றதன்றே?. அவ்வனம் இருவித சத்தாயுமிருப்பது யாது? ஷை பிரமமெனப்படுமா? படாதே! படாதாகலின நானென்பதே?

அன்றியும், இத்தேக முதலிய ஒவ்வொரு நாமரூபத்தையும் காரணகாரிய முதலிய நெறித்தாக ஆராய்ந்து செல்லுழி, அந்தத்தில் எது இருக்கின்றது? ஷை பிரமந்தான் இருக்கின்றதெனின், அவ்வனம் ஆராய்ந்து சென்ற நானென்பது எங்கே போயிற்று? அவ்வந்தத்தில் நசித்து விட்டதாகும்! அவ்வனம் நசித்து விட்டதாயின், அவ்வந்தத்தில் யாது மின்றெனவும் இருப்பது பாழெனவும் அறிகின்றது'

எது ? நானென்பதன்றே ? இதனால், நானென்பது ஆராய்தலுக்கு முற்பொழுதும் ஆராய்ந்து முடிந்த பிற்பொழுதும், ஆராயும் இடைப்பொழுதும் இருந்து ஆங்காங்குமுள்ள நிலைமைகளை யுணர்வதன்றே? அம்முப்பொழுதுமுள்ள நானென்பது எப்பொழுது இன்றெனப்படும் ? எப்பொழுதும் உண்டென்பதால் ஆராயப்பட்ட நாமரூபங்களனைத்தும் எப்பொழுதுள்ளது ? இருபோது இன்மையும் அதாவது-முன்னும் பின்னுமென்பது-இடைப்போது தோற்றன் மாத்திரமுமானமையால், எப்பொழுதும் இன்றென்பதற்கு முரணின்றுமென்க. இதனால், நானென்கிற ஓர்போதத்தை யன்றிச் சிற்சட பேதங்களாய்த் தோற்றுவனவாகிய சீவேசுர சகத்தென்பவையுள், பரமாணுவுக்கும் பரமாணுவேனு மின்றுகலின், நானென்கிற போதமானது அயலிறந்ததாகின்றது. ஆகவே, அயலுளதாகத் தோற்றுவதும் எதுவெனப்படும் ? நானெனப் படுமென்பதற்கு முரணென்னை ?

இன்றுகலே, அனைத்திற்கும் நானென்னும் போதமே உபாதானமும் அதிட்டானமு மாகின்றது. ஆகலே, அதிட்டானமும் உபாதானமுமாகிய நானென்பதன் காரியங்களான ஆரோபங்களுக்கு ஆதாரம் யாதெனப்படும்? வேறொன்றெனப்படுமெனின், ஒன்றினது காரியத்துக்கு மற்றொன்று ஆதாரமா யிருப்பது முண்டா ? எந்தக் காரியத்திற்கு எது உபாதான காரணமோ அக்காரணமன்றே அந்தக் காரியத்திற்கு ஆதாரமெனப்படுவது ? சீவேசுரசகத் காரியங்கட்கு நானென்கிற போதம் உபாதானகாரணமா யிருக்கின்றமையால், இக்காரியங்கட்கு ஆதாரம் நானென்னும் போதத்தையன்றி வேறென்பது எங்ஙன முண்டெனப்படும் ? இக்காரியங்களனைத்தும் நானுகிய போதத்தை உபாதானமாயும், ஆதாரமாயும் பெற்றுவிளங்கினும், எவ்விளக்கத்தால் விளங்கு

கின்றன? வேறே விளக்கம் உண்டென்பமா? அங்ஙன முண்டென்பதற்குப் போதவியாபகத்தையன்றிக் கிஞ்சித்தேனும் எல்லையென்பதுண்டாயின், அவ்வெல்லையில் நின்று வேறோர் விளக்கம் விளக்க இக்காரியங்கள் விளங்குகின்றனவாக ஏற்பம். இப்போத வியாபகத்தை யன்றி வேறே எல்லையென்பதுண்டா? இல்லையே! ஆகலின், இச்சர்வ தோற்றங்களும் விளங்க விளக்கிக்கொண் டிருப்பது யாதெனப்படும்? நானுகிய போதவியாபகமன்றி வேறின்றென்க.

இஃதில் ஐயமுளதேல் நினைவிலும் கனவிலும் சுழுத்தியிலும் அவ்வவக்காட்சிகள் விளங்க விளக்கிக்கொண்டிருத்தலை எளிதிற் காணலாம். இதனுல், நானென்னும் போதமே அதிட்டானமாயும், உபாதானமாயும், ஆதாரமாயு முடிந்தது. முடியவே, இச்சீவேசுர சகத்தாகிய சர்வமும் ஆரோபமாயும், காரியமாயும், ஆதேயமாயு முடிந்தன. முடியவே, நானென்னும் போதத்தையன்றி, ஆரோபமாய் விளங்கும் சர்வமென்பதுண்டா? இன்றெனின், அதிட்டானமாய் விளங்கும் வியாபக விளக்கமென்பதும் இன்றென் றுகின்றது. ஆகின்றதால், நானென்கிற போதமே ஆரோபமாகிய ஜீச் சீவேசுர சகத்தும் வியாபக விளக்கமாகிய அப்பிரமமுமா மென்க. இதுகாறும் கூறிப்போந்ததில் என்ன ஆயிற்றெனின், முன்ஞான முராய்ச்சியில் அது நானெனவும் அதாவது பிரமமே அகமெனவும், பின்ஞான முராய்ச்சியில் நான் அதுவெனவும், அதாவது அகமே பிரமமெனவு மாயிற்றென்க. இதற் குதாரணம்:—

ரிபுகீதை மகாவாக்கியம்.

"அகம்பிரம மெனக்கயலாய்ச் சித்து மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ச் சடமு மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ச் சத்து மில்லை
யகம்பிரம மெனக்கயலாய் மித்தை யில்லை

யகம்பிரம மெனக்கயலா யிருமை யில்லை
யகம்பிரம மெனக்கயலா யொருமை யில்லை
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யுணவாத மறிவாய் மைந்தா." என்றும்,

"அகம்பிரம மெனக்கயலாய் மாயை யில்லை
யகம்பிரம மெனக்கயலா யீச னில்லை
யகம்பிரம மெனக்கயலா யவித்தை யில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ச் சீவ னில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ச் சகத்து மில்லை
யகம்பிரம மெனக்கயலா யொன்று மில்லை
யகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யுணவாத மறிவாய் மைந்தா." என்றும்,

"அகம்பிரம மெனக்கயலாய்த் தீர்த்த மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்த் தான மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்த் தெய்வ மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ப் பூசை யில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ச் செபமு மில்லை
யகம்பிரம மெனக்கயலாய்ப் பயனு மில்லை
அகம்பிரமம் பிரமமக மகமெல் லாமென்
றயலறவே யுணவாத மறிவாய் மைந்தா." என்றும்,

திருக்குத்திரிசியவிவேகம்.

"அதுநானு நானதுவா வாதற்குட் சென்ம
மிதுபோயி னென்செய்வ னெந்தா—யதுகேட்கிற்
கிற்பொருளி லுட்டஞ் சிதையாமை நின்கடமை
யற்பமகத் தாலென்ன வாம்." என்றும்,

சோபசாரம்.

"என்னைத் தவிரமற்றிங் கேதுமில்லை யென்னுணை
பொன்னைத் தவிரவிலாப் பூடணம்போற்—பொன்னையுரு
வேறுக்கிப் பேருரைத்த வேற்றுமைபோ சாம்மையுமல்
வாரூப் பகுத்துரைத்தோ மால்." என்றும்

கூறியவாற்றுற் காண்க.

இதுகாறும் கூறிப்போந்ததால் தனது ஆரோபமாகிய உபாதித்திரயங்களை முன்ஞான்று நானன்றென நியதிகளைந்த பின்ஞான்று தனது அதிட்டானமாகிய பிரமமே நானென்னும் அனுபூதி முதிர்ந்து, அதன் பின்ஞான்று கூடி ஆரோபமாகிய ஜீவேசுர்சகத்தனைத்தும் தன்னைத் தவிர எஞ்ஞான்றும் இல்லவேயில்லையென முடிகின்றமையால், கூடி அதிட்டானமாகிய பிரமமென்பதும் தன்னைத் தவிர இன்றென்பதாகின்றது. ஆகவே, நானே அனைத்துமாயும் அன்றுயுமிருக்கின்றதென்க. என்னை ?

சொருபசாரம்.

"மெய்யெல்லா நாமாய் விளங்கியபின் ஞமாய
பொய்யெல்லா மெங்கேனும் போயவோ—மெய்பொய்
யிருவகைக்கு நாமே யிடமாஞந் தொந்தித்
திருவகைக்கு மெட்டாம லே."

என்பதனைக் காண்க.

வெல்லப்பாகானது இரத கஜ துரக பதாதிகளென்னும் வடிவப்பேதங்களா யிருக்கும் ஞான்று, அவ்வொவ்வொரு வடிவமும் மதுரமயமா யிருக்குமன்றே? அதுபோல், நானென்னும் போதமானது சர்வவிடயப் பகுதிகளா யிருக்கின்றமையால், இப்பகுதிகள் ஒவ்வொன்றும் போதத்தினது துவிதம் விசிட்டாத்துவிதம் அத்துவிதம் ஆகிய இம்மூன்று இலக்கணங்களையும் ஏற்றிருக்க வேண்டுமன்றே ? அங்ஙனம் ஏற்றிருக்கின்றதாயின், இவற்றுள் ஓர் விடயம் ஏற்றிருக்கட்டுமேயெனின், மட்கடம் பொற்பணி நூற்பட முதலிய வற்றுள் முன்னர் மட்கடத்துள் கூடி இலக்கணங்கள் இருக்கக் காட்டுதும்.

இஃது முதலாவது துவிதம்.

எங்ஙனமெனின், மட்கடமென்பழி இவை இருமைய தெனப்படுமா ? அன்றி ஒருமைய தெனப்படுமா ? சொல் இருமையுதாயினும் பொருள் ஒருமையதேயெனின், மட் பொருளானது தன்பால் பல்வடிவாதற் கியைந்த செயல் அமைதற்குத் தான் முதற்பொருளா யிருக்கின்றதால், அம் மட்பொருள் காரணமும் அச்செயலால் தான் ஓர் வடிவாக் விகற்புறுதலால், அவ்விகற்புருவம் கடமென்னும் காரியமு மா யிருக்கின்றன. இங்ஙனமிருக்கு மிவற்றுள், மட்பொருள் கடப்பொரு ளெனப்படுமா ? அன்றிக் கடப்பொருள் மட் பொரு ளெனப்படுமா ? இவை ஒன்று மற்றொன் றெனப்படு மெனின், காரணம் காரியமெனவும் காரியம் காரணமென வும் படவேண்டுமே ! இதற்கென்செய்தும் ! இம்மட்கடமா கிய காரணகாரியம் வெவ்வே ரிடத்ததா யிருந்தாலன்றே ஒன்று மற்றொன் றெனப்படா தேதன்பம். அங்ஙன மில்லை யேயெனின், வெவ்வேறிடத்ததா யிருந்து நிகழ்பவை பேத காரண காரியமும், அங்ஙனம் வெவ்வேரிடத்தின்றி ஓரிடத் திருந்து நிகழ்பவை அபேத காரண காரியமு மாகின்றன.

ஆகவே, இஃது அபேத காரணகாரிய மாகின்றதால், எங்ஙனம் இக்காரணகாரியம் வேறிடத்ததாகும் ? இக்காரண காரியம் வேறிடத்த தின்றியினும், ஒன்று மற்றொன்றெனப் படாதேதாவெனின், காரண காரிய பேதமும் அததற் கியை ந்த சொரூப பேதமும் இன்றி யிருக்கட்டுமே ! அங்ஙன மிருக்கின்றதால், வெவ்வே றெனப்படுமோவெனின், மட் பொருள் கடப்பொரு ளெனப்படுமா ? படுமெனின், மட் பொருளின்பால் நெ செயல் அமையவேண்டுவ தவசிய மின்று. ஏனெனின், அச்செயல் அமைவது யாதீக்கு ? அடி குவிந்து இடை பருத்து மேல் விரிந்திராநின்ற ஓர் வடிவ

மாதற்கன்றே ? அங்ஙனம் விகற்புற்ற ஞான்றன்றே கடப் பொரு ளெனப்படுவது ? அங்ஙனம் கடவடிவாக விகற்புற்ற ஞான்று, அக்கடவடிவு மட்பொரு ளெனப்படுமா ? படுமெ னின், மட்பொருளுக்குச் சொருபம் கடமாகிற விகற்பவடிவ மாகத்தானே இருக்கின்றது ?. மட்சொருபத்திற்குக் கடப் பொருளெனவும் கடச்சொருபத்திற்கு மட்பொருளெனவும் பெயர் வழங்கப்படுவதுமுண்டா ? அன்றியும், மட்பொருளுக் கியைந்த நிலம் தரை முதலியனவாக வழங்கும் பரியாய நாமங்களோடு, கடமென்கிற நாமமும் அதற்கியைந்ததாய் வழங்குவதுண்டா ? இல்லையன்றே ? அங்ஙனமே, கடப் பொருளுக் கியைந்த குடம் பாண்ட முதலியனவாக வழங் கும் பரியாய நாமங்களோடு மட்பெரு ளென்கிற நாமமும் அதற்கியைந்ததாய் வழங்குவதுண்டா ? அங்ஙனமு மில்லை யே ! இங்ஙனமிருக்க, எங்ஙனம் ஒன்று மற்றென்றெனப் படும் ? படாமையால், இம்மட்கடமென்னுங் காரணகாரியம் பேதமெனப் படுமன்றே ? ஆகலின், இப்பேதமே காரண காரிய துவிதமர்மென்க.

இரண்டாவது விசிட்டாத்துவிதம்.

இம்மட்கடம் துவிதமென்பதற் கியைந்திருப்பது உண் மையாயிருக்க, விசிட்டாத்துவித மெனப்படுவ தெங்ஙனமெ னின், மட்கடமென்னும் காரணகாரியத் துவிதமிரண்டுள், கடமென்னுங் காரியப்பொருள் தோன்றி நிகழுகின்றது எதன்பா லெனப்படும் ? தன்னைத் தசபுறமும் சூழ்ந்திரா நின்ற வெளியின்பாலெனின், மட்பொருளிற் றோன்றிய இரண்டு அம்மட்பொருளினின்று நீங்கி விளங்குவது அணி மைக்கண்ணே ? அன்றிச் சேய்மைக்கண்ணே ? இரண்டுமன் றெனின், மட்பொருளி லுண்டாகியு கடமாகிய காரியப்பொ, ருள், அம்மட்பொருளை விட்டு வெளியின்கண் எங்ஙனம்

தனித்துத் தோன்றும்? அம்மட்பொருளை விடாமலே தோற்றுகின்றதெனின், அம்மட்பொருளுக் கியைந்த தசபுறத்துள் எந்தப் புறத்தை விடாது நின்று தோற்றுகின்றது? மேற்புறத்தில் நின்று தோற்றுகின்றதா? அன்றிக் கீழ்ப்புறத்தில் நின்று தோற்றுகின்றதா? அங்ஙனமுமின்றி, அட்டபுறத்துள் எந்தப்புறத்தி லெனப்படும்? இங்ஙனங் கூறிய எந்தப் புறத்து மன்றெனின், உட்புறம் இடைப்புற மென்பவற்றுள் உட்புறத்ததா? அன்றி இடைப்புறத்ததா? அவையு மன்றெனின், அம்மட்பொருளை விடாது எங்ஙனந் தோற்றுகின்றது? அம்மட்பொருளோடு தோற்றுகின்றதே நமக்குச் சாலுமான அனுபவமெனின், அஃது எங்ஙன மிருந்து தோற்றினுந் தோற்றட்டும். பொருளாகத் தோற்றுகின்றதா? மற்றியாதாகத் தோற்றுகின்றது? பொருளாகவே தோற்றுகின்றதெனின், அப்பொருள் தனித்தாக வேனும் அன்றி ஷ மட்பொருளின் உட்புறம் வெளிப்புறம் இடைப்புற மென்பவற்றுள் ஓர் புறத்திலேனுமிருந்து, ஓர் முதலாகத் தோற்றவேண்டுமே! இதற்கு என்செய்தும்! இருந்துதானே தோற்றுகின்றதெனின், இலாமற்றோற்றுகின்றதாக ஈங்குக் கூறவில்லையே! இருந்தே தோற்றுகின்றதால், எங்கிருந்து எங்ஙனமாகத் தோற்றுகின்றதென்பதன்றே ஈங்குக்கடாவியது? இங்ஙனமிருக்க, தீயிலகப்பட்ட மாசுணம் போலப் புரண்டு புரண்டு வினவில் ஐயமென்பது எங்ஙனமகலும்? இக்கடமாகிய காரியப்பொருள் ஓர் முதலாக நின்று தோற்றுவதன்று, ஓர்வித வடிவப்பொருளாக நின்றே தோற்றுகின்றதெனின், வடிவப்பொரு ளென்பது முன்ஞான்று அடிகுவிந்து இடைபருத்துமேல் விரிந்திருக்கின்றதாக ஒப்புக் கொண்டதாகின்றது. ஆயினும், அவ்வடிவமானது இருந்து தோற்றுகின்ற தென்பதனால், எங்கிருந்து தோற்றுகின்ற தெனவருமே! இதற்குயாது செய்வது? அங்ஙனந் தோற்று

தல் ஓரிடத்ததன்று, அம் மட்பொருளின் தசபுறமுமே யெனின், அம்மட்பொருளைப்போல் ஓர் பொருளாக அன் றென்ப தாகின்றது.

ஆகவே, பல்வகை வடிவங்களுள் ஓர்வடிவ மாகின்றது. இவ்வடிவம் குணமெனப்படுவதா? அன்றி வேறெனப்படு வதா? குணமெனப்படுவதுதானெனின், இதற்குக் குணியெ ன்பது யாதெனப்படும்? மட்பொரு ளெனப்படுமெனின், இஃது மட்பொருளின் குணமென் றாகின்றது. ஆகவே, மட் பொருளாகிய குணியென்பதில் கடவடிவாகிய குணமென் பது விளங்குகின்றதா? அன்றிக் கடவடிவாகிய குணமென்ப தில் மட்பொருளாகிய குணியென்பது விளங்குகின்றதா? மட்பொருளாகிய குணியின்கண்ணே கடவடிவாகிய குணம் விளங்குகின்றதெனின், இவற்றுள் குணிப்பொருள் வியாபக மும் குணவடிவம் வியாப்பியமு மாகின்றன. ஆகவே, கடமா கிய குணவடிவம் மட்பொருளாகிய குணிவியாபகத்தில் கூடி யிருக்கின்ற வியாப்பியமாகின்றது. ஆகவே, இவ்வியாப்பியம் அக்குணி யெனப்படாமலும் அவ்வியாபகம் இக்குண மெனப் படாமலு மிருக்கின்றன.

ஆகலின், இவைகள் இங்ஙனமிருக்கு மிவ்விருப்பு என்ன துவித மெனப்படும்? கூடியிருக்குந் துவிதமா? அன்றிக் கூடாதிருக்குந் துவிதமா? கூடாதிருக்குந் துவிதமென்பது இதற்குமுன் கணிக்கப்பட்டுள்ள காரணகாரிய பேதங்களாம். இஃதுபோ லன்றுகலின், அத்துவித மெனப்படுமா? படுமெ னின், குணிப்பொருள் குணவடிவமெனவும், குணவடிவம் குணிப்பொரு ளெனவும் படவேண்டும்! அங்ஙனம் படாமை யால், வெவ்வேறு பொருளென்பமே யெனின், இம்மட் கடம் வெவ்வே றிடத்ததாக இருக்கவேண்டும்! அங்ஙனமு மின்றுகலின், இவை துவிதமுமன்று. அத்துவிதமுமன்று.

அன்றுகவே, குணிகுணமாகிற இம்மட்கடமென்பது என்ன வெனப்படும்? வியாபகவியாப்பியமாகவும், குணிகுணமாகவும் கூடிப் பிரிவின்றி யிருக்கின்றன. இங்ஙன மிருப்பதால் என்ன ஆயிற்றெனின், குணியோடு குணம் கூடியிருப்பதால் விசிட்ட துவிதமும் கூடியவிரண்டும் பிரிவற விருப்பதால் அத்துவிதமு மாகின்றதென்க.

இஃது மூன்றவது அத்துவிதம்.

கூ துவிதத்தையும், இவ் விசிட்டாத்துவிதத்தையும் ஏற்றிலங்கும் இம்மட்கடமானது, அத்துவிதத்தையும் எங்ஙன மேற்குமெனின், மட்கடமென்னு மிரண்டுள், கடமென் பதுகாரியமாயும் குணமாயுமிருக்கினும், இஃது இல்லதெனப் படுமா? அன்றி உள்ளதெனப்படுமா? இல்லதெனப் படுமெ னின், பிடித்தல் எடுத்தல் சமைத்தல் முதலிய அனுபவங்க ளில்லாதிருக்கட்டும்! உள்ளதெனப்படுமெனின், ஆராய்வுழி இருப்பது மட்பொருளன்று யிருக்கட்டும்! உண்டாயிருக்கின் றமையால் கடானுபவ மின்றேவெனின், அக்கடானுபவத் தில் மட்பொரு ளில்லாமற் போயிற்றே? அம்மட்பொருள் உண்டாயிருப்பதால் சமைத்தல் முதலிய அனுபவம் மட் பொருள் ஏற்கட்டுமே! அச்சமைத்தல் முதலிய அனுபவங்க ளாற் கடப்பொரு ளுண்டெனப்படுவது மூன்ஞான்றே? அன் றிப் பின்ஞான்றே? அஃதுமன்றி இஞ்ஞான்றே? மூப்பொழுதுந் தானெனின், குலாலனது திரிகை சுழலுதற்கு மூன்ஞான்று அத்திரிகையில்நின் றிலங்குவது எதுவெனப்படும்? மட்பொரு ளெனப்படு மெனின், அப்பொழுது கடப்பொரு ளென்ப துண்டா? இன்றெனின், அக்கடபபொருள் எப்பொழு துண் டெனப்படும்? கூ திரிகையின் சுழலில் நின்று வெளிப்பட் டது முதல் அஃது மாறுங்காறுமெனின், மாறிய் பின்ஞா ன்று இல்லையென் றுகின்றது. ஆகவே, இடைஞான்று மாத்

திர முண்டென்ப தாகின்றது. அங்ஙன முண்டெனப்படுவது தோற்றமாகவா ? அன்றிப் பொருளாகவா ? தோற்றமாகவு மன்று வேறு பொருளாகவு மன்றெனின், பின்னர் யாதாக வெனப்படும்? வடிவுப்பொருளாகவெனின், வடிவுப்பொருள் தோற்றன்மாத்திரமாகக் காணப்படுவதன்றே? அன்றெனின், இக்கூப்பொருள் பிடித்தல் எடுத்தல் சமைத்தல் முதலிய வைகளுக் கியைந்ததென முன்ஞான்றே ஏற்றிருக்கின்றதால், அவ்வனுபவங்களுள் ஓர் அனுபவத்தைச் சற்றாகிக்குதும்.

அதாவது, இக்கடப்பொருளைக் கரத்தாற் பிடிக்கும் ஞான்று, அப்பிடித்தலுக்கு அகப்படுவதுளது? கடப்பொருள் தானெனின், அப்பொழுது மட்பொருளை விட்டு அகப்பட்டதா ? அன்றி விடாமலகப்பட்டதா? விட்டு அகப்பட்டதெனின், அம்மட்பொருளைத் தான் அணிமையாக விட்டதா? அன்றிச் சேய்மையாக விட்டதா? இரண்டாகவு மன்றெனின், இதனால் அம்மட்பொருளைத்தான் விட்டதென்ப தன்று. விடாமலே அகப்பட்டதெனின், அப்பொழுது எது அகப்பட்டது? கடப்பொருள் தான் அகப்பட்டதெனின், கூறியது கூறல் குற்றமென்பது படவில்லையாக்கும்! ஆகலின், மட்பொருள் அகப்பட்டதெனின், கடப்பொருளைப்பிடிக்க மட்பொருள் அகப்படுவானேன் ? இருப்பது மட்பொருளென்பதன்றே? எடுத்தல் சமைத்தல் முதலிய அனுபவங்களுக்கு மியைந்தது அம்மட்பொருளை யன்றி வேறே யாதிருக்கின்றது? ஷை அனுபவங்களுக்கு இக்கடப்பொருளை யன்றி மட்பொருள் இயைந்திருக்கட்டுமே யெனின், மட்பொருளின்றி இக்கடப்பொருள் இயைந்திருக்கட்டுமே! அன்றியும், கடப்பொருள் எதுவாகவேனும் மட்பொருள் அனுபவப்படுகின்றதன்றே! இதனால் கடப்பொருள் மட்பொருளனுபவப்படுகிறதற்கு அபேதகருவி யாகின்றது. ஆகவே, கடப்பொ

ருள் ஓர் முதலெனப்படுமா! படுவதாகவே கொண்டால், மட் பொருள் ஷே திரிகையில் அகப்படாஞான்று, சமைத்தல் முதலிய அனுபவங்களுக் கியைகின்றதா?

அன்றியும், சுவர் முதலிய கட்டடங்களாதற்கு அனுப வப்படுஞான்று, இக்கடப்பொருள் மட்பொருளுக்குப் பேத கருவியாகவேனும் அபேத கருவியாகவேனு மிருக்கின்றதா? இல்லையே! ஏனின்றுர்? தான் ஓர் முதலாக இல்லாமையாலெ ன்க. இதனுல் என்ன ஆயிற்றெனின், மட்பொருளொன்றே காரணகாரியமாயும், குணிகுணமாயு மாகின்றது. ஆயினும், இக்காரணகாரிய பேதமும், குணிகுணபேதமும், மட்பொரு ளுக்குச் செயற்கையா யியைந்திருக்கின்றனவா? அன்றி இய ற்கையா யியைந்திருக்கின்றனவா? இயற்கையாகவே இயைந் திருக்கின்றனவெனின், மட்பொருள் ஷே திரிகையில் அகப் பட்டு விகற்புற்றதுமுதல் அவ்விகற்பவுருமாறுங்காறும் காரிய பேதத்தையும், வடிவமாகிய குணபேதத்தையும் ஏற்றியது யாது? கடமென்பதன்றே? அங்ஙனம் ஏற்றியிலங்குங் கடப் பொரு ளுள்ளஞான்றும், மட்பொருள் என்னவெனப்படும்? காரணமெனவும், குணியெனவும் படுமன்றே? கடமென்கிற பெயரை யேற்கும் விகற்பம் நிலையற்றதாகலின், அஃது மாறிய ஞான்று மட்பொருள் என்னவெனப்படும்? காரண மென்பதையும், குணியென்பதையு மேற்குமா? ஏலாதன்றே? அன்றியும், கடவிகற்பம் மட்பொருளே யன்றி இன்றுயின், அம்மட்பொருள் காரியமெனவும் குணமெனவும் படுமோ? படாதெனின், இவ்விரண்டினுலன்றே தான் காரணமென வும் குணியெனவுமாகின்றது? கடவிகற்பம் எதார்த்தமாயின், அதற்கு வந்து வழங்கப்படும் காரியமென்பதும் குணமென் பது மெதார்த்தமெனப்படும்! அவ்விகற்பம் தோற்றன் மாத் திரமாகலின், அதற்கு வந்த காரியமென்பதும் குணமென்ப

தும் சொன்மாத்திர மாகின்றன. ஆகவே, கடவிகற்பம் மட் பொருளே யன்றி யின்மைகளின், ஷே காரியமென்பதும் குண மென்பதும் அம்மட்பொருளே யன்றி ஏது? இக்காரிய மூத லிய கற்பனையினால் வந்த காரணமென்பதும் குணியென் பதும் கற்பனைக ளெனப்படுமன்றே? இங்ஙன மிருக்கின் றமையால், மட்பொருள் காரண காரிய பேதமும் குணிகுண பேதாபேதமு மிறந்ததென் றாகின்றது. ஆகவே, மட்பொரு ளென்பது துவிதப்பொரு ளெனப்படுமா? அன்றி விசிட் டாத்துவிதப்பொரு ளெனப்படுமா? அஃதுமன்றி அத்து வித மெனப்படுமா? அத்துவித மெனப்படுமாகலின், இவ் வத்துவிதமே சித்தாந்த மாயிற்றென்க.

மூன்ஞான்று துவித மூதலிய மூப்பேத தாட்டாந்தங் களை விரிவாக எடுத்துக் காட்டியதை, இஞ்ஞான்று காட்டிய இத்திட்டாந்தத்தைப் பற்றி இன்னும் அத்தாட்டாந்தத்தை வற்புறுத்துவான் வேண்டிச் சற்றுத்தொகுத்து யூகிக்குதும்.

இஃது 1-வது துவிதம்.

எங்ஙனமெனின், ஷிசீவேசுர சகத்தென்பவை காணப் படுதலுக்குக் காரணம் யாதெனப்படும்? இதற்கு வேறே ஓர் காரணமும் வேண்டுவதில்லையே யெனின், இவைகள் எதற் குக் காணப்படுகின்றன? தமக்குத்தாமே காணப்படுகின்றன வெனின், ஓர்ஞான்று காணப்படுகின்றதும் மற்றோர்ஞான்று காணப்படாததுமாயிருப்பதென்னை? அவ்விருஞான்றுவது— சகலமும் கேவலமுமாமென்க. இவைகள் இருந்தபடியிருந்து தோற்றிக்கொண்டே இருக்கின்றதை அறிவு சகலாவத்தை யாயிருந்து உணருகிறதும், கேவலாவத்தையா யிருந்து உண ராமையுமேயன்றி வேறன்றேயெனின், நாம் எங்ஙனம் சொல் லினும் அறிவு உணர்ந்தஞான்று தானே இவைகள் தோற்று

கின்றதும், இதனால் உளதென்றதும் உணராதுழி இவைக ளின்றேவெனின், இருக்கினும் அறிவைமூன்னிட்டுத்தானே தாம் தோற்றுகின்றன. இதனால், அறிவு காரணமும் இம்மூப் பொருள் காரியமு மாகின்றன. இவைகள் இருக்கின்றதைப் பற்றியன்றே அறிவு உணரவந்ததெனின், அறிவு உணர் வதைப் பற்றியன்றே இவைகள் விளங்குகின்றது.

அன்றியும், அறிதல் முன்னிட்டதா ? அன்றி விளங்கு தல் முன்னிட்டதா ? விளங்குதல் பின்னிட்ட தாயினும், இஃது காரியப்பொரு ளெனப்படுமோவெனின், முன்னிட்ட தாகிற அறிதல் காரியமெனப்படுமோ ? அன்றியும், விளங்கு கின்றதற்குக் காரியத்துவம் சொல்லவந்ததேயன்றிப் பொரு ள்களுக்குக் காரியத்துவம் சொல்லவந்ததல்லவே! அங்ஙன மாயின், அறிதல் காரணமும் விளங்குதல் காரியமுமெனப்படு மெனின், இங்ஙனம் ஏற்கக்கூடிய இவைகள், காரணகாரியத் துவிதமென்பதற்கு மூரணென்னே ? இன்றுகவே, இவைகள் என்ன காரண காரியத் துவித மெனப்படும் ? பேதகாரண காரியத்துவித மெனப்படுமன்றே? இஃதிங்ஙனமிருக்க, அறி வினால் விளங்குகின்ற திரிபதார்த்தமும் பொருள்களா ? அன் றித தோற்றன் மாத்திரங்களா ? ஏன் இங்ஙனம் கடாவுவ தெனின், இப்பிரபஞ்சப் பொருள்களே ஆராயும் வண்ணம் ஆராய்வுழி, ஒவ்வொன்றும் காரணகாரியம காரணகாரியமா கச் சென்று சென்று, சுற்றில் இருப்பின்றித் தோற்றன் மாத் திரமாயும் சொன்மாத்திரமாயு முடிகின்றது. இக்கற்பனை களைக் கொண்டு விபரீத அணுபவாணுமான அளவையாலும், தோற்ருணுமான அளவையாலும், உளதென்றேற்படும் சிவே சுரத்துவமும் தோற்ற மென்பது சற்றுமின்றிச் சொன்மாத் திரமாக முடிகின்றன. முடியவே, இம்மூப்பொருள்களுள், இப்பிரபஞ்சமானது கயிற்றரவாதிகள்போல் இல்லாமலே

தோற்றுகின்றனவா? அன்றிக் கபிரூதிகள் போல் இருந்து தோற்றுகின்றனவா? இல்லாமலே தோற்றுகின்றதெனின், எதற்குத் தோற்றுகின்றன? தமக்குத்தாமே தோற்றுகின்ற தெனின, தமக்கெனப் பொருள் சற்றேனு மிருக்கவேண்டும்? இல்லாமையால், ஓர் சித்துக்குத் தோற்றுகின்றதுதானெனின், அச்சித்தானது அறிய இஃது தோற்றுகின்ற தாகின்றது. ஆகின்றதிலும், சித்து இருந்தறிகின்றதும் பிரபஞ்சம் இல்லாமலே தோற்றுகின்றது மாகின்றது. ஆகவே, காரணமென்பது யாது? காரியமென்பது யாது? அறிவே காரணமும் அயலீனத்தும் காரியமு மாகின்றன. ஆயினும், காரணமாகிற அறிவு காரியமாகிற முப்பொரு ளெனப்படுமா? அன்றிக் காரியமாகிற முப்பொருளும் காரணமாகிற அறிவெனப்படுமா? இரண்டுபட்சமு மாகாதெனின், இவ்விரண்டும்என்ன துவித மெனப்படும்? அபேத காரண காரியத் துவிதமெனப்படுமாகலின், இதற்குச் சற்றும் முரணின்றுமென்க.

இஃது 2-வது விசிட்டாத்துவிதம்.

எங்ஙனமெனின், சேதனு சேதனமாகிய சர்வ தோற்றமும் எதனது எனப்படும்? ஷை அறிவினது எனப்படுமெனின், இத்தோற்றங்கள் ஒன்றன்கூட்ட முதலிய விகாரங்களாகலின், குணபேதங்க ளென்பதற்கு மூரணென்னை? பிரபஞ்சப் பொருள்கள் ஒன்றன் கூட்டம் பலவின் சூட்டம் திரிபிறக்கமுடைய விகாரந்தான். சீவேசுர ரிருவரும் விகாரங்களாகுமோ? அதிலும் அவை என்ன விகாரமெனப் படுமெனின், வியட்டி சமட்டி உபாதிகுணம் தொழில்களேயன்றி அவ்விருபொருளென்பது ஏது? இருபொருளெனக் கொண்டது இருவித உபாதி குணந் தொழில்களின் சேர்க்கைகளேயுமே, வெவ்வேறு முதலெனக் கொண்டதனுலென்க. அங்ஙனம் கொண்ட இருமுதலும் ஷை உபாதிகுணம் தொழில்க

ளின் சேர்க்கைக ளாகலின், சிவேசுரத்துவம் பலவினீட்ட விகார மென்பதற்கு முரணென்னே? இம்மூப்பொருளும் தோற்றன்மாத்திர மாகலின், இக்குண பேதங்களையுடைய குணிப்பொருள் எதுவெனப்படும்? இருப்பது ஒரு அறிவாகலின், அதனே யன்றி வேறில்லையே! அறிவென்பது குணிப்பொருளாயும், அவ்வறிவினது மூப்பொருளும் குண பேதங்களாயு மாகின்றன.

ஆகவே, குணபேதங்கள் குணியின்கண் நிகழுகின்ற தால், குணியென்பது வியாபகமும் குணங்களென்பது வியாப்பியமு மாகின்றன. ஆகின்றதால், இவ்வியாப்பியமாகின்ற குணபேதங்கள் அவ்வியாபகமாகின்ற குணியில் கூடியிருக்கின்றனவாகலின், இஃது என்ன துவிதமெனப்படும்? கூடியிருக்கும் துவிதமெனப்படுமன்றே? இத்துவிதத்திற்கு விசிட்டாத்துவித மென்பானேனென்னின், இத்திரிபதார்த்தத் தோற்ற வடிவங்கள் வியாபக விளக்கமாகிய அறிவெனப்படாமலும், அவ்வறிவின்கண்ணே நிகழுகின்றமையால் கூடியிருக்கின்ற தெனவும், இங்ஙனம் கூடியிருக்கும் இம்மூப்பொருளாகிற தோற்றங்களும் அவ்வறிவினது அம்சங்களாயும், அவ்வறிவைவிட்டுப் பிரிபடாததாயு மிருக்கின்றமையால், அத்துவிதமெனவு மாகின்றன. ஆகவே, இத்திண்ணம் நோக்கி விசிட்டாத்துவித மெனப்பட்டதென்க. இங்ஙனமின்றி நானென்னும் போதத்துக்குப் பரமாத்மா வேறு பொருளெனவும் அப்பரமாத்ம வியாபகத்தில் நிகழும் உயிரு மூலகமும் அவனது அம்சங்களெனவும், அம்சங்களா யிருப்பதிலும் இவைகள் எதார்த்த சத்துப்பொருள்க ளெனவும், அவன் வைகுந்தத்தில் சின்னங்களோடு திருவுருக்கொண்டு பாகவதரோடு இருக்கின்றனெனவும், பரிபாகமுற்ற உயிர்கள் விரஜா நதிக்கண் மூழ்கி இப்பிரகிருதி சரீரத்தை விட்டு, அப்பிராகிருத

சரீரத்தைப் பெற்று அவ்வைகுந்தத்திற் சென்று, ஷ திரு வுருக்கொண் டிருக்கும் பகவானுக் கியைந்த சின்னங்களைப் போன்ற சின்னங்களை அப்பிராகிருத சரீரமாகியதாமும் தரிக்கப்பெற்று, சதா அவனது திருநோக்கிற் பட்டுக்கொண் டிருக்கின்றதே முத்தியெனக் கூறுவது விசிட்டாத்துவித மன்றென்பதாமென்க.

இஃது 3-வது அத்துவிதம்.

நானென்கிற அறிவாகிய வியாபகத்தில், காரிய பேதங்களாயும், வியாப்பிய குணபேதங்களாயும் தோற்றி நிகழும் சிற்சட சீவேசுர சகத்துக்களுக்கு, வியாபகமாகிய அவ்வறிவு என்னவெனப்படும்? காரணமெனவும் குணியெனவும் பொருள் படுமன்றே? தான் இவ்விரண்டு நிலைமையையு மேற்பது இயற்கையாகவா? அன்றிச் செயற்கையாகவா? இயற்கை யாகவேயெனின், இவ்வியற்கை யாதோர் ஏதுவையு மேலாததா? அன்றி ஏற்றதா? ஏலாததெனின், சீவேசுர கற்பனைகள் காரியபேதத்தையும் குணபேதத்தையும் ஏற்றி யிலங்குவது இயற்கையாகவா? அன்றிச் செயற்கை யாகவா? இயற்கையாகவே யெனின், இவ்வியற்கையை யேற்கும் சீவேசுரசகத் கற்பனைகள் அறிவாகிய வியாபகத்தில் நிகழுவதாயினும், இக்கற்பனைகள் ஏது? அவ்வியாபகத்தி லெழும் சங்கற்ப மென்னும் நினைவெழுச்சிக ளன்றே? அந்நினைவெழுச்சியையன்றி ஷ -மூப்பொருளென்னும் பேதங்கள் ஏது! உளதெனின், விபரீத அனுபவானுமான அளவையாலும் தோற்ற அனுமான அளவையாலும் கருதுகின்ற கருதுதலேயன்றி யுளதெனப் படுகின்றதா! இல்லையன்றே! ஆகலின், ஷ நினைவெழுச்சியே சீவேசுரத்துவமாமென்க.

அங்ஙனம் கருதுதற் கேதுவாகிய இப்பிரபஞ்சத் தடிப்பும் நினைவெழுச்சியா? அன்று? அன்றெனின், ஒவ்வோர்

நாமரூபமும் ஆராய்வழி, அன்மையெனவும் இன்மையெனவு மாகி, முடிவில் ஆராய்ந்துவரும் அறிவாய் முடிவானேன்? தனது நினைவே சகமாதிகளாகத் தோற்றுகின்ற தன்றி வேறன்று. இதனால், தன்னையன்றி நினைவென்பதும், அந் நினைவென்பதை யன்றிச சகமாதிகளென்பதும் இன்றுகளின், இருப்பு யாதெனப்படும்? அறிவாகிய போதமன்றே? இப போதத்தை யன்றி அபலென்பது அணுவேனு முண்டா? இல்லாமையின், அயலிறந்த தாஞகிய போதமானது காரண மெனவும் குணியெனவும் எங்ஙனம் பொருள்படும்? இக்கார ணமென்பதற்கும் குணியென்பதற்கும் எதிர்மறை யென் பது யாது? காரியமும் குணமுமன்றே? எந்தக் காரியத்திற் கும் குணத்திற்கும் இப்போதம் காரணம் குணி எனப்படு வது? காரியதுவத்தையும் குணத்துவத்தையும் ஏற்கும் பொருள் யாது? ஷை சகமாதிகள்தா னெனின், இச் சகமாதி கள் தன்னை யன்றி யின்றென மூன்ளுான்றே முடிந்தா யிற்றே. தன்னை யன்றி யில்லாத சகமாதிகளாலன்றே தனக் குக் காரணத்துவமும் குணத்துவமும் வந்தன? இங்ஙன மிருக்க, இவ்விரண்டு நிலைமையும் தான் இயற்கையாகவே ஏற்றிருக்கின்றதாகக் கோடல் மயக்க மென்பதாகுமே! ஆக லின், தாஞகிய போதம் காரணமும் குணியு மெனப்படுமா? அன்றிக்காரியமும் குணமுமெனப்படுமா? காரணமும் குணியு மெனப்படுமெனின், காரியமும் குணமும் யாதெனப்படும்? அவையும் தன்னையன்றி யுண்டோ? இவ்விருவகுப்பும் தன் னையன்றி யின்றியிருக்க, தான் காரணமெனவும் குணியென வும் படுவானேன்? தனது ஆரோபமாகிய இச் சகமுதலிய காரிய குணபேதத்தைப் பற்றியன்றே தான் அதிட்டான மெனவும் காரணகுணியெனவு மாயிற்று. ஆகவே, தான் காரணகுணி யென்பவற்றை ஏற்றிருத்தல் இயற்கையெனப் படுமா? படாதன்றே? படாதாகவே, செயற்கையாக வந்த

தென்பதாயிற்று. செயற்கையாக வந்தது சகமுதலிய பொய்களைப்பற்றியாகலின், பொய்களைப்பற்றி வந்த காரணப் பொருளென்பதும், குணிப்பொருளென்பதும், என்னவெனப்படும்? இவையும் பொய்யெனப் படுமன்றே? படவே, தாஞ்சிய வியாபக விளக்கம் என்னவெனப்படும்? காரணகாரியு ரகிதமும்குணிகுணரகிதமு மாகின்றதன்றே? அந்தானென்பது அத்துவிதப்பொரு ளென்பதற்கு மூலனென்னே? இவ்வத்துவிதம் என்ன அத்துவித மெனப்படும்? விசிட்டாத்துவிதம் கேவலாத்துவித முதலியவைகளி லொன்றெனப்படுமா? படாததால், இஃது ஏகமேவாத்வைதம் பிரமோக மென்பதற்குக் கிஞ்சித்தும் ஐயமென்பதின்று மென்க.

இவ்வத்துவிதப் பொருளையன்றே ஆன்றோர் பலருள் சிலர் பின்னுள்ளோர் கட்டுபட்டு வழிப்படுவதற் கியையக் கர்மோபாசனை காண்டங்களைத் தழுவி முன்னிலையாகவும் படர்க்கையாகவுங் கொண்டுத் துதித்தும், சிலர் தன்மையாகத் தாபித்து மிருக்கின்றனர். என்னே?

இஃது முன்னிலை யெனப்படுவது.

தாயுமானவர்.

"அத்துவித வத்துவைச் சொப்பிரகா சத்தனியை
யருமறைகண் முரசறை யவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யனுதி யேக
தத்துவ சொருபத்தை மதசம் மதம்பெறுச்
சாலம்ப ரகித மான
சுரசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வியோம நிலையை
கித்தநிர் மலசகித நிட்ப்பஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்த மான

நிர்விகா ரத்தைதத் தடத்தமாய் நின்றுளிர்
நிரஞ்சன நிராம யத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்வியதே ஜோம யத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் சற்பராடி தானப்ர
தேவதையை யஞ்சலி செய்வாம்." என்றும்,

இஃது படர்க்கை யெனப்படுவது.

ஞானவாசிட்டம்.

"அயனெனுமால் சங்கரனுஞ் சதாசிவனு மிந்திரனு
மருக்கன் முனும்
வியனிலுப சாந்தராம் வேலையினி லுபாதியெலாம்
விட்டு நீங்கிப்
பயனில்சக மென்கின்ற பற்றகன்று சின்மயமாம்
பரம ரூப
முயர்விகற்ப மிலாவடிவா யெங்குநிறை சிவமாகி
யொன்றுய் நிற்கும்." என்றும்,

இஃது தன்மை யெனப்படுவது.

ரிபுகீதை மகாவாக்கியம்.

"சத்தியஞா னுநந்தப் பிரம நானே
சமுசார சங்கமிலாப் பிரம நானே
நித்தியநீட் களமான பிரம நானே
நிராகார மானபரப் பிரம நானே
சுத்துவமாய்த் தனித்தபரப் பிரம நானே
தான்முனுய் நின்றபரப் பிரம நானே
யத்துவித மானபரப் பிரம நானே
யகண்டபரி பூரணமாம் பிரம நானே:" என்றும்

கூறியவாற்றுற் காண்க.

இதுகாறும் ஆவிது முதலியனவாகக் கூறிப்போந்தது ஞால் என்ன ஆயிற்றெனின் அபுத்தி பூர்வகமாகத் தோற்றும்

சிவசுரசதத்தாரோபிதங்கள் ஒருங்கே யொழிதற்கு, இவற்றைச் சிரவணாதிக ளுழைப்பென்னும் புத்தி பூர்வகத்தால், மூன்ஞான்று அபேதகாரியக் கற்பனைத் தோற்றங்களாகவும், பின்ஞான்று அத்தோற்றங்களைக் குணபேதங்களாகவும், அதன் பின்ஞான்று முடிவில் அக்குணபேதங்களைத் தன்மயமாகவு மாகுமாறு (க)-வது துவிதமாகவும், (உ)-வது விசிட்டாத்துவிதமாகவும், (ங)-வது அத்துவிதமாகவும் தெளிந்து அகம்பொருளாகமே இருக்கின்றதாம். அவ்வகம்பொருள் மே துவிதமுதலிய மூன்றுமாயும், அம்மூன்றும் அல்லவாயு மிருக்கின்றமேத இபல்பாமென்க. எனின் ?

ரிபுகீதை மகாவாக்கியம்.

"எனக்கயலாய்ச் சத்தான பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சித்தான பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சுகமான பொருளு மில்லை
யெனக்கயலாய்ச் சுத்தமதாம் பொருளு மில்லை
யெனக்கயலாய்த் துவிதமெனும் பொருளு மில்லை
யெனக்கயலா யத்துவிதப் பொருளு மில்லை
யெனக்கயலா யெவையுமிலை யெல்லா நானென்
றித்திறமா முறுதியினைச் சித்தம் வெல்வாய்."

எனக் கூறியவாற்றாற் காண்க.

இஃது இங்ஙன மிற்க, முன்ஞான்று ஞானகதப் பிரத்தியட்ச மாதற்கியைந்த சரியை கிரியை யோகமென்னும் மூன்று மிருந்தனவெனக் கூறியவாற்றால், உபாசனைகாண்டச் சரியை கிரியை யோக மூன்றும் விடயகதப் பிரத்தியட்சத்திற் கியைந்தனவென் றுகின்றதே ! ஆகலின், இவ்விரண்டினது பிரிவுகளுஞ் சற்றாகிக்குதும். எங்ஙனமெனின், உபாசனைகாண்ட நெறிப்படி வழுவறச் செய்துவரும் சரியையாதி மூன்றினாலு மெய்தும் பயன் மறுமைக்கண்ணே ? அன்றி

இம்மைக்கண்ணு ? மறுமைக்கண் எனின், அம்மறுமைக்கண் எய்தும் பயன் யாது ? சாலோகாதி பதவிப்பேறெனின், அப் பதவிகளில் நாம் என்ன பாவமா யிருக்கின்றது ? நாம் ஒவ் வொருவரும் நானல்லாத நானாக இருக்கின்றதா ? அன்றி நானே நானாக இருக்கின்றதா ? நானல்லாத வேதோ ஓர் நானாகத்தானே இருக்கவேண்டியது.

அங்ஙனம் நானல்லாத நானாக நிற்கும் ஞான்றும் பொருளாப் பொருளே நாடவேண்டியதுதானே ! அங்ஙனம் நாடுங்காறும், வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன் வீணயினேன் என்னும் இவை முதலிய இழிந்தோனகத்தானே யிருக்கவேண்டும் ! இங்ஙனமிருக்கு மிழிந்தோன் என்ன இன்பத்தை அனுபவித்துக்கொண் டிருக்கின்றது ? இவ்விகத்திலுள்ள இன்பத்திற்குமேல் சற்று நீடித்திருக்கின்றதுதானே ! நிரதிசயானந்த வாழ்வல்லவே ? அப் பதவிவின்பம் சற்று நீடித்ததால் பேரின்ப மெனப்பட்டது. அப்பேரின்பம் எதன்பாலுளதாக அனுபவிக்கின்றது ? அனுபவிப்பான் நாமரூபமாக நிற்கின்றதால் இந்த உருவபாவப் புருடனுக்கு இன்பம் உருவ இன்பமாகத்தானே யிருக்கின்றது ? தான் அருவபாவமாக நிற்பானாயின், அருவ இலட்சியார்த்தமும் அருவ இன்பமும் வாய்க்கும். அங்ஙன மின்மையால், அஃது உருவ இலட்சியார்த்தமும் உருவானந்தமு மென்பதற்கு முமணென்னே ? இன்றுகலின், தானும் விடயகதப் பிரத்தியட்ச சொருபி அவ்வின்பமும் விடயகதப் பிரத்தியட்ச சொருபமாகலின், இப்பேறுக் கியைந்த சரியையாதி மூன்றும் யாதெனப்படும் ? மேற் கூறியவாறே விடயகதப் பிரத்தியட்சத்திற் கியைந்ததாமென்க. ஞானகதப் பிரத்தியட்சத்திற்கியைந்த சரியை கிரியை யோகமென்னும் மூன்றினையும் சற்றாகிக்குதும்.

அம்முன்றுள் இஃது 1-வது சரியையெனப்படுவது.

எங்ஙனமெனின், தேகோகமென்ப திருத்தலிலுல் இதை ப்பற்றி அகமெனவும், புறமெனவும் வந்திருக்கின்றன. அக மென்பது உள்ளிடமும் புறமென்பது வெளியிடமு மாகின் றன. ஆகவே, அகத்துள் சீவாத்தக்கரணேந்திரியமும் புறத் துள் சகபரமு மாகின்றன. பரமென்பதைப் புறத்தது என் பா னேனெனின், அணுமான அளவையால் கணிக்கின்ற தாகலினென்க. அகத்துச்சேட்டைக் கியைந்த ஷ சீவாத்தக் கரணேந்திரியங்களும், புறத்துச் சேட்டைக் கியைந்த பர மும் சகமும் என்னு மிவையீனத்தும் சுற்பிதப் பொருள் கள ா? அன்றி எதார்த்தப்பொருள்களா? எதார்த்தப்பொருள் கு ளெனின், இவைகள் எதார்த்தமெனப்படுவது சத்தாகத் தோ ற்றுவதலுலன்றே ? நாம் சத்தாகப் பார்ப்பதலுல் அங்ங னம் தோற்றுகின்றனவா ? அன்றி அவைகளின் இயல்பே அங்ஙனமா ? அவற்றின் இயல்பே அங்ஙனந்தானெனின், அவற்றின் இயல்பே அங்ஙனந்தானென யாதினு லேற்கின் றது ? துய்த்தல் துஞ்சல் முதலிய அனுபவங்கள் விடா திருக்கின்றதா லெனின், எதார்த்தானுபவ மெனவும், விபரீ தானுப்வமெனவு மிரண்டிருக்கின்றதால், இவை என்ன அனுபவத்தை யுடையன. எதார்த்தானுபவ மூடையவை யெனின், விபரீதானுபவத்திற் கியைந்தவை யென்பமே ! கூடாதெனின், இஃதுங் கூடாதென்பமே ! இதற்கென்செய் குதும் ! இஃது ஐயமயமன்றே ? இவ்வைய மகறற்கு என்ன வேண்டுவது ? ஆராய்ச்சி வேண்டுவதன்றே ? இவைகளை ஆராயுஞான்று யாதாய் முடிகின்றது ? கயிற்றரவாதிபோல் பிராதிபர்லிகசத்தாயும் கனாக்காட்சிகள்போல் விவகாரிக சத் தாயு முடிகின்றதால் இவைகள் சத்தாகத் தோற்றுவானேன்?, சத்தாகப் பார்ப்பதலுலன்றே ? சத்தாகப் பார்ப்பது எது

காறுமோ அதுகாறும் சத்துப்போலவே தோற்றுகின்றதால், நாம் பொருளைப் பொருளாகக் கண்டுணர்வது எஞ்ஞான்றோ? இவைபனித்தும் சொல்மாத்திரமாயும் தோற்றல்மாத்திரமாயும் காணப்பட்டுக்கொண் டிருந்தாலன்றோ இவற்றை நாடும் நமது நாட்டம் வேறுபடும்? இவையனித்தும் தோற்றுங் காறும் தோற்றன்மாத்திரமாகத் தோற்றுதற்கும், இவற்றை நாடும் நமது நாட்டம் வேறுபடுகிறதற்கும் நாம் என்ன செய்துகொண் டிருக்கின்றது? காரணகாரிய மூதலிய நெறித்தாகக் கணைஞான்றும் மாறுது ஆராய்ந்துகொண் டிருக்க வேண்டுமன்றோ? இஃதல்லவோ பரிபாகிகளுக்கான உழைப்பெனப்படுவது? இங்ஙனம் விடாதுழைக்கும் உழைப்பே ஷ ஞானகதப் பிரதியட்சமாதற் கியைந்ததாகலின், இஃது சரியை யெனப்படுவதற்குக் கிஞ்சித்து மூரணின்றுமென்க.

இஃது 2-வது கிரியையெனப்படுவது.

எங்ஙனமெனின், சரியை யென்கிற இவ்வுழைப்பானது பன்னாறும் சிறுகச் சிறுக மூதிர்ந்துவந்த மூதிர்ச்சியினால், இச்சிவேசுர சகத்துக்கள் மித்தையாணுபவப் படுமன்றோ? இம்மித்தையாத் தோற்றமும் மித்தையாணுபவமும் யாதுக்கெனபபடும்? ஆங்காங்கு மிருப்பது நானென்பதற்கலின் அந்நானென்பதற்கன்றோ? அந்நானென்பதற்குப் பரிபாகம் வந்துழி இம்மித்தையணுபவம் வேண்டுவதன்றோ? அன்றியின், வேண்டுவது யாதெனப்படும்? சத்தாணுபமென்றோ? அச்சத்தாணுபமும் யாதெனப்படும்? நானென்கிறஸ்புரிப்பையன்றி அயலென்பது அணுத்துவமுமில்லையே? இல்லாதுழி, நானென்னும் போதமன்றோ சத்தெனப்படுவது? அச்சத்தாணுபவ மன்றோ சுகாணுபவமென்பது? நானென்பதற்குச் சுகாணுபவம் வேண்டுதலின் தனக்குத்தா னெட்டாவண்டுமன்றோ? அங்ஙனமெட்டுதற்குத் தான் என்னசெய்ய வேண்டு

டியது? நானென்ப தல்லாதவைகள் நானுகக் கற்பனைகளாக வேணும் தோற்றுந்தோறும் நானன்று நானன்றென நியதி கனைந்துகொண் டிருக்க வேண்டுமன்றே? இவ்வுழைப்பு வேண்டுவ தின்றெனின், நானல்லாத உபாதித்திரயம் அவத் தைக்டோறும் நாம் நானெனத் தோன்றுதிருக்கட்டும்!

அன்றியும், அவற்றை நானென மருவாதிருக்கட்டும்! மேலும் நானென்பது என்ன கிலேமைத்தா யிருக்கின்றதென எக்கிருத்தியங்களிலும் நான் நானெனத் திடங்கொண் டிருக் கின்றனம்? அஃது தோன்றுமல் நான் நானெனக் குளறுத லெல்லாம் வெட்க மில்லாமையாக்கும்! இவ்வெட்க மில்லா மையை எஞ்ஞான்று மேற்கொண் டிருக்கினும், தனக்குச் சுகவாழ்வு வேண்டுகோளாகலின், நானென்னும் போதப் பொருள் சமாதிக்கண் இலட்சியார்த்தானுபவ மாகுங்காறும்

"நோக்கா நோக்கை நோக்க நோக்க
நோக்கா நோக்க நோக்கு மன்றே"

என அறிஞர் திருவாய்மலர்ந் தருளியவாறு, நாம் ஷிகற் பனைகளைக் களைந்து களைந்து, எது நான் எது நானென இடை யறுது நோக்கும் நோக்கமாகிய இவ்வரிய உழைப்பே ஞான கதப் பிரத்தியட்சமாதற் கியைந்ததாகலின், இஃது கிரியை யென்பதற்குக் கிஞ்சித்து முரணின்றுமென்க.

இஃது 3-வது யோகமெனப்படுவது.

எங்ஙனமெனின், தனதெதார்த்த வடிவை இது நான் இது நானெனைக்கண்டு சுகித்தற்கு எது நான் எது நானென மிக்க வெறிகொண்டு நோக்கினும், அந்நிலை விரைவில் எட்டி விடுமா? அங்ஙனம் பன்ஞான்றும் பழகவேண்டுமா? சின் ஞான்று போதுமா? அதிதீவிரதர மேலிட்டிருக்கின்றதால், இதுகாறு முழைத்தும் வெளிப்படவில்லையே யென்னும்

ஆராமை மேலிட்டு வருமன்றே? அஃது மேலிட்டால் ஷை நோக்கம் அயர்வுறு மன்றே? அவ்வயர்வால் தனது நாட்டம் பகிர்முகப்படுமன்றே? படுங்கால், முன்ஞான்று இது நானன்றி துநானன்றெனக் கழிக்கப்பட்ட உருவாருவ முதலிய கற்பனைகள் முன்போற் றோற்றுமன்றே? தோற்றினும் அவ்வப் பாவங்க ளாதற்கியையுமோ? இயையாதுழி, மீண்டும், எது நான் எது நானென எட்டவேண்டி வருமன்றே? அங்ஙன நோக்கினும் நெடுங்காற் பழக்க முதிர்ச்சி யில்லாமையின், அப்போதமாகிய நிலை விரைவில் வெளிப்படாதன்றே? அஃதும் வெளிப்படாமலும், பகிர்முகத்ததாகிய ஷை நாம ரூபபாவ மாதற்குங் கூடாமலும், இருதலைக் கொள்ளியி லகப் பட்ட எறும்பு போன்று மிகுதியான இடுக்க ணுறவேண்டி வருமன்றே? அவ்விடுக்கணுல் தான் நீடித்தயர்வுறுவிடினும், மேல் நோக்குக்கு இடையிடையேனும் அயர்வுற வேண்டி வருமன்றே? அவ்வயர்வு சாக்கிர மெனப்படுமா? சுழுத்தி யெனப்படுமா? சுழுத்தியெனப் படுமெனின், சூனியமாகிய மக்கணுந்த மெனப்படும். சாக்கிரமெனப் படுமெனின், நாம ரூபபாவ மெனப்படும். இங்ஙிலை நனவோடு திகைப்புண் டிருத் தலின், மேலுறும் துரியாவத்தையாகிய சத்பாவமும், கீழுறும் அவத்தாத்திரய முதலியனவாகிய அசத்பாவமும், கிஞ்சித்து மின்றித் தற்பிரத்தியட்சானுபவம் வாய்த்தற்குச் சமீபித்திருக்கின்றதாகலின், இஃது என்னநிலை யெனப்படும்? நனவிற் சுழுத்திநிலை யெனப்படுமன்றே?

அன்றியும் இஃது மத்தியகத நிலைமையுமாகலின், ஷை ஞானகதப் பிரத்தியட்சத்திற் கியைந்த யோகமென்பதற் குக் கிஞ்சித்து முரணின்றுமென்க. உபாசனைகொண்ட முதிர்ச்சி யாகிய யோகமானது, கரணேந்திரிய விடயப்பகுதிக ளனைத்து மொடுங்கியவிடத்து உதயமான சுகமயமாகிய பிரமா

னுபவ தெரிசனத்தில் உறைகின்றதாயிருக்க, அவ்வரிய நிலைக்கு இங்நிலை மேலிட்ட தென்னலாமோ வெனின், அந்த யோகானுபவம் தற்பாவமா அதாவது நானென்னும் போதத்தின் பாவமா? அன்றி எதார்த்தமா? எதார்த்தந்தானெனின், அகத்தும் புறத்தும் காணப்படுவனவாகிய சீவேசுர சகத்தாகிற சர்வமும், ஷி போதத்தின் பாவமன்றி யிருக்கின், ஆங்கு விளங்கும் பிரமசுகானுபவமும் வேருக இருக்கலாம். ஈங்கு கற்பனைகளாகிற சர்வத்தையும் போலிச் சத்தெனத் தெளியாது, எதார்த்தச் சத்தென மயங்கிய மயக்கமானது, அந்த யோகநெறிக்கு ஆதியிலேனும் அந்தத்திலேனும் இடைக்கண்ணேனும்விட்டதா? மூன்றிடத்தும் விட்டதன்றே! இறுதிக்கண் விளங்கும் ஷி அனுபவம் இம்மயக்கானுபவமன்றே? ஆங்கு அங்ஙனம் விளங்குவதும் நானென்பதுதானே! ஈங்கு சர்வநாம ரூபங்களாக விளங்குவதும் நானென்பதுதானே! இம்மயக்கமாகிய சுகானுபவந்தானு ஷி நனவிற் சுழுத்தியில் நின்று துரியாவத்தா சத்பாவமாய்த் தெளிகின்றது? அச்சத்பாவத் தெளிவுக்குச் சுசாதி விசாதி சுகதபேத மென்னும் வத்து பரிச்சேத மென்பதுண்டா? அதுவன்றே ஞானகதப் பிரத்தியட்சானுபவ மென்பது? மூன்ஞான்று கூறிய அருள் ஞானமாகிய துவித்தமே போலி ஞானமாய் மூடிந்திருக்க, மூழுமயக்கமாகிய யோகானுபவந்தானு ஷி ஞானகதப் பிரத்தியட்சத்திற் கியைந்த அடுத்த சோபான மெனப்படும்? அல்லவே! அகற்கியைந்த அடுத்த சோபானமென்பது ஷி நனவிற் சுழுத்தியாகலின்,

சசிவர்ணபோதம்.

"வினவிற் பரத்தையறி வறுதற் கவத்தைபுலன்
வினைமாறியே

நனவிற் சுழுத்திநிலை வரினப் பொருட்டிகழு
நலனுகவே."

எனக் கூறியிருக்கின்ற தறிக. உபாசனைகாண்டச் சரியை கிரியை யோக மூன்றும் ஞானத்துக் கியைந்த சாதனங்களா யிருக்க, இவற்றைப் பிரித்து வேறு சரியையாதிக ளிருக்கின் றனவாகக் கற்பித்துக் கூறுவது முறைமையோ வெனின்; சாதன சதுட்டயம் செ ஞானத்துக்கு நேர் அடுத்த சாதன மா யிருக்க, அச்சரியையாதிகள் அடுத்தவெனக் கூறுவா னேன்? அச்சாதன சதுட்டயம் சரியையாதி மூன்றினுக்கும் நேர் அடுத்த சாதனமும், இச்சரியையாதிகள் செ ஞானத் துக்கு நேர் அடுத்த சாதனமுமா யிருக்கின்றதே யெனின், அச்சாதன சதுட்டயத்துள்,

1 - வது, நித்தியாநித்திய வத்து விவேகத்தைச் சற்றா கிக்குறும். எங்ஙனமெனின், நித்தியமென்பது சதுர்ஞான்று மாறுதிருத்தலா? அன்றி மாறிக்கொண் டிருத்தலா? மாறு திருக்கின்றதாமெனின், அங்ஙன மாறுதிருத்தல் கயிறுதி களோப்போலவா? அன்றி அரவாதிகளோப்போலவா? கயிறுதி களோப் போலவெனின், அங்நித்தியத்துக்கு எதிர்மறையான அநித்தியமென்பது எங்ஙன மிருக்கவேண்டியது? செசதுர் ஞான்றும் மாறுதலை யுற்றிருக்க வேண்டியதன்றே? அம் மாறுதலை யுற்றிருத்தல் செ அரவாதிகளோப்போலவா? அன் றிக் கயிறுதிகளோப் போலவா? அரவாதிகளோப்போலவெனின், இதனால் நித்தியமென்பது என்றும் சத்துப்பொருளாயும், அநித்திய மென்பது என்றும் அசத்துப் பொருளாயு முடிந் தன. முடியவே, சத்தாகிய நித்தியப்பொருள் யாது? அசத் தாகிய அநித்தியப்பொருள் யாது? வியட்டி சமட்டி அவத் தாத்திரயி முதலியவைகட்கு ஆதார விளக்கமாயும், சாட்சி யாயுமிருக்கும் போதமே நித்தியமும், அவ்வவத்தாத்திரய

மூதலிய சர்வமும் அநித்தியமு மாகின்றன. ஆகிய இவ்விரு தன்மையையும் வேத மூதலிய சதுர்த்தச சத்பிரமாணங்களா லும் தேர்ந்த தேர்ச்சியன்றே நித்தியாநித்திய வத்து விவேக மெனற்பாலது? இவ்விவேகமன்றே வே அநித்தியங்களா யுள்ளவற்றின் காரணமாக வாய்க்கும், இக சுவர்க்காதி பதவி பேதங்களிலும் கான்றசோற்றைத் திருட்டிப்பதுபோல் திரு ட்டியுற் றிருக்கும், இக மூத்திராரார்த்த பலபோக விராகமென் னும் இரண்டாவது சாதன மெனற்பாலது? இவ்விரண்டு சாதனமும் வாய்த்த பின்ஞான்றன்றே சமாதி சட்க சம் பத்தென்னும் மூன்றும் சாதனம் வாய்க்கின்றது? அதாவது சமம் தமம் திதிக்கை உபரதி சமாதானம் சிரத்தை என ஆறும். அவற்றுள்,

1-வது, சமமென்பது—இம்மை மறுமைக்கண் எவ் வெவ் விடயத்தில் பழக்க வாசனையால் ஏகதேசமாக அவா வெழுகின்றதோ அந்நெறித்தாக மனம் செல்லாதிருக்கக் காத் தலும்,

2-வது, தமமென்பது—புறக்கரணங்கள் பழக்க நெறி யிற் செல்லாதிருக்கக் காத்தலும்,

3-வது, திதிக்கை யென்பது—மாறிமாறி வரும் இன்ப துன்ப வசமுறு திருத்தலும்,

4-வது, உபரதியென்பது— சிரகாச்சிரமமாகவேனும் துறவாச்சிரமமாகவேனு மிருக்கினும், அதற்கு கையந்த விவ காரங்களை நாளுக்குநாட் சிறுகச்சிறுகச் சுருங்குமாறு செய்து கொண் டிருத்தலும்,

5-வது, சமாதானமென்பது—அரிய ஆப்தர்போல் ஆத் மானுக்ம சிரவணம் விடாது செய்து செய்து, அதனுற் றேர்ச்

ந்த ரசங்களை யெல்லாம் விடாது மன்னித்துக்கொண் டிருத் தலும்,

6-வது, சிரத்தை யென்பது—ஷே ஆப்தரிடத்தும் சத் பிரமாணங்களினிடத்தும் அகலாத அன்புடைமையும் அச்ச முடைமையும் வைத்திருத்தலுமாமென்க. இச்சாதனம் மூதிர் ந்த பின்ஞான்று வாய்ப்பது, ஒருவன் தனது சிரத்திற் றகிக் கும் அழலையைத் தணிப்பான்வேண்டிச் சலத்தை அதிக விரைவிற் றேடுவான்போல், இத்தேகோகத்தால் வரற்பாலன வாகிய தாபத்திரயாக்கினி தகிக்கும் தகிப்பைத் தணிப்பான் வேண்டி. அதிகவிரைவில் தனதுபோத சொரூபமாகிய தீர்த்த த்தை விளக்கிவைக்குங் கண்ணுடையான் எங்குளன் எங்குள னென்று, கடலில் திசைதப்பித் திகைத்தலையு மாலுமி போல் துடி துடித்துத் திகைதிகைத்து அலையு மதிதீவிரதர மாகிய மூமுட்சுத்துவமென்னும் ஞான்காவது சாதனமாமெ ன்க. இம்மகத்தாகிய நான்கு சாதனங்களுமா ஷே உபாசனை காண்ட வொழுக்கமாகிய சரியை கிரியை யோக மூன்றுக்கும் நேர் அடுத்த சாதனங்க ளெனப்படும்? இஃது விந்தையினும் மிக்க விந்தையாக்கும் ! ஏனெனின், பொருளல்லவற்றைப் பொருளென மயங்காதுழி, இச்சரியையாதி மூன்றும் நிகழு மா ? அவை நானல்லாததை நானெனவும் எனதல்லாததை எனதெனவும் கொண்டிருத்தல். சரியைபாதி மூன்றினையும் மயக்க மென்னலாமோவெனின், மூர்த்தி தலம் தீர்த்தங்களில் முறையா யனுட்டிப்பது எவ்ற்றை ? பாஞ்சபூத விகாரங்களை யெனின், இக்கிருத்தியங்களன்றே சரியை யெனப்படுவது ? பின்னர் எவற்றை உபாசனை மூர்த்தங்க ளெனக்கொண்டு கிரி யாபூசை மானதபூசையாக உபாசித்து வருதல்? பாஞ்சபூதத் தின விகாரங்களையும் தத்தமது மனத்தின் விகாரங்களையு மெனின், அதன் பின்னர் யோகமென்பது அரிய சாதனமாயி

னும், அதில் விளங்கிய விளக்கம் அறிவானுடைய பாவனையாகின்றதே! அப்பிரவீன கற்பனை யென்பதன்றே? இச்சரியையாதி மூன்றுழைப்பும் கற்பனைகளே மெய்ப்பொருள்க ளெனக் கொண் டுழைப்பதற்கா கெ மகத்தாகிய சாதன சதுட்டய முன்பு வேண்டியது? கர்மோபாசனைகள் யாதுக்கு வேண்டியது? உயிர்கள் தேகபோகத்துக்கே அங்காந்திருத்தல் இயற்கையாகலின் தத்தம் இட்டப்படியே திரிந்துழலுவது தவிர்ந்து விதிவிலக்கின்படி கட்டுண் டொழுகுதற்குக் கர்மகாண்டமும், அதில் முதிர்ந்த பின்ஞான்று, கெ தேகபோகத்தால் நிகழும் யானெனதென்னும் அகமமதைகள் குன்றித் திரிகரணங்களும் கட்டுப்பட் டிருத்தற்குச் சரியையும், இஃது முதிர்ந்த பின்ஞான்று, அங்ஙனம் கட்டுப்பட்ட திரிகரணங்களும் ஒருங்குபடுதற்குக் கிரியையும், அங்ஙன மொருங்குபட்ட திரிகரணங்களுள் மனமானது ஒடுங்கி யிருத்தற்கு யோகமும் கற்பித்திருக்கின்றன, இவை முதிர்ந்த பின்ஞான்றன்றே நித்தியாநித்திய வத்துவிவேக முதலிய மகத்தான சாதனங்கள் வேண்டியது? இவை முதிர்ந்த பின்ஞான்று என்னசெய்ய வேண்டியது? நிட்டைகூட வேண்டுவதன்றே? அதாவது சர்வமும் தோற்றன் மாத்திரமாக விளங்கச் செய்வதும் பின்னர் எது நான் எது நானென நோக்குதலும், அதன் பின்னர் ஈனவிற்சுழுத்தி யெய்துதலுமா மென்க. இதுகாறுங் கூறிப் போந்ததனால் என்ன ஆயிற்றெனின், சாதன சதுட்டயம் சரியையாதிகள் வாய்த்தற்குச் சாதன மன்றெனவும், அச்சாதன சதுட்டயம் வாய்த்தற்குச் சரியை கிரியையாதிகளே சாதனமெனவும், சாதன சதுட்டயம் ஞானத்துக்கே இயைந்த சாதனமெனவு மாயிற்றென்க. இதுநிற்க,

சர்வமும் மித்தையாக்குதன் முதலியவற்றைச் சரியை கிரியை யோகமெனக் கற்பித்துக் கூறலாமோ வெனின், அங்

ஞானம் மித்தையாக்குதன் முதலிய உழைப்புகள் மனத்தினதாயினும், மித்தையாகத் தோன்றுமாறு செய்தல் தூலவிருத்தியுழைப்பாயும், அகமுகமாகத் தன்னை இடையறாது நோக்கமுற்றிருத்தல் சூக்குமவிருத்தியுழைப்பாயும், இவ்விருவிருத்தியு மின்றி ஞானவிற் சுழுத்தியுற் றிருத்தல் நிரூபாதிக விருத்தியுழைப்பாயு மிருத்தலினால், இவற்றை அங்ஙனம் கூறவந்ததா மென்க. இவை எதுபோலெனின், எல்லாமாயும் அல்லவாயு மிருக்கும் சாட்சி சைதன்னியமே போதமெனத் தேர்ந்து, சதோதயமாகவொளிரும் விளக்கமே கர்மோபாசனை காண்டங்களுள் வழங்குவனவாகிய தீர்த்தம் ஸ்நானம் மந்திரம் தர்ப்பணம் ஓமம் முதலியவைகளெனக் கூறியதுபோலா மென்க. என்னை?

ரிபுகீதை மாகாவாக்கியம்.

"அகம்பிரம நிச்சயமே தானமற்று
மகம்பிரம நிச்சயமே மந்திரங்கா
ணகம்பிரம நிச்சயமே தருப்பணம்மற்
றகம்பிரம நிச்சயமே யோமமைந்தா
வகம்பிரம நிச்சயமே மற்றுமுள்ள
வறம்களெலா மாதலினுன் மூழ்மூட்சுவாலே
ரகம்பிரம நிச்சயமே யிடைவிடாம
லகவரத மாதரவாய்ப் பழகல்வேண்டும்." என்றும்,

"இவ்விதமே பரமசிவ னிசைத்தவண்ண
மீனமிலாத் தானமுத லோமமீறுய்ச்
செய்வியதாம் பொருளையெலாஞ் செப்பினேனுன்
செப்பியதி லேயமில சத்தியந்தான்
றிவ்வியமாய் நிறைந்தெங்கு நின்றவீசன்
றிருப்பாதந் தன்னுணை யுரைத்ததுண்மை
யவ்விதமா மிப்பொருளை யொருக்காலேனு
மன்புடனே கேட்டிணர்வோன் பிரமமாவன்." என்றும்

கூறியவாற்றுற் காண்க.

இதுகாறும் கூறிப்போந்ததால் கர்மோபாசனை யிரண்டும் உள்ளபடியே வழிபடுதற் கியைந்த தெனவும், அவை வாய்த்துழி ஞானச் சரியையாதிகளும், அவை நிலைத்துழி சொரூப நிட்டையும், அது நிலைத்துழிச் சகச நிட்டையும், அது முதிர்ந்துழித் தானேதானுகிய ஏகமேவாத்வைதம் பிர மோகமாமென்க.

வேத வேதாந்த விசாரம்.

எங்ஙனமெனின், வேதாந்த மென்புழி அஃது வேதத்தின் அந்தமெனப் பொருள்படுகின்றது. அந்தமென்பதான் றிருக்கின்றதால், அவ்வேதத்தின் ஆதியென்பதான் றிருக்கவேண்டுமே! ஆகலின், அவ்வந்த மென்பதும் ஆதியென்பதும் யாதெனப் படுமெனின், அந்தமென்பது பொருளென்பது பொருளாக விளங்குவதும், ஆதியென்பது பொருளல்லவை பொருளாக விளங்குவதுமாமென்க. பொருளென்பது சச்சிதானந்த மயமாயுள்ள அகம்பொருளும், பொருளல்லவை யென்பது அசத்துசடதுக்க மயமாயுள்ள சீவசுர சகத்துக்களுமாம். இவற்றுள், அவ்வகம்பொருள் அதிட்டானமும் இச்சீவசுர சகத்துக்கள் ஆரோபிதமுமாம். இவ்விரண்டிற்கும் வேதமாதா மத்தியகதமா யிருக்கின்ற தாகின்றது. இங்ஙன மிருக்கும் அம்மாதா கருணையுடையாளாகலின் அக்கருணை அபக்குவர்கள் வழிப்பட்வேண்டு மென்பதா? அன்றித்தெளிந்திலங்கவேண்டுமென்பதா? தெளிந்திலங்கவேண்டு மென்பதெனின், பரிபாகிகள் அங்ஙனம் விளங்க வேண்டு மென்பது கூடாதாக்கும்! அங்ஙனமன்று, கூட அபக்குவிகள் வழிப்படுதற்கே அக்கருணையுற் றிருக்கின்றதெனின், வழிப்படுதலாவது அவ்வுயிர்கள் போகதாகம் இயற்கையாகவே யுற்றிருக்கின்றனவாயினும், இராகாதி தூர்க்குணமுதலிய துராச்சார வொழுக்கங்கள் குன்ற அறநெறியிற் கட்டுப்படுதலும்,

அக்கட்டு நிலைத்த பின்ஞான்று அப்போகங்களில் மிதப்பு ற்று, யான் எனதென்னும் அகமமதைகள் குன்றிச் சுதந்தர ஈனத்துவம் வாய்க்க, அடிமையாக நின்றொழுகுதலுமாம். ஆகலின் இவ்விரு நெறிகளையும் அவ்வுயிர்கள் பற்றுதற்குக் கர்மோபாசனாகாண்ட மிரண்டையும் அவ்வேதமாதா ஊட்ட வந்தது, முதற்கண்ணெனைப்படுமா? அன்றி இறுதிக்கண்ணெ னைப்படுமா? முதற்கண் ணெனைப்படுமெனின், இறுதிக்கண் அவ்வேதமாதா யாது செய்ய வேண்டியது? முன்ஞான்று கர்மோபாசனைகளால் வழிப்பட்ட உயிர்கள், சாதன சதுட்ட யப் பரிபாகம் வந்துழி, பின்ஞான்று யாஞர் என்னுள்ளமார் என்ஞானங்களார் என்னை யாரறிவா ரெனப் பன்ஞான்றும் ஆராய்ந்து ஆராய்ந்து தனது அதிட்டான போதத்தை ஐயந் திரிபற எட்டவேண்டியது அவசியமாகலின் அதற்கு ஞான காண்டத்தை ஊட்டவேண்டுமன்றே? இங்ஙன முணர்த்தப் பட் டிலங்கும் ஞானகாண்டம், அவ்வேதத்தின் அந்தமென் பதா? அன்றி ஆதியென்பதா? அந்தமென்பதாகலின், ஆதி யென்பது எவையெனப்படும்? ஷை கர்மோபாசனைகளன்றே? இதனால் இவ்விரு காண்டமும் ஆதியென்பதற்கு முரணின்ற மென்க.

அன்றியும், இவ்வேதமாதா முகற்கண் கர்மகாண்டத் தையும் இடைக்கண் உபாசனா காண்டத்தையும் இறுதிக்கண் ஞானகாண்டத்தையும் பயனுக உணர்த்தியிருக்கின்றதென்க. அவ்வக்காண்டப்பயனும் எதெதுமுதல் எதெதுகாறு நிகழ் கின்றதெனின், கர்மகாண்டப் பயன் வேதமாதாவின் நீபித் தானத்திற்குக் கீழுற்றிலகும் சொர்க்கலோக பரியந்தமும், உபாசனாகாண்டப்பயன் அந்நாபித்தானத்திற்கு மேலும் கண் டத் தானத்திற்குக் கீழுமுற் றிலங்கும் பிரமலோக பரியந்த மும், ஞானகாண்டப் பயன் அக்கண்டத் தானத்திற்குமேல்

சிரத்தான பரியந்தமுமா மென்க. இம் முக்காண்டங்களுள் உபாசனை காண்டமும் ஞானகாண்டத்தோடு சேர்ந்த உத்தர மீமாம்சை யெனப்பட்டதா? அன்றிக் கர்மகாண்டத்தோடு சேர்ந்த பூர்வமீமாம்சை யெனப்பட்டதாவெனின், அவ்விரண்டு காண்டங்களில் ஒன்றினேனும் சேராது மத்தியகாண்டமா யிருக்கின்றதா மென்க.

எங்ஙனமெனின், கர்மகாண்டம் இராகாதி தூர்த்தனை முதலிய துராச்சாரங்கள் குன்றியதாயினும், நான் எனதல்லாததைக் கர்த்தத்துவம் போக்தத்துவமாக மயங்கி யொழுகுகின்றதுபோல் இஃது இன்றுகலின் பூர்வமீமாம்சையும், ஞானகாண்டம் சர்வம் மித்தை சர்வம் பிரமம் சர்வம் நான் எனத் தெளிந் திலங்குகின்றதுபோல் இன்றுகலின் உத்தரமீமாம்சையு மெனப்படாது? நானென்ப தல்லவற்றை நானென மயங்கி அடிமையெனவும், நீயென்பதல்லவற்றை நீயெனமயங்கி ஆண்டானெனவும் நிகழுகின்றதால், உபாசனைகாண்டம் இவ்விரண்டு பட்சமு மன்றென்பதா மென்க. இங்ஙன மிருக்கினும், இவ்வுபாசனைகாண்டம் ஞானத்துக்குச் சமீபமன்றே வெனின், இவ்விரண்டுக்கு மிடைக்கண்ணுள்ள சாதன சதுட்டயமின்றி இஃதிருக்கின் சமீபமென்பதற்கு மூறணின்று. ஆகலின், அச்சாதன சதுட்டயம் வாய்த்தற்குச் சமீபமேயன்றி வேறன்றென்க. இவ்வுபாசனை காண்டம் உத்தர மீமாம்சையென வழங்குவானேனெனின், கர்மகாண்டத்தில் யான் எனதெனக்கொண்ட கற்பனைகளை மித்தையாக்கிப் பின்னர்ச் சிவமாக்கி அதன்பின்னர்த் தானுக்கித் தெளியாது, அக்கற்பனைகளைப் பொருளாகக்கொண்டு மயங்கி யிருக்கினும், அவைகள் தன்னை யுபாசிக்கப்படும் உபாசனை மூர்த்தியதெனத் திடமுற்று, அத்திடத்தால் சுதந்தர ஈனத்துவமும், அதனால் போகதிருட்டி குன்றுதலு முற்றிருத்தலினாலென்க.

இங்ஙன மிருப்பதால் முழுவதும் உத்தரமீமாம்சை யெனப் படாதோவெனின்,

தூறள் மகாவாக்கியம்.

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளாஞ் மாணப் பிறப்பு."

என்னு திருக்கட்டுமே! ஆகலின், உத்தரமீமாம்சைக்கு முற்றும் ஒத்ததன்றென்க. கிஞ்சித்தேனும் ஒத்திருக்கின்ற தால், இஃது வேதாந்தமெனப் படாதோவெனின், இவ்வுபா சனாகாண்டம் அல்லவற்றை ஆண்டான் அடிமை யென்னுது தானே தானாகிய உபசாந்த நிலையை எடுத்துணர்த்த வேண் டுமே! அங்ஙன முணர்த்துவது ஞானகாண்டம் ஒன்றே யன்றி ஏனைய இருகாண்டங்களுமன்றென்க. வேதவேதாந்தத் தீர்ப்பென்பதுதான் யாதெனின், ஞானகாண்டம் வேதத் தின் அந்தமும் மற்றிரண்டு காண்டங்களும் அவ்வேதத்தின் முதலுமாமென்க. கர்மோபாசனா ஞானமென்னும் இக்காண் டத்திரயம் ஒன்றுக்கொன்று பூர்வபட்சமும் சித்தாந்த பட்ச முமா யிருத்தலால், வேதத்தில் முதற்கண் கூறப்பட்ட இர ண்டு காண்டமும் வழிபடு மார்க்கமும், அவ்வேதத்தின் இறு திக்கண் கூறப்பட்ட ஞானகாண்டம் தெளிந்திருத்தற்கு மார்க்கமுமா யிருக்கின்றமையால்,

கைவல்லிய நவநீதம்.

"சிவ பேதங்க ளனவீலை மைந்தனே
செய்கையு மனவில்லை
யாவ வாமவ ரவரதி காரங்க
ளறிந்துபக் குவநோக்கிப்
பூவ லர்ந்துபின் பூலன்கள்காட் டுவனடோற்
பூருவஞ் சிந்தாந்தம்

காவல் வேதங்க ளிரண்டையும் வசனிக்கும்
காண்டமூ வகையாலே."

எனக் கூறியிருப்பதை யுணர்க.

இவை அறம்பொருளின்பம் வீடெனப்படுவது.

மூற்பயனென வழங்கும் அறம் பொருள் இன்பம் வீடு என்னு நான்கும் காண்டத்திரயத்துள்ளதற்கியைந்ததெனின் அம்மூன்றுக்குமே இயைந்தன. அவை:—

முதலாவது கர்மகாண்டத்துள்.

க-வது, அறமென்பது—குடும்பத்தில் நின்று விரக்தியுற்று அகன்று தனிப்பட் டொழுகும் துறந்தார்க்கும் அங்ஙனம் தனிப்படாது வறுமையுற் றொழுகும் துறவாதவர்க்கும் இவ்விருவருள் காலவரையறைப்படிநின் றிறந்தார்க்கும் கிஞ்சித்தும பின்னிடாது அவரவர்க்கும் தக்கவாறு ஈன்றமட்டும் உபசரித்தலும்,

உ-வது, பொருளென்பது—இங்ஙனமாகிய நெறிக்கணின்று கிஞ்சித்தும் அகலாது இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் சுவர்க்கப் பேற்றையும் குறைவறச் சம்பாதித்தலும்,

ங-வது, இன்பமென்பது இவ்விரு தலமும் வழுவற மூதிருமாறு நன்னெறிக்கண் கோடாதொழுகும் மனைவியோடு இருவிழிகளும் ஒருபொருளை ஒத்துணர்வதுபோல் இருவரது மனமொழி மெய்களுமொத்து வழுவற ஒழுகுதலும்,

ச-வது, வீடென்பது—நாம் புரியும் இத்தவமனைத்தும் தேகபோகங்கள் வேர்த்தித்தற்கே யன்றி இவற்றை நமக்கு வினையிடாகக் கொடுப்பித்துப் புசிப்பித்துத் தொலைப்பித்துக்கொண்டு வரும் ஒப்பற்ற இறைவனே வேண்டியல்லவே

என உள்ளவாறு அவ்விறைவனே நாடி இவ்வற முதலிய மூன்றிலும் மிதந்திருத்தலுமா மென்க.

இரண்டாவது உபாசனாகாண்டத்துள்.

க-வது, அறமென்பது—நமக்குத் தொன்றுதொட்டு வந்துவந் தகலப்படுவனவாகிய மாயாகாரிய தனுவர்திகள் இறைவனுற் கொடுப்பிக்கப்படுவதால் அவைகள் நானெனது அன்றென்றும், முற்றும் அவனுடையதென்றும் உள்ளவாறு நாத்திகானுபவத்தைக் கிஞ்சித்தும் தழுவாது திடங்கொண்டு அத்தனுவாதிகளை அவனுக்கே ஒப்பித்து முற்றும் சுதந்தர ஈனனு யிருத்தலும்,

உ-வது, பொருளென்பது—அத்தனுவாதிகளைத் தத்தம் செய்துவிட்ட மிக்க திடத்தினல் நாம் சார்பாகப் பற்றியிருத்தற்கு இறைவனே யன்றி வேறில்லையென அவனையே விடாது பற்றுதலும்,

ங-வது, இன்பமென்பது—அவனது திருநாமங்களைக் கணமேனும் விடாது உன்னியுன்னிக் களிப்புற்றிருத்தலும்,

ச-வது, வீடென்பது—தான் எஞ்ஞான்றும் தனித்திருந்து ஷை அறமுதலிய மூன்றுக நின்ற அந்தக்கரணம்மானது கிஞ்சித்துஞ் சலியாது அவனுகாரமாகவே எய்த்திருத்தலா மென்க.

மூன்றவது ஞானகாண்டத்துள்.

க-வது, அறமென்பது—அறிவானுக்கு அகம்புறமாக்காணும் சிற்சட பேதங்களாகிய சர்வமும் பிரமாக்கபாவம் பிரத்தொம்சாபாவம் அன்யோன்யாபாவம் அத்தியந்தாபாவமென்னும் இந்நான்கினையுமெய்திச் சொன்மாத்திரமாயும் தோற்

றன் மாத்திரமாயு மிருப்பதனால், அங்ஙனமின்றி அச்சதுர் ஞான்றும் மாறுதிருப்பது யாதெனப்படும்? அறிவானகலின், அவ்வறிவானகிய தனக்குத் தான் எதை அளிக்கின்றது? தனக்கு ஒன்றை அளிப்பானேனெனின், தான் பற்றியிருத் தற்கு ஒன்றுவேண்டுமே? பற்றுதல்தான் எற்றுக்கெனின், தான் எஞ்ஞான்றும்பற்றியிருப்பது எதனை? அயலையெனின், அயலென்பதற்குக் கிஞ்சித்தும் பொருளில்லையே! இருப்பது தான் மாத்திரந்தானே! தனக்கு எதைக் கொடுக்கின்றது? தன்னையன்றே? தன்னை எவ்வாறு கொடுக்கின்றது? வியாபக சாட்சி விளக்கமாகவன்றே? அங்ஙனமாகிய தன்னை அங்ஙன மாகவே தனக்களித்தலும்,

உ-வது, பொருளென்பது — தன்னை அபரோட்சாத் மானுபவமாகத் தன்னுல் தன்னில் தனக்களித்த ஞான்று தான் எதைப் பொருளாகப் பற்றவேண்டியது? தானன்றி வேறென்று மில்லாத பூரணச் சச்சிதானந்த சிவம் தானுக லின், தன்னையே பற்றவேண்டியதன்றே! அதாவது தனது இலட்சியார்த்தானுபூதியைக் கணமேனும் விடாது பற்றி யிருத்தலும்,

ங-வது, இன்பமென்பது — அங்ஙனம் தன்னைப் பொரு ளாகப் பற்றிய ஞான்று தனக்கயலாகக் கயிற்றரவு முதலி யனபோற் றோற்றிக்கொண்டிருக்கும் சீவேசுரசகத் கற்பனைக ளாகிய ஒவ்வொன்றினும், மாவெவற்றினும் வெல்லப்பாகை யூட்டில் தனது இனிப்புமயமாக்கி விடுவதுபோல், தனது சொரூப்பிரகாச திருட்டியைக் கொடுத்துக்கொடுத்துக் காணில் சர்வமும் யாதாய் முடியும்? சொரூப்பிரகாசமாய் முடியு மன்றே? முடியவே, துக்கமென்பது கிஞ்சித்தேனு முண்டெ னப்படுமா? இல்லாவழி, தன்னைத்தான் இன்புருவாக நாட வேண்டுமன்றே? அங்ஙனம் நாடுவதற்குத் தான் யாதெனப்

படும் ? இன்பமெனப் படுமன்றோ? ஆகலின், தன்னைத்தானே சுகித்தலும்,

சுவது, வீடென்பது—ஷி முதலாவது தன்னைத் தனக்களித்தலாகிய அறமும், இரண்டாவது அங்ஙனம் அளிக்கப்படும் தன்னைத் தான் இருப்பாகப் பற்றுதலாகிய பொருளும், அங்ஙனம் பொருளாகப் பற்றிய தன்னைச் சுகித்தலாகிய இன்பமுமென்னும் இம்மூவித சுத்தக் காரணங்களும் ஆகர்யமே காற்றென்றுற்போலாகலின், இக்காரணமே மனோவிருத்தி அகண்டாகார விருத்தியென்னு மிரண்டிற்குந் தலைமையாகிய விவேகவிருத்தி யெனப்பட்டது. இவ்விவேக விருத்தியானது அயர்ந்து தானே தானுய் விடுதலேயாமென்க. இவற்றுள்,

மனோவிருத்தி யென்பது.

சிவேசுர சகத்தாகச் சத்தியம்போற் றடித்து, இவற்றுள் சகத்தாகிற நாமரூபங்களில் ஒன்றை நானெனவும் அதைச்சார்ந்த சார்புகள் எனதெனவுமாய் நிகழ்தல்.

அகண்டாகார விருத்தியென்பது.

இச்சிவேசுரசகத்துக்கனேத் தக்கவாறு ஆராய்வழி தமக்கெனச சொருபமின்றி ஈற்றில் சோபாதிக மென்பதின்றி நிருபாதிகமாய்க் கிஞ்சித்தும் நாமரூபத் தாக்கின்றி அருவபாவ முற்றிருத்தலா மென்க.

விவேக விருத்தியென்பது.

அவ்வருவபாவத்தில் நின்று மின்மினியொளிபோலும், சுடரொளிபோலும், பகல்வத்தியொளிபோலும், நட்சத்திரங்களினொளிபோலும், மூன்றும்பிறை யொளிபோலும், வளர்பிறை யடுக்குகளின் ஒளிபோலும், பூரணச்சந்திர னொளி

போலும், சூரியப்பிரகாசம்போலும், அநேகசூரியப்பிரகாசம் போலும் நாளுக்குநாள் முதிர்ந்து ஈற்றில் அகண்ட பரிபூரண வியாபக சாட்சி விளக்கமயமாய் நிற்றலேயாமென்க. அன்றியும், இவ்வியாபக சாட்சி விளக்கமே ஏகமேவாத்வைத மெனவும், சுத்தசித்திரிபுடி யெனவும், சுவானுபவ மெனவுமாம். இச் சுவானுபவ விவேக விருத்தியே ஈற்றில் திரிபுடிரகித மெனவும், பாவாபாவாதீதமெனவும், சுவானுபவாதீத மெனவும், தானே தானுகிய தெனவுமாமென்க. இத்தானே தானுகிய போதமே வீடெனப்பட்டதென்க. ஷி அறமுதலிய நான்கினுக்கும் உதாரணம்:—

கோதுபசாரம்.

"என்னையே யல்லாமல் யான்பெற்ற தேதுமிலை
யென்னையான் பெற்றிருந்த தெப்போது—மென்னையன்றிப்
பந்தமிலை வீடுமிலை பார்க்கிலிவை யாராயின்
சிந்தனையு மில்லாத தே." என்றும்,

திருக்குத்திரிசிய விவேகம்.

"அறம்பொரு ளின்பமவ் டாயவோர் நான்கின்
றிறந்தெரிதிங் கொன்றுக்கிச் சித்தை—கறங்கென்ன
வாடாது நிற்றற் கருநெறியெல் லாமுறையிற்
கோடா தளிப்போன குரு." என்றும்

கூறியவாற்றுற் காண்க.

சீவன்முத்தர்களது பேதங்க ளினையவென்பது.

இவ்விதமாகிய சுகானுபவிகளின் பேதங்க ளெங்ஙன மெனின், தேகோகானுபவமானது உருக்கொண்டு வெளிப் பட்டு வளரும் வளர்ச்சியில் சிசுத்துவம் குமாரத்துவம் எவ் வனத்துவம் வயோதிகத்துவமாகியு இச்சதுர்விதப் பருவ பேதங்களாக முதிர்ந்து ஈற்றில் நாக்காடுக் கிடைகின்றது

போல், சமாதிக்கண் உதயமான இச்சிவோகானுபவமும் இது நானென விளங்கியதுமுதல் சதுர்விதப் பருவ பேதங் களையு மூற்றிருத்தலா மென்க. எங்ஙன மெனின், பிரமவித் தெனவும், பிரமவர னெனவும், பிரமவரிய னெனவும், பிரம வரிட்டனெனவும் சதுர்வித ஞானப்பியாசிகளா மென்க. இவ்வப்பியாசிகளது சற்பிரகாச இலட்சியார்த்தானுபவமா னது, 1-வது—பிரமவித்துக்களுக்கு நூதன அனுபவமும், 2-வது—பிரமவரர்களுக்குச் சற்று நீடித்த அனுபவமும், 3-வது—பிரமவரியர்களுக்கு முன்னெயதினும் சற்று நீடித்த அனுபவமும், 4-வது—பிரமவரிட்டர்களுக்குப் பலஜனனப் பழக்கானுபவமுமா மென்க.

இவ்வனுபவ வளர்ச்சியின் பேதங்களாவன:—ஷை பிரம வித்துக்களது நூதனானுபவம், ஷை தேகோகானுபவத்தி லுள்ள சிசுத்தன்மை போன்றது, ஷைபிரமவரர்களது சற்று நீடித்த அனுபவம், ஷை தேகோகானுபவத்திலுள்ள குமா ரத்தன்மை போன்றது. ஷை பிரமவரியர்களது மிக்க நீடித்த அனுபவம், ஷை தேகோகானுபவத்திலுள்ள எவ்வனத்தன் மைபோன்றது. ஷை பிரமவரிட்டர்களது பலஜனனப் பழக்க அனுபவம், ஷை தேகோகானுபவத்திலுள்ள வயோதிகத் தன்மை போன்றதென்க. அந்நால்வரது அரிய சற்பிரகா சானுபவத்தில் சிசுத்தன்மை முதலியனவாகிய இத்தேகோ கப் பிரபஞ்சானுபவம் எங்ஙன மிருக்கின்றதெனின்,

1-வது, நூதனானுபவத்தில் நனவு நினைவு கனவு சுழுத்தி யென்னும் நான்களுள் நனவாகிய சாக்கிராவத்தையாகவும்,

2-வது, சற்று நீடித்த அனுபவத்தில் ஷை நனவாகிய சாக்கிராவத்தையை விடாது அகத்துள் நிகழும் நினைவா வத்தையாகவும்,

3-வது, மிக்க நீடித்த அனுபவத்தில் தசேந்திரியங்களுங் குன்றி நிகழும் சொப்பனுவத்தையாகவும்,

4-வது, பலஜனனானுபவத்தில் ஷே நனவு நினவு கனவு என்னும் மூன்றுங் குன்றிய சுழுத்தியவத்தையாகவு மிருக்கின்றதாமென்க. இங்ஙன மிருக்கும் நால்வர்களுக்கும் தீற்பிரகாச சுகானுபவவிடு ஒன்றுயினும் பிரமவித்துக்களுக்குப் பிரவிருத்தி சாக்கிரானுபவமா யிருப்பதால் இத்தேகோகானுபவத் தாக்கிருக்கினும் இஃது தாங்குதோறும் தமதனுபூதியை நாடி நாடி இத்தாக்குதலைத் தணித்துக்கொண்டு வருகின்றது அவர்களுக் கியல்பெனப்படும். ஏனைய வரன் வரியா னென்பவர்கள் விடாவனுபூதி யுடையவராகலின் இத்தேகோகத் தாக்கானது நினைவாவத்தைப் போலும் கனவாவத்தைப்போலும் ஜாலமாக இருப்பதால் அவர்கள் இத்தாக்கின் காரணமாகத் தமது நிலையை நாடாது இயல்பாக நாடும் நாட்டத்திலேயே நின்று தேகோகப் பிராரத்துவத்தை அனுபவித்துக் கழித்துக்கொண்டு வருவது அவர்களுக்கு இயல்பெனப்படும். ஏனைய வரிட்ட நிலையுடையவர்கள், தேகோகப் பிராரத்துவத்தை ஷே பிரமவித்துக்களைப்போல் புத்திபூர்வகமாகவும், வரன் வரியானென்பவர்களைப்போல் அபுத்திபூர்வகமாகவு மனுபவித்துக் கழிக்காமலே கழித்து வருகின்றது அவர்களுக் கியல்பெனப் படுமென்க.

இங்ஙனமிருக்க, வரிட்டர்களைப்போல் பிரமவித்துக்கள் முதலிய மூவர்களும் தேகோகத்தில் ஷே சுழுத்தியானுபவமடையவிலலையென் றெண்ணிச் சாமானியர்களென்று அவமதித்தல் என்னகொடுமை யெனப்படும்? ஆகலின்

கைவல்லிய நவநீதம்.

'பொறுமையாற் பிராரத் துவதீதைப்
புகிக்குராட் செய்த கண்டி

மறுமையிற் றெடர்ந்தி டாமன்
மாண்டுபோம் வழியே தென்னிற்
சிறியவ நிகழ்ந்து ஞானி
செய்தபா வத்தைக் கொள்வ
ரறிபவ ரறிந்து பூசித்
தறமெலாம் பரித்துண் பாரே."

எனக் கூறியிருக்கின்றது.

இங்ஙனமாகிய சீவன்முத்தி முதிர்ச்சியே விதேகமுத்தி யாகலின், இவ்விதேகமுத்தி யென்னும் வீட்டின்பத்தை விளக்குவான் வேண்டி வேதமாதா காண்டத் திரயமாக நிகழ்கின்றது.

இஃது நிட்டையெனப்படுவது.

இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் அகம்பொருளை எட்ட வேண்டின் கல்விகேள்வி யென்னும படிப்பாராய்ச்சியில் மூற்றும் செல்லாது அகமுக உழைப்பாராய்ச்சியில் மூற்றம் செல்லவேண்டியதாமென்க. அவ்வகமுக உழைப்பாராய்ச்சி யாவது—முன்னர் ஆதனங்கட்டி இருகரத்திலும் சின்முத்திரை கொண்டு தேகத்தைத் தறிபோல் நிறுத்தி, பின்னர் ஐம்பொறிகளாற் காணப்படுவனவாகிய விடயங்களைக் காரண காரியங்களால் கிஞ்சித்தும் பொருள்படாது நசிப்புறுமாறு செய்து, அதன்பின்னர் அவ்விடயக்காட்சிகளால் முன்ஞான றேறியிருந்த வாசனை விடயங்களனைத்தையும் மேலெழும் ஊர்த்தமுக திருட்டியினாற் கெடுத்து, இவ்வாசனையிறந்த முடிவிற் றோன்றும் மறைப்பாகிய அந்தகாரத்தையுங் கெடித்து, அலையற்ற சமுத்திரத்தைப்போல் நிற்றலாமென்க. இங்ஙனமாகிய உழைப்பையும் இவ்வுழைப்பை விளக்கும் ஓதி கல்வி கேள்வியென்னும் படிப்பாராய்ச்சியையு மேலாது, ஆதனங்கட்டிச் சின்முத்திரையுங் கையிற்கொண்டு முத்திரை நெறிகளிற் சின்தையூன்றி யிருக்கின்றனது எதார்த்த பாவமின்

றிக் கற்பிதபாவம் உண்மைபோற் றோன்றி நீடித்திருக்கி னும அஃது பின்னர் மறைந்து முன்போலவே தேகோக மென்பது பலப்பட்டுவிடும. ஆகலின், இந்நூலை நன்கு அபூர திப பூர்ப்பவரே சீவன்முத்தராவா ரென்பதற்குக் கிஞ்சித் தும் விருத்தமின் றென்க.

தமதாசிரியர் தமக்கீந்த கைம்மாறுக்கோந்த
கைம்மா ளளித்தற்கு வேறொன் றெனவியந்து துதித்தல்.

வெண்பா.

இந்நானன் காட்டுணரு மேடதபரி பாகிகடா
மன்னியமென் றொன்றின்றி யார்தொளிர்த்தற்—கிகதெறியி
னன்னயமற் கன்றளித்த நங்குரவற் கிதிலனி
லென்னகைம்மா நீவே னியான.

இதுவுரை.

கைம்மா றளித்தற்குக் காணேகா மொப்பெங்கு
மம்மாவீ தென்ன வதிசயமோ—வெம்மா
யிைசாதிடா தென்னிலோ வெங்குரா மாகத்
திபதுதலற் றோற்றேற தேர்ந்து.

வாழ்த்து.

எத்தகைச்சி தாகந்தனேய்ந்தசர ணம்வாழி
வந்தழுன காதியரும் வள்ளுவருஞ்—சிதையின்றி
யொன்றுஞ் சடகோப ரோர்ந்தல்வர் சங்கரரு
மென்றுமற்றோ ரும்வாழி யே.

அகம்புற ஆராய்ச்சி விளக்கம்

மூற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.


R. P Madras